215239
to
215250

அன்யதர்மம்

4 ஸ
23 27

7-7-1938

40

215239

215239

30 JUL 1938
OFFICE OF THE REGISTRAR OF B...
MADRAS

367

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ளு ஆனி-மீ 23உ 1938ளு ஜூலை-மீ 7உ | ஸ 27

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| பக்கம் 1-க்கு தடவை 1க்கு | ரூ. | 20 0 0 |
| இஞ்சு 1-க்கு தடவை 1க்கு | அணா. | 0 8 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## பஞ்சாப்பில் பலிக்கவில்லை.

### விவாஹரத்துக்கு எதிர்ப்பு.

பஞ்சாப் சட்டஸபையில் ஒரு ஸ்திரீ மெம்பர் விவாஹரத்து மசோதா ஒன்றைக் கொண்டுவர அனுமதி கேட்டார். இந்த மசோதா அவசியமென்று அவள் வாதாடினாள். அநேக மெம்பர்கள் இதை எதிர்த்தார்கள். காங்கிரஸ் கக்ஷியாரும் கவர்ன்மெண்டாரும்கூட விவாஹரத்தை ஆக்ஷேபித்தனர். கடைசியாக அந்த மசோதாவுக்கு அநுமதி மறுக்கப்பட்டது.

## மைஸூரில் ஆலயப் பிரவேச பிரஸ்தாபம்.

மைஸூர் சட்டஸபையில் மான்ய பிரேரணை விவாதத்தின் போது ஒரு மெம்பர் ஆலயப் பிரவேசம் அவசியமென்று வற்புறுத்தினர். ஆனல் ஸ்ரீமான் திவான்பஹதூர் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அவர்கள் ஆலயப் பிரவேசத்தை பலமாக எதிர்த்துப்பேசி சென்னை பிரதம மந்திரிகூட இவ்விஷயத்தில் மிகுந்த ஜாக்ரதை காட்டவேண்டியிருப்பதாயும் பொதுஜன அபிப்பிராயம் ஏற்படாதவரையில் இது கூடாதென்றும் வற்புறுத்தினர். கடைசியாக அந்தப் பிரேரணை வாபீஸ்பெறப்பட்டது.

## புருஷர்களுக்கும் புனர்விவாஹம் கூடாது.

### புதிய மசோதா.

இந்தியா சட்டஸபை மெம்பராக விளங்கி வரும் ஸ்ரீமதியான ராதாபாய் அம்மாள் தாம் ஒரு புதிய ஸமூஹத்திருத்த மசோதாவைக் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார். அதாவது புருஷர்கள் ஒரு மனைவியிருக்கும்போது மற்றொரு மனைவியை மணக்கக்கூடாதென்பதே.

## லண்டனில் நேரு.

### மந்திரிகளுடன் ஸம்பாஷணை.

ஸ்ரீமான் ஜவஹர்லால்நேரு லண்டனுக்கு வந்து பலவிடங்களில் உபசரிக்கப்பட்டார். இந்தியா மந்திரி, அன்னியநாட்டு மந்திரிமுதலியவர்களுடன் இந்திய நிலைமைபற்றியும், ஸமஷ்டிபற்றியும் நெடுநேரம் பேசினர். லார்டு லோதியன் முதலிய ராஜீய பிரமுகர்களுடனும் பேசி வருகிறார்.

## மர்க்காராவில் அதிக மழை.

காவிரி நதியின் உத்பத்தி ஸ்தானமாகிய குடகுமாகாணத்தில், முக்யமாக மெர்க்காராவில் சில தினங்களாக பலத்த மழைபெய்து வருகிறது. ஒரே தினத்தில் 10-அங்குலம் பெய்தது. ஜூன் மாத ஆரம்பத்திலிருந்து இன்று வரை அங்கு 50 அங்குலத்திற்கு மேல் மழை பெய்துவிட்டது. காவிரியில் ஜலம் தட்டில்லாமல் கிடைக்குமாம்.

## காரைக்குடியின் குதிப்பு.

காரைக்குடி நகர முனிஸிபாலிடியில், ஹோட்டல்களுக்கு லைஸென்ஸ் கொடுக்கும் விஷயம் யோஜனைக்கு வந்தபோது பஞ்சமர் முதலியன எல்லா ஜாதிகளும் உள்ளே நுழைந்து சாப்பிட வஸதி கொடுக்காத ஹோட்டல்களுக்கு லைஸென்ஸ் கொடுக்கக் கூடாதென்று தீர்மானித்ததாம். இந்தமாதிரி ஓர் சட்டம் செய்யும்படியும் ஸர்க்காரை அது கேட்டுக்கொண்டதாம்.

## ஸுபாஷ் சந்திரபோஸ் சென்னை மாகாண வருகை.

ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ், காங்கிரஸ் தலைவரென்ற ஹோதாவில் தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்ய ஜூலைமாதக் கடைசியிலோ ஆகஸ்ட் ஆரம்பத்திலோ வருவாரென்று சொல்லப்படுகிறது.

## திருவாங்கூரில் தடியடி.

### காங்கிரஸ் கூட்டம் கலைக்கப்பட்டது.

திருவாங்கூரைச் சேர்ந்த செங்கனச்சேரி யென்றவிடத்தில் காங்கிரஸ்காரர் நடத்திய கூட்டத்தைப் போலீஸார் கலைத்தனர். ஜனங்கள் கற்களையெறிந்து போலீஸாரை அடித்தனர். அதன்மேல் தடியடி கொடுத்துக் கூட்டம் கலைப்பட்டது. போலீஸாருக்கும் பொதுஜனங்களுக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ்ஸை எதிர்க்க ராஜபக்த ஸபையொன்று ஏற்பட்டிருக்கிறது.

## பிரதம மந்திரியைத் தாக்க முயற்சி ?

### விருதுநகரில் துஷ்டத்தனம்.

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியர் விருதுநகரில் சுற்றுப் பிரயாணம்செய்கையில் ஜஸ்டிஸ், சு. ம. கக்ஷியைச் சேர்ந்த பலர் கருப்புக்கொடியுடன் விபரீத ஆர்ப்பாட்டம் செய்ததுடன் பிரதம மந்திரியின் மோட்டார் காரையும் தாக்க முயற்சித்தார்கள். நல்லவேளையாக அந்தக் காரில் கனம் மந்திரி இல்லை. அந்த வண்டி கற்களாலும் கழிகளாலும் த்வம்ஸம் செய்யப்பட்டது.

முக்கிய கவனிப்பு

(3-வருஷத்திற்கு உத்திரவாதமுள்ளது.)

அசல் தங்க நகைகளைப்போன்ற "கன்னூர் ப்ளேட் ரோல்ட் கோல்ட்" நகைகளையே கவனித்து வாங்கவும்.

தயாரிப்பவர்:— N. கஸ்தூரிசாமி பத்தர்,
பெரியதெரு, கும்பகோணம்

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## அஹிம்ஸையில் சில ஸந்தேகங்கள்.

(டி. ராமஸ்வாமி அய்யங்கார், மதுரை.)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அஹிம்ஸை வழி என்று முரசடிப்போர்களில் சிலர் ஹிம்ஸையையே பிரதான்யமாக செய்வதுபோல், சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் தடைகளை சில ஜாதி ஹிந்துக்கள் துஷ்பிரயோஜனப்படுத்தினால், சாஸ்திரத்தை எரித்து விடுவதுதானா உசிதம்? அல்லது சாஸ்திரத்தில், பிற்காலங்களில் சுயநலமுள்ள சிலர் ஏதோ சேர்த்து விட்டார்களென்று கூறி தப்பிப்பதா? ஏற்கனவே கூறியபடி, முரண்பாடுகள் ஸ்தாபிக்கப்படும் வரை, சாஸ்திரத்தை பக்ஷபாதமில்லாத அதிகாரியாக எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டும். முரண்பாடுகள், மயகலவிற் சேர்க்கைகள் இவைகளைப்பற்றி விவாதித்து காந்திஜீ ஒரு புஸ்தகமாவது எழுதியிருப்பதாக தெரியவில்லை. தன் மதத்தைதான் பூர்ணமாக அறிந்துகொள்ளும்வரை தான் தன் மதத்தை மாற்றக்கூடாது என்று கூறிய காந்தி அவர்கள், சாஸ்திரங்கள் தங்கள் கக்ஷியை எடுத்துரைக்க அவகாசம் கொடுக்காதபடி, தன் மத சமூக அபிப்பிராயங்களை வெளியிட்டார். மத, சமூக கட்டுப்பாடுகளை இப்பொழுது தான் நிர்ணயம் செய்துகொண்டிருக்கும் காட்டு மிராண்டிகள் ஹிந்துக்கள் அல்லர் என்று பூரு உலகமும் அறியும். ஏனைய உலகமெல்லாம் வனாந்திரமாயிருக்கும்போது, இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள், தங்களுடைய தர்மத்தை ஈஸ்வரன் உபதேசிக்கும் பாக்கியத்தை பெற்றிருந்தார்கள்.

அந்த ஈஸ்வரன் காந்திஜீ "சத்தியம்" என்று அழைக்கும் பொருளே. சத்தியத்தின் தர்மம், அதை யறியாதவராயும், எப்பொழுதும் மாறக்கூடிய மனச்சாக்ஷியையோ சுயபுத்தியையோ முக்கியமாகக் கருதுவோர்களின் கையினால் புதுபிக்கப்பட வேண்டியதில்லை. சத்தியம் எதிரே நிற்கும்போது, காந்தி அதைத்தேடித்திரிவது பரிதாபத்தை உண்டாக்குகிறது. பிர்மசர்யத்தை யாவரும் பேணிக்கவேண்டுமென்ற அளவில், காந்தி அவர்கள் "எல்லாரும் பிர்மசர்யத்தைக் கைக்கொண்டால் உலகம் விருத்தியடையாமல் கெட்டு விடாது. உலகத்தைப்படைத்த இறைவன் அதை கவனித்துக்கொள்வான். மானிடர்களாக நீங்கள் கவலையுற வேண்டா என்று கூறினார். காந்தி அவர்களும், அவருடைய பக்தர்களும் உலகை அழிவிலிருந்து காப்பாற்றும் பொறுப்பை தங்கள் சிரசுகளில் வகிக்காவிட்டால், அந்தஈஸ்வரன் உலகத்தை பாதுகாக்காமல் கேடு அடைவிட்டு விடுவானா? ஈஸ்வரன் எந்த சமயத்திலும் அவன் தர்மத்தை தானே பாதுகாத்துக்கொள்வான். அவனுடைய தர்மம் விளங்கிக்கொண்டிருக்கும்போது, நாம்புதிதாக மதக்கோட்பாடுகள், சீர்திருத்தங்கள் முதலியவைகளைச் செய்து காலத்தை வீணாக்கவேண்டாம்.

தனக்கு 13-வது வயதில் விவாஹம் ஆனதைப்பற்றி காந்திஜீ மிகவும் துயரப்படுகிறார். காந்திஜீயின் பத்னியான ஸ்ரீமதி கஸ்தூரிபாய்க்கு கலியாணத்தின்போது ஏறக்குறைய அதே வயதுதான். அதாவது மணமகனுக்கும் மணமகளுக்கும் ஒரே வயது. அவருடைய விவாஹத்திற்கு சாஸ்திரத்தில் ஆதாரமில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சாஸ்திரப்பிரகாரம் வதூவர்களிடையே 7-வயதாவது மணமகன் வயதில் மூத்தவனாக இருக்கவேண்டும். தன்னுடைய முதல் குழந்தை பிறந்த மூன்று தினங்களுக்குள் இறந்ததை ஓர் அவமானமாக காந்திஜீ கருதுகிறார். பிறந்த குழந்தை இறந்தது இயற்கையென்று காந்திஜீயும் ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் குழந்தை இறந்ததற்கு காரணம் தனக்கு 13 வயதில் கலியாணம் ஆனதே என்கிறார். இதில் சிறு பிசகு இருக்கிறது. கலியாணம் என்பதற்கு பதிலாக தனக்கு 13 வயதில் சாந்தி முகூர்த்தம் நடைபெற்றதைக்குறித்து அவர் வருந்த வேண்டும். 13 வயதில் கஸ்தூரிபாய்க்கு கலியாணம் ஆனதில் குற்றமில்லை. ஆனால் அவரை 13 வயதுள்ள சிசுவுக்கு கணவனுக்கு விவாஹம் செய்து கொடுத்ததனாலேயே, அவர்களின் முதற்குழந்தை மரணம் அடைய நேர்ந்தது. தென்னிந்தியாவில், முக்கியமாக பிராம்மணர்களிடையே விவாஹம் என்பது சாந்திமுகூர்த்தம் அல்லாத ஓர் மதசம்பந்தமான ஸம்ஸ்காரம். கலியாணம் வேறு, சாந்தி முகூர்த்தம் வேறு. ஆகையினாலே சாரதாசட்டத்தை நம்மீது பிரயோகம் செய்ய சிறிதுகூட நியாயம் இல்லை. மேலும் சாரதாசட்டத்தில் விவாஹம் என்பது இதுதான் என்று விளக்கிக் கூறவில்லை. விவாஹம் என்பதற்கு ஆங்கிலத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் பதத்திற்கு சாந்தி முகூர்த்தம் என்பதே பொருள். ஆகையினால் சட்டம் தடுப்பது பால்ய சாந்தி முகூர்த்தத்தையேயொழிய பால்ய விவாஹத்தையில்லை. இதை சனாதன நண்பர்கள் கவனிப்பார்களாக. ஆனால் இம்மாதிரி வார்த்தைகள் மூலமாய் நாம் தப்பிப்பதை அறிந்தால் அதற்கும் ஓர் திருத்தச்சட்டம் கொண்டுவந்து விடுவார்கள் ஆகையினால் இச்சட்டத்தை எல்லாவகையிலும் மீறுவதே சனாதனிகளாகிய நம்முடைய கடமை. இச்சட்டத்தை அநீதிச்சட்டம் என்று காந்தி அவர்கள் உணர போதுமான ஆதாரங்களை யெடுத்துக் காட்டியிருப்பதால், அன்னார் இதை ரத்துச் செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ளுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இராமாயண இலக்ஷியார்த்தத்திலுள்ள இன்பப்பொருள்கள்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி.)

"ஸ்ரீராமமந்திர மஹிமையும் வால்மீகி பெற்ற பெருமையும்" என்ற தலையங்கத்துடன் என்னால் நமது ஆர்யதர்மத்தில் எழுதப்பட்ட வியாசம் 30—12—37 முதல் நடந்து சில வாரங்கள் பிரசுரமானது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதில் நான் இராமயணத்தின் இரஹஸ்யப் பொருள்களைப் பற்றி தனிமையில் ஓர் வியாசம் எழுதப் போவதாய் குறிப்பிட்டிருந்தேன். அதன்படி இவ்வியாசத்தை எழுதலானேன்.

இராமயணத்திலுள்ள எல்லா இரஹசிய தத்துவங்களையும் எடுத்துரைப்பதென்று ஆயிரம் நாக்குடைய ஆதிசேஷனுக்கு மரிதாகுமாகையால், அதைப்பற்றி என்போன்றவர்கள் ஆராய்ந்தெழுத முற்றிலும் முடியாதவர்களாவர்களென்பதை யாவருமறிந்ததே. ஆயினும், ஸ்ரீராமனருளை முன்னிட்டு, அடியேனின் சிற்றறிவிற்கு நூல்களிலிருந்து வெளியானதில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன். இதில் குற்றங்காணும் பெரியோர்கள் பொருத்தருளல் வேண்டும்.

நாரதமுனிவரிடம் உபதேசம்பெற்ற வால்மீகி பிர்ம்மதேவரினருளால் இராமாயணத்தை வர்ணிக்கக்கூடிய ஞானம்பெற்று, வாக்தேவியின் கிருபாகடாக்ஷத்தால் இராமாயணத்தை நூறுகோடி கிரந்தங்களாக ஆதியில் செய்தார்.

அந்த ஆதிகாவ்யத்தை சுவர்க்க, மத்ய, பாதாளவாசிகளாகிய மூவுலகினரும் தங்கள் தங்கள் உலகிற்குக்கொண்டுபோக வெண்ணினார்கள் என்றும், அதையறிந்த மஹாவிஷ்ணு அவைகளை மூன்று பங்காக்கி, ஒவ்வொரு உலகிற்கும் ஒவ்வொரு பாகம் கொடுத்தாரென்றும், பூவுலகுக்கு கிடைத்த பங்கானது புஷ்கரம், சாகம், ப்லக்ஷம், குசம், க்ரௌஞ்சம், சால்மலி, ஜம்பு என்ற ஏழுத்வீபங்களுக்கும் ஸமமாகப் பங்கிடப்பட்டதென்றும், அவ்விதம் ஜம்புத்வீபத்துக்குக் கிடைத்த பங்கிலிருந்து, குரு, ஹிரண்மயம், ரம்யகம், கேதுமாலம், இளாவிருதம், ஹரி, கிம்புருஷம், பாரதம், பத்ராச்வம் என்ற ஒன்பது வர்ஷங்களுக்கும் ஸமமாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டதென்றும் ஐதிகமுடையது,

இவ்விதம் நம் பாரதவர்ஷத்துக்குக் கிடைத்த கிரந்தங்களிலிருந்து அத்புத ராமாயணம், அத்யாத்ம ராமாயணம், ஆக்னிவேச்ய இராமாயணம், ஆனந்த ராமாயணம், ஸங்கிரஹ ராமாயணம், மந்த்ர ராமாயணம், ஜைன ராமாயணம், வால்மீகி ராமாயணம் என்ற பற்பல பிரிவுகள் தோன்றியிருப்பதுடன், அவைகளை ஆதாரமாகக்கொண்டு ராமசரித்திரமானஸம், ரகுவம்சம், பட்டிகாவ்யம், கம்பராமாயணம் முதலிய பல நூல்களும் வெளியிடப்பட்டிருக்கிறது.

இவைகளில் பிரசித்தமான வால்மீகி ராமாயணத்தைப் பலர் பூஜார்ஹமாகக் கொண்டாடுகிறார்கள், பலப்பிராப்தியின் பொருட்டு அதைப்பலர் படனம் செய்வதும், படனம் செய்வதை சிரவணம் செய்வதும் பிரசித்தம். இதில் சுமார் 24,000 சுலோகங்கள் உள்ளதெனச் சொல்லப்படுகிறது. நூலில் காணப்பட்டபடி (1) பாலகாண்டம் 2255, (2) அயோத்தியா காண்டம் 4515 (3) ஆரண்ய காண்டம் 2732(4)கிஷ்கிந்தாகாண்டம்2620 (5) சுந்தரகாண்டம் 3006 (6) யுத்தகாண்டம் 5990, (7) உத்ரகாண்டம் 3234, ஆக ஏழு காண்டங்களுக்கும் கூடுதல் 24252 சுலோகங்களிருப்பதால், ஏற்றக்குறைச்சலை பொருட்படுத்தாமல் சுமார் 24,000 என சொல்லப்பட்டிருக்கலாமென்பது பொருத்தமானதே.

மேற்கண்டபடியுள்ள 24,000 சுலோகங்களும் காயத்திரிமஹாமந்திரத்தின் 24 அக்ஷரத்தின் மஹிமைகளைப் பின்பற்றி அக்ஷரம் ஒன்றுக்கு ஆயிரம் சுலோகமாக எழுதப்பட்டிருப்பதாலும், 'ராம' என்ற இரண்டக்ஷரங்களும் அஷ்டாக்ஷர, பஞ்சாக்ஷர மந்திரங்களின் ஜீவகளையாகவேயிருப்பதாலும், இராமாயண பாராயணத்திற்கே, ஸப்தகோடி மஹாமந்திரங்களின் பலன்கள் சொல்லப்படுகிறது. அந்தந்த ஸர்க்கங்களை பாராயணம் பண்ணவேண்டிய கிரமமும், அதற்கான பலனும், அறிஞர்களால் தனிமையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பூதப்பிரேத பிசாசாதிகளான சர்வதுஷ்ட கிரஹங்களின் பீடையும் ராமமந்திர த்வனி வெளிப்பட்ட மாத்திரத்தில் விலகிவிடுவதுண்மை. மந்திர சாஸ்திரீயாய் கவனிக்குமிடத்து, கணபதி, சிவன், சக்தி. சூர்யன், விஷ்ணு முதாலவர்களின் மஹாமந்திரங்களைக் காட்டிலும் ஸ்ரீராம மஹாமந்திரமே எளிதில் பலனளிக்கும் சக்தி வாய்ந்ததாயிருப்பதால், அதற்கு 'மந்திரராஜன்' என்ற ஓர் புகழ் நாமமும் சொல்லப்படுகிறது.

(தொடரும்)

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0
கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் கும்பகோணம்.



## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

ஒழுங்குமீறிய உங்களை யார் சிக்ஷிப்பது? முதல் கோணல் முற்றுங்கோணல். தேசிய தலைவர் தர்மத்தை அழிக்க முயலுகின்றனர். வாக்களித்தபடி சிலர் நடக்காததால் அவர்கள் மீது ஒழுங்குமீறியதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது! இருவரும் தர்ம விரோதிகளே!!மாமியார் உடைத்தால் மண்கலமோ?

புத்தி வருமா? வருமைப்பொருளுணர்க்கும் மந்திரி தற்காலம் அரிது. பட்ட பின்பாவது சிலர் திருந்துவர். கம்யூனலுக்கு ஒன்றுமே கிடையாது. பஞ்சமருக்கு அளவு கடந்து சலுகை காட்டியதால் அவர்களுக்காக அரண்மனைபோல் கட்டிய வீட்டிற்கு சிறிது வரி விதிக்கப்பட்டது. 4 ஆண்டுகளாக சென்னையில் அதையும் கட்டாமலிருக்கின்றனர். வரி வசூலுக்கு சென்றால் பல சிபார்சுக்களைக் காட்டி தடுக்கின்றனர்.

பாழ்படுத்தவே நற்பெயரா? கணேசர் பிடி என்பதுபோல் கடலூரில் குருகுலம் என்ற ஓர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. கணேசஸ்மரணை நல்லது! பிடியுடனா அலங்கரிக்க வேண்டும்? குருகுலமென்பது உலகம்போற்றும் உத்தம பதம். அதை ஆங்கிலத்துடன் சேர்ப்பதே நமக்குப் பிடிக்கவில்லை. இது அப்படியில்லாமல் வைதிக குருகுலமாயின் கடலூர் மற்றிக்கட்டும்.

லோகாயதிகவாதம்! பஞ்சமர் உள்ளே சென்றதால் பத்மநாபன் கிளம்பிப் போகவில்லை என முதல் மந்திரி கூறுகிறார்.பொருட்காக்ஷிசாலையில் வெள்ளிக்கிழமை பெண்களுக்கு மாத்திரம்ப்ரவேசம். அன்று ஆண்கள் சென்றால் பொருள்கள் அழிந்துவிடுமா? அன்று செல்லும் ஆணை ஸகிக்காமலிருப்பாரா? பரம நாஸ்திகர்களான இத்தகையோர் ஆலயப்ரவேசத்தைவிட கோயிலில் கடவுளில்லை என ப்ரசாரம் செய்தால்கூட ஆஸ்திகருக்கவ்வளவு தீங்கிரா?

தர்மசிந்தையாலல்ல!பலிக்காததால்! சில போலி தேசாபிமானிகள் காங்கிரஸ் மந்திரி இன்றும் ஆலயத்தைப் பஞ்சமருக்கு திறக்கவில்லையே என கூச்சல் போடுகின்றனர். வாயைத் திறப்பதற்குமுன் மந்தையாக கை தூக்க பலமிருக்கும்போது ஏனவர் செய்யவில்லை? திருவாங்கூரைப்போல் அப்புறம் பஞ்சமருள் ஆலயம் போக ஆளைத்தேடவேண்டும். ரஹஸ்ய உத்திரவு போடவேண்டும். முடிவில் பஞ்சமரும் போகாமல் ஹிந்துக்களும் போகாமல் கோவில் பாழடையும். உடனே தன் ஆக்ஷியும் முடியும்.

ஒவ்வோர் நகரிலும் வேண்டும்:- இவ்வாண்டு உபநயமான சிறுவர்கள் கலாசாலைக்கு ஆங்கிலம் கற்க வருவதால் முக்யமான ஸந்த்யாவந்தனங்கற்க போதிய ஸௌகர்யமில்லாமலிருக்கும். சென்னை மயிலை கபாலீச்வரர் ஆலயத்திலும் காளஹஸ்தீச்வரர் ஆலயத்திலும் ஸந்த்யாவந்தனவகுப்பு நடத்தப்படுகிறது. முதலில் இந்த தர்மத்தை ஆரம்பித்தால் அஸ்திவாரம் போட்டது போலாகும்.

அக்னிஸித்தி எங்கே? நாற்றுக்குத் தொண்ணூற்றென்பது பங்கு இவ்வாண்டு சென்னையில் ஒரு நாளைய விவாஹமே நடந்தது. அதிலும் ஒரே மூச்சாக காலையிலாரம்பித்து பனிரண்டு மணிக்குள் நடத்தும் ஹோமம் ஸகிக்க முடியவில்லை. 4 நாள் விவாஹத்தைவிட செலவு இதில் அதிகமே நடந்து இருக்கிறது. சில தனிகர்கள் துர்மார்க்கத்தைக் காண்பிக்கின்றனர். விவாஹாதிகள் ஒழுங்காக நடவாததால்தான் அகாலமரணம், வைதவ்யம், ரோகம், ஸந்ததியில்லாமை அதிகமாகிறது.

சாஸ்திரீய விவாகமும் நடக்கிறது! மிக அபூர்வமாய் வேதத்தை நம்பி உத்தகாலத்தில் நாலுநாள் விவாஹம் சென்னையிலும் நடந்து கூர்மீட்டிய சாரதாசட்டமருகேவாது தர்ம தேவதை காக்கிறது!!

ஏழை நஷ்டத்திற்கு யார் பொறுப்பு!! காசியில் ஸம்மந்திகள் வந்திறங்கிய பிறகு ஓர் புண்யவானாயதால் அதிகாரி ஓர் விவாஹத்தை நிறுத்திவிட்டார்! அப்படியும் அதிக வித்யாஸமில்லை. வைத்யர் பார்த்து 13 வயதென்றார். இந்த நஷ்டத்திற்கு பொறுப்பாளி யார்? ஏழை கல்யாணிகூறிய வாளன்றோ?

துர்வாஸனாபலமோ! கல்கத்தாவில் ப்ராசீன இந்திய கலைகளை விருத்திசெய்ய ஓர் ஸர்வகலாசாலை ஏற்படுகிறது. அதில் உத்தம மனைவிகள் தயாரிக்கப்படுவார்களாம்! கலாசாலைக் கல்வி இவர்கள் கூற்றுக்கு மாறாகவே தற்சமயம் காணப்படுகிறது! ஸீதை திரௌபதி போன்றோரை எந்த கலாசாலையும் தயாரிக்கவில்லை. துர்வாஸனா பலத்தால் மற்ற இடங்களைப்போல் ஆண் பெண்களை ஒன்று சேர்த்து படிப்பிப்பது முதலிய தோஷங்களைவிட்டு பெண்களைக்கொண்டே பக்தி கற்பு முதலியவைகளை சிறுவயதில் போதித்தல் நலம்!!

இதுவும் எதிர்பார்த்ததே! நாகரிகம் உலகநாசத்திற்கே காரணமென அனுபவம் கூறுகிறது! ஹைதாபாத்தில் ஓரியக்கம் தோன்றி பல மனைவிகள் "இனி நாங்கள் குடும்பத்திலிருக்கப்போவதில்லை! வேண்டுமானால் வேறு மனைவி மணந்துகொள்" என புருஷர்களுக்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டனர்!

வெறுப்பு அதிகரிக்கிறது!! தேசிய ஸபை அதர்மத்தில் தலையிட நாளுக்குநாள் அதன் மீது வெறுப்பு அதிகரிக்கிறது! ஷாஜஹான் பூர் காங்கிரஸ் கமிட்டித்தலைவர் கொல்லப்பட்டார்.

## நாட்டு நலத்துக்கு நல்வழி.

உலகில் பிரபலமான இருட்டு அஞ்ஞான இருளே. ஞானப்பிரகாசமே இதனைப்போக்க வல்லதே. இப்பிரகாசம் அவியாது நிற்கப் பார்ப்பதே அறிஞர் கடன். நந்தமிழ்நாடு நலமுற ஒரேவழி. திருக்குறள், கம்பராமாயணம், ஆழ்வார் நாயன்மார் அமுத மொழிகளை நாடு நகரமும் நன்கறிய ஓயாது பிரசாரஞ் செய்யின் தற்போதுள்ள அல்லல்களெல்லாம் அறவே ஒழியும். கலியுங்கெட்டு கிருதயுகம் காண்கலாம். வாழ்நாள் மிகச்சில, அதனையும் வீணே கழிப்பதிற் பயன்யாது. தியாகிகள் முன் வரல் வேண்டும். தமிழ்த்தொண்டு என்று வீணே கதறுவதில்பயனேயில்லை. நெற்செய்யப்புற்றேயும். அவலை நினைத்து உரலையிடிப்பதில் யாது பலன்! உள்ளொன்று வைத்துப்புறம் ஒன்று சொல்வதில் நலமுண்டா! வீண் கிளர்ச்சி வீழ்ச்சிக்கே ஹேது. அறம்வெல்லும்,பாவத்தில் தோற்கும். மேற்கூறிய அரிய நூல்களிலில்லாத நுட்பம் வேறெங்கே உளது. கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவது பொருந்துமா! தமிழரனைவரும் ஏகோபித்து தமிழை நன்கு பரவச்செய்யின் நாடு நலமுறுதல் திண்ணமே. நாடெங்கும் வாழ்க்கேடொன்றுமில்லை. தர்மமே ஜயம்.

ப. ரெ திருமலை ஐயங்கார்.

## ம. ம. ஸ்ரீ. கிருஷ்ண சாஸ்திரிகள்.

(வித்யானந்தம்.)

சென்னை மைலாப்பூரில் ஸம்ஸ்க்ருத காலேஜில் பிரின்ஸிபால் ஸ்தானத்தை அலங்கரித்து வந்த பிரம்மஸ்ரீ ஸ்ரீமத் மகா வித்வான் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் ஸந்யாஸாச்ரமத்தை அடைந்து விட்டார்கள் என்று அறிந்து மிகவும் ஸந்தோஷிக்கிறோம். ஏனெனில் அவர்கள் சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து அதன்படி நன்கு அனுஷ்டானம் செய்து வந்து நாற்றுக்கணக்கான வித்யார்த்திகளுக்கு நன்கு போதித்து அதன் மூலம் ஆசாரியப்பதவியை அடைந்திருந்தார்கள். 'ஆசினோதிஹி சாஸ்த்ராணி ஆசாரேஸ்தாபயத்யபி! ஸ்வயம் ஆசாதேயஸ்மாத் தஸ்மாத் ஆசார்ய உச்யதே'|| என்பதல்லவோ ஆசார்ய லக்ஷணம். இந்த லக்ஷணத்தை நன்கு அடைந்திருந்தார்கள். அத்தோடு தாம் வசித்து வந்தவிடங்களில் புராணப்ரவசனம் செய்து அதன் மூலம் சாமான்ய ஜனங்களுக்கும் நல்ஞானத்தை உண்டாக்கி வந்தனர். அவர்கள் புராணப்ரவசனம் செய்யும் மாதிரியும் மிகவும் மேலானதாயும் பண்டிதர், பாமரர், ஸ்திரீகள் எல்லோருக்கும் வெகு ஆனந்தத்தை யுண்டாக்கி வந்தது. அதன் மூலம் அவர்கள் செய்த உபகாரமும் அளவற்றதே.

பொதுவாய் தற்காலம் கற்றுணர்ந்த நமது பண்டிதர்கள் புராணம் சொல்லுவதென்றால் சற்று பின் வாங்குவார்கள். பொதுஜனங்களை ரஞ்ஜிக்கச்செய்து வெகு அழகாய் சொல்லும் முறை அவர்களுக்குப் பழக்கம் இல்லாததே இதற்குக் காரணமாகும். ஆனால் நமது சாஸ்திரிகளவர்களோ சகலஜனங்களும் கேட்டு ஆனந்திக்கும்படி. அவ்வளவு அற்புதமாய் புராண ப்ரஸங்கம் செய்வார்கள். இம்மயிலையில் இதைக்கேட்டு ஆனந்தித்தவர் அனந்தம். இவ்விதம் கிருகஸ்தாச்ரமத்திலேயே பல்விதமாய் ஜனங்களுக்கு ஆத்மலாபத்தைத்தேடி வைத்த மகான் ஸந்யாஸம் பூண்டு அதன் மூலம் இன்றும் எவ்வளவு நன்மைகளை ஜனங்களுக்கு உண்டாகக்கூடும்? தமது இருபத்தோரு குலத்தை இவர் கரையேற்றியமாதிரி இன்னும் எவ்வளவு குடும்பங்களை கரையேற்றக்கூடும். எவ்வளவு அஞ்ஞானிகள் இவரிடமிருந்து ஞானோபதேசம் பெறக்கூடும். இவ்வளவு நன்மைகளுக்கு ஹேதுவான ஒரு மகத்தான ஆச்ரமத்தைப் பெற்ற நமது சாஸ்திரிகளவர்கள் எப்போதும் நம்மால் வந்தனம் செய்யக்கூடியவர்களே.

அந்த மகானுக்கு த்ரிகரணசுத்தியோடு நாம் ஸதாகாலமும் வந்தன வழிபாடுகள் செய்துவந்தால் இகபர ஸாதகமான ஸகல விதச்ரேயஸ்ஸையும் அடைவோம் என்பதில் கொஞ்சமும் ஸந்தேகமேயில்லை. தவிர இவர்கள் அலங்கரித்து வந்த மயிலை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ஸ்தானமும் நன்கு பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0
கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் கும்பகோணம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஹூ ஆனி-மீ 23உ

## ஆலயப்பிரவேசத்தைப்பற்றி ஸர்க்கார் கொள்கை.

எட்டியாபுரத்தில் நடைபெற்ற ராஜ்யமஹா நாட்டில் கனம் மந்திரி கோபாலரெட்டியார் ஆலயப்பிரவேசச் சட்டத்தைப்பற்றி காங்கிரஸ் கவர்ன்மெண்டாரின் கொள்கையென்னவென்பதைச் சிறிது விளக்கியிருக்கிறார்! சிறிது காலமாகவே மந்திரிகள் மேற்படி மசோதாவைப்பற்றிப் பிரசாரம் செய்துவருகிறார்களாயினும் அவர்களுடைய உண்மையான கொள்கை என்னவென்பதைப்பற்றிக் குழப்பமே ஏற்பட்டிருக்கிறது. கனம் பிரதமமந்திரியே தமது சுற்றுப்பிரயாணத்தில் பலவிடங்களில் இதை பிரஸ்தாபம் செய்துள்ளார். அவர் பேசிய விடங்களிலெல்லாம், ஆலயப்பிரவேசத்திற்குப் பொதுஜன ஆதரவு அவச்யமென்றும், அது ஏற்படாதவரையில் சட்டம் செய்வதில் பயனில்லையென்றும், ஆயினும் என்றைக்காவது ஆலயப்பிரவேசம் வந்துதீருமென்றும், இப்படியும் அப்படியுமாகவே பேசிக்கொண்டு போய்விட்டார். ஜனப் பிரதிநிதி கவர்ன்மெண்டெனப்படும் காங்கிரஸ் மந்திரிகள் இவ்விஷயத்தில் எல்லா வகுப்பு ஜனங்களுக்கும் பொதுவானதாயிருப்பினும், மத ஸம்பந்தப்பட்ட அம்சங்களில் அவர்கள் எவ்வித பாதகமும் விளையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதே ராஜ்ய தர்மமாகும். அப்படியிருந்தும் பிரதமமந்திரி நிலையான கொள்கையை வெளியிட்டு மதாபிமானிகளுக்கு நம்பிக்கையூட்ட முயற்சிக்கவில்லை.

ஆயினும் 3உயன்று எட்டியாபுரத்தில் கனம் கோபால் ரெட்டியார் ஆலயப் பிரவேசச்சட்டம் விஷயமாகக் கவர்ன்மெண்டின் கொள்கையை வெளியிட்டிருப்பது கவனிக்கத் தக்கதாயிருக்கிறது. கனம் ராஜகோபாலாச்சாரியார் இதுவரையில் ஆலயப்பிரவேசச் சட்டம் செய்யவில்லையென்று காங்கிரஸ்காரர் சிலர் கூறிய குறைகளுக்கு கனம் ரெட்டி ஸமாதானம் சொல்லுகிறார். இது ஒரு தந்திரம். காங்கிரஸ்காரர்களின் இந்த தந்திரத்தைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆயினும் இதற்கு ஸமாதானம் சொல்லும்முறையில் கனம் ரெட்டி பேசியிருப்பதையே நாம் கவனிக்கவேண்டும். அவர் கூறியதாவது:-

“இவ்விஷயத்தில் ஓர் சட்டத்தைச்செய்து ஜனங்களைக் கட்டாயப்படுத்துவது ஸரியாகாதென ஸர்க்கார் கருதுகிறார்கள். இந்த சீர்திருத்தம் ஜனங்களுடைய ஆதரவைப் பொருத்துச் செய்யப்படவேண்டுமென்றும் ஸர்க்கார் நினைக்கிறார்கள். மத விஷயங்களில் ஸர்க்கார் எவ்வளவுதூரம் தலையிட முடியுமென்றதை பரிசீலனை செய்து விசாரிக்க வேண்டியிருக்கிறது”

இவ்வாறு ஸ்ரீமான் ரெட்டி பேசியதிலிருந்து காங்கிரஸ் மந்திரிகள் ஆலயப் பிரவேச சட்ட விஷயமாக துரிதமான நடவடிக்கை எடுக்கமாட்டார்களென்று தோன்றக்கூடும்.

இவர் வெளியிட்டுள்ள கொள்கை உண்மையாயின் ஆலயப்பிரவேசச்சட்டம் செய்வதை ஒரு நாளும் ஸர்க்கார் அங்கீகரிக்க இடமில்லை. சட்டமூலமான நிர்ப்பந்தம் செய்யக்கூடாதென்று தார்மிகர்கள் வெகுவாக வற்புறுத்தியே வருகிறார்கள். அது சரியென்று சர்க்கார் ஒப்புக்கொண்டால் அதற்குமேல்அவர்கள் செய்யக்கூடியது என்னவிருக்கிறது? ஜன ஆதரவைப் பொறுத்து இக்கார்யத்தைச்செய்ய உத்தேசமென்பதில் மட்டும் சிறிது அபாயமிருக்கிறது. காங்கிரஸ் கூட்டங்களில் கூடும் ஜனங்களைக்கேட்டால் அவர்கள் ஆலயப்பிரவேசம் வேண்டுமென்றுதான் கூறுவார்கள். இதைக்கொண்டு மட்டும் அதற்குப்பொது ஜனஆதரவு இருப்பதாக சொல்லி விடுவது பொருத்தமாகாது. காங்கிரஸ் கூட்டங்களில் ஒரு நாளும் காணக்கூடாத பெரிய பொது ஜனங்கள் கணக்கில்லாமலிருக்கிறார்கள். மதிப்பும், படிப்பும், செல்வாக்கும், பொறுப்பும் வாய்ந்த லக்ஷக்கணக்கானவர் அங்கங்கு இருந்து வருகிறார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களை அறிய வேண்டுமானல் காங்கிரஸ்கூட்டங்களில் அது ஸாத்யமன்று. அங்கு அவர்கள் வரக்கூடியவர்களன்று.

உண்மையாக பொது ஜன அபிப்பிராயத்தை அறியவேண்டுமானல் மந்திரிமார்கள் ஒவ்வொரு ஊர்களிலும், அல்லது முக்கியமான சிலவிடங்களிலாவது காங்கிரஸ் ஸம்பந்தமற்ற பொது ஜனங்களையும், மதாசார்யர்களையும் கலந்து பேசி அபிப்பிராயமறிய வேண்டியது அவச்யமாகும். மத ஸம்பந்தமான விஷயங்களில் ஸர்க்கார் பிரவேசிக்கும் விஷயமாக மந்திரிகளுக்கு இருந்து வரும் ஸந்தேஹங்களும் மேற்கண்ட வழியில் தான் தெளிய ஸாத்தியமாகும்.

ஆதலால் மந்திரிகள் இவ்விஷயத்தில் நேரடியான காரியம் செய்யவிரும்பினல் ஒரு முக்யவிடத்தில் தார்மிக ஜனப்பிரதிநிதிகளையும் மதாசார்ய பிரதிநிதிகளையும் கூட்டி வைத்துக் கலந்து பேச முயற்சிப்பது உசிதமென நாம் யோஜனை கூற விரும்புகிறோம்.

## குறிப்புகள்.

### ராதாபாயின் கைங்கர்யம்!

டாக்டர் சுப்பராயன் மனைவியான ஸ்ரீமதி ராதபாய் அம்மாள் இந்தியா சட்ட ஸபையில் நுழைந்தவுடனேயே ஹிந்து ஸமூஹத்திற்கு தொண்டு செய்ய ஆரம்பித்துவிட்டாள். இந்த அம்மாள் தீவ்ர ஆசாரத்திருத்த ஆக்ரஹமுள்ளவள். தன்னைப்பற்றிய வரையில் அதை அநுஷ்டானத்தில் கொண்டு வந்தவள். தாம் ஒருவித பிராம்மண வகுப்பைச்சேர்ந்தவளாயினும் கவுண்டர்ஜாதியைச்சேர்ந்த ஸுப்பராயனை பிரம்ம ஸமாஜ விதிப்படி மணந்தவள். தமது வழியில் ஹிந்து ஸமூஹஸ்திரீகளைச் சீர்திருத்த வேண்டுமென்று மிகுந்த ஆவல் பிடித்தவள். இப்போது சட்ட ஸபை பதவி கிடைத்தவுடன் இந்த நல்ல ஸந்தர்ப்பத்தைக்கைவிடுவாளா? ராதாபாய் அம்மாள் பெயர் இந்தியப்பத்திரிகைகளில் பிரபலப்பட வேண்டாமா? இதற்காக ஒரு மசோதாவை நீட்டி விட்டாள்.

புருஷர்கள் ஒரு மனைவியிருக்கும் போது அவளைத்தள்ளி விட்டு வேறு மனைவியை மணக்கும் கொடும் வழக்கத்தைத்தடுக்க இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறதாம்! பொதுவாகவும், விசேஷித்தும் இதில் பல ஆக்ஷேபங்கள் உண்டு. ஹிந்து ஸமூஹ விதிகளை மீறி பிரம்ம ஸமாஜ விதிப்படி கலப்பு மணம் செய்து கொண்டவர் ஹிந்து ஸமூஹச்சீர்திருத்தத்தைப் பற்றிப் பேச எவ்வித பாத்யமோ அர்ஹதையோ அற்றவர். தங்கள் ஸமூஹ நன்மைகளைக்கவனித்துக்கொள்ள ஹிந்து ஸமூஹத்தினர் கோடிக்கணக்காக இருக்கின்றனர், இப்போது வெகு உபாயமாக நடந்து வரும் மறுமனைவி விவாஹமானது தடுக்கப்பட வேண்டுமென்று ஹிந்து ஸமூஹத்திலுள்ள சீலமுள்ள ஸ்திரீகள் ஒருவரும் விரும்பவில்லை. மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களின் வோட்டர்கள் இந்த அம்மாளுக்கு இத்தகைய அதிகாரத்தையும் கொடுக்கவில்லை.

மேலும் இந்த மசோதாவானது, நமது சாஸ்திரதத்வம், நமது குடும்ப தர்மங்கள் ஆகியவைகளை அறியாமலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஹிந்துக்கள் மனைவிகளைக்குரூரமாக நடத்துவதாயும், மனைவிகளைத்தவிக்கவிட்டு மறு விவாஹம் செய்து கொள்ளுவதாயும், ஆதாரமற்ற அபாண்டமான பழியை ஆசார திருத்த ஆக்ரஹிகள் வெகு காலமாக உலகில் பரப்பி நமக்குத்ரோஹம் செய்து வருகிறார்கள். அந்தப்பழியை இந்த மசோதா உறுதி செய்யக்கூடியதாயிருக்கும். இந்த வகையிலும் இது ஆக்ஷேபார்ஹமே.

### உண்மையென்ன?

மறுமனைவி விவாஹவிஷயமாக இத்தகைய மசோதா கொண்டு வர வேண்டிய அளவுக்கு நம் குடும்ப நிலைமை அவ்வளவு கேவலமாகி விட்டதாக இந்த அம்மாள் நினைக்கிறாளா? மறு மனைவி விவாஹ விஷயமாக உள்ள உண்மை நிலைமை என்ன? மேற்றிசை தூர்வாஸனை படிந்த புத்தியுடன் இதைக்கவனிக்காமல் நம் தேச நிலையை அநுசரித்து கவனித்தால் உலகிலேயே நமது தம்பதிகளின் உயர்ந்தவாழ்க்கைக்கு ஸமமானது எங்குமில்லையெனலாம். வெறும் காமவெறிக்காகமட்டுமன்றி உயர்ந்த தத்வங்களை அடிப்படையாகக்கொண்டு குடும்ப தர்மநடத்தும் தம்பதிக்கிரமங்களை இந்தியாவிலன்றி வேறு எங்கும் காணமுடியாது. மேற்றிசைகளில் ஸ்திரீகளோ புருஷர்களோ கணக்கில்லாமல் செய்து கொள்ளும் விவாஹ விச்சேத கோரங்களைக்கவனித்தால் நம் தேச நிலைமை நன்கு விளங்கும்.

மனைவிகளை கிரகலக்ஷ்மீபோல் கொண்டாடுகிறோம். குடும்ப ஸ்வாராஜ்யத்தில் அவளே தலைவியாயிருந்து கார்யம் நடத்துகிறாள். புருஷர்கள் மனைவிகளிடம் காட்டும் அன்புக்கு அளவில்லை. இவ்வளவு உயர்ந்த அந்தஸ்தில் அவர்கள் இருக்கையில் மறு மனைவி விவாஹம் நம் தேசத்தில் மலிந்துவிட்டதாக வாதிக்கவோ, சட்டம் செய்யவோ ஹேதுவுண்டா? மனைவியைத் துன்புறுத்தி மறு விவாஹம் செய்துகொண்டவர்களின் ஸங்கியை என்ன? இந்த அம்மாள் இதற்குப் புள்ளிவிவரம் கொடுப்பாளா? ஏதோ லக்ஷத்தில் ஒருவர் ஸொந்த மனஸ்தாபம் காரணமாக மறு விவாஹம் நடத்தினல், இதைக் கொண்டு அதைப் பெரிய ஸமூகக் கேடாகக் காட்டிப் பிரபலப்படுத்த நியாயமுண்டா? இந்தமாதிரி சிறிய குற்றங்கள் எத்தேசத்தில் எந்த ஸமூஹத்தில்தான் இல்லை? இதற்காகச் சட்டம்செய்வது விவேகமா?



### சாஸ்திர நியமமென்ன?

இந்த மறுமனைவி விவாஹ விஷயமாக நமது சாஸ்திரங்கள் நியமிப்பதென்ன? மிகுந்த ஸாத்வியாயும் அடங்கி அநுஸரணையாய் நடப்பவளாயுமுள்ள தர்ம பத்நியை நிஷ்காரணமாக த்யஜிக்கக் கூடாதென்று நமது சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன. பத்நியை த்யஜிப்பது மஹாபாபமாகச் சொல்லப்படுகிறது. புருஷனுடைய தர்ம கார்யாதிகளுக்கு ப்ரதிகூலையாயிருக்கும் பத்நியையும் கடைசிவரையில் திருத்தி நல்வழிக்குத் திருப்ப முயலவேண்டும். கெட்ட நடத்தையுள்ளவளாயிருந்தாலும் அவளைப் பலதடவை நன்கு பரீக்ஷைசெய்தே விலக்கவேண்டுமே தவிர, திடீரென விலக்க சாஸ்திரம் ஸம்மதிக்கவில்லை. ஆகவே நமது சாஸ்திரம் மறுமனைவி விவாஹத்திற்கு முற்றிலும் எதிரே தவிர ஸாதகமல்ல.

ஆனல் ஸந்ததியை விரும்பி ஒருவன் மறு மனைவியை விவாஹம் செய்ய சாஸ்திரம் அநுமதிக்கிறது. முதல் மனைவிக்கு ஸந்ததியில்லாவிட்டால் இரண்டாவதாக ஒருவளை மணக்கலாம். பிரஜைகளை விருத்தி செய்வதென்பது நமது மதத்தில், நிர்ப்பந்தமான வைதிக தர்மத்தில் அடங்கிவிட்டது. ஸந்ததியில்லாதவனுக்கு, மேல் உலகமோ, இவ்வுலகமோ கிடையாதென வேதம் மொழிகிறது. இக்காலத்தில் பிரஜாவிருத்தியை ஒரு பாபம் போல் நினைத்து, கர்ப்பத்தடை செய்து கொள்ளும் விபரீதம் நம்மவர்களுக்கு ஏற்படவில்லை. கர்ப்பதடை முறைகளால் ஜனஸங்க்யை குறைந்து போகவே, விவாஹம் செய்து கொள்ளுகிற ஸ்திரீகளுக்கும், பிரஸவிக்கும் ஸ்திரீகளுக்கும் கிராண்டுத்தொகை கொடுக்கும் அநாகரிகக் கஷ்டமும் நம் தேசத்தில் இல்லை. ஆகவே ஸந்ததியை விரும்பி அதற்கான தர்மங்களைச் செய்ய வேண்டியது நமக்கு நிர்ப்பந்தமான தர்மமாயிருக்கிறது. ஆதலால் ஒரு மனைவிக்கு ஸந்ததியில்லாத காரணத்தால் மற்றொரு மனைவியை மணப்பதை மட்டும் நமது சாஸ்திரம் அநுமதிக்கிறது. அதுவும் 40 வயதிற்குமேல் அநுமதிக்கப்படவில்லை.

இதன்படி ஒருவன் தனது பரலோக நன்மைக்காக பிரஜைவேண்டி மறு விவாஹம் செய்ய விரும்பினல் அதையும் இந்த ராதாபாய் மசோதா தடுக்கக்கூடியதாயிருப்பது மிக்க ஆக்ஷேபகரமேயாகும்.

ஆகவே ஹிந்துக்களுடைய சாஸ்திரமோ, குடும்ப தர்மமோ ஏக பத்நீவிரதத்தையே வற்புறுத்துவதால் இந்த மசோதா நமக்கு முற்றிலும் அநாவச்யகமேயாகும்.

### படித்த ஸ்திரீகளால் புதிய அனர்த்தம்.

ராதாபாயின் மசோதாவிற்கு ஹேதுவை விவரிக்கும் முகவுரையில் அவள் புதிய அனர்த்தம் தோன்றியிருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறாள். அதாவது தற்போது படித்தவர்களாயும், நாகரிகம் பெற்றவர்களாயுமுள்ள அனேக ஸ்திரீகள் முதல்தாரமுள்ள புருஷர்களையே தேடி இரண்டாவதுதாரமாக அவனுக்கு வாழ்க்கைப்பட ஆரம்பித்திருக்கிறார்களாம். பிறகு இளையாள் புருஷனை வசப்படுத்திக்கொண்டு மூத்தாளை விரட்டியடிக்க ஆரம்பிக்கிறார்களாம். படித்தவனுக்கும், உத்யோகமுள்ளவனுக்கும் வாழ்க்கைப்படவேண்டுமென்ற துராசையே இதற்குக் காரணமாகிறது. இதையும் இந்த மசோதா மூலம் தடுக்கவேண்டுமாம். ஆயினும் ராதாபாய் சொல்லுவதுபோல் படித்த ஸ்திரீகள் பெண்மேல் பெண்ணாக வாழ்க்கைப்பட முயற்சிப்பதைத் தடுக்க இந்த மசோதா பிரயோஜனப்படாது. நவீன ஸ்திரீகள், அடக்கம், நாணம் இவைகளைக் கைக்கொண்டு பெற்றோர்களுக்கு கீழ்படிந்தும் அவர்கள் தேடித்தரும் கணவனுக்கு வாழ்க்கைப்பட விரும்பியும் நடப்பார்களானல் அதுவே அந்த அனர்த்தத்தைத் தடுக்கவல்லது.

எப்படியும், ஸ்திரீகளுக்கு நவீன படிப்பும், நவீன நாகரிகமும் ஏற்பட வேண்டுமென்று விரும்பும் ராதாபாய் அம்மாளே, அவைகளால் மிகுந்த விபரீதம் விளைந்து வருவதை காணுவது விசேஷமே. தாங்கள் ஸிருஷ்டித்த தீங்கை தாங்களே சட்டமூலமாகத் தடைசெய்ய வேண்டிய கஷ்டம் நேர்ந்திருப்பது திருத்தக்காரர்களுக்கு புத்தி புகட்டுமா?

### காரைக்குடி காங்கிரஸ் தர்பார்.

காரைக்குடி காங்கிரஸ்காரர்களுக்கு தலைக்குமேல் கிறுக்கு ஏறிவிட்டது. அந்த முனிஸிபாலிடியில் 100க்கு 100 ஸ்தானம் காங்கிரஸுக்குக் கிடைத்ததை பிரதம மந்திரி கூட கொண்டாடிவிட்டார். உலகிலேயேஇது ஒரு அதிசயமாகக் கருதப்படுவதென்று மந்திரி துதிபாடிவிட்டார். இனி வேறு என்ன வேணும்? தலைகால் தெரியாமல் அந்த முனிஸிபாலிடி ஆட ஆரம்பித்துவிட்டது. ஹோட்டல்களில் ஜாதி வித்யாஸம் காட்டுகிறவைகளுக்கு லைஸென்ஸ் கொடுக்க முடியாதென்று அது ஓர் தீர்மானம் செய்ததாம். பஞ்சமனுள்பட எல்லா ஜாதியாரும் ஹோட்டல்களில் ஸமமாக பிரவேசித்து ஸமமாகத் தின்னவேண்டுமாம். இந்த தர்பார் காரைக்குடி முனிஸிபாலிடியில் விவாதமின்றி முடிந்துவிட்டது. இனி காங்கிரஸ் மஹாஸபையும் காந்திஜியும் இதற்கு ஸபாஷ் பட்டம் கொடுத்துப் பரிசு வழங்கவேண்டியதுதான். ஹோட்டல்களே மறையவேண்டுமென்பதே தார்மிகர்களின் கருத்து. ஆகார விஷயத்தில் மிகுந்த ஸுகாதாரக் குறைவும், சாஸ்திரீயமான ஆஹார நியமங்களுக்குக் கெடுதியும் ஹோட்டல்களால்தான் விருத்தியாகின்றன. ஹோட்டல்கள் மறைந்தால் ஜாதி தர்மங்களும் ஆசாரங்களும் காப்பாற்றப் பட்டவையாகும். ஆதலால் ஹோட்டல்களுக்கு லைஸென்ஸ் கொடுப்பது எப்படித் தொலைந்தாலும் நமக்குக் கவலையில்லை.

ஆயினும் காரைக்குடி தர்பார் நீதியை விவேகமுள்ள மனிதன் எவனும் ஏற்க மாட்டான். ஒருவனை ஒரு இடத்தில் விடுவதோ அல்லது ஒருவனுடன் மற்றொருவன் சேர்ந்து சாப்பிடுவதோ அவனவனிஷ்டத்தைப் பொறுத்தது. இதில் எல்லோருக்கும் பொதுவான முனிஸிபாலிடியோ, சட்டசபையோ நிர்ப்பந்தம் செய்ய என்ன பாத்தியம்? பிராமணனும் பறையனும்சேர்ந்து தின்றாலல்லது லைஸென்ஸ் கிடையாதென்பது காங்கிரஸ் நீதியில்தான் கண்ட அதிசயம். இத்தகைய கெட்ட நிர்வாஹம் ஒழியும் காலத்தையே ஆஸ்திகர் எதிர்பார்ப்பார்கள்.

### ஜில்லா போர்டு தர்பார்.

முனிஸிபாலிடி தர்பார் இப்படியிருக்க அந்த ஜில்லாபோர்ட் தர்பாரின் போக்குஇன்னும் விசித்திரமாயிருக்கிறது. உடனே ஆலயப்பிரவேசச்சட்டம் செய்யவேண்டுமென்று ஸர்க்காரை வற்புறுத்தி அதில் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. ஆனல் இதில் ஒரு விசேஷம். மேற்படிக்கூட்டத்தில் வந்தேமாதரம் கீதம் பாட ஆரம்பிக்கப்பட்டது. ஒரு மஹம்மதிய மெம்பர் அதை ஆக்ஷேபித்தார், தமது மத உணர்ச்சி இதனல் பாதிக்கப்படுவதாயும் கூறி அதைத் தடுத்தார். உடனே மெஜாரிடியான காங்கிரஸ் மெம்பர் கை கட்டி, வாய்பொத்தி, நடு நடுங்கி அந்த கீதத்தையே பாடுவதில்லை யென்றும் தீர்மானித்தார்கள். மெஜாரிடியாரின் அபிப்பிராயப்படியே மைனாரிட்டி நடக்க வேண்டுமென்று காங்கிரஸ்காரர் நியாயம்பேசுகிறார்கள். பெரும்பாலோர் ஆலயப்பிரவேசத்தை விரும்புவதாயும் சிறுபான்மையோர் அதற்கு எதிராக வாய் திறக்கக்கூடாதென்றும் நமக்கு கட்டளையிடுகிறார்களே! மஹம்மதியர் விஷயத்தில் இந்த குருட்டு நீதிபலிக்கிறதா? பெரும்பாலோர் வந்தேமாதரத்தை விரும்புகையில் இரண்டொரு மஹம்மதியருக்காக இதைவிட்டுக் கொடுக்கலாமா? இது பெருத்த பயங்கொள்ளித்தனமல்லவா? மஹம்மதியர் மத உணர்ச்சியை மதித்து வந்தேமாதரத்தை விட்டவர்கள், ஆஸ்திக ஹிந்துக்களின் உணர்ச்சியைமட்டும் மதிக்காததேன்? ஆலயப் பிரவேச நிர்ப்பந்தமானது கோடிக்கணக்கான ஆஸ்திகர்களை ஹிம்ஸிக்க வில்லையா? மஹம்மதியருக்காக வந்தேமாதரத்தை காற்றில்விட்டவர்கள், உடனேயே ஆலயப்பிரவேசச் சட்டத்தைமட்டில் ஆதரித்ததெப்படியோ? காங்கிரஸின் இந்த அபூர்வநீதியை உலக விவேகிகள் கவனிக்கத் தவறமாட்டார்கள்.

## வியாஸபூஜா மஹோத்ஸவம்

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மடம்.

ஸ்ரீமடம் முகாம் மானேஜர் எழுதுகிறார்.-

நாளது பஹுதான்ய-ஹூ ஆனி-மீ 28உ (12—7—1938) ஆஷாடபூர்ணிமை மங்கள வாரதினம் வருகிற இவ் வருஷத்திய வியாஸ பூஜை மஹோத்ஸவம் சாதுர் மாஸ்ய ஸங்கல்பம் முதலான துகளையும் அதுமுதல் வழக்கம் போல் வித்வத்ஸதஸ் முதலானதையும் கிருஷ்ணா நதி தக்ஷிணபாகத்தில் க்ரௌஞ்சகிரி, மங்களகிரி, அமராராமம் இந்தபுண்ய க்ஷேத்திரங்களின் ஸமீபத்தில் திரிலிங்கதேச மத்திய ஸ்தானத்திலுள்ள கர்த்தபுரி என்கிற குண்டூர் (Guntur, M. S. M. Ry.) நகரத்தில் நடத்துவதாய் நிச்சயமாயிருக்கிறது.

## ஸ்ரீ அஹோபிலமடம்.

சாதுர்மாஸ்யம்.

இப்பவும் நாளது பகுதான்யஹூ ஆனிமீ 28உ (12-7-38) செவ்வாய்க்கிழமை ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மஸ்வாமி ஸந்நிதியில் 41வதுபட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற, ஸ்ரீவண்சடகோப ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்மசடகோப யதீந்த்ர மகாதேசிகனுடையவும்,ஷை ஸ்ரீ அழகியசிங்கரால்தன் காலத்திற்குப்பின் ஸ்ரீ அஹோபிலமடம் 42வது பட்டத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடையவும் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் ஸ்ரீஸன்னதி ஆதீனத்தைச்சேர்ந்த ஸ்ரீரங்கம் தசாவதாரப் பெருமாள்ஸன்னிதியில் உபக்ரமித்து நடக்கிறபடியால் ஷை மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளி ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்மனையும் ஸேவித்துக் கொண்டு ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹங்களையும் மந்த்ராக்ஷதையையும் பெற்றுக்கொள்ள வேணும். என்று ஸ்ரீ கார்யம் வித்வான், வங்கீபுரம், வெங்கடராமாசார்யர் ஸ்வாமி அறிவிக்கிறார்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## ஆலயப்பிரவேச மசோதாக் கண்டனம்

மாத்தூர்.

தஞ்சாவூர் ஜில்லா பசுபதிகோவில் பக்கம் மாத்தூர் கிருமம் மஹா ஜனங்கள் சென்னை சட்ட ஸபையாரால் பிரேரிக்கப்பட்டிருக்கிற பஞ்சம ஆலயப்பிரவேச மசோதா இவைகளைக்கண்டித்து சென்னை கவர்மெண்டாருக்கும் அநேகங்கையெழுத்தடங்கியமஹஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

கோத்தங்குடி.

தஞ்சாவூர் ஜில்லா கொத்தங்குடி என்கிற கிராமத்தைச்சேர்ந்த மஹாஜனங்கள் சென்னை கனம் பிரதம மந்திரிக்கும் இன்னும் பல அதிகாரிகளுக்கும் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்ட மசோதாவை நிறைவேருமல் தடுக்கும் படிக்கும் மனுசெய்து கொண்டிருப்பதாகத்தெரிகிறது.

வலயப்பட்டி.

கும்பகோணம் தாலுக்கா வலயப்பட்டிகிருமவாஸிகள் சென்னை சட்டஸபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் Civic Disobilities Removal Bill B. Das Amending Bill to the Child Marriage Restraint act முதலிய சீர்திருத்த மசோதாவை பலமாகக் கண்டித்தும் கவர்மெண்டார் மத சம்பந்தமான கார்யங்களில் பிரவேசிக்கக்கூடாதென்றும் சென்னை சட்ட ஸபையில் ஆலோசனையில் கொண்டுவரப்பட்ட எம். ஸி. ராஜாவின் மசோதாக்களை சட்டமாக்காமலிருக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யும் படிக்கும் கனம் சென்னை மந்திரி அவர்களைக் கோரியும் மஹஜர் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

திம்மக்குடி.

கும்பகோணம் தாலுக்கா திம்மக்குடி மகாஜனங்கள் சென்னை சட்ட ஸபையில் விவாதத்திற்கு வந்திருக்கிற ஆலயப்பிரவேச மசோதாவை பலமாக ஆக்ஷேபித்தும் சர்க்கார் மத சம்பந்தமான கார்யங்களில் ப்ரவேசிக்கக்கூடாதென்று கனம் சென்னை பிரதம மந்திரிக்கும் கனம் ராஜன் அவர்களுக்கும் மேன்மை தங்கிய கவர்னர் பிரபு அவர்களுக்கும் வைஸிராய் அவர்களுக்கும் முறையே மஹஜர் செய்துகொண்டிருப்பதாகத்தெரிகிறது.

பாபுராஜபுரம்

கும்பகோணம் தாலுகா பாபுருஜபுரம் கிருமவாசிகள் ராவ்பஹதூர் M. C. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப் பிரவேச மசோதா அசாஸ்திரியமென்றும் ஷை மசோதா சட்டமாகாதிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை தேடும்படி வேண்டிக்கொண்டு அந்தத்தொகுதியில் சட்டசபை பிரதிநிதி அவர்களுக்கும் அகில இந்தியா காங்கிரஸ் பிரஸிடெண்ட் அவர்களுக்கும் மேன்மைதங்கிய கவர்னர் அவர்களுக்கும் மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள்.

புளியஞ்சேரி

கும்பகோணம் தாலுகா புளியஞ்சேரி கிருமவாசிகள், ராவ்பகதூர் M. C. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப் பிரவேச மசோதா அசாஸ்திரியமென்றும் ஷை மசோதா சட்டமாகாமல் தடுக்க வேண்டுமென்று வைஸ்ராய் அவர்களுக்கும் சென்னை கவர்னர் அவர்களுக்கும் மகஜர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

மாங்குடி

கும்பகோணம் தாலுகா மாங்குடி கிராமவாசிகள் சென்னை சட்டசபையில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் மத விரோதமான மசோதாக்களைக் கண்டித்தும் மஹஜர்மூலம் ஷை மசோதாகளுக்கு தங்கள் ஆக்ஷேபணையை சென்னை கனம் பிரதம மந்திரி அவர்களுக்கும் மஹாகனம் பொருந்திய வைஸிராய் கவர்னர் பிரபு அவர்களுக்கும் தெரிவித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

திருப்புரம்பியம்

கும்பகோணம் தாலுகா திருப்புரம்பியம் கிராமத்திய மஹா ஜனங்கள் ஆலயப்பிரவேச மசோதா பொதுஜன ஸமூக சௌகர்யத் தடை நிவாரண மசோதா, இந்தியா சட்ட சபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பால்ய விவாஹத்தடுப்பு திருத்த சட்டம் இவைகளை ஆக்ஷேபணை செய்து பொது ஜனங்களால் மஹஜர்கள் சென்னை பிரதம மந்திரி மஹாகனம் பொருந்திய வைஸிராய் கவர்னர் பிரபு இவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

இன்னம்பூர்.

கும்பகோணம் தாலுகா இன்னம்பூர் கிருமத்திய மஹாஜனங்கள் சென்னை சட்டசபையில் பஞ்சம ஆலயப்பிரவேச மசோதா இவைகளைக் கண்டித்துச் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்திய சர்க்காருக்கும் கவர்ன்மெண்டார் மத விஷயங்களில் தலையிடக்கூடாதென்று அநேகர் கையெழுத்தடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருக்கிறார்கள்.

ஏராகரம்.

கும்பகோணம் தாலுகா ஏராகரம் வாசிகள் மதவிரோதமான மசோதாக்களை ஓர் பொதுக்கூட்டத்தில் கண்டித்தும் மஹஜர் மூலம் தங்கள் ஆக்ஷேபணையை சென்னை கவர்னர் பிரதம மந்திரி இன்னும் அநேக உத்தியோகஸ்தர்களுக்கும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

திருவலஞ்சுழி.

கும்பகோணம் தாலுகா திருவலஞ்சுழி கிருமவாசிகள் சமீபத்தில் மதருஸ் சட்ட சபையில் ஆலோசனைக்கு வந்திருக்கிற எம். ஸி. ராஜாவின் மசோதாக்களை சட்டமாக்கக் கூடாதென்று மத்திய சர்க்கார் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மனுச்செய்திருக்கிறார்கள்.

அசூர்.

கும்பகோணம் தாலுகா அசூர் கிராமவாசிகள் ஆலயப்பிரவேச மசோதாச் சட்டத்தை நிறைவேற்றக்கூடாதென்று மஹஜர் மூலம் மேன்மைதங்கிய கவர்னர், வைஸிராய், பிரதம மந்திரி இன்னும் சட்டசபை பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

அகராத்தூர்.

கும்பகோணம் தாலுகா அகராத்தூர் கிருமவாசிகள் சமீபத்தில் சென்னை சட்டசபையில் ஆலோசனைக்கு கொண்டுவரப்பட்டிருக்கிற எம். ஸி ராஜாவின் மசோதாக்களை சட்டமாக்கக் கூடாதென்று சென்னை கவர்ன்மெண்டாருக்கும் மத்திய சர்க்காருக்கும் கவர்ன்மெண்டார் மத விஷயங்களில் தலையிடக் கூடாதென்று அநேகர் கையெழுத்தடங்கிய மஹஜர்கள் அனுப்பியிருப்பதாய் தெரியவருகிறது.

பென்னலூர்.

செங்கல்பட்டு ஜில்லா, பென்னலூர் என்னும் ஊரிலுள்ள மஹாஜனங்கள் சென்னை சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதா பில்களை, பால்ய விவாஹத் தடை சட்டத்தையும் பலமாகப் பொதுக் கூட்டங்களில் கண்டித்தும் ஷை சட்டங்கள் அசாஸ்திரியமென்றும் கனம் பிரதம மந்திரி, மேன்மை தங்கிய வைஸ்ராய், கவர்னர் பிரபு அவர்களுக்கும் அநேகர் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் மூலம் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள்.

---

### யஜுருபாகர்மாவும் காயத்திரீ ஜபமும்.

ஆர்யதர்மம் நாளது ஆனி-மீ 17-உ பேப்பரில் சோழவந்தான் மகா-ா-ஸ்ரீ சங்கர சாஸ்திரியள்வாள் எழுதியபடிக்கு ஆனி-மீ 28-உ காயத்ரீஜபம் பண்ணுவதற்கு நமது பெந்தன நிர்ந்தமாகிய ஸ்ரீவைத்தினாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரமகாண்டத்திலுள்ள வசனத்தால் ஆதாரம் தெரியவில்லை.

ஸங்கிஸ்ஸங்கவத: என்ற வசனங்களாலும் இவ்வருஷம் ஆனி-மீ 27-உயிலேயே காயத்திரீஜபம் யஜுருபாகர்மா இரண்டும், பண்ணவேணுமாய்த்தெரியவருகிறது. இந்த வசனங்களால் மறுதினம் பிரதமா திதியின் ஹ்ராஸ விருத்தியை அபஹறணம் பண்ணி நிச்சயிக்கவேண்டியதாய்த்தெரியவில்லை. அன்றியும் உபாகர்மாமைபண்ணிவிட்டு காயத்ரீ ஜபம் பண்ணவேணுமாய் சென்ற வைகாசி மீ 13-உயில் நாகப்பட்டணம் மகா-ா-ஸ்ரீ ஸேதுரும தீக்ஷதர்வாள் யெழுதியதும் ஸத்ய: என்கிற வாக்கியமானது தினபறமேயல்லாது. கர்மபரமல்ல. சென்ற பிங்களஸு ஆடி-மீ 19 வெள்ளிக்கிழமை பூர்ணமி 12-40, அன்றையதினமே இது விஷயங்களைத்தெளிவாய் விசாரித்து கர்மகால பிருபல்யத்தால் ஸங்கவ காலத்தில் காயத்திரீ ஜபம் பண்ணிவிட்டு பிறகுதான் உபாகர்மா பண்ணி இருக்கிறது. இது அனைவரும் அறிந்த விஷயமே. ஆகையால் நாளது ஆடிமாதத்தில் காயத்ரீஜபம் இவ்விரண்டும் ஒரேனாளில் முந்தி காயத்திரீஜபமும் பிந்தி உபாகர்மாவும்தான் பண்ணவேணுமாய் ஏற்படுகிறது.

கோதண்டரும தீக்ஷதர்.
பரித்தியூர்.

---

### விரிஞ்சிபுரம்.

பிராம்மண சமூக தார்மிக ஸபை.

29-6-38ல் ஸ்தாபிக்கப்பட்டு நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள்.

பிராம்மண சமூக மத ராஜீய முன்னேற்ற விஷயங்களைப்பற்றி ஆலோசித்து நடத்திவர ஓர் மஹாஜன சபை இருக்கவேண்டுமென்பதை ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

விரிஞ்சிபுரம் யாத்ரீக ஸ்தலத்தில் பண்டைகால ஏற்பாட்டிலிருந்துவரும் சமூக தர்ம ஸ்தாபனங்கள் மான்ய நிதிகளை சரியான நிர்வகிப்பில் சிரத்தையில் பாதுகாத்துவரவேண்டுமென்பதையும் ஓர் சில சுயநலமிகள் அப்பிரயோஜனத்தில் இருப்பதை விட்டு நீக்கி பொறுப்புவாய்ந்த டிரஸ்டி கமிட்டியார் ஒப்படைப்புக்கு வேண்டிய முயற்சி நடவடிக்கைக்கு சமூகம் ஆதரவுபுரியக் கோரி தீர்மாணிக்கப்பட்டது.

மற்றுமோர் புகழ்வாய்ந்த ஸ்ரீ சுப்பிரமய்யர் தர்மஸ்தாபனம் பிற்காலம் ஸ்ரீ ஸூரியநாராயண செட்டியார் தர்ம சந்தர்ப்பணை நடத்திவரவேண்டிய ஒப்படைப்பில் விட்டிருக்கும் ஷை தர்ம சத்திரம் சமீப 2 வருஷமாய் ஷை செட்டியார் வம்சத்தார்களால் தர்மம் நிறுத்தப்பட்டு, சத்திரமும் மூடப்பட்டிருக்கும் நிலமையில் விசாரித்து தர்மம் நடைபெற ஏற்பாடுசெய்ய வேண்டு மென்பதைத்தீர்மானிக்கப்பட்டது.

தேவஸ்தான "பலோத்ஸவ கைங்கர்யார்த்தம் பண்டு நிதி சுமார் ரூ 2000-ம் சரியான பொது டிரஸ்டி இல்லாமல் ஓர் சிலரால் தம் இஷ்டம் போல் கையாளப்பட்டிருக்கும் நிலைமையையும் தங்கள் திட்டமும் குறைந்து, வருவதைப்பற்றி கண்டித்து ஷை பண்டு நிதி கமிட்டியாரிடம் ஒப்படைப்பில் பாதுகாப்புச் செய்து உற்சவத்தை விமர்சையாய் நடத்திவரவேண்டு மென்பதையும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நிருபர்.

---



## சென்னை மாகாண வியவசாயிகளின் கடன் நிவாரண ஆக்ட்.

(போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் பிரசுரம்.)

(30—6—38 தொடர்ச்சி.)

(4) ஒவ்வொரு பாயக்காரியும் 1347-ம் பசலிக்காவது 1346-ம் பசலிக்காவது இவ்விரண்டு பசலிகளுக்குமாவது தாம் செலுத்தவேண்டிய அல்லது செலுத்தவேண்டியதாக பாத்தியதை கொண்டாடப்படும் குத்தகைத் தொகைக்காக எந்தத் தொகையாகிலும் கோர்ட்டில் செலுத்தலாம்; அதன்மேல், கோர்ட்டார் சந்தர்ப்பத்துக்கேற்றபடி நிலத்துக்குடையவர், கீழ்க்குத்தகைதாரர், ஜன்மி அல்லது இடையிலுள்ளவருக்கு நோடீஸ் கொடுத்து, இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளைப் பிரயோகித்து, அந்தப் பாயக்காரியானவர் மேற்சொன்ன பசலிக்குரிய குத்தகைத்தொகை முழுவதையும் செலுத்தியிருக்கிறார அல்லது அதில் ஒரு பாகத்தை மாத்திரம் செலுத்தியிருக்கிறாரவென்பதையும், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி குத்தகைத் தொகை சம்பந்தமாய் அந்தப் பாயக்காரிக்கு பொறுப்பு ஏதேனும் மிகுதியிருந்தால் அதன் அளவு இவ்வளவென்பதையுங்கூட நிச்சயிக்கவேண்டும்.

விவரணம்:- இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக, "கோர்ட்டார்" என்பது சந்தர்ப்பத்துக்கேற்றபடி பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ஸுத்து ஆக்ட் 209 (1) பிரிவில் சொல்லியிருக்கும் கலெக்டர் என்றுவதுமலையாளத்துப் பாயக்காரி பாத்தியதையைக்குறித்த 1929-ம்ஸுத்திய ஆக்ட் 3 (b) பிரிவில் சொல்லியிருக்கும் கோர்ட்டார் என்றுவது அர்த்தமாகும்.

16 இந்த அத்தியாயத்தில் என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே, பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ஸுத்து ஆக்டின்படியுள்ள யாதொரு நிலத்துக்குடையவர் அல்லது கீழ்க் குத்தகைதாராவது மலையாளத்து பாயக்காரி பாத்தியதையைக்குறித்த 1929-ம்ஸுத்திய ஆக்டின்படியுள்ள யாதொரு ஜன்மி அல்லது இடையிலுள்ளவராவது 15-வது பிரிவின்படித் தாம் வசூலிக்கத்தக்க ஏதேனும் தொகையுடன் கூட,-

(a) 1920-ம்ஸுத்திய சென்னபட்டணத்து லோகல் போர்டுகள் ஆக்ட் 88-வது பிரிவின்படி வசூலிக்கப்படத்தக்க லாண்ட் ஸெஸ் என்னும் வரி ஏதாவது தாம் செலுத்தியிருந்தால் அதையும்,

(b) பிரஸ்தாப குத்தகை சம்பந்தமாய்ப் பிரயோகப்படக் கூடிய யாதொருசட்டத்தின் படியாகிலும் வழக்கத்தின்படியாகிலும் ஒப்பந்தத்தின்படியாகிலும் கோர்ட் டிகிரியின்படியாகிலும் பாயக்காரி செலுத்தக்கடமைப்பட்டுள்ள நிலவரி, தண்ணீர் வரி எவையேனும் தாம் மாகாண கவர்ன்மெண்டாருக்குச்செலுத்தியிருந்தால் அவைகளையும்,

(c) குத்தகைத் தொகைக்காகத் தாம் பெற்றிருக்கும் எந்த டிகிரியிலாவது தமக்குக்கொடுக்கும்படித் தீர்ப்பளிக்கப் பட்டிருக்கும் செலவுத் தொகைகளையும் வசூலிக்க பாத்தியதையுடையவராவார்.

17. பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-ம்ஸுத்து ஆக்டிலாவது மலையாளத்துப்பாயக்காரி பாத்தியதையைக் குறித்த 1929-ம்ஸுத்திய ஆக்டிலாவது காலவரையறையைக்குறித்தாகிலும் நடவடிக்கை முறையைக் குறித்தாகிலும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் எந்தச்சட்டத்திலாவது என்ன சொல்லியிருந்த போதிலும் பாதகமில்லாமலே 1345- வது பசலிஅல்லது அதற்கு முந்திய யாதொரு பசலிக்குரியதாய்ச் சேர்ந்து வந்திருக்கும் குத்தகைத்தொகை பாக்கிகள் சம்பந்தமான எந்த வியாஜ்ஜியத்துக்கு அல்லது (டிகிரியை) நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இப்போதிருக்கும் சட்டப்படி 1937-ம்ஸு அக்டோபர்மீ 1உயிலிருந்து 1938-ம்ஸு ஸெப்டம்பர்மீ 30உக்குள் தடை ஏற்படுமோ அப்படிப்பட்ட வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கைகள் எதற்கும் அந்தப்படி தடை ஏற்படாது; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி நிலத்துக்குடையவர், கீழ்க்குத்தகைதாரர், ஜன்மிஅல்லது இடையிலுள்ளவர் அவைகளை வசூலிப்பதற்காக 1938-ம்ஸு டிஸெம்பர்மீ 31உ யன்றுகிலும் அதற்குமுந்தியாகிலும் வியாஜ்ஜியம் தொடரவோ (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் நடத்தவோ பாத்தியதையுடையவராவர்; அன்றியும் 1347-வது பசலிக்காகச் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகையானது 1938-ம்ஸு ஸெப்டெம்பர்மீ 30உக்குமுன் செலுத்தப்பட்டிருக்கும் விஷயங்களில், எவையேனும் குத்தகைத்தொகை பாக்கிகளை வசூலிப்பதற்கான எந்த வியாஜ்ஜியம் அல்லது (டிக்ரியை) நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு இப்போதிருக்கும் சட்டப்படி 1937-ம்ஸு அக்டோபர்மீ 1உயிலிருந்து 1939-ம்ஸு ஸெப்டம்பர்மீ 30உக்குள் தடை ஏற்படுமோ அந்த வியாஜ்ஜியம் அல்லது நடவடிக்கைகளுக்குரிய காலவரையறையானது 1938-ம்ஸு டிஸெம்பர்மீ 31உ வரையில் நீடித்திருக்கும்.

ஆனால் சந்தர்ப்பத்துக்கேற்றபடி 1938-ம்ஸு டிஸெம்பர்மீ 31உயன்றுகிலும் 1939-ம்ஸு டிஸெம்பர்மீ 31உயன்றுகிலும் 15-வது பிரிவைச்சேர்ந்த (4) உட்பிரிவின்படிக்கான யாதொரு விண்ணப்பம் எந்தக் கோர்ட்டிலாயினும் பைசலாகாமலிருந்தால், இந்தப் பிரிவின்படி நிர்ணயிக்கப்படும காலவரையறையானது அப்படிப்பட்ட விண்ணப்பத்தின்மேல் பிறப்பிக்கப்படும் உத்தரவின் தேதியிலிருந்து இரண்டு மாத கால அளவு கழிந்துபோகிறவரையில் நீடித்திருக்கும்.

### IV-ம் அத்தியாயம்.

நடவடிக்கைமுறையும் பலவகைப்பட்ட விஷயங்களும்.

18. (1) 1937-ம்ஸு அக்டோபர்மீ 1உயன்றுவது அதற்குப்பிறகாவது தாக்கல்செய்யப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் யாதொரு விவசாயிக்கு விரோதமாய் ஒரு டிக்ரி பிறப்பிக்கப்பட்டால், இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அனுசரித்துக் குறைக்கப்பட்ட கடன் தொகைக்காக ஷை வியாஜ்ஜியம் தொடரப்பட்டிருந்தால் எவ்வளவு செலவுகள் அனுமதிக்கப்படத் தக்கவையாயிருந்திருக்குமோ அவ்வளவு செலவுகளை மாத்திரமே கோர்ட்டார் அனுமதிக்கவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் டிக்ரி பிறப்பிக்கப்பட்டிருந்தால், ஷை விவசாயி விண்ணப்பம் செய்துகொள்வதன் மேல், கோர்ட்டார் அந்த டிக்ரியை அப்பிரகாரமே திருத்த வேண்டும்.

(2) 1938-ம்ஸு ஏப்ரல்மீ 1உக்குமுன் காலவரையறையினுல் தடுக்கப்படும் யாதொரு தாவா விஷயமாய், 1937-ம்ஸு அக்டோபர்மீ 1உயன்றுவது அந்தத் தேதிக்குப் பிறகும் இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்கு முன்புமாவது தொடரப்படும் யாதொரு வியாஜ்ஜியத்துக்கு (1) உட்பிரிவில் கண்டதெதுவும் பிரயோகப்படமாட்டாது.

19. யாதொரு கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டுமென்று இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் யாதொரு கோர்ட்டார் ஒரு டிக்ரியைப் பிறப்பித்திருந்தால், அவர்கள் விவசாயியாயிருக்கும் யாதொரு தீர்ப்பான கடனாளி விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலாவது, யாதொரு ஹிந்து அவிபக்த குடும்பக் கடன் விஷயத்தில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு நபர் தீர்ப்பான கடனாளியாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி அந்த நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன் மேலாவது டிக்ரி பெற்றிருப்பவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலாவது இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை ஷை டிக்ரிக்குப் பிரயோகப்படுத்தவேண்டியதுமல்லாமல், 1908-ம்ஸுத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, சந்தர்ப்பத்துக் கேற்றபடி ஷை டிக்ரியை அப்பிரகாரமே திருத்தவும் வேண்டும். அல்லது அது நிறைவேற்றப்பட்டதாக எழுதவும் வேண்டும்.

ஆனல், அப்படிப்பட்ட யாதொரு டிக்ரி விஷயமாய், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன்பாகிலுஞ்சரி அதற்குப் பிறகாகிலுஞ்சரி செலுத்தப்பட்ட சகல தொகைகளையும் அல்லது வசூலிக்கப்பட்ட சகல தொகைகளையும், கடன்காரருக்குக் கொடுக்க வேண்டுமென்று பிரதமத்தில் டிக்ரி செய்யப்பட்ட சகல செலவுகளையும் செலுத்துவதற்காக முதலிலே உபயோகிக்கவேண்டும்.

20. இந்த ஆக்டினுலேற்படும் அனுகூலங்களை அடைய பாத்தியதையுள்ளவராயிருக்கும் யாதொரு நபருக்கு விரோதமாகப் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை நிறைவேற்றும் ஒவ்வொரு கோர்ட்டாரும், விண்ணப்பம்செய்து கொள்ளப்படுவதன்மேல், ஷை டிக்ரியைப்பிறப்பித்த கோர்ட்டார் 19வது பிரிவின்படிச் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்து கொள்ளப்படப்போகும் யாதொரு விண்ணப்பத்தின்மேல் உத்திரவு பிறப்பிக்கிற வரையில் நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டும்.

ஆனல் (நடவடிக்கைகளை) நிறுத்திவைக்கும்படிச் செய்து கொண்ட விண்ணப்பத்தில் கோரியபடி உத்தரவான பிறகு 60 தினத்துக்குள், தீர்ப்பான கடனாளி ஷை டிக்ரி பிறப்பித்த கோர்ட்டாருக்கு 19-வது பிரிவின் பிரகாரம் பரிகாரம் அளிக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்ளாவிட்டாலும் மேலே கண்டபடி விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்டு அது தள்ளிவிடப்பட்டிருந்தாலும், இந்த ஆக்டில் இதற்கு விரோதமாய் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அந்த டிக்ரியை அது இருக்கிறபடியே நிறைவேற்றவேண்டும்.

விவரணம்.— "டிக்ரி பிறப்பித்த கோர்ட்டார்" என்னும் சொற்றொடர் 1908-ம்ஸுத்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தில் என்ன அர்த்தம் உடையதாயிருக்கிறதோ அதே அர்த்தம் உள்ளதாகும்.

(தொடரும்.)

## பிரதமமந்திரியின் பேச்சு

(வி. பஞ்சாபகேசய்யர். சேங்காலிபுரம்.)

கனம் பிரதம மந்திரி ஸ்ரீராஜகோபாலாசாரியார் சென்ற ஜூன்மீ 26௳ மதுரையில் பேசியதில் சில அம்சங்கள் குறிப்பிடத்தக்கவையாயிருக்கின்றன. பால் சப்ளை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட கோவாபரேடிவ் யூனியனைத்திறந்து வைத்த போது பழய சாஸ்திரங்களுக்கு ஒரு கௌரவம் கொடுத்தார். அவர் சொன்னதாவது:—

"ஆகார பதார்த்தங்களில் (Microbes) கிருமிகள் இருப்பதைப்பற்றி ஜனங்கள் பயப்படவேண்டாம். களங்கமில்லாத சுத்த மனதுடன் யாதொரு பயமுமில்லாமல் ஆகாரம் உட்கொண்டால்யாதொரு கெடுதலும் வராது. இந்த உண்மை பழய சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. நவீன ஆராய்ச்சிக்காரர்களும் இதையே கண்டு பிடித்திருக்கிறார்கள்"

இவ்வளவு மட்டில் சாஸ்திரங்களுக்கு மதிப்புக்கொடுத்தது விசேஷம். இன்னும் ஆகார விஷயங்களில் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட நியமங்களையும் புறக்கணிக்காமல் நடக்கும்படி ஸ்ரீமான் ஆசாரியார் தமது கட்சிக்காரர்களுக்குச் சொல்லி அவர்களை திருத்துவாரானால் எவ்வளவோ நன்மையுண்டாகும். கலங்கமில்லாதசுத்தமானமனதுடன் ஆகாரம் உட்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் ஆகார விஷயங்களில் எவ்வளவோ நியமங்கள் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகாரம் சாப்பிடுவதென்பது ஒரு மனிதனின் தனிக்காரியங்களிலனேகங்களில் ஒன்று. எல்லோரும் சேர்ந்து பார்த்துக்கொண்டு சாப்பிட்டால் தான் சுயராஜ்ஜியம் வருமென்று நிர்பந்தம் செய்கிறார்களே! இது ஏன்? இன்னும் தற்காலம் அனேகம் முனிஸிபாலிடிகளில் ஒரு தனிப்பட்ட வகுப்பினருக்கென்று கிளப்பு வைத்தால் அதற்கு லைசென்சு கொடுப்பதில்லையென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் சுயராஜ்ஜியத்திற்கு என்ன இடஞ்சல்? இந்த விபரீதங்களை யெல்லாம் ஆசாரியார் மனசு வைத்தால் நிவர்த்தி செய்யலாம்.

### ஆலயப்பிரவேசம்.

### பிரசாரகர்களுக்கு புத்திமதி.

மேலும் ஆலயப்பிரவேசத்தில் ஈடுபட்டிருக்கும் தமது கட்சிக்காரர்களுக்குபின் வருமாறு ஆசாரியார் புத்திமதி சொல்லிருக்கிறார்.

"ஆலயப்பிரவேசப்பிரசாரம் அடக்கமாயும் நியாயமாயுமிருக்க வேண்டும். கோயில்களின் பிரதான்யத்தையும் புனிதத்தன்மையையும்குறைத்துவிடக்கூடாது கோவில்கள் இந்த தேசத்தின் மதிப்பிடமுடியாத ஆஸ்தி."

இது வரை சொன்னது சனாதன தர்மிகளுக்குஒரு ஆறுதலைக்கொடுக்கும். மறுபடி தொடர்ந்து சொல்வதை கவனியுங்கள்.

"கிரமமான பிரசாரத்தாலும் சீர்திருத்தத்தாலும் கோவில்களை நியாயமானநிலைக்குக்கொண்டு வந்தால் ஆலயப்பிரவேசம், குடி விலக்கு முதலிய திருத்தங்களெல்லாம் லகுவாய் முடிந்துவிடும். கோவில்களை எல்லோருக்கும் திறந்து விடப்போவது நிச்சயம். ஆனாலும் பிரசாரகர்கள் மெதுவாயும் ஜாக்கிரதையுடனும் பிரசாரம் செய்து இன்னும் அறிவின்மையில் மூழ்கி கிடக்கும் ஜனங்களுக்கும் புத்திபுகட்ட வேண்டும் நிர்ப்பந்தப்படுத்துவது பலனைக் கொடுக்காது. நான் ஏன் சட்டம் செய்வதை தாமதிக்கிறேனென்றால் ஒரு காரியத்தை ஆரம்பித்ததால் தோல்வி வந்துவிடக்கூடாது. தோல்வி வந்துவிட்டால் மறுபடி முயற்சி செய்ய இடமில்லாமல் போய்விடும்."

இம்மாதிரி அவர் பேசியிருப்பது பல சந்தேஹங்களுக்கு இடங் கொடுக்கிறது. காங்கிரஸ்காரர்கள் தான் புத்திமான்களென்றும் அவர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் அறியாமையில் மூழ்கிகிடப்பதாகவும் அவர் எண்ணமென்று வெளிப்படுகிறது. மேலும் கோவில்களைத்திறந்து விடுவது நிச்சயமென்று முன் கூட்டியே சொல்லி விட்டார். ஒன்றை ஆரம்பித்தால் தோல்வி வரக்கூடாதென்கிறார். சட்டம் செய்து ஜனங்களைக்கட்டுப்படுத்தி ஆட்சி செய்ய அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரி, தனக்கு ஒரு அபிப்பிராயம் இருப்பதை வெளிப்படுத்தி, ஒரு காரியம் ஆரம்பித்தால் அதில் தோல்வி வரக்கூடாதென்ற பிடிவாதமுமிருப்பதாகக் காட்டிக்கொண்டு விட்டார். இனி அவர் கையில் அதிகாரமிருக்கும்வரையில், கோவில்களைபுராதனமான அனுஷ்டானங்களுக்கு விரோதமாக செய்யக்கூடாதென்ற அபிப்பிராயமுள்ளவர்களுக்கு கதி இருப்பதாக நினைக்க இடமில்லை.

### சாஸ்திர ஆதாரம்.

ஆனால் தான் செய்யும் காரியங்களுக்கு சில சமயங்களில் சாஸ்திரங்களை ஆதாரம் காட்டுகிறார். குடி விலக்கு கடன் மசோதா இவைகளுக்கு சாஸ்திரங்களை ஆதாரம் காட்டினார். கோவில் பிரவேசத்திற்கும் சாஸ்திரங்களைப்பார்க்கக்கூடாதா? ஆனால் ஒவ்வோரிடத்திலுள்ள ஒவ்வோர் வரியை தன்னபிப்பிராயத்திற்கு சாதகமாயிருப்பதைக்காட்டுகிறார். இதனால் சாஸ்திரங்களின் தாத்பர்யத்தை யறிந்துவிட்டதாக கொள்ளமுடியாது. எவரும் எதற்கு வேண்டுமானாலும் சாஸ்திரங்களிலிருந்து ஒரு வரியை ஆதாரம் காட்டிவிடலாம். அதன் தாத்பர்யத்தையறிய தகுந்தபாண்டித்யமும் தீவிர ஆராய்ச்சியும் வேண்டும். சாஸ்திரங்களையறியமுடியா விட்டால் வெகு நாளைய அநுஷ்டானமே சரி என்று கொள்ளும்படி அவைகளே கட்டளையிடுகின்றன. ஒரே மதத்தினராயிருப்பினும் பற்பல வகுப்பினருக்கும் அவரவர் ஆசாரத்துக்கு தக்கபடி வழிபடுவதற்காக புராதனமாகத் தனித்தனி கோவில்கள் ஏற்படுத்தப்பட்டு இது வரை யாதொரு அதிருப்தியன்னியில் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கிறது. தென்கலை வடகலை போன்ற உள் சச்சரவைத்தவிர ஆதிதிராவிடர்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் கோவில் விஷயமான தகரார் ஒன்றும் வந்ததாகத் தெரிய வில்லை. ஆதிதிராவிடர் வழிபடும் சல்லியம்மன் கோயிலிலாவது ஐயனார் கோவிலிலாவது ஜாதிஹிந்துக்கள் போக வேண்டுமென்று கேட்கவில்லை, அவர்கள் போக வேண்டுமென்று கேட்டாலும் ஆதிதிராவிடர்கள் சம்மதிக்கமாட்டார்கள். அதே மாதிரி ஜாதி ஹிந்துக்கள் தொழும் பரமேசுவரன் கோவிலிலாவது ரெங்கநாதர் கோவிலிலாவது ஆதிதிராவிடர்கள் போக வேண்டுமென்று கேட்கவில்லை. எந்த ரூபமாய் தொழுதாலும் தெய்வம் ஒன்றுதான் என்ற உண்மையை பிரதம மந்திரி அறிந்திருப்பார் என்பதை எவரும் சந்தேகிக்க இடமில்லை. ஹிந்துக்களுக்குள்ளேயே சைவர்களென்றும் வைஷ்ணவர்களென்றும் இன்னும் எவ்வளவோ பேதங்களிருக்கின்றன. அந்தந்த வகுப்பினர்களும் அவரவர்கள் மனோபாவனைப்படி கோவில்களை ஏற்படுத்தி வழிபட்டு வருவதில் சுயராஜ்யத்துக்கு என்ன இடைஞ்சல் வந்துவிடப்போகிறது? இது வரை தனித்தனிகோவில்களில் தொழுது வந்திருப்பதில், பொது காரியங்களுக்கு யாதொருவிக்கினமன்னியில், எல்லோரும் திருப்தியுடனிருக்கவில்லையா? இதில் என்ன குறையைக்கண்டுபிடித்து காங்கிரஸ்காரர்கள் இப்போது தீவிர முயற்சி செய்கிறார்கள்?

### வரும் பயன்.

இம்முயற்சியால் இப்போதுள்ள கோயில்களுக்குக் குறைவுவருவதுடன் இனி கோவில்களைக் கட்டுவதும் நின்றுவிடுமோவென்று பயமுண்டாகிறது. மூன் ராஜாக்களால் ஏற்படுத்தப்பட்ட கோவில்களைத்தவிர அனேக.கோவில்கள் தர்மவான்களான பிரபுக்களால் ஏற்படுத்தப்பட்டு அவைகளை நடத்த ஏராளமான ஆஸ்தியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் எந்த சட்டத்துக்காவது அல்லது பிரசாரத்துக்காவது கட்டுப்பட்டு இந்த தர்மங்களை செய்யவில்லை. அவரவர்கள் மனோபாவனைப்படி தெய்வ பக்தியில் ஈடுபட தர்மங்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் விருப்பப்படி அந்த தர்மங்களை நடத்த முடியவில்லையென்றால் மறுபடி அவைகளை செலவுசெய்து நடத்த முன்வரமாட்டார்கள். காங்கிரஸ் அரசாங்கமாவது இனி வரப்போகும் எந்த அரசாங்கமாவது கோவில்களை கட்டி அதை நடத்த சொத்து வைக்கப்போவதாக நினைக்க இடமில்லை. இதனால் கோவில்கள் குறைந்துவிடும். "கோவில்கள் இந்த தேசத்தின் மதிப்பிட முடியாத ஆஸ்தி" என்று சொன்ன ஆச்சாரியார் இதனால் வரப்போகும் பலனை எப்போது அறியப் போகிறாரோ தெரியவில்லை.

---


**Srimad Bhagavatham.**

Condensed, translated, illustrated by T. R Kanapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound PriceRs. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிரமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர் ரூ. 1—8—0
7,8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணா 1.

G. Subramaniam &Co.,
Sri Bhagavatham Publishing House,
Tinnevelly Jn.
Arya Dharmam Office, Kumbakonam

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நகர விமர்சனம். 0 12 0
ஸ்ரீ குரு விமர்சனம். 0 5 0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,டவுன்ஹைஸ்கூல்ரோடு,கும்பகோணம்.

உயர்ந்த புஸ்தகம்!
உயர்ந்த புஸ்தகம்!!

ஸ்ரீநகர விமர்சனம்.
ஆர்யாத்விசதி or ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னம்.
[பிர்மஸ்ரீ அருட்கவி ந. சுப்பிரமண்ய அய்யர் அவர்கள் எழுதிய தமிழுரையுடன் கூடியது.]
விலை 0—12—0. தபாற்செலவு வேறு
கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட் டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.




## அந்தண வள்ளுவர்

[பந்தல்குடி பாரதவாஜமாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், தமிழ் வித்வான், காரியதரிசி, திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம்.]

திருவள்ளுவர் செந்தமிழர். இவர் தமிழில் இயற்றிய நூல் முப்பால் என வழங்கும் திருக்குறள். இந்நூலின் பெருமை இணையற்றது. இது இலத்தீன் பாஷையில் ஒருவாரும், பிரஞ்சில்ஒருவாரும்ஜர்மானியமொழியில்ஒருவாராலும், ஆங்கிலேய பாஷையில் மூவராலும்மொழிபெயர்க்கப்பெற்றுளதாயின் இதன்பெருமைஒருவாறு தெளியவல்லதோ? இவ்விதநூல்வேறொரு மொழியில் இல்லையாம்.

இவர் பிறந்தகுடி வள்ளுவக்குலம்என்பது பலர் கொள்கை. இதற்கு ஆதாரமாகக்காணப்படுவது திருவள்ளுவமாலையில் மாமூலனார் பாடியதாகக் கூறப்படும் 'அறம் பொருளின்பம் வீடென்னுமந்நான்கின், திறந்தெரிந்து செப்பிய தேவை— மறந்தேயும், வள்ளுவனென்பானோர் பேதையவன் வாய்ச்சொற், கொள்ளாறறிவுடையார்'என்றசெய்யுள். உண்மையில்இச்செய்யுளால் திருவள்ளுவரை வள்ளுவசாதியினர் என்று கூறுதல் முற்றிலும் குற்றமேயாகும் என்பதே கிடைக்கும். இது தெள்ளிதின் வற்புறுத்திக்கூறிய வகை. இதற்கு குறிப்புரை மாறுபடக்கூறுவது பொருந்தாதென அறிக.இப்பாட்டிற்குப்பொழிப்புரை பின் வருமாறு:- அற முதலாகக்கூறப்பட்ட அம்மறை பொருளாகிய நான்கினது கூறுபாட்டையும் நன்குயறிந்து உலகத்தாருக்குச்சொல்லிய புலவனை மறந்தாயினும் ஒரு மானிடனுகக்கருதி வள்ளுவனென்று சொல்லுதற்கு ஒருவனுளனாயின், அவன் அறிவில்லாதவன் எனப்படுவான்; அவனது வாய்ச் சொல்லை அறிவுடையார் கொள்ளமாட்டார். மேற்கண்ட செய்யுளைப்பின் பற்றிச் சிவஞானமுனிவரும் தமது 'சோமேசர் முதுமொழி வெண்பாவில், 'மெய்த்ததிருவள்ளுவனார் வென்றுயர்ந்தார் கல்விநலம் துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா— உய்த்தறியின், மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தார், கற்றாரனைத்திலர் பாடு எனக்கூறிப்போந்தார்

திருவள்ளுவர் என்னும் பெயரைப்பற்றி ஆராயின் பெருமையுடையவள்ளுவர் என்று அஃது பொருள் படும். வள்ளுவர் என்பது இயற்பெயர் எனக் கொள்க. இதற்குச்சான்றுதொல்காப்பியம் சொல்லதிகாரம். அங்கு சிறப்பினாகிய பெயர் நிலைக்கிளவிக்கும், இயற்பெயர் கிளவி முற்படக்கிளவார்' என்னும் சூத்திரவுரையில், 'வினைக்கொருங்கியலுங்காலைச்சிறப்புப்பெயருக்குப் பின்பே இயற்பெயர் வரும் என்பதற்கு உதாரணமாகச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் 'தெய்வப் புலவன் திருவள்ளுவன்' என்பதைக்காட்டியுள்ளார்கள். வள்ளுவன் 'என்னும் பெயர் திருக்குறள் ஆசிரியருக்கன்றி வேறு பிறருக்கும்இயற்பெயராய் வந்துளது. புறநானூற்றில் 'நாஞ்சில் வள்ளுவன் என்னும் பெயருளது நாஞ்சில் என்பது ஒரு மலை நாடு. அதற்குத்தலைவன் பெயர் வள்ளுவன். வள்ளுவர் என்பதுகருமாத்யக்ஷர் என்னும் வடமொழிப்பொருளுடைய வல்லபர் என்னும் வடமொழியின் சிதைவாகும். வல்லபர் என்பது வல்லுவர் வள்ளுவர் என்று திரிந்து வரும் என்றும் கொள்ளலாம். 'நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன், தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த— நூன் முறை' என்றும்; 'மெய்யாயவேதப்பொருள் விளங்க—பொய்யாது தந்தான் உலகிற்குத்தான் வள்ளுவனாகி, அந்தாமரை மேல் அயன் என்றும் வழங்கப்பெறும்பாடல்களால் இவர் நான்முகன் அவதாரமெனக் கொள்ளலாம். நான்முகனே ஆதியந்தணன். அரசாங்கத்தில் மன்னவரைச் சார்ந்தொழுகி இராஜகாரிய துரந்தரராய் விளங்கி இருத்தல் வேண்டும் அரசாங்க விஷயங்களில் ஆழ்ந்த அறிவும், அநுபவமும் பெற்றுத் தாம் பிறந்த குலத்துள் யாவரும் உச்சிமேற்கொண்டு போற்றற்குரிய உயர்குடியில், அவதரித்தவரென்பதே ஆன்றோர் அபிமதம்.

வள்ளுவர் என்பது சுருதி, ஸ்மிருதி, புராணேதிகாசங்களில் இலை மறை காய்போலிருந்த முக்கிய விஷயங்களையெல்லாம் தமிழ் மக்கள் எளிதில் அறிந்து உய்யுமாறு தொகுத்து அருள் செய்தவர் என்னும் காரணம்பற்றிவந்த பெயர். திருக்குறள் பிரமாண நூல். 'பல்காற்பழகினுந்தெரியாவுளவேல், தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார், மூன்றினு முழங்கு மாண்டினு மிலையேல், வடமொழி வெளிபெற வழங்குமெனக' என்பதுங் காண்க. இந்நூல் மகத்தானதோர் அறநூல். இதன் விஷய அமைப்பு, விவரணம், வருணனை முதலியவற்றை உற்று நோக்கின் வடமொழியில் 'மநுதரும சாத்திரம்', சுக்கிர நீதி'; வேதங்களில் முதன்மையான 'உபநிஷத்தின் பகுதிகள்'; இதிகாசங்களில் இராமாயணம், மகாபாரதம், ஸ்ரீ பாகவதம் முதலிய நூல்களின் சாராம்சமே முப்பால் எனத் தெளியலாம் 424, 501, 662, 1330 ஆம் குறட்களின் உரையில் பரிமேலழகர் குறிப்புகளை நன்கு பார்க்கின் இவ்வுண்மை விளங்கும். இதுகாறும் கூறிய வாற்றால் திருவள்ளுவர் வடமொழி தென்மொழி என்ற இருமொழிகளையும் நன்குணர்ந்த பெரியார் என்பது தெற்றென விளங்கும். ஸ்மிருதிகளும், அர்த்தசாஸ்திரங்களும் கற்பவர், அரசரும் அரசர்க்கு அமைச்சுத்தொழில் பூணும் பிராம்மணர் முதலாயினருமே என்பது உலகு அறிந்த விஷயம். இதிலும் 'ஓதல் ஓதுவித்தல்' என்பன அந்தணர்க்கேயுரியன. இதனால் இவரது குலத்தைக் கூறவும் வேண்டுமோ?

இவர் அந்தணராயிராவிடின் தம் நூலை 'அகரத்தில் தொடங்கார்.' 'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்' என்ற குறளை பிற வருணத்தார் கூறத்துணியார். 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுகலான்'; அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய், நின்றது மன்னவன்கோல்' என்ற குறட்களின் கருத்தை நன்கு நோக்கின் இவர் அந்தணரென்றே கூறலாம். இவ்வபிப்ராயத்தை ஆரியத் தமிழர் அநுமதிக்கின்றனர். "வள்ளுவர் இழிகுலத்தினர் அல்லர்" என்றும், "திருவள்ளுவர் நல்ல உயர்குலத்தினர் ஆதல் வேண்டும்" என்றும் திருக்கோணமலை ஸ்ரீ. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களும்; "ஒழுக்கத்தை ஆதாரமாகக்கொண்டு பார்ப்பினும், சுற்றத்தார் மரபை ஆதாரமாகக்கொண்டு பார்ப்பினும் பெற்றோர் மரபை ஆதாரமாகக் கொண்டு பார்ப்பினும் வள்ளுவர் அந்தணரேயாகின்றார். இவ்வுண்மையை யாவரும், என்றும் மறவாமல் போற்றிவருவாராக.' என்று ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்களும்; "திருவள்ளுவரை வள்ளுவ சாதியினர் என்று கூறுதல் முற்றிலும் குற்றமேயாம்" என்று 'தமிழகம்' உதவியாசிரியரவர்களும்; "இவரது சாதி இவரது சரித்திரத்தின்படி பிராமண சாதியாம்" என்று ஆசிரியர் ஸ்ரீ கோ. வடிவேலு செட்டியாரவர்களும் வியக்தமாகக் கூறியிருக்கின்றனர்.

புருஷார்த்தம் நான்கு. அவையாவன அறம்பொருள், இன்பம், வீடு, என்பன. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூப்பாற் கூறினாராயினும் பேரின்பமளிக்கும் வீட்டைக் கூறாதுவிடவில்லை. நிலையாமை முதல் அவாவறுத்லிறுதியாக நான்கு அதிகாரத்துள் வீடு பயக்கு முணர்வை அடக்கியுள்ளார். முற்றத்துறந்த முனிவரை நீத்தார் எனல் மரபு. இல்லறத்தை வழுவாது நடத்திக்கொண்டே யான் எனது என்னும் அபிமானத்தை முற்றுவிட்டு இறைவனையே மனனஞ் செய்துவந்த அந்தணச்ரேஷ்டரே திருவள்ளுவர்.

நூலுக்குப்பாயிரமாகக் காணப்படும் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல் என்ற நான்கு அதிகார அமைப்பும் சங்கதியும் திருவள்ளுவரை அந்தணச்செல்வர் என நிலை நாட்டும் பான்மையுள்ளன.

திருவள்ளுவரைத் 'தேவர்' என்றும்; நாயனார் என்றும் போற்றுகின்றனர். தேவர் என்பது மிகுதியான பிரகாசத்தினை யுடையவர் எனவும், நாயனார் என்பது மக்களை நன்னெறியிற் செல்லுமாறு நடத்தும் முதன்மை பெற்றவரென்றும் பொருள்படும். எனவே இவரை இழிகுலத்தவர் என்ற கருத்தை அறவேயொழித்து, உயர்குலத்தவர் என்றும், அவரது திருக்குறள், என்றும் எக்காலத்தும், எவராலும், சீரும் சிறப்புமாகப் போற்றப்பெறும் சிறந்த நூல் என்றும், அதனை இருமொழிப்புலமையுள்ள பெரியர்பாற் கேட்டு கூடுமானவரை அநுட்டித்து பிறருக்கும் எடுத்துரைத்தல் தமிழரின் முக்கிய கடமைகள் என்றும், இங்ஙனம் இதன் நன்கு பரவச்செய்யின் தமிழ்நாடு சிறப்புற்றோங்கும் என்றும் செவ்வனே அறிந்து நல்லொழுக்கத்தில் நின்று நலம் பெறுவோமாக.

### உண்ணாவிரத ஊழல்.

புலி உபவாஸமிருப்பின் அதற்குப் பாரணை பசு முதலிய சாது மிருகங்கள் என்பது நாடறிந்த விஷயம். எனவே அஸாதுக்கள் ஹடாத்காரஞ்செய்யின் அஃது அகர்த்தத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமுளதோ? தற்காலம் எதற்கெடுத்தாலும் உண்ணாவிரதம். அதுவும் உயிர் துறக்குமளவும் என்று ஆர்பாட்டம் பண்ணி ஆடம்பரம் செய்வது ஸஹஜமாகிவருகிறது. இது தற்கொலையின்பாற் படுமேயல்லாது நற்செயலாகாது. ஹிந்தி கட்டாயப்பாட விஷயத்தில் ஏனோ உண்ணாவிரதம்? ஸாத்விக எதிர்ப்பே தலைசிறந்தது. வசைச்சொற்களும் தர்ப்பிடிவாதமும் பயன்படா. தாய்பாஷைக்கு அல்லல் வருதல் ஆத்திரம் உள்ளோர் அதனைப்பரவச் செய்ய இதுகாறும் என்ன செய்துள்ளார்கள்? கேவலம் ஆக்ரோஷித்தல் யுத்தமிடுவதில் வீண்முயற்சியே தவிற பிறிதொன்றில்லை. இதுவே வியாஜமாகக்கொண்டு தமிழை உள்ளபடி நன்கு பரவச் செய்தால் நாடு க்ஷேமமுறும். வகுப்பு துவேஷங்களை அதிகரித்துக்கொண்டு போதல் ஆன்றோர்க்கழகல்ல. தனது படிப்பினையைப் பிறர் கைக்கொண்டபோது தான் அதன் ஸாராஸாரம் நன்கு புலப்படும். அநாவசியமாகப் பட்டினி கிடத்தலைத் துவக்கி வைத்த மகான்களே இவ்வூழல்களுக்கு மூல புருஷர்கள். கருமம் எண்ணித்துணிக. துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கே. ஹடாத்கார முறைக்குப் போலீஸ் தண்டனையே விதி என்பதை எல்லாருமே காட்டுகின்றனர். பிறரை அன்று நிந்தித்ததின் காரணம் என்னோ? ஆட்சி முறை இப்படித்தான். பிறருக்குக்குருவாக இருத்தல் இலகு. தன்னையே முதலிற் திருத்தி நல்வழிப் படுத்திக்கொண்டு உலகு சீர் பட உழைக்க முன் வரல் நலம். ஸாத்வீக முறையுடன் எதனைச் செய்யினும் நற்பயன் உண்டாகும்.

தமிழமானி.

---


புதுக்கோட்டை
A. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் பிரசுரங்கள்.

| | |
|---|---|
| ஸ்ரீ சூக்தபாஷ்யம். | 1 8 0 |
| பதினோரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாராரம் முதலியன | 1 8 0 |

கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங், ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

25239





அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்

## ஸாம உபாகர்ம விஷயம்.

இவ்வருஷத்தில் ஆவணிமீ 12உ ஹஸ்த நக்ஷத்திரத்தில் குஜமௌட்ய தோஷமாக இருப்பதால் புரட்டாசிமீ 8உ ஹஸ்த நக்ஷத்திரத்தில் உபாகர்மா செய்யவேண்டுமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அதன் விபரம்:—பொதுவாக வாக்யப்படி எல்லா உபாகர்மாக்களும் சிராவண மாஸத்திலோ, பாத்ரபதமாஸத்திலொவர்ஷருதுவிலேதான்செய்ய வேண்டியதாகளாகிறது. இதை யனுஸரித்தே எல்லா கிருஹ்யஸூத்ரக்காரர்களும், மனுமுதலான ஸ்மிருதிக்காரர்களும் சிராவண பாத்ரபதங்களையே குறிப்பிட்டிருக்கிறார்கள். திராஹ்யாயன ஸூத்திரத்தில் சொல்லிய “ப்ரௌஷ்டபதீம் ஹஸ்தேன உபாகுர்யாத்” என்ற வாக்யத்தாலும் “ப்ரௌஷ்டபத ஸம்பந்தினீம் காஞ்சித் திதிம் ப்ராப்ய ஹஸ்த நக்ஷத்ரே உபாகுர்யாத்,, என்ற ஹேமாத்ரி வியாக்யானத்தாலும், புரோஷ்டபதமாஸத்திய ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸாமவேதிகள் உபாகர்மா செய்யவேண்டியதாகிறது. அந்த மாஸத்தில் இரண்டு நக்ஷத்திரங்கள் வாக்கூடும். அனுக்கிரமப்படி சுக்லபக்ஷத்தில் வரும் நக்ஷத்திரம் முக்யம். கிருஷ்ணபக்ஷத்தில் வரும் நக்ஷத்திரம் கௌணம். ஆகவே வைத்யநாத தீக்ஷிதர் அபரபக்ஷத்தைக்குறிப்பிட்டே வாக்யம் எழுதினார். ஆகவே வசனத்தால் சுக்லபக்ஷத்தில் உதயாதி வியாப்தியும் கிருஷ்ணபக்ஷத்தில் ஸம்முகத்வமும், சொல்லப்பட்டது. இந்த இரண்டு காலங்களிலும் தோஷம் ஸம்பவித்தால் ஸூத்ர வாக்யத்தால் சிராவணபௌர்ணமியில் செய்யவேண்டியதாகும். இவைகள் தவிர வேறு காலம் சொல்லப்படவில்லை. இவ்வருஷம் ஆவணிமீ 12உ ஹஸ்த நக்ஷத்திரத்திலும் கௌணகாலமான சிராவணபௌர்ணமியிலும் குஜமௌட்ய தோஷமிருப்பதாலும். புரட்டாசிமீ 8உயில் வரும் ஹஸ்த நக்ஷத்திரம் புரோஷ்டபதமாஸத்தை அதிக்கிரமித்து ஆசுவயுஜமாஸத்தில் நேருவதால் உபாகர்ம காலமே ஆகாததாலும் மூன்று காலத்திலும் தோஷமிருந்தால் சிராவணியிலேயே செய்யவேண்டுமென்று யாஜுஷர்களுக்குச் சொல்லியபடி ஸாமவேதிகளும் முக்ய காலத்திலேயே குஜசாந்தி பூர்வகமாக உபாகர்மா செய்யவேண்டுமே தவிர புரட்டாசிமீ 8உ ஹஸ்த நக்ஷத்திரத்தில் செய்ய சாஸ்திர நியாயமில்லையென்பது அறியவும்.

சங்கர சாஸ்திரி, சோழவந்தான்.

## ஸநாதந தர்மப் பிரசாரம்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ. ப. ரெ. திருமலை ஐயங்காரவர்கள் 30—6—38உ வியாழனன்று பிற்பகல் 3-மணிமுதல் 5-மணிவரை ‘முக்கோற்பகவர்’ என்ற விஷயம்பற்றி மிகவிரிவான உபந்யாஸத்தை அக்ரஹார வாசிகளும் இதரும் கேட்டு ஆனந்திக்குமாறு செய்தார். மாலை 6-மணிக்கு கிராமக்கோடிக்குச் சென்று அங்குள்ள வாசிகளின் வீடுகளைக் கணிசித்து வையகத்தின் சிறப்பையும், சிறு குடிசைகளாயினும் மிக சுத்தமாகயிருப்பதை மெச்சியும் கூறிக்கொண்டிருக்கும் சமயம் அங்கு சேர்ந்த பெருங்கூட்டத்தில் ‘மதுவிலக்கு’ என்ற அரியவிஷயத்தை பெருங்குடிகாரனும் ஊரார் கருதிவரும் ஒருவர் வந்து தான் அன்றுமுதல் அதனை நிறுத்திவிடுவதாகப் பிரதிஞ்ஞை செய்யும் அளவும் விஸ்தாரமாக உபந்யாசித்தார். இறுதியில் அவர்கள் தமிழை நன்குகற்று உணர்ந்து நன்னெறியில் நிற்க வேண்டும் என்றும், திருக்குறள், கம்பராமாயணம் முதலியவற்றை அடிக்கடி பெரியார் வாயிலாகக் கேட்டு அநுபவிக்க வேண்டுமென்றும், கோயிலைக்கட்டி உடனே திருப்ரதிஷ்டை செய்விக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இரவி 9-மணிமுதல் 10-30 மணிவரை ‘ஸ்ரீவைஷ்ணவமும் நமது கடமையும்’ ஒன்கின்ற விஷயமாய் விளக்கமாக ஒருபந்யாசம் செய்து அனைவரும் இன்புற்றிருக்குமாறு செய்துவருவதே ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் என்பதின் அழுத்தமாக எடுத்துரைத்தனர். மழையாயிருந்தும் எல்லோரும் கேட்டு ஆனந்தம் எய்தினர்.

1—7—38உ வெள்ளிக்கிழமையன்று 12-30 மணிமுதல் 3-மணிவரை ‘பெரியாழவார் வைபவம்’ எனும் விஷயத்தைப்பற்றி உபந்யாசித்தும் சுமார் மாலை 4-30 மணிக்கு அக் கிராமத்தைவிட்டு நீங்கி திண்ணனூர் (திருநின்றவூர்) வந்துசேர்ந்தார்.

கிராமங்களெல்லாம் சீருடன் தர்மநெறியில்தான் நிற்கின்றன. இடைவிடாது தர்ம பிரசாரம் ஆங்கு சென்று செவ்வனே செய்யில் நாடு நலம்பெறும். பெரிய மஹாநாடு கூட்டி வைள்ளைத் தீர்மானங்களை நிறைவேற்ற முற்படுவதினும் வாராவாரம் ஆங்காங்குள்ள கிராமங்கட்கு தக்க ப்ரசாரகர்கள் சென்று தயங்காது தீவிர ப்ரசாரம் செய்யின் நாடெங்கும் ராமாஜ்யமாக ஆகிவிடும். தியாகிகள் முன்வரல் அத்யாவசியம். சொல்லளவிற் பயனின்று. நற்செய்கையையே நல்லோர் நாடுவார். சுபம்.

நமது விசேஷ நிருபர்.

## மதிப்புரை.

### ஜ்யோதிஷ விமர்சினீ

இது ஓர் உயர்ந்த ஜோதிஷ மாதாந்திரப் பத்திரிகை. சென்னை பார்க்டவின் தேவராஜ முதலித்தெருவிலிருக்கும் பிரம்மஸ்ரீ பண்டிட் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளால் வெளியிடப்படுகிறது. ஜோதிஷத்தின் உயர்ந்த தத்வங்களை வெளியிடுவதே இதன் நோக்கமெனத்தெரிகிறது. வேறு ரஸமான டல ஆராய்ச்சிகளும் வெளி வரும். ஜோதிஷ விஷயமான சர்ச்சைகளும் உயர்ந்த ஜோதிஷ புஸ்தகங்களின் மொழிபெயர்ப்பும் இதில் பிரசுரிக்க ஆசிரியர் முயற்சிப்பார். நன்மைக்கும் ஞானவளர்ச்சிக்கும் காரணமான இப்பத்திரிகையை யாவரும் ஆதரிக்கவேண்டியதே. இந்த முதல் ஸஞ்சிகையில், ஜ்யோதிஷத்தின் பெருமை, நவக்ரஹமண்டலம், ஜாதகபலன் மாஸபலன்,பாவாதிபலன் போன்ற நல்ல கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன.

இதில் சில முக்யவிஷயங்கள் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப்படுகிறது. வருஷசந்தா ரூ 2. ஆசிரியருக்கு எழுதிப் பெறலாம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றும் பதிப்பு)
பிராம்மணர்களின்கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், “வைத்தியநாத தீக்ஷிதீயம்” என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழ்விடையல், திருச்சிரை.

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V.நடராஜய்யர் பிரசுரங்கள்.

| | |
|---|---|
| அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சி ராப்பர் | 2 8 0 |
| காலிகோ | 3 0 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனர்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆர்யதர்மம்

4 ௰

23 28

14-7-1938

215240

215240
OFFICE OF THE REGISTRAR OF BOOKS 30 JUL 1938 MADRAS
381

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பஹுதான்ய-ஞு ஆனி-மீ 30உ 1938ஞு ஜுலை-மீ 14உ | ஸஞ்சிகை 28

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுத[illegible]

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## ஸமஷ்டியை எதிர்ப்பதா?

போஸ்—ஸத்யமூர்த்தி விவாதம்.

ஸமஷ்டியில் சில முக்ய திருத்தங்களைச் செய்தால் அதை ஏற்று நடத்த தயாராக இருப்பதாக பிரபல காங்கிரஸ் தலைவர்கள் சிலர் பிரிடிஷ் மந்திரிகளிடம் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. ஜவஹர்லாலும் இந்தப் போக்கை ஆதரிக்கிறார்.

ஆயினும் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் [illegible] எதிர்க்கப்போவதாயும், அவச்யமிருந்தால் காங்கிரஸிலிருந்து விலகிவிடவும் தயாரென்றும் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்த அறிக்கையை பலமாகக் கண்டித்து ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஓர் பதில் அறிக்கை வெளியிட்டு, போஸைவிட காங்கிரஸ்தான் பெரிதென்று கூறி, சில திருத்தங்கள் செய்யப்பட்டால் ஸமஷ்டியைக் காங்கிரஸ் ஏற்று நடத்தவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்.

## கதர்குல்லாய் நிர்ப்பந்தம்.

தர்மபுரி ஜில்லா போர்டுக்குள்பட்ட பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்கள் அனைவரும் கதர் துணியும், கதர் காந்திகுல்லாயும் தரிக்க வேண்டுமென்று போர்டின் தலைவர் ஒரு சுற்றுத்திரவு அனுப்பியிருக்கிறாராம்.

## கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஞு ஸ்தாபிக்கப்பட்டது.)

லோகல் ஸப் ஆபீஸ் :—யானையடி ரோடு.
கிளை ஆபீஸ்கள் :—மன்னார்குடி & நாகப்பட்டணம்.
ஸப் ஆபீஸ்கள் :—நன்னிலம் & அய்யம்பேட்டை.

30—6—38ல் எடுத்த கோஷ்பாரா.

| மூலதனம், செலவுகள். | | சொத்துகள், இருப்புகள். | |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட பங்குத் தொகைகள் | 2,82,575—0—0 | தங்க.ஈட்டுக்கடன்கள் .... | 4,46,072—2-11 |
| காப்புநிதிகளும், இதர நிதிகளும் .... | 2,18,556—8-10 | மற்ற பொருமானஜாமீன் உள்ள கடன்கள் | 5,83,275—5-11 |
| தவணை, நடப்பு ஸேவிங்ஸ், முதலிய டிபாஸிட்டுகள் | 15,94,901—7—6 | இதர கடன்களும் உண்டியல்களும் .... | 7,03,222-11-11 |
| இதர செலவுகள் .... | 1,20,919—4—7 | சர்க்கார் கடன்பத்திரங்கள், | 2,67,646—1—6 |
| மற்ற இனங்கள் .... | 31,559—2—5 | சொத்துக்கள் சாமான்கள் வகையறா | 77,654—14-9 |
| அரைவருஷ நிகா லாபம் | 24,213—4—1 | இதர இனங்கள் .... | 24,187-11—0 |
| | | கையிருப்பு, இதர பாங்கிகளில் இருப்பு | 1,70,665-11—5 |
| மொத்தம் .... | 22,72,724-11—5 | | 22,72,724-11—5 |

S. மஹாலிங்கய்யர், B. A., B. L.,
மானேஜிங் டைரெக்டர்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## "கல்பஸூத்திரங்கள்"

(T. V. தர்மராஜ கனபாடிகள், வேத பாடசாலை திருக்கோகர்ணம்.)

ஆஸ்திக சிகாமணிகாள்!

சுமார் நாற்பது வருஷங்களுக்குமுன் பிர்ம்மஸ்ரீ கு. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள் அவர்களை பத்திராதிபராய்க்கொண்டு நடந்துவந்த மதாசாரப் பத்திரிகையான 'பிரும்மவித்தியா' பத்திரிகையில் "கல்பஸூத்திர விஷயமாக சில விஷயம் காணப்படுகிறது. அவ்விஷயத்தை நமது "ஆர்யதர்ம"த்தில் எழுதினால் அதைப்பார்த்து வைதிகாபிமானிகள் விஷய மறிந்து கொள்ள ஹேதுவாகுமென்று நினைத்து, ஷை விஷயத்தையும் (இவைபோன்ற மற்றவைகளையும்) தொடர்ந்து எழுதப்படுகிறது.

ஐயா! வேதாங்கங்கள் ஆறுக்குள் கல்பஸூத்திரங்கள் ஒன்றாளென்பது வைதிகர் யாவருக்கும் தெரிந்ததாம். அவைகளின்றி சிரௌதம், ஸ்மார்த்தம் என்னும் இருவகைக்கிரியைகளும் நிலை பெறுவாம். தர்ம சாஸ்திரங்களை வேதங்களிற் கணக்கிடாது. இதைக் கணக்கிட்டதற்குக் காரணம் யாதெனில், ஸ்மிருதிகளில் பற்பல தர்மங்கள்தமக்கே யுபயோகமாவதும், மற்றைய சில தர்மங்கள் உலகப் பொதுவிற்குபயோகமாவதுமாய்ச் சொல்லப்பட்டன. அவற்றுள் பொது நன்மையைப் பற்றிக்கூறியவை அவ்வக்காலத்துதித்த மன்னவர்களால் மாற்றப்பட்டுச் சிதைந்து, உருக்குலைந்து ஒட்டினும் மற்றையபகுதிகளை முற்றிலும் படித்து, நித்தியம், நைமித்திகம், காம்யம் என்னும் பாகுபாடுகள் அறிந்து, தேச காலங்களுக்கு ஏற்றவாறு, ஓர் அறிஞன் நடக்க முயலினும் 'இத்தனை வயதில் அந்தணர்க்குபநயனம் செய்யவேண்டும்' மென்பபதாதி வசனங்கள் மட்டும் ஸ்மிருதிகளில் அகப்படுமேயன்றி அவற்றை நடத்தும் முறையேதும் அவற்றுள் அகப்படா. அவ்வழிகள் ரிஷிகள் கண்ட "கல்பஸூத்திர"ங்களிற்றான் உள்ளன.

உதாரணமாக உபநயனமென்பது வேதத்திற் கூறப்பட்டதாயின் இக்காலத்தில் இவ்வளவு வயதுள்ளவனுக்கு, இம்முறைகொண்டு உபநயனம் செய்விப்பான் என்பதாந்வேதத்திலகப்படுவதில்லை. அது கற்பங்களிற்றான் இருக்கும். அங்ஙனமே யாகம் முதலிய வைதிக கார்யங்கள் மட்டில் வேதத்தில் விதித்திருக்க அவைகளை அவ்வாறே அனுஷ்டிக்காது. கற்பஸூத்திரங்களிற்கூறியவற்றைக்கலந்தே அனுஷ்டிக்க நேரிடுகிறது. இதுமட்டோ! தர்ம சாஸ்திரங்களில் கண்டதும், கற்பங்களில் காணுததுமான கர்மத்தை விட்டால் அதற்குப் பிராயச்சித்தமுண்டேயன்றி அதனால் ஜாதி கெடுவதில்லை. கற்பஸூத்திரங்களில் கூறிய ஸம்ஸ்காரங்களை ஒருவன் விடுவானுகில் அவன் ஜாதியைவிட்டு நீங்குவானென்பதிற்றடையில்லை. ஆதலால் தர்மசாஸ்திரங்களினும் கற்பஸூத்திரங்கள் சிறந்தனவேயாகும். தர்மசாஸ்திரங்கள் காமிய கர்மங்களைச் சிலவிடத்தும், தாந்திரிக கர்மங்களைச்சில விடத்தும் கூறி நிற்கும். கற்ப சூத்திரங்களோ அங்ஙனமின்றி வைதிகத்தையே தழுவி நிற்கும். ஸ்மிருதிகளிலேனும், புராணங்களிலேனும் வேதவிருத்தமிருந்தால் அதைத் தாந்திரிகம் என்று கூறற்பாலதாமென்பது ஆன்றோர் கருத்தாம், இனிவேதாங்கங்களைக் கணக்கிடவெழுந்தவிடத்து இக்கற்ப ஸூத்திரம் இறுதியினுள்ளதாயினும் பயன்வழி படுதலை நோக்கின் இதுவே முதலாவதாகக் கொள்ளப்படும். விசேடமாய் இக்கலிகாலத்தில் அந்தணர் ஆரணங்களையோ காது அறநூற்பயிற்சியற்று தம் கருத்துக் கிசைந்தவாறு திரிவதால் இவர்களுக்கு இக்கற்ப ஸூத்திரமின்றி வேறெவ்வித கதியுமின்றும். இவர்கள் வேதத்தையேனும், தர்மசாஸ்திரங்களையேனும், மற்றய பொருள்களையேனும் கற்றுலும் இக்கற்ப ஸூத்திரம் இவர்களுக்ககப்படாவிடில் இவர் கர்மங்கள் நிறைவேறுவது மிக அரிது. ஆதலின் கற்ப சூத்திரங்கள் இத்தேசத்தவற்கும் நமது சாஸ்திரங்களுக்கும் ஓர் பேரணியாய் விளங்குவதென்பதற்குத் தடை இல்லை.

"கல்ப ஸூத்திரங்கள்" வேதங்ககளுக்குக் கைகள் என உருவகப்படுத்தப்பட்டன. இவற்றுக்கு கற்ப ஸூத்திரமெனப்பெயரும் ஒவ்வொரு கன்மங்கள் முறையை கற்பத்தில் நம்மவரை நல் வழி யொழுகச்செய்வதால் "கற்பம்" எனவும், சுருங்கிய சொல்லுடைமையால் "சூத்திரங்கள்" எனவும், இருபெயர்கள் ஒன்று சேர்ந்தமைந்த ஒரு சொற்பெயராயிற்று. இக்கலிகாலத்தில் எல்லோரும் இக் கற்பஸூத்திரங்களை நம்பினவர்களேயன்றி வேறு நற்கதியளிக்கும் கருவி இவர்களுக்கில்லை.

வேதங்களில் குறிக்கப்பட்டனவும், தர்ம சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டனவுமான கர்மங்களை நடாத்தும் வழி மந்திர, தந்திரங்களுடன் முறையாய் இக்கற்பஸூத்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது.

அங்கனமே தேவலரென்னும் இருடி தமது தருமசாஸ்திரத்தில் மனு முதலியோர் தர்ம சாஸ்திரங்களை வகுத்தவர். அவர் கூறிய கன்மவழிகளை விரித்தவர் கற்பஸூத்திரக்காரர்." எனத்தமதபிப்பிராயதை வெளியிட்டார். வேதங்களிலும் கல்பஸூத்திரங்களிலும் கண்ட கன்மங்கள் எல்லோரும் அனுஷ்டிக்கற்பாலனவேனும், அவற்றை அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை விதித்தலான் முறையில் மிக முக்யமான [illegible] கற்ப ஸூத்திரங்கள்.

[illegible] பூர்வ சூத்திரங்கள் ஒன்பது. அபரசூத்திரங்கள்ஒன்பது, அவையாவன:- (1)"போதாயனம், (2) ஆபஸ்தம்பம், (3) ஸத்யாஷ்டம், (4) திராஹ்யாயனம், (5) ஆகஸ்த்தியம், (6) சாகல்யம், (7) ஆசுவலாயனம், (8) சாம்பவீயம், (9) காயாயனம்," என்பன பூர்வ ஸூத்திரங்கள். (1) வைகானஸம், (2) சௌனகீயம், (3) பாரத்வாஜம், (4) அக்னிவேசியம், (5) ஜைமினீயம், (6) மாதுன்யம், (7) மாத்யந்தனம், (8) கௌண்டின்யம், (9) கௌஷீத்கம்," என்பன அபர ஸூத்திரங்கள். இங்ஙனம் அக்னிவேசியரே கூறினர். இனி கோபிலர், சாண்டில்யர், முதலிய முனிகள் செய்த கற்பசூத்திரங்கள் பல விருப்பினும் அவற்றை அனுஷ்டிப்பவர்கள் இத்தேயத்தில் இல்லையாதலால் பற்றி அனுஷ்டானத்திலுள்ள பதினென் சூத்திரங்களே (அக்னிவேசியர் எடுத்துக்காட்டியபடி) இக்காலத்து வழக்கப்படி கற்ப சூத்திரங்களாம். இங்குள்ள சூத்திரங்கள் ஓரே முறையுணர்த்துவனவல்ல. வேதங்கள் பல சாகைகளிருத்தலாலும், அச்சாகைகளுக்குரியவந்தணாரதியோர்க்கு அவ்வச்சாகை மந்திரங்களாற்றுனே சம்ஸ்காரம் நடத்த வேண்டியது முறையாதலாலும், அவரவர்க்கு வேண்டிய கன்ம முறையை விதிக்குமாறு அங்ஙனம் செய்யப்பட்டதென்க. இதன் பாகுபாடு "சரணவ்யூகம்" எனும் நூலில் அறியலாம்.

இப்பதினென்சூத்திரங்களும் இப்பாதகண்டத்தில் எங்கும் கலந்து சிதறிஇருக்கின்றன. வடதேசங்களில் பதினெண் சூத்திரங்களும் வழங்கி வருகின்றன. நமதுதென்னாட்டிலோ அனேகபோதாயனீயர்கள். பெரும்பான்மையோர் ஆபஸ்தம்பர் அங்ஙனமே ஸத்யாஷடரும். திராஹ்யாயனர் வெகு பெயர்கள். ஆசுவலாயினிகள் சிறுபான்மையர், காத்யாயனரும் அங்ஙனமே. இன்னும் வைகானஸர், பாரத்வாஜர், அக்னி வைசியர், ஜைமினீயர், மாத்தியந்தினர் என்பதும்கூட்டிப்பதினொரு சூத்திரங்கள் இத்தென்னாட்டில்உள்ளன. தெலுங்கு நாட்டிலும் கன்னட தேசத்திலும் சாம்பவீயம். கௌஷீதகம் என சூத்திரங்கள் தென்னாட்டிலும் அதிகமுண்டு. ஆயின் பதிமூன்று சூத்திரங்களும், வட நாடுகளில் பதினெண் சூத்திரங்களும் உலாவுகின்றன.....

இத்தென்னாட்டில் கிருஷ்ணயஜுர்வேதிகள்:—போதாயனம், ஸத்யாஷாடம், ஆபஸ்தம்பம் ஆக்னிவேசியம், பாரத்வாஜம், வைகானஸம், என்னும் ஆறு சூத்திரங்களை அனுஷ்டிக்கிறார்கள். சுக்லயஜுர்வேதிகள்:—காத்யாயனம், மாத்யந்தினம் இரண்டு சூத்திரங்களை யனுஷ்டிக்கிறார்கள். ஸாமவேதிகளுக்குள்:—திராஹ்யாயனம், ஜைமினீயம் என இரண்டு சூத்திரங்கள் உண்டு. ருக்வேதத்தில் ஆசுவலாயனம் ஒன்றே. (இதனால் சிலர் சத்யாஷாடம், ஹிரண்ய கேசியம் என்னும் இருவகை வேறு ஸூத்திரங்கள் என்று கூறும் மயக்கம் ஒழியுமென்க.) பெரியோர் நிபந்தனங்களில், நான்கு ஸூத்திரப்காரம் மஹரிஷிகளைச்சில அடைச் சொற்களால் அழைப்பதுண்டு. போதாயனருக்கு "பகவான்" என்றும், "ஸத்யாஷாடருக்கு ஹிரண்யகேசியர் என்றும் ஆபஸ்த்தம்பருக்கு "ஸூத்திரக்காரர்" என்றும், யாக்ஞவல்கயருக்கு "ஸமேயி" என்றும் அடைகொடுப்பது வழக்கம். இவ்வடைச் சொல்லுடன் இப்பெயர்கள் போதாயன ஸூத்திரரிஷி தர்ப்பணத்திலும், ஸத்யாஷாட ஸூத்திரத்தில் ரிஷி தர்ப்பணத்திலும் உள்ளன. சில சூத்திரங்கள் நீண்டகாலம் கண்டன. சில அவ்வளவு காலங் காணுதவை.

அவற்றின் கால நிர்ணயமும், அதன் பிரமாணமும், அவற்றால் நமக்குள்ள உபகாரம் இவ்வளவெனவும், இவற்றுள் சிரௌதம் ஸ்மார்த்தம் இருபகுதிகளின் பெருமையும், [illegible] மும், கன்மங்களில் அவை யுபயோகிக்கும் வழியும், இஃதின்றியமையாதென்பதும் பின் முறையே விவரிக்கப்படும்.

(பிரும்ம வித்யா.)

---


### தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றம் பதிப்பு)

பிராம்மணர்ளின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

கிடைக்குமிடம் :—

பப்ளிஷர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

கீழவிடையல், திருச்சிரை.

---

Mr. N. E. வெங்கடேச சர்மா.

| | | | |
|---|---|---|---|
| ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி. | 1 | 0 | 0 |
| ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி. | 4 | 0 | 0 |

K. V. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷேந்தா: | 1 | 0 | 0 |
| ஸூனீதிகுசமாலா | 0 | 8 | 0 |

K R. V. சாஸ்திரிகள் பிரசுரங்கள்:—

| | | | |
|---|---|---|---|
| த்யானஸ்லோகம் | 0 | 1 | 0 |
| சாஸ்வதி பூஜாகல்பம் | 0 | 1 | 0 |
| ஜவஹர்லால் நேரு | 0 | 4 | 0 |
| தாதுரூபாவளி | 0 | 4 | 6 |
| ஸப்தமஞ்சரி | 0 | 5 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனர்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்

டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்,




## காங்கிரஸால் மதத்திற்கு உபத்ரவம்.

பிர்ம்மஸ்ரீ N. கணேச அய்யரின் பிரசங்கம்

"சுமார் 2000 வருடங்களுக்குமுன் ஸ்ரீபகவத் பாதாள் இப்பூவுலகிலவதரித்து அத்வைத மதத்தை ஸ்தாபிப்பதற்காக வேதப்ராமாண்யத்தையும் கர்மமார்க்கத்தையும் பரவச் செய்யும்பொருட்டு குமாரஸ்வாமியைக் குமரிலபட்டராக அவதரிக்க ஆக்ஞாபித்தார். வேதவிருத்தமான பௌத்த ஜைனாதி நிரீச்வர மதங்கள் நசித்தன. ஸ்ரீ மதாச்சார்யாள் பிற்பாடு அவதரித்து பூர்வோத்தர மீமாம்ஸைகளின் ஸம்பந்தத்தை யெடுத்துக் காட்டி நிகாற்ற அத்வைத மதத்தையும் வர்ணாச்ரமாசாரவ்யவஸ்தையையும் ஸ்தாபனம்செய்து, வேத விரோதிகளைக் கண்டித்து, ஷண்மதங்களிலுள்ள துராசாரங்களைச் சீர்திருத்தி அநேக மடங்களை ஸ்தாபித்து நம் ஆரியமதத்திற்கு ஓர் புற்றுயிரைக் கொடுத்தார்.

காலம் செல்லச்செல்ல நம்மையாண்டு வரும் ஆங்கிலேயர்கள் காலத்தில் சுமார் 100 வருடங்களுக்கு முன்பாகவே மஹாபுத்திசாலியாகிய லார்ட் மெக்காலே என்பவர் சொல்லியதுபோல் நம் பாரத மக்கள் 'ரத்தத்திலும் தோலிலும்மாத்திரமே இந்தியர்களாகவும் நடையுடைபாஷை, ஆசாரம் முதலியவைகளில் பாச்சாத்யர்களாக அவர் எதிர்பார்த்த காலத்திற்குள்ளாகவே ஆக்கப்பட்டார்கள். அதன்பயனாக நம்தேசமெங்கும் ஆங்கிலக் கல்வி போதனையால் ஸ்வஸ்வ தர்மானுஷ்டானத்திலிருந்து நழுவியதின் பயனாக நாஸ்திக மதம்நம் ஆஸ்திக நாட்டிற்கூட தலையெடுக்க ஆரம்பித்துவிட்டது. ஜனங்கள் வேதங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள், நம்பழக்கவழக்கங் [illegible] வர்களாய் எல்லாக் காரியங்களுக்கும் பாச்சாத்ய தேசங்களையே உபதேசத்திற்கு நாடுகிறார்கள். தர்மப்ரஷ்டர்களானதால் வேலையில்லாத் திண்டாட்டமும் கிளம்பியிருக்கிறது.

இக்கேடுகளை நிவர்த்தித்து நாம் நம்முடைய ஸ்வதர்மத்தைத் தடையின்றி யனுஷ்டித்து வருவதற்காக மிலேச்சராஜ்யத்திலிருந்து ஸ்வாராஜியத்தை யடைவதற்கு அநேக ஸனாதனிகளான ப்ராம் ஹணோத்தமர்களால் இப்பொழுது நாடெங்கும் வியாபித்திருக்கும் காங்கிரஸ் என்னும் ஓர் சபை சுமார் 50 வருடங்களுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது. அக்காலத்திலுள்ள காங்கிரஸ் வாதிகளின் நோக்கம் தர்மாவிருத்த வழியில் ஸ்வாராஜியத்தை யடைவதால் எல்லா மதஸ்தர்களும் தங்கள் தங்கள் மதானுஷ்டானங்களை இடையூறின்றி யனுஸரித்தல். ஆனால் 10, 15 வருடங்களாக நம் இந்திய வானத்தில் ராஹுவோ கேதுவோ என்று மோஹிக்கும்படியான ஒரு ஜ்யோதிஸ் தோன்றியிருக்கின்றது. அதன் ஒத்தாசையால்தான் இதுவரையிலும் மத விஷயங்களில் ப்ரவேசிக்காத காங்கிரஸ் பஹிரங்கமாய் 1930-ம் வருடம் ஆர்யமத விரோதமான சாரதாசட்டம் என்னும் கொடிய சட்டத்தை நிறைவேற்றிற்று அதையடுத்தாற்போல் தீண்டாமை விலக்கு சட்டம், ஆலயப்ரவேச மசோதாக்கள் கிளம்பாங்கள் முதலியன ஆர்யதர்மத்திற்கு மூல தோஹானியை யுண்டுபண்ணக் கிளம்பிவிட்டன. இவைகளுக்கெல்லாம் காங்கிரஸ் ஒத்தாசை செய்துவருகிறது. ஆகையால் ஆயிரக்கணக்கான அதர்மபீருக்களான ஸனாதனிகள் வருத்தத்துடன் காங்கிரஸ் மகாசபையை விட்டு விலகி கொஞ்ச வருடங்களுக்கு முன்பு காசியில் அகில பாரதீயவர்ணாச்ரம ஸ்வாராஜிய ஸங்கம் என்ற ஒரு ஸங்கம் அநேக மேதாவிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. ஸநாதனிகள் ராஜீய விஷயத்தில் மாத்திரம் காங்கிரஸோடு ஒத்துழைக்கக்கூடும். காங்கிரஸுக்கு ராஜீய விஷயங்களில் மாத்திரம் வாதிக்க உரிமையுண்டேயொழிய மத விஷயங்களில் பேசவாவது சட்டம் செய்யவாவது சட்டம்செய்ய ஒத்தாசை செய்யவாவது அதிகாரம் இல்லை.

தற்பொழுது காங்கிரஸிலுள்ளவர்கள் சாஸ்திரோல்லங்கனம் செய்ய வித்தர்களாகவும், ஆர்யரக்தமுள்ளவர்களானாலும் அனார்யபுத்தி நடையுடை ஆசாரம் முதலியவைகளைப் பெற்றிருக்கிறார்கள். நவீன இந்திய சரித்திரத்திலும் புராணங்களிலும் வேத விரோதிகள் சாதுர்வர்ண்யத்திற்கு வெளியுள்ள வேத பாஹ்யர்களாகவே யிருந்து வந்தார்கள். ஆகையால் அக்காலத்தில் வைதிகமத விரோதிகளை வெல்ல முடிந்தது. ஆனால் நம்மிடமே யிருந்துகொண்டு தாங்களும் ஹிந்துக்களென்று சொல்லிக்கொண்டு சாஸ்திரங்களுக்கு சாஸ்திர விரோதார்த்தத்தைக் கற்பிக்கும் நம் ஸஹோதரர்களாகிய காங்கிரஸ் வாதிகளான சீர்திருத்தக்காரர்கள்தான். ஸநாதனிகளால் ஸ்தாபிக்கப்பட்டு ஸநாதனிகளால் வளர்க்கப்பட்ட காங்கிரஸின் ப்ரெஸிடெண்டு ஸநாதனிகளுக்கு ஸ்தானங்களாக சிகாக்ரங்களையும், குஹாத்வாரங்களையும், ஸமுத்ர மத்யத்தையும் காட்டியிருக்கிறார். ஐயோ! தன்னைப்பெற்று வளர்த்த தகப்பனுக்கு இது தானோ மர்யாதை! இவ்வாறு ஸநாதனிகளால் ஸ்தாபிக்கப்பட்ட காங்கிரஸ் தற்பொழுது சீர்திருத்தக்காரர்களால் ஆக்ரமிக்கப்பெற்று இருக்கிறது. அதன் பயனால் தர்மம் என்னும் கோவானது தனது ஒற்றைப்பாதமும் ஒடிந்து விடுமோ என்று ஸந்தேகிக்கும் ஸ்திதியில் இருக்கிறது. தர்மம் தன்னைக் காப்பாற்றுகிறவனைக் காப்பாற்றும். த்வம்ஸம் செய்பவனை த்வம்ஸிக்கும், ஆகையால், எந்தவிதமான சட்டங்களை இக் காங்கிரஸ் ராஜியமாகிய காந்தி ராஜ்யம் செய்த போதிலும் சற்றேனும் மனந்தளராமல் ஈச்வான்மீது பாரத்தைப்போட்டு சாஸ்திரோக்தமான வழியிலேயே நிற்கவேண்டும்.

நம் மதமானது இன்னும் இரண்டு அம்சங்களில் தான் இருக்கிறது. அவைகள் ஸ்திரீ, ஆலயம். தற்பொழுது நம் காங்கிரஸ் அவ்விரண்டிற்கும் சாவுமணியை அடிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆலயப்ரவேச மசோதாவும், சாரதாசட்டமும் நம் மதத்தின் ஆணிவேரில் கோடறியை வைத்துவிட்டது. நாம் இனி மேலாவது தூங்காமல் அடிக்கடி அங்கங்கே புதிய ஸபைகளை ஏற்படுத்தியும், அதிகாரிகளுக்கு அவ்வப்போது தாங்கள் அபிப்ராயங்களையும் தீர்மானங்களையும் தெரிவிக்கவேண்டும். தற்பொழுது நம் பாதகண்டம் குமரில பட்டர் காலத்திற்கு முன் எவ்வாறு அநேக பாஷண்ட மதங்களால் நிரம்பி யிருந்து வெகு காலம் தத்தளித்து கடைசியில் ஆச்சார்யாளின் அவதாரத்தால் பாஷண்ட மதங்கள் ஸூர்யனைக்கண்ட பனிபோல் பறந்தனவோ அதேமாதிரி வெகு சீக்கிரத்திலேயே நம் தேசத்தில் 1943-ம் வருடத்தில் ஓர் அம்சாவதாரம் நடக்கப்போகிறது. இது ஓர் தேவ ரஹஸ்யம். ஆகையால் நம்மாலியன்றவரை அதுவரையிலும் ஸ்வதர்மத்தை விடாமல் நம் தேவாலயங்களைக் காப்போமாக. சாரதா சட்டத்தை மீறுவோமாக." (கரகோஷம்.)

செக்ரட்டரி,

இது திண்டுக்கல்லில் ஸ்ரீ சங்கரஜயந்தி மஹோத்ஸவத்தில் செய்யப்பட்டது.

---


திவான்பகதூர் V. K. ராமநுஜாசாரியார் எழுதப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ரமத தீபிகை. | 4 | 0 | 0 |

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்,


## திருவல்லிக்கேணித்தமிழ்ச்சங்கம்.

(இராயப்பேட்டைக் கிளை)
திருவள்ளுவ நாயனர் திருநாட் கொண்டாட்டம்.

மேற்கண்ட ஸங்கத்தில் ஷை திருநாளை யொட்டி அடியிற்கண்ட முறைப்படி இராயப் பேட்டை ஸ்ரீநிவாஸபெருமாள் ஸந்நிதியில் உபந்யாசங்கள் நடைபெற்றன.

22—6—38-உ புதன்கிழமை மாலை 6.30 மணி முதல் 9-30 மணி வரை பண்டித திருவாலி ஸ்ரீ ராமாநுஜாச்சாரியார் திருவள்ளுவரும் ஸ்ரீவைஷ்ணவமும் என்றவிஷயம்பற்றி மிக விரிவானதும், உருக்கமானதுமான ஒரு அரிய பிரசங்கம் செய்தார். திருவள்ளுவர் சிறந்த வைதிகரென்றும். நாற்பொருள்களை முப்பாலில் அடக்கியுள்ளாரென்றும், தேவிற் சிறந்த திருமால்போல் பாவிற் சிறந்தது வள்ளுவர் வெண்பாவென்றும், அவருக்கு ஸ்ரீவைஷ்ணவமே உடன்பாடு என்பது அவரது நூலை ஆய்ந்து அறிந்தவர்கள் கூற்று என்றும், மனனஞ் செய்வதே தக்க நூற்பயிற்சியாதலின் திருக்குறள் முழுமையும் தமிழ் மக்கள் நன்கு பயிலவேண்டுமென்றும் எல்லாப்பொருளும்இதன்பாலுள்ளவென்றும் இதன்பாலில்லாத எப்பொருளுமில்லை என்றும் எம்பெருமானது திருநாமங்கள் தமிழ்ப்படுத்தி வழங்கியுள்ளாரென்றும், தாமரைக் கண்ணனுலகைக்கண்டு கூறிய மஹாமுனிவரென்றும் கூறினர். முன்னும் பின்னுமாக பந்தலகுடி திருமலை ஐயங்கார் வள்ளுவர் பெருமையையும் தமிழ் மக்கள் கடமையையும் எடுத்தியம்பினர்.

24—6—38உ வெள்ளிக்கிழமை அதே இடத்தில் மாலை 6-30 மணிமுதல் 8 மணி வரை வித்வான் கோ. அரங்கஸாமி அய்யங்காரவர்கள் 'திருவள்ளுவரும் பேரின்பமும்' என்ற விஷயம்பற்றி ரஸமான உபந்யாஸம் செய்தார். அறத்தின் தன்மையையும் அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பதுபற்றியும், மன்னிய மூன்றில் நடுவண்தெய்த இருதலையுமெய்துமென்றும், காமம் சிற்றின்பம் பேரின்பமென இருவகைப்படுமென்றும், புண்ணிய பாபங்கள் பொன் இரும்பு விலங்குகளாதலின் தியாஜ்யமென்றும், பற்றவேண்டுவது வீடென்றும், பற்று அற்றதெனில் வீடு உற்றதென்றும், வீடெய்தினர் பிறப்பற்றவரென்றும், தேசிகர் மொழியைப் பின்பற்றி த்யானம் செய்யின் இலகுவில் வீடெய்தலாமென்றும், மெய்யுணர்தல் முதலிய அதிகாரங்கள் பேரின்பத்தையே போதிக்கின்றதென்றும் காம் வீழ்வாரென்ற குறளில் இருவின் பலங்களையும் கூறி பேரின்பப் பேற்றை நன்கு விளக்கியுள்ளாரென்றும் நன்கு பிரசங்கம் செய்தார்.

வந்தனோபசாரத்துடன் கொண்டாட்டம் இரவு 8-30 மணிக்கு நிறைவெய்தியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

---

(2)

## உபா கர்மம்.

ஆனி-மீ 16-உ பிரசுரமான ஆர்யதர்மத்தில் சோழவந்தான் பிரும்மஸ்ரீ சங்கா சாஸ்திரிகளால் உபாகர்மத்தைப்பற்றி எழுதியிருந்ததானது ரொம்பவும் சரி. ஆனால் இஷ்டி, நியாயத்தை அனுசரித்து எழுதியிருக்கிறது. அந்த விஷயத்திற்கு அது சரியான நியாயம். உபாகர்மத்திற்கு சரியாயில்லை. ஆகையால் உபாகர்மத்திற்குசரியான ஆதாரம் வேறு இடத்தில் இருந்தால் அதை விபரமாக எழுதும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

S. ராமசுந்திரேஸ்வரன்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஸூ ஆனி-மீ 30உ

## ஒரு நாள் விவாஹத்தை ஒப்பவில்லை.

சென்ற சில வருஷங்களை விட இவ்வருஷத்தில் பிராம்மணர்களுள் ஒரு நாள் விவாஹம் வெகு அதிகமாக எங்கும் நடைபெற்றதென்றும், இதை மதாசாரியர்களும், ஸநாதனப்பிரமுகர்களும் கண்டித்து ஏன் தடை செய்யக்கூடாதென்றும் பலர் நமக்கு எழுதியும் நேரிலும் கேட்டிருக்கின்றனர். இந்த மாதிரியான சாஸ்திர விருத்த துராசாரத்தை நாம் ஸங்கேதமாக ஆசரித்தோ, வளர விட்டோ வருகையில் ஸநாதனிகள் சீர்திருத்தக்காரர்களுடன் எதற்காக வீண் சண்டையிட்டுக்கொண்டிருக்கவேண்டுமென்றும், நமது எதிர்ப்பு வெறும் அர்த்தமற்ற கூச்சலாயிருப்பதாயும் அவர்கள் நம் மீது குறை சொல்லுகிறார்கள்.

ஒரு நாள் விவாஹத்தைப்பற்றி சாஸ்திர அபிப்பிராயமோ, நமது மதாசார்யர்களின் அபிப்பிராயமோ ஸந்தேஹத்திற்கு இடமாயிருக்க வில்லை யென்பதை யாவரும் அறிந்ததே. அந்த விவாஹம் சாஸ்திர ஸம்மதமல்ல வென்பதை அவர்கள் பல ஸந்தர்ப்பங்களில் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். ஸநாதனிகள் நடத்தும் எந்த மஹாநாடுகளிலும் இந்த விஷயம் பரிசீலிக்கப்பட்டு இந்த துராசாரத்தை நிறுத்தி விட வேண்டு மென்று தீர்மான மூலமாகக் கோரப்பட்டும் வந்திருக்கிறது. பணக்கஷ்டத்தாலும், ஸம்பந்தி ஹிம்ஸையாலும் சிரமம் ஏற்படுவதாக வியாஜம் சொல்லுவோர்க்கும் நமது தார்மிக சிரேஷ்டர்கள் தகுந்த வழியைக் காட்டியிருக்கிறார்கள். அதாவது விருந்து முதலிய ஆர்பாட்டங்களை ஒரே நாளில் முடித்துக்கொண்டு ஔபாஸனாதி வைதிக கார்யத்தை மட்டும் 4 தினங்களில் நடத்தலாமென்றும், பிரவிச்ய ஹோமம் முதற்கொண்டு மற்ற கார்யங்களை வரன் வீட்டில் போய் நடத்துவதே சாஸ்திர தாத்பர்ய மென்றும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இந்த வழியைப்பின் பற்றியும் சில தார்மிகர்கள் நடந்து வருவதாக நாம் அறிகிறோம்.

சென்னையில் கூடிய பண்டித பரிஷத்தும் பொது ஜனங்களுக்கு இந்த வழியைக் காட்டிருக்கிறது. இப்படியிருக்கையில் தர்மாசார்யர்களோ, ஸநாதனப்பிரமுகர்களோ ஒருநாள் விவாஹ வழக்கத்தை ஆக்ஷேபிக்கவில்லை யென்பது ஸரியாகாது. இவ்வளவையும் மீறி ஜனங்கள் இந்த துராசாரத்தை அதிகமாக ஆசரிக்கிறார்களேயன்றி இது குறையல்லவே யென்று வாதிப்பதும் ஸரியல்ல. ஜனங்களுக்கு தர்ம மார்க்கத்தைக்காட்டலாமேயல்லது அந்தப்படி ஆசரிக்க நிர்பந்தப்படுத்தும் அதிகாரம் நமக்கு உளதா? முன் காலங்களில் மதாசாரியர்களுக்கு இந்த அதிகாரம் இருந்தது உண்மையே. ஆனால் இப்போது நடக்கும்கவர்ன்மெண்டில் ஸமூக பஹிஷ்காரம் போன்ற நிர்ப்பந்தங்களை நம்மவர்கள் உபயோகிக்க முடியாமலிருக்கிறது.

இப்போது தப்புக் கார்யங்களைச் செய்வதில் ஒருவரை ஒருவர் உதாஹரணமாகக் கொள்ளுவது ஸஹஜமாகி விட்டது. ஒருவர் தாம் ஒரு அக்கிரமத்தைச் செய்யும் போது தமக்குமுன் செய்தவரைப்பார்த்துத் துணிவுகொள்ளுகிறார். ஒருநாள் விவாஹமும் இந்த வழியில் தான் விருத்தியாகிவிட்டது. ஆகையால் ஆஸ்திக புத்தியுள்ளவர்கள் பரலோகத்தையும், ஈச்வரனையும் சாஸ்திரத்தையும் நம்பி ஒழுங்காக நடந்தாலன்றி தர்மசாரியர்களும், மற்றவர்களும் இதில் என்ன செய்யக்கூடும்?

இந்த மாதிரி ஒரு நாள் விவாஹ துராசாரத்தைத் தடுக்காமல், சீர்திருத்தக்காரர்களுடன் நாம் ஏன் சண்டையிட்டுக்கொண்டிருக்கவேண்டுமென்பதும் பொருத்தமான வாதமல்ல. நாம் தற்போது தற்காப்பு முறையிலேயே தர்மபிரசாரம் நடத்திவரவேண்டியிருக்கிறது. நமக்குள் இருக்கும் துராசாரங்களைச் சீர்திருத்த அவகாசம் கிடையாது. சட்ட மூலமான நிர்பந்தங்களை ஏற்படுத்தி நமக்குக்கஷ்டம் விளைவிக்கக் கூடாதென்ற ஒரே வழியில்தான் நாம் வேலைசெய்து வருகிறோம். இந்தத்தொந்திரவு நமக்கு இல்லாத பக்ஷத்தில் நாம் நமது ஜனங்களிடையில் உள்ள துராசாரங்களை விலக்க முயற்சித்துப் பலனும் அடைய முடியும்.

ஆதலால் சட்டமூலமாக நமது மதத்திற்குப் பாதுகாப்பு ஏற்படும்வரையில் நாம் ஒரு நாள் விவாஹத்தடுப்பு பிரசாரத்தை கவனிக்க முடியாமலிருக்கலாம். இதைக்கொண்டு நாம் வேறு அதர்மங்களை எதிர்ப்பதுஎப்படி அநாவச்யகமாகும்?

ஆகையால் இந்த மாதிரி வீண் விவாதத்தை வளர்த்திக்கொண்டிராமலும், மதாசார்யர்கள் மீது பழி சொல்லாமலும் அவரவர் தம் தம் மட்டில் ஒரு நாள் விவாஹத்தை ஒழித்து நடந்து வந்தால் மற்றவர்களும் அந்த வழியிலேயே திரும்ப ஸந்தர்ப்பமேற்படும்.

விவாஹமானது ஸகல வர்ணச்ரம தர்மத்திற்கும் அடிவேர் போன்றது. இங்குதான் பிராம்மணனுக்கு அக்னிஸித்தி யேற்பட வேண்டும். இந்த உயர்ந்த தர்மத்தை ஒருவரைப் பார்த்து ஒருவர் வீணாக்கிக்கொள்ளாமல், சாஸ்திர விதிப்படி நடந்து சிரேயஸ்ஸை அடைய வழியிருக்கிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## குறிப்புகள்.

### அர்த்தமற்ற புகழ்ச்சி!

தீவ்ர அபேதவாதியான ஸ்ரீமான் நேரு கூட காங்கிரஸ் மந்திரி ஆக்ஷிக்கு துதி பாட ஆரம்பித்திருப்பது விசேஷமே. ஒரே மூச்சாகப் பதவி ஏற்பை எதிர்த்தவர்களில் இவர் முக்யஸ்தர். லண்டனில் ஸ்ரீமான் நேரு காங்கிரஸ் ஆக்ஷியை ஆதரித்துப்பேசுகையில், ஏற்கனவே இருந்ததைவிட இப்போதுகாங்கிரஸ் மாகாணங்களில் பிரஜாஉரிமையானது விசேஷமாகக்காப்பாற்றப்பட்டு வருவதாகப்பேசியபோதிலும் விஷயமறிந்த இந்தியர்கள் இதை எப்படி நினைப்பார்களோ? உண்மையில் முன்னைவிட பிரஜா உரிமைகள் காப்பாற்றப் படுகின்றனவா?

ஏற்கனவே கவர்ன்மெண்டை எதிர்த்துச் சட்ட வரம்பு மீறி ராஜீயக்கிளர்ச்சி நடத்தியவர்கள் காங்கிரஸ்காரர்களே. அவர்களுடைய அபிவிருத்தியைத்தடுக்கவே கவர்ன்மெண்டார் அடக்கு முறையை பிரயோகிக்கவேண்டியிருந்தது. காங்கிரஸ்காரர்களைத்தவிர வேறு பிரஜைகளிடம் முன் கவர்ன்மெண்டார் எவ்வித அடக்கு முறையையும் செய்யவில்லை. பேச்சு ஸ்வதந்திரம், எழுத்து ஸ்வதந்திரமென்ற வியாஜம் கொண்டு எதை வேண்டுமாயினும் செய்து அமைதியைக்கெடுத்து வந்தவர்களையே அடக்கவேண்டியிருந்தது. ஆகையால் ஏற்கனவேபிரஜாவுரிமை பிடுங்கப்பட்டதாக நேருஜி சொல்லியது காங்கிரஸ்காரரைப் பற்றியதே. ஆனால் இப்போதோ அந்த காங்கிரஸ்காரர்களே ஆக்ஷி நடத்துவதால் முந்திய கவர்ன்மெண்டைப்போல் அநியாகப்பேசிக் கண்டிக்கவோ, கிளர்ச்சிசெய்யவோ இடமில்லை. காங்கிரஸ்காரர்கள் சாந்தமாயிருப்பதால் அடக்கு முறையும் குறைந்து விட்டது. இதனால் பிரஜாஉரிமையும் காப்பாற்றப்பட்டு விட்டதாககூற நியாயமுண்டா? பாட்லிவாலா முதலிய அபேதவாதிகள் தங்கள் உரிமை காங்கிரஸ்ஸர்க்காரால் பாதிக்கப்பட்டுவிட்டதாகக் கூறவில்லையா? ஜஸ்டிஸ், சு. ம. க்கக்ஷிக்காரர்கள் தங்களுடைய ஸாதாரண பிரஜா உரிமை கூட இப்போது அழிந்துவிட்டதாகக்கூக்குரல் இடவில்லையா? எந்த ஆக்ஷியிலும் யாராவது சிலர் குறை கூறிக்கொண்டிருப்பது ஸஹஜமென்றால், இந்தக்கக்ஷியை எல்லோரும் எல்லா ஸமயத்திலும் சொல்லித்தப்பித்து விடலாமல்லவா?

காங்கிரஸ் ஆக்ஷியில், குடிவார மசோதா, கடன்நிவாரண மசோதா போன்றவைகளால் ஸொத்துரிமை, பண உரிமை அபஹரிக்கப் படுகிறது. மத உரிமையைப்பற்றிக்கேட்கவேண்டியதில்லை. சாரதாச்சட்டத்திருத்தம், பம்பாய், சென்னை ஆலயப்பிரவேசச்சட்டங்களைப்பாருங்கள்! இன்னும் எவ்வளவோ அபாயச் சட்டங்கள் கர்பபத்தில் இருக்கின்றன. இவ்வளவுக்கிடையில் காங்கிரஸ் ஸர்க்கார் பிரஜாவுரிமையை முன்னை விடக்காப்பாற்றி வருவதாகக்கூறுவது விந்தையிலும் விந்தையே.

### ஜமீன்தார்கள் காங்கிரஸில் சேர யோஜனை?

ஆக்ராமாகாண ஜமீன்தார்களின் கூட்டம் சில தினங்களுக்கு முன் நடந்தபோது, கூட்டத் தலைவரான ஜமீன்தார் பேசுகையில், காங்கிரஸானது ஜமீன்தாருக்கு விரோதமாக வேலைசெய்து வருவதால் அதைத் தடுக்க ஜமீன்தார்கள் யாவரும் காங்கிரஸில் சேர்ந்து வேலை செய்யவேண்டுமென்று யோஜனை கூறினார்.



380

## விவாஹ வைபவமும் வித்வத் ஸபையும்.

### சென்னையில் நடந்த விவரம்.

சென்னையில் மிகப் பிரஸித்த தார்மிகராய் விளங்கிவரும் தர்மரக்ஷாமணி பிரம்மஸ்ரீ கே. பாலஸுப்ரமண்ய அய்யர் பி. ஏ. பி. எல் அவர்களின் குமாரத்தியான ஸௌபாக்யவதி மாலதிக்கும், சிரஞ்சீவி ராமரத்னத்திற்கும் சென்ற 6உ சென்னையில் விவாஹ மஹோத்ஸவம் மிக்க விசேஷ வைபவத்துடன் நடந்தேறியது. சென்னையிலுள்ள எல்லா வகுப்பு பிரமுகர்களும் இந்த வைபவத்திற்கு விஜயம் செய்திருந்ததுடன் வெளியூரிலிருந்தும்வெகு பேர் நண்பர்கள் வந்திருந்தனர். ஏராளமாக பூரி தக்ஷிணைகளும், பிராம்மணபோஜனம் முதலியவைகளும் வழங்கப்பட்டன. எல்லா ஜாதி ஜனங்களுக்கு விசேஷமாக அன்ன தானம் செய்யப்பட்டது.

### வித்வத் ஸபை.

இந்த வைபவத்தை முன்னிட்டு ஸ்ரீமான் அய்யர் அவர்களின் கிரஹத்தில் ஓர் வித்வத் ஸபையும் நடந்தது. ஸ்ரீமான் அய்யரவர்களின் விசேஷ அழைப்பின்மேல் அடியிற் கண்ட பிரபல வித்வான்கள் அநேகர் விஜயம் செய்திருந்தனர்.

1 வித்யா வாசஸ்பதி மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ S. குப்புசாமி சாஸ்திரிகள் (பிரஸிடெண்ட்.) 2 மஹாமஹோபாத்யா பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள். 3 பிர்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள். 4 மஹாமஹோபாத்யாய பிர்ம்மஸ்ரீ R. V. கிருஷ்ணமாச்சாரியார். 5 பிர்மஸ்ரீ அக்னிஹோத்ரம தாத்தாச்சாரியார். 6 பிர்ம்மஸ்ரீ வெங்கட்டசுப்ரமண்ய சாஸ்திரிகள. 7 பிர்மஸ்ரீ சிவசுப்ரமண்ய சாஸ்திரிகள். 8 பிர்ம்மஸ்ரீ வெங்கடாசல சாஸ்திரிகள். 9 மஹாமஹோபாத்யாய அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள். 10 பிர்ம்மஸ்ரீ T. A. வெங்கடேச தீக்ஷிதர். 11 பிர்ம்மஸ்ரீ ராமனுத சாஸ்திரிகள். 12 பிர்மஸ்ரீ போலகம் ராமா சாஸ்திரிகள். 13 பிர்மஸ்ரீ ஆங்கரை ரெங்கஸ்வாமி சாஸ்திரிகள். 14 பிர்ம்மஸ்ரீ வெப்பத்தூர் வைத்யனுத சாஸ்திரிகள். 15 பிர்ம்மஸ்ரீ சேங்காலிபுரம் வைத்யனுத சாஸ்திரிகள். 16 பிர்ம்மஸ்ரீ போலகம் சுந்தா சாஸ்திரிகள். 17 பிர்மஸ்ரீ மாதவ தீக்ஷாச்சாரியார். 18 பிர்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகள் அண்ணுமலைநகர். 19 பிர்ம்மஸ்ரீ V. அனந்தாச்சாரியார். 20 பிர்ம்மஸ்ரீ கடலங்குடி நடேச சாஸ்திரிகள் 21 பிர்ம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர். 22 பிர்மஸ்ரீ ஸோமதேவ சர்மா. 23 பிர்ம்மஸ்ரீ சங்காராம சாஸ்திரிகள். 24 பிர்ம்மஸ்ரீ M. கணேச சர்மா 25 பிர்ம்மஸ்ரீ ராவ்பஹதூர் S. K. பத்மநாப சாஸ்திரிகள். 26 பிர்ம்மஸ்ரீ R. S. சுப்ரமண்ய சாஸ்திரிகள். 27 T. V. ராமச்சந்திர தீக்ஷிதர். 28 பிர்ம்மஸ்ரீ K. A. லக்ஷ்மண சாஸ்திரிகள். 29 பிர்ம்மஸ்ரீ K. பாலசுப்ரமண்ய சாஸ்திரிகள். 30 பிர்ம்மஸ்ரீ R. S. வெங்கட்டராம சாஸ்திரிகள்.

இந்த ஸபையில் வித்யாவாசஸ்பதி, மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ குப்புஸாமி சாஸ்திரிகள், அக்ராஸனம் வஹித்து ஸமயோசிதமான சிறந்த பிரஸங்கமொன்று செய்தார்கள்.

ஸபைக்கு வந்திருந்த பண்டிதர்களை வரவேற்று ஸ்ரீமான் பாலஸுப்பிரமண்ய அய்யாவர்கள் ஸம்ஸ்கிருதத்தில் சிறிய பிரஸங்கமொன்று செய்தார்.

அதன் ஸாரமாவது:—

नमः सदसे.

धूमव्याकुलदृष्टिरिन्दुकिरणैराह्लादिताक्षी पुनः
पश्यन्ती वरमुत्सुकानतमुखी भूयोह्रिया ब्रह्मणः।
सेर्ष्या पादनखेन्दुदर्पणगते गङ्गादधानेहरे
स्पर्शादुत्पुलका करग्रहविधौ गौरी शिवायास्तुनः॥

अयि भोः! विवाहमहोत्सवावसरेऽस्मिन्समवेताः माननीयाः पण्डितमहोदयाः!

महदिदं मे भागधेयं। धन्यश्चाहमस्मि। यदद्य कुशाग्रीयधिषणास्वादितनिखिलशास्त्रार्थेभ्यः अधीतिबोधाचरणप्रचारणैः लोकस्यादर्शभूतेभ्यः तत्रभवद्भ्यो विद्वद्वरेभ्यः स्वागतं व्याहरामि।

श्रीमन्तोहि मदीयमाह्वानं निमित्तमात्रंकृत्वा, परमार्थतोमां कृतार्थयितुमेवात्र समागताः। विशिष्य च, दूरदेशात् गतागतक्लेशं, आत्मनः कार्यजातं, नियमभङ्गञ्चाविगणय्य, समाजमिमं भूषयन्ति। तत् सप्रश्रयं सादरंच वः प्रणमामि। यश्चायमभ्यर्हणीयेदृशपण्डितसन्दर्शन समुद्भवः हन्त मे हर्षातिरेकः, अन्तरनुभूयते तं कथमपि न पारयामि वाचा प्रकाशयितुं। विवाह प्रमुखेषु, अवसरेषु समवेत मित्रबन्धुजन प्रमोदाय, यथार्हं सजन्धि गीत वादित्राणि प्रकल्प्यन्त इत्येषा लौकिकी समाजस्थितिः। तत्रमन्ये कश्चिदयं अतिशयितः प्रकारः, यत् पण्डितवरेण्यानां समितिसंपादनंनाम। अत्र हि विदग्धाः प्रज्ञावन्तश्च सविशेषमुपरज्यन्ते बहवः। लौकिकाः अलौकिकाश्च विषयाः सरसमास्वाद्यन्ते। अथच, वधूवरयोगो विदुषा मादृशा समृद्ध्यते। किंबहुना यस्योमा महेश्वररूपस्य सांनिध्ययोगात्कान्तिमत्तया, वधूवरं पुष्यति; इत्याहस्म महाकविः श्रीकालिदासः सभगवान् प्रवदत्सुविपश्चिद्वरेषु,

"वादः प्रवदतामहं" इत्यसंशयं विशेषतोत्र संनिधत्ते। एवं विशिष्टप्रयोजनस्य समाजस्य संराधनं भगवत्संराधनजमेव पुण्यमावहत् विवाहमङ्गळमिदं शुभोदर्कं विधास्यतीति मे निश्चयः।

इत्थंनाम दैन्यासंपदाऽस्मान्महीकुर्वतः पण्डितसमवायस्य यथावदुपचरणेऽसमर्थः भक्त्यादराभ्यां प्रणतशिराः धन्यवादानेव भूयो भूयः उपहरामि। उपचरणविषये च बह्वपराध्यन् मर्षणीयोऽहम् भावमात्रपरितोषिभिः क्षमावद्भिः पण्डिततल्लजैरिति साञ्जलिबन्धमभ्यर्थये।

अस्याः सभाया अध्यक्षपदवीमलंकर्तुं मान्यत मान्मयि प्रमभाजः महामहो पाध्याय कुप्पुस्वामि शास्त्रि पादान्सविनयं प्रार्थये।

பிறகு பிரம்மஸ்ரீ குப்புஸாமி சாஸ்திரிகள் முகவுரை கூறியதும் அநேக பண்டிதர்கள் பற்பல முக்ய விஷயங்களைப்பற்றிச் சுருக்கமாகப் பிரஸங்கத்தினர்.

பிரம்மஸ்ரீ குப்புஸாமி சாஸ்திரிகள் பேசியதாவது:—

எனக்கு மிகவும் ஸ்னேகமாயுள்ள ஸ்ரீமான் பாலஸுப்ரமண்ய அய்யர் தன் புத்திரியின் விவாஹ மஹோத்ஸவத்தில் சிறந்த பண்டிதர்களை வரவழைத்து இதுபோன்ற ஸபை நடத்துவது மிகவும் ஸந்தோஷமாகவிருக்கிறது. ஸம்ஸ்கிருதத்தை விருத்தி செய்வதும் சுப முகூர்த்தங்களில் ஸபை நடத்துவதும் இவர்களுக்கு குல தர்மமாகயிருந்து வருகிறது. இந்த ஸம்பிரதாயம் பாரததேசத்தில் பண்டைக்காலத்திலிருந்து அனுஷ்டிக்கப்படுவதுமல்லாமல் ஸமீபகாலம்வரை ஸரிவர கவனிக்கப்பட்டு வந்தது. தற்காலத்திலும் சில தேசங்களில் ஆங்காங்கு இதைக் காணலாம். யக்ஞபாகாதிகளில் பண்டிதர்கள் சேர்ந்து அநேக விஷயங்களை விசாரம் செய்தனர் என்று இதிகாஸ மூலமாய் கேட்டிருக்கிறோம். விவாஹம் என்பதும் ஓர் சிறந்த யக்ஞமாய் கருதப்படுவதால் இது அவச்யம் செய்யப்படவேண்டிய கார்யமாகும். ஸமீபகாலத்திலிருந்த மகாகவி நீலகண்ட தீக்ஷிதர் அவர்கள் சிவ லீலார்ணவம் என்ற காவ்யத்தில் மீனாக்ஷிகல்யாண ப்ரஸங்கத்தில் மிகவும் விமர்சையாகவும், அழகாகவும் வர்ணித்திருக்கிறார். கௌதம மகர்ஷி வந்திருந்தார். ஜைமினி மகர்ஷியின் சிஷ்யர்களுக்கும், கௌதம மகர்ஷியின் சிஷ்யர்களுக்கும் வேடிக்கையாக விசாரங்கள் ஏற்பட்டனவென்று நிரூபணம் செய்கிறார். அதாவது ஜைமினி சிஷ்யர்களான மீமாம்ஸகர்கள் நையாயிகர்களிடம் கேட்ட ப்ரச்னமாவது, தங்கள் ஆசிரியர் கௌதமர் தன் மனைவிக்கு கல்லாகும்படிசெய்த சாபமானது மிகவும் சிறந்தது. ஏன் எனில் அவர் ஸ்தாபனம் செய்த மோக்ஷமும் பாஷாணமல்லவா வென்பது. அதற்கு பதில் நையாயிகர்கள் சொல்லியதாவது. தங்கள் ஆசிரியர் ஜைமினி வேதத்திற்கு ப்ராமாண்யம் ஸ்தாபிக்கிறேன் என்று சொல்லி கடைசியாக தேவர்களுக்கு சரீரம் இல்லை என்றும் சப்தமே தேவதை என்றும் முடித்தாரே. அது இந்தக் கல்யாணத்தில் ஸகல தேவர்களும் வந்திருப்பதைப் பார்த்தால் ப்ரத்யக்ஷ விரோதமென்று விளங்கவில்லையா? என்றார்கள். இச்சமயத்தில் அங்கு கூடியிருந்த வேதாந்திகள் அவர்களுடன் கலந்துகொண்டு 'ஆனதுபற்றியே நமது ஆசிரியர் வ்யாஸ முனிவர் தேவதைகளுக்கு சரீரமுள்ளதாக நிரூபித்திருக்கிறார் என்றனர். இதற்கு பதிலளிக்கும் தருணத்தில் மீமாம்ஸகர்கள் தேவதைகளுக்கு சரீரமில்லை என்பதும் ப்ரத்யக்ஷ விரோதமானால் வேதாந்திகள் எல்லா வஸ்துக்களும் பொய் என்று சொல்லுவது ப்ரத்யக்ஷ விரோதமல்லவா? என்றார்கள். இதுபோல் பல சாஸ்திரங்களை மொழிந்திருக்கிறார்கள். இதனால் கல்யாணமுதலிய ஸந்தர்ப்பங்களில் பண்டித ஸபை செய்வது பண்டைகால ஒழுக்கமென்றும் அது முக்கியமென்றும் கவியின் நோக்கம் வெளியாகிறது. இனி காவ்யம், சாஸ்திரம், விவாஹம் முதலிய தர்மங்கள் இவைகளைப்பற்றி பண்டித ச்ரேஷ்டர்களின் உபன்யாஸங்களை நாம் கேட்கவேண்டும்.

காவியம், சாஸ்திரம், தர்மம் முதலிய விஷயங்களில் பண்டிதர்கள் நன்கு உபன்யாஸம் செய்தார்கள். அதில் முக்யமாக கார்ஹஸ்த்யத்தின் மேன்மையும் எடுத்துரைக்கப்பட்டது. வேதாந்த சாஸ்திரம் கர்ம மார்க்கத்தைவிட ஞான மார்க்கம் உயர்ந்தது என்பதை விளக்குகிறது உண்மையே. ஆயினும் கர்மப்ராதானமான கிருகஸ்தாச்ரமத்திலிருந்தே ஞானம் பெறுவது சிறந்தவழி. ஸன்யாஸத்தை விதிக்கவந்த ப்ருஹதாரண்யகோபநிஷத்தாலும் கூட நன்குவிமர்சம் செய்தால் கார்ஹஸ்த்யத்தின் மேன்மையே விளங்கும். இந்த உபனிஷத்தின் சாயை அப்படிகாணப்படுகிறது. யாக்ஞவல்க்யரும் அதிலேயே மிகுந்த ச்ரத்தையை காட்டுகிறார். ப்ரம்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸத்தை ஸ்தாபித்த சங்கர பகவத்பாதர்களும் ஸௌந்தர்ய லஹரியில்:—

(தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

सुधामप्यास्वाद्य प्रति भयजरामृत्युहारिणीं विपद्यन्ते विश्वे विधिशतमखाद्यादिविषदः । करालं यत्क्ष्वेलं कबलितवतः कालकलना नशंभोस्तन्मूलं तवजननि ताटङ्कमहिमा ॥

என்று தேவியின் தாடங்க மஹிமையினாலேயே சிவனுக்குநித்யத்வம் என்றும் அமிருதத்தை உண்டதேவர்களுக்கும் முடிவு ஏற்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள் ஸ்ரீகாமகோடி பீடத்தில் ஆசார்ய பரம்பரையில் மூககவி அதிஷ்டானமாகயிருந்தார் இது மடாம்னாயத்திலிருந்து நன்கு வெளியாகிறது. ஆனதுபற்றி அவர்களும் ப்ரம்மசர்யத்திலிருந்தே ஸன்யாஸம் பூண்டவர்கள் என்பதில் ஐயமில்லை. ஆயினும் அவர்கள் கிருஸ்தாச்ரமத்தை உயர்த்திப் பேசியிருப்பது

'जगन्नेदं नेदं परमिति परित्यज्य यतिभिः कुशाग्रीय स्वान्तैः कुशलधिषणैः शास्त्र सरणौ । गवेष्यं कामाक्षि ध्रुवमकृतकानांगिरि सुते गिरामैदंपर्यं तव चरणमाहात्म्यगरिमा ॥

இந்த ச்லோகத்தில் கவனிக்கத்தக்கது. மந்தஸ்மித சதகத்தில்

'आलोके तव पञ्चसायकरिपोरुद्दामकौतूहल प्रेंखत्कुण्डलधट्टनप्रचलितादानन्ददुग्धांबुधेः । काचिद्वीचिरुदंचतिप्रतिनवा संवित्प्ररोहात्मिका तां कामाक्षिकवीश्वराः स्मित मिति व्याकुर्वते सर्वदा ॥

என்ற ச்லோகத்தில்விவாஹகாலத்தில் தேவியின் மந்தஸ்மிதம் சிவன் அடைந்த ஸந்தோஷத்தை விமர்சையாக வர்ணித்திருக்கிறார்.

(இதைச் சொல்லுங்கால் சாஸ்திரிகள் அவர்கள் எதிரில் உட்கார்ந்திருக்கும் மாப்பிள்ளையைப் பார்த்து அதுபோன்ற மந்தஸ்மிதம் இவருக்கும் கிடைத்திருக்கலாம் எனவே மாப்பிள்ளை நகைத்தார். ஸபையோர் எல்லோரும் கைகொட்டினார்கள்) எதிர்கக்ஷியை சேர்ந்தவரே இதுபோல் விவாஹத்தின் மஹிமையை எடுத்துரைப்பது ஸ்திரமான ஸாக்ஷ்யமாகும் என்றார். இதுபோல் மற்ற சில காரணங்களாலும் விவாஹத்தை விளக்கினார்கள்.

பிறகு நமது பாரததேசத்தில் விவாஹம் தர்மத்தை நோக்கியே செய்யப்படுகிறதுபற்றி இதுபோன்ற விவாஹம் எவ்வளவுநாள் வழக்கத்திலிருக்கிறதோ அதுவரையில் தர்மத்திற்கு குறைவு வாராது என்றும், இதைத் தனது நண்பரான மதுரை நடேசய்யருக்கு தான் ஒரு ஸமயம் எடுத்துரைத்திருப்பதாயும் சொன்னார்கள். ரிஜிஸ்டர் மூலமான விவாஹத்தை நமது தேசம் ஒருபொழுதும் ஏற்காது என்பதற்கு ஓர் உதாகரணம் சொன்னார்கள். என்னிடம், காலேஜிற்கு கொண்டுபோய்விட ஓர் ரிக்ஷாக்காரன் இருந்தான். அவன் மதாந்தரத்தில் சேர்ந்துகொண்டு விவாஹம் செய்துகொண்டால் தனக்கு சௌகர்யம் ஏற்படுமாயினும் அது தைவஸம் மதமாகாது என்று சொன்னான். என்று கடைசியாக இதுபோன்ற உபநயனங்களும் விவாஹங்களும் ப்ரதானமாக நமது தேசத்தில் நீண்டு இருக்கவேண்டும் என்று தனது ப்ரார்த்தனையை தெரிவித்தார்கள். பிறகு பண்டிதர்களுக்கு ஸம்மானம் வழங்கப்பெற்றது. ஸம்மானத்தை தான் பெற்றுக்கொள்வதுபற்றி தப்பாக எண்ணக்கூடாது என்று அய்யாவர்கள் கேட்டுக்கொள்ளும்பொழுது இதற்குமுன் இதே பங்களாவில் நடந்த விவாஹ ஸபையில்தான் ஸன்மானம் பெற்றுக்கொள்வதற்கு காரணம், தான் பண்டித கைங்கர்யம் செய்யவேண்டும் என்று செய்துகொண்ட

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

விதவா விவாஹமா? பண்ருட்டியில் ஓர் காங்கிரஸ் கூட்டத்தில் ஷை விஷயத்துடன் ஆலயப்ரவேச விஷயமும் தீர்மானம் செய்யப்பட்டது! நாளுக்குநாள் தேசியஸபை தேச தர்மத்தை அடியோடு மாற்றி அழிக்க முயன்றுவருகிறது. மற்ற துறைகளில் மூடப்பட்டு மத விஷயத்தில் விசாலமாக இதன் மூளை பிரவிருத்திக்கிறது. ஆதலின் ஆஸ்திகர் தனிக்கக்ஷி அத்யவச்யமல்லவா?

சூக்ஷியை அறிவோம்! ஆலயப்ரவேச விஷயமாகராஜாஜியின் ஆழ்ந்த சூக்ஷி ஆஸ்திகர் அறியாததல்ல. பல இல்லை தேவதைகளைக் கிளப்பிவிட்டு இத்தினை ஸபைகள் ஸாதகமாயிருந்து வற்புறுத்துவதால் செய்தோமென ஒரு நாள் திடீரென சட்டம் செய்வார்! ஆதலின் ஆக்ஷேபமேயில்லையோ வென்று அவர்ஸர்ஹஸத்திற்கிடமளிக்காமல் ஒவ்வோர் ஊரிலும் கண்டனம் செய்தனுப்புக! பயன் பரமனைச்சார்ந்தது!

குண்டூரின் பாக்கியம்!! பற் பல ஊர்கள் ஸ்ரீ காமகோடி பூடாதிபதி ஜகத்குருவை வ்யாஸ பூஜைக்கழைக்க குண்டூரே பெரும் புண்யம் செய்தது! இரண்டு மாதமங்கு தங்கி சிஷ்யஜந க்ஷேமத்தை நாடி செய்து வரும் பூஜாதிகளில் கலந்துபாக்யம் பெறுவோர் உத்தமர்.

சட்டப்படி குற்றமானாலும்! அதர்மமல்ல. பால்ய விவாஹம் என்றோர் ஆமதாபாத் நீதிபதி தீர்ப்புச் சொன்னார். இதை மேலதிகாரி ஏற்கமாட்டாரென தெரிந்திருந்தும் தைர்யமாய் தன் மனதில் பட்ட தர்மத்தை எடுத்துரைத்த இவ்வுத்தமரை தர்ம தேவதை ஆசீர்வதிக்கும்.

தந்தைக்கேற்ற மைந்தன்! தர்மாக்ஷாமணி பிரும்மஸ்ரீ மகா-௱-௱-ஸ்ரீ கே. பாலசுப்ரமண்யய்யாவர்கள் தனது குழந்தை விவாஹத்தில் ஸுப்ரஸித்தர்களான பண்டித ரத்னங்களை அழைத்து தக்க ஸம்பாவனை செய்து அபிரிமிதமான அன்னதானமும் செய்தார்! அவர் தந்தை தேடிய தனத்தில் பாதி தர்மத்திற்களித்தது போல் இவ்விவாஹ செலவில் ஒரு பகுதி அன்னதான ஸம்பாவனாதிகளில் செலவானதைக்கொண்டாடாதாரில்லை! தார்மிகர் வாழி! புதுத்தம்பதி வாழி!!

ஏன் சந்தியில் நிற்கக்கூடாது! அரசாங்கத்திற்கு யோஜனை சொல்லும் வகையில் சென்னையில் ஓர் கோஷ்டி பெண்களுக்கு போலீஸ் வேலை அவச்யம் கொடுக்கவேண்டுமென்றது ஆனால் வண்டிகளை ஒழுங்கு படுத்த நடுத்தெருவில் நிறுத்தக்கூடாதென்கிறது! சந்திக்கிழுத்த பின் நடுச்சந்தியில் நின்றாலென்ன!

சோத்துக்கலைவது நாகரீகமா? ஆயிரக்கணக்கான பி. ஏ. எம். ஏ, வேலையில்லாமல் தவிக்க பெண்களை முன்னுக்குக்கொண்டுவருவதாக அவர்களை வேலையிலமர்த்துவது எவ்வளவு அறியாமை! அவர்களுக்கு தீங்கென இன்னும் தலைவாறியவில்லை. வேலூரில் ஓர் பெண் உபாத்தியாய வேலைக்கு பறச்சிக்காகிறிஸ்துவச்சிக்கா இந்துவுக்காஎன சண்டை! ஸம்பாதித்து போடும் பொறுப்பு புருஷனுக்குவிட்டு வீட்டோடு நிற்காததால் வருந் தீமை!!

---

ப்ரதிக்ஞைஎன்று தெரிவித்ததாயும் அதையும் மிகவும் ச்லாகித்து மகா-௱-௱-ஸ்ரீ V. கிருஷ்ணஸ்வாமி அய்யாவர்கள் அங்கீகரித்தார்கள் என்பதையும் எடுத்துரைத்தார்கள். இத்துடன் ஸபை கலைந்தது.

நமது நிருபர்.

---

மந்திரி ஊர் நகரசபைசண்டை!! சேலத்தில் காங்கிரஸ் கக்ஷியும் மற்றோரும் சண்டையிட்டு போலீஸை வரவழைத்தது தேசத்திறகே அவமானம்!

விவாஹம் நாட்டின்நலத்திற்கே!! தனிப்பட்டவருக்கல்ல!! என ஹிட்லர் முழங்குகிறார். இனி உணவும் தேசநலத்திற்கேஎன்பர்!

தர்ம உத்தாரணம் போல்தான்! பழைய குருகுலத்தை வார்தாஸ்கீம் மூலம் உத்தாரணம் செய்யப்போவதாக கல்வி மந்திரி கோஷிக்கிறார்!

---

## சேலம் முனிஸிபாலிடியில் அமளி.

### காங்கிரஸ்மெம்பர்களின் போட்டிக்கூட்டம்.

சேலம் முனிஸிபாலிடியில், கண்ட்ராக்ட் விஷயமாகவும், பொருட்காக்ஷி மைதான விஷயமாயும் மெம்பர்களுள் பலமான விவாதம் ஏற்பட்டது. காங்கிரஸ்காரர் ஒரு பக்கமும், எதிர்க்கக்ஷியார் ஒருபுறமுமாக இந்த யுத்தத்தில் கலந்துகொண்டார்கள். வாய்ச் சண்டை வலுத்தது. மினிட்ஸ் புத்தகம் பிடுங்கப்பட்டது. போலீஸ் உதவி வந்தது. எதிர்க்கக்ஷியார் போனபின் காங்கிரஸ்கக்ஷி மெம்பர்கள் முனிஸிபல் கூட்டம் நடத்தி தங்களிஷ்டப்படி தீர்மானம் செய்தார்கள். இத் தீர்மானமடங்கிய காகிதத்தை எதிர்கக்ஷி மெம்பர் ஒருவர் பிடுங்கி கிழித்தாராம். பேஷ்! பேஷ்!!

## யூதர்—அராபியர் சச்சரவு.

பாலஸ்தீனத்தில் யூதர்-அராபியர் சண்டை முற்றிவிட்டது. இருதரப்பிலும் பலர் கொல்லப்படுகின்றனர். அங்கு ராணுவச்சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது.

## காங்கிரஸ் கார்யக்கமிட்டி 23௳ கூட்டம்.

காங்கிரஸ் கார்யக்கமிட்டியின் கூட்டம் வார்தாவில் 23௳யன்று நடக்கும். இதில் ஸமஷ்டி விஷயமாயும் யோஜனை நடக்குமென்று தெரிகிறது.

## காங்கிரஸ் ஆக்ஷிக்கு துதிபாடல்.

### லண்டனில் நேரு.

ஸ்ரீமான் பண்டித ஜவஹர்லால் நேரு லண்டனில் சில கூட்டங்களில் இந்தியாவில் காங்கிரஸ் ஆக்ஷிக்கு துதிபாடி பிரஸங்கம் செய்துவருகிறார். காங்கிரஸ்ஆக்ஷி யேற்பட்டபின் பிரஜா உரிமைகள் அதிகரித்து வருவதாக அவர் பெருமை பேசிக்கொண்டாராம்.

---

## 11-7-38-௵ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 4-0-0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 3—2—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை | ரூ 9—0—0 |
| ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை | ரூ 7—4—0 |
| தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை | ரூ 4—5—0 |

ஷை தாசில்தார்.



# சென்னை மாகாண வியவசாயிகளின் கடன் நிவாரண ஆக்ட்.

(போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ் கெஜட் பிரசுரம்.)

(7—7—38 தொடர்ச்சி.)

21. கடனிறுக்கச் சக்தியற்றவரென்று யாதொரு நபர் தீர்மானிக்கப்பட்டிருந்து அவருடைய ஆஸ்தியிலிருந்து கொடுக்கப்படத்தக்க ஈவுத்தொகை இந்த ஆக்ட் அமுலுக்குவரத் தொடங்குவதற்குமுன் பிரசித்தம் செய்யப்பட்டிருந்தால், அவரால் செலுத்தப்படத்தக்க கடன்களுக்கு இந்த ஆக்டில் கண்ட தெதுவும் பிரயோகப்படமாட்டாது. அந்தப்படி யாதொரு ஈவுத்தொகை பிரசித்தம் செய்யப்பட்டிராத பட்சத்திலே, அப்படிப்பட்ட நபர் கடனிறுக்கச் சக்தியற்றவரென்று தீர்மானிக்கப்பட்டிராவிட்டால் இந்த ஆக்டின் தாற்பரியப்படி அவர் ஒரு விவசாயியாக இருந்திருப்பாரானால், அவர் செலுத்தவேண்டிய கடன்களுக்கு இந்த ஆக்ட் பிரயோகப்படும்.

22. எந்த டிக்ரியையாகிலும் நிறைவேற்றுகையில் யாதொரு விவசாயியின் அசையும் பொருள் எதுவாகிலும் 1937-ம் ௵ அக்டோபர்௴ 1௳ யன்றாவது அதற்குப் பிறகாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி 8-வது அல்லது 9-வது பிரிவிலும் 11-வது, 12-வது பிரிவுகளிலும் கண்ட நிபந்தனைகளை ஷை டிக்ரிக்குப் பிரயோகப்படுத்த வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கும்படி தீர்ப்பான எந்தக் கடனாளியாகிலும் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; விண்ணப்பதாரர் ஷை பிரிவுகளினாலேற்படும் அனுகூலங்களை அடையப் பாத்தியதையுள்ள விவசாயியென்று கோர்ட்டார் திருப்திகாமாகத் தெரிந்துகொண்டால், அவர்கள் அவைகளைப் பிரயோகப்படுத்தி, ஷை சொத்து விற்பனை செய்யப்படாதிருந்தால் டிக்ரி பெற்றவர் என்ன தொகை பெறுவதற்குப் பாத்தியதையுள்ளவராயிருந்திருப்பாரோ அந்தத் தொகைக்கு அதிகமாக 1937-ம் ௵ அக்டோபர்௴ 1௳ யன்றாவது அதற்குப் பிறகாவது அவர் பெற்றுக்கொண்ட யாதொரு தொகையைத் திருப்பிக் கொடுத்து 'விடும்படி அவருக்கு உத்தரவு செய்யவேண்டும்.

ஆனால், டிக்ரி பெற்றவருக்கு நோடீஸ் கொடுக்காமலும் இது விஷயத்தில் அவர் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக் கொள்ள அவருக்கு அவகாசம் ஏற்படுத்திக்கொடுக்காமலும் அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

23. யாதொரு டிக்ரியை நிறைவேற்றுகையில், யாதொரு விவசாயி பாத்தியதையுள்ளவராயிருந்த எந்த அசையாப்பொருளாகிலும் 1937-ம் ௵ அக்டோபர்௴ 1௳ யன்றாவது அதற்குப் பிறகாவது விற்பனை செய்யப்பட்டிருந்தால் அல்லது அது சம்பந்தமான மீட்புப் பாத்தியதையற்றுப்போகும்படிச் செய்யப்பட்டிருந்தால் அப்போது, 1908-ம் ௵த்திய இந்துதேசத்துக் காலநிர்ணயச் சட்டத்திலாவது 1908-ம் ௵த்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்திலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலும் ஷை விற்பனை ஊர்ஜிதம் செய்யப்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலும், தாம் இந்த ஆக்டினாலேற்படும் அனுகூலங்களை அடைய பாத்தியதையுள்ள விவசாயியென்று சொல்லிக்கொள்ளும் தீர்ப்பான யாதொரு கடனாளி ஷை சொத்தின் விற்பனையை அல்லது அதுசம்பந்தமான மீட்புப் பாத்தியதையற்றுப் போகும்படிச் செய்ததை ரத்துசெய்யும்படி இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கியதிலிருந்து 90 தினத்துக்குள் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; விண்ணப்பதாரர் இந்த ஆக்டினாலேற்படும் அனுகூலங்களை அடையப் பாத்தியதையுள்ள விவசாயியென்று கோர்ட்டார் திருப்திகாமாகத் தெரிந்துகொண்டால், அவர்கள் ஷை விற்பனையை அல்லது மீட்புப் பாத்தியதையற்றுப்போகும்படிச் செய்ததை ரத்துசெய்யும்படி உத்தரவு பண்ணவேண்டும்; அதன்மேல் அந்த விற்பனை நடந்திராததுபோலவே கருதப்படும்:

ஆனால், டிக்ரி பெற்றவர், ஏலக்கிரயதாரர், ஷை விற்பனையில் அல்லது மீட்புப் பாத்தியதையற்றுப்போகும்படிச் செய்ததில் அக்கறையுள்ள இதர நபர்கள் ஆகிய இவர்களுக்கு நோடீஸ் கொடுக்காமலும் இது விஷயமாய் அவர்கள் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்ள அவர்களுக்கு அவகாசம் ஏற்படுத்திக் கொடுக்காமலும் அப்படிப்பட்ட எந்த உத்தரவையும் பிறப்பிக்கக்கூடாது.

24. முந்திய பிரிவின்படி யாதொரு விற்பனை ரத்துசெய்யப்பட்டால், யாதொரு கிரயதாரர் தாம் யாருக்கு எந்தக் கிரயத்தொகையாகிலும் கொடுத்திருக்கிறாரோ அந்த நபர் அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப் பெறுவதற்கு பாத்தியதையுள்ளவராவார்:

ஆனால், அப்படிப்பட்ட யாதொரு விற்பனை விஷயமாகத் தாகு எதுவும் செலுத்தப்படத்தக்கதாகமாட்டாது; மேலும் தாகு வசூலிக்கப்பட்டிருந்தால், அதைத் திருப்பிக் கொடுத்துவிடும்படிக் கோர்ட்டார் கட்டளையிடவேண்டும்.

25. யாதொரு விவசாயிக் கடனாளி 1937-ம் ௵ அக்டோபர்௴ 1௳ யன்றாவது அதற்குப் பிறகாவது அசையாப் பொருளைப் பாராதீனம் செய்த சகல விஷயங்களும் எந்தக் கடன்காரர் டிக்ரியை நிறைவேற்றுகையில் செய்த விற்பனையாகிலும் மீட்புப் பாத்தியதையற்றுப் போவதற்காகப் பெற்றுக்கொண்ட டிக்ரியாகிலும் 23-வது பிரிவின்படி ரத்து செய்யப்பட்டிருக்கிறதோ, அல்லது ஷை விற்பனையிலிருந்து கிடைத் தொகையை வீதாசாரப்படிப் பங்கீடுசெய்யப் பெறுவதற்கு 1908-ம் ௵த்திய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 73-வது பிரிவின்படி எந்தக் கடன்காரர் பாத்தியதையுள்ளவராய் விட்டாரோ அப்படிப்பட்ட ஒவ்வொரு கடன்காரர் விஷயத்திலும் செலாவணியாகமாட்டா.

26. எந்த ஜில்லாவில் தம்முடைய கடனாளி 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (A) விலக்கு நிபந்தனையில் சொல்லியிருக்கிறபடி வருமான வரியாவது, அந்தப் பிரிவுடன் சேர்த்துள்ள (B), (C) விலக்கு நிபந்தனைகளில் சொல்லியிருக்கிறபடி 1924-ம் ௵த்து கன்டோன்மெண்டுகள் ஆக்டின் பிரகாரம் தொழில் வரியாவது சொத்து வரியாவது வீட்டுவரியாவது விதிக்கப்பெற்றிருக்கிறாரென்றாகிலும் விதிக்கப்பெறுகிறாரென்றாகிலும் யாதொரு கடன்காரர் நம்புகிறாரோ அந்த ஜில்லாவின் கலெக்டருக்கு ஷை விஷயங்களைக்குறித்துச் சங்கதி தெரிவிக்கும்படி ஷை கடன்காரர் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அதன்மேல், கலெக்டரானவர் அந்த சங்கதியைத் தெரிந்துகொண்டு, ஷை கடனாளி மேலே கண்டபடி வருமான வரியாவது, தொழில் வரி, சொத்து வரி அல்லது வீட்டு வரியாவது விதிக்கப்பெற்றிருக்கிறாரவென்று கண்டு நிர்ணயிக்கப்பட்ட நமூனாவின்படி ஒரு யாதாஸ்தை ஷை கடன்காரருக்குக் கொடுக்கவேண்டும். அந்த யாதாஸ்தை அதில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு ருஜுவாக ஒவ்வொரு கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

27. யாதொரு கடன்காரர், தம்முடைய கடனாளி 3 (ii) பிரிவுடன் சேர்த்துள்ள (B), (C) விலக்கு நிபந்தனைகளில் சொல்லியிருக்கிறபடி தொழில் வரியாவது சொத்து வரியாவது வீட்டு வரியாவது விதிக்கப்பெற்றாரா அல்லது விதிக்கப்பெறுகிறாரவென்று சங்கதி தெரிவிக்கும்படி யாதொரு மியுனிஸிபாலிடியின் நிர்வாக அதிகாரிக்காகிலும் யாதொரு லோகல் போர்டின் ப்ரெஸிடெண்டுக்காகிலும் சென்னை நகரவிசாரணைச் சங்கத்தின் ரெவினியு ஆபிஸருக்காகிலும் விண்ணப்பம் செய்துகொள்ளலாம்; அதன்மேல், ஷை நிர்வாக அதிகாரியாவது ப்ரெஸிடெண்டாவது ரெவினியு ஆபிஸராவது அந்த விண்ணப்பத்தில் பெயர் கண்டிருக்கும் கடனாளி மேலே கண்டபடி தொழில் வரியாகிலும் சொத்து வரியாகிலும் வீட்டு வரியாகிலும் விதிக்கப்பெற்றிருக்கிறாரவென்று கண்டு நிர்ணயிக்கப்பட்ட நமூனாவின்படி ஒரு ஸெர்டிபிகேட்டை ஷை கடன்காரருக்குக் கொடுக்கவேண்டும். அந்த ஸெர்டிபிகேட்டை அதில் கண்டிருக்கும் விஷயங்களுக்கு ருஜுவாக ஒவ்வொரு கோர்ட்டிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

28 (1) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றும்பொருட்டு மாகாண கவர்ன்மெண்டார் விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்குப் பாதகமில்லாமலும், மாகாண கவர்ன்மெண்டார்:—

(a) நிர்ணயிக்கப்படவேண்டுமென்று இந்த ஆக்டில் சொல்லியிருக்கும் யாதொரு விஷயத்தைக் குறித்தும்,

(b) இந்த ஆக்டின்படிக்கான விண்ணப்பங்களின் நமூனாவையும் அவைகள் விஷயமாய்ச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்களையும் நிர்ணயித்தும்,

(c) இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை அமுலுக்குக் கொண்டுவருவதில் ஏற்படக்கூடிய எந்தக் கஷ்டத்தையாவது நீக்குவதற்காகவும்.

விதிகள் செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படிச் செய்யப்படும் சகல விதிகளும் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமாயிருக்கவேண்டும். அவைகளை ஸர்க்கார் கெஜெட்டில் பிரசித்தம் செய்யவேண்டும்; அந்தப்படிப் பிரசித்தம் செய்யப்படுவதன்மேல், அவை இந்த ஆக்டிலேயே சேர்க்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செலாவணியாகும்.

## திப்பிராஜபுரம்.
### ஸ்ரீ ஹரிச்சந்திர பட்டாபிஷேக மஹோத்ஸவம்.

இவ்வூரில் சில மாதங்களாக வந்திருக்கும் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக கவிரத்னம் பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்கள் இந்த ஊரில் ஏற்பட்டிருக்கும் பிர்மவித்யாஸபையின் சார்பாக ஸ்ரீ கும்பகோணம் ஜகத்குரு மஹா ஸ்வாமிகளவர்களுடைய அனுக்கிரகத்தை முன்னிட்டு ஆரம்பம் செய்யப்பட்ட ஸ்ரீ ஹரிச்சந்திரோபாக்கியானம் என்கிற புண்ய சரித்திரம் நடத்தப்பட்டு வருகின்றதானது நம் ஆர்ய தர்ம நேயர்களுக்கு தெரிந்தவிஷயமே. அச்சிறந்த சரித்மானது சென்ற ஆனி-மீ 19உ ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்ரீ ஹரிச்சந்திர மஹாராஜாவுக்கு வெகு சிறப்பாய் ஸ்ரீ பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடைபெற்றது. அந்த சமயம் ஸ்ரீ கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யஸ்வாமிகளவர்கள் ஷை பிர்மவித்யாஸபையின் பிரஸிடெண்டு அவர்களுடைய பிரார்த்தனையை யங்கீகரித்து சால்வை, விபூதி, குங்குமாக்ஷத பிரஸாதங்களை அனுப்பி மிகவும் பரிபூர்ணமாய் அனுக்கிரகித்தார்கள். இவ்விதம் தங்களுக்குக் கிடைத்த ஆசார்யாளுடைய அனுக்கிரகத்தைப்பெற்று அளவில்லாத ஆனந்தத்தையடைந்தார்கள். இவ்வூரில் விளங்கும் மந்திரமூர்த்தி பிர்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளுடைய ஜாகையிலிருந்து உபநிஷத் பாராயணம் செய்துகொண்டு பூர்ண கும்பத்துடன் ஸ்ரீ ஜகத்குரு பிரஸாதங்களால் அலங்கரிக்கப்பட்ட ஷை புராணம் நடக்கும் பிர்மஸ்ரீ நாராயணஸாமி சிரௌதிகள் ஜாகைக்கி வந்து ஷை குரு பிரஸாதங்களை வெள்ளித் தாம்பாளத்தில் வைத்து பக்தி சிரத்தையுடன் வேத பாராயணங்களையும், உபநிஷத் பாராயணங்களையும் செய்துவரும் 50, 60 ஆஸ்திக வைதிக, லௌகிகர்களுடன்கூட கிராமத்தின் க்ஷேமாபிவிருத்தியைக் கருதி அக்கிரகாரத்தை பிரதக்ஷிணம் செய்து ஷை சிரௌதிகளுடைய கிருகத்திற்குவந்து அங்கு அலங்கரித்து வைத்திருந்த பராசக்தியான ஸ்ரீ திரிபுரஸுந்தரீ அம்பாளுடைய ஸந்நிதானத்தில் வைத்து ஸகலஜனங்களும் வந்தனம் செய்துகொண்டார்கள். கிராம வாஸிகள் மிகவும் உத்ஸாகமாக வந்து ஸபையை அலங்கரித்தார்கள்.

உடனே பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரியளவர்கள் ஸ்ரீ பட்டாபிஷேக பிரகரணத்தை உபன்யஸிக்க ஆரம்பித்தார்கள். இந்த பண்டித சிகாமணிகள் ஆரம்பம் முதற்கொண்டு ஒவ்வொரு தினமும் அற்புதமான பல விசேஷார்த்தங்களையுபன்யஸித்து ஸபையிலுள்ள ஜனங்களுடைய மனதை அனலிலிட்ட மொழுகுமேல் உருகும்படி செய்தார்கள். முடிவு ஸமயத்திலும் அற்புதமான பல அர்த்தங்களை வெளியிட்டு எல்லா ஜனங்களுக்கும் விசேஷ ஆனந்தத்தை யுண்டு பண்ணினார்கள். பிறகு ஸ்ரீ அம்பாளுக்கும் ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகளவர்கள் பிரஸாதங்களுக்கும் கர்பூர தீபாராதனை நடந்தது. அப்பால் ஸபையின் பிரஸிடெண்டவர்கள் ஸ்ரீ மடத்திலிருந்து பிரஸாதங்கள் கொண்டுவந்த பிர்மஸ்ரீ மகாதேவ சாஸ்திரியளால் ஸ்ரீமுகபடன பூர்வகமாய் ஸமர்பிக்கப்பட்ட பிரஸாதங்களை பெற்றுக்கொண்டு உடனே அதிலிருந்த ஸால்வையை ஷை பிரஸிடெண்ட்டவர்கள் ஸகல ஜனங்களுடைய கரகோஷத்தினிடையே பஞ்சாபகேசசாஸ்திரியளவர்களுக்குப் போர்த்தி பிரஸாதங்களையும் கொடுத்தார்கள். பிறகு மற்றுமுள்ள ஸகல ஜனங்களுக்கும் ஸ்ரீ ஆசார்ய அனுக்கிரக ரூபமான பிரஸாதங்களை வழங்கினார்கள். பிறகு கிராமத்திலுள்ள மகாஜனங்கள் ஷை பஞ்சாபகேசசாஸ்திரியளுக்கு மரியாதை செய்து நம் கிராமத்தின் க்ஷேமத்தைக்கருதி நமது பிரார்த்தனையை யங்கீகரித்துப்பிரஸாதங்களை அனுப்பி பரிபூர்ணமாய் அனுக்கிரகித்த ஸ்ரீஜகத்குரு ஸ்வாமிகளுக்கு அனேக வந்தனங்களை ஸமர்ப்பிக்க வேண்டியது நமது கடமை என்று ஸமர்ப்பித்து உபன்யாஸத்வையும் தங்களனுகிரகத்தால் புண்ய சரித்திரத்தைக் கேட்கும்படியான பாக்கியம் எங்களுக்கு நேர்ந்ததென்றும் தங்களுடைய அபிமானத்தைக் காட்டி தாங்கள் எப்பொழுதும் இவ்விதமே ஸநாதந தர்மங்களையும் புண்ய சரித்திரங்களையும் உபன்யாஸித்து ஸகல ஜனங்களுக்கும் உபகாரம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். பிறகு மற்றுமுள்ள பிரஸாதங்களும் சந்தனம் பலம் புஷ்பம் தாம்பூலங்களும் கொடுத்து ஸ்ரீ ஆசார்யாளின் அனுக்கிரக பலத்தால் பட்டாபிஷேக மஹோத்ஸவம் வெகு சிறப்பாய் பூர்த்தியடைந்தது.

நமது நிருபர்.

## ஆழ்வார் திருநகரில் அற்புதம்.
### திருப்புளியில் ரத்தப்பெருக்கு.

[நமது விசேஷ நிருபர்.]

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தான கட்டிடத்தின் மீது ஒரே மூலம் ஏழு மரங்களாக பிரும்மாண்டமாய் வளர்ந்து பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாயிருந்து வரும் புளியமரத்தின் விசேஷம் மிக அற்புதமாகும். இதன் காய்க்கா பழுக்காமலே உதிர்ந்து விடுவதும் ஓர் விநோதமாகும். இத்திருப்புளியமரத்தில் சேதமேற்படில் அவ்விடத்திலிருந்து மனிதாது உதிரம் போல் ரத்தப்பெருக்கேற்படுவது மிக மிக ஆச்சர்யமாகும். சில தினங்களாக திருப்புளியின் அடி பாகத்தில் ரத்தப்பெருக்குண்டாய் வழிந்து கொண்டிருந்ததை வஸந்தோத்ஸவ சேவார்த்தமாய் வந்திருந்த ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமான் பிச்சுமணி ஐயங்காரால், கவனிக்கப்பட்டுயாவருக்கும் அறிவிக்கப்படவே பலரும் கண்டு பரமாச்சர்யமுற்றனர். கோவிலார்களால் சந்தன காப்பு சாத்தப்பட்ட பின் (அவ்விடத்தில் விசேஷமாய் சந்தனத்தை அப்பியபின்) ரத்தப் பெருக்கு நின்றது. இம்மாதிரி பன்னிரு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

## ஆழ்வார் தேவஸ்தானத்தகராறு.
### சென்னை போர்டில் மனு.

ஆழ்வார் திருநகரி கோயிலில் தீர்த்தம் மரியாதைகள் விஷயமாக மடாதிபதிகளுக்குள்ளும் தீர்த்தக்காரர்களுக்குள்ளும் பல விதமான தகராறுகள் இருந்து கொண்டேயிருப்பதாயும் தவிர கோஷ்டியில் வரிசைக்கிரமமாயுட்காருவதிலும் தாவாக்களேற்படுவதாயும் ஆகையால் எல்லா விபரங்களையும் தீவிர விசாரணைசெய்து ஓர் ஒழுங்கு முறையை ஏற்படுத்தவேண்டுமெனவும் கண்டு சென்னை ரிலிஜீயஸ்எண்டோமெண்டு போர்டில் இவ்வூர் தேவஸ்தானஸ்தலத்தார் ஸ்ரீமான் எ. கே. சுதர்சனமையங்கார் வகையரு ஐவர்கள் வாதியாயிருந்து ஓர் கேஸ் கொடுத்திருப்பதாய்த்தெரிவதுடன் இவ்வழக்கில் ஸ்ரீ வைஷ்ணவ மடாதிபதி ஜீயர்ஸ்வாமிகளும் தேவஸ்தானக்கமிட்டியார் கோவில் டிரஸ்டி முதலியோர்களும் பிரதிவாதிகளெனவும் தெரிகிறது. இந்தகேஸ் சம்மந்தமாக ஆழ்வார் தேவஸ்தான டிரஸ்டி ஸ்ரீமான் எல். ஆர். தெய்வச்சிலை ஐயங்கார்க்குசென்னை போர்டின் நோடீஸ் வந்திருப்பதாயும் தெரிகிறது.

நமது விசேஷ நிருபர்.

## ஸநாதன தர்ம ஸங்கம்
### சாத்தனஞ்சேரி

27–6–38ல் ஷை சங்கத்தின் ஆதரவில் பொது மீட்டிங் நடைபெற்றது. P.N. நாராயண சாஸ்திரியால் பிரேரேபிக்கப்பட்டு, S.K. சுப்பிரமண்ய அய்யர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு மகா-ா-ஸ்ரீ. P. L. ராமகிருஷ்ணய்யர் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார். பிறகு சென்னை மாகாண வர்ணாசிரம ஸ்வாராஜ்ய ஸங்க, கார்யக்கமிட்டி மெம்பர் P. N. நாராயண சாஸ்திரிகளால் சங்கத்தின் நோக்கங்களைப்பற்றியும். M. C. ராஜாவின் ஆலயப்பிரவேச தீண்டாமை விலக்கு, மசோதாக்களையும், B. தாஸின் சாரதா சட்ட திருத்த மசோதாவையும் கண்டித்து பேசினார். பிறகு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

(1) இந்த மீட்டிங் சென்னை அஸெம்பிளியில் ஸ்ரீமான் M. C. ராஜா அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும். ஆலயப்பிரவேசதீண்டாமைவிலக்கு மசோதாக்களை கண்டிப்பதுடன் ஷைமசோதாக்களை நிராகரித்து விடும்படி சென்னை பிரதம மந்திரி அவர்களையும், மே-த- வைஸ்ராய் அவர்களையும்கேட்டுக்கொள்ளுகிறது.

(2) இந்தியசட்டஸபையில் ஸ்ரீமான் B. தாஸ் அவர்களால் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கும் பால்ய விவாகத்தடை சட்டதிருத்த மசோதாவை கண்டிப்பதுடன் ஷை மசோதாவை ரத்து செய்யும்படி மே-த வைஸ்ராய் அவர்களைக்கேட்டுக் கொள்ளுகிறது.

தீர்மானங்களைப்பிரேரேபித்தும், ஆமோதித்தும் P N நாராயணசாஸ்திரிகள். P N ராமநாத சாஸ்திரிகள். N V கிருஷ்ணமூர்த்தி தீக்ஷதர் துரைஸாமி அய்யர் முதலியவர்கள் பேசினார்கள். பிறகு கார்யதரிசி S K ஸுப்பிரமணிய அய்யர் அவர்களின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

## பால்ய விவாஹச்சட்டப்படி வழக்கு.

திருச்செந்தூர் முக்காணிய ஐயர் வீட்டுக் கல்யாண விஷயமான கேஸ் தூத்துக்குடி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டிடம் நடைபெற்று வருகிறது. கல்யாண மாப்பிள்ளையின் ஸ்வீகாரத்தகப்பனார் திருமணத்தை நடத்திவைப்பதாக ஜனகபிதாவால் வழக்கு தொடரப்பட்டிருப்பதாயும் இத்திருமணத்தில் சம்மந்தப்பட்டுள்ள யாவரும் பால்ய விவாஹத்தடைச் சட்ட மொன்று வந்திருப்பதான விபரமே தங்களுக்கு தெரியாதென ஸ்டேட்மெண்டு போட்டிருப்பதாயும் வழக்கு முடிவு (தீர்ப்பு) சொல்லப்படவில்லை யெனவும் கேஸ் நடந்து வருவதாயும் தெரிவதுடன் ஜனக பிதாவின் இஷ்டமான பெண்ணைக்கல்யாணம் செய்து வைக்க ஸ்வீகாரத்தகப்பனார் பிரியப்படாதது காரணமாகவே இந்தக்கேஸ் கிளம்பியதெனவும் பிரஸ்தாபமாயிருக்கிறது.

ந- வி. நி.

மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
“ஆர்யா சதகம்”
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0
ஆர்யதாமம் சந்தநளுர்க்கு விலை அணா 6.



## இராமாயண இலக்ஷியார்த்தத்திலுள்ள இன்பப்பொருள்கள்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

(சென்ற வாரத்தொடர்ச்சி.)

இந்த ராம மஹா மந்திரத்தை பக்தியுடன் யார் பஜித்தாலும் அவர்கள் மஹா பரிசுத்தர் களாகி விடுகிறார்கள். யாகாதிகளால் எந்தப் பலனடையப்படுமோ அந்தப்பலன், ஸ்ரீராம ஜபத்தால் அடையப்படுகிறது. இகலோக சுகம், பரலோகவாழ்வு, மோக்ஷ பதவி இவைகளும் ஸ்ரீராம ஜபானுஷ்டானத்தால் சித்திப்பதாகிறது. ராம ஜபத்துடன் ஸ்ரீராமமூர்த்தியையும் விதிப்படி தியானிப்பவர்கள் காயத்ரீ ஜப பலனையும், பிரணவ உச்சாரண பலனையும் அடைந்து, சித்த சுத்தி பெற்று, மோக்ஷாதிகாரியாகிறார்கள். இவ்வுத்தம உபாசனையுள்ளவர்களுக்கு ஸ்ரீஹரி பிரசன்னராகி, தீர்க்காயுளையும், அரோக திருடகாத்திரத்தையும், ஐச்வர்யாதி போக பாக்யங்களையும் கொடுப்பதுடன், தனது பதத்தையும் ஸ்ரீஹரி தருகிறாரென்று "ராமதாபினி' உபநிஷத்தில் சொல்லப்படுகிறது.

வேதத்தினலறியக்கூடிய பரமபுருஷன் எப்பொழுது தசரதசக்ரவர்த்திக்கு திருக்குமாரனாகியவதரித்து ஸ்ரீராமன் என்ற நாமம் பெற்றாரோ, அப்பொழுதே, அப்பரம புருஷனை பிரதிபாதிக்கும் வேதமும் வால்மீகியின் வாக்கில் அவதரித்து, இராமாயணம் என்ற நாமமடைந்தது. அதனால், ஸ்ரீமத் இராமாயணமும் வேதமே ஒழிய வேறல்லவென்பதை அகஸ்திய ஸம்ஹிதை வெளியிடுகிறது. இராமன் பரமபுருஷன் என்பதை பிர்மா, வஸிஷ்டர், விச்வாமித்திரர் முதலியவர்களால் அங்கங்கு குறிப்பிடப்பட்டிருப்பதை இராமாயணத்தில் காணலாம். இராமயண காவ்யமூலியம் வேதோக்தமான சர்வ தர்மங்களும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. தர்ம, அர்த்த, காம, மோக்ஷம், என்ற சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் சாதனமாகவுள்ளது இராமாயணமேயாகும்.

பிதாவினுடைய கட்டளை நியாயமானாலும் அநியாயமானாலும் அதைப்பற்றி யோஜியாமலும், அதினால் வரும் லாப லோபங்களைக்கருதாமலும் அதை நிறைவேற்றுவதே புத்திரனின் கடமை யென்பதை ஸ்ரீராமரின் வனவாஸம் நிரூபிக்கிறது. சகோதர வாஞ்சை எப்படிப்பட்டதாயிருக்கவேண்டுமென்பதை பரத, லக்ஷ்மணர்களின் நடத்தைகள் ருஜு செய்கிறது. ஸ்திரீகள் எக்காலத்திலும் புருஷர்களைவிட்டுதனிமையில் இருக்கக்கூடாதென்ற நியாயத்தையும், தன் புருஷனடையும் சுக துக்கங்களை தானும் பகிர்ந்தனுபவிப்பதே பதிவிருதைகளின் தர்மமென்பதையும் பதி சிசுருஷையே பிரதான விருதமாகுமென்பதையும், ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் ஸ்வாதந்திரியமில்லாமையேஇயற்கையமைப்பென்பதையும் ஸ்ரீ ஸீதா தேவியின் அனுஷ்டான அனுபவங்கள் நன்குவிளக்குகிறது. (ராமன்) சக்கிரவர்த்தியானாலுங்கூட (மஹரிஷிகள்) அறிவிற்சிறந்த பெரியோர்களிடம் அடங்கி நடக்கக்கடமைப்பட்டவர்களாவார்களென்பதை ஸ்ரீராமனின் பக்தி சிரத்தை வெளியிடுகிறது, எவ்வளவு தபோபலம்பெற்றிருந்தாலும் சாதுக்களுக்குக்கெடுதி செய்பவனும், தர்ம விரோதியும், கெட்ட நடத்தையுள்ளவனும் குட்டிச்சுவராவான் என்பதை வாலி வத, ராவண சம்ஹாரத்தால் போதிக்கப்படுகிறது.

ஸ்ரீராமர் சமுத்திரத்தில் அணைகட்ட ஆரம்பிக்கு முன் விக்னேச்வர பூஜை செய்து, மஹோததியில் ஒன்பது கற்களை நளனால் நட்டுவித்து, நவக்கிரஹ பூஜை செய்து, பின்பு இராமேச்வரம் சென்று, அங்கு ஒரு சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யவெண்ணி, ஹனுமாரை காசிக்கனுப்பி, அங்கிருந்து ஒரு சிவலிங்கத்தைப்பெற்று குறிப்பிட்ட முகூர்த்தத்துக்குள் வரும்படி ஏற்பாடு செய்தார். அதன்படி காசிக்குச் சென்ற ஹநுமார் விச்வேச்வரரை தர்சித்து, அவர் அநுக்ரஹம் பெற்று, அவரிடம் இரண்டு லிங்கங்களை பெற்றுக்கொண்டு, ஆகாய மார்க்கமாய் வரும் பொழுது, தன் மனதில் தன் பராக்ரமங்களை தானே நினைந்து புகழ்ந்து கொண்டு செருக்குடன் வந்தார். இதை அறிந்த ஸ்ரீராமர் மண்ணால் ஒரு லிங்கம் பிடித்து ஸ்தாபித்து குறிப்பிட்ட முகூர்த்தத்தில் பூஜை செய்து விட்டார். கையில் லிங்கங்களுடன் வந்த ஹனுமார் இராமேச்வரம் வந்ததும் அங்கு ஸ்ரீராமரால் சிவலிங்கஸ்தாபனம் செய்து விட்டதைபறிந்து மனம் தாளாமல் தான் கொணர்ந்த லிங்கங்களை ஸ்ரீராமன் முன் வைத்து "தான் வரு முன் ஏன் சிவலிங்கஸ்தாபனம் செய்யவேணுமென்றும்" கோபக்குறியுடன் கேட்டார். அதற்கு ஸ்ரீராமர் "ஏதோ சுப முகூர்த்தம் தவறிவிட்டால் என்ன செய்வதென்று அவசரப்பட்டு விட்டேன். உனக்கு அது கோபமாயின், நான் ஸ்தாபித்த மண் லிங்கத்தை எடுத்தெறிந்து விட்டு அந்தயிடத்தில் நீ கொண்டு வந்த லிங்கத்தை ஸ்தாபிப்பதில் எனக்கு ஆக்ஷேபணையில்லை" என்று சொன்னார். அவ்வார்த்தையைக்கேட்ட ஹனுமார் ஸ்ரீராமரால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தலிங்கத்தை தன் வாலைச்சுற்றி பிடுங்கும் பொழுது, வால் அறுபட்டதேயொழிய, பாதாளம் வரையில் வேர் கொண்டு விளங்கும்லிங்கத்தைஅவரால் பெயர்க்க முடியவில்லை. அதுகண்ட ஹனுமாருக்கு மனதில் பயமுண்டாகி, ஸ்ரீராமமூர்த்தி பரமாத்மாவே என்பதைத்தெரிந்து கொண்டு தானடைந்த செருக்கினால் தனக்குற்ற துன்பத்தை அறிந்து கொண்டு, ஸ்ரீராமனுடைய சரணாரவிந்தங்களில் விழுந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டினார். ஸ்ரீராமரும் ஹநுமாரை மன்னித்து, அவர் கொண்டுவந்த இரண்டு லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்யும்படி செய்தார். அக்காலத்தில் ஸ்ரீராமமூர்த்தியால் ஸ்தாபிக்கப்பெற்ற மண் லிங்கம் 'அத்ரபூர்வம்' என்ற நாமதேயத்துடன் இக்காலத்திலும் விளங்கிக்கொண்டிருக்கிறது. இதிலிருந்து ஒருவன் எவ்வளவு பெருமை படைத்தவனாயிருந்தாலும், அவன் தானடைந்த பெருமையை நினைந்து செருக்கடையலாகாதென்று ஓர் உயர் புத்திமதியை நாமறியலாமல்லவா!

"இராஜாப்பிரகிருதிரஞ்சநாத்" என்ற காளிதாஸன் வாக்குப்போல் ஸ்ரீராமனின் ராஜ்யாதிகாரம் சர்வ பிரஜைகளுக்கும் ஹிதகராமாயிருந்ததால், இராஜநீதி இராமாயணத்தில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. உலகில் நீதியுடன் நடக்கும் இராஜ்யத்தை "இது இராம ராஜ்யம் போல் நடக்கிறது" என்று புகழ்படுவதுண்டு. அப்படி நடந்த இராமனிடமும் சில குற்றங்களைக்கல்பித்துப்பலர் பேசுவதுண்டு. அவைகளில் முக்கியமாயிருப்பது வாலிவதம். வாலியை ஸ்ரீராமர் மறைந்திருந்துகொன்றது குற்றமாம். வாலி வதம் மூலியந்தான் ஸ்ரீராமர் தன் சர்வக்ஞத்வ சக்தியை உலகறிய வெளியிட்டார். அதை குற்றமென்று யார் சொல்லமுடியம்?

(தொடரும்.)

## வந்தேமாதரம்.

'வந்தேமாதரம்' என்ற வடமொழிச் சொற்றொடருக்கு 'தாய் நாட்டுக்கு ஆதரணை' என்ற இராஜீக விஷயத்தில் தற்சமயத்தில் அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். அந்த அர்த்தம் மேற்கண்ட தொடருக்கு ஆகுபெயராய் வந்ததே; பகுதிபற்றி அர்த்தம் பார்க்கின் வேதமும், வேதத்தில் சொல்லியிருக்கும் பல பிரமாணங்களும் அடங்கும்.

## பாஷைகளைப்பற்றிய லடாய்!

தாயைத்தூற்றும் தருதலைப்ரசாரம் தமிழ் நாட்டில் எங்கும் பரவி வருகிறது. "வந்தே மாதரம்" என்ற சொல் அன்னிய சர்க்காருக்கு கிலியாய்இருந்தது பின் அதே மணிச்சொல், அன்னிய அரசாங்கத்தை அடிபணியச் செய்வித்திருக்கிறது. உலகின் மானிசச் சமூகம் ஆரியர் என்பதை சரிதை எடுத்துக் காட்டவிருந்தும் சமீப சில வருஷமாய் ஆரியவர்த்தம் என்ற மாத்ரு பூமியில் ஆரியர் கூடாதென்றும் பிராமணத்வேஷமும் தேவநாகா பாஷைத்துவேஷமும் காட்டப்பட்டு வந்தது. பின், கடவுளுமில்லையென்ற நாஸ்திகப் பேர்வழிகள் தோன்ற ஸ்மிருதி புராண நூல்களை எரிக்கவும் பார்த்தாகிவிட்டது. இப்பாது தென்னாட்டில் ஓர் சாயபு "ஓ! வந்தே மாதரம்" கீதம் கூடாது என்று போட்டக் கூச்சலுக்கு ஓர் பொது சபையான காங்கிரஸ் விட்டுச்கொடுத்து விட்டதே. இப்பால் தமிழ் ஹிந்தி பாஷைகளுக்குள் லடாய் பிரசாரம் பரப்பப்பட்டுவருகிறது சந்துவிட்டால் வந்துவிடுகிறேன் என முஸ்லிம் லீக்-காங்கிரஸ் லடாய் கிளப்பிவிடவும் சதி நடந்து கொண்டுவரும் நிலமையை நோக்க அது கலிமுற்றிய யுகப்பிரளயமாகி விடுமோ வென்றும் ஐயுரவேண்டியிருக்கிறதும் போதுமா?

ஒரு நிருபர்.

மேல்நாட்டு வாசனை அதிகத்தாலும் ஆதியிலிருந்து முறைபிரகாரம் வேதார்த்தங்களைக் கற்காமலும் இருக்கும் நம் நாட்டு வைதீக மந்திரிகள், வேத சாஸ்திரங்களை தங்கள் கொள்கைக்கேற்க, மனதுக்குத் தோன்றியவாறு அர்த்தம் செய்துவருவது, அந்தோ! அவர்களின் தவறு அல்ல. வேத சாஸ்திரங்களின் வாசனை திடமாய் ஏற்படக்கூடிய இளம் பிராயத்தில், அவைகளைக் கற்பியாத பெற்றோர்களின் தவறே. விபரீதார்த்த உணர்ச்சியால் விளையும் தீங்குகள் பல. சரியான அர்த்தம் மனதிற்றோன்றில் பொது உணர்ச்சியில் கைதேர்ந்த நம்மவர் ஹிந்து சமூஹத்திற்கு விசேஷ நன்மை செய்வார்கள்.

'ஆசாரம்' என்பது பகுபதம். ஆ. சாரம். என்ற இரண்டு பதங்களாலானது (ஆ) என்ற பதத்தின் பொருள் தொன்றுதொட்டு சாரம் நடந்துவருவது. வேதசாஸ்திரங்களில் மூாணேற்பட்டால் ஆசாரத்தைப் பின்பற்றும் படித்தான் விதி. காலக்கோலங்களால், வீடுகளில் ஒட்டடைகள்போல,நவாசாரங்களேற்படும். 'யதாராஜா ததாப்ரஜா:' என்றநியாயத்திற் கிணங்க, யுகதர்மங்களில், நவாசாரங்கள் சிரமமின்றி விருத்திக்கு வந்தேதீரும்.

சிரமமின்றி நவாசாரங்கள் ஒன்றின்பின் ஒன்றாய்த்தொடர்ந்துவரும் இக்கலியின்கண், அஹிம்ஸா தர்மத்தைக் கைக்கொண்ட நம் காங்கிரஸ் இராஜாங்கத்தார், சட்டமெனும் ஆயுதத்தால் நவாசாரங்களை துரிதப்படுத்துவானேன்? தனக்குத்தானே அவைகள் வரின், ஹிம்ஸித்தார்கள் என்ற அபவாதத்திற்கு அவர்கள் பாத்திரர்களாகாமலிருக்கலாம்.

ஆசாரமெனும் மரியாதைக்குள் கட்டுப்பட்ட ஸநாதனிகள், அநாசாரம் மேலிட்டதைக் குறித்து துக்கிக்க மாட்டார்கள். அதர்மத்தை நீக்க கடவுள் சமயத்தில் உதிப்பாரென்பது அவர்கள் துணிபு. அப்பேர்ப்பட்டவர்கள் சிலரேயுண்டு. புதியாசாரத்தில் புகுத்த அவர்களை சட்டமூலமாய் துரிதப்படுத்துவது, இரவில், தீபம் எடுத்துப்போகும் சிலரைக் கோபிப்பது போலாம். 'வந்தே மாதரம்' என்ற பதத்தின் உண்மையர்த்தத்தை உணர்ந்து அதன்கண் நம் வைதீகர்கள் ஒழுகுவார்களாக.

அ. கனகசபாபதி குருக்கள்.

(21524)
391

## வெளியூர் செய்தி.

### ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திஸம் ரக்ஷண ஸபை சென்னை.

ஸ்ரீஸூக்திஸம் ரக்ஷிணி பாடசாலை.

(30—6—38) வியாழக்கிழமை ஷை ஸபையின் ஆகாவில் புரசைவாக்கம் 29, க்ருஷ்ணபவநத்தில் பகல் 11-மணிக்கு குரு புஷ்ய யோகத்தில் ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

ஷை பாடசாலையில் ஸ்ரீமான் சங்கீத வித்வான் நெரூர் ஸ்ரீநிவாஸாச்சாரியார் ஸ்வாமி திவ்யப் பிரபந்தத்திலுள்ள நித்யானுஸந்தான பாசுரங்களை சங்கீத முறைப்படி லயத்துடன் தினந்தோறும் அபேக்ஷகர்களுக்கு இரவு 8-9 மணி வரையில் பாடம் கற்றுக் கொடுக்கிறார். ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்திரங்களும், காவியங்களும் ஷை ஸபையின் உபாத்யக்ஷர் ஸ்ரீ உ. ப, வே, பாவஸ்து ஸ்ரீநிவாஸச்சாரியார் ஸ்வாமியால் சொல்லிக் கொடுக்கப்படும்.

இவ்வகுப்புகள் இலவசமாக நடத்தப்படும். ஸம்பிரதாய அபிமானிகளான வைஷ்ணவர்கள், வித்யார்த்திகள், ஸ்திரீகள், ருத்திரர்கள் இவர்களுக்குத் தனித்தனியே கற்பிக்கப்படும். காரியதரிசி.

### நாச்சியார்கோவில்

### ஸ்ரீநடாதூர்ஸ்வாமிக்கு ஸம்பாவனை

நாச்சியார்கோவில் லக்ஷ்மீமந்திரம் ஸ்ரீ உபய வேதாந்தாசார்யபீடம் வித்வான் அபிநவஸரஸ்வதி. வாங்முகாத்னகோச: வித்வத் சிரோமணி: பண்டிதராஜ குருவர்யநடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசாரியரை அன்புடன் வரவேற்று இவ்விடம் விஜயம் செய்திருக்கிற ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்ரீ மத்வசாஸ்திர ஸம்பன்ன பரமஹம்ஸ பரிவிராஜகாசார்யாதி பிருதாங்கித ஸ்வாமிகள், நடாதூர் ஸ்வாமி உபந்நியஸித்த அருமையான ஸத் விஷயங்களைக் கேட்டானந்தித்ததுடன் இவர்கள் உத்தர தேசகங்காயாத்திரை ஸமயத்தில் ஸ்ரீகாசி பிரயாகை, கல்கத்தா கங்காஸாகர ஹிமயகிரி க்ஷேத்திராதிகளில் ஸகல ஜன மானஸ ரஞ்ஜகமாக ஸநாதநதர்ம விஷய பிரசார உபந்யாசங்கள் செய்த வைபவங்களையும் பாராட்டிப் புகழ்ந்து கூறி பெருமையாய் ஸம்பாவனை செய்த விஷயம் சிலாகிக்கத்தக்கது.

ஒரு நிருபர்.

### மஹா ம்ருத்யுஞ்ஜய ஹோமம்.

வேத சாஸ்திரங்களிலும் வைதிக கர்மாக்களிலும் சிரத்தை குறைந்துவரும் இக்காலத்தில் வேதோக்தமான ஹோமங்கள் சிற்சில விடங்களில் நடைபெற்று வருவதைக்காண ஆஸ்திகர்கள் பரம சந்தோஷமடையக்கூடும். சென்னை எழும்பூர் ஸ்டேஷனுக்கெதிரில் பண்டிட் ஸ்வாமி ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்கள் வாசஸ்தலத்தில் சென்ற ஜூன் மாத ஆரம்பம்முதல் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் பிரதிதினம் விசேஷ சிரத்தையுடன் நடைபெற்று வருகிறது. நன்கு அமைக்கப்பட்ட யாகசாலையில் மூன்று ஹோமகுண்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு பிரதி குண்டத்திலும் 7 பிராம்மணர்கள் ஹோமம் செய்துவருகின்றனர். காலை 7 மணிமுதல் மாலை 2 மணி வரை ஒவ்வொருவரும் 1008 ஆவர்த்தி ஹோமம் செய்கின்றனர். பிரதிகுண்டத்திலும் 7 வித திரவியங்கள் ஆஹுதி செய்யப்படுகின்றன. மொத்தம் 21 பிராம்மணர்களும் ஏக காலத்தில் 'த்ரியம்பகம்யஜாமஹே' என்று ஆரம்பித்து யஜமானனுடைய ஆயுராரோக்ய அபிவிர்த்தியின் பொருட்டு வேத மந்திரங்களை உத்கோஷித்து ஆஹுதிகள் செய்வது பார்ப்பவர்கள் மனதைப் பரவசப்படுத்துகிறது. பிரதிதினமும் ஹோமம் ஆரம்பிக்கையிலும் பூர்த்தி செய்கையிலும் அங்கன்யாஸம் கரன்யாஸம் செய்யப்பட்டு ஸம்பூர்த்தி சமயத்தில் ஜயாதி ஹோமம் செய்யப்பட்டு மஹாதேவாராதனம் கர்ப்பூர ஹாரத்தி எடுக்கப்பட்டு பாதோதகம் மந்த்ராக்ஷதை விநியோகிக்கப்பட்டு பிராமண சந்தர்ப்பணை வைபவமாய் நடைபெற்று வருகிறது. தினம் முழுதும் யாகசாலையில் விசேஷ தெய்வ சான்னித்யம் நிரம்பியிருப்பதாக நாம் காணக்கூடும். இம்மாதிரி ஹோமம் பிரதிதினம் சென்ற 32 தினங்களாக நடந்துவருகிறது.

யஜமானனாகிய பண்டிட் ஸ்வாமிகள் ஸ்மார்த்தக்ரியைகளில் விசேஷ சிரத்தை கொண்டவர். ஷண்முக உபாஸி. தமது அரிய உபாஸனா சக்தியினாலும் வேதமந்த்ரோபாஸனையினாலும், பலவித பூஜை, ஹோமம், பிராம்மணாராதனையினாலும் அநேகருடைய கொடிய ரோகங்களையும் கோளாறுகளையும் தீர்த்துவைக்கும் யோக்யதையுள்ளவர். எல்லாவற்றையும் விட நமது ஆலயங்களின் வழிபாடுகளைப்பற்றி பூர்வாசாரங்களை எள்ளளவும் பாதிக்காமலிருக்கும்பொருட்டுசர்க்காரை அடிக்கடி மன்றாடிக்கேட்டும் ஆக்ஷேபித்தும் கடிதப்போக்கு வரத்து வைஸ்ராய்களுடனும் இங்கிலாந்திலிருக்கும் இந்தியா மந்திரி முதலியோருடனும் செய்துவருகின்றார்.

இவ்வித மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமத்தின் முக்கிய நோக்கம் உலகம் முழுதும் சாந்தியும் பரஸ்பர நன்னம்பிக்கையும் ஆலய காரியங்களிலும் மதாசாரங்களிலும் குழப்பமில்லாமையும் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்பதே. அவ்விதமே இங்கிலீஷிலும் பல பிரசுரங்கள் வெளியிட்டிருக்கிறார். இவ்விதச்ரேயஸ்கரமான காரியத்தை ஏராளமான பொருட்செலவில் பண்டிட் ஸ்வாமிகள் செய்துவருவதை பலர் போற்றி வருகின்றனர். சிரத்தையுள்ள ஆஸ்திகர்கள் மீதியிருக்கும் சொற்ப தினங்களுக்குள் இந்த ஸத் காரியத்தை தரிசித்து பரமேச்வரனுடைய பிரஸாதத்திற்கு பாத்திரர்களாகவேண்டுமாய்ப் பிரார்த்திக்கப்படுகிறது. பி. எஸ். வைத்தினாதய்யர்

### காட்டுமன்னார் கோவில்.

உபந்நியாஸம்.

நாளது ஆனிமீ 2உ வியாழனன்று மாலை 7-மணிக்கு பிராமண ஸபையின் ஆதரவில் திருவஹீந்திரபுரம் வித்வான் ஸ்ரீ உ. வே. பக்ஷிராஜம் இராமானுஜாசார்ய ஸ்வாமிகளால் பிராம்மண ஜன்மமும், வேதாத்யனமும் எனும் விஷயம்பற்றி சிறந்த மேற்கோளுடன் ஒருமணி நேரம் உபந்யஸிக்கப்பட்டது. அநேகம் பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். உபந்யாஸ முடிவில் உள்ளூர் பிராமண சிறுவர்களுக்கு வேத வகுப்பு உபக்ரமிக்கப்பட்டது. ஷை வகுப்பின் அத்யக்ஷ பதவியை மணலூர் ஸ்ரீ உ. வே. கோபாலாசாரியார் பிரதிப் பிரயோஜனம் கருதாமல் ஏற்றுக்கொண்டிருக்கிறார். தைத்திரீய உபநிஷத் முதன் முதலாக நடந்துவருகிறது மாலையில் தீர்த்தாஞ்ஜநேயர் மண்டபத்தில். ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் அவிச்சின்னமாய் நடந்துவருகிறது.

உத்ஸவம்.

இவ்வூரில் அவதரித்த ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு உத்ஸவம் சிறப்பாய் நடந்து 9—7—37 இரவு சாத்துமுறை விமர்சையாய் நிறைவெய்தியது. பாகவதர்களெனும் புனை பெயரமைந்த அநேகர் உதாபூர்த்தியாலும்நேத்ரானந்தத்தாலும் சந்தோஷமடைந்தனர். தீண்டாதார் அநேகர் இடையூறின்றி தர்சனம்செய்து குதூகலம் பெற்றனர் டிரஸ்டி ஸ்ரீமான் ஸ்ரீரங்காசாரியாரின் பராமரிப்பின் விசேஷம் மிகவும் பாராட்டத்தக்கது. ரதோத்ஸவமும் தீர்த்தவாரியும் சரியான காலத்தில் கண்டருளினார்.

கண்டனக்கூட்டம்.

16-7-38 சனியன்று ஸபையின் சார்பாக ஓர் மீடிங்கு ஸ்ரீவீரநாராயண ஸ்வாமி தேவஸ்தானம் முன் மண்டபத்தில் நடைபெறும். அச்சமயம் சட்ட ஸபைகளில் அடிக்கடி அதர்மச் சட்டங்களை கொண்டு வருவதைக் கண்டித்தும், தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தை சாஸ்திரீயமாயும் யுக்தியாயும் தடுத்தும், பிராம்மண்ய ஸம்ரக்ஷண ஹேதுக்களை விஸ்தரித்தும் தீர்மானங்களும் பிரஸங்கங்களும் நடைபெறும். உபந்யாஸகர்களையும் காலவரைகளையும் துண்டுப் பிரசுரத்தில் காணலாம்.

பிராமண ஸபை கார்யதரிசி.

### ஆலயப் பிரவேச மசோதா கண்டனம்.

பண்ருட்டி

பண்ருட்டி நகரவாசிகளான ஆஸ்திக மகா ஜனங்களால், ஆலயப் பிரவேச மசோதாவையும், சாரதா சட்ட திருத்த மசோதாவையும் விதவா விவாஹ மசோதாவையும் கண்டித்து மஹஜர் பாரங்களில் கையெழுத்துக்கள் செய்யப்பட்டு மகா கனம் பொருந்திய வைஸ்ராய் அவர்களுக்கும், டில்லி அஸெம்பிளி பிரசிடெண்டு அவர்களுக்கும், டில்லி லா மெம்பர் அவர்களுக்கும், சென்னை முதல் மந்திரி அவர்களுக்கும், சென்னை சட்ட மெம்பர் அவர்களுக்கும், அனுப்பப்பட்டிருக்கிறதுடன் ஷை மசோதாக்கள் அமுலுக்குக் கொண்டு வாராமலிருக்க வேணுமென்றும் பிரார்த்திக்கப்பட்டிருக்கிறது.

ஒரு நிருபர்.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, தும்பகோணம்.

எல்லாவித்மான அச்சு, பையிண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.
தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

ல்

4/23 29

21-7-1938

21524

215241
30 JUL 1938
MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியர்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-வரு ஆடி-மீ 6உ 1938வரு ஜூலை-மீ 21உ | வல 29

## ஆர்ய தர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

### விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தீர்ந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## வாரக்குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வெ. ஸோ. சர்மா.)

காங்கிரஸ் முஸ்லீம் ஸங்கம்! லாஹூரில் தோன்றி தங்கள் காரியத்திற்கு கெடுதலில்லாமல் தேசஸேவை புரிய மஹம்மதியர் முன் வந்துளர். தார்மிகர் எப்படி எப்போது முன் வருவாரோ?

தந்திரம் பலித்ததா? பிரிடிஷ் அரசாங்கம் தந்திரத்தில் பெயர் பெற்றது! ஸமஷ்டி விஷயத்தில் மிக தந்திரமாக தேசீய ஸபைக்குள்ளேயே பின்னு பிப்ராயத்தைக்கிளப்பி விட்டது! மத விஷயத்தில் ஏமாந்தரெனில் இதிலும் தலைவர் தவறினர்!

அதுவும் விரைவில் வரும்! ஆமதாபாத்தில் பெண்கள் கூடி பூர்ண ஆக்ஷி அதிகாரத்தையும் தங்கள் வசமே ஒப்பிக்கும்படி ஓர் தீர்மானம் செய்தனர்! தேசீய தலையில்லாத தலைவர் காலத்தில் இதுவரின் ஆச்சரியப்பட இடமில்லை!!

பெண் ஸேண்டோ! எந்த வகையிலும் ஆண்களைவிட பெண்மக்கள் குறைந்தவரில்லை. என்று காட்டி திருநெல்வேலியில் S S. அம்மாள் 5, 6 ஆட்களை உட்கார வைத்து ஓர் வண்டியை தன் மார் மீது இழுக்கச்செய்தாள். வேறென்ன வேண்டும் காட்டிற்கு?

நகத்தால் கிள்ளுக! அஸாம் மாகாணத்தில் ரதோத்ஸவத்தில் சிலமஹம்மதிய துஷ்டர்கள் ஹிந்துக்களைத்தடியால் புடைத்தனர். இத்தகைய சில அஸத்துக்களை நன்கு சிக்ஷித்தால் ஹிந்து முஸ்லீம் போர் கிளம்பாமல் செய்யலாம்!!

இது ஆண்மைத்தனம்!! பீஹார் மாகாணத்தில் ஓர் சிக்கனக்கமிட்டி கவர்னர் ஜட்ஜ் முதலிய பெரும் சம்பளக்காரரது சம்பளத்தைக்குறைக்க வாயாலாவது தைர்யமாக பேசிற்று! சென்னை நீதி ஸபை??

[illegible] மஹம்மதியர் ஓர் தமிழ்வாசகத்தில் நபி நாயகத்தைப் பற்றி தவறுதலாக எழுதியதற்கு கிளர்ச்சி செய்கின்றனர். நம்மவருக்கு பொறுமை மிக அதிகமோ?

தற்புகழ் ஆத்மஹத்தி!! தேசீய ஸபை ஆக்ஷி விழா ஆங்காங்கு தடபுடலாக நடப்பதாக நடந்ததாக பத்ரிகை கூற்று! பரஸ்பர துதியும் ஆத்மஸ்துதியும் நீங்கில் விஷயமொன்றுமிரா. ஓராண்டில் என்ன தவறு செய்தோம்! ஆத்மஸ்துதி ஆத்மஹத்தியாம் எனஉணர்வார் உண்டோ?

இங்குமா? இப்போதுமா? இந்தியர் அன்யமதம் மாறுவதை அடிக்கடி கேட்டுப்பார்த்தும் வருகிறோம்! ஓர் பிரஹசரண ப்ராமணர் மத்வாரானதாக ஓர் பத்திரிகை கூறுகிறது? உண்மையாயின் விந்தை!

## ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.
தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க வித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

## அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2. நால்வர் சரித்திரம் | 0 | 12 | 0 |
| 3. ,, காலிகோ ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. பார்தசாரம் | 1 | 2 | 0 |
| 5. ஸ்ரீ ராமாயண வினாவிடை. | 1 | 8 | 0 |
| 6. பஞ்சரத்னம் | 0 | 12 | 0 |
| 7. ஷண்முக விஷயம், | 0 | 12 | 0 |
| 8. ஸ்ரீபாலஷண்முக விஷயம். | 0 | 8 | 0 |
| 9. ருக்மிணி | 0 | 8 | 0 |
| 10. தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. ராஜாதேசிங்கு, | 0 | 5 | 0 |
| 12. திருக்குறள் நீதிக்கதைகள். | 0 | 10 | 0 |
| 13. தசகுமார சரித்ரம். | 0 | 6 | 0 |
| 14. திருப்புகழ் ரத்னமாலை. | 0 | 3 | 0 |
| 15. கந்தாலங்காரம். | 0 | 2 | 0 |
| 16. திருஞான சம்பந்தர். | 0 | 2 | 6 |
| 17. விசாரசன்மர். | 0 | 3 | 0 |
| 18. மூர்த்தி நாயனார். | 0 | 3 | 0 |
| 19. திருநாவுக்கரசர். | 0 | 2 | 0 |
| 20. குகன். | 0 | 4 | 0 |
| 21. திருவகுப்பு. | 0 | 4 | 0 |
| 22. பாராயண திருப்புகழ் | 0 | 2 | 0 |
| 23. வேல், மயில் விருத்தம். | 0 | 1 | 0 |
| 24. திருப்புகழ் விருத்தியுரை. | 8 | 0 | 0 |

## மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.

"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0

## 'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் செலவு பிரத்யேகம்.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

## புருஷர்களுடைய புனர் விவாஹம்.

எ.ம் எம். அனந்தராயர் எழுதுகிறார்.

வர்ணாச்ரமத்தை அனுஸரிக்கிறவர்களுக்குள் புருஷனுடைய விவாஹமானது இரண்டு உபயோகங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது:—

1 க்ருஹ்ய தர்ம ஸாதனத்திற்காக

2 ஸந்தான ப்ராப்திக்காக.

மேற் சொன்ன முதல் உபயோகமானது "பால்ய விவாஹ ப்ரதிபந்தக சட்டமானது" அடியோடு நமது க்ருஹ்ய தர்மங்களை தொலைத்து விட்டது. ஏனெனில், ஸ்திரீகளுக்கு 14 வயது ஆகிறபர்யந்தம் விவாகம் செய்யாமல் நிர்பந்தம் செய்ததினால் அனேக ஸ்திரீகள் 14 வயது ஆகிறதிற்குள் ருதுகாலத்தை அடைந்து போவார்கள். இப்படியிருக்க இவர்களுடைய விஷயத்தில் ருதுமதிவிவாகமானது அவ்வெல்லா ஸ்திரீகளுக்கு வ்ருஷலீத்வம் (சகல க்ருஹ்யதர்மங்களுக்கு அனதிகாரத்வம்) உண்டு பண்ணிவிடுகிறது.

மேற்படி மேற்சொன்ன இரண்டாவது உபயோகமானது "புருஷர்களுடைய புனர் விவாஹ நிர்பந்த மசோதாவானது சில குடும்பங்களில் ஸந்தான வ்ருத்திக்கும் இன்னும் குலவ்ருத்திக்கும் ஹானிபண்ணும். அது எப்படியென்றால் விவாகமான பிற்பாடு ஒரு ஸ்திரீயானவள் புத்திப்ரஷ்டத்தை அடைகிறாள். அல்லது க்ரூரமான ரோகங்களால் பாதிக்கப்பட்டவளாயிருக்கிறாள் அல்லது கர்ப்பதாரணைக்கு யோக்கதையில்லாதவளாயிருக்கிறாள். அல்லது க்ருஹ்ய தர்மங்களுக்கு அனர்ஹதையை அடைகிறாள். இப்படியிருக்கையில் புருஷன் மேற்சொன்ன உபயோகங்களை அடையவேண்டுமானால் மற்றொரு விவாகமானது செய்ய வேண்டாமா? அம்மாதிரியான ஸ்திரீயை கொலைபண்ணி மற்றொருவிவாஹத்தைசெய்து கொள்வதில் எந்த காலத்திலும் சாஸ்திர ஸம்மதமல்ல. "புனர்விவாஹ நிர்பந்த"மசோதாவானது மேற்சொன்ன தீங்கை உண்டு பண்ணுகிறதற்காக அவகாசம் ஏற்படலாம்.

ராஜ குலத்தில், க்ஷத்ரியர்களுக்குள், சில குடும்பங்களில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேல் மனைவிகளை உடைத்தாயிருக்கிறதானது ஸஹஜமே. அது ஏனெனில், க்ஷத்திரியர்களிடத்தில் மேற்படி அன்ய ஜாதீய சில புருஷர்களிடத்தில் வீர்யத்தின் ப்ராபல்யமானது இருந்தபடியால் ஏக ஸ்திரீ ஸம்போகத்தின் பர்யாப்தமானது இல்லாமல் இரண்டு அல்லது இரண்டுக்கு மேல் ஸ்திரீகளிடத்தில் ஸம்போகமானது அவசியமாயிருந்தால் அவர்களை மனைவிகளாகச்செய்கிறது காம்யார்த்தம் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. இந்த சாஸ்திர முறையை தடுத்ததினால் வ்யபசாரத்திற்கு அவகாசம் கொடுக்கும். இந்த தீங்கானது ஔரஸ அல்லது உபஸ்திரீ குழந்தைகளுக்கு இடம் கொடுக்கும்.

ஆகையால் "பால்ய விவாஹ ப்ரதிபந்தக" சட்டத்தை ரத்து பண்ணும்படி அகிலபாரத வர்ஷீய அதிப்ராபல்யமான ரத்து கமிட்டி (Very influential All India chaild marriage Restraint act repeal committee) ஏற்படுத்தி அந்த சட்டத்தை அதி சீக்ரத்தில் தொலைக்கவேண்டியது அவசியம். ஷை இனிமேல் வரப்போகிற மசோதாவை சட்டமாக வராமல் பண்ணிவிட சகலவித முயற்சிகள் செய்யவேண்டியது.

ஸநாதனதர்ம காரியாலயம், மதராஸ்.

## விரிஞ்சிபுரம்.

### பிரம்மோத்ஸவம்

அன்புடையீர்! ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர்தேவியாகிய ஸ்ரீமரகதவல்லியம்பாளின் ஆடிப்பூர மகோற்சவகாலமான 1938 ஹூ ஜூலை மீ 21வ வெகுதான்ய ஹூ ஆடி மீ 6வ குருவாரம் துவஜாரோஹணம் ஆரம்பமாகி நடக்கிறது. ஷை தினங்களில் ஸரியான வேளைகளில் நடக்கும் அபிஷேக மஹா தீபாராதனைகள், வீதிப்புறப்பாடு, உத்ஸவம் முதலிய வைபவங்களுக்கு தாங்கள் அவசியம் விஜயம் செய்து தரிசித்து சிவப்போகிய மஹா புண்ணியத்தைக் கைக்கொள்வீர்களென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த ஆடிப்பூர உத்ஸவத்தில் இன்னும் சில உத்ஸவதினம் காலியாகயிருப்பதால் சிவநேசச்செல்வர்கள் முன்வந்து காலியாயிருக்கும் உத்ஸவதினங்களை உத்ஸவ கைங்கரிய ஸபையாரிடம் தெரிவித்து ஏற்பாடு செய்துகொண்டு சிறப்புடன் உத்ஸவத்தை நடத்த வேண்டுகிறோம். ஷை உத்ஸவத்திற்கு பொருளுதவி செய்பவர்கள் ஷை உத்ஸவ சபை தலைவருக்கு அனுப்பிவைக்கவும்.

விரிஞ்சிபுரம் இராயவேலூருக்கு மேற்கே 7 மைல் தூரத்திலிருக்கிறது. எந்த நேரத்திலும் வேலூரிலிருந்தும், திருப்பத்தூர் பக்கங்களிலிருந்தும் மோட்டார் பஸ்கள் கிடைக்கும். பெரியதோர் ஸாஸ்வதத்திருப்பணி கைங்கர்யம் நடத்திவைக்க ஸ்ரீ மார்க்கபந்தீஸ்வரர் ஆலய மேற்கு வாசல் தலைக்கோபுரம் விழுந்துவிட்டிருப்பதை பார்வையிட்டுபுதுப்பித்து வைக்க தனவந்தர்கள் கவனிப்பார்களாக.

உத்ஸவ கைங்கர்ய ஸபையார்.

## இலவச திருக்குறள், கம்பராமாயண வகுப்புகள்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினதாவில் சென்ற வாரந்தொடங்கிபிரதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 9-30, 10 மணி வரையில் திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் திருவல்லிக்கேணி ஹிந்துஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் வித்வான் கோ. அரங்கசாமி அய்யங்காரவர்களால் திருக்குறள் வகுப்பு நடைபெற்று வருகிறது. பிரதிவாரமும் இரண்டு அதிகாரங்கள் பரிமேலழகர் உரையுடன் விளக்கப்பெறும். இது காறும் 'கடவுள் வாழ்த்து'; 'வான் சிறப்பு' என்ற இரண்டு அதிகாரங்கள் முற்றுப்பெற்றுள்ளன. தமிழன்பர்கள் கேட்டு இன்புறுகின்றனர்.

இராயப்பேட்டை ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியில் அங்குநிறுவப்பெற்றிருக்கும் கிளைச்சங்கத்தின் சார்பில் காரியதரிசி பந்தலகுடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்காரவர்களால் பிரதி புதன், வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-30 மணி முதல் 8-30 மணி வரையில் கம்பராமாயண வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. தற்போது நடந்து வருவது பால காண்டம் திருவவதாரப்படலம் கலைக்கோட்டுமாமுனிவர் சாந்தையுடன் அயோத்திக்குச்செல்ல ரதமேறினார் என்பது விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழபிவிருத்தி நன்கு செய்தால் நாடுநலம் பெற்று அமைதிநிலை நிற்கும், பொங்கும் மங்களம் எங்குந்தங்குக.

நமது விசேஷ நிருபர்.

## வீடுகட்டக் கூடாதாம்.

டில்லியில் ஒரு மசூதிக்கு ஸமீபத்தில் ஹிந்து ஒருவர் பங்களா கட்டியிருப்பதை முஸ்லீம்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். கண்டன கூட்டமும் நடத்தினார்களாம். பெரியகிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

## உபாகர்மமும் காயத்ரீ ஜபமும்.

ஸேதுராம தீக்ஷிதர், நாகப்பட்டணம்.

பிரம்மஸ்ரீ சோழவந்தான் சங்கர சாஸ்திரிகள் உபாகர்மத்தையும் காயத்ரீஜபத்தையும் பற்றி எழுதின வியாஸத்தைப்பார்த்தோம். அவர் சொல்லுகிறபடி கணக்கில் புகுந்து சிரமம் எடுத்துக்கொண்டு அர்த்தம் செய்வதற்கு இந்த இடத்தில் பிரஸக்தி இல்லை. ஸந்திஸ்ஸங்கவத:என்றவசனத்தைசேர்த்துஅர்த்தம் செய்யும் பக்ஷத்தில் ப்ராத:ஸங்கவமத்யாந்ஹ அபராந்ஹ ஸாயாந்ஹ: என்கிற ஷை ச்ரௌதமான பஞ்சதாவிபாகம் தான் அவ்விடத்தில் அர்த்தமாகுமே தவிர வேறு மார்க்கமே இல்லை. ஆகையால் உபாகர்ம [illegible]ன்றே காயத்ரீ ஜபம் என்று போட்டிருக்கிறதே ஸரியானது.

தஸ்ர ஸத்ஸ்சஸமிதாஹூதி: என்கிற வாக்யத்திற்கு உபாகர்மம் செய்த உடனே ஸமிதாஹூதி சப்தார்த்த பூதமான காயத்ரீஜபம் என்கிறது அர்த்தமில்லை என்றும் அந்த ஸத்ய:சப்தமானது. ஒரே தினத்தில் இரண்டு மூன்று புண்ய கர்மாக்கள் செய்யும்படி நேர்ந்தால் எது முந்தி, எதை பிற்பாடு செய்கிறது என்கிற சம்சயத்தை நிவர்த்தித்து தீர்மானம் சொல்லுகிற பாகங்களுக்கு ஆநுபூர்வீ கிரம வாக்கியங்கள் என்று பெயர். இதைச்சொல்லவாவில்லை என்றும், அதோடு நிற்காமல் அன்றய்தினம் என்று அதற்கு அர்த்தம் என்றும் உடனேஎன்று சொன்னவர்களுடைய அர்த்தம் தப்பென்றும் எழுதுகிறார். ஆநுபூர்வக்ரமத்திலும் தாமதிக்காமல் மறுக்ஷணத்தில் ஸங்கல்பம் செய்ய வேண்டுமென்கிற இடங்களில் இந்த ஸத்[illegible] சப்தமானது ஆபஸ்தம்ப மஹரிஷிகளாலும் ஆச்வலாயன மஹர்ஷிகளாலும் அநேக இடங்களில் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. விஸ்தாரபயத்தினால் ஒன்று, இரண்டு சூத்திரங்கள் தெரிவிக்கிறேன். (பவமாநஹ வீம்ஷி ஸத்யோநிர்வபேத்) என்கிற ச்ரௌத ஸூத்ரமானது ஆதானம் முடிந்தவுடனே தாமதிக்காமல் பவமாநேஷ்டி செய்யவேண்டுமென்கிற அர்த்தத்தை போதிக்கிறபடியால் அதே பிரகாரம்ச்ரௌதக்ஞர்கள் பிரயோகத்தை நடத்திவைக்கிறார்களே தவிர ஆதானம் காலையில் பவமாநேஷ்டிஸாயங்காலம் என்றோ அல்லது பவமாநேஷ்டியை முதலிலும் ஆதானத்தைப் பிறகும் செய்து வைக்கிறதில்லை. ஸத்யோயக்ஷ்யே என்கிற ஆச்வலாயன ஸூக்ரமும் உடனே என்கிற அர்த்தத்தில் ஆச்வலாயன க்ருஹ்யக்ஞர்கள் நடத்தி வைக்கிறார்கள். ஆகையால் இவ்வருஷம் காயத்ரீ ஜபமானது எந்த வாக்ய பலத்தினால் முதல் நாள் என்று சொல்லப்படுகிறதோ அதே வாக்யத்தின் உத்தரார்த்த பலம் உபாகர்மம் ஆனவுடன் காயத்ரீ ஜபம் செய்கிறதற்கு ஆதாரமாகும்.

பிராயச்சித்த ரூபமானபடியால் ஸங்கவம் தாண்டக்கூடாதென்று ஒரு விதி விதிக்கிறார்கள். லௌகீகர்களும் அப்படியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சாஸ்திரத்தை பார்க்கும் காலத்தில் பிராயச்சித்தார்த்தம் இல்லை. நித்யகர்மம் என்று நமது ஸூத்திரக்காரர்கள் போதிக்கிறார்கள், சிராவண்யாம் பௌர்ணமாஸ்யாம்என்கிறஸூத்ரார்த்தத்தை கவனித்தால் யாதொருகாமனையும்காட்டாமல் கேவலம்விதிரூபமாக இருக்கிறபடியால் நித்ய கர்மம் என்று ஏற்படுகிறது. பிராயச்சித்த காயத்ரீ என்றால்பிரதமோபாக்ருதிக்காரர்களுக்கு பிராயச்சித்த பிரஸக்தி இல்லாத படியால் வேண்டாம் என்று தீர்மானம் ஆகிவிடும்.

391



## காங்கிரஸ் ஆக்ஷியில் யாகத்திற்குத்தடை.

குண்டூரில் ஒரு அந்தணர் யாகம் ஒன்றை செய்ய முயற்சித்தார். காங்கிரஸ் வாலாக்கள் சில காலிகளைச்சேர்த்துக்கொண்டு அந்த யாகத்திற்குப் பல வழியிலும் தடையுண்டு பண்ணினார்கள். மிக்க ஆபாஸமான பல அட்டூழியங்கள் செய்யப்பட்டன. யாக கர்த்தாவுக்குப் போலீஸார் உதவி புரிய தவறிவிட்டனர். காங்கிரஸ் ராஜ்யமல்லவா? யாகம் நின்றது. குண்டூருக்குப் பிரதம மந்திரி கனம் ராஜாஜி சென்ற வாரம் போயிருந்த சமயம் சில தார்மிகர்கள் தூது சென்று யாகம் தடுக்கப்பட்டதையும், போலீஸ் உதவி செய்ய மறுத்ததையும் தெரிவித்தனர். கனம் ஆசாரியார், போலீஸார் பாதுகாப்புச்செய்யாமலிருந்தது தவறு என்றும் அதைக்கண்டிப்பதாயும் தெரிவித்தார் இத்துடன் அவர் நின்றிருந்தால் திருப்தியாயிருக்கும். ஆனால் அவர் ஸனாதனிகளுக்கு அநாவச்யமாக ஆலோசனை சொல்லப்புறப்பட்டார். பொது ஜனங்களுக்கு திருப்தியில்லாத யாகத்தை நிறுத்திவிடுவதே நல்லதென்றும், போலீஸ் உதவியுடன் செய்யப்படும் யாகமானது பலன் தராதென்றும் சொன்னாராம். தூது கோஷ்டியார், யாகம் செய்வது சரியா, தப்பா என்பதைப்பற்றி கனம் மந்திரிடம் ஆலோசனை கேட்க வரவில்லை. காங்கிரஸ் வாதிகளுடைய பலாத்காரத்தையும் காங்கிரஸ் ஸர்க்காருடைய போக்கையும் அறிவிக்கவேவந்தார்கள். அப்படியிருக்க கனம் மந்திரி யாகத்தைப்பற்றி அபிப்பிராயம் கூற முன் வந்தது அநியாயகவே இருக்கிறது.

ஜனங்கள் விரும்பாத யாகம் வேண்டாமென்கிறார். சில காங்கிரஸ் வாதிகளும், அவர்களுடன் கூலிக்குவரும் காலிகளும், தான் பொதுஜனங்களா? இவர்களுக்குப்பிடிக்காத தர்மங்களை விட்டுவிடவேண்டுமென்பது தான் காங்கிரஸ் நீதியா? ஒரு சிலருக்கு ஒருகார்யம் பிடிக்காததற்காக அதை நிறுத்திவிடுவதென்றால் காங்கிரஸ் மந்திரிகள் வேலையை விட்டு விலகுவதே நியாயமாகும். காங்கிரஸ் மந்திரிகளின் செய்கை பலருக்குப் பிடிக்கவில்லையல்லவா? கடன் நிவாரணச் சட்டம்போன்றவைகளில் கனம் மந்திரி செய்கை பலருக்கு வெறுப்பைக் கொடுக்கவில்லையா?

கட்டாய ஹிந்தியை எதிர்த்து கனம் மந்திரி போகுமிடங்களிலெல்லாம் கருப்புக்கொடி மரியாதை நடக்கவில்லையா? கணக்கற்ற ஜனங்கள் ஹிந்தியை எதிர்க்கவில்லையா? போலீஸ் உதவியுடன் யாகம் நடத்துவது அவமானமென்று கருதும் கனம் மந்திரி போலீஸ் உதவிபெற்று ஹிந்தி எதிர்ப்பாளர்களை அடக்கி ஹிந்தியை ஸ்தாபிப்பது எப்படித் தகும்? ஜனவிருப்பத்தை மதித்துக் கட்டாய ஹிந்தியை இவர் ஏன் கைவிடக்கூடாது? ஹிந்தி எதிர்ப்பாளர் தமது ராஜ்ய விரோதிகளென்றால், ஸனாதன தர்ம விரோதிகளே யாக விரோதிகளாயிருப்பதும் இவர் அறிந்ததே. தர்ம விரோதிகளான சிலருக்குப் பயந்து யாகாதி தர்மங்களை நிறுத்தவேண்டுமென்றால் அதே நியாயத்தைக் கொண்டு கனம் மந்திரியும் அவரது ஸகாக்களும் எதிரிகளுக்குப் பயந்து ராஜீநாமா செய்வதே நியாயமாகும்.

இந்த மாதிரி குதர்க்கப்பேச்சும், அநீதியான செய்கையும் மஹம்மதியர்களிடமோ, கிறிஸ்தவர்களிடமோ பலிக்குமா? உண்மையில் ராஜநீதி நிலைக்கவேண்டுமானால் குண்டூரில் அக்கிரமம் செய்த காங்கிரஸ்காரர்களையும், போலீஸ்காரர்களையும் சிக்ஷிப்பதே பிரதம மந்திரியின் நீதி நிறைந்த கடமையாகும். தார்மிகர்களும் எங்கும் இந்த ஸம்பவத்தைக் கண்டிக்கவேண்டியது அவச்யமாகும்.

## உத்யோக வேட்டையல்லவா?

மத்ய மாகாண காங்கிரஸ் மந்திரிகளுள் இலாகாப்பிரிவினைவிஷயமாகப்பெரியதகராறு ஏற்பட்டு சில மந்திரிகள் ராஜீநாமா செய்து விட்டதாகத்தெரிகிறது. சில காலமாகவே இந்தமந்திரி ஸபை மீது பலத்த புகார்கள் இருந்துவருவதுதெளிவு. லஞ்சம், உத்யோக வேட்டை இவைகளில் மந்திரி ஸபை இறங்கி விட்டதாயும் இதைக்கலைத்து வேறு மந்திரி ஸபை ஏற்படுத்த வேண்டுமென்றும் நாகபுரி வக்கீல் சங்கத்தினர் தீர்மானித்தது யாவருமறிந்ததே. மந்திரிகள் ஒவ்வொருவரும் தம் தமக்கு இன்னன்ன இலாகாதான்வேண்டுமென்றுவற்புறுத்துகின்றனர். பிரதம மந்திரியான கனம் டாக்டர் காரேயிடம் ஒரு இலாகாவையும் வைகக்கூடாதென்றும், அவர் வெறும் மேற் பார்வைமந்திரியாக இருந்தால் போதுமென்றும் சில மந்திரிகள் விரும்புகின்றனர். கனம் காரே இதற்கு ஸம்மதிக்கவில்லையாம். ஆகவேசண்டைமுற்றிஇரண்டு மந்திரிகள் ராஜீநாமா செய்து விட்டதால் இப்போது கார்யக்கமிட்டியின் பரிசீலனைக்கு இவ்விஷயம் போயிருக்கிறது.

இதில் என்ன விசேஷமென்பதையே நாம் கவனிக்கவேணும். காங்கிரஸ்காரர்கள் பதவி ஏற்றது உலக உத்தாரணத்திற்கேயல்லாது கேவலம் கௌரவத்திற்கும், ஸ்வலாபத்திற்கும் அல்லவென்று காங்கிரஸ் வாதிகளே பறை சாற்றினார்கள். அத்தகைய த்யாகமணிகள் எந்த இலாகா கொடுத்தாலென்ன? இதற்காக ஏன்சண்டையிடவேண்டும்? ஸூழியம் செய்ய விரும்பும் எவரும் எந்த இலாகா கிடைத்தாலென்ன,, வென்று நினைக்க வேண்டாமா? ஏதோ ஸ்வய நலத்தையும், கௌரவலாபத்தையும் முன்னிட்டுத்தானே இந்த சண்டை கிளம்பியிருக்கிறது? இது உத்யோக வேட்டையாகாதா?

## அங்குளீயகப்ரதானம்

### கும்பகோணம்.

இந்நகர் ஸ்ரீ ஆதி வராகப்பெருமாள் சன்னதியில் பிக்ஷாண்டார்கோவில் பிர்ம்மஸ்ரீ பாகவத கௌஸ்துபம் கோபால பாகவதர் அவர்களால் நடத்திவருகிற ஸ்ரீமத் ராமாயண ஸீரியல் தொடர்ச்சி கதையில் 14-7-38 வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு (அங்குளீயக ப்ரதானம்) என்னும் கட்டத்தை தனது குமாரர்கள் G. பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்கள் பின்பாட்டுடன் கதாகால க்ஷேபம் விமர்சையாக நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஷை கட்டத்தில் பாகவதர் அவர்களுக்கு இரண்டு மோதிரங்கள் சன்மானம் செய்யப்பட்டது. T. G. லக்ஷ்மி நாராயண செட்டியார் அவர்களால் வெள்ளி சிப்பளா கட்டையும் செய்து கொடுக்கப்பட்டது. இன்னும் வெள்ளிபாத்திரங்களும் மற்றுமுள்ள சன்மானங்களும் செய்தார்கள். ஷை சாமான்களை பிர்ம்மஸ்ரீ கணபதி சாஸ்திரிகளால் பாகவதருக்கு ஸன்மானம் செய்யப்பட்டது கதை நடந்து வருவதைப்பற்றி சாஸ்திரிகள் ரொம்ப அழகாக உபன்யாஸம் செய்தார்.

பொதுவாக கும்பகோணம் மகாஜனங்கள் யாவரும் பாகவதர் அவர்களிடம் விசேஷமாக அபிமானித்து மூன்றும் முறையாக ராமாயண ஸீரியஸ் நடத்துவது குறிப்பிடத்தக்கது.

இந்த ராமாயண பட்டாபிஷேகம் ஆனதும் பாகவதர் அவர்கள் தனது உயர்தர பக்க ஸெட்டுடன் மாயவரம் போகிறார்.

ஒருநிருபர்.

## காயத்ரீ ஜபம்.

பிரம்மஸ்ரீ ஸேதுராம தீக்ஷிதர் கூறியது உபாகர்ம தினத்தில் காயத்ரீ ஜபத்தை ஸங்கவகாலத்தில் அநுஷ்டிக்கவேண்டியதை உறுதிபடுத்தவே அவ்விதம்மறைமுகமாகக்கேட்டுள்ளார் அவ்விதம் இரண்டும் ஒரே தினத்தில் சேர்ந்தால் முந்தி ஜபமும் நடுப்பகலில் உபாகர்மாவும் என்பது நமது பெரியோர்களுடைய ஸித்தாந்தமே.

இப்பால் சோழவந்தான் பிரம்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் பிரதமையின் 60, நாழிகைக்கு மேற்பட்டதை இரண்டு பாகம் செய்து, அதில் ஒன்றை பௌர்ணமியுடன் கூட்டி அஹோராத்ரத்துக்குப் பிறகு ஸந்தியைக்கல்பித்து, மறுநாள் காயத்ரீ ஜபத்தை நிச்சயப்படுத்திருப்பதின் காரணம்தெரியவில்லை. அம்மாதிரி கணக்கிடுவது எங்குளது? இச்சமயம் ஆசார்ய பீடங்களிலிருந்து ஆக்ஞாரூபமான ஓர் அறிக்கை அவசியம்.

வி. உமாமகேச்வர சாஸ்திரி.

## காயத்ரீஜபம்.

இவ்வருஷம் சிராவண பௌர்ணமியில் உபாகர்மாவும் காயத்ரீ ஜபம் இரண்டும் ஒரு நாளில் வருகிறபடியால் உபாகர்மாவைச்செய்து விட்டு காயத்ரீ ஜபம் செய்கிறதா. அல்லது ஜபம்செய்து விட்டு உபாகர்மா செய்கிறதா என்றஸந்தேகம். இதுவிஷயத்தில் எதை முந்தி செய்கிறது. சிலர் ஜபம் செய்து விட்டு பிறகுதான் உபாகர்மாவைச் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். காரணம்—உபாகர்மாவுக்கு காலம் மாத்தியானிக காலம். ஜபத்திற்கு காலம் ஸங்வ காலம். ஆகையால் காயத்ரீ ஜபம் முந்தி செய்யவேண்டுமென்றுசொல்லுகிறார்கள். இந்த சமாதானம் பிரமாணமாகாது. ஒரு தர்மத்திலேயும் காயத்ரீ ஜபம் ஸங்கவ காலத்திற்குள் தான் செய்யவேண்டும். அதற்குமேல் செய்தால் பிரத்யவாயமுண்டு என்று தெரியவில்லை. இன்னும் வாக்கியத்தில்உள்ளஸத்ய:சப்தமானது உபாகர்மாவுக்கு பிறகுதான் காயத்ரீ ஜபம் செய்யவேண்டுமென்று தெரிய வருகிறது. ஆகையால் முன்சொன்னவாக்கியப்படி உபாகர்மாநந்தரம் காயத்ரீ ஜபம் செய்வது தான் மன்வாதி தர்ம சம்மதமாகும்.

அரியூர் ராமஸ்வாமி சாஸ்திரிகள்

## ஒத்துழையாமல் வேலையிழந்தவர். மந்திரிக்கு அப்பீல்.

சௌத்கானா: ஜில்லாவைச்சேர்ந்தமஞ்சி கிராமத்திலிருக்கும் பத்துகுடி வாஸுதேவய்யா என்பவர் ஷை கிராமத்தில் வெகுநாளாக கர்ணம் வேலை பார்த்துவந்தவர். 1921ம் வருஷத்தில் நடந்த சட்டமறுப்பு இயக்கத்தில் இவர்கலந்த குற்றத்திற்காக அப்போதே வேலையிலிருந்து நீக்கப்பட்டார், தற்சமயம் காங்கிரஸ் மினிஸ்டரி ஏற்பட்டு வேலையிழந்தவர்களுக்கெல்லாம் மீண்டும் வேலை கொடுத்து வருவதால் தமக்கும் ஷை கர்ணம் வேலையை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்றும் சென்னை பிரதம மந்திரி, சுபாஷ்போஸ், மகாத்மாஜீ இவர்களுக்கு வேண்டுகோள் அனுப்பியிருப்பதாக நமக்கு அறிக்கிறார்.

## ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம் (ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் வர்களால் மூலத்திலுள்ளபடியேசுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்த்தன அச்சக்கூடம் லிமிடெட் டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஞு ஆடி-மீ 6ல

## ஒரு வருஷ ஆக்ஷியில் மிராசுதார் கதி என்ன?

சென்னை மாகாணத்தில் ஜன நாயகமான மாகாண ஸ்வய ஆக்ஷியும், அதில் காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாஹமும் ஏற்பட்டு ஒரு வருஷமாகிறது. காங்கிரஸ் பதவியேற்ற தினத்தைக் கொண்டாடும்படி தமிழ் நாட்டுத் தலைவர் ஆக்ஞையிட்டார். சிற்சிலவிடங்களிலும் இது கொண்டாடப்பட்டது. அநேகமாக எல்லாப் பத்திரிகைகளும் ஒரு வருஷ ஆக்ஷியைப்பற்றித் தலையங்கமெழுதி அபிப்பிராயம் வெளியிட்டிருக்கின்றன: ஆனால் பத்திரிகைகளில் வெளி வந்த விவரத்திலிருந்து இந்தப் பதவி ஏற்பு தினக்கொண்டாட்டத்தில் பொது ஜனங்கள் விசேஷ உத்ஸாஹம் காட்டியதாக நினைக்க முடியவில்லை. ஏற்கனவே நடந்துள்ள பல ஆர்ப்பாட்டங்களை ஒத்துப்பார்த்தால் இது நன்கு விளங்கும். இதற்குக்காரணம் யாதாயினும் அதை நாம் விமர்சிக்கவேண்டியதில்லை.

ஒரு பெரிய ராஜ்ய நிர்வாஹத்தில் ஒரு வருஷ ஆட்சியென்பது வெகுகுறுகியகாலமேயாகையால் இதற்குள் அதன் குறை குணங்களை விமர்சிப்பது உசிதமாயிராது: இருப்பினும் மந்திரி ஸபையாரே இதைச் செய்யும்படி தூண்டிவிட்டும், தாங்களாகவே தங்கள் வேலைகளை விளம்பரப்படுத்தியும் வழி காட்டியிருக்கிறார்கள். ஆகையால் அந்த வழியில் நாமும் செல்வது குற்றமாகாது. காங்கிரஸ் மந்திரி ஆக்ஷியில் நடத்தப்படவேண்டிய வேலைகளுக்கு ஏற்கனவேயே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு எலெக்ஷன் காலத்தில் பொதுஜனங்களிடமும் அது தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றும் தோரணையிலேயே மந்திரிகள் செல்லவேண்டும். அந்த வழியில் காங்கிரஸ் மந்திரிகள் அநேக திட்டங்களை நிறைவேற்றியிருப்பது வாஸ்தவமே. ராஜீயக்கைதிகளின் விடுதலை, மது விலக்கு, சம்பளக் குறைவு கைதிகளுக்கு மோர்ஸப்ளை போன்ற பல விஷயங்களை காங்கிரஸ் மந்திரிகள் செய்து விட்டார்கள். இன்றும் சிலவற்றை நிறைவேற்றவும் முயற்சிக்கிறார்கள்.

ஆயினும் நமது மாகாணத்தில் சாபக்கேடாக இருந்து வரும் நிலவரிப்பளுவைப்பற்றி காங்கிரஸ் மந்திரிகளின் கொள்கையென்ன? அவர்கள் இந்த ஒரு வருஷத்தில் செய்ததென்ன? இதைப்பற்றி நினைக்கையில் காங்கிரஸ் ஆக்ஷியின் போக்கை மிராசுதார்கள் மெச்சுவார்களென்று எதிர்பார்க்க நியாயமில்லை.

நிலவரிப்பளுவைக் குறைக்கவேண்டுமென்பது இம்மாகாணத்தில் வெகு நாளாக ஒரு பெரிய ராஜீய பிரச்னையாக இருந்துவருகிறது. அதிலும் ஸமீபகாலமாக விலை வாசிகளின் இறக்கத்தால் மிராசுதார்களின் நிலைமைவெகு கேவலமாகிவிட்டது. இதையறிந்தே அதிகாரிவர்க்க ஆக்ஷியிலும், ஜஸ்டிஸ் ஆக்ஷியிலும் கூட நிலவரி வஜாக்கொள்கை அநுஷ்டிக்கப்பட்டு வந்தது. இந்த நிலவரிப்பளுவைக் குறைக்கவேண்டுமென்பதில் மற்ற ராஜீயக் கக்ஷிகளைவிடக் காங்கிரஸ் கக்ஷியானது அதிக அநுதாபம் கொண்டதுபோல் பாவித்து வந்திருக்கிறது. மிராசுதார்களின் கூட்டங்களிலும், பத்திரிகைகளிலும் காங்கிரஸ் தலைவர்கள் இதைப்பற்றி அளவு கடந்த ஆதாவுகாட்டி மிராசுதார்களைப் பெரிய கிளர்ச்சியில் தூண்டிவிட்டு வந்திருக்கிறார்கள். நிலவரியைக் குறைக்காததற்காகப் பழைய ஆக்ஷியாளர்களைக்காங்கிரஸ் தலைவர்கள்கண்டித்தற்கும் அளவு கிடையாது. முக்யமாக சென்ற எலெக்ஷன் ஸமயத்தில் கிராமாந்திர ஜனங்களின் மனதையும், வோட்டையும் கவர விரும்பி காங்கிரஸ் பிரசாரகர்கள் நிலவரிப்பளுவை உடனே குறைக்கப் போவதாக வெகு ஆடம்பரத்துடன் பறையடித்து வந்தார்கள். இந்த ஒரு விஷயத்தில் நம்பிக்கை வைத்தே ஏராளமான வோட்டர்கள் காங்கிரஸை ஆதரித்தார்களென்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

ஆயினும் காங்கிரஸ் மந்திரி ஆக்ஷி ஏற்பட்டதும் மிராசுதார்களின் கதி என்ன ஆயிற்று? அவர்கள் பழைய நிலைமையிலேயே தொங்கவேரிட்டதேயல்லது ஒரு நன்மையும் ஏற்படவில்லை. ஏற்கனவே இருந்த ஸர்க்கார் அளித்து வந்த 75 லக்ஷ வஜாவுடன் காங்கிரஸ் மந்திரிகள் நின்று விட்டார்கள். சாச்வதஸெட்டில் மெண்ட் விஷயமோ, நிரந்தர நிலவரிக் குறைவோ, வேறு எந்த நன்மையோ, ஒன்றும் கவனிக்கப்படவில்லை. மிராசுதார்களும் கூட்டம் போட்டும் டெபுடேஷன் போயும் மந்திரிகளிடம் முறையிட்டுக் கொண்டார்கள். எலக்ஷன் வாக்குறுதியை ஞாபகப்படுத்தினார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. இது மட்டுமா! நிலவரியைக் குறைக்கமுடியாது, குறைக்கும் உத்தேசமும் கிடையாது என்று தெளிவாகப் பேசியும் வருகிறார்கள். புதிதாக மிராசுதார்களுக்கு வருமான வரிவிதிக்கவும் யோஜித்து வருகிறாகள். ஆகவே மிராசுதார்களைக்காங்கிரஸ் மந்திரிகள் மதியாமல் அலக்ஷியமாக நடத்திவருவதை அவர்கள் உணருவது நலம். காங்கிரஸ் திட்டத்தில் நிலவரிக்குறைவும் மதுவிலக்கும் இருப்பது வாஸ்தவமே. சென்னை மாகாணத்தைப்பற்றிய வரையில் நிலவரிப்பளுவைக் குறைக்கவேண்டியதே முதல் வேலை. மது விலக்கு இரண்டாம் பக்ஷமேயாகும். அப்படியே காங்கிரஸ்காரர்களும் பேசிவந்தனர். இப்படியிருக்க மது விலக்கை முதன்மையாக்கியும், மிராசுதார் உயிரை இரண்டாம் பக்ஷமாக்கியும் மந்திரிகள் அநுஷ்டித்து வரும் கொள்கை மிகத்தீங்கானது.

இந்த ஒரு முக்ய விஷயத்தைக் கொண்டு ஒரு வருஷ ஆக்ஷியின் நன்மையை அளவிடுவதாயிருந்தால் இதில் வியவஸாயிகள் ஏமாற்றமடைய வேண்டியதே. கடன் நிவாரணச் சட்ட மூலம் வியவஸாயிகளுக்கு நன்மை செய்துவிட்டதாகப் பேசுவதும் அநுபவத்தில் அர்த்தமற்ற பேச்சாகும். 75 லக்ஷ வஜாவும் கடலில் கரைத்த பெருங்காயம் போன்றதே. ஆயிரக்கணக்கான மிராசுதார்களுக்கு 75 லக்ஷ வஜாவின் பிரயோஜனம் கிட்டவேயில்லை. ஆதலால் ஒரு வருஷ ஆட்சியில் மிராசுதார்களின் கண்ணீருக்கு விமோசனமில்லாதது பெரிய ஏமாற்றமாகும்,

இம்மாதிரி எலக்ஷன் அறிக்கையில் கண்டதை நிறைவேற்றாத குற்றத்துடன், அதில் காணப்படாததும், வோட்டர்களின் ஆக்ஞை பெறப்படாததுமான மதஸம்பந்த மசோதாக்களை நிறைவேற்ற முயற்சிப்பதும் காங்கிரஸ் ஆக்ஷியில் காணப்படும் பெரிய குறையென்று பொதுஜனங்கள் நினைக்கிறார்கள். இத்தகைய குறைகளை நிவர்த்தி செய்து மந்திரிகள் ஆக்ஷிபுரிவதையே நம் பொதுஜனங்கள் விரும்புவார்கள்.

ஆகையால் நமதுமந்திரிகள் இரண்டாவது வருஷ ஆட்சியிலாவது மேற்கண்ட முக்ய குறைகளை நிவர்த்தி செய்து வோட்டர்களின் உண்மையான நம்பிக்கைக்குபாத்ரமாக வேண்டுமென்று ஞாபகப்படுத்துகிறோம்.

## குறிப்புகள்.

### எம். ஸி. ராஜா மசோதா.

தீண்டாதாரின் அஸௌகர்ய நிவிர்த்திக்காகவென்று ஸ்ரீமான் எம். ஸி. ராஜாவால் சென்னை சட்டஸபையில் கொண்டுவரப்பட்டுள்ள தீண்டாமை விலக்கு மசோதாவைப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட தனிக்கமிட்டியானது அந்த மசோதாவைப் பரிசீலனைசெய்து வெளியிட்ட முடிவுகள் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. தீண்டாமை காரணமாக ஒருவன் எந்தப் பொது ஸ்தலத்திலும் பிரவேசிக்கத் தடையிருக்கக் கூடாதென்று அந்த மசோதாவில் பொதுவாகச் சொல்லப்பட்டிருந்ததால் தேவாலயம், மடம், பொது ஸத்திரங்கள் போன்றவை பாதிக்கப்படுமென்று நாம் எடுத்துக் காட்டினோம். தனிக்கமிட்டி மெம்பர்களும் இந்த விஷயத்தை யோஜித்து இதில் திருத்தம் செய்திருக்கிறார்கள். பொதுவாகவே இந்த மசோதாவானது கோவில்களையோ மத ஸம்பந்தப்பட்ட இடங்களையோ பாதிக்க உத்தேசிக்கப்பட்டதல்லவென்ற கொள்கையை தனிக்கமிட்டி குறிப்பிட்டிருக்கிறது. இந்த உறுதிமொழியால் மதாபிமானிகள் திருப்தியடைய முடியாதாகையால் இதை நாம் பெரிதாக நினைக்க முடியாது. ஆயினும் தனிக்கமிட்டியானது நேரிட, கோவில்களையும் மத ஸம்பந்தமான இடங்களையும் மசோதாவிலிருந்து விலக்கிவிட்டது விசேஷமே. இதனால் நமக்குப் பெரிய நன்மை செய்துவிட்டதாக நாம் நினைக்கவேண்டுமென்று தனிக்கமிட்டி நினைத்திருக்கலாம். தேவாலய பிரவேசத்திற்காக எம். ஸி. ராஜாவால் தனி மசோதா ஒன்று கொண்டுவரப்பட்டிருக்கிறபடியால் இந்த மசோதாவில் தேவாலயங்களை விலக்கியிருப்பதை ஒரு பெரிய நன்மையாக நாம் நினைக்கமுடியாது. எப்படியும் இந்த சில்லரை திருத்தங்களால் இந்த மசோதாவின் விஷமத்தன்மை குறைந்துவிட்டதாக தார்மிகர்கள் ஸந்தோஷிக்க மாட்டார்கள். பிறப்பினால் ஜாதிபேதமென்ற ஸநாதநதர்மக் கொள்கையை இந்த மசோதா தகர்ப்பதாயிருக்கிறது. இது ஒரு பெரிய மதப்புரட்சியாகும். அதிகார பலத்தாலும், பலாத்காரத்தினாலும் இதை நிறைவேற்ற முற்பட்டிருக்கிறார்கள். தீண்டாமை காரணமாக ஒருவனை விலக்கக்கூடாதென்று கோர்ட்கள் தீர்ப்புக் கூறும்படி செய்யப்பட்டிருப்பதும் மிகுந்த அபாயமாகும். இந்த மசோதா காங்கிரஸ் ஆக்ஷியில் நிறைவேறிவிடுமாயினும் இதைவிட நீதிவரம்புமீறிய மசோதா ஒன்று கிடையாதென்பதை நாம் மறப்பதிற்கில்லை.



## திருவாங்கூரில் தொல்லை அதிகரிக்கிறது.

திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திற்கு தெய்வ சாபமேற்பட்டு விட்டதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது. ஆலயப்பிரவேச விளம்பரத்தினால் ஜனங்கள் மனதைக் கவர்ந்து கொண்டு இஷ்டப்படி ஆடலாமென்று கவர்ன்மெண்ட் நினைத்தது. சீர்திருத்தப் பேர்வழிகளும் ஆலயப்பிரவேச விளம்பரத்திற்கு துதிபாடி அதன் மூலம் சிறகச்சிறுக தங்கள் வேலையை ஆரம்பிக்கலாமென்று கனவு கண்டனர். இப்போது இருவருக்கும் திட்டமாகப் பெருத்தசச்சரவு ஏற்பட்டுவிட்டது. இதன் மூலம் அந் தேசத்தில் அமைதி மறைந்து அங்கு ராஜிய அமளிகளைப்பப்பட்டுவிட்டது. இதனால் சர்க்கார் மிருக்த சிரமத்திற்கு ஆளாகி வருகிறது.

காந்தி சிஷ்யர்களெனச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ்வாதிகள் ஹிம்ஸையில் இறங்கிவிட்டதாக கவர்ன்மெண்டார் கூறுகிறார்கள். காங்கிரஸ் வாதிகளோவென்றால்,கவன்மெண்டார் பலாத்காரமான அடக்குமுறையில் இறங்கிவிட்டதாகத் திருப்பிக் கூறுகிறார்கள். சிலதினங்களுக்கு முன் தலை நகரிலேயே பெருத்த ராஜியக் குழப்பம் நேர்ந்தது, இதில் பெரும்பாலும் மாணவர்கள் ஸம்பந்தப்பட்டு ஸர்க்காருக்கு விரோதமாக ஆர்ப்பாட்டம் செய்தனர். சட்டஸபை மெம்பர்கள்மீதும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்மீதும், கல்லும், மண்ணும் வாரி இறைக்கப்பட்டது ஆபாஸ வார்த்தைகள் பேசப்பட்டன. அஹிம்ஸாவாதிகளென்று பறையடித்துக் கொள்ளும் காந்தி சிஷ்யர்கள் இவ்வாறு ஹிம்சையில் இறங்கியிருப்பதை ஸர்க்கார் எப்படியாவது அடக்கிவிட நிச்சயித்திருக்கிறார்கள். சட்டஸபையில் திவான் பேசுகையில் காங்கிரஸ் வாதிகள் தீவ்ரமான ராஜத்வேஷத்தில் இறங்கிவிட்டதாயும், அரசாக்ஷியைக் கவிழ்க்க முற்பட்டிருப்பதாயும், ஆகலால் ஸர்க்கார் இதை அடக்கத் தீர்மானித்திருப்பதாயும் சொல்லிவிட்டார். பொறுப்பாக்ஷி வழங்கவேண்டுமென்ற தீர்மானத்தையும் திவான் நிராகரித்துவிட்டார். இப்போதுள்ள சின்னத்தில் அங்கு திவானுக்கு எதிராகப் பெரிய கிளர்ச்சி நடக்குமெனத் தெரிகிறது. அவரும் காங்கிரஸை அடக்க உறுதிகொண்டிருக்கிறார். ஆயினும் திவான் ஏமார்ந்துவிட்டார். தெய்வத்திற்கு வஞ்சனை செய்து அவர் ஆலயப்பிரவேசமூலம் ராஜிய நிலைமையை தமக்கு அநுகூலமாக திருப்பிக்கொள்ள பார்த்தது கனவாக முடிந்துவிட்டது. இவருக்கு ஆப்தர்களாக நடித்த காங்கிரஸ்காரர்களே இப்போது இவருக்கு பிரபல சத்துருவாகிவிட்டார்கள். அந்தோ! பரிதாபம்!!

### பஞ்சமர்களுள் அடிதடி.

#### மதமாற்றம் காரணம்.

நாமக்கல் தாலூகாவிலுள்ள ஏழூர் என்ற கிராமத்தில் சுமார் 40 குடும்பங்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். குடும்பத்திற்குள்ளேயே சிலர் மதம் மாறாமல் ஹிந்துமதத்தினராகவே இருந்துவருகின்றனர். இதனால் இருதாப்பினருக்கும் அடிக்கடி ஸமூக பகிஷ்காரம் காரணமாக பலத்த சண்டை நடக்கிறது.

### மத்யமாகாண பிரதமமந்திரி ராஜிநாமா செய்தார்.

மத்யமாகாண காங்கிரஸ் மந்திரிகளுள் ஏற்பட்ட தகராறு காரணமாக முதன் மந்திரி கனம் காரே தமது பதவியை ராஜிநாமா செய்து கவர்னருக்கு அறிவித்துவிட்டார்.

## விவாஹ வைபவமும் வித்வத்ஸபையும்.

### சென்னையில் நடந்த விபரம்.

தர்ம ரக்ஷாமணி பிரம்மஸ்ரீ கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்களின் ஜ்யேஷ்டபுத்ரியான சௌபாக்யவதி யாலக்ஷ்மிக்கும் சிரஞ்சீவி ராமரத்தினத்திற்கும் சென்ற ஜூலை 6ல சென்னையில் விவாஹ வைபவம் மிக்க விசேஷ வைபவத்துடன் நடந்த காலத்தில் ஸ்ரீமான் பாலசுப்பிரமணிய அய்யர் அவர்களின் விசேஷ அழைப்பின் பேரில் பிரபல வித்வான்கள் அநேகர் விஜயம் செய்த காலத்தில் ஸ்ரீமான் பாலசுப்பிரமணியய்யர் அவர்கள் ஸம்ஸ்கிருதத்தில் சிறிய பிரஸங்கம் செய்து பிரபல பண்டிதர்களை ஆனந்த சாகரத்தில் மூழ்கச்செய்தனர். அவருடைய இனிமையான வடமொழியானது மகா கவி காளிதாஸருடைய வழியைப்பின் பற்றியது.

அக்காலத்தில் பிரசங்கபானு ஸ்ரீ சேங்காலிபுரம் வைத்தியநாத சாஸ்திரிகள் கம்பீர மொழியில் ஸத் காவ்யம் என்ற விஷயத்தை பிரசங்கம் செய்த காலத்தில் காவ்யத்தில் வேதாந்த சாஸ்த்ரம் கர்ம மார்க்கம் ஞான மார்க்கம் ராஜநீதி முதலிய ஸநாதன தர்மங்கள் அடங்கியிருக்கிறதென்றும் அந்த ஸபையை காவ்ய மீமாம்சை செய்து கிரந்தத்தில் பெரிய நகரங்களில் ஸ்தாபித்து சகல ஆஸ்திகர்களையும் வரவழைத்து பண்டிதர்கள் மூலமாய் யக்ஞம் செய்யும் காலத்திலும் விவாஹம் செய்யும் காலத்திலும் பிரசாரம் செய்யவேண்டியது அவசியமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் அவ்விதம் ஷை ஸபையை முதன் முதலாக காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தன்குமாரி சௌபாக்யவதி பாலத்தம்மாள் கல்யாண காலத்தில் பூர்ணமாக நடைபெற்றிருக்கிறதென்றும் அதை அனுசரித்தே ஸ்ரீமான் பாலசுப்பிரமண்ய அய்யர் அவர்கள் மிகவும் சிறப்பாக வித்வத் ஸபையை நடத்தினாரென்றும் பண்டிதர்கள் வெகு அழகாய் பிரசங்கம்செய்தார்களென்றும் பண்டிதர்களுக்கு ரூ1000 வரையில் அப்படியே சன்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதென்றும் தலைமை வகித்த ப்ரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய குப்புசாமி சாஸ்திரிகளவர்கள் முடிவுரையில் நன்கு உபன்யஸித்தாரென்றும் ஷை கல்யாணத்தில் ஏராளமாக அன்ன போஜனங்கள் அளிக்கப்பட்டதென்றும் ஷை கல்யாணத்தில் விஜயம் செய்த எல்லா ஆஸ்திகர்களையும் பண்டித மணிகளையும் மாது சிரோமணிகளையும் சங்கீத வித்வான்களையும் மற்றுமுள்ள அனைவர்களையும் அவரவர்களுக்குத்தகுந்த உபசாரத்துடன் மரியாதை செய்யும் விஷயத்தில் மிகவும் தேர்ச்சியடையப் பெற்றவரும் ஷை கல்யாணத்தில் ஒவ்வொரு பாகத்தையும் தான் நேரிலேயே கவனித்து வந்தவரான R சந்திரசேகரய்யர் அவர்களுடைய அளவில்லாத குணங்களையாரும் புகழ்வது பிரசித்தமென்றும் Right Honourble ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள், பிரதம மந்திரி ராஜகோபாலாசாரியார், எஸ் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸத்யமூர்த்தி முதலியவர்கள் ஷை சந்திரசேகரய்யரை மிகவும் பாராட்டினது குறிப்பிடத்தக்கதென்றும் சாஸ்திரியார் பேசினர்.

கே. வி. சாஸ்திரி,

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## மஹாமஹோபாத்யாருக்கு உபசரிப்பு.

குடந்தையில், மிகப்பிரஸித்தரான பண்டிதர் பிரம்மஸ்ரீ ...நரஸிம்மம். சாபே ராமசந்திராசாரியாருக்கு மஹாமஹோபாத்யாய பிருதம் கிடைத்ததைப் பாராட்ட இவ்வூர் வெங்கிடராயர் அக்ரஹாரம் ஸ்ரீ. உ. வே. மஹாமஹோபாத்யாய பெருக் வாழ்ந்தான் ரங்காசார் குமாரர் ஸ்ரீ, எம். ஆர். ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமிகளால் தமது கிரஹத்தில் சென்ற வாரம் ஒரு உபசரிப்பு நடத்திவைக்கப்பட்டது. ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாசாரியரின் அழைப்பின் மேல் இவ்வூரிலுள்ள பிரபல லௌகிக்கனவான்களும், பிரஸித்த பண்டிதர்களும் இதார்களுமாக திரிமதஸ்தர்களிலும் வெகு பேர் விஜயம் செய்திருந்தார்கள்,

பாஷா பாரததுரந்தர மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ. வே. ம. வீ. ராமானுஜாசாரியர் இந்த வைபவத்தில் தலைமை வஹித்தார். பிரம்ஸ்ரீ தமிழ் பண்டிதர். ஊ. சா. வெங்கடராமய்யரால் தமிழில் தெய்வ வணக்கப் பாசுரம் பாடப்பட்டபின், ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸாசாரியர் அழகிய ஸம்ஸ்கிருத நடையில் ஓர் உபசாரபத்திரம்படித்து அதைத் தமிழிலும் விவரித்துக்கூறி வேத கோஷத்திற்கிடையில் பிரம்ஸ்ரீ ஆசாரியரிடம் அதை ஸமர்ப்பித்தார் இருவருக்கும் மாலை சூட்டப்பட்டது. தலைவர் பேசுகையில், பிரம்மஸ்ரீ ஆச்சாரியருடைய சிறந்த படிப்பு, முதிர்ந்த ஞானம், உயர்ந்த புராண பிரவசனசக்தி இவைகளை வர்ணித்து தமிழ் மஹா பாரதமொழிபெயர்ப்புக்குத் தர்ம அவரிடம் பெற்ற பேருபகாரத்தையும் விவரித்தார்.

பிறகு பிரம்மஸ்ரீகளான ராமானுஜதாதாசாரியர் ஆங்கரை ரங்கஸாமி சாஸ்திரிகள். எம் கே வைத்யநாதய்யர் வியாஸராய சாஸ்திரிகள் ராமராவ், பூவராஹாசாரியர் முதலிய பலர் ஸ்ரீ ஆச்சாரியரைப் பாராட்டிப் பேசினார்கள்.

பிரம்மஸ்ரீ ஆசாரியர் பதிலளிக்கையில், பெருகவாழ்ந்தான் ஸ்வாமி கிரஹத்தில் இந்த உபசாரம் தமக்கு நடத்திவைக்கப்பட்டதை தர்ம விசேஷமாக நினைப்பதாயும், இவ்வளவு பிரீதி வைத்திருப்பதற்காக யாவரிடமும் நன்றிசெலுத்துவதாயும் கூறினர்.

பிறகு ஸபையில், சந்தனதாம்பூலாதிகள் வழங்கபபட்டு ஸ்ரீ உ. வே ஸ்ரீநிவாஸாசாரிய ஸ்வாமியால் எல்லோரும் உபசாரவார்த்தை சொல்லப்பட்டு ஸபை பூர்த்தியாகியது.

நமதுநிருபர்

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றம் பதிப்பு)
பிராம்மணர்ளின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.

## ஆலயப்பிரவேச மசோதாக் கண்டனம்

பாதூர்.

தென்னாற்காடு ஜில்லாவைச்சேர்ந்த உளூந்தூர் பேட்டை ஸ்டேஷன் அருகாமையிலுள்ள பாதூர் கிரும வாசிகள் சென்னை சட்டஸபையில் ராவ்பஹதூர் எம். ஸி. ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதாவைக்கண்டனம் செய்து பொதுக்கூட்டம்கூட்டி அந்த மசோதாக்கள் சாஸ்திரீக விரோதமானவைகளென்று கனம் பிரதம மந்திரிக்கும், மதருஸ் கவர்னருக்கும் கவர்னர் ஜெனரல் பிரபுவுக்கும், லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி அக்ராஸனாதிபதிக்கும் அநேகங் கையெழுத்தடங்கிய மஹஜர் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பரிக்கல்.

தென்னார்காடு ஜில்லாநரசிம்மஸ்வாமி க்ஷேத்திரமாகிய பரிக்கல் கிருமஜனங்கள் சென்னை சட்ட சபையில் ஆலோசனைக்கு வந்திருக்கும் Civic Disabilities Removal Bill B. Das amending bill to the Child marriage restraint act முதலிய சீர்திருத்தமசோதாவைப் பலமாகக்கண்டித்தும் கவர்மெண்டார் மத சம்பந்தமான காரியங்களில் பிரவேசிக்கக்கூடாதென்றும் சென்னை சட்ட சபையில் ஆலோசனையில் கொண்டு வரப்பட்ட எம். ஸி ராஜாவின் மசோதாக்களை சட்டமாக்காமலிருக்க வேண்டிய நிமித்தம் சென்னை பிரதம மந்திரி அவர்களைக்கோரியும் கவர்னர் கவர்னர் ஜெனரல் Legislative Assembly அக்ராஸனாதிபதி அவர்களுக்கும் மஹஜர் செய்திருப்பதாகத் தெரிகிறது.

சேந்தமங்கலம்.

தென்னார்காடுஜில்லா சேந்தமங்கலம் கிரும மஹா ஜனங்கள் ராவ்பகதூர் எம். ஸி ராஜாவால் கொண்டுவரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப்பிரவேச மசோதா அசாஸ்திரீயகமென்றும் கவர்மெண்டார் இம்மாதிரியான சட்டங்களை ஏற்படுத்தக் கூடாதென்று வைஸிராய் சென்னை பிரதம மந்திரி சென்னை கவர்னர் இவர்களுக்கு மனுச்செய்து கொண்டிருப்பதாகத்தெரிகிறது.

பண்ருட்டி.

தென்னாற்காடு ஜில்லா பண்ருட்டி என்கிற வியாபாரஸ்தலத்திலுள்ள ஜனங்கள் சென்னை ஸபையில் ராவ்பகதூர் எம். ஸி ராஜாவால் ப்ரேரேபிக்கப்பட்ட பஞ்சம ஆலயப்பிரவேச மசோதாவைசட்டமாகாமலிருக்கும்படி அனேகங் கையெழுத்தடங்கிய மஹஜர் கவர்னர் வைஸிராய் பிரதமமந்திரி இன்னும் பல உத்யோகஸ்தர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் மத சம்மந்தமான விஷயங்களில் தலையிடக்கூடாதென்றும் அநேகங் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்.

கள்ளப்புலியூர்.

கும்பகோணம் தாலுக்கா கள்ளப்புலியூர் கிரும வாசிகள் ராவ்பகதூர் M. C. ராஜாவால் சென்னை சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் பஞ்சம ஆலயப்பிரவேச மசோதாவை சட்டமாகாதிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளைத் தேடும்படி வேண்டிக்கொண்டு அந்தத்தொகுதியின் சட்டசபை பிரதிநிதி அவர்களுக்கும். அகில இந்தியா காங்கிரஸ் பிரஸிடெண்ட் அவர்களுக்கும் மேன்மை தங்கிய வர்னர் வைஸிருய் அவர்களுக்கும் மனுச்சய்து கொண்டிருக்கிறார்கள்.

தேவனூஞ்சேரி.

கும்பகோணம் தாலுக்கா தேவனூஞ்சேரி கிரும ஜனங்கள் ஆலயப்பிரவேச மசோதா பொது ஜன ஸமூஹ ஸௌகர்யத்தடை நிவாரண மசோதா, இந்தியா சட்டஸபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட பால்ய விவாஹ தடுப்பு திருத்தச்சட்டம் இவைகளை ஆக்ஷேபணைசெய்து பொதுஜனங்களால் மஹஜர்கள் சென்னை பிரதம மந்திரி மஹா கனம் பொருந்திய வைஸிருய் கவர்னர் இவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

தேன்னலூர்.

கும்பகோணம் தாலுக்கா தென்னலூர் கிரும வாசிகள் சென்னை சட்ட சபையில் மத விரோதமான ஆலயப்பிரவேச மசோதாவை சட்டமாகாமலிருக்கும்படிக்கு மஹஜர் மூலம் சென்னை பிரதம மந்திரி இந்தியா காங்கிரஸ் அக்கிராஸனாதிபதி சென்னை கவர்னர் வைஸிராய்,இவர்களுக்கு தெரிவித்திருக்கிறார்கள்.

மேலப்பாலையூர்.

நன்னிலம் தாலுக்காமேலப்பாலையூர் கிரும ஜனங்கள் சமீபத்தில் சென்னை சட்ட சபையில் ஆலோசனைக்கு கொண்டு வரப்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச மசோதா பில்களை பலமாகக்கண்டித்து அவைகளை சட்டமாகநிறைவேற்றக் கூடாதென்று சட்ட சபை பிரதிநிதிகளுக்கும், பிரதம மந்திரி கனம் கவர்னர் அவர்களுக்கும் மனுச்செய்து கொண்டிருப்பதாகத்தெரிகிறது.

ஜி, சங்கரநாராயண வாஜபேயர்.

### ஸ்ரீவில்லிபுத்தூர்.

#### ஆடி மகோத்ஸவம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் சன்னதி ஆடிப்பூர மகோத்ஸவம் 21-7-38 வியாழனன்று துவஜாரோஹணமாய் பத்து தினம் அதி விமர்சையாய்நடைபெறும். உத்ஸவசேவார்த்தியாய் வருவோர் யாவருக்கும்தேவஸ்தானத்தில் அதிவிமர்சையாக இரண்டுவேளையிலும் ததியாராதனம் (சாப்பாடு) நடைபெறும். காஞ்சி ப்ரதிவாதி பயங்கர ஸ்ரீஅண்ணங்கராசாரியரும் மற்றும் பலப்ரபல வித்வான்களும் ரஸமான உபந்நியாஸங்கள் செய்வரெனவும் பிரபல சங்கீத வித்வான் ஸ்ரீமான் அரியக்குடி ராமாநுஜய்யங்காரின் பாட்டுக்கச்சேரியும் மற்றும் பல ரஸமான சங்கீதக்கச்சேரிகளும் நடைபெறுமெனவும் தெரிகிறது.

/ ந-வி-நி

### ஆழ்வார் தேவஸ்தான டிரஸ்டி காலமானார்.

ஸ்ரீஆழ்வார்திருநகரி ஸ்ரீஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்துக்கு சமீபத்தில் டிரஸ்டியாய் நியமிக்கப்பட்டுள்ள பிரபல மிராசுதாரான ஸ்ரீமான் எல்-ஆர் தெய்வச்சிலை ஐயங்கார் சென்றவாரம் திடீரென மாணமடைந்தது வருந்தத்தக்கதாம். காலஞ்சென்ற ஸ்ரீமான் ஐயங்கார் இந்நகர் ஹிந்துஸ்கூல் நிர்வாஹக்கமிட்டி ப்ரஸிடெண்டாயிருந்ததுடன் ரூ 5000ம். ஸ்கூலுக்குநன்கொடையளித்தும் உதவியிருப்பதாய் தெரிகிறது. இவரது அநுதாபத்துக்கறிகுறியாக திங்களன்று ஸ்கூல் லீவு விடப்பட்டதாயும் தெரிகிறது.

ந.நி

### கல்கத்தா.

#### ஸ்ரீகோதண்ட ராம பஜனாலயம்.

இந்த பஜனாலயத்தை ஸ்தாபனம் செய்ய மிக்க ஊக்கமுடன் ச்ரத்தையெடுத்துக்கொண்டு, தனது (நெ 68/ 3 A, ஹரிஷ்முகர்ஜி ரோட்) கிரஹத்திலேயே, இதற்கு இடவசதியும் கொடுத்துதவியிருக்கும் பிரும்மஸ்ரீ கிட்டு சாஸ்திரிகளின் பார்யாள் சென்ற மே மீ 5-ந்தேதி இம்மண்ணுலகை விட்டு நீங்கினர். அன்னாரின் பிரிவால் தனக்கு ஏற்பட்டிருக்கும் மனத்தாங்கல் இருந்தபோதிலும், பிரும்மஸ்ரீ சாஸ்திரிகள், வெகு உத்ஸாகத்துடனேயே, வழக்கம்போல் சனிக்கிழமை பஜனைகளை நேற்றயதினம் திரும்பவும் ஆரம்பித்தார்.

அதசமயம், கிராமபோன்ரிகார்டுகளுக்காக பாட்டு கொடுப்பதற்கு, இவ்வூருக்கு வந்திருக்கும் ஏத்தாப்பூர் ராமண்ணா தனது இனிய கீதங்களால் பகவானின் நாமங்களைப்பாடி பக்தர்களனைவரையும் மகிழ்வித்தார், இனி வழக்கம் போல் சனிக்கிழமைகளிலும் பஜனைகள் நடைபெறும்.

ந. நி.

### ஸமஷ்டி திட்டம் திருத்தப்படுமா?

கவர்னர் ஜெனரலான லார்டு லின்லித்கோவின் லண்டன் விஜய காரணமாக இந்திய ஸமஷ்டி திட்டம் புதுமுறையில் திருத்தப்படுமென்று தெரிகிறது. ஸம்ஸ்தானங்களில் ஸ்வய ஆட்சி அளித்தும், ராணுவத்தில் மந்திரிகளின் அபிப்பிராயப்படி நடப்பதென்றும், இந்திய ராணுவச் செலவில் ஒரு பாகத்தை பிரிடிஷ் கவர்ன்மெண்ட் ஏற்பதென்றும் ஸமஷ்டியைத் திருத்துவார்களாம்.

### மத்யமாகாணமந்திரிகளுள் சண்டை

#### உத்யோக ஆசை.

மத்யமாகாண காங்கிரஸ் மந்திரிகளுள் இலாகா நிர்வாஹப் பிரிவினை விஷயமாகப் பெரிய தகாறு ஏற்பட்டு இரு மந்திரிகள் ராஜிநாமா செய்துவிட்டார்கள். காரியக் கமிட்டியும், ஸர்தாரும் இதில் புகுந்து ராஜி செய்து வைப்பார்கள். ராஜி ஏற்படாவிடில் எல்லா மந்திரிகளும் விலகி வேறு மந்திரி ஸபை ஏற்படக் கூடும்.

### விக்ரஹங்கள் கிடைத்தன.

#### முஸ்லீம்களின் பிடிவாதம்.

பாட்னாவில் தியானவனம் என்ற ஊரில் முஸ்லீம்களின் மயானத்தில் குழி வெட்டும்போது சில விஷ்ணு விக்ரஹங்கள் கிடைத்தன. ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து தர்சனம் செய்கின்றனர். புராதனச் சின்ன கமிட்டியார் இந்த விக்ரஹங்களை வசப்படுத்த முயன்றனர். ஆனால் ஜனங்கள் கொடுக்க மறுத்துவிட்டனர்.

விக்ரஹம் கிடைத்தவிடத்தை இன்னும் விஸ்தாரமாகத் தோண்டி பரிசோதித்துப் பார்த்து அங்கு கோவிலோ, வேறு கட்டடமோ இருக்கிறதாவென்று ஹிந்துக்கள் கவனிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் மஹம்மதியர்கள் இந்த முயற்சியை எதிர்க்கிறார்களாம்.

### திருவாங்கூரில் ஜவாப்தாரி ஆக்ஷி.

#### அவஸரப் பிரேரணை நிராகரிப்பு.

திருவாங்கூர்சட்டஸபையில் ஒருகாங்க்ரஸ் மெம்பர், உடனே ஜவாப்தாரி ஆக்ஷி ஏற்படவேண்டுமென்று ஓர் அவஸரப் பிரேரணை கொண்டுவந்தார். ஆனால் திவான் ஸர். ஸி. பி. இந்த பிரேரணையை நிராகரித்துவிட்டார்.



## My recent Travancore tour.

(*by Rao Sahib N. Natesa Iyer, B.A., B.L., Advocate, Madura.*)

Months back, in emphatic repudiation of the charge of muzzling and smothering public opinion in Travancore against the Temple-entry Proclamation, openly laid against him, the present Dewan of Travancore threw out a bold challenge, inviting with characteristic suavity, the people outside, to visit the State temples and to contradict, if they can, his pronouncements on the matter. I took up the challenge in June last and made an extensive tour in the State, paid surprise visits to more than a dozen temples including Kanya Kumari, Sucheendram, Thiruvettar, Ananthasayanam Attingal, Janardhanam, Quilon, Hari Pad, and Ambalapizha and interviewed nearly 50 gentlemen of all castes, grades and stations in life and made a study of the situation certainly not less deep than what has been made by the persons and parties which preceded me. I am formulating the result of my observations, investigations and interviews in the shape of a few propositions with some explanatory notes.

I wish to make one preliminary observation at the outset. An eminent British publicist wrote a few days back that Mr. Chamberlain the British Premier is a "sanctimonious and shuffling humbug" whose attitude towards the European tangle "is an insult to honesty intelligence and truth" and whose repeated declarations on the subject are "nauseating exculpatory nonsense." The language, strong as it is evoked from the Premier no resentment, no rebuke no retaliation and no repression On the other hand there is a perceptible climbing down as the result of this criticism. This is certainly as it should be. I crave a similar treatment and indulgence for this report of mine. It will be remembered that there are times when written words, equally with spoken words have to be frank, brutally frank. A strong timely criticism and reprimand in respect of the doings of our public men at the top is bound to clip their wings, disable them from soaring into forbidden heights and make them shrink into human proportions instead of assuming the God, nodding the head and shaking the spheres. A melancholy feature of public life in India is the virtual absence of this steadying and restraining influence. No doubt, now and then and here and there, a feeble voice is raised by an individual or two spasmodically but it is either not heard or drowned in the overwhelming noise of the opponents with the result that the offenders get more and more emboldened into making utterances and doing acts which they would not have otherwise dared to make or do. It is because of this circumstance, Dewans and Ministers are making headway in hatching and carrying out in rapid succession, in the teeth of opposition known to them to be genuine and strong several pet schemes of theirs with the main if not the only idea of leaping into name and fame at a bound. The lamentable Temple-entry Proclamations in Travancore and Indore the enactment of the Temple Entry Legislation in Bombay, the launching in Madras of the Temple-Entry Bill and Untouchability Removal Bill (Cleverly christened as Civil Disabilities Removal Bill) the enactment of the woeful Agriculturists Debts Relief Law furnish striking instances. The Sarda Act and the Jayakar Act give an outline of good precious ground irretrievably lost in the past in this way. It is again in this way radical innovations like foreign travels, post-puberty marriages, Pratiloma marriages, marriage-taxes co-education in High Schools and Colleges, inter-dining etc; which only 20 or 25 years ago had been looked upon and condemned as religious and social convulsions and tremors and would have made the flesh creep, are not only losing their horrors but are being hugged closely and proclaimed as holy renaissances. As if this is not enough, high caste girls, wives, and matrons are blossoming into professional musicians dancers and filmstars. To crown all these, a full mouthed campaign for taxing marriages has started. Has any realized its implications? Is it not a barefaced attempt to bury the institution of marriage, to exile sex-purity, to legalize promiscuous unmarried intercourse to break up family life and to prepare the ground for planting socialism and communalism in India and driving religion away. The latest in this field is the report of the birth of a Society in the Nizam's Dominions a membership whereof grants to wives free charters to cease to be wives by merely notifying their intention to their husbands and walking out of their homes. We have also the blood-curdling Divorce Bill of. Mr Desmukh-the successor of the now forgotton Bill of the valiant knight Sir Harry Singh Gour. All this happens in a land where chastity is valued as the brightest jewel of a woman, where wives are looked upon as Samragnis and women who are not wives are respected as daughters sisters and mothers where husbands are adored as Gods and men who are not husbands are looked upon as sons, brothers or fathers. Has any one asked himself who the offenders are. The answer is writ large in capital letters and in crimson. It is mostly the handful of self-constituted leaders at the top who by reason of their being participies crimines directly or indirectly are interested in smothering all opposition and who by reason of their soul-killing wealth seductive official position and the tyranny of power are able to paint black as white and white as black and easily carry every thing before them. Had only a sufficient number of men of character and will-albeit only village Hampdens - then and there presented a united front and unceasingly repeated their attacks, these outrages on Religion and Society would have been nipped in the bud and would not have grown into their present cataclysmic dimensions.

**I Proposition:—**

The Temple Entry Proclamation of Travancore is not a free act of the Maharaja. It is no more voluntary than the abdication of the British throne by King Edward VIII. There is considerable support for the view of the loyal Travancorean that left to himself, His Highness will gladly recall the Proclamation, perform Samprokshanam at a heavy cost and restore the polluted temples to their original sanctity. Segregate the queen mother and the Dewan from the Maharaja for a while and see what follows.

**Note:—** The idea of throwing open the temples to the Panchamas was first conceived by the queen mother and the present Dewan while he was constitutional Advisor. Two successive Dewans refused to accept the false theory adumbrated in support of it by Sir C. P. Ramaswami Iyer and the queen mother Viz., that the rapid conversion of the Panchamas into Christians and Muslims can be checked and stopped only by throwing open the temples to them. On the other hand the two Dewans convincingly pointed out that danger can be averted only by improving the economic condition of the Panchamas and refused sternly to be inveighed into Temple entry muddle. Just at this juncture Sir C. P. Ramaswami Aiyer ousted his Muslim predecessor before his time and became the Dewan *de jure as well as de fact.* The young Maharaja bravely withstood the combined forces for a time but ultimately succumbed under the stress of circumstances dark sad and painful to narrate. The irressistible appeal of a dominating mother united to the dexterous strategy of a talented Dewan would have prostrated and paralysed even a mind and body more mature and more stern. Terrible visions of Travancore turning into a Christian or Muhamaden state were conjured up in lurid colors in cloistered seclusion. The abdication of the British throne by king Edward VIII with all its frightful implications was skilfully woven into the plot. Dazed and stupified and scared beyond his wits by this spectre which continued to haunt him day in and day out the palpitating Maharaja began to lean and totter. The report goes that in an unescapable moment after midnight of the day before the issue of the Proclamation, the Maharaja signed the fateful paper in tears which are still furrowing his cheeks. Neither the sham hallelujas theatricals rejoicings, festivities or Statue resolutions floated in and outside the sleepy Hollow nor the Jaya pilgrimage have so far been able to restore to his mind, eyes and limbs the peace, the sleep and the health which have taken eternal leave of him. May the Almighty Padmanabha immanent in pillar and straw and stone and grass save his Dasa from the impending dissolution.

**II Proposition:—** There is not a shred of truth in the bold statement flashed in the press and on platform that the Prajas of the Maha Raja, the State Officials the temple servants and even pilgrims from outside are perpetually bathing in the new ocean of joy which the Proclamation has dug out for them without the expenditure of a single Chakram that they are rendering willing and unquestioning obedience to it and that the officiating Pothis Mel Santis and keel Santhis are welcoming the Panchamas with parental affection and solicitude and personally garlanding them and presenting Prasadams. The submission of the people to the Proclamation so much boasted in the papers is as willing and unquestioning as the submission of the British Indian subjects to the Acts of Sarda, Navalrai and Das. The false and dual life the people are living is simply appalling and agonizing. Grant an amnesty and take a plebescite not of the Hitlerian brand as the rape of Austria nor of the gandhian brand in re the Guruvayur temple entry but of the type taken in re the Coronation of Sree Ramachandra and you will find how every one of the Prajas, Officials and temple servants, male and female young and old, literate and illiterate the very Panchamas for whom the step was ostensibly taken all these detest and abhor the Proclamation in their heart of harts and shed silent tears over the Proclamation within the four walls of their houses and send forth pitiless prayers to Heaven for its repeal unobserved by the C. I. D. while under the official gaze they proclaim with a fanfare of trumpets that it is an act of kingly wisdom and foresight unparalleled in the history of Travancore. Better still, pay nocturnal visits like Caliph Hasoun Alraschid in disguise disarm all suspicions and hear what the unsophisticate people say on the matter. You will be simply stunned by the intensity and volume of feeling with which they pour out their invectives against the queen mother and the Dewan whom they hold primarily responsible for the vandalism and helplessly fret and frown and chafe at the Proclamation like horses at chimmel bits. *Not one Pothi offers any Prasadam* to the Panchamas. It is the body of persons known as Sevakas a regular Counterfeit who minister to the Panchamas and Present Prasadams. A tiny

(Continued on Page 8.)

(Continued from Page 7.)

spark is all that is needed to make the smouldering discontent burst into a destructive flame.

**III Proposition**:— In spite of full-mouthed protestations to the contrary, the temples stand in empty rayless majesty reduced to the level of museums, ancient monuments or haunted castles in the Scotch Highlands and bereft of all pretensions at being centres of divine inspiration, with an attendance reduced to a tiny fraction of the original number notwithstanding huge artificial respirations administered periodically in various shapes. There is considerable support for the view that the persons *Who visit temples for genuine worship and with full knowledge of the effects* of the proclamation are virtually nil.

The few Panchamas who in the first flush of excitement were instigated to enter the templs have virtually ceased to attend inspite of the fillips of Mr. Ganthi, Mr. C. R. Chary and spectacular Jathas. The few caste Hindus who attend, consist of officials in harness or drawing pensions or having large pecuniary and proprietary interests at stake within the State, who dare not disobey the secret circulars of compulsory attendance or incur the displeasure of the authorities above.

*NOTE (I)*:— The persons who enter the temples now range themselves under 6 natural heads.

(a) those Hindus who enter out of sheer curiosity in spite of positive disbelief in their religious and spiritual efficacy.

(b) those Hindus who enter with no belief in their efficacy but solely in furtherance of the social and political programme of their party which is determined at all costs to maintain the numerical strength of Hindu India by all possible means religious and irreligious including re-conversion removal of untouchability, inter-dining, inter-marriage etc.

(c) those Hindus who enter without any belief or disbelief but simply for enjoying their beauties sculptural and architectural.

(d) those Hindus who enter ostensibly for worship but really under official compulsion with full knowledge that divinity has departed from the idols.

(e) those Hindus who enter for genuine worship in ignorance of the proclamation but come out scandalized after knowing that taey stand polluted.

(f) those non-Hindus who are permitted to become Hindus and who enter with indirect motives knowing that they have not become and cannot become Hindus.

*NOTE* (2):— The Ezhavas for whose sole benefit the proclamation was originally intended resent it, for the wider scope that has subsequently been given to it and such of them as are reported to have made huge sacrifices in money for securing the privilege are reluctant to worship alongside of the Panchamas. It looks as though the pentup storm is likely to burst forth in all its fury in the near future.

NOTE 3:— The process of readmission of converts into the Hindufold is infuriating the Christian missionaries and Muslims. They apprehend danger more from this move than from the Temple-entry Proclamation which they with every reason consider to be a mere brutem fulmen.

NOTE 4:— The State officials and temple servants that continue to cling to their posts do so not because they are enamoured of the Proclamation but because starvation and ruin would otherwise stare them full in the face. Many have bravely abandoned their place and among them may be mentioned the mamool holy Pushpanjali Swamigal who has abdicated as protest against the Proclamation.

NOTE 5:— Not one Panchama was visible in any of the 12 temples during my my visit. It was reported to me that an Ezhuva Sub Registrar with his peon in livery visited the Thiruvettar temple a short time before I visited it.

*IV Proposition*:— There is much force in the observation that by virtue of the defilement of the temples by the Panchamas the Sannidhyam has departed from the idols agreeably to the declarations to that effect contained in the Agamas.

NOTE 1:— I have to remark with regret that not a single idol in any of the 12 temples I visited evoked in me any religious fervour now. Formerly Kanya Kumari goddess was felt by me as if she was about to speak to me while standing before her. No such feeling arose in me this time. This may be considered by other as a treacherous acrobatism of the mind. There was a similar absence of this kind of feeling in the presence of the temples in Janardhanam, Trivandrum and Ambala Pizha.

*V Proposition*— The emphatic denial of the State authorities that protest meetings are banned, that free speech is gagged, that every third man in the street is a potential C.I.D. is opposed to facts, The vigilance of the C.I.D. is phenomenal. People talk in whispers and corners and in the dark and after much circumspection while referring to the Proclamation.

NOTE 1:— I happened to take with me quite casually an official of the State during my visit to the Trivandrum temple. I came out of the temple within an hour and I was informed later on that I was snapped along with the official at the entrance and an explanation was called for from the official.

NOTE 2:— I had a similar experience of the close watch by the C. I. D. when I happened to visit another friend. This was within an hour of the visit.


**Srimad Bhagavatham.**

Condensed, translated, illustrated by T. R Kanapathiramier, Advocate.

Glaze paper Bound Price Rs. 2—0—0

Ordinary and Bound PriceRs. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிருமய்யாவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.

கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0

சாதாரண பேபர் ரூ. 1—8—0

7,8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8 அணா

1. G. Subramaniam &Co.,
Sri Bhagavatham Publishing House,
Tinnevelly Jn.

Arya Dharmam Office, Kumbakonam


### ஓர் பெரியாரின் தேகவியோகம்.

நிகழும் வெகுதான்ய ஸூ ஆனிமீ 23உ பிரதோஷ காலத்தில் ஏகாதசியில்காணுடுகாத்தான் பெரியகோவில் நிர்வர்கியும் தீவ்ர ஸனுதனியும் சிவோத்கர்ஷப்ரவசன தீரரும் சிவபூஜா துரந்தருமான ஸ்ரீ ருமசுப்பா சாஸ்திரிகள் என்ற பெரியார் தனது 78வது வயதில் தனது இல்லத்தில் பாஞ்சபவுதிக தேகத்தை விட்டு பரகதியடைந்தார். நித்யகர்மா நுஷ்டானபரும் ஏகாந்த குருபக்தியுள்ளவருமான இவரது தேகவியோகம் வைதிக உலகத்திற்கு ஒரு நஷ்டமேயாம். ஷையார் குமாரர்களான K. R விசுவநாத சாஸ்திரிகள் முதலானவர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

டி. கே சுந்தரம்.

### ஸ்ரீ சங்கரானந்தஸ்வாமிகளின் வியாஸபூஜா மஹோத்ஸவம்.

நாளது வருஷம் ஆனிமீ 28உ திருநெல்வேலி ஜில்லா, கருங்குளம் கிராமத்தில் சித்தமல்லி ஸ்ரீ ப்ரும்மானந்த ஸ்வாமிகள் அநுக்ரஹத்தின் பேரில், ஸ்ரீசங்கரானந்த ஸ்வாமிகள் எவ்வளவு அசக்தியிருந்தும் ச்ரமத்தைப்பாராட்டாமல், கிராமத்தாருடைய சகாயத்தின் பேரில் சாதுர்மாஸ்யத்தை நடத்திக்கொண்டார்கள். கிராமத்தார்கள் பக்தி சிரத்தையுடன் நடத்தி வைத்து, பிராம்மண ஸந்தர்ப்பணையும் செய்து வைத்தார்கள்.

(கருங்குளம்கிருஷ்ண சாஸ்திரிகள் குமாரன்)
கி. வெங்கடாஜல சாஸ்திரிகள்.

### நடியாடில் சாதுர்மாஸ்ய பூஜை.

ஜகத்குரு ஸ்ரீபூரி சங்கராசாரியர் ஸ்வாமிகள்

கோவர்தன பீடாதிபதீச்வர ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ பூரி சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் இவ்வருஷத்து சாதுர்மாஸ்ய பூஜையை, பம்பாய் மாகாணம், கெயிரா டிஸ்டிரிக் நடியாட் (Nadiad) என்கிற ஊரில் செய்கிறார்கள். சாதுர்மாஸ்ய தினத்தன்று மிகவும்வைபவமாக பூஜை நடந்தது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்ரீ ஆசார்யாளின் தர்சனத்திற்காக வந்திருந்தார்கள்.

ஒரு நிருபர்.

### பேருதவி.

ராஜமன்னார்குடியில் கல்யாணத்திற்குவந்த ஓர் கனவான் கடவுளை தரிசிக்க ஆலயஞ்சென்று திரும்பி வந்தார். வரும் வழியில் அவரது விலை உயர்ந்த வெண்பட்டு தவறி விட்டது. தேடியும் காணவில்லை. கடவுள் கொடுப்பாரென்று உறுதியுடன் ஊர் சென்றார். மாலை அவ்வூர் நேஷனல் ஆரம்பக் கல்லூரியில் ஓர் நோடீஸ் போர்டில், ஓர்வெண்பட்டு கிடைத்திருக்கிறது உடையவர் தக்க ஆதாரத்துடன் ருஜு செய்து பெறலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கே சென்று பார்த்தும் அது எங்களது என்பதை நன்கு அறிந்து கொண்டு உடனே எங்களிடம் தலைவர் திருப்பிக்கொடுத்து உதவினர். கல்யாண காக்ஷிக்கு வந்த எல்லோரும் அப்பெரியோரை வாழ்த்தினர். பரோபகாரிநீடூழி வாழ்க. பட்டு உடையவருக்கு அனுப்பப்பட்டது. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

நேரில் கண்டவன்.



### இராமாயண இலக்ஷ்யார்த்தத்திலுள்ள இன்பப் பொருள்கள்.

[காக்கழனி கிருஷ்ணமூர்த்தி]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பத்மாசுரன் வஞ்சகமாய் வரம் பெற்றான். அந்த வரப்பிரசாதத்தால் அவனே மாண்டான். ஹிரண்யகசிபும் தனக்கு மநுஷ்யனாலும், மிருகத்தாலும், பகலிலும், இரவிலும், மரணமில்லாமலிருக்க வரம் பெற்றான். அவ்வரப்பிரசாதத்தால் அவனே உலகிற்கு தெய்வமாகிவிட நினைத்தான். அப்பவும் பகவான் தானளித்த வரத்தின்வரம்புகடவாது நீதியுடன் மனுஷியனுய்வாரமலும் மிருகமாய்வாரமலும், நாசிம்மமூர்த்தியாய்த் தோன்றினார். பகலுமில்லாத இரவுமில்லாத சந்தியா காலத்தில், பிரஹ்லாதனைக்காப்பாற்ற வேணுமென்ற வியாஜத்தை வைத்து சம்ஹரித்தார். மஹாபுத்திமானுன ஹிரண்யகசிபுக்கு தான் வரம் கேட்கும் பொழுது நாசிம்மஸ்வரூபமும், சாயங்கால வேளையும் தனக்குச்சத்துருவாகுமென்பதை ஊகிக்க முடிந்ததா? அதேபோல், வாலி வதத்திலும் பகவான் தானளித்த வரப்பிரசாதத்திற்கு விரோதமில்லாமலே வாலியை வதம் செய்தார். வாலியினுல் வரம்கேட்கப்பட்டபொழுது "தன் எதிரில் வரும் சத்துருவின் பலத்தில தான் பாதி அடையவேணும்" என்று கேட்டானேயொழிய தன்னெதிரில் வாரமல் மறைந்திருந்து தன்னைக்கொன்றால் என்ன செய்வதென்ற சந்தேகமே வாலிக்குத் தோன்றவில்லை. அந்த தவறுதல் யாருடையது? தவிர, வாலிக்கு வரமளித்த பகவான் வாலிக்குச் சத்துருவுமன்று. அப்படி சத்துருவாயின் காகாசுரனை விரட்டிய புல் ஒன்றே வாலியையும் விரட்டி வைகுந்தம் சேர்க்கப்போதுமானது. வாலிவதமோ சுக்கிரீவனை உத்தேசித்து நிகழ்ந்ததான வியாஜமுடையது. இதிலிருந்து நாமறிந்து கொள்ளவேண்டியது யாதெனில், ஈசுவரனிடமிருந்து தபஸினால் வரம்பெறும் அற்ப சக்தியையுடைய கிஞ்சித்ஞர்களாகிய ஜீவர்களின் சாமர்த்தியாதி சம்பத்துக்களைக் காட்டிலும், அஜ்ஜீவர்களுக்கு தனது கருணையினால் வரம்தரும் சர்வ சக்தியுள்ள சர்வக்ஞராகிய ஈசுவரனின் சாமர்த்தியாதி சம்பத்துக்கள் மேம்பட்டவை என்பதே நாமறிந்து கொள்ளவேண்டியது.

இவ்விதமுள்ள சர்வக்ஞனின் சகல கல்யாணகுணங்களையும் விவேகமுள்ள ஜீவர்களறிந்து, தன்னை வழிபட்டு, அசாச்வதமான பலன்களைக் கோராமல், சாச்வத ஆனந்த பிராப்தியைப் பெற்று, கிருதார்த்தர்களாக வேணுமென்ற கருணையே பகவானுக்கிருந்ததால், அதை வாலிவதம் மூலியம் உலகமறியக் காட்டினாரே யொழிய வேறல்ல.

விவகாரரீதியாய்ப் பார்த்தாலும், ஸ்ரீ சீதாதேவியை இராவணன் கிஷ்கிந்தா நகர மூலியம் தூக்கிச் செல்லும்பொழுது, ராவணனைத் தடுக்க வாலிக்கு சக்தியிருந்தும், அவ்விதம் செய்யாமல், அலக்ஷியமாயிருந்ததால், கிஷ்கிந்தைக்கு அரசனுன அவன், ராஜநீதியை அறிந்து, தன்னுடைய தர்மத்தைச் செய்வதில் தவறினவனானான். தர்மம் தவறும் சிற்றரசர்களைத் தண்டிக்க பாத்யமுள்ள சக்கிரவர்த்தியின் திருக்குமாரனுன ஸ்ரீராமன் வாலியைத்தண்டித்தது சரியேயாகும். தவிர, இனி இராம இராவண யுத்தம் நேருமென்பது நிச்சயமாதலால், அந்த இராவணனுக்கு பக்கபலமாக வரக்கூடிய அவனுடைய நண்பனான வாலியை முந்திக் கொன்றது இராவண யுத்தத்தின் ஒரு அம்சமான யுத்த தர்மமே யொழிய அதர்மமாகாது. இராவணனைக் காட்டிலும் எவ்வளவோ பங்கு பலவானுன வாலியை, தன் ஒரே பாணத்தால் கொன்று, தன் ஸைன்யங்களுக்கு உற்சாக மூட்டியதும், யுத்த தர்மமேயொழிய வேறல்ல. வாலியைச் சாமான்யமான மிருகம்போல் பாவித்தாலும், மிருகத்தை வேட்டையாடும் வேந்தர்களுக்கு, மறைவில் நின்று கொன்றதால் குற்றமேதுமில்லை. இவ்விதமே ஒவ்வொன்றுக்கு முள்ள காரணங்களை ஊஹித்தறிய வேண்டியது உசிதமேயொழிய, இராமனிடம் குற்றத்தைக் கல்பிப்பதுகொஞ்சமும் பொருந்தாது. இவ்விதமுள்ள பல தர்மங்கள் இராமாயணத்தில் நிரம்பியிருக்கிறது.

ஸ்ரீ ராமர் தனக்குக்கிடைத்த இராஜ்ஜியாதிபத்தியத்தை விட்டு விட்டு, தான்காட்டுக்குச் சென்றதை கவனிக்குமிடத்து தர்மத்தைவிட அர்த்தம் அல்பமானதென்று அறிவிக்கப்படுகிறது.

காமமும் நியாமன்றியிலும் கிரமத்தப்பாயும்இருக்கக்கூடாதென்பதை கைகேயினிடம் தசரதர் கொண்ட காமத்தால், தன் ஜேஷ்ட புத்திரனை காட்டுக்கனுப்பி புத்திரசோகமடைந்தது ஞாபகமூட்டுகிறது. பொதுவாய், யாரும் ஸ்திரீகளின் அநுராகத்தில் சிக்கி அவதிப்படுவது பிசகென்பதை ஸ்ரீராமன் சீதை வார்த்தைக்காக மான் பின் சென்று அதினால் தன் பத்தினியையிழந்துபல கஷ்டமடைந்தது எடுத்துக்காட்டுகிறது. பரஸ்திரீ போக ஆசையால் தன் சகோதரனின் மனைவியை அபஹரித்த வாலி மாண்டதையும், சீதாதேவியை தூக்கிச்சென்ற இராவணன் குலத்தோடழிந்ததையும் கவனிக்குமிடத்து, பிறன் மனைவியிழைவால் வரும் விபரீதங்கள் வெளியாகிறது. இவ்விதம் காமஸ்வரூபத்தின் கணக்கற்ற தீங்குகள் இராமாயணத்தில் நிதர்சிக்கப்படுகிறது.

யுத்தத்தில் நாகாஸ்திரம், பிரும்மாஸ்திரம் இவைகளால் ஸ்ரீராம லக்ஷ்மணர்களே கட்டுப்பட்டதையும்,சீதையைவிட்டுப்பிரிந்து துக்கப்பட்டதையும், வண்ணான் சொல்லால் வந்த அபவாதத்திற்கு, முன்னமேயே சீதை ரிஷி பத்னிகளைப்பார்க்க ஆவல் கொண்டிருந்த வியாஜத்தை வைத்து, கெர்ப்பிணியை காட்டுக்கனுப்பியதையும், கவனிக்கும் பொழுது மஹான்களுக்கே கஷ்டம் தரும். இச்சம்சார துக்கத்தை விரும்பாமல் வைராக்யமடைவது உசிதம் என்று விவேகிகளுக்கு தோன்றக்கூடியதே தவிர, அவதார புருஷனுன ஸ்ரீராமனுக்கே பிறர் புகழும்படி குடும்பம் நடத்த சாமர்த்தியமில்லையென்றேற்படும் பொழுது, அற்பத்னமுடைய ஜீவர்கள் எத்தகையவாழ்வை விரும்பி குடும்பம் நடத்துவது என்பதை ஊஹித்துக்கொள்ள வேண்டியதே. இவ்விதமிருந்தும், இச்சம்சார தாபத்தில் பற்றற்று வைராக்யமடையாமல், இதிலேயே சதா உழன்று கொண்டிருப்பது பற்றி நமது அறியாமையை நன்கு விளக்குகிறது. ஆகையால் நாம் குடும்பத்துக்கே உழைத்து குறைபடுவதெல்லாம் பதரைக்குத்தி பலனடைவதொக்கும் என்பது இதன் கருத்து.

இராமாயணம் வேதமேயென முன்னமே குறிப்பிடப்பட்டது. அதினால் வேதத்தின் அந்தரங்க தாத்பர்யமான மோக்ஷ வழியை போதிப்பதே இராமாயணத்தின் இலக்ஷியமாகுமென்பதை யாரும் நிராக்ஷேபனையாய் ஒப்புக்கொள்ளல் வேண்டும். மோக்ஷசாதனக் கிரமத்தில் கல்மஷமனதுடைய இக்கலிகால மாந்தர்களுக்கு பக்தி மார்க்கமே சுலபசாதனமாம்என்று சொல்லப்பட்டிருப்பதால் இராமாயணத்திலும் பக்திமார்க்கம் வெகுதெளிவாய் போதிக்கப்பட்டிருக்கிறது. அதிலும், கஷ்டசாத்யமான நிர்க்குண பக்தியைக்காட்டிலும் சுலபசாத்யமான சகுண பக்தியே சிலாக்யமாகையால்,

"ச்ரவணம் கீர்த்தனஞ்சைவ ஸ்மரணம் பாதசேவனம். அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்ய மாத்ம நிவேதனம்" எனப்படும் நவவித சகுண பக்தியும் இராமாயணத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

### ஸ்ரீமத் இராமாயண உபந்நியாஸ வைபவம்.

சேலம் ஜில்லா ஆத்தூர் தாலூகா ஏத்தாப்பூர் அக்கிரஹாரத்தில் ஸ்ரீ ஸர்வதோமுக மகாயாகசாலையில் சுமார் 20 வாரங்களாக ஸ்ரீமத் இராமயண உபந்நியாஸம் பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர் அவர்களால், பிரம்மஸ்ரீ நாராயணவாஜபேயர் அவர்கள் முன்னிலையில். எல்லா வர்ணபரம ஆஸ்திகர்களும் நன்கு பரவசமாகும்படி பிரசங்கிக்கப்பட்டு 5-7-38உ செவ்வாய்க்கிழமை இரவு பட்டாபிஷேக வைபவம் மிகவும் திருப்திகரமாக நடைபெற்றது. மறுநாள் புதன்கிழமை காலை பலஸ்ருதியும் சந்தர்ப்பணையும் செய்யப்பட்டு இவ்வூர் மகா ஜனங்களாலும் மற்றும் சுற்றுவட்ட கிரும வாஸிகளாலும் புராணிகருக்கு நன்கு பஹுமானிக்கப்பட்டு இராமாயணப்ரசங்க வைபவம் இனிது முற்றுப்பெற்றது. இவ்வுபந்நியாஸத்திற்கு நாஸ்திகர்கள்கூட வந்திருந்து விடாமல் ச்ரவணம் செய்தது கவனிக்கத்தக்கது. இதற்குகாரணபூதர்களாயிருந்து நடத்திக்கொடுத்த பரம ஆஸ்திகர்களான மகா-ள-ள-ஸ்ரீ தண்டபாணி அய்யர், லட்சுமண அய்யர்,கர்ணம் சுப்பராம அய்யர் அவர்களும் மிகவும் பிரயாசைப்பட்டார்கள். சுற்றுக்கிருமத்திய ஆஸ்திகர்களின் போதரவும் மிகவும் சிலாகிக்கத்தகுந்தது. பிரசங்க மத்தியில் சேலம் ரிடையர்டு ஜில்லா ஜட்ஜ் மகா-ள-ள-ஸ்ரீ சுந்தரமய்யர் அவர்களால் பிரம்மஸ்ரீ வாஜபேயர் அவர்களையும் தீட்சிதர்வாள் அவர்களையும் சேலம் ஜில்லாவிலேயே வசிக்கும்படியும் ஷையார்களையும், இன்னும் பிரம்மஸ்ரீ தீக்ஷிதர்வாள் அவர்களின் தம்பி நாராயண தீக்ஷிதர் அவர்களையும் இஜ் ஜில்லா ஸநாதனப்ராசாரம் செய்யும்படிகோரி எழுதிய கடிதம் வாஸிக்கப்பட்டு எல்லா ஆஸ்திகர்களாலும் ஏகோபித்து ஆதரவளிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ தீட்சிதர்கள் அவர்களது ஸநாதன ப்ரசாரத்தின் பலனாக ஸ்ரீமத் இராமாயண, பஞ்சாக்ஷர, சூர்ய நமஸ்கார உபதேசங்கள் சில ஆஸ்திகர்களுக்கு செய்விக்கப்பட்டது. வர்ணாச்ரம சுவராஜ்ய ஸங்கத்தின் சேலம் கிளைச்சங்கத்தின் ஆதரவில் பிரம்மஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்கள் பிரம்மஸ்ரீநாராயண வாஜபேயர் அவர்கள் முன்னிலையில் சிறு குழந்தைகளுக்கு ஸம்ஸ்கிருதம் அப்யாஸிக்கும் படிக்கு ஓர் பாடசாலை நேற்று ஸர்வதோமுகமகாயாகசாலையில் அபிஜித் முகூர்த்தத்தில் பிரம்மஸ்ரீ அப்புவாத்தியார் என்கிற கோபால கிருஷ்ணய்யர் அவர்களை உபாத்தியாயராக நியமனம் செய்து ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர்கள் கடவுள் ஸ்தோத்ரங்களும் அமரபாடத்தில் சில பகுதிகளும் பாடம் சொன்னார்கள்.

கூடிய சீக்கிரம் இவ்வூர் வஸிஷ்ட நதிக்கரையில் ஓர் ஆஸ்ரமம் ஆரம்பிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விஷயமாக பிரம்மஸ்ரீ அனந்தராமதீக்ஷிதர்வாள் பிரம்மவித்துக்களான ஸ்ரீசிவப்ரகாசஆனந்தகிரிஸ்வாமிகள் அவர்களிடம் கடிதப்போக்கு வரத்து மூலம் இந்த ஆச்ரமத்தை ஆரம்பித்து அநுக்ரஹிக்கும் படியாகக் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது. இந்த ஜில்லாவில் இது விஷயமாக எல்லோரும் அதிக ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

வி. ராமச்சந்திரய்யர், டீச்சர், ஏத்தாப்பூர்.

408


மா ர் ச ளி யே



சுவாஸப்பைகளில் கடமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





## வெளியூர்ச் செய்தி.

### ஸ்ரீ வைகுண்டம்.

புராண பிரவசனம்.

கும்பகோணம் பாகவதாசாரியர் என்கிற G. பூவராகாசார்யர் ஸ்ரீ வைகுண்டம் காரனேஷன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் V. ராமச்சந்திராயரவர்கள் B.A., அவர்கள் விருப்பப்படி 1½-மாதகாலமாய் ஸ்ரீவைகுண்டத்தில் (திருநெல்வேலி ஜில்லா) காலையில் ஸ்ரீ ஹரிவம்ச பாராயணமும் இரவில் ஷை கிரந்த பிரவசனமும் அத்துடன் ஸநாதன தர்ம பிரசாரமும் செய்துவந்து அவ்வூர் வாசிகளால் கௌரவிக்கப்பட்டு திரும்பிவரும் வழியில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அந்தணர்களால் வரவேற்கப்பட்டு அங்கு சில நாட்கள் ஸ்ரீ பாகவதத்தில் சில சரித்திரங்களை உபன்யாஸம் செய்தார். அது ஸமயம் ருக்மிணி கல்யாண கட்டத்தின்போது 30-6-38-ல் அவ்வூரில் த்ரிமதஸ்தர்களும் கூடிய வித்வத் ஸபையில் ஷை பாகவதாசாரியரின் பிரவசனத்தைப் புகழ்ந்து அந்நகர் வாஸியான கவிபூஷணம், சேத்தூர் ஸமஸ்தான வித்வான் ஸ்ரீமான் நரஸிம்மாசார்யர் அவர்களால் தமிழில் கவனம் செய்த பாசுரங்கள் அடங்கிய பத்திரத்தை ஸ்ரீ ஆச்சாரியாரிடம் ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ ஆசார்யர் தகுந்தபடி பதில் உபன்யாஸம் செய்த பிறகு சந்தன தாம்பூலம் வழங்கிய பிறகு வைபவம் இனிது நிறைவேறியது, என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

### மதருஸ்.

ஸ்ரீ உத்தராகல்யாண மகோத்ஸவம்.

பழைய மாம்பலம் வஸந்தமண்டபத்தில், உடையாளூர் ப்ரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகளால் சென்ற 6-3-38 முதல் நடத்தப்பட்டு வந்த ஸ்ரீமகாபாரத உபன்யாசத்தில், 10-7-38 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஸ்ரீஉத்தராகல்யாண உபன்யாஸம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீ ராமாயணப்பட்டாபிஷேகம்:— அதே இரவு சைதாப்பேட்டை பெருமாள் கோவில் சந்நதியில் சென்ற 23-1-38 முதல் ப்ரும்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகளாலேயே நடத்தப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தின் ஸ்ரீராமசந்திர பட்டாபிஷேக உபன்யாஸமும்" வெகுவிமர்சையாக உபன்யாஸிக்கப்பட்டது. ஆஸ்திகர்கள் யாவரும் விஜயம் செய்து தகுந்த ஸன்மானங்களால் சாஸ்திரிகளை கௌரவித்ததுடன், அவரது வாக்சாதுர்யத்தையும் வெகுவாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள். ந. நி.

### திருநாட்டியத்தாங்குடி.

கும்பாபிஷேகம்.

ரயில்வேஸ்டேஷனுக்கு 1 மைல் தென்கிழக்கிலுள்ள ஈஞ்சல் என்கிற உமாமகேஸ்வரபுரம் கிராமத்தில் ஸ்ரீபாதாளேஸ்வரஸ்வாமி ஸ்ரீமங்களாம்பாள் மற்றும் சகல பரிவாவாரமுள்ள சிவாலயம் மிகுந்த ஜீர்ணதிசையில் இருந்து வந்தும் ஸ்ரீமங்களாம்பிகையின் ஆலயம் ஜீர்ணமாகப் போய்விட்டதால்ஷை ஸ்ரீமங்களாம்பாளை சிவாலய தென்பாகத்தில் பாலாலயம் செய்துவைத்து சுமார் 38 முப்பத்தி எட்டு வருஷகாலமாகிறது. ஈஸ்வர ஞூ பங்குனி மாதத்தில் ஈஞ்சல் அக்கிரகாரவாஸிகளாகிய ஷை மிருசு வக்கீல் A. P. கிருஷ்ணஸாமியய்யர் சில பேர்களால் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஜெகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய ஸ்வாமிகளவர்களின் பூர்ணானுக்கிரகம் பெறவும் பி ர ய த் த ன ம் எடுத்துப்பார்த்து திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடைபெறவும் ஏதாகிலும் கிருமத்துக்கு சாபம் ஏற்பட்டிருந்தாலும் அவை நிவர்த்திசெய்துகொடுக்கும்படி கேட்டுக்கொண்ட பிரகாரம் கோதாவரி முகாமில் இருந்து அனுக்கிரகப்ரஸாதமும் ஓர்திவ்விய ஸ்ரீமுகமும் கிராமத்தார்கள் பெற்றகால்முதல் பகுதான்ய ஞூ சித்திரை மாதத்தில் சிவதிருப்பணி செய்வதில் மிகவும் க்யாதியும் திறமை வாய்ந்த திருவாரூர் சுப்பையா கொத்தனை வரவழைத்து ஒப்படைப்பு செய்தும் தனம் எந்தவிதமாகத்தான் சேர்ந்தது என்று புலப்படாமல் ஈஞ்சல் மிருசு சாம்பசிவய்யர் மனதில் பூர்ணப்பிரவேசங்கொண்டு மனஞ்சோராமல் தீவிரமுயற்சியால் நாளது பகுதானிய ஞூ ஆனி மீ 20வ ஸிம்ம லெக்கினத்தில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் மிகவும் மங்களகரமாக நடைபெற்றது. மகாபிஷேகம் நடந்தது. மண்டலாபிஷேகம் லெக்ஷார்ச்சனையும் நடந்துவரவும் ஆரம்பம் செய்யப்பட்டது சுபம்.

ஸ்ரீமடம் சிஷ்யன் V. S. ருமச்சந்திரய்யன்.

### வைதிக தர்ம ஸங்கம் தமிழ் தேசம். தர்மப்ரசார வித்யாலயம்.

பணையூர், செங்கல்பட்டு ஜில்லா.

இப்பாரத பூமியில் நம்மக்கள் யாவரும், நாள்தோறும் தைவ நம்பிக்கை தர்ம நம்பிக்கைமுதலானதுகள் குன்றிவருவதால் பலவாறு வருந்துகின்றனர். நம் தேசத்திற்குப் பொருந்தாத பல கார்யங்களும் அதனால் விளையும் துன்பங்களும் புதிது புதிதான பல வியாதிகளும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. நமது ஸமூஹம் பல வழியில் அபிப்ராய பேதத்தால் ஒற்றுமையின்றி சீரழிந்துவிட்டது. நம்முன்னோர்கள் எந்நிலையிலும் எக்காலத்திலும், தர்மத்தைக் கைவிடாது ரக்ஷித்து வந்தார்கள். அதனால் ஒருவருக்கொருவர் விரோதமேற்படாமல் ஸுகமாக வாழ்ந்து வந்தனர். அவ்விதம் நாம் ஸமூகமாக வாழவேண்டுமானால் தர்மத்தை ரக்ஷிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆகையால் தர்மங்களை நன்ருய் அறிந்து, உணர்ந்து அனுஷ்டித்துப்ரசாரம் செய்வதின்பொருட்டு, நாளது பஹுதான்ய-ஞூ ஆடி-மீ 1வ முதல் செங்கல்பட்டு ஜில்லா பாலாற்றங்கரையிலுள்ள பணையூர் என்ற கிராமத்திற்கடுத்த தபோவனாச்ரமத்தில் 20-மாணவர்களுக்கு வித்யாப்யாஸம் செய்து வைக்கப்படும். ஆகையால் வைதிக தர்ம பிரசாரத்தில் ஈடுபட ஆவலுள்ள ப்ரும்மசாரிகள் ஆவணி-மீ 25உ-க்குள் கீழ்க்கண்ட விலாஸத்திற்கெழுதி விபரங்கள் தெரிந்துக்கொண்டு சேர்ந்து கொள்ளலாம்.

வித்யார்த்திகளுக்கு, குறைந்தது ஒரு வருஷமாவது தர்மசாஸ்திரம் ஸதாசாரம் அனுஷ்டான ப்ரவசன முறைகள் முதலியவைகளைப்பற்றிப் பயிற்சி அளிக்கப்படும்.

ஸ்வானுஷ்டானத்துடன் பயிற்சி பெற்றவர்கள் ஸங்கத்தின் சார்பில் குறிப்பிட்ட இடங்களில் குறைந்தது மூன்று வருஷமாவது, தர்ம ப்ரசாரம் செய்ய நியமிக்கப்படுவார்கள்.

ஸம்ஸ்கிருதத்தை எடுத்துக்கொண்ட S. S. L. C. படித்த மாணவர்கள் 11-பேர்கள் வேண்டும். பூர்ணமாக அல்லது உபயுக்தமாக அத்யயனம் செய்து காவ்யஞானமுள்ள ப்ரும்மசாரிகள் பத்துபேர்கள் வேண்டும்.

பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு ஆகார வஸதியுடன் மாதம் ரூ. 10. உபகாரச் சம்பளம் அளிக்கப்படும்.

ப்ரசார காலத்தில் யோக்யதைக்கு தக்கபடி ஸம்மானம் அளிக்கப்படும்.

எழுதவேண்டிய விலாஸம்,
N. ராமனாத அய்யர், B.A., M.L.,
நகர ஸங்கம் குலகபணி, செங்கல்பட்டு.


### ஸ்ரீ ஸ்தவம்.

மூலம் நாகரத்திலும்தமிழிலும்
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணா 0—4—0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram

407

[illegible]

4
23

ரூ
30

28—7—1938

215242

215242

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 30 JUL 1938 MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ்யश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| 4<br>23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஸு ஆடி-மீ 13உ 1938ஸு ஜூலை-மீ 28உ | ஸ<br>30 |

## திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாடசாலை, திருவிசலூர், தஞ்சாவூர் ஜில்லா.

(31—3—1938 தேதியோடு முடிந்த வருஷத்து கணக்குத் திட்டம் Balance Sheet.)

| | ரூ. | அ. | ப. | | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருப்பு:— | | | | ஆஸ்தி:— | | | | | | |
| பொது மூலதனம் சென்ற வருஷத்திய ஸ்டேட்மெண்டுப்படி மொத்தம் .... | 37,770 | 8 | 9 | பாடசாலைக் கட்டடம் .... | | | | 2,500 | 0 | 0 |
| | | | | சென்ற வருஷக் கணக்குப்படி புஸ்தகசாலை புஸ்தகங்கள் .... | 227 | 11 | 3 | | | |
| | | | | இந்த வருஷத்திய கூடுதல் .... | 5 | 0 | 0 | 232 | 11 | 3 |
| | | | | சென்ற வருஷக் கணக்குப்படி சமையல் பாத்திரங்கள், கருவிகள் முதலிய .... | 321 | 10 | 0 | | | |
| | | | | உடைந்தும் பழுதானதால் குறைந்த மதிப்பு ... | 4 | 9 | 0 | 317 | 1 | 0 |
| | | | | சென்ற வருஷக் கணக்குப்படி தட்டுமுட்டு சாமான் | | | | 240 | 8 | 0 |
| | | | | வருஷ முடிவில் கைவசமிருந்த நெல் பொருமானம் .... | | | | 10 | 12 | 0 |
| | | | | வரவேண்டிய கடன்கள்:- முதல் .... | 25,300 | 0 | 0 | | | |
| | | | | ,, ,, வட்டி .... | 1,381 | 12 | 3 | 26,681 | 12 | 3 |
| | | | | சர்க்கார் கடன் பத்திரங்கள் (ரூ. 500 விலையுள்ளது) .... | | | | 4,900 | 0 | 0 |
| | | | | கையிருப்புதனம்:— | | | | | | |
| | | | | மதராஸ் Provincial Co-operative Bankல் .... | 2,210 | 15 | 10 | | | |
| | | | | ரொக்கம் .... | 3 | 4 | 11 | | | |
| | | | | பாடசாலை பிரதம பண்டிதர் அவர்களிடம் .... | 1 | 14 | 2 | 2,216 | 2 | 11 |
| | | | | சென்ற வருஷத்திய ஸ்டேட்மெண்டின்படி அதிகச் சிலவு .... | 663 | 8 | 4 | | | |
| | | | | நடப்பு வருஷத்தின் அதிகசிலவு .... | 8 | 1 | 0 | 671 | 9 | 4 |
| ஆக மொத்தம் .... | 37,770 | 8 | 9 | ஆக மொத்தம் .... | | | | 37,770 | 8 | 9 |

ஆடிட்டர் ரிபோர்ட்டு:—1938ஸு மார்ச்சு-மீ 31உ யோடு முடிந்த வருஷத்திய திருவிசலூர் நீலகண்ட சாஸ்திரிகள் ஸம்ஸ்கிருத பாடசாலை கணக்குகளையும் அந்தக் காலத்தைப்பற்றிய ஆஸ்தி, பொருப்பு ஸ்டேட்மெண்டையும் அவை சம்பந்தமான கணக்குப் புஸ்தகங்களுடன் வவுச்சர்களுடனும் ஒத்துப்பார்த்து பரிசோதனை செய்தேனென்றும் என்னுடைய அபிப்பிராயத்தில் மேலே காட்டிய ஆஸ்தி, பொருப்பு ஸ்டேட்மெண்டானது ஷை பாடசாலையின் ஸ்திதியைப்பற்றி கணக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களின் படிக்கும், ஸமாதானங்களின்படிக்கும் பாடசாலையின் புஸ்தகங்களின்படிக்கும் உண்மையானதும் சரியானதுமான நோக்கத்தைத் தெரிவிக்கிறதென்றும் சர்டிபை செய்கிறேன்.

நெ. 317, தம்புசெட்டித்தெரு, மதராஸ், 14—5—1938.

(ஒப்பம்) K. R. சுப்பிரமணிய பிள்ளை, A. L. A. A.
Certified Accountant and Auditor.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

## "கல்ப சூத்திரங்கள்."

(பிரும்மஸ்ரீ தர்மராஜ கனபாடிகள், வேதபாடசாலை, திருக்கோகர்ணம்.)

மேற் குறித்த சூத்திரங்களின் காலம் இஃதெனத் துணிதல் கூடாதாயினும் கூடிய வரை காணலாம் என நம்பி முயற்சித்தோம். பாருங்கள்! இதில் புகுந்தால் எவர் மனதும் ஒருவாறு மயங்கும். இங்குண்டாகும் மயக்க மறத்துணிந்தோதுவது அசாத்யம் ஆயினும் ஒருவாறு சிந்திப்போம்.

"ஸ்ரீகீதாசாஸ்திரத்தில் விசுவரூபம் முதலிய பலயோகங்களடங்கிய யோகசாஸ்திரத்தைக் கண்ணன் சூர்யனுக்குபதேசித்ததாகச்சொல்ல, அர்ச்சுனன் நேற்றுப்பிறந்த நீவிர் எவ்விதம் சூர்யனுக்குபதேசித்தீர் என வின்வ, யான் அனேக ஜன்மமெடுத்தேனுதலால் அவைகளை முறையே அறிவேன் என்று விடையளிக்கப்பட்டது. பிறகு விபூதியத்தியாயத்தில்" மாஸங்களில் மார்கழி மாஸம்" என்ற சொல் ஒன்றுண்டு. இதனால் கீதை முதலில் வெளிவந்த காலம் அனேகவாயிர வருடங்கண்டதாய் வடநாட்டுக் கணிதபண்டிதர் ஒருவர் சொல்லுகிறார். அவர் சொல்லும் வழி ஆதியில் வருஷத்தொடக்கம் மார்கழி மீ"த்திலிருந்தது. அதி வருஷத்திற்கு ஒரு விகலை வீதம் கணக்கில் ஏறிவா இப்போது சித்திரைக்கு வந்தது. வருஷம் ஒருவிகலையாக மூன்று மாஸங்கள் ஆகவேண்டுமானால் காலத்தை அளந்து பார்க்க (19440000)வருஷங்கள் ஆகிறது.

இதற்கு வேறு காரணமும் உண்டு. எங்ஙனம் எனில், வடமொழில் மார்கழி மாஸத்திற்கு ஆக்ரஹாயனம் என்று பெயர். அதாவது, வருடத்திற்கு முதல் மாதம் என்பது பொருள். (அக்ரம்—முதல்— ஹாயனம்—வருடம்) ஆயின் வடமொழி வழக்குத்தொடர்ந்த தேதி முதல் இவ்வழக்குள்ளதாக ஏற்படுகின்றது. இதனாலும் வருடத்திற்கு ஒருக்கால் மார்கழி மாஸமாய் இருந்ததாக நிச்சயிக்கப்படுகிறது. இப்பொழுது சித்திரை மாஸமாக இருத்தலால் ஸம்பவிக்கக் கூடிய வித்யாஸத்தில் நான்கில் ஒரு பங்கு கடந்ததாகக் கணக்கிட்டறியலாம். ஆயின் நடக்கும் மன்வந்திரத்தில் நான்கில் ஒரு பங்கு இப்பொழுது முடிந்திருக்குமேயானால், அது எத்தனையோ வருடங்களாகின்றன. அத்தனை வருடங்களுக்குக் கீழ் கீதாசாஸ்திரம் உண்டானதாக ஏற்படுகின்றது. அதிற் கண்டதுபோல ஸ்ரீமத் ஹிரண்ய கேசிய மகரிஷி எழுதிய சூத்திரத்திலும் வருஷ முதலில் செய்யவேண்டிய ஓர் கிரியை மார்கழி மாஸத்தில் செய்யக் குறிப்பிடப்பட்டது. இதனை உற்றுநோக்கில் கீதையைப்போல் இதுவும் அநாதிகாலத்திற் றோன்றியதாகப் புலப்படுகின்றது.

மேற்கண்ட ஹிரண்யகேசியர் என்னும் ஸத்யாஷாட மகரிஷியும் ஆபஸ்தம்ப மகரிஷியும் ஒரேகாலத்திலிருந்தவர்கள் என்பது மட்டும் அவ்விருவர்கள் ஸூத்திரங்களால் வெளியாகின்றது. ஆபஸ்தம்ப முனிவரியற்றிய ஸூத்திரத்தில் "ஹிரண்யகேசியர்" இவ்வாறு கூறுவர் என்றும், இங்ஙனம் 'ஸத்யாஷாடர் கூற்றெ'ன்றும், சில விடத்துத் சத்யாஷாட மகரிஷியினது பெயரை எடுத்தோதுவதும், ஹிரண்யகேசிய கிருஹ்யத்தில் வேதோத்ஸர்க்கப் பிரகரணத்தில் ஸூத்திரகாரரென ஆபஸ்த்தம்ப மகரிஷியைக் குறித்தலும் மேற்கண்ட விஷயத்திற்குப் போதிய சான்றாகும். ஆபஸ்த்தம்பர் தாமெழுதிய சூத்திரத்தில் ஸ்ரீ போதாயன ஸத்யாஷாட மகரிஷிகளின் பெயர்களைச் சில விடங்களிற் குறித்தாரேயன்றி மற்றைய விடங்களிற் குறிக்கப்படவில்லை. இனி போதாயன பகவான் தமது ஸூத்திரப் பிரும்ஹயக்ஞத்தில் போதாயன, சத்தியாஷாட, ஆபஸ்தம்ப யாக்ஞவல்கியர்களுக்குத் தர்ப்பணம் விதித்திருக்கின்றார். தத்தம் ஸூத்திரங்களில் தத்தமக்குத் தர்ப்பணம் விதித்திருப்பது உசிதமேயாயினும் யாக்ஞவல்கியர் பெயர் அதற்காகக் குறிப்பிடப்பட வில்லை என்பது திண்ணம். யாக்ஞவல்கிய மகரிஷியின் பெயரை அச்சூத்திரம் சுமார் 5000 வருஷங்களுக்கு உட்பட்டே உண்டாயிருக்கவேண்டுமென்று வெளிப்படுத்துகின்றது. யாக்ஞவல்கியர் பிறக்குங்காலத்தில் மகா நக்ஷத்திரத்தில் சப்தரிஷி மண்டலமிருந்ததாக வெளியாவதால் அதுகொண்டு கணக்கிட்டால் இதுவரை சுமார் 5000 வருடங்களுக்கு மேற்படுகிறது. அம் மகரிஷிக்குப் பிறகு செய்யப்பட்ட இச்சூத்திரம் வருடங்களைக்கண்டிருக்கலாமேயன்றி அதற்குமேல் இருந்திருக்க முடியாது. இங்கு குறித்த யாக்ஞவல்கியர் வெவ்வேறெனில் அதுவும் பொருந்தாது. ஏனெனில் வாஜஸநேயர் என்னும் சிறந்த பெயர் அவ்விரு விடங்களிலும் அடையாய் ஒலித்தலாலென்க. இதனால் சூத்திரங்கள் சமீபகாலத்தில் தோன்றியதெனப் புலப்படுகின்றது. தர்ம சாஸ்திரங்களில் தன் கிருஹ்யத்தில் கண்டதைச் செய்யவேண்டுமெனப் பற்பல விடங்களிற் காண்டலால் அந் நூல்களுக்கு முன் கிருஹ்ய ஸூத்திரம் இருந்ததாகத் தெரியவருகிறது.

இவ்விதக் குளறுபடையில் எமக்குத் தோன்றும் துணிபாவது:- கற்பஸூத்திரங்கள் வேதங்களாவதுபற்றி வியாகரணம் பதினான்கு ஸூத்திரங்களிலடங்கியதுபோல் ஆதியில் சூக்ஷ்மமாயிருந்து, ஆரணங்களை முற்றிலுமறிந்து அக்காலத்து அந்தணர்களுக்குப் பயன் கொடுக்கக்கூடியதாயிற்று என்றும், அச்சூத்திரங்களை அக்காலத்தில் விசித்துரைத்தவர்கள் ஆபஸ்தம்பமஹரிஷி என்றும், அவர்கள் சூத்திரத்தில் குறிப்பிடப்பட்ட யாக்ஞவல்கியர் என்பவர் சுக்லயஜூர் வேதவோர் சாகைக்குறியவரென்றும், அவரே மற்றொரு காலத்தில் யோக பலத்தால் ஜீவித்து, லோபமடைந்த சுக்லயஜூர் வேதத்தை மீண்டும் பரவச்செய்தார் என்பதும் பொருந்தும். அவ்விதம் கூறுவதே உசிதம். ஸ்ரீ கிருஷ்ணவம்சத்தவரும், குருவம்சத்தவரும், சூரியவம்சத்திலுதித்த ஸ்ரீராமசந்திரன் முதலிய அரசர்களும், ஸ்ரீராமதாஸ் கிராமணியாகிய ஹனுமானும் சுக்லயஜூர்வேதியென வெளியாகின்றது. திரேதாயுகத்திலவதரித்த ஸ்ரீராமசந்திரமூர்த்தியே சுக்லயஜூர் வேதத்தை யனுஷ்டித்தாரெனில் அவ்வேதத்தின் சாகைகளைக் கண்டவர்களாகிய கண்வர், யாக்ஞவல்கியர் மத்யந்தினர்,(வியாக்ரபாத மகரிஷியின்பிதா) இவர்களை இக்காலத்தவரெனக்கூறல் எவ்விதம் பொருந்தும்? வைசம்பாயன் முனிவரிடம் யாக்ஞவல்கியர் படித்ததாகவும், அங்கு அவர்க்கொரு சாபம் கிடைத்ததாகவும் தற்காலத்தவர் சொல்லும் ஓர் கதை அவ்வேதத்துவேஷத்தாற் கற்பிக்கப்பட்டதேயன்றி வேறொன்றுமில்லை. ஸூத்திரங்களை இயற்றிய போதாயனர், பாரத்வாஜர், காத்தியாயனர், ஆபஸ்தம்பர் ஆகிய இவர்கள் தர்ம சாஸ்திரங்களையும் செய்தருளினார்கள். ஆதலால் தர்ம சாஸ்திரங்களைப்போல, இக்கற்ப ஸூத்திரங்களும் அநாதிகளெனப் பெறப்பட்டது. அவைகளால் எமக்குண்டாகும் பயன்களாவன:—

வேதங்களில் ஆங்காங்கு பற்பல கன்மங்கள் விதிக்கப்படுகின்றன. ஒருவன் அவ்வேதங்களைக்கொண்டே முற்றிலும் எல்லா விஷயங்களையுமறிவது கடினம். அக்கன்ம வழிகளைச் சுருக்கிக்காட்டிய கிருஹ்ய ஸூத்திரங்கள் ஒவ்வொருவரையும் நல்வழியில் நடாத்தி இருமைப் பயனையும் பெறச்செய்யும். வேதங்களில் கன்மமோரிடம், அதன் காலமோரிடம், அதன் பயன் ஓரிடம், அதன் முறையோரிடமெனக் காணப்படுமாதலால், அவைகளை ஒருங்குசேர்த்து மீமாம்ஸா விதிகளால் அதனுட்கருத்தை அறிந்து ஒவ்வொருவரும் நடக்கவியலாது. இதில் சிரௌதம் என்றும், ஸ்மார்த்தம் என்றும் இருபகுதிகளுண்டு. சிரௌதமென்பது வேதங்களெடுத்து விரித்தோதிய யாகங்கள் முதலிய நற்கருமங்களை நடாத்தும் வழிகூறி நிற்பது. ஸ்மார்த்தமென்பது அவ்வவ் வருணங்களுக்குரிய உபநயனம் முதலிய கிரியைகளைக் கூறுவதுமன்றி வேதங்களில் குறிப்பாக வமைந்த பல கருமங்களையும் காட்டும். இவற்றுள் சிரௌதம் பெரியது. ஸ்மார்த்தம் சிறியது. யோகிகள் ஸாலம்ப யோகத்தைக்கொண்டு நிராலம்பத்தைப் பெறுவதேபோல் ஸ்மார்த்தானுஷ்டானத்தைக்கொண்டே சிரௌதானுஷ்டானத்தில் அதிகாரம் கிடைக்கும். ஸ்மார்த்த கர்மானுஷ்டானத்தால் ஸ்வர்க்க மோக்ஷங்களைக் கைக்கூடச் செய்யும். யாகாதி நற்கிரியைகளிலும் அதிகாரமுண்டாம். "அந்தணர் வேதம், யக்ஞம், தானம், தபம்,உபவாஸம் இவைகளால் பரம்பொருளையறிய விரும்புவாரென விருத்தலால், எக்கன்மங்களும் இக்கிருஹ்யமில்லாது கைகூடாதெனக் கண்டு கொள்க.

யஜுர் வேதத்தைச் சேர்ந்த ஸூத்திரங்கள் எல்லாம் யாகத்தில் அத்வர்யு பாகத்தைக் குறிக்கும். ஆசுவலாயினர் எழுதிய ஸூத்திரம் ஹோதாவின் தொழிலைக் குறிக்கும். திராஹ்யாயனருடையது ஔத்காத்திரத்தை மிக விரித்துச்சொல்லும். அதர்வண வேதத்தைச் சார்ந்த ஸூத்திரங்கள் சாந்திகளை விசேஷமாகக் குறிக்கும். ஒவ்வொரு பிராமணர்கள் செய்யவேண்டிய சகலக்கிரியைகளும் இக்கல்ப ஸூத்திரங்களுக்குள் தான் அடங்கி இருக்கின்றன. "ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களை அந்தணன் படிப்பான்" என விதி காணப்படுவதால் இவைகளைப் படித்தறிதல் அந்தணர்க்குக் கடமை. இச்சூத்திரங்களிலொன்றான போதாயன ஸூத்திரம் தேர்த்தச்சன் (இரதகாரகன்) எனவோர் ஜாதியாருக்கு உபநயனத்தை விதிக்கின்றது. அச்சாதியார் இக்காலத்தவர் எனவரையறுக்கப்பட்டாரிலர். தச்சன், கருமான் முதலிய தற்காலத்தவர் 'பகிஷ்கிருத சூத்திரர்கள்'என ஆசிரியர் பதஞ்சலியார், "சூத்திராணாமனிரவஸிதாநாம்" என்றற்றொடக்கத்தின் ஸூத்திரத்தில் விசாரித்தெழுதியிருக்கின்றார்.

பிரும்மவித்யா.

(தொடரும்.)

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பையிண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப்போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.



## உபாகர்ம விசாரம்.

(ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யம் ஸ்ரீவெங்கடராமசாரியர் ஸ்வாமி எழுதுகிறார்).

நிகழும் வெகுதான்ய-௵ ஆனி-௴ 28௳ யன்று ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸன்னிதியில் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் வெகு விமரிசையோடு நடந்தேறியது.

அக்காலத்தில் ஸ்ரீ உப. வே. புத்தங்கோட்டகம் வித்வான் ஸ்ரீனிவாஸாச்சார்ஸ்வாமி. ஸ்ரீ உப. வே. திருக்கோட்டியூர் வித்வான் ஸ்ரீராமதேசிகாச்சார்ஸ்வாமி முதலிய வித்வான்களால் ப்ரார்த்திக்கப்பட்டு ஸ்ரீஸன்னதியில் இவ்வருஷத்திய உபாகர்ம விசாரம் செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்ட விஷயம் பின்வருமாறு:-

நாளது வெகுதான்ய-௵ ஆடி-௴ 27-௳ (11—8—38)வரும் உபாகர்மத்தில் காயத்ரீ ஜபம் மறுதினத்தில் செய்வதா? அல்லது உபாகர்ம தினத்திலேயே செய்வதா? என்று ஸந்தேகம்!

ப்ரதமை மறுதினத்தில் இருப்பதாலும் "ஸந்திஸ்ஸங்கவத: பச்சாத் அர்வாங்மத்யந்தினாத்யதி" என்றபடி இல்லாமல் மத்யந்தினத்தில் ஸந்தியானதாலும், சில பஞ்சாங்கங்களில் முதல் தினமும் சிலதில் மறுதினமும் போடப்பட்டிருப்பதாலும் இஸ்ஸந்தேகம் ஏற்பட்டுளது.

இதில், இங்கு மத்யந்தினம் என்றிருந்தாலும் ஆவர்தனம் என்றிருந்தாலும் இரண்டு பதமும் பர்யாய பதமானதால் ஒரே அர்த்தத்தை குறிக்கிறது. மத்யந்தினத்திற்கு முன் காலத்தில், பர்வத்துக்கும் ப்ரதமைக்கும் ஸந்தி ஏற்பட்டால் உபாகர்ம தினத்திலேயே காயத்ரியையும் ஜபிக்க வேண்டும் என்று "ஸந்திஸ்ஸங்கவத:" என்னும் வசனத்திற்கு அர்த்தம் ஏற்படுவதால் இவ்வருஷம் மத்யந்திநத்திலேயே ஸந்தியானதால் வசனப்பிரகாரம் காயத்ரீ மறுதினந்தான் என்று ஏற்படுகிறது, என்று பூர்வபக்ஷம் செய்யப்பட்டது.

ஸமாதானம். முதலில் ஆவர்த்தன சப்தத்துக்கும், மத்யந்தின சப்தத்துக்கும் அர்த்த விசாரம் செய்வோம். ஸ்ரீ வைதிக ஸார்வபௌமர் (தோழப்பர்) ஸ்தாலீபாக நிர்ணயத்தில் "ரவிராவர்த்ததே யஸ்மாத்ததாவர்த்தனமிஷ்யதே." என்னும் வசநத்தை எடுத்து "ரவேராவர்த்தனம் த்வேதாவிபக்தஸ்ய மத்யந்தினஸ்ய அர்த்தம்........நஹிஷோடச கடிகா காலே தததி கேவா ரவிராவர்த்ததே." என்று விவரித்திருக்கிறார். சப்தகல்பத்ருமத்திலும் ஆவர்த்தனம் "ஸூர்யஸ்ய பச்சிமதிகவஸ்திதச் சாயா பூர்வதிக்கமனாரம்பகால:" என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அஹஸ்ஸின் ஸரிபாதி நாழிகையின் கடைசி க்ஷணம்தான் ஆவர்த்தன சப்தார்த்தம் என்று ஏற்படுகிறது. இங்கிருக்கும் மத்யந்தின சப்தமும் ஆவர்த்தன சப்தத்தின் பர்யாய பதம் ஆதலால் அப்படி இருக்கும் ஆவர்த்தனகாலத்துக்குமுன் இவ்வருஷம் ஸந்தியேற்பட்டிருப்பதால் நாளது ஆடி௴ 27 யன்றே காயத்ரீ ஜபமும் செய்யவேண்டியது.

இங்கு சிலர் "திதே: பரஸ்யா கடிகாச்சயாஸ்யு: ந்யூநாஸ்ததைவாப்யதிகாச்ச தாஸாம், அர்த்தம் விபஜ்யாத தநப்ரயோஜ்யஹ்ராஸோது வ்ருத்தௌ ப்ரதமேதினேஸ்யாத்" என்ற வசனப்படி ஸ்தாலீபாக ப்ரகாணத்தில் ஸந்தி நிச்சயம் செய்திருப்பதை இங்கு அதிதேசம் செய்து அந்த ரீதியான ஸந்தி ப்ரகாரத்துக்கு மறுதினம் காயத்ரீ ஜபம் செய்யவேண்டுமென்று பத்திரிகா மூலம் ப்ராசுரம் செய்திருக்கிறார்கள்.

"அத்ர ஸந்திபரிஜ்ஞானோ பாயமாஹ" என்கிற அவதாரிகையில் "அத்ர" என்பதற்கு "ப்ரேத்யவிஷ்டிரித்யேஷ பர்வத்வயவிநிர்ணய:" முதலான வசனங்களில் எடுக்கப்பட்ட இஷ்டிப் ப்ரகரணங்களில் ஸந்தி அறியும் வழியைச் சொல்லுகிறார் காத்யாயன மஹர்ஷி, என்று அர்த்த வர்ணனம் தான் ஸ்வரஸமாதலால் ஸர்வத்ர ப்ரதிபத் பர்வஸந்திகளுக்கு இதை உபஜீவிப்பதோ அதிதேசம் செய்வதோ ஸரியன்று, ஆவர்த்தன சப்தத்துக்கு மட்டிலும் அந்த ஸ்தாலீபாக ப்ரகரணத்தில் எழுதப்பட்டுளதை அநுஸரிப்பது நியாயமாகும்.

ஆதலால் இவ்வருஷத்தில் சில பஞ்சாங்கங்களில் போடப்பட்டிருக்கிறப் பிரகாரம் ஸுமார் $14\frac{3}{4}$-நாழிகைக்கு பர்வ ப்ரதிபத்ஸந்தியானதால் இந்த ஸந்தி அஹஸ்ஸின் ஸரிபாதியின் கடைசி க்ஷணமெனப்படும் ஆவர்த்தன காலத்துக்கு முந்தியதான ஸந்தி என்று ஏற்பட்டு விட்டபடியால் "ஸந்திஸ் ஸங்கவத: பச்சாத்" இத்யாதியான வசனப்படிக்கு ஆடி-௴ 27௳ ஒரே தினத்திலேயே உபாகர்மாவும் காயத்ரீ ஜபமும் செய்யவேண்டியது என்று ஸ்ரீஸன்னதியில் நிர்ணயிக்கப்பட்டது.

காலை 6-நாழிகைக்குள் "காமோகார்ஷீத்" ஜபம். பிறகு காயத்ரீ ஜபம். பிறகு அபரான்ஹத்தில் தர்பித்து அத்யயநாரம்பம் என்று இக்கிரமத்தில் செய்யவேண்டியது.

இதற்கு பதில் 5-வது பக்கத்தில் பார்க்க

## ஸாம வேதஉபாகர்ம.

இவ்வருஷம், ஸாமவேத உபாகர்மாவை புரட்டாசி மாதம் 8௳ சனிக்கிழமை அன்று தான் செய்யவேண்டும். அதேபிரகாரம் தான் நாங்கள் நடத்தப்போகிறோம், பிரும்மஸ்ரீ வைத்தினாத தீக்ஷிதர் சொல்லிவிட்டார். அவர்களுடைய வாக்பிரமாணத்தை காட்டிலும் வேறு பெரிதாக எங்களுக்கு தோன்றவில்லை. சிலபேர்கள் குரு சுக்கிரர்களுக்கு மாத்திரம் சாந்தி ஹோம மந்திரம் சொல்லி இருக்கிறார்களே தவிர, ஸாமசாகாதிபதியாகிய அங்காரகனுக்கு சாந்தி விதிக்க வில்லை மூலவாக்யம் கிடையாது. தீக்ஷிதர்வாளுடைய ஸ்வாபிப்ராயம் என்று சொல்லுகிறார்கள்

ஸர்வபௌமீய வர்ணாச்ரம காண்டத்தில் சாகாதீசே சக்தியுக்தே என்ற வாக்யப்படி அந்த வர்ணாச்சிரம காண்டத்திலேயே ஸ்பஷ்டமாக சொல்லி இருப்பதால் அந்த புரட்டாசி மாதம் 8௳ தான் செய்யவேண்டியது என்று தோன்றுகிறது. எல்லாபஞ்சாங்கப் படி எல்லாரும் அங்காரக அஸ்தமனத்தை ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். சிலபேர்கள் சாந்தி புரஸ்ஸரமாய செய்யவேண்டும் என்று எழுதி இருக்கிறார்கள். புரட்டாசி மாதமும் தோஷம் இருந்தால் ஆவணி மாதத்திலேயே சாந்தி பூர்வமாய் செய்து விடலாம். புரட்டாசி மாதம் தோஷம் இல்லாததால் அங்காரகன் ஸ்பஷ்டமாய் பிரகாசிக்கிற 8௳ சனிக்கிழமை ஹஸ்த நக்ஷத்திரத்தில் உபாகர்மாவை செய்து ரிஷிகளுடைய பிரசாதத்தை அடையவேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். அங்காரகன் அஸ்தமனத்தை பார்க வேண்டாம் என்றால் ஸாமகாள் உபநயனத்துக்கும் அங்காரக தோஷத்தை பார்கவேண்டியதாக ஏற்படாது. இதற்கு முன் இதுமாதிரி வந்து தோஷமில்லாத புரட்டாசி மாதத்தில் பெரியோர்கள் உபாகர்மாவை அனுஷ்டித்து இருக்கிறார்கள்.

நாராயண ச்ரௌதி.
திப்பிராஜபுரம்.

## காயத்ரீ ஜப காலம்.

(போலகம் ஸுந்தரேச சாஸ்திரிகள்.)

இவ்வருஷத்தில் காயத்ரீ ஜப விஷயமாக ஸந்தேகம் ஏற்பட்டு விவாதம் நடப்பதால் எனக்குத்தெரிந்த விஷயத்தை எனது நண்பர்களின் அநுஷ்டானத்திற்கு உபயோகமாகும்படி பத்திரிகை மூலமாக தெரிவித்துக்கொள்ளுகிறேன். இரண்டு தினங்களிலும் ப்ரதமா திதியிருந்தால்ஸங்கவகாலத்திற்குப்பிறகு மத்தியான காலத்திற்கு முந்தி பர்வ ப்ரதிபத்ஸந்தி ஏற்படுமாயின் அன்றயதினமே உபாகர்மமும் காயத்ரீ ஜபமும் செய்ய வேண்டியது என்றும் மத்யானத்திற்குப்பிறகு ஷெடி சேர்க்கை ஏற்பட்டால் மறுநாள் செய்யவேண்டுமென்றும் வர்ணாச்ரம காண்டத்தில் வ்யவஸ்தை செய்யப்பட்டிருப்பது அபிஞர்கள் அறியாததல்ல. அதன்படி இவ்வருஷம் ச்ராவண தினமே செய்யவேண்டியதாக ஏற்படுகிறது. சில பஞ்சாங்கங்களின்படி மத்யான காலத்தில் ஸந்தி ஏற்பட்டிருந்தாலும் அன்றைதினம்தான் செய்யவேண்டியது. ஆனால் இது விஷயம் இந்த விடத்தில் ஸ்பஷ்டமாக சொல்லப்படவில்லை. அதனாலேயே தகராறு ஏற்பட்டிருக்கிறது. ஒரு விஷயம் ஒரு இடத்தில் விசாரித்து முடிவுசெய்யப்பட்டிருக்குமானால் மற்றொரு இடத்திலும் நாம் அதை எடுத்துக்கொள்வது சாஸ்திர முறைக்கு முரண்படாது. வாக்ய சேஷத்தைக் கொண்டு நிர்ணயம் செய்ய ஒரு உதாஹரணம் சொல்லியிருந்தால், அது அந்த விடத்தில்மாத்திரம்தான். மற்ற விடத்தில் கிடையாது என்று சொல்வது சாஸ்திர மர்யாதை தெரிந்தவர்களால் அங்கீகரிக்கத் தக்கதல்ல. அவ்விதமே காயத்ரீஜப விஷயத்தில் சொல்லப்படும் வாக்கியமே இஷ்டிப்ரகரணத்திலும் காணப்படுகிறது. காயத்ரீ ஜபம் போலவே இஷ்டியும் ப்ரதமையில் செய்யவேண்டிய பர்வஸந்தி முதலிய விஷயங்கள் அங்கும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் மத்தியானத்திற்குமுந்தி ஸந்தி என்பதற்கு மத்தியானத்திற்கு முந்தியும் மத்யான காலத்திலும் என்று வசனங்களாலும் ந்யாயங்களாலும் வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. மத்தியானகாலத்தில் இவ்வருஷம் ஸந்தி வந்திருப்பதால் என்ன செய்வது என்கிற ஸந்தேகத்தை இஷ்டியில் சொல்லியிருப்பதை எடுத்துக்கொள்ளாமல் நிர்ணயம் செய்ய வேறுமார்க்கமில்லாததால் அதன்படி செய்வது சாஸ்திரவிரோதமல்ல. இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயமிருக்கிறது. இங்கு மத்தியந்தினம் என்பதற்கு பஞ்சதா விபாகபக்ஷத்தை அநுஸரித்து அர்த்தம் செய்வது முற்றிலும் தப்பு. ஆவர்த்தனம் எங்கிற சப்தம் அந்த ஸ்தானத்தில் உபயோகிக்கப்படுவதால் மத்யான காலத்தில் ஒரு முகூர்த்தம் தான் அதற்குப்பொருள். வாக்யப் பஞ்சாங்கப்படி 14-34க்குமேல் 16-34வரை அஹர்மானத்தை அநுஸரித்து மத்யானகாலமாக அன்று நிர்ணயிக்கத்தக்கது. மறுநாளுள்ள திதி விருத்தியின் பாதியை முந்தி சேர்த்தாலும் மாத்தியான காலத்திலேயே ஸந்தி ஏற்படுகிறது. இது விபரம் மற்றொரு இடத்தில் வைத்தியநாத தீக்ஷிதீயத்தில் ஸ்பஷ்டமாக காணப்படுகிறது. ஆகையால் இவ்வருஷ ச்ராவண தினமே காயத்ரீஜபம் எல்லாப் பஞ்சாங்கங்களிலும் போடப்பட்ட ஸந்தி காலத்தின்படி செய்யவேண்டியது. இந்த காயத்ரீஜபம் முக்கியமான ஒரு ப்ராயச்சித்த கர்மா. ஆபஸ்தம்ப தர்மஸூத்திரத்தில் मिथ्याधीतप्रायश्चित्तं। एवमन्येष्वपिदोषवत्सुपतनीयेषूत्तराणियानिवक्ष्याम: என்று ஆரம்பித்து ஆறு ப்ராயச்சித்தங்கள் சொல்லியிருப்பதில் காயத்ரீஜபம் ஐந்தாவது ப்ராயச்சித்தமாக சொல்லப்பட்டிருக்கிறது.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்.

பகுதான்ய-ஞூ ஆடி-மீ 13உ

## ஜனநாயக ஆக்ஷியின் அலங்கோலம்.

இந்தியாவில் ஜனநாயக ஆக்ஷியின் சாயைதான் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதன் பூர்ணஸ்வரூபம் இன்னும் ஏற்படவில்லை. அதுவும் ஆரம்ப தசையிலேயே இருந்து வருகிறது. ஜனநாயக முறையில் ஏற்பட்ட புதிய ராஜ்ய சீர்திருத்தமானது சென்ற ஒரு வருஷத்தில் எப்படி வேலைசெய்திருக்கிறதென்பதை இப்போது அளந்து பார்க்கிறார்கள். இச்சமயம் நாம் நமது அநுபவங்களைக் குறிப்பிடவேண்டியது அவச்யமாகிறது. ஆரம்ப தசையிலுள்ள ஜனநாயக ஆக்ஷியிலேயே நாம் காணும் பயங்கரத் தோற்றங்களைக் கவனிக்கையில் அதன் யௌவனகாலம் எப்படியிருக்குமோவென்ற அச்சமே நமக்குப் பொதுவாக உதித்திருக்கிறது.

இப்போது தேசத்தில் ஜனங்களிடையில் ஸரியான விழிப்பு ஏற்பட்டுவிட்டதாக, நல்ல அநுபவமில்லாத ராஜ்யவாதிகள் நினைக்கலாம். ஆயினும் தற்போது நடந்துவரும், ராஜ்ய ஸமூஹப் பொருளாதாரக் கிளர்ச்சிகளால் தேசத்தில் உண்மையான அமைதியும், நல்லுணர்ச்சியும் பரவியிருப்பதாக விவேகிகள் ஒப்புவார்களா? ஜனநாயக ஆக்ஷியான மாகாண ஆக்ஷி ஏற்பட்டபிறகுள்ள நிலைமையை கவனித்தாலேபோதும். பெரிய ராஜ்யத் தலைவர்களுள்பட, ராஜ்ய பிரசாரத்தில், ஸத்யம், அஹிம்ஸை, தியாகம் முதலியவைகளைப்பற்றிப் பேசுவது வெறும் பகட்டாகவும், நேர்மையற்றதாகவுமே இருக்கிறது. ராஜ்யச் சூதுவாதுகள் எல்லா ராஜ்யக் கக்ஷிகளிலும் நிறைந்து கிடக்கின்றன. மேலும், அதிகாரவர்க்க ஸ்வேச்சை ஆக்ஷி காலத்தில் இருந்துவந்த கொஞ்சநஞ்சம் ஹத்துக்கூட இப்போது ஜனங்களிடையில் மறைந்துவிட்டது. ஸ்வதந்திரமென்ற பெயரால் பிரஜைகள் பயமின்றி எதையும் செய்யவும், பேசவும் துணிந்துவிட்டார்கள். தண்ட நீதியின் கௌரவம் குறைந்துவிட்டது. ராஜ்யச் சட்டதிட்டங்களும், ஸமூஹ நியமங்களும் கண்டபடி அலக்ஷ்யமாக தூஷிக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் பிரஜா உரிமையென்றும், ஸ்வதந்திரமென்றும் ராஜ்ய அவிவேகிகள் தான் நினைப்பார்கள். பிரஜைகள் எவ்வித வரம்புமில்லாமல் இருப்பது பெரிய ராஜ்ய அனர்த்தமல்லவா? ஸ்வதந்திரவாதிகளென்றுபறை சாற்றிவந்த காங்கிரஸ் வாதிகளே இதன் வினைப்பயனை தற்போது அநுபவித்துவருவது ப்ரத்யக்ஷமல்லவா?

ஏற்கனவே இருந்ததை விட தற்போது வகுப்பு வாதமும் வகுப்பு நலப் போராட்டமும் தேசத்தில் அதிகரித்து விட்டது. முஸ்லீம்களின் உரிமைக்கிளர்ச்சி எல்லை கடந்துவிட்டது. இந்த நிலைமையை ஏற்படுத்தியது இந்த ஜனநாயகமே யல்லவா? ராஜ்யக்கக்ஷிகள் பலவும் பரஸ்பரம் சண்டையிட்டுக் கொண்டு கக்ஷி நலத்தைப் பெரிதாக மதித்து, பிரஜைகளின் நன்மைகளைப்புறக்கணிப்பது ஸஹஜமாகி வருகிறது. அபேதவாதம் அல்லது பொதுவுடமையை ஆதாரமாகக்கொண்டே தேச நிர்வாஹம் நடத்தப்படுகிறது. ஜமீன்தார்கள், மிராசுதார்கள், பண லேவாதேவிகாரர்கள் முதலியவர்களின் உரிமை பிடுங்கபடுகிறது. இந்தியாவிலுள்ள ஸம்ஸ்தான அரசர்களைக்கூட காலக்கிரமத்தில் ஒழித்துவிடுவதே தமது நோக்கமென்று நேருஜி சீமையில் பேசி வருகிறார். பேச்சு ஸ்வதந்திரமென்றபெயரால் மிக்க ஆபாஸமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பொதுக்கூட்டமொன்றுவது இப்போது அமைதியாக நடப்பதில்லை. கலஹமும் அடிதடியுமே அங்கு மிகுந்து விட்டது.

தமிழ்நாட்டைப் பற்றிய வரையில் நம் கண்முன் காணப்படும் அநுபவமென்ன? காங்கிரஸுக்கும் இதர கக்ஷிக்கும் மனஸ்தாபம் அதிகரித்து எங்கும் சண்டை முற்றி வருகிறது. காங்கிரஸை எதிர்க்கும் வியாஜத்தில், வகுப்பு நிந்தை, முக்யமாக பிராம்மண நிந்தை வெகுவாக அதிகரித்துவருகிறது. சட்டப்படி குற்றமாகக்கூடிய தோரணையில் பிராம்மணர்களை தூஷணம் செய்கிறார்கள். மதங்களையும் மதாசார்யர்களையும் பற்றி வெகு கேவலமான ஒரு மனிதன் கூட பொதுக்கூட்டத்தில் கண்டபடியெல்லாம் பேசி அவமதிப்பது ஸஹஜமாகி வருகிறது. கொலை, கொள்ளை, ராஜத்துரோகம் முதலிய கடும் குற்றம் செய்கிறவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள். கௌரவிக்கப்படுகிறார்கள். ஸ்வதர்மத்தை அநுசரிப்பவர்களே தண்டிக்கப்படுகிறார்கள். அவமதிக்கப்படுகிறார்கள். இது மட்டுமில்லை கவர்மெண்ட்நிர்வாஹ அதிகார அந்தஸ்து வகித்துவரும் பிரதம மந்திரி முதலியவர்களைக்கூட பொதுக்கூட்டங்களில் மரியாதையின்றி பேசுவதைப்பார்க்கிறோம். இம்மாதிரி அக்ரமங்களெல்லாம் ஜனநாயக ஆக்ஷியின் கீழ், பேச்சு ஸ்வதந்திரமென்று தற்கால ராஜ்யவாதிகளால் வரவேற்கப்படுகிறது. ஆகையால் இவ்வளவு குரூரமான நிலைமைக்கு ஆஸ்பதமாயுள்ள ஜனநாயகம் மறையவேண்டியதே நியாயமாகும்.

இந்திய ஜனங்களின் ஸ்வரூபஸ்வாபாவங்களுக்கு, அபேதவாதத்தை அடிப்படையாகக் கொண்ட தற்கால ஜனநாயகம் ஏற்றதல்ல. பிராசீன இந்தியாவில் ஜனநாயகம் இருந்ததாக ஒப்புக்கொண்டாலும் அது, அரசன் அதிகாரத்திற்கும், தர்மசாஸ்திர வரம்பிற்கும் உள்பட்டதாகவே இருந்து வந்ததேயல்லது இப்போதையைப்போல் அபாயமானதாயிருந்ததில்லை. இந்தப் புதிய சீர்திருத்தம் வழங்கப்படும்காலத்தில் பார்லிமெண்டில் இதைப்பற்றி பிரஸ்தாபம் நடந்தது. இந்தியாவுக்கு இந்த ஜனநாயகம் அனர்த்தம் விளைவிக்குமென்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் பலர் எச்சரித்தனர். மேற்றிசைகளிலே ஜனநாயகத்தின் தீமை உணரப்பட்டு பல தேசங்கள் அதைக்கைவிட்டு வருகின்றன. ஸர்வாதிகாரி ஆக்ஷியே சிறந்ததெனக் கருதப் படுகிறது. இந்த ஆக்ஷி நல்ல பலனையும் அங்கு அளித்து வருகிறது. இந்த நிலைமையில் நம் தேசத்தில்மட்டும் இந்தஆக்ஷி முறையைத் திணித்து கணக்கற்ற துன்பங்களுக்கு நம்மை ஆளாக்கவேண்டுமா? நமது ஜாதிகலை, நாகரிகம் போன்ற உயர்ந்த மேன்மைகளை உருத்தெரியாமல் அழித்துவிட இந்த ஜனநாயகம் முற்பட்டுவிட்டதென்று ஸ்வல்ப கால அநுபவத்திலேயே வெளிப்பட்டு விட்டதை யாவரும் எளிதில் அறியலாம்.

## வாரக்குறிப்புகள்.

ஸ்ரீ வத்ஸ. வெ. ஸோ. சர்மா.

பெண்களா இவர்கள்? மந்திரிசுப்பாரயன் மனைவி ஆட்டகாலமிது! பலர் பல ஆட்டம் ஆடிமறைந்தனர்! இவ்வம்மையின் சொல்லைக்கேட்டு பற்பல பெண் சங்கம் தலைவிரித்தாடுகிறது! அவர்களது வாதத்திலும் பேச்சிலும் தர்ம கந்தங்கூட இல்லை!! அச்சம் நாணமடக்கமெனும் கற்பாசி குணமெங்கே? இவர் ஆட்டமெங்கே?

எங்கும் அதிருப்தியே!! தென்னாட்டில் கடன் நிவாரண மசோதா, ஹிந்திக் கட்டாயமிவைகளால் முதல் மந்திரிக்கு எங்கும் கறுப்பு கொடி வரவேற்பு நடந்தது. ஆந்திர தேசத்திலோ தனி மாகாணமாக ஆந்திரத்தைப் பிரிக்காததாலும் பொதுஜன வாக்கின்படி யாகத்தை நிறுத்தென்றதாலும் கறுப்பு கொடி மரியாதை நடந்தது! சூடுள்ள மந்திரி வேலையை விடுவார்!!

காங்கிரஸ் தலைவர் குத்தப்பட்டார்? தூத்துக்குடியில் காங்கிரஸ் தலைவர் கத்தியால் குத்தப்பட்டார். என்ன காரணம்? அதர்மமே!

மூடும்போதே வெளியாகிறது! தற்கால தேசிய பத்திரிகை நிருபர் அனைவரும் ஆங்காங்கு நடந்த உண்மையை அப்படியே எழுதாமல் காங்கிரஸைப் பலப்படுத்தியே விஷயத்தைத் திரித்திக் கூறுகின்றனர். அப்படியிருக்கும்போதே காங்கிரஸ் ஊழல் பல வெளியாகின்றது. பூரா உண்மையும் வெளியாயின் விரைவில் காங்கிரஸ் ஆக்ஷிமுடியும்! என்பதில் ஸந்தேஹமென்ன?

வீட்டை கவனி! பெற்றோருக்குப்பணி!! என கோயம்புத்தூரில் ஓர் கலாசாலைத் தலைவர் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் உபதேசித்தார். அவர் ஓர் ராவ்பகதூர். எப்படி அவர் இந்த வழியில் திரும்பினாரோ அறியோம்! தற்காலம் பெண்களை வீடுவிட்டு வெளியில் வா, பெற்றோருக்கடங்காதே என கூறுவதன்றோ முறை!

துணிச்சலா? மறதியா? விழுப்புரம் பெண் சபை வயது வந்த பெண்களை ஆண்களுடன் கலாசாலையில் சேர்க்கவில்லை என்று மந்திரியிடம் முறையிடுகிறது. இவ்விரு இனமும் ஒன்று சேர்வதால் காந்திஜி ஆச்ரமத்திலேயே கஷ்டம் நேர்ந்து பட்டினி கிடந்தார்! இச்சங்கம் இதை அறியாதா? அல்லது இப்படி கெட்டு தாய் தந்தையில்லா குழந்தைகளை வளர்க்கும் சங்க நாகரிகத்தை விரும்புகிறதா?

ஊர் சிரிக்கிறது? ஸிந்து மந்திரிகள் ராஜிநாமா உடனே அதை திரும்பிப் பெறல் முதலியன காங்கிரஸ் ஆக்ஷி பயனற்றது, அவர்களால் இந்தியாவை ஆளமுடியாது என பிறர் நகைக்க இடம் கொடுக்கிறது!

விருதமுமில்லை சுகமுமில்லை! ஸர். ஸி. பி. அய்யர் மதத்தைக் கெடுத்தாலும் ராஜ்யபாரத்தில் நற்பெயர் வாங்கி இருக்கலாம். நாளுக்கு நாளங்கு போலீஸ் தடியடி சட்டஸபை ஒத்துழயாமை முதலிய அநர்த்த பரம்பரைகள்மேல் மேலும் அதிகரிக்கின்றன! பாவம்!

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.



## காயத்ரீஜபகால நிர்ணயம்.

இவ்வருஷத்திய காயத்ரீஜப காலவிஷயமாக ஸ்ரீ அஹோபில மடத்தில் கூடிய வித்வான்கள் செய்த சர்ச்சையும் நிர்ணயமும் வேறிடம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டிச் சில விஷயங்களை நாம் இங்கு குறிப்பிட விரும்புகிறோம்.

இவ்வருஷத்தில் உபாகர்மாவுக்கு மறுதினமே காயத்ரீஜபத்தைச் செய்யவேண்டுமென்பதற்கு பிரமாண நியாயாதிகள் அதிகமிருக்கின்றன. அப்படியிருந்தும் தசநிர்ணயத்தில் ஸ்தாலீபாக பிரகரணத்திய ஒரு வாக்கியத்திலுள்ள अत्र என்ற ஒரு பதத்திற்கு தாங்களாக செய்துகொண்ட ஒரு அர்த்தத்தை மாத்திரம் பலமாகக்கொண்டு மேற்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதாகத்தெரிகிறது.

பர்வ, ப்ரதிபத்ஸந்தியை அறியும் விஷயத்தில் பிரதிபத்தின் விருத்தி க்ஷயங்களை அநுஸரித்து ஒரு விசேஷ விதி இருப்பதை அநேக நிபந்தனகாரர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது யாவரும் ஒப்பிய விஷயம். அதாவது பிரதிபத்தில், பர்வாவைவிட அதிகமாகவோ, குறைச்சலாகவோ உள்ள நாழிகையை பாதியாக்கி அதை பர்வத்தில் சேர்த்து ஸந்தியை அறியவேண்டுமென்பது.

परोह्रि घटिकान्यूनाः तथैव अभ्याधिकाश्चयाः ।
तदर्धक्लृप्त्या पूर्वस्मिन् ह्रासवृद्धी प्रयोजयेत् ॥
तिथेःपरस्याघटिकाश्च यास्युः न्यूनास्तथैवाभ्यधिकाश्चतासां । अर्धंवियोज्यंचतथाप्रयोज्यं ह्रासे च वृद्धौप्रथमेदिनेस्यात् ॥

இந்த வசனங்கள், காலமாதவீயம், நிர்ணயஸிந்து, தசநிர்ணயம், தீக்ஷிதீயம் போன்ற அநேக நிபந்தனங்களில் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வசனங்களின் அர்த்தத்தை உதாஹரண பூர்வமாக காலமாதவீயத்தில் விவரிக்கப் பட்டுள்ளது. அதாவது:—

"முதல்நாள் பர்வமானது 15-நாழிகை. மறுநாள் பிரதமையும் 15-நாழிகை. இப்படியிருந்தால் யதாவஸ்திதத்தை உபஜீவித்தே ஸந்தியை அறியவேணும். ஆனால் மறுதினத்தில் பிரதிபத்தானது ஆறு நாழிகை குறைச்சலாயிருந்தால் அந்த ஆறு நாழிகையினுடை ஸரிபாதியான மூன்று நாழிகையை பர்வாவில் குறைத்து ஸந்தி அறியவேணும். அப்போது ஆவர்த்தனத்திற்குமுன் ஸந்தியென்று ஏற்படும். இந்த நியாயப்படியே பிரதிபத்தில் ஆறுநாழிகை விருத்தியிருந்தால் அதின் பாதியான மூன்று நாழிகையை பர்வாவில் கூட்டினால் பர்வாவானது 18-நாழிகை என்று ஆகும். அப்போது ஆவர்த்தனத்திற்கு மேல் ஸந்தி என்று அறியவேணும்"

மேற்கண்ட பிரமாணங்களின்படி இவ்வருஷத்தில் பர்வாவைவிட பிரதிபத்தில் 4-நாழிகை சொச்சம் விருத்தியிருப்பதால் அதன் ஸரிபாதியான 2-நாழிகை சொச்சத்தைப் பௌர்ணமியில் சேர்த்துக் கணக்கிட்டால் பர்வபிரதிபத் ஸந்தியானது ஆவர்த்தன காலத்திற்கு மேற்பட்டுவிடுகிறது. ஆகையால் காயத்ரீஜபம் மறுநாளே செய்யவேண்டியதாகிறது. இது வஸ்துஸ்திதி.

இனி இதிலுள்ள ஆக்ஷேப ஸமாதானங்களை கவனிப்போம். மேற்கண்ட வசனங்களில் இஷ்டியென்றோ, உபாகர்மாவென்றோ விசேஷிக்கவில்லை. அத்தகைய பதம் அங்கு பிரயோகிக்கப்படவில்லை. பொதுவாகவே பர்வ-பிரதிபத்ஸந்தியை உபஜீவித்து வரும் தர்மங்கள் யாவற்றுக்கும் உபயோகப் படக்கூடியதாகவே வசனசைலீ இருக்கிறது. இப்படியிருக்க இந்த விஷயத்தை இஷ்டி விஷயமென்று ஒதுக்க பிரமாணமோ நியாயமோ என்ன இருக்கிறது? பொதுவாக உள்ள வசனத்தை ஒரு விஷயத்தில் மாத்திரம் ஸங்கோசம் செய்வதாயிருந்தால் அதற்கு பிரமாணம் வேண்டாமா? ஸ்ரீ அஹோபிலமடத்தில் நடந்த விசாரத்தில் அத்தகைய வசன பிரமாணம் காட்டப்பட்டதாகத்தெரியவில்லை

நிபந்தனகாரர்கள் இஷ்டிபிரகரணத்தில் இந்த விசாரம் செய்திருப்பது உண்மையே. இந்த விசாரம் இஷ்டி பிரகரணத்தில் இருந்தாலும் பொதுவாக பர்வ-ப்ரதிபத்ஸந்தியை உபஜீவித்துவரும் எல்லா விஷயங்களுக்கும் இந்த நியாயம் வருமென்பதே நிபந்தனகாரர்களின் அபிப்பிராயம். காலமாதவீய காரிகையில்:—

वृद्धिः प्रतिपदो यास्ति तदर्धं पर्वणि क्षिपेत् ।
क्षयस्यार्धं तथा क्षिप्त्वा संधिः निश्चीयतां सदा ॥

என்ற வசனம் இதை தெளிவாக்குகிறது. இங்கு பொதுவாக ஸந்தி நிச்சயம் செய்யும் வழி காட்டியதாக ஆகிறதேயல்லாது இஷ்டி பிரஸ்தாபமே இல்லை. மேலும் सदा என்ற பதமும் ஸந்தி நிச்சயம் செய்ய வேண்டிய காலம் வரும்போதெல்லாம் இந்த வழியே கிரஹிக்கத்தக்கதென்பதை விளக்குகிறது. இல்லையேல் "ஸதா" பதத்திற்கு எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது. நிர்ணய ஸிந்துவில்

पर्वणि प्रतिपदः क्षयस्य वृद्धेश्च अर्धंप्रक्षिप्यसंधिः विज्ञेयः ॥

என்று பொதுவாக ஸந்தி விக்ஞானப்ரகாரமே சொல்லப்படுகிறதேயன்றி இஷ்டியென்றோ உபாகர்மாவென்றோ விசேஷிக்கவில்லை. இந்த விசாரம் இஷ்டிபிரகரணத்தில் இருந்தாலும் உபாகர்மாவுக்குஇது ஏற்படக்கூடியதே. இஷ்டிநியாயமென்றால் அது அவைதிகமா?

மற்றவிடங்களுக்கு அது ஏன் வாக்கூடாது? அநேகமாக விசேஷ விதியில்லாதவரையில் ச்ரௌத கர்மாக்களுக்கு ஏற்பட்ட தர்மங்களை ஸ்மார்த்த கர்மாக்கள் விஷயத்திலும் அதிதேசம் செய்வதைப் பலவிடங்களில் காண்கிறோம், மேலும் மீமாம்ஸா நியாயங்களே மறைந்துபோக நேரிடும். ஏனெனில் ச்ரௌத விஷய வாக்யங்களையும் ச்ரௌத கர்மாக்களையும்கொண்டே அந்த சாஸ்திர விசாரம் பிறந்திருக்கிறது. அவையெல்லாம் ச்ரௌதமாத்ர விஷயமென்று சொல்லிவிடலாமல்லவா?

கிரஹணமும் பர்வ, பிரதிபத் ஸந்தியை உபஜீவித்திருப்பதால் அதன் விசாரமும் இங்கு செய்யலாமே என்று காலமாதவீய இஷ்டி பிரகரணத்தில் விசாரித்திருப்பதிலிருந்து இஷ்டி நியாயமானது பர்வ-ப்ரதிபத் ஸந்தி உபஜீவனமுள்ள எல்லாவிடங்களிலும் வருமென்பது விளங்குகிறது.

மேலும் இஷ்டியும், உபாகர்மாவும், அநுஷ்டேய காலத்தைப்பற்றிய வரையில் நெருங்கிய ஸம்பந்தமுள்ளவை. ஸந்திஸ் ஸங்கவத: பச்சாத் அர்வாக் ஆவர்த்தநாத்யதி, போன்ற வசனங்கள் உபாகர்மாவுக்கும், இஷ்டிக்கும் துல்யமாகவேயிருக்கிறது. தவிர, ஆவர்த்தன, மத்யந்தினதி பதங்களும், அவைகளின் அர்த்தமும் இரண்டிற்கும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆகையால் இஷ்டி கால நிர்ணயம் செய்தால் அது உபாகர்மாவுக்கும் ஏற்றது என்பது நிபந்தனக்காரர்கள் எண்ணம்.

தவிரவும், ஆவர்த்தனபதமும், மத்யந்தின பதமும் பர்யாய பதங்களென்பது யாவரும் ஒப்பிய விஷயம். ஒரு நிபந்தனக்காரராவது உபாகர்ம பிரகரணத்தில் இந்த விஷயத்தைச் சொல்லவில்லை. இஷ்டிபிரகரணத்தில் தான் இருக்கிறது. மத்யாந்நாதி சப்தங்கள் பஞ்சதாவிபக்த மத்யாந்நபரமல்லவென்பதும் யௌகிகமென்பதும் உபாகர்மாவுக்கவச்யம் அபேக்ஷிதம். அப்படியிருந்தும் அது உபாகர்மா பிரகரணத்தில் இல்லை. இஷ்டி பிரகரணத்தில் இருந்து தான் உபாகர்மாவுக்கும் அதிதேசிக்க வேண்டிய கதியில் இருக்கிறது. ஆகவே ஆவர்த்தன மத்யந்தினதி சப்தார்த்த நிர்ணயத்திற்கு இஷ்டி நியாயம் வேண்டுமென்று சொல்லி விட்டு, ஸந்தி விக்ஞானத்திற்கு மட்டும் இஷ்டி நியாயம் வேண்டாமென்று வாதிப்பது அர்த்த ஜரதீய வாதமாகிறது. இந்த அர்த்த ஜரதீய நிர்ணயத்திற்குஏதாவது வசன பிரமாணமுண்டா?

மேலும், விருத்தி, க்ஷய நிமித்தமான மேற்கண்ட ஸந்தி நிர்ணயமானது ஸ்மார்த்தமான ஸ்தாலீபாகத்திற்கும் உண்டென்று நிபந்தனக்காரர்கள் நினைக்கிறார்கள். அந்த நிர்ணயம் ச்ரௌதமான இஷ்டி மாத்ர விஷயமென்று வாதித்தால் ஸ்தாலீபாகத்திற்கெப்படி அதிதேசம் செய்ய முடியும்? அந்த விஷயத்திற்கு மாத்திரம் அதிதேசமுண்டென்று விசேஷ வசனமிருக்கிறதா? இல்லையே! தோழப்பரும் ஸ்தாலீபாக பிரகரணத்தில் இந்த அதிதேசத்தை அங்கீகரிப்பதிலிருந்து இஷ்டி நியாயத்தைமற்றவிடங்களில் அதிதேசிப்பது அவருக்கு இஷ்டமென்று ஏற்படுகிறது.

ஆகையால் ஸ்ரீ அஹோபிலமடத்திய வித்வான்கள் செய்த நிர்ணயத்தில், ஆவர்த்தன மத்யாந்நாதி பதார்த்த விஷயத்திலும், ஸ்தாலீபாக விஷயத்திலும் இஷ்டி நியாய அதிதேசத்தை ஒப்புக்கொண்டுவிட்டு, ஸந்தி விக்ஞான விஷயத்தில் மட்டும் அதை ஏற்க மறுப்பது ஸரியாக இல்லை.

இதற்கு அவர்கள் பிரமாணமாகக் காட்டிய अत्र संधि विज्ञानोपायमाहकात्यायनः என்ற தசநிர்ணய வாக்யத்தில் காணப்படும் अत्र என்ற பதமானது கீழ் இருக்கும் வசனத்திலுள்ள இஷ்டியைக் குறிப்பதால் அத்ர என்பதற்கு "இஷ்டி விஷயெ" என்று அர்த்தம் செய்கிறார்கள். அதனால் விருத்தி, க்ஷய நிமித்தமான ஸந்தி நிர்ணயமானது இஷ்டிமாத்ர விஷயமென்று நிர்ணயிக்கிறார்கள். இந்த "அத்ர" பதத்திற்கு "இம்மாதிரி அர்த்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் என்ன? வேறு நியாயமாவது ஏதாவது இருக்கிறதா? ஆகவே இம்மாதிரி அர்த்தம் செய்வது அவர்களுடைய இஷ்டமென்றே தெரிகிறது. எதிர் கக்ஷியாரும் தங்கள் இஷ்டம்போல் இதற்கு ஓர் அர்த்தம் சொன்னால் அதை எப்படி ஆக்ஷேபிக்க முடியும்? வஸ்துஸ்திதியில் "அத்ர" பதத்திற்கு "இந்த ஸந்தி விசாரப்பிரகாணத்தில்" என்ற அர்த்தமே பொருத்தமாயிருக்கும். "ஸந்தியை அறிய உபாயம் சொல்லுகிறார் காத்யாயனர்" என்ற மேல் வாக்யமும் இதில்தான் ஸ்வாரஸ்யமுள்ளதாயிருக்கும்.

தவிர இஷ்டி பிரகரணமென்ற அர்த்தம் கொண்டால் ஸ்மார்த்த ஸ்தாலீபாக விஷயத்தில் இந்த நிர்ணயம் பிரவிர்த்திக்காமல் போய் விடுமே? அது இஷ்டமா? ஆகையால் இது யுக்தமாயில்லை. ஆதலால் இஷ்டி ந்யாயப்படி உபாகர்மாவுக்கும் ஸந்தி நிர்ணயம் செய்து முதல்நாள் உபாகர்மாவும், மறுதினம் காயத்ரீஜபமும் செய்வதே யுக்தமாகத் தோன்றுகிறது. ஸ்ரீரங்கம், மருத்துவக்குடி முதலிய பஞ்சாங்கங்கள் போட்டதே ஸரியென்று நினைக்கவேண்டும்.

பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகள், இஷ்டிப் பிரகரணத்திலுள்ளதை மற்ற விஷயங்களிலும் அப்படியே கிரஹிக்கவேண்டுமென்பதை பலமாக வற்புறுத்தி ஒப்புக்கொள்ளுகிறார். அப்படியிருந்தும் ஸந்தி விக்ஞான வழி விஷயத்தில்மட்டும் வேறு மாதிரியாகச் சொல்லுவது யுக்தமாவென்பதை அவர் யோஜிக்கவேணும்.

அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

ஆபஸ்தம்ப தர்ம ஸூத்திரத்தைப் பார்த்தவர்கள் இதுப்ராயச்சித்த கர்மா வல்ல என்று நினைக்கமாட்டார்கள். ஆகையால் ப்ராயச்சித்த கர்மாக்களுக்கு விதிக்கப்பட்ட ஸங்கவ காலத்திலேயே அநேக தோஷங்களுக்கு ப்ராயச்சித்தமாக விதிக்கப்பட்ட இந்த காயத்ரீ ஜபத்தை ஸங்கவகாலத்திலேயேசெய்துவிட்டு பிறகு உபாகர்மாசெய்யவேண்டியது. சிஷ்டாசாரமும் அவ்விதமே இருப்பதாக பெரியோர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். सद्यः எங்கிற பதம் இருப்பது இதற்கு விரோதமுள்ளதல்ல. ஸத்ய: எங்கிற பதத்திற்கு பிறகு என்கிற அர்த்தம் கோசத்தில் சொல்லப்படவில்லை. सद्यस्सपदितत्क्षणे என்று கோசமிருக்கிறது. தத்காலே என்று அங்கு வ்யாக்யாஸூதை என்கிற வ்யாக்யானமிருக்கிறது. என்றைய தினம் உபாகர்மாவோ அன்றை தினமே என்கிற அர்த்தம்தான் சரியானது. தத்ரைவ எங்கிற பதத்தையும் ஸ்த்ய:என்கிற பதத்தையும் சேர்த்துப்பார்க்கவேண்டும். எவ்விதத்திலும் காயத்ரீ ஜபத்திற்குப்பிறகுதான் ச்ராவணம் செய்யவேண்டியது. இதில் சொல்லவேண்டிய விஷயங்கள் ப்ரமாணங்களுடன் ரொம்ப இருக்கிறது. அவைகள் நேரிலேயே சொல்லத்தகுந்தது.

## காயத்ரீஜபகால நிர்ணயம்.

(சோழவந்தான் சங்கர சாஸ்திரி)

சென்ற ஆனி மீ 16உ பத்திரிகையில் பௌர்ணிமி பிரதமைகளின் க்ஷய விருத்தி ஸமீகரணபூர்வகமாக ஸந்திகாலம் நிர்ணயித்து ஆடி மீ 28உ காயத்ரீ ஜபம் செய்யவேண்டுமென்று தெரிவித்திருந்தும். அடுத்த பத்திரிகைகளில் சில ஆக்ஷேபங்கள் வெளியாக வந்திருப்பதால் அது விஷயமாக மறுபடியும் விபரம் எழுதுகிறேன். (1) வர்ணாச்ரமகாண்டம் உபாகர்மப் பிரகாணத்தில் காயத்ரீ ஜபஸம்பந்தமான இரண்டு வசனங்களிலும் ஸந்தி என்று மட்டிலும் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர ஸந்தி கால நிர்ணய பிரகாரம் சொல்லப்படவில்லை. திதி நிர்ணய காண்டத்தில் இஷ்டிப் பிரகாணத்தில் வாக்யத்தால் வியக்தமாக ஆவர்த்தனமென்ற அஹஸ்ஸின் மத்யகாலத்தையே குறிப்பிட்டு 1 ஸங்கவத்துக்குப்பின் ஆவர்த்தனத்துக்கு முன் ஸந்தி ஏற்பட்டால் ஸந்தி தினத்தில் உபாகர்மாவும் காயத்ரீஜபமும் 2 ஸங்கவத்துக்கு முன் ஸந்தி ஏற்பட்டால் முதல்நாள் உபாகர்மம் ஸந்தி தினத்தில் காயத்ரீஜபம் 3 ஆவர்த்தனத்துக்குப் பின் ஸந்தி ஏற்பட்டால் ஸந்திதினத்தில் உபாகர்ம மறுநாள் காயத்திரீஜபம் என்று விசதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 2. அதே இடத்தில் திதியின் ஹ்ராஸ விருத்தி விஷயத்திலும் கர்த்யாயன லொகாக்ஷி காலாதர்சவசனங்களாலும் இவைகளின் வியாக்யானங்களாலும் அங்கு எடுத்துக்காட்டிய விபரமான உதாஹரணங்களாலும் பௌர்ணமிப் பிரதமைகளுடைய க்ஷய விருத்தி கெடிகைகளை ஸமீகரணம் பண்ணியே ஸந்திகால நிர்ணயம் செய்யவேண்டுமென்று விசதமாகிறது. இவ்விதம் கெவனிக்கும்போது 27உயன்று ஆவர்த்தன காலத்துக்கு பின்பே சாஸ்திரீயமாக ஸந்திகாலம் ஏற்படுகிறபடியால் ஆடி மீ 28உ தான் காயத்ரீஜபம் செய்யவேண்டியதாகிறது. இப்படியேதான் அநேக வாக்யப் பஞ்சாங்கங்களிலும் போடப்பட்டிருக்கிறது அறியவும்.

திருக்கணித பஞ்சாங்கப்படி ஆவர்த்தனத்துக்கு முன் ஸந்தி ஏற்படுகிறபடியால் 27உயே காயத்ரீஜபம் செய்வதானாலும் ஆபஸ்தம்ப தர்ம பிரச்னத்தில் பிராயச்சித்த பிரகாணத்தில் சொல்லியபடி பிராயச்சித்த ரூபமான காயத்ரீ ஜபத்தை ஸங்கவ காலத்தில் செய்தபின்பு மாத்யான்ஹிக காலத்தில் உபாகர்மசெய்யவேணும்.

## நாகையில் அத்வைதஸபா உபன்யாஸங்கள்.

நாகப்பட்டிணம் ஹிந்துமதாபிமான ஸங்கத்தின் ஆதாவில் சென்ற 22—7—38 சுக்ரவாரத்தன்று ஆரம்பிக்கப்பட்டு மூன்று தினங்கள் கும்பகோணம் அத்வைதஸபையாரால் பிரதி வருஷமும் நடத்திக்கொடுக்கப்பட்டு வரும் உபன்யாசங்கள் திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் பண்டிதர் மேலக்காவேரி சிரோன்மணி பிர்ம்மஸ்ரீ A. சிவராம சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீசட்டநாத ஸ்வாமி கோவிலில் உபன்யாசங்கள் நடத்தப்பட்டன. பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகள் பால்யமாக இருந்தபோதிலும் சிறந்த படிப்புடனும் வெகு கம்பீரமான வாக் சாதுர்யத்துடனும் விமரிசையாக மூன்று உபன்யாசங்களையும் செய்தார்கள்.

முதல்நாள் தர்மமும் மீமாம்ஸா சாஸ்திரமும் என்ற விஷயத்தைப்பற்றிப் பேசியதில் நமது மதத்தில் வேதமே முக்ய பிரமாணமென்றும் அந்த வேதத்தில் விதி வாக்யங்களும் நிஷேத வாக்யங்களும் காணப்படுகிறதென்றும் வேத தத்துவங்களை விஸ்தாரமாகவும் சுலபமாகவும் சொல்வதற்கே அஷ்டாதச புராணங்கள் பிரவர்த்தித்திருக்கின்றனவென்றும் ஈச்வரன் அவரவர்களுடைய கர்மாவுக்குத்தகுந்தபடி பலன்களைகொடுத்து வருகிறானென்றும் அவர் ராகத்வேஷாதி குணாஹிதனென்றும் ஆகையால் அவரவர்களுடைய கர்மாக்களே அவரவர்கள் பிந்தி அடையும் பலன்களுக்கு காரணமாக இருப்பதாகவும் எவ்விதம் ஓர் நியாயாதிபதியானவர் பொதுவாக இருந்து அவரவர்கள் செய்யும் காரியத்திற்குத் தகுந்தவாறு அது சம்பந்தமான சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவந்து தண்டனையோ விடுதலையோ விதிப்பதுபோல வேதத்தில் ஈச்வரனால் போடப்பட்டிருக்கும் சட்டங்களை அனுசரித்து அவரவர்களுடைய கர்மாவிற்குத் தகுந்தபடி பலனானது அளிக்கப்பட்டு வருகிறதென்றும் அவ்விதமான வேதோக்த சட்டங்களே உலகத்தில் தர்மங்கள் என்ற வார்த்தையினால் பிரதிபாதனம் செய்யப்படுகிறதென்றும் அவ்வித தர்மங்களுடைய ஸ்வரூபங்களை சரிவரத்தெரிந்து கொண்டால்தான் கர்மானுஷ்டானங்களுக்கு சௌகர்யங்கள் ஏற்படுமென்றும் சூத்திர ரூபமாக சங்கிரஹிக்கப்பட்ட சட்டங்களை விஸ்தாரப்படுத்தி எல்லோருக்கும் தெரியும்படியாக வேதத்தில் சொல்லப்பட்ட தர்மங்களை விளக்கமாக சொல்லுவதற்கே மீமாம்சா சாஸ்திரம் பிரவர்த்தித்ததென்றும் ஆகையால் ஒருவன் ஐஹிக ஆமுஷ்மிக சுகங்களை அடைய வேண்டுமானால் மீமாம்சா சாஸ்திரத்தை நன்கு ஆராய்ச்சிசெய்தால்தான் தர்ம சம்பந்தமான த்ருடஞானம் ஏற்படுமென்றும் அந்த சாஸ்திரமானது சரிவர பிரசாரத்தை அடையாமலிருப்பதே தற்காலம் தர்மக்லானி ஏற்படுவதற்கு முக்ய காரணமென்றும் ஆகையால் அந்த சாஸ்திரத்தை எவ்விதம் பிரகாசப்படுத்தமுடியுமோ அதில் பாடுபடவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகுமென்றும் சொன்னார்கள்.

மறுநாள் राजा कालस्यकारणं என்ற விஷயத்தைப்பற்றி உபன்யசித்ததில் மஹாபாரதத்தில் இருக்கும்படியான ஓர் சுலோகத்தின் கடைசி மூன்று வார்த்தைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு நவீனமான சீர்திருத்தக்காரர்கள் காலத்திற்கு ராஜாவானவன் காரணமென்றும் காலரீதிகளுக்குத் தகுந்தபடி சட்ட திட்டங்களை மாற்றுவதற்கு அரசனுக்கு அதிகாரம் உண்டென்று சொல்லுவது சுத்தப்பிசகென்றும் அவ்விதம் கொள்ளும் பக்ஷத்தில் அரசன் ஒருவித கட்டுப்பாட்டிலும் அகப்படாதவனென்று ஏற்பட்டுவிடுமென்றும் அது எவ்வித சமூகத்திற்கும் அனர்த்த ஹேதுவாகவே முடியுமென்றும் அனாதியான வேதோக்த சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டுமாத்திரமே ராஜாவானவன் பிரஜாபரிபாலனம் செய்யவேண்டுமேயொழிய இஷ்டப்படி செய்யத்தக்கதில்லையென்றும் எந்த வாக்கியத்திற்கும் முன்பின் சந்தர்ப்பங்களை அனுசரித்தும் ச்ருதி யுக்தி அனுபவம் இவைகளுக்குப் பொருத்தமாகவும் அர்த்தம் செய்யவேண்டுமென்றும் அவ்விதம் பார்க்குங்கால் யுகதர்மங்கள் எவ்விதம் இருந்தபோதிலும் தர்மங்கள் அனுஷ்டிக்கப்படுவதில் ஓர் அரசன் ஜாகரூகனாக இருக்கும்பக்ஷத்தில் அவன் கலியுகத்தையே கிருதயுகமாக செய்யக்கூடுமென்றும் தைவமென்று சொல்லப்படும் கர்மபலன் எவ்விதம் இருந்தபோதிலும் நம்முடைய புருஷயத்னத்தால் விதியை வெல்ல சிரமப்பட வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகுமென்றும் ஆகவே பவிஷயத்புராணரீதியாக கலியுகதர்மங்கள் குறித்தபடி கெட்டுப் போகும்படி அரசன் இடம் கொடாமல் சிறந்த யுகதர்மங்கள் இந்த யுகத்திலும் அனுஷ்டிக்கும்படி செய்ய முயற்சிக்க வேண்டியது அத்யாவச்யமென்றும் அவ்விதம் அரசனை ஸ்வேச்சையாக தர்மாதர்மங்களைத் தாறுமாறாக சட்டமூல்யம் மாற்ற இடங்கொடுப்பது யுக்திக்கும் பொருத்தமாகாதென்றும் நியாயாதிபதி எவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தபோதிலும் ஒரு சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டே அவரும் நியாயத்தை தீர்மானம் செய்ய வேண்டியிருப்பதாகவும் சொல்லி, ராமராஜ்யம், துஷ்யந்தனுடைய ராஜ்யம் இந்த ராஜ்யங்களில் அனுஷ்டானத்திலிருந்த வழிகளை காளிதாசாதி கவிகளுடைய வாக்கியங்களை உதாகரித்துக்காட்டியும் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஆரண்யத்தில் ஸ்ரீராமசந்திரனை பரதன் பார்த்தபோது அவனை வியாஜீகரித்து ஸ்ரீராமன் ராஜதர்மங்களை யதாவத்தாக போதித்திருக்கிறாரென்றும் சொல்லி பத்திரிகைகளில் சீர்திருத்தக்காரர்கள் சொல்லும் வாக்யங்களை நாம் வெகு ஜாக்கிரதையாக பரிசீலனம் செய்யவேண்டுமென்றும் சொன்னார்கள்.

மூன்றும்நாள் பகவத்கீதை என்ற விஷயத்தை உபன்யஸித்ததில் பகவானால் கானம் செய்யப்பட்டதால் அதற்கு பகவத்கீதை யென்று பெயர் ஏற்பட்டதென்றும் உத்தமாதிகாரியான அர்ஜுனனை வியாஜீகரித்து லோகத்திற்கு உபயோகப்பட வேண்டிய நோக்கத்துடன் கருணாமூர்த்தியான ஸ்ரீ கிருஷ்ணபிரான் மோக்ஷசாதனமான கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், மூன்றையும் கீதையில் சொல்லியிருக்கிறார் என்றும் கீதையானது திருமதஸ்தர்களாலும் அவரவர்களுடைய சித்தாந்தப்படி வியாக்யானம் செய்யப்படுகிறதென்றும் விசிஷ்டாத்வைதிகள் கீதையில் பக்தியோகமே முக்கியமாக சொல்லப்படுகிறதென்று சொல்லுகிறார்களென்றும் அத்வைதிகள் மோக்ஷ சாதனமான ஞானமே கீதையின் பரமதாத்பர்யம் என்றும் பக்தியோகமென்பது தனியாக கொள்ளத்தக்கதில்லையென்றும் கர்மயோகானுஷ்டான காலத்திலும் ஞானயோகியாக இருக்கும் காலத்திலும் எப்போதும் பக்தியானது இருந்தே தீரவேண்டுமென்றும் ஆகையால் ஞானயோகம் முக்யமாகவும் அதற்கு

தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க.



415

## The Marriage Tax.

(*N. Natesa Aiyer.*)

The proposal to levy a tax on Vivaha is in the air for some time. Neither in the press nor on the platform has it evoked any comment, murmur, resentment or opposition so far. Not a voice has been raised, not a rustle has been heard. The Cabinet has under the circumstances acquired a right to treat this as an eloquent indication of the unanimous support of the people to the proposed measure. A body which is able to transmute even the strongest opposition into a mighty vote in its favour will not hesitate to hug this circumstance to its bosom. But what is the reality at the back. What is the cause of this strange phenomenon—this solemn stillness, silence and calm. Is it the treacherous calm that precedes a storm. Not likely. It is said that there are no longer any stormy days for India and that the most furious storm cannot move the tiniest blade of the Congress cabinet. Remember the obstinate Agriculturist Relief Act which has legalized theft and untruth, the spectacular Prohibition Act which has suppressed the more pressing demand for the furiously-promised but wholly dropped Land-Revenue reduction and the amusing compulsory Hindi measure the compulsory element in which is universally objected to though not for the reasons urged by the political adversaries of the Congress.

2. The real reason for this silence, this calmness and this stillness is as plain as the pikestaff. It is the silence and stillness of despair, helpless smothering despair. How can a maskless warriar however strong otherwise, stand the poison gas. How can a soldier, however heavily armoured, resist the mowing by a machine gun or a bombing from the air or the destruction by a moving tank. Our opposition is quite similar. The happenings in the past have reduced the people to a mere pulp. Comparing small thing with great, one can well liken the situation to the submission of Austria to her rapebyGermany or the submission of Travancoreans to the Temple-entry proclamation of the Dewan or the submission of the German Jews to the pillory of Hitler. We can only exclaim with the poet. "It is good to possess a giant's strength but to use it like a giant is tyrannical".

3. The proposal will certainly become law in a short time, however much you may oppose it. It will not be surprising if it is closely followed by bills for taxing Ritusanti Seemantham, Upanayanam, births deaths etc. We ought not however to be deterred from expressing our views on the matter by what threatens to become a settled fact.

4. For some years past, the conviction has been forcing itself upon the people that the Madras Legislative Chamber is becoming the trysting place for knights to break their lances and measure their swords. The Inams Act, the abandoned deft relief moratorium Bill, the prohibition Act, the Agriculturists Relief Act the almost abandoned Compulsory Hindi measure lend full support to this view. There is another conviction which is stronger still. It is this. The Congress is steadily, silently and openly drifting into the policy of destroying the Hindu Religion, Civilization and Culture, taking care at the same time to pay a make-believe Lipworship to their excellence. The reason is stated to be that for achieving Swarajyam and fraternity and equality and socialistic status such a policy is an imperative necessity. The reasoning is this. Swarajyam connot be had unless and until equality and fraternity are secured. Equality and fraternity cannot be secured unless and until caste is destroyed. Caste can be destroyed either by compelling intermarriage or by abolishing marriage. A compulsory inter-marriage will is on the face of it unthinkable. The only other alternative is abolition of the marriage institution. By abolishing marriage sexual unions will become free and unrestrained and the offspring will be colorless, formless, shapeless and casteless. The Millenium will thus be reached.

5. This policy appears to be more than century old. It had its root in lord Macaulays Educational Minute of 1834 and the subsequent Proclamation of Lord William Bentick. Prior to it there was no doubt the Sati Abolition Act. It may be ignored because Sati or immolation of the wife on the husband's funeral pyre was never compulsory. In furtherance evidently of this policy, several radical changes were effected in instalments. We passed through an unbroken gamut of Acts the Caste disabilities Removal Act, the Widow Remarriage Act, the Civil Marriage Act, the Special Marriage Act and finally the Sarda Act. It must be within the recollection of all that it was Mr. Gandhi's last minute telegram insisting upon the completion of the 18th year as the minimum age for the marriage of girls that drew from Sir James Crear the memorable speech of fire and brimstone which compelled the members of the Assembly to vote solidly iu favour of the Sarda Act. In between, there were several other measures. We need not expatiate upon them now or upon the subsequent still-born bills in the Imperial Assembly such as, Temple Entry Bill, Untouchability Removal Bill, Divorce Bill etc. The Sarda Act has shaken the Hindu Religion and Society to their very foundations. Society has begun to break into nnforeseen groups. The marriage institution has begun to lean and totter. A large section placing God's law above man's is managing to evade the Act by openly disobeying it in British India by performing marriages outside British India and in several other ways. The experience of 8 or 9 years has revealed to the Government the intense opposition of the majority to that law. Instead of adapting the law to the wishes of the people as every normally constituted honest Legislature is bound to do, the Indian Legislature is compelling the people to adapt their wishes to its own freaks and whilms and caprices and tyrannies. Like dumb driven cattle the people are submitting to them. As a further step in this direction Navalrai's Act and Das Act were placed in the Statute Book. The havoc which they are committing is better imagined than told. The people are simply wringing their hands in despair and rending the skies with their cries. The tragedy of the situation is intensified by the fact that the parents and guardians of brides find themselves unable to disobey the Act in the absence of co-operation by the parents and guardians of the bride-grooms and in the absence of co-operation by the priests. The parents of the bride-groom, terrified out of their wits, by the threats of imprisonment and huge fines and lurid visions of injunction by Magistrates and consequent pandemonium at the marriage pavillion, break off the settled alliances, at the last moment. The palpitating priests pretend illness or pollution or conceal themselves for fear of punishment. How can the bride's party alone organize or carry out under the circumstances a function which is triparte from start to finish. Meanwhile the girls attain puberty pair off with their school mates or next door neighbours or film actors and become unmarried mothers. All this in India the land of unparallelled sex-purity and female chastity.

Even these measures are realized by the Congress to be wholly inadequate for reaching their goal. The three Acts strike at early marriages only. This won't do. All marriages early and late must go alike. What else can do it more effectively than a heavy marriage tax in the absence of a law for abolishing marriage or a law directly doing away with caste for which the country is felt to be not ripe. The upper and upper middle class may still celebrate marriages by paying the tax but they form a microscopic minority. The rest form an overwhelming majority and they cannot afford to pay. Promiscuous intercour is bound to come easily and without effort. Legislation can ban and penalize marriage but cannot hope to torpedo sexual unions. This is exactly what the Congress is aiming at. Such is the implication of the proposed tax. The necessity for exploring fresh avenues of taxation to cover the increasing deficit in Revenue resulting from the Prohibition Act is urged in support of the tax. This is only a ready-made transparent eye wash. Such is the boasted broad bottomed popular Government, Government of the people, by the people, for the people. What a traversity. Farewell marriage, farewell sex purity, farewell chastity farewell legitimate offspring, farewell caste, farewell Hinduism.

## மது விலக்கு ரிபோர்ட்டு.

சேலம் நிலைமை.

சேலத்தில் 9 மாதகாலமாக மதுவில்க்கு நடந்ததைப்பற்றிய ரிபோர்ட்டை ஜில்லா கலெக்டர் வெளியிட்டிருக்கிறார். ஜனங்கள் பரமசாந்தமாயும், ஸந்தோஷமாயும் இத்திட்டத்தைநிறைவேற்றிவைத்திருக்கிறார்களாம். குடி அடியோடு நின்று விட்டதாம்; குற்றங்களும் குறைந்து விட்டனவாம்.

## திருவாங்கூரில் "சாரதா" சட்டம்?

திருவாங்கூர் சட்டஸபையில் பால்ய விவாஹத்தடை மசோதா விவாதம் நடந்தது. பிராம்மணர்களை விலக்க வேண்டுமென்று கொண்டுவரப்பட்ட பிரேரணை வற்புறுத்தப்படவில்லையாம். ஸீதைக்கும், ராமனுக்கும் நடந்த விவாஹ வயதைப்பற்றி பிரஸ்தாபம் நடந்தது.

கடைசியாக பெண்களின் விவாஹ வயதை 16லிருந்து 14 ஆக்க குறைத்து சட்டம் செய்யப்பட்டது.

Books by Dewan Bahadur
K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

| | | Rs. | A. | P. |
|---|---|---|---|---|
| 1. | Kalidasa's Heroes | 0 | 6 | 0 |
| 2. | The science of the soul | 1 | 8 | 0 |
| 3. | Manu, the friend of Man | 0 | 8 | 3 |
| 4. | Sandilya Bakthi Sutras | 0 | 4 | 0 |
| 5. | The Gospel of Gita | 0 | 3 | 0 |
| 6. | The future of Brahmin | 0 | 2 | 0 |
| 7. | The Gita ideal of devotion | 0 | 4 | 0 |
| 8. | நாரத பக்தி சூத்ரம் | 0 | 2 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works,
Ltd., Town High School Road,

வே. ஸோ. சர்மவின் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சங்கரோபதேசம். | 2 | 0 | 0 |
| பத்ம புராணம். | 0 | 12 | 0 |
| மார்கண்டேயபுராணம் | 0 | 6 | 0 |
| வாமந புராணம். | 0 | 6 | 0 |
| வைகுண்ட ஏகாதசி | 0 | 0 | 6 |
| ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி | 0 | 1 | 0 |
| ப்ரஹ்மவை வர்த்தபுராணம் | 0 | 12 | 0 |
| கூர்மபுராணம் | 0 | 6 | 0 |
| ப்ரஹ்ம புராணம் | 0 | 12 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தந அச்சுக்கூடம், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## இராமாயண இலக்ஷ்யார்த்தத்தி லுள்ள இன்பப் பொருள்கள்.

[காக்கழணி கிருஷ்ணமூர்த்தி]
(சென்ற வாரத்தொடர்ச்சி.)

லவகுசர்களால் ச்ரவணமும், வால்மீகரால் கீர்த்தனமும், சீதையால் ஸ்மரணமும், பாதுகையால் பாத சேவனமும், இலக்ஷ்மணனால் அர்ச்சனமும், விபீஷணனால் வந்தனமும், ஹநுமாரால் தாஸ்யமும், சுக்ரீவனால் சக்யமும், ஜடாயுவால் ஆத்ம நிவேதனமும் வெளியாகிறதென யூஹிக்க இடமிருக்கிறது.

இராமாயணத்தில் பக்தி கொண்டு அதை விதிப்படி பூஜித்து பாராயணஞ் செய்பவர்களுக்கு ஸ்ரீராமனின் கல்யாண குணங்களும் அப்ராசக்தியுமறியப்படுவதால், அவர்களுக்கிடைவிடாத ராமபக்தி சுபாவமாகிவிடுமென்பதை நன்கறிந்ததே. ஆஸ்திகர்களுக்கு அநுதினமும் இராமாயண பாராயணம் அவச்யமென்பதை ஓர் விதியாக நம் பெரியோர்கள் அநுஷ்டித்துக் காட்டியிருக்கிறார்கள்.

ஸ்ரீராம மூர்த்தியின் பராக்கிரமத்தைபற்றி இராமாயணத்தின் ஒவ்வொரு காண்டத்திலும் விளக்கப்பட்டிருக்கிறது. காக்கை ரூபமாய் வந்து சீதாதேவியை உபத்திரவித்த இந்திரனின்மகனை ஸ்ரீராமரின் அபிமந்திரணசக்தி பெற்ற ஒரு புல் மூவுலகும் விரட்டவில்லையா? கடைசியில் அவன் ஸ்ரீராமனையே சரணமடைந்ததால் உயிர் தப்பினானே ஒழிய, அவனைக்காப்பாற்ற இம்மூவுலகிலும் யாரும் கதியில்லை. ஸ்ரீராமர் ஓர் புல்லையே அஸ்திரமாக்கிவிட்டதால், அன்று முதல் "வல்லவனுக்கு புல்லே ஆயுதம்" என்ற பழமொழி உலகில் ஏற்பட்டதாகும். ஸ்ரீராமபிரானின்பாததூளி பட்ட மாத்திரத்தில், கல்லாயிருந்த அகலியும் கடைத்தேறின காரணத்தால் ஸ்ரீராமனின் கால் தூசி விலைவேறு யாரும் பெறமாட்டார்கள் என்பதைக்காட்ட, சில சந்தர்ப்பங்களில் 'அவன் கால் தூசி பெறமாட்டான்' என்று சொல்லி ஒருவனைப்புகழ்கிறார்கள்.

இந்துக்களுக்கு தெய்வோபாசனையில் ஒருவர்க்கொருவர் வித்யாஸம்பாராட்டுவதுண்டு ஆனாலும், ஸ்ரீராமபிரானை உபாசிப்பதில் சைவ, வைணவ வித்தியாஸத்தை யாரும் பாராட்டுவதில்லை. ஏனெனில், ஸ்ரீராமனே சிவபிரதிஷ்டை செய்து தன்னின் வித்யாஸமற்ற தன்மையைக்காட்டியுள்ளார். பரமசிவனுக்கு சந்திரசூடன் என்ற நாமதேயம் இருப்பது போல் ஸ்ரீராமனும் தனக்கு ராமச்சந்திரன் என்ற நாமத்தைத் தரித்து, ருஜு செய்திருக்கிறார்.

ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை திருமூர்த்திஸ்வரூபமாகவே வர்ணிக்கப்படுகிறது. சுருதியிலும் "சூர்ய ஏவ நாராயண: வென்றும், "சூர்யேதிஷ்டந்நாராயண: வென்றும், சூர்யமண்டல மத்யவர்த்தி நாராயண: வென்றும் ஸ்ரீமந்நாராயணனைக்குறிப்பிடுவதால், ஸ்ரீராமாவதாரம் செய்த ஸ்ரீமந்நாராயணனை சூரிய உபமானத்தால் அறியப்படவேண்டும். சூரியனைப்பற்றி கவனிக்குமிடத்து, சூர்யனை மும்மூர்த்திஸ்வரூபமாகவே வணங்கவேண்டியதவசியமாகிறது. ஆகையால் ஸ்ரீமந்நாராயணனின் அவதாரமாகிய ஸ்ரீராமபிரானும் மும்மூர்த்திஸ்வரூபமே யொழிய வேறல்ல. ஆனதால், இந்துக்கள் யாவரும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை வித்தியாஸமன்றி உபாசிக்கிறார்கள்.

சதாசாரமும், சகல நற்குணங்களும், சாந்தசுபாவமும், வீரதீர பாக்கிரமமும், கிருபாநோக்கமும், அவ்யாஜ கருணையும் கொண்டு விளங்கும் ஸ்ரீராமன் தன்னைச் சரணமடைந்தவர்களுக்கு சர்வ விஷயத்திலும் அபயமளித்து ரக்ஷிப்பதே தன்னுடைய விரதமென்பதை விபீஷண சரணாகதி கட்டத்தில் வெளியிட்டார்.

இச்சிறந்த சுலோகத்தின் பாவார்த்தமானது த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைதமான மூன்று ஸித்தாந்தங்களையும் மேன்மைபடுத்தி வைக்கிறது. (விசிஷ்டாத்வைதம்) ஒரேதடவை தன்னை பிரபத்திசெய்தவனுக்கு அவனைச்சேர்ந்த ஸர்வ பிராணிகள் உள்பட பயமில்லாமையைத் தருகிறேனென்றும் (த்வைதம்) நான் உன்னடிமையே மென்று யாசித்தவனுக்கு சர்வ பூதங்களாலும் பயமில்லா பதத்தை அளிப்பேனென்றும் (அத்வைதம்) நானே உன்னுடைய ஸ்வரூபமுள்ளவன் என்ற ஏகத்வஞானத்தை விரும்பியவனுக்கு பஞ்சபூத கார்ய விபரீத பாவனையை விலக்கி (அபயம்) ஆனந்தாதீதம் எனப்படும் மோக்ஷ பதத்தை அளிப்பேனென்றும், அது தான் என்னுடைய விரதமென்றும் பகவான் சொன்னதான ஓர்பாவத்தை வால்மீகி மஹரிஷி சர்வ ஸித்தாந்தங்களுக்கும் முறண்பாடின்றி அதியத்புதமாய் இந்த சுலோகத்தில் அமைத்து வைத்தார்.

அத்வைத ரீதிப்படி ஜீவர்களின் த்வைதஸ்புரணையே ஜனன மரண பயமுள்ள பந்தமாகும். அந்தத்வைதஸ்புரணையின் நாசமே பயமற்ற முக்தியாகும். இதற்கு "யதாஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதர மந்த்ரம் குருதே, அத தஸ்ய பயம் பவதி" என்ற தைத்திரிய உபநிஷத் வாக்யமும், "த்விதீயாத் பயம் பவதி" என்ற பிருஹதாரண்ய உபநிஷத் வாக்யமும் தகுந்த ஆதாரமாகும். அதினால் பகவானும் "அபயம்" என்ற பதத்தால் மோக்ஷத்தைக்குறிப்பிட்டார்.

இராமாயண முழுமையுமுள்ள சுலோகங்களுக்கு நாம் வாக்கியார்த்தம் செய்வது போல், அதன் லக்ஷியார்த்தங்களையும் ஊஹித்தறிவோமானால் அதில் பொதிந்து கிடக்கும் அத்தியாத்ம சாஸ்திர சாரம் நன்கு வெளியாகும். அத்யாத்ம சாஸ்திர விஷயம் அநுபவத்திற்கு வரவேணுமானால் சற்குருவன்றி சித்திப்பதில்லை. அதை நாமறியவே ஆத்ம தத்வத்தை நன்கறிந்த ஸ்ரீராமனும் வஸிஷ்டரிடம் உபதேசம் பெற்றது போல் காட்டி உலகினருக்கு குரு பரம்பரையை ஸ்தாபித்தார். இராமருக்கு உபதேசிக்கப்பட்டயோக வாசிஷ்டம், ஞான வாசிஷ்டம் முதலியதுகள் இக்காலத்திய முமுக்ஷுக்களுக்கு சாஸ்திர சாரமாய் விளங்கி வருகிறது.

தொடரும்


### த்ரிமதஸ்தர்களுக்கு மிகவும் உபயோகமானவை.
(தேவநாகர எழுத்து)

1. ஸ்ரீ துர்க்கா ஸ்தோத்ரம் (ஸ்ரீ மஹா பாரதம் விராட பர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ் மூலம் பதவுரையுடன் கூடியது. 0—1—0
2. ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம் (ஸ்ரீமத்ராமாயணம் யுத்தகாண்டத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-6
3. ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்தோத்ரம் ஸ்ரீமத் மஹாபாரதம் வனபர்வத்திலுள்ளது) ஸம்ஸ்கிருத மூலம் தமிழ்மூலம் பதவுரையுடன்கூடியது. 0-2-0

புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



### மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.


## மஞ்சள் அழகு.

[பந்தல்குடி பாரத்வாஜமாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

மங்கலம் என்ப மனைமாட்சி. அதற்கும் மங்களத்தை நல்குவது மஞ்சள். மஞ்சள் அழகு என்பது நாலடியார். நந்தமிழகத்தில் சுப காரியங்களுக்கு முதலில்உபயோகிப்பது மஞ்சள். லக்கின பத்திரிகை எழுதி அதற்கு மஞ்சள் தடவுகிறது; திருமண அழைப்புப் பத்திரிகைகளில் நான்கோரங்களிலும் மஞ்சள் தீட்டுவது அல்லது மஞ்சள் கார்டிலே அச்சடிப்பது; மஞ்சள் கவர் உபயோகிப்பது பல சரக்கு நோட்டுகளில் முதலில் மஞ்சளை எழுவது; அக்ஷதை மஞ்சள் படுத்துவது; புது வஸ்திரங்களுக்கு மஞ்சளணிவித்தே அவற்றை சாதித்துக்கொள்வது; மங்கிலியச் சரடுகளை மஞ்சளாக்குவது; ஸ்திரீகளை ஆசிர்வதிக்குங் காலத்து மஞ்சள் கிழங்கு வழங்குவது; மணமகன் மஞ்சள் வேஷ்டி உடுப்பது; மஞ்சள்நீராட்டம் என்றகளிப்பாட்டம் நடைபெறுவது முதலியவற்றிலிருந்து மஞ்சளின் முக்கியம் நன்கு அறியலாம்.

ஸந்நிதிகளில் பிராட்டிக்கு குங்கும மஞ்சப்பொடி அர்ச்சனை செய்கிறார்கள். ஸேவார்த்திகட்கு மஞ்சட்காப்பு அளிக்கப்பெறுகிறது. எனவே மஞ்சளில் இலக்குமி இருக்கிறாள். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீசூர்ணம் (மஞ்சள்) நெற்றியில் தரித்துக்கொள்கிறார்கள். மஞ்சள் ஆஹார வஸ்துகளிலும் சேர்க்கப்பட்டு ஆரோக்யத்திற்கும் காரணமாகின்றது. இன்னும் இதன் பெருமையைப்பார்ப்போம்.

நம் நாட்டில் பல்லாயிரவாண்டுகளாக மஞ்சளை ஸ்திரீகள் அதி பால்யம் முதற்கொண்டே சரீரத்திற்கு உபயோகித்து வருவதை நாம் பார்த்திருக்கிறோம். ஸ்திரீகள் ஸ்நானம் செய்யுங்காலத்து முகம் முதல் பாதம் ஈறாக அநேக அவயவங்களில் மஞ்சளைக் கல்லில் ஜலம்விட்டுத் தேய்த்து நன்றாகப் பூசிவிட்டுப் பின்னர் அலம்புகிறார்கள். இது தேகத்திலுள்ள அசுத்தத்தைப்போக்கி சரீரத்துக்குப் புதிதான பளபளப்புக் கொடுத்து, நல்ல காந்தியையும் அளிக்கின்றது. இது நிற்க இதற்கு ஒரு அபார சக்தியுண்டு. சரீரத்திலுள்ள செம்பட்டை மயிர் முதலியவற்றை அறவே நீக்கவல்லது மஞ்சள். ஆடவர்போல் முகம், கை கால் முதலிய அவயவங்களில் மயிர் வளர்ந்திருக்கும் பெண்டிரை மணக்கலாகாது என்பது மநுநீதி. தற்காலத்து ஸ்திரீகள் இங்ஙனமிருப்பதோர் அழகு என அஞ்ஞானத்தாற் கருதுகின்றனர். இதனினும் விபரீதம் உளதோ? நமது ஆன்றோர் ஆசாரமுறையின் காம்பீர்யத்தை என்னென்றுரைப்பது? இவ்வளவு மறை பொருளாக ஓர் அற்புத அநுட்டானம். மேலும் ஸ்திரீகள் அடுப்பருகில் கிரஹகிருத்யங்களை வெகுநேரம் நடத்துகின்ற கடப்பாடுடையாரதலின் இம்மஞ்சள் பூச்சு அனல்தாக்காமல் பாதுகாக்கின்றது. என்னே நம்பூர்வர்களின் மதிநலம்! அக்கினிச் சட்டி வைத்து ஆடுகின்றவன் கையில் மஞ்சள் துணி காண்கலாம். குழந்தைகட்குப் பிறந்தது முதல் மஞ்சள் பூசுவது பண்டைய வழக்கம். சர்ம சம்பந்தமான சிரங்குகளை அறவே அழிக்கவல்லது பசு மஞ்சள். சுமங்கலிகள் நாடோறும் மஞ்சளை அடிக்கடி உபயோகித்து தீர்க்காயுளுடனிருந்து வந்தனர். இது மிகவும் பரிசுத்தமானது. தூரஸ்திரீகள் அக்காலத்து இதனை உபயோகிப்பதில்லை. தலையைவாரி முடிந்துகொண்டு மஞ்சள் பூசி அந்நீரைச்சிரஸில் தெளித்துக் கொண்டால் கங்காஸ்நாந துல்யம் என்பது

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க.)



417

## மஞ்சள் அழகு.

(8-ம் பக்கம் தொடர்ச்சி.)

சிலர் கொள்கை. அதை அநுஸரித்த அநுட்டானத்தை இன்றும் காண்கலாம். க்ஷுத்ர ப்ரயோகங்களால் அல்லற்பட்டலையும் ஸ்திரீகளுக்கு மஞ்சளை அபிமந்திரித்துக் கொடுத்து அதனையே அவர்கள் நிச்சயம் உபயோகித்து வர கெடுதலொழிந்து நன்மக்களைப் பெற்று மகிழ்ந்ததை யாமே கண்ணாரக் கண்டுளோம்.

மஞ்சள் தன்னுருவத்தை அழிய மாறி பெண்டிர்கட்கு அழகை அளிக்கின்றது தெப்பக்குளங்களில் ஆடவர் படித்துறை, பெண்டிர் படித்துறை என பிரத்தியேகத் துறைகள் உண்டு. பெண்டிர் 'நீராடும்' துறைகளில் படியெல்லாம் மஞ்சள் பூச்சே. 'என்ன மஞ்சள் குளிப்போர்' என்று வழங்கி வருவதுங்காண்க. விவாஹ காலங்களில் நலுங்கு நடப்பது எதைக்கொண்டு? ஏகதின விவாஹ அலங்கோலத்தில் எதைப்பற்றி விசனிப்பது? மஞ்சள் பொடியுடன் வாசனைத் திரவியங்களைச் சேர்த்து உபயோகிப்பதும் பிராசீன வழக்கு. இன்றும் ஸ்ரீ ஆண்டாள் ஸந்நிதிக்குப் போய்வருபவர்கள் புழுக்குப் பட்டை முதலியது வாங்கிவரக் காண்கின்றோமல்லவா?

பெருமாள், பிராட்டிகட்கு ஸமர்ப்பித்த மஞ்சள் பொடியை உருண்டையாக்கி நெற்றியிலும் பூணூலில் பிரம்ம முடிச்சிலும் நன்றாக அணிகிறோம். தமிழ் பிராட்டி பாஷை. இத்தமிழ்த்தேசம் அவளுடையது. மஞ்சளே திருவின் இன்னருள் சுரப்பது.

ஆலத்தி என்பதின் அருமையை அறிஞரே அறிகுவர். சுபகாரியங்களில் இதனை எப்படியெல்லாம் உபயோகிக்கிறார்கள் பாருங்கள். இதில் மஞ்சள் பிரதானம்.

மஞ்சள் நிறத்தில் வெற்றியுள்ளதென்பதை அரசியற் கட்சியினரும் நன்குணர்ந்து கடந்த தேர்தலில் மஞ்சள் பெட்டியை வைத்து ஆஸ்திகர்களும் இணங்குமாறு செய்த அற்புதமும் உலகு அறிந்ததே.

நவீன நாகரீகம் தலைவிரித்து நர்த்தனம் புரியும் இக்காலத்தில் இந்திய மாதர்கள் மஞ்சளின் மாண்பினை எள்ளளவும் அறியாமல் அதனை இகழ்வதினாலேயே நாடு க்ஷேமத்தை இழந்திருக்கிறது. சோப், பவுடர் முதலியன நம் நாட்டிற்கும் சுகாதாரத்துக்கும் ஒவ்வாதன. அதனால் வீணான பணச்செலவும் உண்டு. அநாரோக்கியந்தான் பெறலாம். பண்டைநாட்டொடங்கி பல்வகையிலும் நன்மையளிக்க வல்ல நம் நாட்டு சாமான்களை பகிஷ்கரித்து அந்நிய நாட்டுச் சரக்குகளை ஆவலுடன் வாங்கி அநர்த்தப்படுவது அழகாகுமோ? ஸ்திரீகளின் நன்மைக்காக பாடுபட்டு வருவதாகப் பறைசாற்றி சாரதாச்சட்டம் முதலியவற்றை உண்டாக்கியவர்கள் ஸ்திரீகள் மஞ்சளையே முக்கியமாக உபயோகிக்கவேண்டும், இல்லாவிடில் தண்டிக்கப்படுவார்கள் என்று ஒரு சிறிய இயக்கத்தை நடத்துவார்களா? மாற்றானுக் கிடங்கொடேல் என்பது தமிழ் மூதாட்டியின்வாக்கு. சுதர்ம பரிபாலனமே சுகமளிக்கும்.


### பொதுஜன வைத்திய உதவி.
டாக்டர் தேவையில்லை.

20௵ அனுபவம் பெற்றது. குறைந்தசிலவில் சிறந்தகுணம், தினசரி ஏற்படும் 10, விதமான நோய்களுக்கு 8, வித நெ. ஔஷதங்கள் எந்த நெ. மருந்தும் 3 அணாதான். அது 40. கேசுகளுக்குப் போதுமானது. அனுபவத்தில் அதிசய குணம் காணலாம்.

தயாரிப்பவர்:— J. & J. டிசேன் ஹைதராபாத்.
ஏஜண்டு T. R. கோபாலய்யங்கார்,
12. பாணாதுறை சந்நதி கும்பகோணம்.
மற்றவிபரம் தபாலின் மூலம்.


## ஓர் அநுதாபக்கூட்டம்.

மஹாக்நிசித்தும், தர்மசாஸ்த்ரவேத்தாவும், நித்யகர்மாநுஷ்டான நிரதரும் கவிதாகேசரியும் வேதபாராயணாதிதர்மங்களை நடத்தியவருமான பிரும்மஸ்ரீ யாக தீக்ஷிதரென்னும் அன்னையூர் வெங்கட்ராம தீக்ஷிதர் காலமானதைக் குறித்து சென்னை தம்புசெட்டி வீதி சாந்தாச்ரமத்தில் ஓர் ஸபை கூடிற்று. பிரும்மஸ்ரீ அபிநவ வ்யாஸ ச்வேதாரண்யம் நாராயணய்ஜ்வா அவர்கள் அக்ராஸனம் வஹித்து அவரது குணங்களை ச்லோகமாக எழுதி உபன்யஸித்தார். பிரும்மஸ்ரீ ஜயராம சாஸ்திரிகள் முதலிய பல பண்டிதர்கள் உபன்யஸித்தார்கள்.

முடிவில் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் பண்டிதர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்து வந்தநவழிபாடு கூறினார்.

நமது நிருபர்.

## உப்பிலியப்பன் ஸன்னிதி.

### திருநக்ஷத்ர உத்ஸவம்.

நாளது பஹுதான்ய-௵ ஆடி-௴ 24உ (8—8—38) திங்கள்கிழமை பூராட நக்ஷத்திரத்தில் ஸ்ரீமதித்யாதி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனுடைய வர்ஷத்திருநக்ஷத்ரமானதால் ஆடி-௴ 22உ (6—8—38) சனிக்கிழமை முதல் திவ்ய பிரபந்தம், வேதபாராயணம், ஸ்ரீ பாஷ்யம் முதலானவை தொடங்கி, உப்பிலியப்பன் ஸன்னிதியில் நந்தவனத்திலுள்ள ஆச்ரமத்தில் ஸ்ரீமதித்யாதி பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீரங்கநாதமஹாதேசிகனெழுந்தருளியிருந்து நடத்துகிறபடியால் ஷை திருநக்ஷத்திர மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளி பூர்த்தி செய்து ஸ்ரீமத் பெரியஸ்வாமி அநுக்ரஹத்தைப் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கப் படுகிறதென்று சிஷ்யர்கள் அறிவிக்கிறார்கள்.

## திருவிடைமருதூர்.

### ஸநாதன தர்ம யுவர்களின் பாதசார யாத்திரை.

ஹிந்துதர்ம பிரசார நிமித்தம் தற்சமயம் அசாஸ்திரீய மசோதாக்கள் சட்ட சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் சமயத்தில் மேற்படி மசோதாக்களுக்கு எதிராக பிரசாரம்செய்யும்பொருட்டு காவேரிப்பூம்பட்டிணத்திலிருந்து ஒரு வாலிப கோஷ்டியினர் நாளது ஜூலை மாதம் 26-ந்தேதி செவ்வாய்க்கிழமை கிளம்பி பாதசாரியாக தஞ்சாவூர், திருச்சி, வடாற்காடு, தென்னாற்காடு, செங்கல்பட்டு, சித்தூர், நெல்லூர் முதலிய ஜில்லாக்களிலுள்ள பல கிராமங்களுக்குச்சென்று அங்கங்கே பொதுக்கூட்டங்கள் நடத்துவார்கள்.

29—7—38 வெள்ளிக்கிழமை காலை சிதம்பரம். 30—7—38 சனிக்கிழமை காலை நன்ஜலூர். மாலை குமாரக்ஷி. 31—7—38 ஞாயிற்றுக்கிழமை காலை காட்டுமன்னார்குடி, மாலை ரெட்டியூர். 1—8—38 திங்கட்கிழமை காலை குலோத்துங்கநல்லூர், மாலை கங்கைகொண்டசோலபுரம். 2-8-38 செவ்வாய்க்கிழமை காலை உடையார்பாளையம், மாலை அரியலூர். 3—8—38 புதன்கிழமை காலை பாலூர். 4—8—38 வியாழக்கிழமை காலை பிக்ஷயாண்டார்கோவில், மாலை ஸ்ரீரங்கம், திருவன்னிக்காவல்.

ஏ. குப்புசாமி.

(தொடரும்.)

## கோச்சியில் தீண்டாமை விலக்கு.

### ஸர்க்கார் தலையிடமுடியாது.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொச்சி சட்டசபையில் ஒரு மான்ய பிரேரணையின் மீது விவாதம் நடக்கையில் மெம்பர் ஒருவர் வெட்டுப் பிரேரணைகொண்டு வந்து தீண்டாமை விலக்கைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். கவர்ன்மெண்ட் தரப்பில் பதில் அளிக்கையில் தீண்டாமை விலக்கு விஷயத்தில், கவர்ன்மெண்டார் தலையிடமுடியாதென்று சொல்லிவிட்டார்கள். வெட்டுப்பிரேரணை நிறைவேறியதாயினும் கவர்ன்மெண்டார் அதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கமாட்டார்கள்.

## தஞ்சை எம். எல். ஏக்கள்.

### காங்கிரஸ் ஆக்ஞையை மீறினர்.

தஞ்சை ஜில்லா பிரதிநிதிகளாக விளங்கும் ஸ்ரீமான்கள் பூவராஹ அய்யங்கார், நாடிமுத்துப் பிள்ளை இருவரும் காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறியும், காங்கிரஸுக்கு விரோதமாயும் வேலைசெய்த குற்றத்திற்காக தமிழ் நாடு கார்யக்கமிட்டியால் தண்டிக்கப்பட்டனர். அவ்விருவரும் 3 வருஷ காலங்கள் வரையில் எந்தக் காங்கிரஸ் கமிட்டிகளிலும் மெம்பர்களாயிருக்கக் கூடாதென்று விலக்கப் பட்டனராம்.

## ஆத்தங்குடி ஸநாதன ஸபை.

### ஐந்தாவதாண்டு நிறைவுவிழா.

நிகழும் வெகுதான்ய-௵ ஆடி ௴ 21உ (5—8—38) வெள்ளிக்கிழமை காலை முதல் ஷை சபையின் ஐந்தாவதாண்டு நிறைவு விழா ப்ரும்மஸ்ரீ T. G. நாகரத்தின சாஸ்திரிகள் B.A. B.L. அவர்கள் தலைமையில் அறிஞர் பலர் சொற்பொழி வாற்ற சிறப்பாக நடைபெறும். ஆஸ்திகர்கள் விஜயம் செய்யும்படி வேண்டப்படுகிறது. தலைவர்கள் விஜயம் எதிர்பார்க்கப்படுகிறது. காரியதரிசி.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

சித்தசுத்தி அவசியமானதால் அதற்கு முக்ய சாதனமான கர்மயோகமும் கீதையின் பரம தாத்பர்யமென்று சொல்லுவதாகவும் நிரூபணம் செய்து பகவத்கீதா ஸம்பந்தமான பல சங்கைகளையும் அது ஸம்பந்தமாக பலரால் பலவிதமாக செய்யப்பட்டிருக்கும் சர்ச்சைகளையும் எடுத்துக்காட்டி வெகு அழகாக உபன்யசித்தார்கள். பிர்ம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுக்கும் அத்வைத ஸபையாருக்கும் வந்தனோபசாரங்கள் ஸங்கத்தின் காரியதர்சியால் கூறப்பட்டும் ஸ்ரீ பகவத் பாதாளுடைய பாதகமலங்களில் மஹாஜனங்களுடைய சாஷ்டாங்க நமஸ்காரங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் சபையானது முடிவடைந்தது.

N. ஸாம்பசிவ அய்யர். B. A. B. L., நாகை.


தக்க சமயம்! நல்ல லாபம்!
"Marriage Benefit Scheme"
"விவாஹ சஹாய தன ஏற்பாடு"
குறைந்த சந்தாவில் உயர்ந்த லாபம்
Rs. 500 Rs. 1000 Rs. 5000
இனி கல்யாணச் செலவைப்பற்றி கவலையே வேண்டாம்
மற்ற விபரங்கட்கு:—
A. Srinivasan, Representative,
The Kerela G.E. Life Offices, Quilon.
No. 8, Pachayappa Mudali Street,
Kumbakonam.

215242

419

## மதிப்புரை.

### த்ரி பில்வ தள சம்பூ.

ராமேச்வரம் ஸம்ஸ்கிருத பாடசாலையின் மாஜி பிரின்ஸ்பாலான பிரம்மஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் பி. ஏ. பி. எல். அவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட மேற்கண்ட புஸ்தகம் வரப்பெற்றோம்.

ஸ்ரீமான் சாஸ்திரிகள் இந்தியா முழுவதும் தாம் சுற்றுப்பிரயாணம் செய்தகாலத்தில் தமக்கு ஏற்பட்ட அநுபவங்களையும், அங்காங்குள்ள தேவாலயம், மடம், புண்ய தீர்த்தம், ரயில்வேஸ்டேஷன்கள், அழகிய பிரஸித்த கட்டிடங்கள் முதலியவற்றின் விவரங்களையும் இந்த புஸ்தகத்தில் அழகிய சுலோக, வாக்ய நடையில் வர்ணித்திருக்கிறார். திருச்சியிலிருந்து ஆரம்பித்து, ஜம்புகேச்வரம், ஸ்ரீரங்கம், திருவாதி, சென்னை, துங்கபத்ரா, பண்டாபுரம், பம்பாய், நாஸிக், பிரயாகை, காசி முதலிய நகரங்களிலுள்ள ஒவ்வொரு விசேஷங்களையும் முதல் தளத்தில் வர்ணித்திருக்கிறார். இரண்டாவது தளத்தில் காசியிலுள்ள முக்ய ஸ்நான கட்டங்கள், தேவாலயங்கள் ஹிந்து யூனிவர்ஸிடி முதலியவை வர்ணிக்கப்படுகின்றன.

மூன்றாவதில் ஆக்ரா டாஜ்மஹால், பிருந்தாவனம், மதுரா, டெல்லி, முதலிய நகர விசேஷ வர்ணனமும், கல்கத்தா முதல், ராமேஸ்வரம் வரையிலுள்ள விசேஷங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்புஸ்தகம், தேசயாத்ரை செய்கிறவர்களுக்கு மிகுந்த உபயோகமுள்ள வழிகாட்டியாயிருப்பதுடன் அங்காங்குள்ள வைதிக, லௌகிக விசேஷங்களையும் நன்கு அறிந்து கொள்ள மிகவும் உபயோகமுள்ளதாகும்.

ஸ்ரீவெங்கடாத்வரீ இயற்றிய விச்வகுணாதர்சம்போல் இப்புஸ்தகம் இக்காலத்திய நூதன பாரததேசத்தின் நிலைமையை தெளிவாக விளக்குவதாகும்.

பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரின் சிறந்த கவிதா சக்தியும், அழகிய வாக்ய ரசனையும் ரஸிகர்களால் போற்றத்தக்கவை.

36 விதமான வ்ருத்தங்களில் சுலோகங்களை அமைத்திருப்பதும் பிரம்மஸ்ரீ சாஸ்திரியாரின் பாண்டித்யத்தை விளக்கக்கூடியதாயிருக்கிறது. மதுரையில் ஆசிரியரிடம் கிடைக்கும்.

### மேல்மங்கலம் ஆஸ்திக ஜனசபை.

ஆனி-மீ 29, 30ம் தேதிகளில் மாலை 4-மணிமுதல் 6-மணிவரை இரண்டு தினங்களிலும் சபை அத்யக்ஷர் பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யரவர்களின் தலைமையின்கீழ் வீரபாண்டி பிரம்மஸ்ரீ K. R. சதாசிவாசம்மம் அவர்கள் முறையே மேனாட்டு நாகரீக அலங்கோலம் என்னும் பொருள்பற்றியும் சீர்திருத்தக்காரர்களின் விஷமம் என்னும் பொருள்பற்றியும் எளிய நடையில் விரிவாய் சொற்பொழி வாற்றினார்கள். ஏராளமான ஜனங்கள் சிரவணம் செய்தனர். உப அத்யக்ஷர் பிரம்மஸ்ரீ ப. விஸ்வநாதய்யரவர்களால் வந்தன மொழி கூறப்பட்டு 30ம்தேதி மாலை 6-மணிக்கு சபை நிறைவெய்தியது.

காரியதரிசி.

### உமாமஹேச்வரபுரம்.

#### லக்ஷார்ச்சனை

ஸ்ரீதியாகராஜப்பெருமான் கிருபையை முன்னிட்டும் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களின் பூர்ணாநுக்ரஹத்தினாலும் "ஈஞ்சல்" என்கிற "உமாமஹேச்வரபுரம்" ஸ்ரீமங்களாம்பிகா ஸமேத ஸ்ரீபாதாளேச்வர ஸ்வாமி ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நாளது வெகுதான்ய-ஹூ ஆனி-மீ 20உ (4-7-38)ஸோமவாரம் ஸிம்ம லெக்னத்தில் ஸம்பூர்த்தியாய் நடைபெற்றது. அன்றிரவு மகாபிஷேகமும் மறுதினம் மங்களவாரம் முதல் மண்டலாபிஷேக ஆரம்பமும் ஸ்ரீமங்களாம்பிகைக்கு ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம புரஸ்ஸரமாய் லக்ஷார்ச்சனாரம்பமும் நடைபெற்று வருகிறது. நாளது ஹூ ஆவணிமீ 3உ (18-8-38) குருவாரம் மண்டலாபிஷேக பூர்த்தியும் ஆகம சாஸ்திரப்படிக்கும் வேதபாராயணமும் பிராம்மண ஸந்தர்ப்பணமும் நடத்துவதாய் ஸ்ரீபரமசார்யாள் அவர்களின் பூர்ணாநுக்ரஹத்தை முன்னிட்டு நிச்சயித்திருக்கிறபடியால் பக்தகோடிகள் அனைவரும்வந்து தரிசித்து ஸகல இஷ்டஸித்தியும் அஷ்டைச்வரியமும் பெற்றுய்யும் வண்ணம் கோரப்படுகிறது.

ஒரு நிருபர்

### நமது பாரததேச வாசிகளுக்கு ஓர் விண்ணப்பம்.

(1) கிராமதேவதை, குலதேவதை, கோவில், திருவிழா, முதலிய தெய்வழிபாடுகளைக் கைவிடாதீர்கள். (2) கிருமப்பொதுவான நடபாதை, நந்தவனம், கோவில்குளம், விடுதி, சாவடி, மடம், தண்ணீர்வசதி, இவைகளை சீர்திருத்தம் செய்துகொள்ளுங்கள். (3) கிரும மணியம், கர்ணம், பெரியதனக்காரர், வித்வான், பிரபு, ஏழை, சகலரும்கிராமத்தில் ஒற்றுமையாக இருங்கள். (4) பிறவிச்சாதிவழக்கம்,கிராமவழக்கம் தெருவின் சௌகர்யம் குல குருவணக்கம் முதலிய காரியங்களைக் கைவிடாதீர்கள், (5) சண்டைச்சச்சரவுகளை கிராமத்திலேயே ஒழுங்காகச் சமாசப்படுத்திக் கொள்ளுங்கள். (6) கச்சேரி கோர்ட்டு பிருது, ஸ்டாம்பு, மவுண்டு, கஞ்சா, கள், சூது, சினிமா, டிராமா, காப்பி, சோப்பு, சுருட்டு, பீடி, சோடா, முதலிய அனாவசியச்சிலவு வேண்டாம். (7) பிறந்த ஜதியே உயர்வு என்றும் ஜாதிவிட்டுச் ஜாதிபுகுதல் இழிவு என்றும் நினைத்து பிரவிச்ஜாதி வழக்கங்களை கைவிடாதீர்கள். (8) பிறருடைய ஜாதிமத தேச ஆசாரங்களை நிந்திக்கவேண்டாம். (9) இந்தியப் பெருமை கூறும் புருதனநூல்களையே பிள்ளைகளுக்கு கற்பியுங்கள். (10) பிறவிச்ஜாதிபாஷை ருஜா பாஷை தேசபாஷை இவைகளை தங்கள் சொந்தக் கிருமத்திலேயே தகுந்த உபாத்தியாயரைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கவேண்டும். (11) இந்த ஆண் பெண் மக்களை அன்னியமத ஆசானிடத்தில் கல்வி கற்க அனுப்பவேண்டாம். (12) பாரததேச மத, ஜாதி, தெய்வம், தீர்த்தம்,வனம், மலை, நதிப் பெருமைகள் அடங்கிய பிரசுரங்களை மிகவும் அன்புடன் ஆதரவாகக் கேளுங்கள்.

K.R ஸதாசிவப் பிரும்மம்.

### திருவாரூர்.

#### ஓர் பெரியாரின் தேகவியோகம்.

கும்பகோணம் ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஸந்நிதான வித்வத் கோஷ்டியில் பிரகாசித்து வந்தவரும், சிறு வயதிலிருந்து அநேக ராஜாங்கங்களிலிருந்தும், சமஸ்தானங்களிலிருந்தும் பரிசுகள் பெற்றவரும், மிகவும் கியாதி பெற்றவருமான பிரும்மஸ்ரீ சேத்தூர் சுப்பிரமணிய கனபாடிகள் தமதுஇல்லத்தில் அவரது 74 வது வயதில் பகுதான்யஹூ ஆடிமீ 4உ செவ்வாய்க் கிழமை யன்று காலை 8 மணிக்கு புத்திரர்கள் முன்பாக தேகவியோகமடைந்தார். பிரபல ஆஸ்திகசிகாமணிகளும் ஆரூர் வாசிகளுமாகிய அன்பர்கள் அன்னாரது பிரிவுக்கு வருந்துகின்றனர். அன்னவரது குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கிறோம். ந. நி.

### மஹாக்னிசித் மறைந்தார்.

சென்ற வெள்ளிக்கிழமை பிரம்மஸ்ரீ அன்னியூர் யாக தீக்ஷிதரெனும் பெரியார் தொண்ணூறுவது வயதில் திருவாமாத்தூரில் பூதவுடலை விட்டு யஜ்வாக்களது உலகை அடைந்தார், ஸ்வீகார புத்ரரான ஸ்ரீவத்ஸ ஸோமதேசர்மா அவர்கள் வந்து வைதீக கர்மாக்களை செய்து முடித்து மிகுதி கார்யங்களைச் சென்னையில் நடததுகிறார். தீக்ஷிதர்வாள் செய்த வேதபாராயண, மந்த்ர புஷ்ப, யக்ஞோபவீத கார்த்திக தீப, தநுர்மாஸ கட்டளை முதலிய தர்மங்களை ஸ்ரீவத்ஸ சர்மாவும் அ. வெங்கடரமணய்யரும், ஸாம்பமூர்த்தி கனபாடிகளும் நடத்தி வருவார்கள். ந. நி.


மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் சிலவு வேறு] [விலை அணு 0—8—0

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)
பிராம்மணர்களின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.
விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram

அக்ஷயதர்மம்

4-8-1938

| | |
|---|---|
| அ | ல |
| 23 | 31 |

215243
25 AUG 1938
MADRAS
425

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஞு ஆடி-மீ 20உ 1938ஞு ஆகஸ்டு-மீ 4உ | ஷ 31

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்த்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

விளம்பர விகிதம்
பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

### கிருஷிகர் கலஹம்.

அமிர்தஸரஸ்ஸின் ஆயிரக்கணக்கான கிருஷிகர்கள்சேர்ந்து ஊர்வலம் முதலிய ஆர்ப்பாட்டம் நடத்தினர். போலீஸ் தடையுத்தரவை மீறி பலாத்காரம் செய்தனர். போலீஸார் கூட்டத்தின்மீது தடியடி பிரயோகம் செய்தனர். பலர் காயமடைந்தார்கள்.

கிருஷிகர்கள் ஸத்தியாக்கிரஹ ஸபை ஏற்பட்டு சட்டத்தை மீற ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தினமும் 25பேர் கைதியாகி வருகின்றனராம்.

### ராஜாஜிக்கு "கொடும்பாவி"

ஹிந்தி எதிர்ப்புக்காரர்களும், சு. ம. காரர்களும் சேர்ந்து சென்னையில் கனம் ராஜகோபாலாச்சாரியாரைப்போல், "கொடும்பாவி" கட்டி இழுத்தும் ஆசந்தியில் பிரேதம் போல் தூக்கிக்கொண்டும் போய் எரித்தார். களென்றும் சென்னை சட்டஸபை மெம்பரான ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாசாரியர் 22உ மித்திரனில் குறிப்பிட்டிருக்கிறார். என்னே துஷ்டத்தனம்?

### தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.
கிடைக்குமிடம் :—
பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.

### முனிஸிபல் கௌன்ஸிலர் யோக்யதை.

பரோடாவில் சட்டம்.

முனிஸிபாலிடி முதலிய ஸ்தலஸ்தாபனங்களில் மெம்பர்களாயிருப்பவர்களுக்கு குறைந்த பக்ஷம் மெட்ரிக்குலேஷன் படிப்பாவது இருக்கவேண்டுமென்றும், பரீக்ஷை தேறாதவர்களாயிருந்தால் அவர்களுடைய திறமையை ஒருவித பரீக்ஷைமூலம் சோதிக்கவேண்டுமென்றும் பரோடாவில் ஒரு சட்டம் செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

எல்லாவிடங்களிலும் இத்தகைய ஏற்பாடு அவச்யமே.

### ஆமதாபாத்தில் மது விலக்கு ஆரம்பம்.

பம்பாயில் ஆமதாபாத் நகரத்தின் எல்லைக்குள் மது விலக்கு ஆரம்பமாகியது. கள்ளு சாராயக்கடைகள் எடுக்கப்பட்டு விட்டன. ஆரம்பக்கொண்டாட்டம் பலமாக நடந்தது. பொது ஜனங்கள் உத்ஸாகம் காட்டினர். இந்த வேலையைக்கவனிக்க ஸ்திரீ போலீஸாரும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

### வியாபாரக்குறி மசோதா.

தெய்வங்களை வியாபாரச்குறியாக வைக்கக் கூடாது.

இந்தியா சட்ட சபையில் வந்துள்ள வியாபாரக்குறி மசோதாவைப்பற்றி பொது ஜனங்கள் அபிப்பிராயம் தெரிவிக்குமாறு ஸர்க்கார் கேட்டிருக்கின்றனர். ஹிந்துதெய்வங்களின் படங்களையோ பெயர்களையோ சுருட்டு முதலிய வஸ்துக்களில் வியாபாரக்குறியாக வைப்பதை வெகு பேர்கள் ஆக்ஷேபித்து அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

இதைப்பலப்படுத்தி இன்னும் ஏராளமான பேர்கள் ஸர்க்காருக்கு எழுதவேணும்.

### திருவாங்கூரில் ஹர்த்தால் மாணவர் ஆர்ப்பாட்டம்.

பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ்காரர்களை தடியால் போலீஸார் அடித்ததற்காக திருவாங்கூர் மாணவர்கள் ஹர்த்தால் செய்தனர். அன்று பள்ளிக்கூடம் போகாமல் நின்றனர்.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| R. S. சர்மா பிரசுரங்கள் | | | |
| ஆதித்யஹ்ருதயம் | 0 | 2 | 6 |
| கும்பேச்வர } சாரங்கபாணி } ஸ்தோத்ரம் | 0 | 1 | 0 |
| நவக்ரஹஸ்தோத்ரம் | 0 | 4 | 0 |
| ஸாவித்ரீ ஸ்தோத்ரம் | 0 | 3 | 0 |
| ஹரிசந்த்ரோபாக்யானம் | 1 | 4 | 0 |
| ஸ்கந்த ஸ்தோத்ரம் | 0 | 2 | 0 |

ப்ரும்மஸ்ரீ குகதாஸ் S. V.நடராஜய்யர் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| அத்யாத்மயோகம் or ஆத்மபயிற்சி ஏப்பர் | 2 | 8 | 0 |
| காலிகோ | 3 | 0 | 0 |
| சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலாமந்த்ரம் | 0 | 2 | 0 |

Books by Mr. S. Aiyadurai Iyer

| | | | |
|---|---|---|---|
| Adwaida Siddhantham | 0 | 8 | 0 |
| Ramayana as on illus tration Yoga Sastra | 0 | 8 | 0 |
| Bharatham and Bagavatham in the light of Yoga Sastra | 0 | 4 | 0 |
| பொதுமத போதினி | 0 | 4 | 0 |

ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்நகோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது விலை. ரூ. 1 8 0

மதருஸ் லாஜர்னல் அச்சுக்கூடம் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| From his masters Lips | 1 | 0 | 0 |
| Hindu Ideal | 3 | 0 | 0 |
| வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்) | ரூ. | அ. | ப. |
| தின்பேப்பர் | 5 | 0 | 0 |
| திக்பேபர் | 4 | 0 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.
Town High School Road, Kumbakonam

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

# காயத்ரீஜப காலநிர்ணயம்.

(ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உ வே புத்தங்கோட்டம் ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதுகிறார்)

இவ்வருஷத்திய காயத்ரீஜப காலவிஷயமாக சிலநாள்களுக்குமுன் ஸ்ரீ அஹோபில மடத்தில் வித்வான்கள் செய்த தீர்மானத்தைப்பற்றி ஜூலை 28-உ ஆர்யதர்ம பத்திரிகையில் ஸ்ரீ உ. வே. கோபால தேசிகாசாரியரும், மற்றுஞ் சிலரும் சில ஆக்ஷேபங்களை எழுதியிருப்பதால் அந்த ஆக்ஷேபங்களினால் சம்சயமுண்டாகாதபடி ஸ்ரீ அஹோபில மடத்தில் செய்த தீர்மானமே ப்ராமணங்களுக்கு பொருந்தியிருப்பதால் அதுவே ஸரியானது என்பதையும், அவ்விஷயத்தில் செய்துஇருக்கும் ஆக்ஷேபங்கள் ப்ராமணங்களுக்கு பொருந்ாதவைகள் என்பதையும் வ்யக்தமாக ப்ராமாணிகர்களுக்கு தெரிவிக்கிறோம்.

தசநிர்ணயம் முதலிய பல தர்மசாஸ்த்ர நிபந்தனக்ரந்தங்களிலிருக்கும் "ஸந்திஸ் ஸங்கவத: என்கிற வசநத்தின்படி ஸங்கவ காலமென்று சொல்லப்படும் பகல் 12-வது நாழிகைக்குமேல் மத்யந்தினம் என்று சொல்லப்படும் இரண்டு பாகமாக பிரிக்கப்பட்ட பகல் நாழிகையின் முன்பாகத்தின் கடைசி காலத்திற்கு முன் பூர்ணிமை ப்ரதமை திதிகளுடைய ஸந்தி ஏற்பட்டால் அன்றயதினத்திலேயே உபகர்மாவையும் காயத்ரீஜபத்தையும் செய்யவேண்டும் என்று ஏற்படுவதால் இவ்வருஷத்தில் பூர்ணிமை ப்ரதமைகளுடைய ஸந்திகாலம் அவ்விதமே ஸம்பவிப்பதால் உபாகர்மாவையும் காயத்ரீ ஜபத்தையும் ஒரே தினத்தில்தான் செயய வேண்டும் என்று ஸ்ரீ அஹோபிலமடத்தில் வித்வான்களால் தீர்மானிக்கப்பட்டது.

இவ்விஷயத்தில் அக்னிஹோத்ரம் ஸ்ரீ உ. வே. கோபால தேசிகாச்சாரியர் ஆர்யதர்ம பத்திரிகைமூலம் ஆக்ஷேபித்து இருக்கும் விஷயம் என்னவென்றால்:—

மீமாம்ஸா சாஸ்திரத்தில் ஒரு இடத்தில் தீர்மானிக்கப்பட்ட நியாயத்தை அதைப் போன்ற மற்ற இடங்களிலும் அங்கீகரிப்பது ப்ரஸித்தம். ஆகையினால் இஷ்டிகால ஸந்தியை நிர்ணயிக்குமிடத்தில் ப்ரதமை திதியினுடைய நாழிகையின் வ்ருத்திக்ஷயத்தை கூட்டியும் குறைத்தும் கொள்ளவேணும் என்று தர்மசாஸ்திரங்களில் சொல்லியிருப்பதால் உபாகர்மவிஷயத்திலும் அந்த நியாயத்தை அங்கீகரிக்கவேண்டும்.

அப்படி அங்கீகரித்தால் இவ்வருஷத்தில் பர்வ, ப்ரதிபத்துக்களுடைய ஸந்தியானது மத்யந்தின காலத்திற்கு பிறகே ஸம்பவிக்கிறபடியால், முதல் தினத்தில் உபாகர்மாவையும், மறுதினத்தில் காயத்ரீ ஜபத்தையும் செய்யவேண்டுமே அல்லது இரண்டையும் ஒரே தினத்தில் செய்யக்கூடாது.

இப்படி ஒப்புக்கொள்ளாவிடில் மீம்ஸா சாஸ்த்ர விரோதமுண்டாகிறது என்பது தான்.

இவ்விஷயம் ப்ராமணங்களுக்கு பொருந்தாது என்பதை ஸ்பஷ்டமாக நிரூபிக்கிறோம்.

வேதவாக்யங்களிலாவது தர்ம சாஸ்திர வாக்யங்களிலாவது ஸம்சயம் ஸம்பவித்தால் அதை வேத விருத்தமல்லாததைக்கொண்டு நிர்ணயித்துக்கொள்ளவேண்டும் என்கிற "ஆர்ஷம்தர்மோபதேசம்ச" என்கிற மநுவசனத்தின்படியே மீமாம்ஸாந்யாயத்தைக் கொண்டு அர்த்தநிர்ணயம் செய்வது ப்ரஸித்தமே.

ஆனால் ஸரியான காரணத்தைக்கொண்டு அர்த்த விசேஷத்தை ஸ்தாபிக்கிற வாக்யம் தான் ந்யாயப்ரதிபாதக வாக்யம் ஆகும்.

ப்ரக்ருதத்தில் ஸ்ரீ உ. வே. கோபாலதேசிகாச்சாரியர் ஸ்வாமியினால் ந்யாயப்ரதிபாதக வாக்யமாக அங்கீகரிக்கப்படுகிற காத்யாயன, லோகாக்ஷி, காலாதர்ச வசனங்களினால் பூர்ணிமையான பர்வஸந்திகாலத்தை ப்ரதமையினுடைய வ்ருத்திக்ஷயத்தை அனுஸரித்து தீர்மானிக்கவேண்டும் என்று விதி ஏற்பட்டு இருந்தாலும் அதற்கு ஸாதகமான ஹேது ஒன்றும் காட்டப்படவில்லை.

ஆகையினால் இவ்வசனங்கள் ந்யாய வாக்யங்களாகமாட்டா. இந்த ஸந்திகால நிர்ணயம் ந்யாயஸித்தயல்லவாகையினால் இதை உபாகர்மஸ்தலத்தில் அதிதேசம் பண்ண வேணுமென்பதற்கும் காரணமில்லை.

இவ்வசனங்கள் பர்வப்ரதிபத்ஸந்தி விஷயத்தில் ப்ரதமையின் காலத்தை கூட்டவும் குறைக்கவும் விதிக்கிறபடியால் இவை விதாயக வசனங்களேயாகும்.

ஆகையினால் ஒரு விஷயத்தில் சொல்லப்படும் விசேஷ விதியை அந்த விஷயத்தில் மட்டும் உபயோகப்படுத்த வேண்டுமேயல்லது மற்ற விஷயத்திலும் அதை உபயோகிப்பது ப்ராகாணவிருத்தமாகும். ஆகையினலன்றோ ப்ரயாஜம் முதலிய யாகங்களை எங்கும் அநுஷ்டிப்பதில்லை.

ஆனால் உத்தரமீமாம்ஸையில் மைத்ரேயீ ப்ராம்மணத்தில் இருக்கும் த்ரஷ்டவ்ய: என்கிற விதிவாக்யத்தினால் சொல்லப்படும் தர்சன ஸமானகாரத்வமானது மற்றெல்லா வித்யையிலும் அங்கீகரிக்கப்படுவதுபோல, காத்யாயனாதிகளுடைய வசனங்களினால் விதிக்கப்படும் ஸந்திகாலஹ்ராஸவிதியானது இஷ்டிவிஷயத்தில் சொல்லப்பட்டு இருந்தாலும் மற்றும் உபாகர்ம விஷயத்திலும் ஏன் அங்கீகரிக்கப்படக்கூடாது என்று சிலர் ஸந்தேஹிக்கலாம்.

இவ்விஷயத்தை ஜிஜ்ஞாஸாதிகாண ச்ருதப்ராகாசிகையில் ஸந்தேஹித்துக்கொண்டு 'த்ருஷ்டவ்ய:' என்பது மைத்ரேயீ ப்ராம்மண ப்ரகாணத்தில் சொல்லப்பட்டு இருப்பதால் மற்றை ப்ரகாணங்களில் இதை அங்கீகரிக்கக்கூடாதுதான்.

ஆனாலும் குரு லகு விகல்பாநுப பத்திரூப அர்த்த ஸாமர்த்யமாகிற லிங்கமானது ப்ரகாணத்தைக் காட்டிலும் ப்ரபலமாகையினால் அதினால் பாகாண பலம் பாதிக்கப்பட்டு எல்லா வித்யைகளிலும் அங்கீகரிக்கப்படுகிறது. என்று ஸமாதானம் சொல்லப்பட்டு இருக்கிறது. அம்மாதிரி ப்ரகாண பலத்தை பாதிக்கக்கூடிய லிங்கங்கள் இங்கு ஒன்றுமில்லையாகையால் இந்த விதியை உபகர்ம விஷயத்திலும் அந்வயிப்பது உசிதமில்லை.

இங்கு ஸ்ரீ-உ-வே கோபாலதேசிகாச்சாரியர் ஸ்ரீ அஹோபில மடத்து வித்வான்கள் 'ஆவர்தன' மத்யான்ன பதார்த்த விஷயத்தில் இஷ்டிந்யாதிதேசத்தை ஒப்புக்கொண்டதாக எழுதி இருப்பதும் சரியல்ல. ஆவர்தனசப்தத்திற்கு அர்த்தம் எது என்பதை வைதிக ஸார்வபௌமனால் ஸ்தாலீபாக ப்ரகாணத்தில் எழுதப்பட்டிருக்கும் "ரவிராவர்த்ததே யஸ்மாத் ததாவர்த்தனமிஷ்யதே" என்கிற ப்ரமாண வசனத்தின்படியே சப்தார்த்தத்தை அங்கீகரிப்பதாக எழுதப்பட்டு இருக்கிறதேயொழிய ந்யாதிதேசத்தை ஷை வித்வான்கள் அங்கீகரிக்கவுமில்லை, அப்படி எழுதவுமில்லை. இதை ந்யாயமாகவே அங்கீகரிக்காதவர்களுக்கு அதிதேசப்ரஸக்தி ஏது? ஆப்த வாக்யத்தால் சக்திக்ரஹமானது, ஏற்படுகிறது என்கிறபடியே ஆவர்த்தந பதார்த்தத்தை ஆப்தவாக்யமான "ரவிராவர்தெதெ" என்கிற ப்ரமாண வசநத்தைக்கொண்டு நிச்சயித்து இருக்கிறார்கள்.

ஸந்திகாலவ்யவஸ்தா விதி எப்படி ந்யாயமாகாதோ, அப்படியே சப்தசக்தி நிர்ணயமும் ந்யாயமாகாது. ஆகையினால் இஷ்டி காலாநுபந்தியான ஸந்திகால வ்யவஸ்தாபக வசநங்கள் இஷ்டிப்ரகாணத்திலேயே படிக்கப்பட்டு இருக்கிறபடியாலும் உபாகர்மப்ரகாணத்தில் இல்லாததாலும் இஷ்டிஸந்திமாத்ர விஷயகமாகவேயாகும்.

இந்த விஷயமானது மாதவீயதிதி நிர்ணய காண்டம் முதலிய க்ரந்தங்களில் ப்ராக்ருதவசனங்களை எழுதி

तदेवंसंधिं विज्ञाय तदनुसारेण अन्वाधानेष्टी अनुष्ठेये

என்று எழுதியிருப்பதால் இவ்வசனங்கள் அந்வாதானேஷ்டிமாத்ர விஷயங்கள் என்று நிச்சயிக்கப்பட்டு இருக்கிறது.

இவ்வசனங்கள் உபாகர்ம விஷயத்திலும் ப்ரவர்த்திக்குமானல் (ப்ரக்ருதமில்லாத அநுவாதாநத்தை இங்கு சேர்த்து எழுதி இருப்பது போல) ஸ்ரீகோபால தேசிகாச்சார்யருக்கு திருவுள்ளமான உபாகர்மாவையும் சேர்த்து उपाकर्मान्वाधानेष्टय: अनुष्ठेया:

என்று எழுதியிருப்பார் என்பது கவனிக்க வேணும்.

இங்கு கோபாலதேசிகாச்சாரியர் இஷ்டியினுடைய ஸந்திகாலத்தினுடைய வ்யவஸ்தாவிதாயக ப்ராக்ருத வாக்யங்களில் இஷ்டி என்னும் உபாகர்மா என்னும் விசேஷித்து சொல்லப்படாததினால் பர்வப்ரதிபத் ஸந்தியை உபஜீவித்துவரும் தர்மங்கள் யாவற்றிற்கும் உபயோகப்படக்கூடியதாகவே வசன சைலீ இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்.

பிரமாணமாக எடுக்கப்பட்ட காத்யாயந லோகாக்ஷி காலாதர்சவசனங்களில் இந்த ஸ்வாமியினால் சேர்த்து எழுதப்பட்டு இருக்கும்-பர்வப்ரதிபத்ஸந்தியை உபஜீவித்து வரும் தர்மங்கள் யாவற்றிற்கும் உபயோகப்படக்கூடியதாகவே வசனசைலீ இருக்கிறது என்கிற விஷயம் சொல்லப்படவேயில்லை.

ஷை வசனங்களில் உத்தரதிதியினுடைய ஹ்ராஸவ்ருத்திகளை அனுசரித்து பூர்வதிதியினுடைய காலத்தைக்கூட்டியோ குறைத்தோ கொள்ளவேணுமென்றிவ்வளவுதான் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகையினால் இந்த ஸ்வாமி திருவுள்ளப்படி இவ்வசனங்கள் மற்ற விஷயங்களிலும் ப்ரவர்த்தித்தால் அபரான்ன ஸம்பந்தமுள்ள பூர்ணிமையான கண்டதிதி விஷயத்திலும் ப்ரதமைதிதியினுடைய ஹ்ராஸவ்ருத்திக்கு அனுகுணமாக நாழிகைகளை கூட்டவும் குறைக்கவும் ஸம்பவிக்கலாமாகையால் கண்டதிதி விஷயத்தில் எந்த தினத்தில் அபரான்னத்தில் அதிககாலம் திதிவ்யாப்தி இருக்கிறதோ அதே ச்ராத்த தினமாகும்" என்கிற சாஸ்த்ரவ்யவஸ்தையும் மாறிப்போய்விடும்.

இது சாஸ்திரங்களுக்கும் லோகாநுஷ்டானத்திறகும் விருத்தமாகும்.

தவிறவும் உபாகர்ம விஷத்திலும் "பர்வண்யௌ தயிகே" என்கிற வசனத்தின்படி ஔயிகதிநத்தில் ஹ்ராஸவ்ருத்தி மூலமான க்ஷேபம் ஏற்பட்டு அஔதயிக தினத்தில் உபாகர்மாநுஷ்டானம் பண்ணும்படியும்ஸம்பவிக்கும்.

ஆகையினால் உத்தர திதியினுடைய வ்ருத்திக்ஷயங்களை பூர்வதிதியும் அனுஸரிக்க வேண்டும் என்கிற வசனங்கள் உபாகர்ம விஷயத்தில் ப்ரவர்த்திக்க யோக்யங்களல்ல என்று சொல்லுவதுதான் நியாயமாகும்.

ஆகவே ஏற்கனவே ஸ்ரீ அஹோபிலமடத்தில் வித்வான்கள் தீர்மானித்தப்படி உபாகர்மாவையும் காயத்ரீ ஜபத்தையும் ஒரேதினத்தில் அனுஷ்டிப்பதுதான் சாஸ்த்ரஸம்மதமான விஷயம்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)



# ஹிந்து தர்ம வீர் ஜதா.

## சுற்றுப்பிரயாண விபரம்.

ஸநாதனதர்ம பிரசாரம் நிமித்தம், பாதசாரியாக காவேரி பட்டணம் இருந்து யாத்திரை செய்வதென்று ஸங்கல்பித்துக்கொண்டு ஸ்ரீ ஆதி சங்கரபகவத்பாதாளுக்கு "அத்வைதமேவஸத்யம்" என்று அசரீரி வாக்கு பிறந்த இடமும் பட்டணத்தடிகளுக்கு முக்திக்கு வழிகாட்டிய ஸ்தலமும் ஆகிய "மத்யார்ஜுனம்" என்கிற திருவிடைமருதூரிலிருந்து ஷை ஜதா ஸ்ரீ மகாலிங்கசுவாமி தர்சனம் செய்துகொண்டு சென்ற ஜூலை-மீ 25உ திங்கள்கிழமை ஸாயங்காலம் சுமார் 7-மணிக்கு "ஸநாதநதர்மகி ஜே, ஜேய ஸ்ரீராம் சந்தர்ஜீக்கு" என்ற கோஷங்களுக்கிடையே ஒரு வாலிபகோஷ்டியினர், ஹனுமத்வஜத்துடன் ஷை திருவிடைமருதூர் ரயில்வே ஸ்டேஷனில் மாயவரத்துக்கு ரயில் ஏறினார்கள்.

மாயவரம் ஜங்ஷனில் இறங்கி ரயிலடிக்கு அருகாமையில் உள்ள சத்திரத்தில் இரவு தங்கினார்கள்.

26—7—38 காலையில் காவேரி நதியில் ஸ்நானம் ஸந்தி முதலியதுமுடித்துக்கொண்டு "புகார்" என்னும் காவேரிப்பட்டணத்துக்கு மோட்டாரில் பிரயாணமானார்கள். ஷை ஜதா காவேரிபட்டணத்தை அடைந்தவுடன் அவ்வூர் புது அக்ரஹாரவாசிகள் ஷை ஜதாவை வரவேற்றார்கள். பின்பு ஷை ஜதா காவேரிநதியின் சங்கமத்திலும் மகாநதி சங்கமத்தில் ஸ்நாந தர்ப்பணாதிகள் முடித்துக்கொண்டும் அங்கு ஆடி அமாவாசையை முன்னிட்டு கூடியிருந்த பிர்ம்மாண்டமான கூட்டத்தில் அனேக தர்ம சம்பந்தமான துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். பின்பு தாங்களே சுயம்பாகம் செய்துகொண்ட உணவை உண்டு சென்னை பிரபல வக்கீலும் ஆசிரியருமான ஸ்ரீமான் கே. எஸ். வெங்கிட்டாமணி அய்யர் அவர்கள் கிருஹத்தில் இளைப்பாறினார்கள். இரவில் அவ்வூர் அக்கிரஹாரத்து பிரபலஸ்தர்களினால் ஜதா இளைஞர்களுக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு அன்றிரவே சுமார் 8-மணிக்கு பாதசாரியாக "ஸநாதந தார்மிகே ஜே" என்ற கோஷங்களுக்கு இடையே ச்வேதாரண்யம் என்கிற திருவெங்காடு க்ஷேத்திரத்துக்கு பிரயாணமானார்கள். இவ்விடம் இருந்து தான் ஷை ஜதாபாதசாரியாக யாத்திரைக்கு ஆரம்பமாயிற்று. திருவெண்காடு போய்சேரும்வரையில் வழிநெடுக பஜனைகள் செய்துகொண்டும் ஜனங்களுக்கு பிரசுரங்களை வழங்கிக்கொண்டும், சாரதாசட்டத்தை ஒழிக்க ஏற்பாடு செய்யும்படிக்கும் தற்சமயம் சென்னை சட்டசபையில் விவாதத்துக்கு வந்திருக்கும் ஸமூக குறைபாடு நீக்க மசோதா "Civil disabilities Removal Bill பஞ்சமர்கள் ஆலயப்பிரவேச மசோதா" இவைகள் மத சம்பந்தமானவைகள் என்றும் பொது மக்களால் அவைகள் அங்கீகரிக்கப்படமாட்டாதவைகள் என்றும் இவைகளை செய்யாமல் இருக்க ஜனங்கள் கிளர்ச்சிசெய்ய வேண்டும் என்றும் ஜனங்களை வேண்டிக்கொண்டார்கள். வழி நடுவில் உள்ள ஸ்ரீவள்ளீசுரம், சாயாவநம் முதலிய தேவாலயங்களை தெரிசித்துக்கொண்டும் சென்றார்கள். அன்றிரவே சுமார் 10 மணிக்கு திருவெண்காட்டை அடைந்தார்கள்.

மறுநாள் (27-7-38) காலை திருவெண்காடு முக்கிய தெருக்கள் வழியாக பஜனை செய்துகொண்டும் ஸ்ரீஸ்வேதாரண்ய ஸ்வாமி கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய சென்றார்கள். பின்பு ஷையூரில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட பூர்வாசார்யாளான பிரசித்தி பெற்ற ஸ்ரீ சதாசிவப்ருஹ்மேந்திரஞானியின் சாக்ஷாத் குருவுமான ஸ்ரீ பரமசிவேந்திர ஸரஸ்வதியின் சமாதி (அதிஷ்டானம்) யில் தெரிசித்துக்கொண்டு பின்பு போஜனாதிகளை முடித்துக்கொண்டு அன்று மாலை 3மணிக்கு கால்நடையாக சீர்காழிக்கு பிரயாணமானார்கள். அன்றுமாலையே ஷை ஜதா, சீர்காழிக்குச்சென்று ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் இருந்து பஜனை செய்து கொண்டு ஷையூர் முக்கிய தெருக்கள் வழியாக வழி முழுவதும் துண்டு பிரசுரங்களை வழங்கிக்கொண்டும் செல்லும் பொழுது அவ்வூர் பிரபல வக்கீலான மகா-ா-ஸ்ரீ சுந்திரசாரியார் அவர்களும் இன்னும் மற்றவர்களும் எதிர்கொண்டழைத்தார்கள். பின்பு ஷை ஜதா— ஷையூர் ஸ்ரீ தாளாடன் சந்நதியை அடைந்தவுடன் அங்கு முகாம் செய்து இருக்கும் ஸ்ரீ ஆவணி சிருங்கேரி மடம் ஸ்ரீ கார்யம் அவர்களும் அவ்வூர் பள்ளிக்கூடத்தலைமை உபாத்தியாயர் அவர்களும் மற்றும்பின்னும் பலர்களும் உத்ஸாகத்துடன் ஷை ஜதாவை வரவேற்றார்கள். பின்பு ஸ்ரீ ஆவணி சிருங்கேரி மடாதிபதி அவர்களுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு ஸ்ரீ தாளாடன் புஷ்கரணியில் சந்தியாவந்தனங்களை முடித்துக்கொண்டும் ஸ்ரீ தாளடன் சன்னிதியில் ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீ ஆவணி மடத்தின் பூஜையை தரிசித்துக்கொண்டார்கள். ஷை மடத்தின் ஸ்ரீஸ்வாமிஜியின் முன் எச்சரிக்கையின் பேரில் அன்று ஏராளஜனக்கூட்டம் கூடியிருந்தது. ஸ்ரீஸ்வாமி அவர்களின் முன்னிலையிலும் அவர்கள் அக்ரசனத்தின் கீழும் ப்ரும்மஸ்ரீ R. முத்து கிருஷ்ணசர்மா அவர்களும், ஸ்ரீ A. குப்புசாமி B.A., அவர்களும், சாரதாச்சட்டத்தைக்கண்டித்தும், தத்காலம் சென்னை சட்ட சபையில் ராவ்பகதூர் M. C. ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்ட "சமூக குறைபாடு நிவர்த்தி மசோதா, பஞ்சமர்கள் ஆலயப்பிரவேச மசோதா" இவைகளைவிளக்கியும்கண்டித்தும் சொற்பொழிவு செய்தார்கள். ஸ்ரீ சுவாமி அவர்களின் முடிவுரைக்குப்பிறகு சுமார் 11 மணிக்கு கூட்டம்முடிவடைந்தது. ஷை கூட்டத்துக்கு காங்கிரஸ் யுவர்களும் கலந்து கொண்டார்கள். அன்றிரவு ஷை ஜதாவுக்கு ஷை மடத்து அதிகாரிகளால் விருந்தளிக்கப்பட்டது.

மறுநாள் காலை 28-7-38 ஷை தர்மவீர் ஜதா, ஸ்ரீ ஆவணி ஸ்ரீசிருங்கேரி சங்காரச்சார்யாள் அவர்களிடம் உத்திரவுபெற்றுக்கொண்டபொழுது ஸ்ரீ ஆசார்யாள் அவ்யுவர்களுக்கு ஸ்ரீசாரதாவின் பிரசாதத்தையும், ஓர் சிறிய பண முடிப்பையும் அளித்து அநுக்கிரஹித்தார்கள். சுமார் 10 மணிக்கு மணலி சின்னய்யா முதலியார் தர்மபரிபாலனத்துக்குள்பட்ட புத்தூர் என்னும்கிராமத்திலுள்ள வேத பாடசாலைக்கு ஷை ஜதா யுவர்கள் விஜயம் செய்தார்கள், அங்கு ஷை பாடசாலை நிர்வாகிகளும் வித்யார்த்திகளும் அவர்களை நன்கு உபசரித்தார்கள். பின்பு, ஹிந்து தர்மத்தை காப்பாற்ற வேண்டிய விதத்தையும், அவர்கள் ஒவ்வொரு ஊரிலும் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும் ஷை வித்தியார்த்திகளுக்கும் அங்குள்ள மற்றவர்களுக்கும் உபந்யாஸம் செய்துவிட்டு மாலை சுமார் 3மணிக்கு ஆணிக்காரன்சத்திரம் (Coloroon) புறப்பட்டார்கள். ஷை ஜதா ஆணிக்காரன்சத்திரத்துக்கு பஜனையுடன் அடைந்தவுடன் அவ்வூர் கிராம பஞ்சாயத்து போர்டு அக்கிராஸனரும் அவ்வூர் போஸ்டு மாஸ்டரும் மற்றும் யுவர்களும் ஜதாவை வரவேற்றார்கள். பின்பு, அவர்களால் ஸ்தலஸ்தாபன சத்திரத்தில் கூட்டப்பட்ட கூட்டத்துக்கு ஷை ஜதாவைச்சேர்ந்தவர்கள் விஜயம் செய்து "தீவிர ப்ரசாரம் செய்யும்படிக்கும், பிரதி மாதம் சாரதாச்சட்டம் அமுலுக்கு வந்த தினத்தன்று ஷை சட்டத்தையும், அசாஸ்திரீயமாக இயற்றப்பட்ட இதர சட்டங்களையும், அசாஸ்திரீயமாக சென்னை சட்ட சபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் மத சம்மந்தப்பட்ட மசோதாக்களை கண்டிக்கும் படிக்கும், அவ்வூர் சுற்றிலும் 5 மைல் சுற்றளவில் உள்ள ஓட்டர்கள் அனைவரிடமும், மனச்சாட்சிக்கு விரோதமன்னியில் நம் மதத்தை காப்பாற்றுபவர்களுக்கே ஓட்டு அளிக்கும்படி கேட்டுக்கொள்ளும்படிக்கும் பிரசாரம் செய்ய வேணுமென்றும் பேசினார்கள். அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு தீர்மானித்தும்ஷை கூட்டத்திலேயே, சென்னை பிரதம மந்திரிக்கு, ராவ்பகதூர் M. C. ராஜா அவர்களால் கொண்டு வந்திருக்கும் மேலே கண்ட இரண்டு மசோதாக்களையும் கண்டித்து ஓர் மகஜர் அனுப்புவதாக அவ்வூர் வாசிகள் ஏற்பாடு செய்து கையெழுத்துக்களும் வாங்கிவருகிறார்கள். பின்பு ஷை யூர் பிரபலஸ்தர்கள் ஷை ஜதாவை சிதம்பரத்துக்கு வழியனுப்ப கூட வந்து பின்பு திரும்பிச்சென்றார்கள். பின்பு ஷை ஜதா சிதம்பரத்துக்கு பிரயாணமானார்கள்.

மறுநாள் (29-7-38) சிதம்பரம் R. M. S. வித்யாசாலையில் சுமார் 4½ மணிக்கு, காங்கிரஸ்காரர்களும், சுயமரியாதைக்காரர்களும், பின்னும் பொது ஜனங்களும், அடங்கிய ஓர் பொதுக்கூட்டம் ஒன்று பிரம்ம ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தண்டபாணி சுவாமி தீக்ஷிதர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஜதாவின் நோக்கங்களையும் கொள்கைகளையும் விளக்கிய பிறகு பிரம்மஸ்ரீ சோமசேகர தீக்ஷிதர் அவர்கள் பிரம்மஸ்ரீ R. முத்துகிருஷ்ணசர்மா அவர்கள், மாஜி சப் ஜட்ஜ் ஸ்ரீமான் G. R. சுப்பராயர் அவர்கள் முதலியவர்கள் "நமது மதத்தின் தற்கால நிலைமையும் நமது கடமையும்" என்பதுபற்றி விஸ்தரித்துப்பேசினார்கள். மாலை 7மணிக்கு கூட்டம் கலைந்தது. உடனே ஷை தர்ம வீர் ஜதா கோஷ்டியினர் ஷை R. M. S. பாடசாலையிலிருந்து கீதங்கள் முதலியவைகளை பாடிக்கொண்டு ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஆலயத்துக்கு சென்று புஷ்கரணியில் சந்தியாவந்தனம் செய்து முடித்துக்கொண்டு ஸ்ரீ நடராஜ சந்நிதிக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு பின்பு ஷை R. M. S. பாடசாலையில் தங்கி இருந்தார்கள். ஷை கூட்டத்தன்று அவ்வூர் தீவிர காங்கிரஸ் வாதிகளின் சிலர்களின் மோட்டார்கார்கள், தர்ம வீர் ஜதாவின் வரவையும் பொதுக் கூட்டத்தையும் அறிவிக்கிற துண்டு பிரசாரத்தை அவ்வூர் எல்லாதெருக்களிலும் கொடுத்துக்கொணடு போனது குறிப்பிடத்தக்கதே.

மறுநாள் (30—7—38) சிதம்பரத்துக்கு அருகாமையிலுள்ள நாஞ்சலூர் என்னும் கிராமத்தை ஷை ஜதா அடைந்து அவ்வூர் யுவர்களால் ஷை ஜதா வரவேற்கப்பட்டது. அன்று ஷை ஜதாவின் யுவர்களால் தயாரிக்கப்பட்ட உணவை அருந்திவிட்டு பின்பு அன்று சாயந்திரம் ஷை யூர் மாரியம்மன் கோவில் சன்னதியில் அவ்வூர் வாசிகளால்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கம் தொடர்ச்சி).

மீமாம்ஸாந்யாயத்திற்கு இங்கு ப்ரஸக்தியே இல்லாததினால் மீமாம்ஸாந்யாயங்கள் மறைந்துபோக நேரிடுமென்று இந்த ஸ்வாமி பயப்படவேண்டியதில்லை.

இந்த விஷயத்தில் ஸ்ரீ உ. வே. கோபால தேசிகாச்சாரியர் ஸ்வாமியினால் எழுதப்பட்டிருக்கும் மற்றும் சில விஷயங்களுக்கும் பதில் எழுதவேண்டியதவச்யமாக இருந்தாலும் அவைகளை எல்லாம் எழுதுகிற சிரமமில்லாமல் நேரில் விசாரித்து தீர்மானிப்பதே உசிதமாக தோன்றுவதால் இங்கு முக்யமான அம்சத்தைமட்டும் விசாரித்து எழுதி இருக்கிறோம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஸூ ஆடி-மீ 20உ

## ராதாபாய் மசோதா.

டாக்டர் ஸுப்பராயன் மனைவியான ஸ்ரீமதி ராதாபாய் இந்தியாசட்டஸபை மெம்பரானவுடனேயே தமது பெயர் பத்திரிகைகளில் பிரஸித்தியடையும் வழியைத் தேடிக்கொண்டுவிட்டார். இப்போது இந்தியப் பத்திரிகைகளில் இவரைப்பற்றிய பிரஸ்தாபமே அதிகம் காணப்படுகிறது. புருஷர்கள் ஏக பத்நீ விரதத்தைக் கைகொள்ளவேண்டுமென்பதில் இந்த அம்மாளுக்கு விசேஷ சிரத்தையும் கவலையும் ஏற்பட்டுவிட்டதாம். இதற்காக இவர் இந்தியா சட்டஸபையில் ஓர் மசோதா கொண்டுவந்திருக்கிறார். இதற்கு ஆதரவுதேட இவர் ஊர்சுற்றி வருகிறார். இந்த மசோதாவை ஆதரிக்கவேண்டுமென்று இவரும் இவரது ஸகிகளான ஆசாரத்திருத்த கோஷ்டி ஸ்திரீகளும் வற்புறுத்தி வருவதில் ஹிந்து குடும்பநிலைமையும், புருஷர்கள் ஸ்திரீகளை கொடூரமாக நடத்துவதாக ஆதாரமற்ற புகாரும் பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்துள்ளன, ஏற்கனவே ஹிந்து தர்மங்களையும், குடும்ப நிலைமைகளையும்பற்றி திருத்தக்காரர்கள், பிறர் நகைக்கும்படி பொய்கூற்றுகளைக் கற்பித்து துஷ்ட பிரசாரம் செய்துவந்திருக்கிறார்கள். அது போதாதென்று இந்தமசோதா வியாஜத்திலும் நமது தர்மங்களும், நமது குடும்ப வாழ்க்கையும் இவர்களால் இழிவுபடுத்தப்பட்டுவருவது கண்டிக்கத்தக்கதாகும். நமது சாஸ்திரங்களும், குடும்பவியவஸ்தைகளும் ஸ்திரீகள் விஷயத்தில் செய்திருக்கும் நியமங்கள் மிக உயர்ந்தவை. சாஸ்திரங்கள் ஸ்திரீகளுக்கு கொடுத்திருக்கும் கௌரவமோ அளவிடக்கூடியதன்று. கிரஹ கார்யங்களில் ஸ்திரீகள் ராணிகளாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். தம்பதிகளின் நேசபாவமோ ஹிந்து தர்மத்தில் வற்புறுத்தப்பட்டிருப்பதுபோல் எந்த மதத்திலும் கிடையாது. தற்போதுள்ள உலக நவீன நாகரீக அலங்கோலத்தில் மற்றதேச ஸ்திரீகளைவிட ஹிந்து ஸ்திரீகளே ஸகல விதத்திலும் கௌரவமாக நடத்தப்பட்டும் உயர்ந்த நிலைமையில் வைக்கப்பட்டும் இருக்கிறார்களென்பதை விவேகிகள் அறிவது கஷ்டமல்ல.

இந்த நிலைமையில் ராதாபாய் மசோதாவிற்கு அவச்யமென்ன? ஸ்திரீகளைப் புருஷர்கள் கொடுமையாக நடத்துவதாயும், தள்ளிவிட்டு வேறு விவாஹம் செய்வதாயும் இவர் கூறும் புகார் உண்மையானதா? ஹிந்துக்களில் புனர் விவாஹம் செய்துகொண்ட புருஷர்களின் ஸங்க்யை என்ன? எவ்வளவு ஸ்திரீகள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? இந்த விவரத்தை ராதாபாய் அம்மாள் வெளிப்படுத்துவாரா? கோடிக்கணக்கான ஜனங்களுள்ள ஹிந்துக்களில் ஏதோ மூலையில் இரண்டொரு தவறுகள் இருப்பது ஸாதாரணம். அதை உதாஹரணமாகக்காட்டி இத்தகைய நிர்ப்பந்தச் சட்டத்தை செய்யப் புறப்படுவது விவேகமா? இந்த மசோதா முற்றிலும் அநாவச்யம். ராதாபாய் தமது பிரஸித்திக்காக இதை உபயோகித்துக் கொள்ளலாமேயல்லது உண்மையில் இது நமக்கு அவச்யமில்லை, இந்த மசோதாவால் தடுக்கப்படவேண்டிய பெரிய அபாயமொன்றும் இப்போது நம்மில் கிடையாது.

சில காரணங்களை முன்னிட்டு ஒருவர் இரண்டாவது மனைவியை மணக்க சாஸ்திரமநுமதிக்கிறது. உதாஹரணமாக ஸந்ததி விருத்தியை உத்தேசித்து ஒருவன் தனக்குப் பிள்ளையில்லாத காரணத்தால் மறு மனைவியை மணக்கவேண்டியிருக்கலாம். பிரஜா விருத்தியை ஹிந்து மதமானது ஓர் உயர்ந்த தர்மமாகக் கருதுகிறது. பிள்ளையில்லாதவனுக்கு பரலோக நன்மை குறையுமென்று சொல்லப்படுகிறது. பித்ரு ருணம் என்றும் அது வர்ணிக்கப்படுகிறது. இதை நிவர்த்திக்க முயற்சிக்கவேண்டியது தர்மமாகிறது. இந்த தர்ம ஸம்பந்தமான உரிமையை இந்த மசோதா பாதிக்கக்கூடியது.

மேலும் ஸ்திரீகள் யாவருமே ஸாதுக்களென்று சொல்லிவிட முடியாது, பர்த்தாவை ஹிம்ஸித்துப் பலவிதத்திலும் தொந்திரவு செய்கிறவர்கள் பலர் இருப்பது ஸஹஜம். வியபிசாரம் முதலிய துஷ்கிருத்யமுள்ள ஸ்திரீகள் இருக்கலாம். இவ்வாறு உண்மையான தோஷமுள்ள ஸ்திரீகளை விலக்கி வேறு விவாஹம் செய்துகொள்ளாமல் புருஷன் எப்படி ஜீவிப்பது? இந்த மசோதாவானது புருஷனுக்குள்ள இந்த நியாயமான உரிமையையும் பறிப்பதாயிருக்கிறது. துஷ்ட ஸ்திரீகள் இந்த மசோதாவினால் தப்பிக்கொண்டு சௌகர்யமடையவும், ஸாதுக்களான புருஷர்கள் ஆயுள் முழுவதும் கஷ்டப்படவேண்டியும் ஆகலாம். மேலும் இந்த மசோதாப்படி, ஒருவன்மறுவிவாஹம்செய்துகொள்ளவேண்டுமானால் அவன் கோர்ட்டில் ஆஜராகி மனைவியை விலக்குவதற்குக் காரணம் காட்டவேண்டிவரும். மனைவியும் கக்ஷியாடுவாள். இருவருடைய சண்டைகளும், சில்லரைத் தகாறுக்கும்கூட கோர்ட்டுகளில் வெளிவந்து சிரிக்க நேரிடும். மேற்றிசைகளில் விவாக ரத்து வழக்குகள் போல் இந்தியாவிலும் தம்பதி தர்மம் மிக ஆபாஸமாகிவிடும். இன்னும் எவ்வளவோ அனர்த்தங்கள் விளையும்.

மேலும் எதை எடுத்தாலும் சட்டமூலம் நிர்ப்பந்தம் செய்வதென்பது வரவர அதிகரித்து வருவதை நாம் கவனிக்கவேணும். இந்த புத்திப்போக்கானது காங்கிரஸ் மெஜாரிடி ஏற்பட்ட பிறகு அதிகரித்து வரும்அபாயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. நமது தர்மங்களைப் பற்றி நாம் இஷ்டப்படி பேசவோ, அனுஷ்டிக்கவோ இப்போது நமக்கு ஸ்வாதந்திரியமில்லை. காலக்கிரமத்தில் இந்தகஷ்டம் அதிகரிக்கும் என்பது நிச்சயம். ஆகையால் சட்டஸபைகளில் மத விஷயமான மசோதாக்கள் கொண்டுவரும் விஷயமாக மந்திரிகளும் பொதுஜனங்களும் சேர்ந்து ஓர் நியமத்தை ஏற்படுத்திவைக்கவேணும். அப்படியில்லாதவரையில் மனம் போனபடி யெல்லாம் மசோதா கொண்டுவந்து மதத்தை அழிப்பது அதிகரித்து தேசத்தில் பெரிய அமைதிக்குறைவுநேரிடும்.

ராதாபாய் மசோதாவை காங்கிரஸ் வாதிகள்கூட ஏற்கவில்லையென்று தெரிகிறது. இந்தியா சட்டஸபையில் இந்த மசோதாவை கக்ஷி மசோதாவாக அங்கீகரிக்க ஸ்ரீமான் புலாபாய் தேசாய் ஸம்மதிக்கவில்லை, பற்பலவிடங்களிலும் இதற்கு பல சட்டங்களை காங்கிரஸ்காரர் செய்து மதாபிமானிகளின் மன வருத்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஆதலால் இத்தகைய மசோதாக்களைக் காங்கிரஸ்கார்கள் திரஸ்கரிக்க வேண்டியது கடமை என்பதை நாம் ஞாபகப்படுத்துகிறோம்.

## காயத்ரீஜப கால நிர்ணயம்

(அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியர்)

இவ்விஷயமாக ஸ்ரீஅஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உ.வெ.புத்தங்கோட்டம் ஸ்ரீ நிவாஸாசாரியஸ்வாமியால் எழுதப்பட்ட வ்யாஸம் இன்று 2ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது சென்ற வாரம் நாம் எழுதியற்கு பதிலாக வெளிவந்திருக்கிறது. சென்றவாரம் நமது வ்யாஸத்தில் பர்வப்ரதிபத்ஸந்தியை அறியும் வழியானது இஷ்டி ப்ரகாணத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் பர்வப்ரதிபத்ஸந்தியை உபஜீவித்து நிற்கும் வேறு கர்மாக்களுக்கும் அது உபயோகப்படுமென்று வசநசைலியைக் கொண்டு தெரிவதாக எழுதி இருந்தோம். ஸ்மார்த்தஸ்தாலீபாக விஷயத்தில் இந்த விதி பின்பற்றப்பட்டுவருவது நமக்கு ஆதாரமாக இருந்துவருகிறது என்றும் காட்டி இருந்தோம். அவைகளை மறுத்து வெளிவந்துள்ள ஸ்ரீநிவாஸாசாரியஸ்வாமி வியாஸத்திலும் இந்த முக்ய விஷயத்திற்கு நேர்முகமான பதில் காணப்படவில்லை. இஷ்டிக்கு ஏற்பட்டதாகச் சொல்லப்படும் ஷெடி வழியானது, வசநங்களில் இஷ்டிபதம் இல்லாததால், இஷ்டிமாத்ர விஷயமென்று ஸங்கோசப்படுத்த ப்ரமாணமில்லையென்ற நமது முக்யவாதமானது இப்பொழுதும் மறுக்கப்படவில்லை.

“பரேஹ்நிகடிகாந்யூந:” என்ற விதியானது உபாகர்ம விஷயத்தில் வாரதென்பதற்கு ஒரே காரணம்தான் ஏற்கனவே இந்த ஸ்வாமியால் காட்டப்பட்டது. அதாவது தோழப்பர் தசநிர்ணயத்தில் ஸ்தாலீபாக பிரகாணத்தில் “அத்ர” என்று சொல்லியிருப்பதை இஷ்டி விஷயமாக அர்த்தம் செய்துகொண்டு, அந்த பலத்தாலேயே இஷ்டிந்யாயம் உபாகர்மாவுக்கு வாரதென்று சொல்லியிருந்தார்கள். இது போதாதென்றும், இது அந்யதாஸித்தமாகிவிடலாமாகையாலும், ஆர்ஷவசனமோ, நியாயமோ ஏதாவது இருந்தாலல்லது இஷ்டி நியாய உபஜீவனத்தைத்தடுக்க முடியாதென்றும் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். ஸ்தாலீபாகம் கிரஹணம் போன்றவைகளில் இஷ்டி நியாய அதிதேசமுண்டென்று நிபந்தனகாரர்கள் அங்கீகரிப்பதிலிருந்து பர்வப்ரதிபத்ஸந்தி உபஜீவனமுள்ள எல்லாவிடத்திலும் இது வரலாமென்பது தெளிவாகிறதாகக் கூறியுள்ளோம்.

ஆயினும் இப்போது ஸ்ரீபுத்தம் கோட்டம் ஸ்வாமி எழுதியுள்ள லேகத்தில் அந்த விஷயங்களுக்கு பதில் சொல்லியிருந்தால் திருப்தியாயிருக்கும். இஷ்டி நியாயத்தை உபஜீவிக்கலாமென்பதற்கு ஸ்தாலீபாகாதிகள் நமக்கு பிரமாணம். உபஜீவிக்கக் கூடாதென்பவர்களுக்கோ யுக்தியை விட வேறு பிரமாணமில்லை. ஆகவே நமது கக்ஷி முன்போலவே இருக்கிறது. ஆயினும் புத்தங்கோட்டம் ஸ்வாமி நமது லேகத்தில் சில அம்சங்களை அந்யதாவாகத் திருவுள்ளம்பற்றியிருக்கும்விஷயத்தை இங்கு எடுத்துக்காட்டி நாம் ஸமாதானம் சொல்லவேண்டியது அவசியமாகிறது.

### மீமாம்ஸா நியாய பிரஸ்தாபம்.

காத்யாயநாதி வசனங்கள் நியாயங்களா, விதாயகங்களா என்ற விசாரத்தில் இந்த ஸ்வாமி இறங்கி நாம் நியாயமென்று ஒப்புக்



கொண்டதாகத் திருவுள்ளம் பற்றுகிறார். மீமாம்ஸா நியாயத்தைப்பற்றி ஓரிடத்தில் நாம் சிறிது பிரஸ்தாபித்திருப்பதே இந்தக் குழப்பத்திற்குக் காரணமென்று தெரிகிறது. மீமாம்ஸா நியாய விரோதம் வருமென்று நமது லேகத்தில் நாம் குறிப்பிடவில்லை. அதாவது பிரக்ருத விஷயத்தில் குறிப்பிட்ட ஒரு அதிகாரண நியாயவிரோதம் வருகிறதென்று நாம் காட்டவில்லை. சிரௌத கர்மாக்களுக்குச் சொல்லப்பட்ட சில தர்மங்கள் விசேஷ விதியில்லாதவரையில் ஸ்மார்த்த தர்மங்களுக்கும் வருமென்றும், பொதுவான வசனம் இஷ்டி ப்ரகாணத்தில் எடுக்கப்படுவதாலேயே அவை இஷ்டி விஷயமென்றால் சிரௌத தர்மங்களைக்கொண்டு நிரூபிக்கப்படும். மீமாம்ஸா நியாயங்கள் ஸ்மார்த்த தர்மாதிகளில் வாராமல்போய் விடுமென்றும், ஆகையால் இஷ்டிக்காவென்று நிபந்தனங்களில் சொல்லப்பட்ட போதிலும்கூட ஸந்தி நிர்ணய விதியானது உபாகர்மாதி விஷயத்திலும் வாலாமென்றே நாம் சொல்லியிருந்தோம். அப்படி வருவதை ஸ்தாலீபாகாதிகளில் இந்த ஸ்வாமியும் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இதனால் காத்யாயநாதி வசனங்களை நியாயங்களென்று நாம் ஒப்பியதாக ஆகாது. அவை விதாயகங்களாகவே இருப்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. விதாயகங்களாக இருந்தால்கூட பல தர்மங்களை இதர விஷயங்களில் ஏறிட்டு நிர்ணயிப்பது சிரௌத ஸ்மார்த்தாதி பல விடங்களில் கண்ட விஷயம். இதற்கு கிரஹ்ய ஸூத்ரங்களிலும் நிபந்தனங்களிலும் ப்ராணீதாமோக்ஷணாதிகளில் பல உதாஹரணங்கள் உண்டு.

ஆகையால் காத்யாயநாதி வசனங்கள் விதாயகங்களாயிருந்தாலும் அவிருத்தமான இதரவிடங்களில் வரலாம். பர்வப்ரதிபத்ஸந்திரூப பிரத்யபிஜ்ஞை இருக்குமிடங்களில் வரத்தடையில்லை. பிரயாஜதிருஷ்டாந்தம் ஸரியன்று. அது தர்சபூர்ணமாஸ அங்கமாக ஏற்பட்டது. காத்யாயநாதி வசனங்களோ ஸ்வதந்திரங்கள்.

மேலும் காத்யாயநாதி வசநங்கள் அநாரப்யாதீதங்களாகத் தெரிகிறது. ஆதலால் ஸந்தி பத வத்தான எல்லா விதிகளுக்கும் பொதுவானவைகளாகலாம். ஆதலால் ஷெடி வசனங்கள் விதாயகங்களாக இருந்தால்கூட உபாகர்மாதி விஷயத்தில் வரத்தடையில்லை. ஸ்தாலீபாக விஷயத்தில் வருவதும் இதற்கு உபபலமாகும். ஸ்தாலீபாக விஷயத்தில் காத்யாயந வசனம் வருவது, விதாயகமென்பதாலா? நியாயமென்பதாலா? நிபந்தனகாரர்கள் இந்த வசனங்களை இஷ்டி பிரகாணத்தில் எடுப்பதால்மட்டும் இதற்கு பிரகாண பாடமிருப்பதாகச் சொல்லமுடியாது.

ஆகையால் பிரகாணத்தை பாதிக்கூடிய லிங்கம் இங்கு அபேக்ஷிதமல்ல. இந்த இடத்தில் புத்தங்கோட்டம் ஸ்வாமி மைத்ரேயீப்ராஹ்மணம் முதலிய விஷயங்களில் செய்துள்ள சில சர்ச்சைகளும் இதனால் ஸமாதானம் செய்யப்பட்டதாகின்றனவாகையால் அவைகளை விட்டுவிடுகிறோம்.

### ஆவர்த்தந சப்தார்த்தம்.

“ஆவர்த்தன சப்தத்திற்குமட்டிலும் ஸ்தாலீபாக (அல்லது இஷ்டி) பிரகரணத்திலுள்ளதை அநுஸரிப்பதே நியாயம்,,

என்று முதல்லேகத்தில் இந்த ஸ்வாமி அங்கீகரித்திருக்கிறார். ஸந்தி விஷயத்தில் இஷ்டி நியாயத்தை ஒதுக்குவதும், ஆவர்த்தன சப்தார்த்தத்தில் மட்டும் அதை அங்கீகரிப்பதும் அர்த்த ஜாதீயமாயிருக்கிறதென்றும் இதற்கு என்ன நியாயமென்றும் நாம் கேட்டு இருந்தோம். இப்போது இந்த ஸ்வாமி எழுதியிருப்பதில், தாங்கள் இதை நியாயமாக ஒப்பவில்லையென்றும், தசநிர்ணயத்தில் ஸ்தாலீபாக பிரகாணத்தில்

“रविरावर्ततेयस्मात् तदावर्तनमिष्यते”. என்ற வசனப்படி அந்த சப்தார்த்தத்தை அங்கீகரிப்பதாயும் எழுதுகிறார். ஆப்தவாக்கியத்தால் ஏற்பட்ட சக்தி க்ரஹமே இது என்கிறார். இது எப்படியிருந்தாலும் ரவிராவர்த்ததே, என்ற வசனமானது இந்த ஸ்வாமிக்கு விருதமென்று நாம் கூறுகிறோம். இந்த வசனத்தின் உத்தரார்த்தத்தையும் சேர்த்து அர்த்தம் செய்ய வேண்டாமா? அப்படிப்பார்த்தால் ஆவர்த்தன சப்தமானது யாகத்திற்கு அபேக்ஷிதமான ஆவர்த்தனத்தைச்சொல்லும் ஸாமர்த்தியமுள்ளதாகவே தெரிகிறதேயல்லது பொதுவாக சக்திக்ரஹத்தை உண்டு பண்ண ஏற்பட்டதாகாது. அப்படியிருந்தால் உபாகர்மாவில் ஆவர்த்தன சப்தார்த்தநிர்ணயம் ஏற்படாது போய் விடும்.

आवर्तनात्परंसंधौ यागंकुर्यात्परेहनि ।

என்ற உத்தரார்த்தத்தில் யாகம் என்ற பதம் காணப்படுவதால் இங்குள்ள ஆவர்த்தன சப்தம் இஷ்டிமாத்ர விஷயமேயாகும். ஆகவே இங்குள்ள ஆவர்த்தன சப்தத்தை உபாகர்மாவுக்கு எப்படி கிரஹிப்பது? காத்யாயநாதி வசனங்களும் ஸ்தாலீபாக ப்ராகாணத்தில் தான் எடுக்கப்படுகின்றன. அவைகளில் இஷ்டியென்றோ, யாகமென்றோ ஸ்பஷ்டமானலிங்கம் ஒன்றும் காணப்படவில்லை. ஆகவே ஸமான பிரகாண படிதமான இரண்டு வித வசனங்களில் ஸ்பஷ்டயாக லிங்கமுள்ள “ரவிராவர்த்ததே” என்பதை உபாகர்மாவுக்கும் அநுஸரிப்பதும், யாதொரு லிங்கமும் இல்லாமல் பொதுவாகயிருக்கும் ஸந்தி நிர்ணய வசனங்களை மட்டும் உபாகர்ம விஷயத்தில் அநுஸரித்தால் சாஸ்திர விரோதம் வருமென்று வாதிப்பதும் பொருத்தமாயில்லை. ஆவர்த்தன சப்தார்த்த விஷயத்தில் அர்த்த ஜாதீயம் செய்யப்படுகிறதென்கிற நமது ஆக்ஷேபம் இன்னமும் முன்னை விட ஸ்திரப்பட்டிருக்கிறது.

### காலமாதவீயவாக்யம்.

ஸ்ரீபுத்தங்கோட்டம் ஸ்வாமி எழுதியுள்ள ஒரு விஷயத்தை நாம் எடுத்து உண்மையை விளக்கித் திருத்தவேண்டியது அவசியமாகிறது. காலமாதவீய இஷ்டி பிரகாணத்தில்

तदेवंसंधिं विज्ञाय तदनुसारेण अन्वाधानेष्टी अनुष्ठेये

என்று ஒரு வாக்யம் காணப்படுகிறது. இந்த வாக்யத்தில் அந்வாதானம், இஷ்டி என்கிற இரண்டு கர்மாக்களைக் குறிப்பிட்டிருப்பதுபோல் உபாகர்மாவையும் ஏன் குறிப்பிடக்கூடாது? அப்படியானால்

उपाकर्मान्वाधानेष्टयः अनुष्ठेयाः

என்றல்லவோ எழுதவேணும்? அப்படி எழுதாத காரணத்தால் இங்கு உபாகர்ம விஷயத்திற்கு ஸம்பந்த மில்லையென்று ஏற்படுகிறது என்று ஸ்ரீ புத்தங்கோட்டம் ஸ்வாமி எழுதியிருக்கிறார். இங்கு இஷ்டி பிரகாணத்தில், பிரக்ருதமில்லாத அன்வாதானத்தை எடுத்ததுபோல் உபாகர்மாவையும் ஏன் எடுக்கக் கூடாதென்று கேழ்கிறார். இஷ்டி பிரகாணத்தில் அந்வாதானம் அப்ரக்ருதமா? இதை அந்த ஸ்வாமி கவனிக்கவில்லை. அந்வாதானமென்பது இஷ்டியில் அடங்கிய ஒரு பிரயோக விசேஷமேயல்லது உபாகர்மாவைப்போல் தனி கர்மாவல்ல. இஷ்டியின் ஆரம்பத்தில் செய்யப்படும் ஸமித் ஹோமத்திற்கு அந்வாதானமென்று பெயர். இதை யாகத்திற்கு முதல் நாள் செய்து மறுநாள் பிரதிபத்தில் இஷ்டியை முடிக்கவேண்டும். பர்வ-பிரதிபத் ஸந்தியில், என்றைக்கி அந்வாதானம் செய்வது, என்றைக்கி யாகம் செய்வதஎன்பதை இஷ்டிபிரகாணத்தில் விசாரிக்க வேண்டியது அவச்யமில்லையா? அதற்காகவே மேற்படி வாக்யம் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே அன்வாதானமும் இஷ்டியில் சேர்ந்ததேயல்லது தனி கர்மாவல்ல. ஆதலால் அது அப்ரக்ருதமல்ல. ஆகையால் அந்வாதானத்தை எடுத்ததுபோல் உபாகர்மாவையும் ஏன் எடுக்கவில்லையென்ற கக்ஷியே ஏற்பட நியாயமில்லை. இஷ்டியைத்

### விடுமுறை அறிவிப்பு.

ஆவணி அவிட்டத்தை முன்னிட்டு அடுத்த வாரம் நமது ஆபீஸுக்கு விடுமுறையாகையால் அடுத்தவாரம் ஆர்யதர்மம் வெளிவராது.

—— மானேஜர்.

### அறிவிப்பு.

இவ்வாரம் உபாகர்ம விஷயமான கடிதங்கள் அதிகம் கிடைத்ததாலும், அடுத்த வாரம் பத்திரிகை விடுமுறை காரணமாக அவைகளை இவ்வாரத்திலேயே பிரசுரிக்கவேண்டியிருந்ததாலும் பத்திரிகை வெளிவர தாமஸம் நேர்ந்தது. ஸாமோபாகர்ம விஷயமான பாக்கி விஷயங்கள் அடுத்த பத்திரிகையில்.

மானேஜர்.

தவிர வேறு கர்மா ஒன்றையும் எடுக்காததுபோல் உபாகர்மாவையும் இங்கு எடுக்கவில்லையென்பதே உண்மை. ஆதானம், அந்வாதானம் இரண்டையும் ஒன்றாக இந்த ஸ்வாமீ நினைத்து எழுதிவிட்டதாகவே தெரிகிறது. ஆதலால் இந்தக் கக்ஷியும் பிரயோஜனப்படாது. இங்கு ஸ்தாலீ பாகத்தை ஏன் எடுக்கவில்லை? ஸ்தாலீ பாகத்தில் இஷ்டிந்யாயம் அங்கீகரிக்கப்படுகிறதே?

### மற்ற ஆக்ஷேபங்கள்.

காத்யாயநாதி வசனப்படி ஸந்திநியமம்எங்கும் ஏற்பட்டால் பர்வசிரார்த்த விஷயத்தில் க்ஷேபம் ஏற்படுமென்று இந்த ஸ்வாமி ஆபத்தி செய்கிறார். சிரார்த்தமானது அபராஹ்ன வியாப்தியைப் பொறுத்தது. இதற்கு ப்ரதிபத்தை உபஜீவிக்கவேண்டிய நிர்பந்தமில்லை. ச்ரார்த்தமானது இஷ்டி, உபாகர்மாதிகளைப்போல்திதி த்யவத்தையும் ஸந்தியையும் உபஜீவித்ததல்ல. கண்டதிதியில்என்றுதினம் அபராஹ்ணபூயஸ்தை இருக்கிறதோ அன்று செய்வதைஇந்த வசனங்கள் பாதிக்க என்ன நியாயம்? திதி த்யவத்தை உபஜீவித்து நிற்கும் காத்யாயநாதி வசனங்கள் சிரார்த்தவிஷங்களில் பிரவிருத்திக்குமென்று நினைக்க இடமே இல்லை.

மேலும் “பர்வண்யௌதயிகே” என்றபடி ஔதயிக தினத்தில் ஹ்ராஸ விருத்தி மூலமான க்ஷேபம் ஏற்பட்டு அநௌதயிகதினத்தில் உபாகர்மாநுஷ்டானம் செய்ய நேருமென்று மற்றொரு ஆபத்தி செய்கிறார். ஸங்கவத்திற்கு கீழ்ப்பட்ட ஸந்தியில் விருத்தி ஹ்ராஸ விதிகள் பிரவிர்த்திக்க நியாயமில்லையென்று நிபந்தககாராபிப்பிராயங்களால் தெரிகிறது. இதற்குக் காரணம் ஔதயிக பர்வானுஷ்டானம் முக்யமென்றும் அந்த வசனம் பிரபலமென்றும் அபிப்பிராய மிருப்பதேயாகும்.

மேலும் இந்த ஆபத்தியை இஷ்டாபத்தியாக நாம் அங்கீகரித்துவிட்டால் இந்த ஸ்வாமி என்ன சொல்லக்கூடும்? “பர்வண்யௌதயிகே” என்ற வசனம் பிரபலமென்றும் அதை ஸந்தி நிர்ணய வசனங்கள் பாதிக்காதென்றும் கக்ஷி சொல்லவேண்டும். நாமும் அதே காரணத்தால், அதாவது ஔதயிக பர்வத்திற்கு முக்யத்வமிருப்பதால், ஹ்ராஸ விருத்தி நியமம் ஸங்கவகாலத்திற்கு கீழ் கிடையாதென்று ஸாதிக்கத்தடையில்லை.

இவ்வாறாக ஸ்ரீபுத்தங்கோட்டம் ஸ்வாமி எழுதிய விஷயங்கள் அந்யதாஸித்தங்களாயிருப்பதால் சென்றவாரம் நாம் எழுதிய விஷயம் நிலைத்திருப்பதாகவே நாம் நினைக்கிறோம். ஆதலால் முதல்நாள் உபாகர்மாவையும் மறுதினம் காயத்ரீ ஜபமும் செய்வது உசிதமெனப்படுகிறது.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## ஹிந்து தர்ம வீர ஜதா.

(-3ம் பக்கம் தொடர்ச்சி)

கூட்டப்பட்ட கூட்டத்தில் தர்மபிரசாரம் செய்தார்கள். ஷை கூட்டத்தில் அவ்வூர் காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் வெங்கிடாஜலம் என்பவர் ஷை ஜதாவைச் சேர்ந்தவர்களை சில சந்தேகம் கேட்டபொழுது அன்னருக்குச் சரியான விடையளித்தார்கள். ஷை கூட்டமானது பிராமணரல்லாதார் அதிகம் அடங்கியது ஷை கூட்டத்தில் பஞ்சமர்கள் ஆலயப் பிரவேச மசோதாவைக் கண்டித்தும் சாரதா சட்டத்தை கண்டித்தும் தீர்மானங்கள் ஏகோபித்து நிறைவேற்றப்பட்டது. ஷை ஜதா அன்றிரவே குமாரக்ஷிக்கு பிரயாணப்பட்டு அடைந்தது.

### காட்டுமன்னார்கோவில்.

மறுதினம் (31-7-38) காலையில் ஷை ஜதா காட்டுமன்னார்குடியை அடைந்தபோது அவ்வூர் ஸ்ரீ வீரநாராயணப்பெருமாள்கோவில் தர்மகர்த்தாவான ஸ்ரீமான் ஸ்ரீரங்காச்சாரியார் அவர்கள் ஷை ஜதாவை வரவேற்று ஷை கோவிலில் ஸ்வாமிதர்சனம் செய்து வைத்தார். அன்று மாலை 5½ மணி சுமாருக்கு அவ்வூர் ஹனுமான் ஸன்னதியில் கூடியிருந்த பெருங்கூட்டத்தில் ஷை ஜதாவைச் சேர்ந்தவர்கள் பஜனையுடன் சென்றார்கள். ஷை கூட்டத்துக்கு ஷை தேவஸ்தானம் தர்மகர்த்தாவான ஸ்ரீமான் ஸ்ரீ ரெங்காச்சாரியார் அவர்கள் அக்ராசனம் வகித்து தர்ம வீர்ஜதாவின் நோக்கங்களை விளக்கினார். பின்பு ஸ்ரீமான் A. குப்புசாமி B.A, அவர்கள் பிராம்மணர்கள் இதர ஜாதியினரையும் சேர்த்துக்கொண்டு தற்காலம் ஹிந்து தர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்களை நீக்கும் பொருட்டு மாதாமாதம் 'கூட்டம் போடவேணுமென்றும் பொதுமக்களின் அபிப்பிராயத்தை தெரிந்துகொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறினார். பிறகு அவ்வூர் கோவாபரேடிவ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் ராமகிருஷ்ணய்யர் அவர்களும் உபாத்தியாயர் நரசிம்மாச்சாரியார் அவர்களும் ஜதாவின் முயற்சிகளை மிகப்பெருமைப்படுத்தியும் பிரசாரத்தின் முக்கியத்தைப்பற்றியும் பேசினார்கள். பின்பு சாரதாசட்டத்தையும், அரசாங்கம் மதத்தில் தலையிடுவதையும், பஞ்சமர்கள் ஆலயப்பிரவேச மசோதாவையும் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஷை காட்டுமன்னார்கோவிலில் ஷை ஜதா கோஷ்டியினர் ஷை யூர் பண்டித உமாமகேஸ்வர சாஸ்திரியள் அவர்கள் கிருஹத்தில் அதிதிகளாக தங்கி இருந்தார்கள். அன்று அதிக நேரம் ஆகிவிட்டபடியாலும் முகாம் விபரத்தில் அன்று சாயந்திரம் தங்குவதாக இருந்த ரெட்டியூர் கிராமத்தை கைவிடவேண்டியதாகிவிட்டது.

### கு. நல்லூர்.

மறுநாள் 1-8-38 மழையின் தொந்திரவால் ஜதா ஒருவண்டியில் "பலவாகண்டம்" என்னும் ஊரை அடைந்து அங்கிருந்து வடவாற்றை தோணிமூலம் கடந்து திருச்சிஜில்லாவில் குலோத்தங்க நல்லூர் கிராமத்தைச் சேர்ந்தார்கள். இவ்வூரில் நஞ்சை நிலங்களுக்கு மத்தியில் உள்ள G. ஏகநாதவாஜபேயர் அவர்கள் கிருஹத்தில் தங்கினார்கள். அன்று மாலையில் அவ்வூர் வாசிகளில் பெரும்பாலர்களான ஹரிஜனங்களைக்கூட்டி அவர்களை ஹிந்துக் கோவில்களில் பிரவேசிக்க ஆசையாவது உத்தேசமாவது உண்டா என்று கேட்டதற்கு வேண்டாமென்று அவர்கள் கூச்சல் போட்டார்கள். இரவு போஜனத்துக்குப் பிறகு கெங்கைகொண்டசோழபுரம் வழியாக உடையார்பாளையம் சமஸ்தானத்துக்கு ஜதா கால்நடையாக நடந்து 2-8-38 காலை சுமார் 9 மணிக்குவந்துசேர்ந்தது.

### உடையார்பாளையம்.

2-8-38 காலை 9-மணி சுமாருக்கு உடையார்பாளையம் சமஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தும் ஸ்ரீ சமஸ்தானாதிபதி ஜதாவின் வருகையை முன்னமேயே அறிந்து, முதல் நாளே தண்டோரா மூலம் பொது ஜனங்களுக்குத்தெரிவித்தும் ஜதாவுக்கு தக்க விடுதி போஜன வசதி முதலியவைகளைச் செய்து வைத்திருந்தார். ஜதா உடையார்பாளையம் வந்ததும் அரண்மனை உத்தியோகஸ்தர்கள் வரவேற்றார்கள். பின்பு ஜதாவின் தலைவரிடத்தில் சமஸ்தானாதிபதி பேட்டி அளித்து ஜதாவின் நோக்கங்களைக் கேட்டு சந்தோஷித்தார்கள். ஸ்தலத்திலுள்ள சிவன், விஷ்ணு கோவில்களை ஜதாவில் உள்ளவர்கள் தர்சனம் செய்துகொண்டார்கள். மாலை சுமார் 5-மணிக்கு பெருமாள் கோவில் வாசலில் சமஸ்தானத்தின் திவான் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடந்தது. விசேஷமாக காங்கிரஸ் வாதிகள் கலந்துகொண்டார்கள். அக்ராசனர் ஜதாவின் சுற்றுப் பிரயாணத்தைப்பற்றியும் அதன் நோக்கங்களைப்பற்றியும் விளக்கிக் கூறினபிறகு ஜதாவின் தலைவர் ஸ்ரீ A. குப்புசாமி அவர்களால் நமது ஹிந்து தர்மத்தின் தற்கால நிலைமையும், சென்னை சட்டசபையில் வந்திருக்கும் அசாஸ்திரீயமான மசோதாக்களைப்பற்றியும் ஒவ்வொரு கிராமத்திலும் ஷை மசோதாக்கள் நிறைவேறாமல் தடுக்க எப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேணுமென்கிறதைப்பற்றியும் விரிவாக பேசியும் காங்கிரஸ்காரர்கள் கேட்ட கேள்விகளுக்கு தக்கபதில்களும் அளித்து சுமார் முக்கால்மணி நேரம் பேசினார். பின்பு சாரதா சட்டத்தை ரத்துசெய்ய வேணுமாயும் சென்னை சட்டசபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் Civic disabilities Removal Bill யும் ஆலயப் பிரவேச மசோதாவையும் கண்டிப்பதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகு கூட்டம் கலைந்தது. மறுநாள் காலை ஹிந்து தர்மவீர்ஜதா அரியலூருக்கு பிரயாணமாகிறார்கள்.

V. சுப்பிரமணியய்யர்,

(தொடரும்)

---

## வாரக்குறிப்பு.

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

சமத்வ பித்து!! தற்கால நாகரீகப் பேச்சில் ஸமத்வம். ஸமத்வம் என்பது அலங்கார சொல். அனுபவத்தில் சிறிதும் பயன் பெறாதது! ஜாதிமத பேதத்தால் இந்தியா சிறுமை அடைந்ததென்பது அதற்கடுத்த பேச்சு. இதை மந்திரி முதல் மாட்டுக்காரன் வரை பேசுவர். ஆனால்?

ஆண்ஜாதி பெண்ஜாதி கூடவேண்டாம்! என ஆங்காங்கு தற்காலத்தவர் பிரசாரம் நடத்துகின்றனர். அவர்கள் சொற்படி வர்ணாச்ரம ஜாதிபோனதாகவே நினைப்போம். ஆண் பெண் ஜாதிபேதமும் இவர்களால் அழிக்கப்பட்டதாகவே கருதுவோம். பின்னர் இவர் பிரசாரம் மனித ஜாதி மிருக ஜாதி ஒழித்தலில் புகுமோ? என அஞ்சுகிறோம்.

வரவேற்கிறோம்!! ஓர் ஸதாசார்யாது அநுக்ரஹத்தால் திருவிடைமருதூரிலிருந்து ஓர் தார்மிக யுவ ஸமாஜம் ஆங்காங்கு தர்ம பிரசாரம் செய்வதை முழுமனதுடன் ஆமோதித்து சென்னைக்கு வரவேற்கிறோம்.

இருவரே பொறுப்பாளி! பர்மாவில் இந்திய த்வேஷம் புகைந்துகொண்டிருக்க ஒருவர் பிறர் மதத்தைக் கண்டித்து நூலெழுதினார் என்ற வியாஜத்தால் பல கொலை நடந்தது. புத்தகம் வெளியிட்டவர் முதற் குற்றவாளி அது ரிஜிஸ்டருக்கு வந்தபோது அதைத் தடுக்காமலிருந்த அதிகாரி இரண்டாவது குற்றவாளி யாவர்.

சென்னைக்கு எச்சரிக்கை! ஓர் இனத்தை மதாபிமானிகளைப் புண்படுத்தும்படியான பல கதைகள் படத்தில் காண்பிக்கப்படுகிறது. அதைப் பரிசீலிப்பதற்காக ஏற்பட்ட கமிட்டி போதுமான பரிசீலனை செய்வதில்லை. ஒருநாள் மிக மூர்க்கமாக ஓர் கோஷ்டி கிளம்பி விரைவில் பலருக்கும் துன்பம் விளைவிக்கலாம்! ஜாக்ரதை.

அதிகார த்வனி அதிகரிக்கிறது! டாக்டர் ராஜன் ஓரிடத்தில் அப்படி செய்தால் பஞ்சாயத்தைக் கலைப்பேனென்கிறார். ராஜாஜி சர்க்கார் செக்கில் கையை வைத்தால் விரல் நசிங்கு விடுமென்கிறார். அழகாகப் பேசினாலும் சொல் காங்ரஸ் மந்திரிக்கேற்றதல்ல!

மாரி திருவிளையாடல்! சீயாழிக்கருகே ஓர் மாரியம்மன் தன்னிருப்பிடத்தை விட்டு ஓர் வேப்பங்கன்றில் நுழைந்து வாடா புஷ்பத்தை அளிக்கிறதாம். பலர்கூடி போற்றிப் பணிகின்றனர்.

தீமையதிகம்! கடன் நிவாரண மசோதாவால் அனுபவத்தில் பல கஷ்டங்களுண்டாகின்றனவென பலர் கூறுகின்றனர். முத்துப்பேட்டை வியவசாயி சங்கமப்படி ஓர் தீர்மானமும் செய்துளது.

அக்ரம சலுகை!! பிராமணர் பிராமணோதார் தவிர மற்ற ஹரி ஜநாதிகளுக்கு அரசாங்க உத்யோகத்திலமர 25 வயது என்பதை மாற்றி 31 என்று சென்னை அரசாங்கம் கூறியது மிக்கஅக்ரமமும் அதர்மமுமாம்.

வக்கீலுக்கும் தாம்பூலமா? பிரதம மந்திரி படிப்படியாக பெரும் புரக்ஷிபை உண்டு பண்ணி வருகிறார்! லாகாலேஜை மூடி வக்கீல்களுக்கு மாதசம்பளம் தர உத்தேசிக்கிறார்!!

நன்றி! மஹாக்நி சித்தான எனது தந்தை சென்ற கிருஷ்ண பக்ஷ திருதீயையில் காலமானதற்காக அநுதாபந் தெரிவித்து அவர் நண்பர்களும் அடியேனது நண்பர்களும் பல கடிதங்கள் எழுதினர். அவரவர்க்கும் ப்ரத்யேகமாக யெழுதமுடியாமல் இப்பத்திரிகை மூல மனைவர்க்கும் நன்றி செலுத்துகிறேன்.

---

### ஓர் விக்ஞாபனம்.

நான் சென்னையிலிருப்பதால் அங்குள்ள தமிழ் தினசரிப்பத்திரிகைகளுக்கு பல நிருபர்கள் என் மூலமாக அனுப்பினால் பிரசுரமாகுமென்று எண்ணி எழுதுகின்றனர். நான் பழைய தேசியவாதியாகவும் விஷயம் வெள்ளிகமாகவுமிருந்தால் விரைவில் பிரசுரமாகும். இரண்டுமில்லாததால் தயை செய்து என் மூலமனுப்ப வேண்டாம்.

ஆர்யதர்மத்தில் பிரசுரமாகவேண்டியவைகளை நேராக அங்கேயே அனுப்ப வேண்டுகிறேன்.

அகரத்தில் ஸ்ரீமத்ராமாயணம் தர்ம ஸ்வத்தைப் பார்ப்பதற்காக சென்னையிலிருந்து வந்து பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ வே.ஸோம தேவ சர்மாவை உள்ளூர் வாஸிகள் வேண்ட வாலி ராம ஸ்ம்வாத கட்டத்தை மிக அழகாக இரண்டு மணி உபன்யாஸித்தார். பலர் ச்ரவணாநந்தம் பெற்று வாழ்த்தினர்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா.

---


மூகபஞ்சசதியின் முதல் பாகம்.

"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதமம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.

ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.




# தேசிகன் தேன்மொழிகள்.

## வக்கீல் உத்யோகம்.

### 1 உபயோகம்.

ஒரு நாள் ஒரு பக்தர் தன் நண்பரான ஒரு வக்கீலையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு ஸ்ரீ மஹாஸ்வாமிகளவர்களிடம் சென்று வந்தனம் செய்து சொல்லவாரம்பித்தார்,

பக்தர்:—நவீன வித்யாப்யாஸமிருந்தால் பிராஹ்மண்யம் கெட்டுவிடும் என்று ஸாதாரணமாய் சொல்வதுண்டு, என் நண்பர் விஷயத்தில் மாத்திரம் அப்படி சொல்வதற்கில்லை. ஸாத்தியமானவரையில் சிரத்தாளுவாகவிருந்து பிராஹ்மண கிருத்யங்களை யதாக்ரமமாய் அனுஷ்டித்து வருகிறார்.

ம:—அப்படியா? நவீன ஸம்ஸ்காரம் இருந்தும் பிராஹ்மண விருத்தியைப் பரிபாலித்து வருகிறாரென்று கேட்க மிகவும் ஸந்தோஷம். அவ்வித்யாப்யாஸத்தின் தன்மையை நானும் அறிந்திருக்கிறபடியால், அது இவரை பாதிக்கவில்லையென்பதைமாத்திரம் பூராவும் ஒப்புக்கொள்ளமுடிய வில்லை. இந்த ஸம்ஸ்காரம் ஏற்படாமலே இருந்திருந்தால்' ஸாக்ஷாத் வஸிஷ்டராகவே இருந்திருக்கலாம், இது ஏற்பட்டதினால்தான் அப்பதவியை அடையாமல் கீழேயிருக்கிறார் என்றிருக்கலாம்.

பக்தர்:—தாங்கள் சொல்வதே வாஸ்தவமாயிருக்கலாம். எங்களைவிட எவ்வளவோ மடங்கு உத்கிருஷ்டராயிருக்கிறார் என்பதைத்தான் சொல்லவந்தேன்.

ம:—அதுஸரி. [வக்கீலைப்பார்த்து] உங்கள் உத்யோகம் மிகச் சிலாக்கியமானது. ஒரு யஜமானனிடத்தில் ஸேவை செய்வதிலுள்ள அஸௌகர்யங்கள் உங்களுக்குக் கிடையாது.

வக்கீல்:—அது வாஸ்தவம். ஆனால் சில ஸமயங்களில் அந்த ஸேவகா விருத்தியே சிலாக்கியமென்று தோன்றுகிறது.

ம:—ஏன்?

வ:—எங்களுக்கு மேல் யஜமானன் இல்லையென்பது வாஸ்தவம். இந்த காரணத்தினால் மாத்திரம் எங்களை ஸ்வதந்திரர்களென்று சொல்வதிற்கில்லை. எங்களுக்கு ஸ்வாதந்திரியமே இல்லை. நாங்கள் கக்ஷிக்காரர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் பராதீனர்களே. ஒரு குறிப்பிட்ட யஜமானன் கிடையாதே தவிர எங்களை அபேக்ஷிக்கும் ஒவ்வொரு கக்ஷிக்காரர்களும் யஜமானர்களாய்விடுகிறார்கள். ஒவ்வொரு நியாயாதிபதியின் மனோபாவங்களையும் விசித்திர ஸ்வபாவங்களையும் கவனித்து நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ம:—காலமாவது உங்களுக்கு ஸ்வாதீனமல்லவா? உங்களுக்கு ஜாவேண்டிய காலத்தில் இன்னொருவரைக்கேட்க அவசியமில்லை. கச்சேரிக்குப்போக வேண்டாமென்று நினைத்தால் போகாமலிருந்து விடலாம். மற்ற உத்யோகங்களிலிருப்பவர்களுக்கு இது முடியாதல்லவா?

வ:—வாஸ்தவமே. ஆனால் அப்படிச் செய்தால், வேலை குறையும். வேலை குறைந்தால் வரும்படி குறையும். தவிரவும், காலை வேளைகளில் கக்ஷிக்காரர்களிடம் தகவல் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. மறுநாளைக்கு வேண்டிய வியவஹாரங்களை நன்கு அறிந்து யோசித்துவைக்க, ராத்திரியும் வேண்டியிருக்கிறது. மத்தியானமோ கச்சேரி. இப்படியிருக்க, காலவிஷயத்தில்தான் எங்களுக்கு என்ன ஸ்வாதந்திரியம் இருப்பதாகச் சொல்லிக்கொள்ள முடியும்?

ம.—ஸாதாரணமாக காலையில் உங்கள் பூஜை ஜபம் இவைகளுக்கு எவ்வளவு அவகாசம் கொடுக்கிறீர்கள்?

வ:—ஒரு மணிக்குமேல் கிடைப்பது துர்லபம்.

ம:—ஒரு மணியில் எவ்வளவோ ஸாதித்து விடலாம். ஆனால் மத்தியில் மிக அவஸரக் கார்யமென்று நினைத்து, நீங்கள் எழுந்திருந்து வரும்வரை பொருக்காமல், உங்கள் குடும்பஸ்தர்களோ, ஸ்நேகிதர்களோ, குமஸ்தாக்களோ, குறுக்கிட்டாலும் ஸஹித்துக் கொள்ளத்தானே வேண்டும்?

வ:—இவ்விதத் தொந்திரவுகள் அடிக்கடி ஏற்படத்தான் ஏற்படுகின்றன.

ம:—இதில் என்ன ஆச்சர்யம்? உங்களைப்போல் லௌகிக கார்யமில்லாமலிருக்கிற எனக்கும் அபிமானமுள்ள பக்தர்களாலும் வேலைக்காரர்களாலும் ஸம்பவிக்கிறதே?

வ:—எங்கள் பாடு இன்னும் ஜாஸ்தி. எங்களுடையது என்று சொல்லிக்கொள்ளும்படியான வேலையேயில்லை யென்றுதான் சொல்லவேண்டும்.

ம:—உங்கள் உத்யோகமுறையில் உங்கள் உதவியை அபேக்ஷித்து வருகிற கக்ஷிக்காரர்களுடைய ஸுக துக்கங்கள், சிரமங்கள், கவலைகள் இவைகளையெல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ளும்படி ஏற்படுமல்லவா?

வ:—அவ்விதம் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

ம;—நீங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கு ஏதோ பணம் கொடுக்கிறான் என்பதிருக்கட்டும். சில வேளையில் அந்தப் பணத்தைத் தேடிக்கொடுக்கும் பொறுப்பும் அல்லது பணம் எங்கு கிடைக்குமென்று காண்பிக்கிற பொறுப்பும் ஏற்படுவதினால் அவனுடைய பணக் கவலையைக்கூட நீங்கள் வஹிக்க ஏற்படுமல்லவா?

வ:—சில வேளைகளில் இதுவும் ஏற்படுபடுகிறது.

ம:—கக்ஷிக்காரர்கள் ஜாஸ்தியாக ஜாஸ்தியாக அவர்களுக்காக நீங்கள் படும் கவலையும் ஜாஸ்தியாகுமல்லவா?

வ:—ஆமாம்.

ம:—அதாவது, உங்கள் சொந்தக் கவலைகளை கவனிக்க அவகாசம் கிடைப்பது மிகவும் குறையும்.

வ:—அப்படித்தான் இருக்கிறது. வீட்டுக் குடித்தனக் காரியங்களை பெண்டுகளிடமாவது சிறு பையன்களிடமாவது விட்டுவிடவேண்டியிருக்கிறது. உத்யோக ஸம்பந்தமானவைகளை குமஸ்தாக்களே கவனிக்கிறார்கள். அவர்கள் செய்வதை மேல்ப்பார்த்து குற்றம் குறை நீக்கவாவது கண்டிக்கவாவது வேளை கிடைக்கிறதில்லை.

ம:—இதர உத்யோகங்களிலிருப்பவர்களுக்கு இதற்கெல்லாம் அவகாசம் அகப்படுமென்று நினைக்கிறேன்.

வ:—ஆமாம்.

ம:—அதாவது, உங்கள் உத்யோகத்தில் விசேஷமென்னவென்றால், இதர உத்யோகஸ்தர்களைவிட சொந்த காரியங்களைக் கவனிக்க உங்களுக்கு அவகாசம் குறைவு.

வ:—ஆம்.

ம:—ஆகையால் ஸ்வகார்யத்தைக் கருதுவது என்ற பழக்கம் ஏற்படவாவது நிலைத்திருக்கவாவது இடம் இராதென்று தெரிகிறது. இவ்விதமாக இதைப் பாவித்தால் இதுவும் வாஸ்தவத்தில் பெரிய அனுகூலமேயாகும். தன் காரியத்தைக் கவனிக்க அவகாசமில்லையேயென்று நினைக்காமல், ஸ்வகார்யத்தில் நோக்கமேற்பட வழியில்லாமலேற்படுவதில் ஸந்தோஷப்படவேண்டியது.

வ:—இப்படிப் பாவித்தால் அனுகூலம்தான். இருந்தாலும் எங்கள் புத்தியையும் ஆயுஸ்ஸையும் மற்றவர்களுக்காக விசாரப்படுவதிலேயே கழிப்பதென்றால் நன்றாக இருக்கிறதா?

ம:—உங்கள் உதவியை அபேக்ஷிக்காத கக்ஷிக்காரர்களுக்காகவும் உங்கள் புத்தியை நீங்கள் செலவழிப்பதுண்டோ?

வ:—அதில்லை.

ம:—உங்கள் உதவியை அபேக்ஷிக்கிற கக்ஷிக்காரருக்காக மாத்திரம் தானே உங்கள் புத்தியை உபயோகப்படுத்துகிறீர்கள்?

வ:—ஆம்.

ம:—அவரும் பணம் கொடுக்காமலும் கொடுப்பதாகச் சொல்லாமலும் இருந்தால் நீங்கள் சிரமம் எடுத்துக் கொள்வீர்களா?

வ:—மாட்டோம்.

ம:—அதாவது, நீங்கள் சிரமம் எடுத்துக்கொள்வது கக்ஷிக்காரரை உத்தேசித்தல்ல, உங்களுக்குச் சேரவேண்டிய பணத்தை யுத்தேசித்து.

வ:—வாஸ்தவம்;

ம;—உங்களுக்கு ஒரு விசேஷ பிரயோஜனம் ஏற்படுவதை யுத்தேசித்து நீங்கள் பிரயத்தினம் செய்கிறீர்கள். இதில் நன்றாயில்லை என்பது என்ன?

வ:—இவ்விதமாகப் பார்த்தால், தப்பிதம் ஒன்றுமில்லை.

ம:—உங்கள் பணம் நிச்சிதமாயிருந்தால், வியவஹாரம் ஜயித்தாலும் தோற்றாலும் உங்களுக்கு விசாரமில்லையே?

வ:—அதெப்படி சொல்லமுடியும்? ஜயிக்கிறதில் எனக்கு அக்கரை இருக்கவே இருக்கும்.

ம;—ஜயித்தால் நாம் ஜயித்து விட்டோம் என்ற மனத்திருப்தியிருக்குமென்பது வாஸ்தவம். அதே மாதிரி தோற்றால் தோற்றுவிட்டோமே என்ற வருத்தமும் இருக்கும். அதை நான் சொல்லவரவில்லை. உங்கள் வாதத்தின் பலனாக உங்கள் கக்ஷிக்காரருக்கு ஒரு சொத்துக் கிடைத்தாலும்: நீங்கள்வாதம் செய்தும்கூட ஒரு சொத்து நஷ்டமாய் விட்டாலும், அந்த லாபநஷ்டத்தில் தங்கள் சொந்தத்திற்கு பாகம் கிடையாதே?

வ:—கிடையாது.

ம:—உங்கள் கக்ஷிக்காரருக்கு சொத்துக் கிடைக்கவேண்டுமென்பதில் நீங்கள் அக்கரை வைக்க நியாயமில்லை. நீங்கள் எடுத்த வியவஹாரத்தை உங்களால் கூடுமானவரை ஜயித்துக் கொடுக்கவேண்டுமென்பதில்தான் உங்களுக்கு அக்கரை.

வ:—அப்படித்தான.

ம:—அதாவது, கக்ஷிக்காரருக்கு ஜயித்துக் கொடுக்கவேண்டிய பிரயத்தினங்களை கூடுமானவரை செய்வீர்கள். தீர்மானமும் பலனும், அதிகாரிக்கும் பகவானுக்கும் ஆதீனம் என்று விட்டுவிடுவீர்கள். இதற்குமேல் உங்களுக்குக் கவலை கிடையாது.

வ:—வாஸ்தவம்.

ம:—பிரதிதினமும இப்படியே செய்து வருகிறீர்களல்லவா?

வ:—ஆம்.

ம:—பண ஸம்பந்தத்தைத் தூரவைத்துக் கவனித்துப் பார்ப்போம். வியவஹாரம் நடத்துவதில் உங்களால் ஸாத்தியப்பட்டவரையில் பிரயத்தினம்செய்து பார்ப்பீர்களென்றும், கடைசி முடிவில் உங்களுக்குச் சொந்தமாய் அதிக அக்கரையில்லையென்றும் ஏற்படுவதினால், உங்கள் உத்யோகம் நிஷ்காம கர்மாப்யாஸத்தில் பழகிக்கொள்ள ஒரு பெரிய ஸாதனமாக வில்லையா?

வ;—அப்படித்தான் தோன்றுகிறது. ஆனால் இவ்வளவுதூரம் ஆலோசித்துத் தெரிந்துகொள்வது கிடையாது.

R. கிருஷ்ணஸாமி அய்யர், அட்வகேட்,
திருநெல்வேலி.

(தொடரும்)

## இராமாயண இலக்ஷ்யார்த்தத்திலுள்ள இன்பப்பொருள்கள்.

[காக்கழனி கிருஷ்ணமூர்த்தி]
(சென்ற வாரத்தொடர்ச்சி.)

இராமாயணத்திலுள்ள அத்தைவ பாவங்களை ஊஹிக்குமிடத்து, ஆநந்தம் என்ற இராஜ்யத்தை அறிவு என்ற அரசன் ஆளும்பொழுது, அவசாத்தாய் தனது பத்தினியான சுத்தமாய் கையையும், தனது குமாரனை சுபோதனையும் மறந்து, கல்பித அசுரகன்னிகையான மூலப்பிரகிருதியுடன் சோரமால் சேர்ந்து (விபீஷண, இராவண, கும்பகர்ண) சத்துவ, ரஜோ, தமோ குணங்கள் என்ற மூன்று புத்திரர்களையும் (சூர்ப்பநகை, இலங்கணி) ஆவரணம், விக்ஷேபம் என்ற இரண்டு புத்திரிகளையும் உண்டுபண்ணினான்,

முக்குணங்களாகிய இவர்கள் ஒருவரையொருவர் அடக்கியும், ஒருவரை ஒருவர் மேக்கரித்தும் சந்தர்ப்பானுசாரமாய் வாழும்பொழுது, இரஜோ குணம்சமான அகங்கார இராவணன் இராகத்வேஷாதிகளான பல இராக்ஷஸர்களுடன் கூடிக்கொண்டு, அபலையான இந்திரிய கூட்டங்களுக்கு தாங்க முடியாத போக போக்கியங்கள் எனும் வேலையிட்டு, பலஜன்மம் என்ற பற்பல ஸ்திரீ போகங்களைச் செய்துகொண்டு, பல விதத்திலும் தாபப்படும்படி செய்யும்பொழுது, அந்த கஷ்டங்களை சகிக்கமுடியாத இந்திரிய அதிஷ்டான தேவதைகள் சம்ரக்ஷண கர்த்தாவாகிய பகவானிடம்போய் முறையிட, பகவானும் அவர்களுக்கு அபயமளித்து குரு, என்ற ராமாவதாரம் செய்து தன்னுடைய விவேகத்துக்குச் சாதகமாய் வைராக்யமென்ற லெக்ஷ்மணனையும், ஜீவகாருண்யமென்ற பாதனையும், ஈசுவரபக்தியென்ற சத்ருக்னனையும் தனக்கு பிராதாக்களாயடைந்து, தேகாத்மபுத்தி எனும் ஜடமான அகலியை தனது திருவடிதீக்ஷையால் சிதாத்மாவென்ற பெண்ணாக்கி, கர்த்திருத்வமாகிற தநுஸை பங்கம்பண்ணி, சித்பிர்ம்ம ஐக்கியம் என்கிற சீதா விவாஹம் செய்துகொண்டு, அப்யாசம் என்கிற ஆரண்யத்தில் தங்கியிருக்கும்பொழுது, ஆவரண சக்தியான சூர்ப்பநகையின் நாஸ்தி, நபாதி, என்ற இருகாதுகளையும், பிர்ம்மஜகத்துக்களுக்கு பேதந்தெரியாமல் போர்த்துக்காட்டும் நாசியையும் வைராக்யமென்ற லெக்ஷ்மணனால் கொய்யும்படிசெய்து, தேகவாசனை, சாஸ்திரவாசனை, லோகவாசனை என்ற கர, தூஷண, திரிசிராஸாதிகளை நசிக்கச்செய்து கபடனான மாரீசன் மான் வேடத்துடன்வர, அவனை விவேகம் என்ற இராமன் துரத்திச் சென்ற சமயத்தில் ஞானசக்தியான சீதையின் அவைராக்யமான சொல்லால் வைராக்யமென்ற இலக்ஷ்மணனும் பிரிய, இப்படியுள்ள விவேக, வைராக்யம் இரண்டுமில்லாத சமயம்பார்த்து, அகங்காரஇராவணன் ஞானசக்தியான ஸீதையை அபஹரிக்க பின் கபடனான மாரீசனைக்கொன்ற விவேகமென்ற ஸ்ரீஇராமனும் வைராக்கியமாகிய லெக்ஷ்மணனும் கூடியோஜித்து சமதமாதி குணங்களான சுக்கிரீவ அங்கத ஹநுமார் முதலியவர்களின் சகாயத்தைப்பெற்று ஏகாக்கிர விர்த்தி என்ற ஹநுமாரையும், சத்சரிதம் என்ற வாநரர்களையும் ஞானசக்தியான சீதையைத் தேடிவரும்படி செய்ததில், ஏகாக்கிர விர்த்தி என்ற ஹநுமார் விக்ஷேபம் என்ற லங்கணியை ஜயித்து, விபரீதபாவனை என்கிற இலங்கையில் புகுந்து, பஞ்சசேநாதி என்கிற பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரஹஞ்செய்து, ஸப்தமந்திரி சுதர்கள் என்ற அக்ஞான பூமி ஏழையும் ஜயித்து, இலங்கை முழுமையும் நியதி. நியதி, என்ற நியமப்படி ஞான சக்தியான சீதையைத்தேடி, அசோகவன மென்ற விக்ஞானமயகோசத்தில் நிர்விர்த்தி என்கிற சிம்சுபா விருக்ஷத்தினடியில் சீதாதேவியைக்கண்டு, அவளிடம் சொரூபப்பிரக்ஞை என்ற கணையாழியைக் கொடுத்து, பிரத்யபிக்ஞை என்ற சூடாமணியைப் பெற்று, அங்கிருந்து விவேகமென்ற இராமனிடம் கொண்டுவந்து தந்து, விபரங்களைச் சொன்ன பிறகு, ஸ்ரீராமரும் தன்னிடம் சுதாவாய் வந்த சத்துவகுண விபீஷணனையும். அவனோடு வந்த மைத்திரி, கருணை, முதிதை, உபேக்ஷை என்ற சத்வாஸனைகளான நான்கு மந்திரிகளையும் கிரஹித்து, சத்துவ குணனான விபீஷணனுக்கு பரோக்ஷமான பட்டங்கட்டி, பின் ஸ்திரபுத்தி என்கிற கற்களைக்கொண்டு சிரத்தை என்னும் நளனால் மோஹ சமுத்திரத்துக்கு அணைகட்டி, அதைதாண்டி சாதுக்களாகிய வானரசைந்நியங்களுடன் இலங்கைக்குச் சென்று, ரஜோகுணாராவணனையும், தமோகுண கும்பகர்ணனையும், அவர்களின் வம்சங்களையும் மூலபலம் எனப்படும் மூல அஞ்ஞானத்தோடழித்து விபரீத பாவனையாகிற இலங்கையை சித்விலாஸ மயமாக்கி, ஞான சக்தியான சீதையையடைந்து, விபீஷணனுக்கு அபரோக்ஷானுபவம் என்ற பட்டங்கட்டி, ஞான ஸ்வரூபத்துடன் ஆனந்தமயமான அயோத்திக்கு வந்து, ஏகைக பாவமாக யாவரும் ஒன்று சேர்ந்து யாதொரு தங்கு தடையின்றி, அகண்டாகார சாம்ராஜ்யாதிபத்யமடைந்து, ஜீவன்முக்தி என்ற பட்டாபிஷேகம் செய்துகொண்டு, ஆத்மாராமனாய் பகவான் இப்பவும் விளங்கிக்கொண்டிருப்பதால், முமுக்ஷுக்கள் யாவரும் அவரிடம் அன்புகொண்டு, அவரையே தஞ்சமென நாடி, அவரனுக்கிரஹத்தால் அபயம் எனப்படும் ஆனந்தாதீதபதத்தில் அசைவற்றிருப்பதே அத்யாவசியமாகும்.

வேண்டுவார் வேண்டினதை விருப்பமுடனளிக்கும் அருள்வள்ளலாகிய ஸ்ரீராமசந்திரமூர்த்தியை வழிபடுவோர்களுக்கு அவனருளால் இராமாயணத்திலுள்ள சர்வ இரஹஸ்யமும் சுலபமாயறிய முடியுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

இப்பெருமை வாய்ந்த இராமசரிதத்தை படித்து அதில் பக்திகொண்டனுஷ்டிப்பவர்களுக்கு,

"நாடியபொருள் கைகூடும்
ஞானமும் புகழுமுண்டாம்
வீடியதல் வழியதாக்கும்
வேறியங் கமலைநோக்கும்
நீடிய வரக்கர்சேனை
நீறுபட்டொழியவாகை
சூடிய சிலைராமன்
தோள்வலி கூறுவோர்க்கே."

என்ற கம்பரின் அருள்வாக்குப்படி ஸ்ரீராமனருளால் சர்வாபீஷ்டமும் உண்டாகுமாக.

## ஸநாதனதர்ம யுவர்களின் பாதசார யாத்திரை.

[ஊர், தேதி விவரம்]
(சென்றவாரத் தொடர்ச்சி.)

5—8—38 வெள்ளிக்கிழமை காலை பெரிய அணைக்கட், மாலை கோவிலடி. 6—8—38 சனிக்கிழமை காலை சாத்தனூர், மாலை திருக்காட்டுப்பள்ளி. 7—8—38 ஞாயிற்றுக்கிழமை காலை கூத்தூர், மாலை திருவாதி. 8—8—38 திங்கட்கிழமை காலை ஈச்சங்குடி, மாலை ஆடுதுறை-பெருமாள்கோவில். 9-8-38 செவ்வாய்க்கிழமை காலை கபிஸ்தலம், மாலை சுவாமிமலை. 10-8-38 புதன்கிழமை காலை கும்பகோணம், மாலை திருவிடமருதூர். 11-8-38 வியாழக்கிழமை திருவிடமருதூர். 12—8—38 வெள்ளிக்கிழமை மாலை திருப்புனந்தாள். 13—1—38 சனிக்கிழமை காலை அணைக்கரை, மாலை மீன்சுருட்டி. 14—8—38 ஞாயிற்றுக்கிழமை காலை சேதியார்தோஷ். 15-8-38 திங்கட்கிழமை காலை ஸ்ரீமுஷ்ணம். 16—8—38 செவ்வாய்க்கிழமை காலை விருத்தாசலம். 17—8—38 புதன்கிழமை காலை பூவனூர். 18—8—38 வியாழக்கிழமை காலை உலுந்தாண்டார் கோவில். மாலை பத்தூர். 19-7-38 வெள்ளிக்கிழமை காலை திருநாமநல்லூர். 20—8—38 சனிக்கிழமை காலை திருவெண்ணைநல்லூர். 21—8—38 ஞாயிற்றுக்கிழமை காலை புதப்பாளையம். 22—8—38 திங்கட்கிழமை காலை திருக்கோயிலூர். 23—8—38 செவ்வாய்க்கிழமை காலை அகாரம், மாலை மணலூர்பட். 24—8—38 புதன்கிழமை காலை திருவண்ணாமலை. 25—8—38 வியாழக்கிழமை காலை துருஞ்சாப்புரம், மாலை அகரம சிப்பந்தி. 26—8—38 வெள்ளிக்கிழமை காலை காக்காசபாக்கம், மாலை பாலூர். 27—8—38 சனிக்கிழமை மாலை ஆர்ணி. 28—8—38 ஞாயிற்றுக்கிழமை மாலை ஆர்காடு. 29—8—38 திங்கட்கிழமை எசையனூர். 30, 31, 1—9—38 வியாழக்கிழமை காஞ்சீவரம், 2—9—38 வெள்ளிக்கிழமை காலை திருமால்பூர். 3—9—38 சனிக்கிழமை மாலை தக்கோலம். 4—9—38 ஞாயிற்றுக்கிழமை மாலை அரக்கோணம். 5—9—38 திங்கட்கிழமை திருத்தணி. 6—9—38 செவ்வாய்க்கிழமை நகரி. 7—9—38 புதன்கிழமை புஹ்ஹா. 8, 9, 10—9—38 சனிக்கிழமை புத்தூர். 11—9—38 ஞாயிற்றுக்கிழமை மாலை வடமலபட்டி. 12—9—38 திங்கட்கிழமை கிழத்திருப்பதி. 13, 14—9—38 புதன்கிழமை திருப்பதிகுன்றுகள். 15—9—38 வியாழக்கிழமை காலை திருச்சானூர், 16—9—38 வெள்ளிக்கிழமை காலை காளஹஸ்தி. 17—9—38 சனிக்கிழமை மாலை வெங்கடகிரி. 18—9—38 ஞாயிற்றுக்கிழமை கூடூர். 19—8—38 திங்கட்கிழமை கூடூர். 20—9—38 செவ்வாய்க்கிழமை காலை நாயுடுபேட், மாலை தாராவணிச்சத்தாம். 21—9—38 புதன்கிழமை காலை சாலூர்பேட், மாலை தாதா. 22—9—38 வியாழக்கிழமை காலை பொன்னேரி, மாலை மீனச்சூர். 23, 24—9—38 சனிக்கிழமை திருவெற்றியூர். 25—9—38 ஞாயிற்றுக்கிழமை திருவல்லிக்கேணி, மைலாப்பூர். 26—9—38 திங்கட்கிழமை காலை மாம்பலம், மாலை ஆலந்தூர். 27—9—38 செவ்வாய்க்கிழமை தாம்பரம். 28—9—38 புதன்கிழமை காலை கூட்டுவாஞ்சேரி, மாலை சிங்கப்பெருமாள் கோவில். 29, 30—9—38 வெள்ளிக்கிழமை செங்கல்பட்டு, 1—10—38 சனிக்கிழமை மதுராந்தகம். 2—10—38 ஞாயிற்றுக்கிழமை அச்சரப்பாக்கம், 3—10—38 திங்கட்கிழமை காலை ஒலக்கூர், மாலை திண்டிவனம். 4—10—38 செவ்வாய்க்கிழமை மைலம். 5—10—38 புதன்கிழமை பாண்டிச்சேரி. 7—10—38 வெள்ளிக்கிழமை கூடலூர். 8-10-38 சனிக்கிழமை காலை ஆலப்பாக்கம், மாலை புதுசத்திரம். 9—10—38 ஞாயிற்றுக்கிழமை காலை சிதம்பரம், மாலை கருப்பூர். 10—10—38 திங்கட்கிழமை காலை புலியன்குடி, மாலை ஓமாம்புலியூர். 11—10—38 செவ்வாய்க்கிழமை காலை அணைக்கரை, மாலை சோலபுரம். 12—10—38 புதன்கிழமை காலை கும்பகோணம்.



## சுக்ல யஜுர் வேதிகளின் உபாகர்ம

நாளது பகுதான்ய வருஷம் ஆடிமீ 27௳ வியாழக்கிழமை (11-8-38) அன்றயதினம் யஜுர் உபாகர்மா என்று பஞ்சாங்கங்களில் போடப்பட்டிருக்கிறபடியால் யஜுர் வேதிகளில் சிலர்களான நமக்கும் அன்றைய தினமே உபாகர்மா. என்று சில சுக்ல யஜுர் வேதிகளுக்கு அபிப்பிராயம் உண்டாகலாம். நமது காத்யாயன கிருஹ்யஸூத்ரத்தில் சிரவண நக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணமியில் பூர்வாஹ்னத்தில்மேல் கண்ட கர்மாவை அநுஷ்டிக்க வேண்டு மென்றுஹேமாத்ரிகதாதார்களால் சொல்லப்பட்டிருக்கிறது. நிர்ணயஸிந்துவிலும் பூதவித்தாப்ரசஸ்யதே என்று காத்யாயன ஸூத்ரிகள்சதுர்தசியோடுகூடிய பௌர்ணமியில் செய்ய வேண்டுமென்று ஔதயிகீ பௌர்ணமியில் தைத்ரீயாள் செய்யவேண்டுமென்றும்சொல்லப்பட்டிருக்கிறது பகலை அநேக விதமாக பிரித்து தர்ம சாஸ்திரங்களில் கர்மாக்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்மிருதி கௌஸ்துபத்தில் பகலின் முன் பாகம் பூர்வாஹ்னம் என்றும் பகலின் பின் பாகம் அபராஹ்னம்என்றும் வ்யுத்பத்தி பூர்வகமாய் சொல்லப்பட்ட த்வேதாவி பாகத்திலுள்ள பூர்வாஹ்ணமே ப்ரகிருத கர்மாவுக்கு கிரஹித்துக்கொள்ள வேண்டியது. இரண்டு தினங்களில் பௌர்ணமியானது பூர்வாஹ்ன வியாபினியாகயிருந்தாலும் பூர்வாஹ்னத்திருள் ஏகதேசத்தை ஸ்பரிசித்திருந்தாலும் முதல் நாளே செய்ய வேணும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிர்ணய ஸிந்து, காலமாதவீயம், வைத்யநாத தீக்ஷிதீயம் முதலான கிரந்தங்களிலும் இப்படி சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் மேலே கண்ட எல்லா அம்சங்களும் நாளது ஆடிமீ 26௳ புதன்கிழமை (10-8-38) அன்றயதினம் செய்வதால் அன்றயதினம் ஆஸ்திகர்களான வாஜஸநேயிகள் எல்லோரும் உபாகர்மாவை அநுஷ்டித்து மறுநாள் 27தேதி வியாழக்கிழமை (11-8-38) காயத்ரீ ஜபத்தை அநுஷ்டிக்க வேணும்.

மைசூர் ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீ சிதம்பர கனபாடிகள் அவர்களின் அபிப்பிராயத்தை அவர்களின் அநுமதியின் பேரில் வெளியிட்டிருக்கிறேன்.

என். பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள்,
பாடசாலை உபாத்தியாயர்.

## காயத்ரீ ஜபம்.

1. இவ்வருஷத்தின் காயத்ரீஜப விஷயமாக எனக்கு தெரிந்ததை தெரிவித்து நிறுத்திவிடலாமென்று எண்ணி சென்றவாரம் ஆர்யதர்ம பத்திரிகையில் வெளிப்படுத்தினேன். ஸ்ரீமான் அக்நிஹோத்ரம் தேசிகாசார்யஸ்வாமிகள் மறுபடியும் என்னை எழுதத் தூண்டியது எனக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. ஸந்தி விக்ஞானவழி விஷயத்தில் மட்டும் வேறு மாதிரியாகச் சொல்லுவது யுக்தமா வென்பதை யோஜிக்கவேண்டுமென்று அவர் எழுதியிருக்கிறார். வேறு வழி என்று சொல்லுவதால் இஷ்டி ந்யாயத்தை அநுஸரிக்காமல் ஸந்தி நிர்ணயம் நான் செய்வதாக அவருக்கு எண்ணம் உண்டாயிருப்பதாகத் தெரிகிறது. அதனால் இஷ்டிப்ராகரணத்தை அநுஸரித்தே நான் ஸந்தி நிர்ணயம் செய்யும் வழியைத் தெரிவிக்கிறேன்.

2. இஷ்டி ப்ராகரணத்திலும் காயத்ரீஜப ப்ராகரணத்திலும் ஆவர்த்தன சப்தார்த்தம் என்ன என்பதை முதலில் கவனிக்கவேண்டியது அவச்யம். அது விஷயத்தில் தேசிகாசார்யர் ஒன்றுமே எழுதவில்லை. திதி நிர்ணய காண்டத்தில் இஷ்டிப்ராகரணத்தில் லோகாக்ஷி சாதாதபாதி வசனங்களில் பூர்வாஹ்நத்திலும் மத்யாஹ்நத்திலும் அபராஹ்நத்திலும் பர்வஸந்தி வருமானால் எவ்விதம் என்பதை வ்யவஸ்தை செய்திருக்கிறார்கள். பகலை இரண்டாக விபாகம் செய்தே அர்த்தம் செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. இரண்டாக விபாகம் செய்தால் பூர்வாஹ்நம் எந்த க்ஷணத்துடன் முடிவடைகிறதோ அதற்கடுத்த க்ஷணம் முதல் அபராஹ்நம் துவக்கிவிடுகிறது. மத்யாஹ்நகாலத்தில் ஸந்தி வந்தால் என்று சொல்லுவதற்கு எங்கேயிடமிருக்கிறது. ஆனால் வெகு வசனங்களில் மத்யானகாலத்தை தனியாக சொல்லியிருக்கிறது. ஆகையால் த்வேதாவிபாகத்தையும் ஆதரித்து மத்யான சப்தத்திற்கும் அர்த்தம் சொல்லவேண்டும். இங்கு ஆவர்த்தனம் மத்தியானம் இரண்டும் ஒன்றுதான் என்று சொல்லியிருக்கிறது. ஆவர்த்தன சப்தம் காலவிசேஷவாசீ என்பது ஸர்வஸம்மதம், எந்த காலவிசேஷம் அதற்கு அர்த்தம் என்பதுதான் இங்கு விசாரிக்கவேண்டியது. பூர்வாஹ்நத்தின் கடைசியான பாகத்தையும் அபராஹ்நத்தின் முதல்பாகத்தையும் சேர்த்து ஆவர்த்தனம் என்று சொல்லவேண்டும். அவ்விதமே வைத்யநாததீக்ஷிதீயத்தில் அவ்விடத்தில் अतस्ताभ्यां शब्दाभ्यां आवर्तनापूर्वोत्तरौभागावभिधीयेते என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது.

இனி எவ்வளவு நேரம் ஆவர்த்தனம் என்பது விசாரிக்கத்தகுந்தது. வைத்யநாத தீக்ஷிதீய ஆஹ்நிக காண்டத்தில் ஸங்கிராந்திப்ரகரணத்தில் द्वितीयप्रहरस्यचरमघटिका तृतीयप्रहरस्यप्रथमघटिका इत्येतद्द्वयं मिलित्वा अर्धरात्रइत्युच्यते என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ராத்ரியின் மத்ய காலத்தை இரண்டு நாழிகை என்று சொல்லியிருக்கும் நியாயத்தை ஆதரித்து பகலின் மத்ய காலமும் இரண்டு நாழிகை என்பது சொல்லாமலே விளங்கும். திதி நிர்ணயத்திலும் ஜயந்தீப்ரகரணத்தில்

पूर्वभागावसाने एका घटिका उत्तरभागादौ एका घटिका मिलित्वा मुहूर्तपरिमितः कालः अर्धरात्रः

என்று சொல்லியிருக்கிறது. இஷ்டி ப்ரகரணத்தில் சொல்லியிருக்கும் விஷயத்தை காயத்ரீ ஜபத்திலும் எடுத்துக்கொள்ளவேண்டியது அவச்யமென்று வற்புறுத்தும் ஸ்ரீ தேசிகாசாரியார் அர்த்தராத்ர காலவ்யவஸ்தையை மத்யானகால நிர்ணயத்தில் ஆதரிக்காமலிருக்கமுடியாது.

இன்னும் தெளிவான ஆதாரம் வேண்டுமானால் ஸ்மிருதிகௌஸ்துபத்தில்,

आवर्तनंमध्यन्दिने घटिकाद्वयात्मकं

என்று ஸ்பஷ்டமாக சொல்லப்பட்டிருக்கிறது. உத்தர திதியின் விருத்தியின் பாதியை முந்தின திதியோடு சேர்த்தாலும் ஆவர்த்தன காலமாகிய இரண்டுநாழிகைக்குள் பர்வஸமாப்தி ஏற்படுவதால் வியாழக்கிழமை தினமே ஸங்கவ காலத்தில் காயத்ரீ ஜபம் செய்து விட்டு உபாகர்மா செய்யவேண்டியது என்று கிரந்தங்களிலிருந்து தோன்றுகிறது.

சுந்தரேச சாஸ்திரீ, போலகம்.

## காயத்ரீஜப காலம்.

இதில் இஷ்டிகமான ஸந்தியை இவ்விடத்தில் ஸமன்வயம் செய்து ஸந்தியானது ஆவர்தனத்பரம் வருகிறபடியால் மறுதினம்தான் காயத்ரீஜபம் செய்யவேண்டுமென்று சிலர் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். இந்த அபிப்பிராயம் உபாகர்மாவிஷயத்தில் விரோதமாகிறது. என்னவென்றால் இன்று பௌர்ணமீ 13 நாளையதினம் பிரதிபத் 9-நாழிகை இருக்கிறது. இவ்விடத்தில் இஷ்டி விஷயமான ஸந்தியை அந்வயம் செய்தால் பௌர்ணமி 11-நாழிகைதான். இன்றயதினம் ஏற்படுமென்று உபாகர்மா செய்யக்கூடாது. ஏன்? 12-நாழிகைக்குமேல் பௌர்ணமீ இல்லாதபடியால். இவ்விதம் இன்று பௌர்ணமீ 10-நாழிகை. நாளையதினம் பிரதமாதிதி 16 இந்த இடத்திலேயும் இஷ்டி ஸந்தியைக் கொண்டு பௌர்ணமீ 13-நாழிகை இருப்பதாக ஏற்படும். இன்றயதினம் உபாகர்மா செய்யவேண்டுமென்றும் ஏற்படுகிறது. ஸ்வாபாவிகமாக பஞ்சாங்க ரீத்யா என்றைக்கு பௌர்ணமி 13-நாழிகை இருக்கிறதோ அன்று உபாகர்மா செய்யக்கூடாது என்றும் என்றயதினம் பௌர்ணமி 10 நாழிகை இருக்கிறதோ அன்று உபாகர்மா செய்யவேண்டுமென்றும் ஆகும். இந்தஇடத்தில் ஸந்திக்கி என்ன தாத்பர்யம். பௌர்ணமியினுடைய முடிவும் பிரதிபத்துடைய ஆதியும் சேர்கிறது என்றுதான் தாத்பர்யம். ஆகையால் இவ்விதம் சாமான்யஸந்தியை ஒப்புக்கொண்டு இரண்டையும் ஒரு நாளில் செய்வதுதான் நியாயமாகும். (2) இன்னும் சிலர் ஒரு பிரமாணத்தையும் வெளியிடாமல் ஜபத்தை ஸங்கவ காலத்திலேயே செய்யவேண்டுமென்று வெளியிட்ட ஸ்வாபிப்பிராயம் எப்படி பிரமாணமாகும். (3) ஸத்திய: பதத்திற்கு (எவ்விடத்தில்) பிறகுதான் என்று தாத்பர்யம். ஸத்தியச் சகமாநாய....... யத்ஸத்தியோ நிர்வபேத்— இத்யாதி சுருதி வாக்கியங்களில் உள்ள ஸத்திய: பதத்திற்கு பிறகு என்றும் பாஷ்யாதிகளில் காணப்படுகிறது (4) உபாகர்மாவுக்கு பிறகுதான் ஜபம்செய்ய வேண்டுமென்கிற விஷயத்தில் இன்னும் அநேக நியாயங்கள் இருக்கின்றன. அதாவது காயத்திரி ஜபம் பிராயச்சித்தார்த்தம் ஏற்பட்டது. அதற்கு காலம் பிரதிபத். பௌர்ணமீ அல்ல இவ்விதம் எப்படி பிரதிபத் வருவதற்கு முன் பர்வாவில் ஜபம் செய்கிறது. பர்வாவில் உபோஷணம் தான் விதித்திருக்கிறது. இன்னும் பிரதிபத்துவந்து தான் செய்யவேண்டுமென்ற அர்த்தத்தை தெரிவிப்பதற்காகத்தான் இவ்விடத்தில் சத்தியசப்தப்பிரயோகம் ஏற்பட்டது. இல்லாவிட்டால் தத்ரைவஸமிதாஹுதி: என்றே வாக்கியம் ஏற்படலாம். ஆகையால் உபாகர்மாந்தரம் செய்வதுதான் உசிதமாகும். ஸங்கவ காலத்திற்குமேல் செய்யக்கூடாது என்பதற்கு பிரமாணமே கிடையாது.

ராமஸ்வாமி சாஸ்திரியள் அரியூர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ப்பதினால் மௌட்ய தோஷமே கிடையாது என்றும் தெரிகிறது. ஆகவே முக்ய காலத்திலேயே சாந்தி பூர்வசமாம் ஷ்டி சபா கர்மத்தைசெய்வதுதான் உசிதமானதென்று ஏற்படுகிறது இந்த விஷயத்தில் அபிப்பிராய பேதமிருந்தால் ப்ரமாணங்களை காண்பிவித்து இதற்கு சமாதானம் கூறுமாறு பெரியோர்களை வேண்டுகிறேன்.

சேஷாம சாஸ்திரிகள்,
திருவாதி ஸாமவேத உபாத்தியாயர்.

‘ஸௌந்தர்ய லஹரீ.’

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

## காயத்ரீ ஜபம், ஸாமோபாகர்ம.

காயத்ரீஜபத்துக்கு மூலபூதமான ஸ்ம்ருதி, ஆபஸ்தம்பஸூத்ரம். அதை விமர்சனம் பண்ண சில ஸ்ம்ருதி வசனங்களுமுள்ளன,

"ச்ரவண பௌர்ணமியில் நிலமாத்ரபக்ஷணக உபவாஸமிருந்தும் மறுநாள் மஹாநதீஸ்நானம் செய்தும் அக்னியில் ஸமித்துக்களால் ஸாவித்ரீ மந்திரத்தால் ஆயிரம் ஆவர்த்தி ஹோமமோ அல்லது ஆயிரம் ஆவர்த்தி ஜபமோ செய்யவேண்டும்" என்ற இந்த ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் பூர்வதினத்தில் உபவாஸமும் காயத்ரீஜபதினத்தில் மஹாநதிஸ்நானமும் ஸஹஸ்ர ஸாவித்ரீ ஜபமும் இம்மூன்றும் சேர்ந்து ப்ராயச்சித்தகர்ம என்பது ஸ்பஷ்டமாகத் தெரிவதுடன் இந்த ஜபம் மித்யாதீத ப்ராயச்சித்தமென்றும் ஷை தர்மஸூத்ரத்திலேயே ஸ்பஷ்டமாயும் சொல்லப்பட்டிருப்பதால் இது ப்ராயச்சித்த கர்ம என்பதில் பண்டிதர்கள் ஒருவரும் ஸம்சயிக்கமாட்டார்கள். ஆகையால் காயத்ரீ ஜபம் ப்ராயச்சித்தகர்ம அல்லவென்று சொன்னவர் என்ன நியாயத்தால் சொன்னார் என்பது அவருக்குத்தான் தெரியவரும். அதன் காலத்தைப்பற்றி விசாரிக்கும்போது ஷை ஸூத்ரத்தில் ச்ரவண பௌர்ணமிக்கு மறுநாள் என்பதுமாத்திரம் தெரிகிறது. இதனாலேயே மறுநாள் ப்ரதிபத் என்பது ஸித்தம். ஏதாவது ஒருஸமயத்தில் பர்வப்ரதிபத்து இவைகளின் ஸந்திநேர்ந்தால் அப்பொழுது காலத்தை நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. வைத்யநாத தீக்ஷிதீயத்தில் ஸந்திஸ்ஸங்கவத: என்ற வசனம் காணப்படுகிறது. ஸங்கவத: என்பதால் அன்றையதினம் ஏற்படுகிற அஹர்மானப்படி ஸங்கவகாலத்துக்குமேல் என்றும் "அர்வாக் ஆவர்த்தனாத்" ஷை கணக்குப்படி பாதி அஹஸ்ஸுக்கு உள்பட்டு என்றும் அர்த்தம் இதன் மத்தியில் பர்வ ப்ரதிபத் இவைகளின் ஸந்தி என்றையதினம்ஸம்பவிக்கிறதோ அன்றையதினமே உபாகர்மாவையும், ஸாவித்ரீ ஜபத்தையும்பண்ணவேணுமென்பதுகருத்து. இங்கு ஸத்ய: என்ற பதங்களை பலவாறாக க்லேசப்பட்டு அர்த்தம் பண்ணத் தேவையில்லை. அதே தினம் என்பதுதான் ருஜுவான அர்த்தம். ஏனெனில் ஸாவித்ரீ ஜபம் ப்ராயச்சித்த கர்மாவாகையால் ஸங்கவகாலத்தில் தான் செய்யவேணும். உபாகர்ம அதற்காக விஹிதமான மத்தியான்ஹ காலத்தில்தான் செய்யவேணும்.

இது விஷயத்தில் அன்றைதின அஹர்மானக்கிரமத்தை கவனியாமல் மறுநாள் செய்யவேண்டுமென்று ப்ரும்மஸ்ரீ உ. வே. அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார் எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது.

ப்ரும்மஸ்ரீ போலகம் ஸுந்தரேச சாஸ்திரிகளோவென்றால் அன்றைதின அஹர்மான நிர்ணயத்துடன் உபாகர்ம தினத்திலேயே தான் ஸங்கவகாலத்தில்காயத்ரீஜபம் பண்ணவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அது யுக்தமாகத் தோன்றுகிறது.

ஸாமோபாகர்ம.

ஸாமோபாகர்ம விஷயத்தில் ப்ரோஷ்டபத ஹஸ்தத்துக்கு இவ்வருஷம் அங்காரக மௌட்யமிருப்பதால் புரட்டாசிமாதம் 8வ சனிக்கிழமை ஹஸ்தம் தோஷமில்லாமலிருப்பதால் அன்றுதான் ஸாமோபாகர்ம செய்யவேணுமென்றும் அதற்கு பிரமாணபூதமான ஆதாரம் வைத்யநாத தீக்ஷிதீயத்தில் வியக்தமாகயிருக்கிறதென்றும் உடையாளூர் ப்ரும்மஸ்ரீ அப்புசாஸ்திரிகளவர்கள் எழுதியிருக்கிறார்கள். இதே அபிப்ராயத்தையே ஊர்ஜிதப்படுத்தி புரட்டாசிமாதம் 8வ சனிக்கிழமையிலேயேதான் நாங்கள் ஸாமோபாகர்ம செய்யப் போகிறோமென்று பிடிவாதமான ஆவேசத்துடன் திப்பிராஜபுரம் ப்ரம்ஸ்ரீ நாராயண சிரௌதிகளவர்கள் எழுதியிருக்கிறார்கள். இது சரியல்ல.

வைத்யநாதீக்ஷிதீய அபிப்ராயத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டியது முக்யம்.

காதிர க்ருஹ்ய ஸூத்திரத்தில் ப்ரௌஷ்டபதீம் ஹஸ்தேந, என்ற ஸூத்ரமிருக்கின்றது. ப்ரோஷ்டபத மாதத்தில் ஹஸ்த நக்ஷத்திரத்தில் உபாகர்ம செய்யவேணும் என்பது ஸூத்ரார்த்தம். இதையேதான் ப்ரோஷ்டபத மாத சுக்லஹஸ்தத்துக்கு மௌட்யாதி தோஷம்வந்தால் கன்யா மாஸ அபரபக்ஷஹஸ்தம் நிர்தோஷமாயிருந்தால் அதில் உபாகர்ம செய்யவேணுமென்றும் அதற்கு பிரமாணமாக

ஹஸ்தர்க்ஷ முதயேசுக்லே திரிமூஹூர்த் [தாஸ்தகேஸிதே |

என்ற வசனத்தை நிரூபித்திருக்கிறார்கள். இந்த அபிப்ராயமும்கூட ப்ரோஷ்டபத க்ருஷ்ண ஹஸ்த மென்பதை நன்றாய் தெரிவிக்கிறது. இப்படியிருக்க வைத்யநாத தீக்ஷிதீயப்படி செய்யப்போகிறோமென்று சொன்னவர் ப்ரோஷ்டபத மாதத்தையும் க்ருஷ்ண பக்ஷத்தையும் பூருவாக விட்டுவிட்டு கன்னியாமாதத்தில் ஆச்வின சுக்லபக்ஷத்தில் உபாகர்ம செய்ய என்ன நியாயமென்று புலப்படவில்லை. ஆகையால் இவ்வருஷம் ஆவணி மீ 12வ ஞாயிற்றுக்கிழமையில் அங்காரக மௌட்யமிருந்தாலும்ப்ரோஷ்டபத சுக்லஹஸ்தத்தில் தான்ஸாமகர்கள் உபாகர்ம செய்யவேணும். வித்வான்கள் ஆராய்ந்துபார்த்து இதிலுள்ள குணதோஷங்களை தெரிவிக்கக் கோருகிறேன்.

ரிக்வேதோபாகர்ம.

திருக்கணித பஞ்சாங்கப்படிரிக்வேதோபாகர்மாவும் 27வ வியாழக்கிழமையேதான் செய்யவேண்டுமென்று வைத்யநாத தீக்ஷிதீய கிரந்தத்தால் தெளிவாய் தெரிகிறது சுபம்.

ஸ்வாமி சாஸ்த்ரீ,
திருவையார் அம்மாளக்கிரகாரம்.

## உபாகர்ம காயத்ரீ ஜப தின நிர்ணயம்.

### இரண்டு தினங்களில் அநுஷ்டிக்கத் தீர்மானம்.

சிவகங்கை ஸமீபம் கிழப்பூங்குடியில் பகுதான்யஹு ஆடி மீ 13வ ஸாயங்காலம் 6 மணி முதல் 9மணி வரையில் ஸ்ரீராம மந்திரத்தில் ஸாதுஜன ஸபை கூடிற்று. அதில் பஞ்சாங்கப்ராகாசகர்களால் வேறுவேறு விதமாக தம்மிஷ்டப்படி வெளியிடப்பட்ட காயத்ரீ ஜபதின விஷயமான ஓர் பெரும் ஸந்தேகம் கொண்ட சிலஸநாதனிகள் இது விஷயமான நிர்ணயத்தையே இன்று விசாரித்து வெளியிடவேணுமென்று கேட்டுக்கொண்டதின் பேரில் பிரம்மஸ்ரீ கே. ஆர். விசுவநாத சாஸ்திரிகள் பிரம்மஸ்ரீ பி. எஸ். வைத்யநாத சாஸ்திரிகள் முதலான வித்வான்கள் அது விஷயமான நிர்ணயத்தை தீர நிபந்தன கிரந்தங்களையும் ஸூத்ரங்களையும் விமர்சனம் செய்து பூர்வ பக்ஷ ஸித்தாந்த ரீதியாக வ்யவகரித்து வெளியிட்டனர். அஃதாவது, இவ்வருஷத்தில் இந்த ஆடி மீ (அதாவது ச்ராவணீ) யத்தில் 27வ பௌர்ணமீ 14 - 42. 28வ ப்ரதமை 18 2. இருக்கிறது. ஸந்திஸ்ஸங்கவத: என்ற வசனத்தால் அன்று அகர்மானம் 30-53க்கு 15- 29½ தான் நடுப்பகல். இந்த மத்யந்தின சப்தத்தையும்—ஆவர்த்தன சப்தத்தையும் பர்யாயமாகவைத்தே நிபந்தனக்காரர்கள் வியாக்யானம் செய்திருக்கின்றனர். பகலை 5ஆகப்பிரித்திருக்கிற காலத்தில் சேர்ந்ததல்ல வென்றும் வாசிகமாகச்சொல்லியிருக்கின்றனர். पर्वणिक्षयगे वृद्धौ परस्याह्नः क्षयोर्जितौ। अर्धङ्क्ल्प्तायथान्यायं दिने पूर्वत्रयोजयेत् ॥ என்றற்றொடக்கமாக, இந்த விஷயத்தில் தான் என்று பார்த்தக்யேன சொல்லாமல் பொதுவாகச்சொல்லப்பட்ட பல வசனங்கள் ஸந்தி நிரூபகங்களாயிருப்பதால் இந்த இடத்திலும் இந்தவசனம் ப்ரவிருத்திப்பதில் தடையே ஒன்றுமில்லை. ஒரு ப்ரகரணத்திலுள்ள ஸாமான்ய வசனத்தை இன்னொரிடத்தில் கைகொள்ளக்கூடாதென்பதற்கு ஆதாரமே கிடைக்காது.

அதன்படி முதல்நாள் பூர்ணிமை குறைந்தாலும் மிகுதியானாலும் மறுதினம் ப்ரதமையின் குறைவையோ மிகுதியையோ ஸரிபாதி பண்ணி பாதியை முதல்நாள் பூர்ணிமையில் குறைத்தோ சேர்த்தோ ஸந்தியை அறியவேணுமென்று ஷை வசனத்தின் பொருள். ஆதலால் ப்ரக்ருதத்தில் மறுநாள் ப்ரதமையின் அதிக நாழிகையான 3-20தை ஸரிபாதி செய்தால் 1-40 ஆகிறது. இதை முதல்நாள் பூர்ணிமையுடன் சேர்த்தால் 16-2 ஆகிறது. இது ஆவர்த்தன காலத்திற்கு மேலான காலம். இதில் ஸந்தியிருப்பதால் மறுநாள் 28வயே தான் காயத்ரீஜபம் 6 நாழிகைக்குமேல் (ப்ராயச்சித்த கர்ம காலமானதால்) செய்யவேண்டியதென்றும் தீர்மானித்ததை அநுஸரித்து, அதே ஸமயத்தில் கிடைத்தகுருவாரப்ரசுரமான ஆர்யதர்மத்தில் ஆசிரியர் ப்ரம்மஸ்ரீ அக்னிஹோத்ரம் கோபால தேசிகாசார்யார் அவர்களின் 5-வது பக்கத்தில் ப்ரசுரித்திருந்த காயத்ரீஜப காலநிர்ணயம் என்ற வ்யாஸத்தையும் படித்து சபையோர்களைச் சிறிதும் ஸந்தேகமின்றி அதன்படியே அநுஷ்டிக்கக் கேட்டுக்கொள்ள யாவரும் ஏகமனதாக அங்கீகரித்தனர். ஆதலால் 27வ உபாகர்மம் 28வ காயத்ரீஜபம் வேறு மாறுதலே இதில் இல்லையென்பதாக யாவரும் அறிந்தனர். பிறகு சந்தன தாம்பூலம் வழங்க மங்களகீதத்துடன் 9-மணிக்கு ஸபை இனிது நிறைவெய்தியது.

ஜோஸ்யம் L. ராமஸ்வாமி சாஸ்திரிகள்,
கிழப்பூங்குடி.

## ஸாமோபகர்ம.

இது விஷயமான பல ஆராய்ச்சிகளை ஆர்யதர்ம மூலமாய் தெரிந்துகொண்டதின் மேல் எனக்குத் தோன்றிய சில விஷயங்களை தெரிவிக்கிறேன். க்ருஹ்ய ஸூத்ரக்காரர் ஸாமோபகர்மாவுக்கு பாத்ரபத சுக்லபக்ஷ ஹஸ்தத்தை முக்யகாலமாகவும் ச்ராவண பௌர்ணமியை கௌணகாலமாகவும்ஸ்பஷ்டமாய் கூறியிருக்கிறார். ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதீயத்தில் ப்ரௌஷ்டபத (கன்யாமாஸத்திய) ப்ரௌஷ்டபத கன்யாமாஸத்திய) க்ருஷ்ண பக்ஷ ஹஸ்தத்தை கௌணகாலமாய் சொன்னதிற்கு "ஹஸ்தர் க்ஷமுத்யே" என்ற ஸங்கரஹ வசனம் ப்ரமாணமாகும். இவ்வருஷத்திட் புரட்டாசி 8-தேதி வருகிற ஹஸ்தம் ப்ரௌஷ்டபத (அமாபக்ஷ) அஸ்தமாக விராததினால் இது ஸ்ம்ருதி முக்தா பல ரீதியிலும் கௌணகாலமாகவில்லை. ஆகவே ஸாமவேத க்ருஹ்ய ஸூத்ர ப்ரகாரம் முக்ய கால கௌணகாலங்களில் குஜமௌட்யம் இருப்பதால் முக்யகாலமாகிய ஆவணி 12வ தேதியே சாந்தி புரஸ்ஸரமாம் ஸாமோபாகர்மத்தை செய்யவேண்டுமென்று தோன்றுகிறது ஷை சாந்தி விஷயத்தில் சிலர் பக்ஷம் செய்யவேண்டுமென்றும் சிலர் பக்ஷம் வேண்டாம் என்றும் விகல்பம் வைத்யநாத தீக்ஷிதீய மூலம் அறியப்படுகிறபடியால் செய்யாத பக்ஷத்தைவிட செய்யவேண்டியது என்ற பக்ஷம்தான் மீமாம்ஸகர்களுக்கு ஸம்மதமாகும் இவ்வருஷம் குஜமௌட்யம் ஸூத்ரோக்தமான முக்யகாலத்தில் இருந்தபோதிலும் ஜ்யோதிச் சாஸ்திர ரீதியில் பார்க்கும்பொழுது குஜன் (அம்சத்தில்) தனக்கு மித்ரமான குருவின் க்ஷேத்ரமான மீனத்தில் இரு

(மூன் பக்கம் பார்க்க.)



## ஆமதாபாத்தில்.

### அகில இந்திய வர்ணாசிரம ஸ்வ ராஜ்ய ஸங்க உதவி பிரசாரங்கள்.

அகில இந்திய வர்ணாசிரம ஸ்வாராஜ்ய சங்க உதவி பிரசாரர்கள் காலோலிருந்து ஆமதாபாத்துக்கு வந்ததிலிருந்து ஆங்காங்கே அநேக பொதுக்கூட்டங்களை இடைவிடாது நடத்திவருகிறார்கள். சென்ற மாதம் 24வ ஸந்யாஸ ஆஸ்ரமத்தில் பண்டிட் தேவநாயகாசார்ய்ஜீ பேசுகையில் வேதங்களில் சொல்லப்படுகிற புருஷ ஸூக்தத்தில் 'வருணங்கள்' எங்கும் நிறைந்த பொருளான சாக்ஷாத் பரம்பொருளான பகவானால் பிரிக்கப்பட்டவைகளே யென்றும், அவைகள் கெடாமலிருந்தால்தான் ஹிந்து ஸமூகம் தழைத்தோங்கி நிற்குமென்றும், அங்ஙனமின்றி வர்ணப்பிரிவினைகள் வர்ணாசாரம்மீறி சீரழியத் தொடங்கினால் ஹிந்து ஸமூகமே சீர்கேடடைந்துவிடுமென்றும் நன்கு நிரூபித்தார்.

தலைமை வகித்த சுவாமி ஸ்ரீ ஹரிநாம்ஜீ அவர்கள் ஆதரித்துப்பேசுகையில் ஹிந்து மத தர்மங்களையும் சாஸ்திர கட்டுப்பாடுகளையும் முறையே கையாண்டு காப்பாற்றி ஹிந்து மதம் புத்துயிர் பெற்று விளங்குதே வர்ணாச்ரம சங்கத்தின் நோக்கமென்று வற்புறுத்திக்கூறினார்.

நகர உயர்தரக்கலாசாலையில் 25-7-38 பண்டிட் தேவநாயகாசாரியார் மாணவர்களின் பொருட்டு ஓர் சொற்பொழிவு நடத்தினர். அன்று மாலை மணி நகரில் ஓர் பொதுக்கூட்டம் நடத்தினார். பிரின்ஸ்பால் ஸ்ரீ துர்கால், கூடியிருந்த மஹா ஜனங்களுக்கு சங்கம் ஆரம்பத்திலிருந்து அதன்நோக்கத்தை நன்கு கூறி ஷை சங்கத்தில் மெய்பாக சேர்ந்து ஆதரிக்கவேண்டுமென்று உபன்யஸித்தார்.

மற்றொரு கூட்டம் அன்றிரவு பத்ராவில் ஸ்ரீ D. B. காண்டர்கார் ராம் மந்திரத்தில் டெக்கானி கிளப் ஆதரவில் கூடியது. அகில இந்திய வர்ணாச்ரம சுவாராஜ்யசங்கம் ஜெனரல் செகரட்டரி ஸ்ரீ R. B. S. M பாண்டே, அவர்களும், தேவநாயகாசாரியார் அவர்களும் மிகவும் உருக்கமாகப்பேசினார்கள்.

26-7-38 சபர் மதிக்கரையிலுள்ள, மஹந்துவினுடைய பத்ரகாளி மந்திரத்தில், சங்கத்தின் உதவிபிரசாரர்களும், பிரபலர்களான ஸ்ரீசேத்பாலாபாய், ஸ்ரீகர்தர்லால், ஸ்ரீ நாகின் தாஸ் ஸங்கவாய், ஸ்ரீ வஸந்தராம் சாஸ்திரி, ஸ்ரீ பண்டித பாலசங்கர் முதலியவர்களும் நன்கு பேசினார்கள்.

அஹமதாபாத் ஸ்ரீ யுதராய்சந்த் அவர்கள் அவரது காலஞ்சென்ற மனைவியான ஸ்ரீமதி (Fulli Bai) புல்லிபாய் அம்மாளது ஞாபகார்த்தமாக 5400 சதுர அடியுள்ள சபர்மதிகரையிலுள்ள பூமியை அளித்துள்ளார்.

அ. இ. வ. சங்கம், பிரசாரர்கள்.
(Camp) (அஹமதாபாத்).

## திருப்புகழும் பக்திரஸமும்.

கும்பகோணம் அத்வைதஸபை ஆதரவில் ப்ரும்மஸ்ரீ ஆங்கரை ரெங்கஸாமி சாஸ்திரிகள் அவர்கள் திருப்புகழும்—பக்திரஸமும் என்கிற விஷயத்தைபற்றி ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் மடத்தில் 30-7-38, 31-7-38, 1—8—38வகளில் உபன்யாஸம் செய்தார்கள். ஷை உபன்யாஸங்களின் ஸாராம்சம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

ஓர் நிருபர்.

## கும்பகோணம் அத்வைத ஸபை.

ஷை ஸபையின் வருஷாந்திர ஸதஸ் பகுதான்ய-ஹு ஆவணி-வ 4வ (1938-ஹு ஆகஸ்டு-மீ 20) சனிக்கிழமை முதல் ஆரம்பித்து வழக்கம்போல் ஒருவாரம் நடைபெறும்.

ஓர் நிருபர்.

## ஆத்தன்குடி.

### ஸநாதன தர்ம மஹா சபை.

### ஐந்தாவதாண்டு நிறைவிழா அழைப்பு.

நிகழும் வெகுதான்யஹு ஆடி மீ 21வ (5-8-38) வெள்ளிக்கிழமை காலை 9-மணி முதல் ராம. கும. சு. வேதபாடசாலையில், தேவகோட்டை வழக்கறிஞர் ப்ரம்மஸ்ரீ டி. ஜி. நாகரத்தின சாஸ்திரிகளவர்கள் B. A. B. L தலைமையில் அறிவாற்றல் மிக்க பெரியோர்களின் விரிவுரை நடைபெறும். அன்பர்கள் விஜயம் செய்து சிறப்பிக்கக்கோருகிறோம்.

நிகழ்ச்சி முறை.

வெகுதான்யஹு ஆடி மீ 21வ (5-8-38) வெள்ளிக்கிழமை காலை 9-மணி.

1. கடவுள் வாழ்த்து 2. வரவேற்புத்தாள் அறிக்கை படித்தல் 3. தலைவர் முன்னுரை. 4. "நித்ய கர்மா"-திருவாவடுதுறை திருப்பணியாளர் வித்வான் ப்ரம்மஸ்ரீ A. V. சேஷகிரி சாஸ்திரிகள் அவர்கள் 5. "சைவத்தின் மாண்பு"- காரைக்குடி, திருவாளர் சேவு மெ மெய்யப்ப செட்டியாரவர்கள் 6. "காயத்ரீ" தஞ்சாவூர் வித்வான் ப்ரம்மஸ்ரீ தியாகராஜசாஸ்திரிகளவர்கள் பிற்பகல் 2-30.மணி 7. "பாலருவாயர்" தேவகோட்டை திருவாளர் பாலகவி வயிரநாகரம், வே. இராமநாதன் செட்டியாரவர்கள் 8. "ஆலயவழிபாடு"- தேவகோட்டை திருவாளர் கரு. கி. சொர்ணநாதன் செட்டியாரவர்கள் 9. "ஸ்வதர்மாநுஷ்டானம்" திருக்கருகாவூர்ப்ரம்மஸ்ரீ T.L. சுப்பய்யரவர்கள் B. A, B L. இரவு 6-45 மணி 10. "நமது நிலை" — "பாரதமித்திரன்" ஆசிரியர் கும்பகோணம் திருவாளர் ஆ. சத்திவேற் பிள்ளை அவர்கள் 11. தலைவர் முடிவுரை—வந்தனோபசாரம். சுபம்!

## ஸ்ரீ வாஞ்சியம்.

இந்த ஊரில் சென்ற ஆடி அமாவாசையன்று ஸ்ரீமங்களாம்பிகா ஸமேத ஸ்ரீ வாஞ்சீசுவா தர்சனத்தின்பொருட்டும்குப்தகங்கை என்கிற புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் தர்பணம் முதலான வைதிக கர்மங்களை அனுஷ்டிக்கவேண்டியும் விஜயம் செய்திருந்த ஸ்ரீ மடம் ஆஸ்தான-வித்வான்-மகோபதேச-கவிரத்னம்-ப்ரம்ஹஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரியளவர்கள் ஷை க்ஷேத்திர வாஸிகளான அசேஷ மகாஜனங்களுடைய ப்ரார்த்தனையின்பேரில் ஈசுவாராதனம் என்கிற விஷயத்தைப்பற்றி சுருதி ஸ்மிருதி கீதை முதலான பிரமாணங்களுடன் ஸகல ஜனங்களும் நன்கறிந்துகொள்ளும்படி எளிய தமிழ் நடையில் ஸபையில் விளங்குகிறவர்களுக்குப் பகவதாராதனம் அவசியம் செய்யவேண்டுமென்று மனதில் பதியும்படியாக இரவு 8-மணி முதல் 10-மணி வரையில் உபன்யஸித்து எல்லா ஜனங்களுக்கும் அதிக ஸந்தோஷத்தையுண்டு பண்ணினார்கள். முடிவில் ஸ்ரீவாஞ்சீசுவாரிடமிருந்து வந்த பிரஸாதங்களிலிருந்த புஷ்பமாலையை ஷையூர் பிரம்மஸ்ரீ மகாலிங்க சாஸ்திரியளவர்கள் ஸப்யர்களுடைய காகோஷத்திற்கிடையில் உபன்யாஸகரவர்களுக்குச்சாற்றினார்கள். பிறகு வேத மந்திரங்களால் ஆசிகூற மற்றுமுள்ள பிரஸாதங்களையும் கொடுத்தார்கள். பிறகு இந்த விசேஷ புண்ய காலத்தில் பிரம்மஸ்ரீ சாஸ்திரியளவர்களுடைய சிறந்த உபந்யாஸத்தைக் கேட்டு நாம் அனைவரும் தன்யர்களானோம் இவ்விதமே நம் சாஸ்திரிகள் அடிக்கடி இங்கு விஜயம்செய்து ஸத்விஷயங்களை நமக்குப் போதித்து சிரேயஸ்ஸையடையும்படி செய்யவேண்டுமென்கிற சிலருடைய ப்ரார்த்தனையுடன் ஸபை பூர்த்தியடைந்தது. சுபம்.

ஏ. எஸ். அய்யாவய்யர், ஸ்ரீவாஞ்சியம்.

## வக்கீல்களுக்கு சம்பளம்,

நெல்லூரில் கனம் பிரதம மந்திரி பேசுகையில் சட்டகலாசாலையையே மூடிவிடவேண்டுமென்றும் வக்கீல்களுக்கு சம்பளம் கொடுத்து அவர்களுடை எண்ணிக்கையை குறைக்க வேண்டுமென்றும் பேசினார். இந்த சீர்திருத்தத்திற்கு ஆதரவு கிடைத்து ஒருநாள் இது அநுஷ்டானத்திற்கும் வருமென்றும் எச்சரித்தார். ஸாதாரண ஜனங்களுக்கு சட்டப் பயிற்சி கொடுத்து விடுவது நல்லதென்றும் பேசினார். இவருடைய அபிப்ராயம் வக்கீல் ஸமூகத்தில் கலக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

## சீமையில் சந்திப்பு

### நேரு—வைஸ்ராய்

இந்திய வைஸ்ராய் லார்டுலின்லித்கோவும் பண்டித நேருவும் லண்டனில் 19-தேதியன்று ஸந்தித்துப் பேசினார்கள். இருவரும் சேர்ந்து விருந்துண்டார்களாம். அப்போது இந்திய ராஜீய நிலைமைபற்றிப் பேச்சு நடந்ததாம்.

## ஸ்ரீமான் புலாபாயிக்குத் தடை.

### பேசக்கூடாது.

காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் புலாபாய் தேசாய் ஹைதராபாத் வக்கீல்ஸங்கத்தில் ஒரு பிரசங்கம் செய்வதாக இருந்தார் ஆனால் ஸமஸ்தான உத்திரவு பெற்று போலீஸார் இதை தடுத்து விட்டனர்.

## பிரதம மந்திரிமீது வெறுப்பு.

### ஆந்திரதேசத்தில் அமளி.

கனம் பிரதம மந்திரி ராஜகோபாலாசாரியர் ஆந்திர தேசத்திற்குப் போயிருந்த ஸமயம் எங்கும் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆந்திரமாகாண பிரிவினைக்கு கனம் மந்திரி எதிரியென்ற காரணத்தால் இது நடந்தது. பல கூட்டங்களில் இரைச்சலும், கூச்சலும் நடந்து மந்திரி பேசமுடியவில்லையாம் கேட்ட கேள்விகளுக்கும் அளவில்லை. கனம் மந்திரி தாம் ஆந்திரப் பிரிவினைக்கு அநுகூலமாயிருப்பதாக ஸமாதானம் கூறினார்.

**Srimad Bhagavatham.**

Condensed, translated, illustrated by T. R Kanapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 2—0—0
Ordinary and Bound PriceRs. 1—8—0

ஸ்ரீமத் பாகவதம்

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 2—0—0
சாதாரண பேபர் ரூ. 1—8—0
7,8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணா 1.

G. Subramaniam &Co.,
Sri Bhagavatham Publishing House,
Tinnevelly Jn.
Arya Dharmam Office, Kumbakonam

பொதுஜன வைத்திய உதவி.
டாக்டர் தேவையில்லை.

20ஹு அனுபவம் பெற்றது. குறைந்தசிலவில் சிறந்தகுணம். தினசரி ஏற்படும் 10, விதமான நோய்களுக்கு 8, வித கெ. ஔஷதங்கள் எந்த கெ. மருந்தும் 3 அணாதான். அது 40. கேசுகளுக்குப் போதுமானது. அனுபவத்தில் அதிசய குணம் காணலாம்.

தயாரிப்பவர்:— J. & J. டிசேன் ஹைதராபாத், ஏஜண்டு T. R. கோபாலய்யங்கார்,
12. பாணாதுறை சந்நதி கும்பகோணம்.
மற்றவிபரம் தபாலின் மூலம்.

215243




அநாவசியமாக ஏன் - -

- - அவஸ்தைப்படுகிறீர்கள்




அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லதீ

அமிர்தாஞ்சனம்


## திருவாதி ஆடிப்பூர உத்ஸவத்தில் வேதபாருயணம்.

பூலோக கைலாசம் என்ற பஞ்சநத க்ஷேத்ரத்தில் வழக்கம்போல் இவ்வருஷமும் ஆடிப்பூர உத்ஸவம் மிக விமரிசையாய் நடைபெற்றது இவ்வருஷத்தில் விசேஷமாய் யஜுர்வேதத்திய அசிதித்வய பாருயணமும் நடந்தது குறிப்பிடத்தக்கதாகும். இதை நடத்தியவர் புதுக்கோட்டையில் ஸப்ரிஜிஸ்டாருகவிருந்து தற்சமயம் பென்ஷன் வாங்கிக்கொண்டு இவ்வூரில் சுமார் ஒருவருஷ காலமாய் வசித்து வரும் R. கிருஷண சாஸ்திரியள் என்பவர். இவர் மிகவும் ஆஸ்திகரும் சிஷ்டரும் வித்வானுயுமிருந்து இந்த கைங்கர்யத்தை செய்தது ச்லாகிக்கத் தகுந்தது' ஸனுதன தர்மத்திற்கு மூலப்ரமாணமான நமது வேதத்தில் விசேஷ நம்பிக்கையுடன் இந்த கார்யத்தை செய்தது இச்சமயம் மிகவும் கொண்டாடத் தக்கதாகும். இந்த மஹான் வேத பாருயணத்திற்காக வெளியூரிலிருந்தும் புதியதாய் இவ்வருஷம் அக்னிஹோத்ரிகளும் பூர்ணமாய் வேதாத்யயனம் செய்தவர்களும் சிஷ்டர்களுமான ப்ருமமனேத்தமர்களை வாவழைத்து அவர்களுக்கு விசேஷமான போஜனுதி வசதிகளையும் ஸம்பாவனையும் மிகவும் பக்தியுடனும் ச்ரத்தையுடனும் நடத்திவைத்தார். ஸ்ரீ அம்பாள் ஸந்நிதானத்தில் ஷை ப்ருமமணர்கள் பாருயணத்தை மத்யமஸ்வரத்தில் செய்யும்பொழுது இந்நகருக்குத் திலகமாய் விளங்கிய வேதமூர்த்தி பிரும்மஸ்ரீ ஸ்ரீமுத்துகனபாடி களுடையவும் அவர் சிஷ்யர்களுடையவும் ஞாபகம் யாவருக்கும் ஏற்பட்டது.

இந்த ஆஸ்திகர் பல தடவைகளில் வேத பாருயணத்திற்காக விசேஷ உதவிபுரிந்தது மறக்கக்கூடியதல்ல. இந்த கைங்கர்யத்தை செய்த இவர் இதா ஆஸ்திக கனவான்களுக்கு ஓர் வழிகாட்டியாயிருக்கிருர் என்பதில் ஐயமில்லை. இவருக்கு மேன்மேலும் இந்த கைங்கர்யத்தில் ச்ரத்தையும் ஆஸ்திக வித்வான்களின் உபந்யாஸங்களில் விசேஷ ப்ரீதியையும் ஸனுதனதர்ம ப்ரசாரத்தில் விசேஷ உத்ஸாஹத்தையும் ஆரோக்யத்தையும் இன்னும் இவர்களின் மனே பீஷ்டத்தையும் அருளி ஸ்ரீ தர்ம ஸம்வர்த்தனீ ஸமேத ஸ்ரீப்ராணதார்த்திஹரர் அருள் புரிவாருக.

சேஷரும சாஸ்திரி,
ஸாமவேத உபாத்தியாயர்.

## கோடிமுடி.
## ஸநாதன தர்ம ஸபா.

இச்சபையின் சார்பாக கொடிமுடி ஸநாதனிகள் காசி ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ மாதவாநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் மகராஜ் அவர்கள் ஆதரவில், சென்ற 26-7-38 அக்கிரஹார சத்திரத்தில் பொதுக் கூட்டமாகக் கூடினுர்கள்.

அவ்வமயம் ஸ்ரீ ஸ்வாமிகள் புராதனமான நமது தர்மங்கள் நிலைத்தோங்கும் பொருட்டும் மதக் கொள்கைகளிலும், தர்மங்களிலும், பூர்ண நம்பிக்கையும், கட்டுப்பாடும் நிலைத்து நிற்கவும், ஓர் ஸபையை ஸ்தாபித்தார்கள்.

ஸபைக்கூட்டத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கொடிமுடியில் ஓர் ஸபை அவசியம் ஏற்பட வேண்டியதைப்பற்றி மிகவும் உருக்கமாயும், யாவரும் தங்கள் கடமைகளை உணரும்படியும் விளக்கி ஷை தர்ம ஸபையானது சென்னை மாகாண ஸபையுடன் ஒத்துழைத்து (The Servants of Dharma Society) "தர்ம ஊழியர்கள் ஸொஸைடி" ஸ்தாபகரும், ஆதரிப்பாளருமான பூரி, கோவர்த்தன மடம், ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காரசார்ய சுவாமிகள் அவர்கள் நன் நோக்கத்தை உணர்ந்து அவைகளை முறையே நிறைவேற்றி தர்ம சாஸ்திர சம்பிரதாய கட்டுப்பாடுகளில் தலை சிறந்து விளங்கவேண்டுமென்றும் நிரூபித்தார்.

பொது ஜனங்களால் ஸபையின் சேர்மனுக தேர்ந்தெடுக்கப்பட்ட கொடிமுடி ஸ்ரீ சங்கர வித்யாசாலா உயர்தரக் கலாசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் V. S. வெங்கடேச அய்யர் B.A. L.T., அவர்கள், அவரது தலைமைப் பிரஸங்கத்தில் நமது தர்மத்தை நன்கு ரக்ஷிக்க வேண்டியதைப்பற்றியும்; மேனுட்டு நாகரீகத்தில் புதைந்துகிடக்கும் ஸமூகத்தையே புத்துணர்ச்சியுடன் எழுச்செய்து புராதன இந்தியர்களின் நிலையை அடையும் படிப் பாடுபட வேண்டுமென்றும் கூறினுர்.

ஸபையானது பொதுக்கூட்டங்களை அடிக்கடி நடத்தித்தனது கடமையை முறையே கையாளவேண்டிய நிமித்தம் ஓர் கமிட்டி ஸ்தாபிக்கப்பட்டது. ஸபையின் பிரஸிடெண்டாக ரிடையர்டு போஸ்டுமாஸ்டர் ஸ்ரீமான் B. S. கிருஷ்ணசாமி அய்யரும், மிருசுதாரரும், கிரும முனிசீபுமான ஸ்ரீமான் K. ராம.ஸ்வாமி அய்யர் வைஸ்-பிரஸிடென்டாகவும் ரிடையர்டு ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், ஹானரரி மாஜிஸ்டிரேட்டுமான ஸ்ரீமான் K. R. நரஸிம்ம அய்யர் அவர்கள் செகரட்டரியாகவும், பொக்கிஷதாராகவும் நியமனம் செய்யப்பட்டார்கள்.

இந்திய மக்களது ஒற்றுமையை நிலை நாட்டவும், அடிக்கடி அநேக பொதுக்கூட்டங்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டு பிரம்மஸ்ரீ கே. எஸ். நாராயண சிரௌதிகளவர்களால் தகுந்த பெரியோர்களடங்கிய தினசரி உபநிஷத் பாட வகுப்பொன்று நடத்தப்பட்டு வருகிறது.

கோபி, பிரும்மஸ்ரீ பரமேஸ்வர சாஸ்திரிகளவர்களால் தினசரி அத்யாத்ம ராமாயணத்தின் அரிய தத்வங்களை வேதாந்தத்தின் ரகஸ்யத்தினுலும் அத்வைத சித்தாந்தத்தின் பெருமையாலும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

இந்த சபையானது மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து விளங்குவதன் பொருட்டு வெளியூர்களிலுள்ள ஸநாதன பிரமுகர்களாலும், பண்டிதர்களாலும் இது போன்ற ஸபை காரியதரிசியாலும், ஸபையின் நோக்கங்களுக்குறிய நற்போதனைகளை சமயத்தில் உதவி, ஆதரிக்கும்படி சபையின் சார்பாக காரியதரிசி கேட்டுக்கொள்ளுகிருர்.

K. R. நரசிம்ம அய்யர், காரியதரிசி.

## ஹிந்து தர்ம வீர் ஜதா.

ஹிந்து தர்ம வீர்ஜதா அமாவாசை தினம் காவேரிபட்டணம் வந்துசேர்ந்து, மாத்யான்னிக காலத்தில் ஸ்ரீ காவேரிநதியின் ஸமுத்ர ஸங்கமத்தில் ஸ்நாநம் செய்தும் ஹிந்து தர்ம பிரசுரங்களை கூட்டத்தில் வழங்கிவிட்டு ஸாயந்திரத்தில் பொதுக்கூட்டத்தில் தர்மப்ரசாரம் செய்துவிட்டும் திருவெண்காடு க்ஷேத்ரத்துக்கு பாதசாரியாக போனுர்கள். மறுநாள் ஸாயந்திரம்வரையில் ஷை க்ஷேத்ரத்தில் தங்கிவிட்டு அன்று தினமே சீர்காழிக்குப் போய்ச்சேர்வார்கள் என்று தெரிகிறது. திருவெண்காட்டிலுள்ள ஸ்ரீ காமகோடிபீட பூர்வாசார்யர்களில் பிரசித்திபெற்ற ஸ்ரீ பரமசிவேந்த்ர ஸரஸ்வதி அதிஷ்டானத்தில் தெரிசனம் செய்துகொண்டுபோவார்கள்.

வெ. சுப்ரமண்ய அய்யர்.


மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.

"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் செலவு வேறு] [விலை அணு 0—8—0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அகோயநர்மம்

18-8-1938

4 ௩

23 32

25244

215244
1938
MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஸ்ரீ ஆவணி-மீ 2உ 1938ஸ்ரீ ஆகஸ்டு-மீ 18உ | ஸஞ்சிகை 32

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்த்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

### விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## அக்கௌண்டெண்டு ஜெனரல் அறிக்கை.

திருவாங்கூர் நேஷனல் & கொயிலான் பாங்கு லிமிடெட் லிக்குவிடேட்டர்கள், ஷை பாங்கின் கஸ்டமர்களால் மேடோர் செய்யப்பட்ட உண்டியல் (Bills)களை மாற்ற கவர்மெண்டு டிரஷரியில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அக்கௌண்டெண்டு ஜெனரல் அவர்கள் சென்னை கவர்ன்மெண்டுக்கு தெரிவித்திருக்கிறார்.

ஷை பாங்கி வரவு செலவுகளை ஸஸ்பெண்டு செய்திருப்பதால் சரியான கோர்ட்டுமூலியம் தங்களுடைய பாத்தியங்களை ருஜுப்படுத்துகிறவர்கள் தவிர மற்றவர்களுக்கு ஷை உண்டியல் மாற்றும் வகை அனுமதிக்கப்பட மாட்டாது என்று அக்கௌண்டெண்டு ஜெனரல் தெரிவித்திருக்கிறார்.

ஆகையால் பாங்குக்கு மேடோர் செய்யப்பட்ட உண்டியல்களின் சொந்தக்காரர்கள் கவர்ன்மெண்டு டிரஷரிமூலம் பணம் பெற்றுக் கொள்ளுவதற்கு அந்தந்த பில்களுக்காக ஏற்பட்ட யுக்தப்படி வேண்டிய முறைகளை எடுத்துக்கொள்ள அறிவிக்கப்படுகிறார்கள்.

(ஒப்பம்) ஸி. கே. விஜயராகவன்,
கவர்மெண்டு செகரட்டரி.

## தீர்மானம் தோற்றது.

வங்காள மந்திரி ஸபைமீது கொண்டுவரப்பட்டிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இரண்டும் தோற்றுவிட்டது.

## உத்தரவு வாபீஸ்.

விச்வகர்ம வகுப்பினரை "விச்வ பிராமணர்" என்று ஸர்க்கார் தஸ்தாவேஜிகளில் குறிக்கவேண்டியதில்லையென்று ஸர்க்கார் செய்திருந்த உத்திரவை வாபீஸ் செய்துவிட்டார்கள். இனி அவ்வகுப்பை "விஸ்வ பிராம்மணர்" என்று குறிப்பிடப்படும். இவ் விஷயமாக அவ்வகுப்பினர் ஸமீபத்தில் கிளர்ச்சி நடத்தினர்.

## ஹிந்தி எதிர்ப்பு ஜதா.

கட்டாய ஹிந்தியை எதிர்த்து சென்னையில் ஸத்தியாக்ரஹம் செய்யும் உத்தேசத்துடன் ஒரு தொண்டர்படையானது திருச்சியிலிருந்து கிளம்பி கால் நடையாகச் சென்னை சென்றுகொண்டிருக்கிறது. அங்காங்கு அதற்கு வரவேற்பு நடக்கிறதாம்.

## ரங்கூனில் பெரியகலகம்

### மததூஷணம் காரணம்

ஒரு மஹம்மதியர், பௌத்தமதத்தை தூஷித்துப் புஸ்தகம் எழுதிய காரணமாக பௌத்தர்களுக்கும் மஹம்மதியர்களுக்கும் அங்கு பலத்த கலகம் நடந்தது. ஸொத்துக்களுக்கும், உயிருக்கும் ஏராளமாக சேதம் ஏற்பட்டது,

சில மஹம்மதியர்கள் இவ் விஷயமாக சென்னைவந்து பிரதமமந்திரியைகண்டு பேசித் திரும்பினர்.

## மத்ய மாகணத்தில் அதிருப்தி.

மத்ய மாகாண மந்திரி ஸபை விஷயமாக காங்கிரஸ் கார்ய கமிட்டி செய்த தீர்மானத்தை எதிர்த்தும், டாக்டர் காரேயை ஆதரித்தும் பலவிடங்களில் கூட்டங்கள் நடைபெறுகின்றன, கார்யக்கமிட்டி செய்கையை ஆதரித்தும் சிலகூட்டங்கள் நடைபெறுகின்றன.

முக்கியமாக ஜனநாயக தத்வமும், மந்திரிகளின் கூட்டுப்பொறுப்பு ஸ்வாதந்திரியமும் பாதிக்கப்பட்டு விட்டதாகப்பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

## பேச்சு முறிந்தது.

ஹிந்து முஸ்லீம் ஸமாஸ விஷயகமாக காங்கிரஸுடனும், லீகும் நடத்திவந்த பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது. இனி காங்கிரஸுடன் இவ்விஷயமாகப் பேசவேண்டியதில்லையென லீக் திர்மானித்தது.

## தேவஸ்தான போர்டு.

### கமிஷனரைக் குறைக்க.

சென்னை ஹிந்துமதஸ்தாபன போர்டின் கமிஷனர்களுடைய ஸங்கியைக்குறைக்க சென்னை ஸர்க்கார் ஒரு மசோதா கொண்டுவரப்போகிறார்கள். ஆகையால் இப்போது காலியாக இருக்கும் பதவி பூர்த்தி செய்யப்படாதாம்.

## விவாஹச் சட்டத்தையே திருத்த யோஜனை.

### காங்கிரஸ் பொறுப்பு.

இந்தியா சட்டஸபை மெம்பரான டாக்டர் தேஷ்முக் காந்திஜிக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கிறார். ஹிந்து விவாஹ விஷயமாக சில்லரையான சீர்திருத்தங்கள் செய்வதைவிட பெருவாரியாகவே ஓர் சட்டத்தை மாகாண கவர்ன்மெண்ட்கள் செய்யவேண்டியதவச்யமென்றும், இதை காங்கிரஸ் மந்திரிகள் செய்வது அவச்யமென்றும் சொல்லியிருக்கிறார்.

## மூகபஞ்சசதியின் முதல் பாகம்.
## "ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணா 6.
கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# தேசிகன் தேன்மொழிகள்.

## வக்கீல் உத்யோகம்.

### 2. விசேஷ அனுகூலம்.

ம: மேலும், உங்கள் உத்யோகத்தில் பிரதிதினமும் எதிர்க்கக்ஷி வக்கீலினுடைய புத்தியுடன் தங்கள் புத்தியை போராடும்படி செய்ய அவச்யமும் ஸந்தர்ப்பமும் ஏற்படுமல்லவா?

வ: ஆம்.

ம: எதிர்க்கக்ஷியில் வருகிற புத்திசாலியான ஸாக்ஷியை ஸரியானபடி கேள்வி கேட்பதற்கும் உங்கள் புத்தியை நன்கு உபயோகிக்கவேண்டிவரும்.

வ: ஆம்.

ம: மேலுள்ள நியாயாதிகாரி மந்தாயிருந்தால், உங்கள் கக்ஷியை அவருக்கு நன்குணர்த்தவேண்டியதற்கும் நீங்கள் கூடுமானவரையில் பிரயத்னம் செய்யவேண்டும். அதிகாரி புத்திசாலியாயிருந்துவிட்டால், அவர் உங்கள் அபிப்ராயத்திற்கு இணங்கவேண்டுமானால், அவர் கேட்கும் நுட்பமான கேள்விகளுக்கும் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். எப்படியும் ஒரு முடிவு வரும்வரையில் உங்கள் புத்தியும் அவர் புத்தியும் போராடுமல்லவா?

வ: அப்படியேதான்.

ம: ஆகையால் பிரதிதினமும் எதிர்க்கக்ஷி வக்கீலுடனாவது, ஸாக்ஷியுடனாவது, அதிகாரியுடனாவது உத்யோக முறையில் உங்கள் புத்தியை உபயோகிக்க ஏற்படும்.

வ: முப்படியே.

ம: உபாத்யாய உத்யோகத்திலிருப்பவர் தான் வித்யார்த்தியாருந்த காலத்தில் கற்றுக்கொண்ட விஷயங்களையே திருப்பித்திருப்பி இப்பொழுது தன் மாணுக்கர்களுக்குச் சொல்லிக்கொடுத்துவந்தால், அநேகமாய் போதுமென்றிருப்பதால், தன் புத்தியை மேலுக்குமேல் தீட்டிக்கொள்ள ஸந்தர்ப்பமாவது அவசியமாவது அவருக்குக் கிடையாது. மாணுக்கர்களுடன் பழகும் காலத்திலும் தனக்கு கீழ்ப்பட்டவர்களுடன் தான் பழகுகிறார். உங்கள் உத்யோகத்திலோவென்றால், அநேகமாய் உங்கள் புத்தியை விடக் கூர்மையுள்ள புத்திகளுடன் வியவஹரிக்க ஏற்படும்.

வ: வாஸ்தம்.

ம: அடிக்கடி உபயோகிக்கப்பட்டு வரும் சந்தக்கருவியும் துருபிடிக்க நியாயமில்லையே?

வ: இல்லை.

: இடைவிடாமல் உபயோகிக்கப்படுவதுடன், ஒவ்வொருதடவை உபயோகிக்கப்படும் ஸமயத்திலெல்லாம் தீட்டப்பட்டதுமாகுமானால்உபயோகப்படுத்தப் படுத்த ஜாஸ்திகூர்மையாக ஆகிவிடும்.

வ: ஆம்.

ம: ஆகையால் வக்கீலினுடைய புத்தி அவருக்கு வயதாக வயதாக ஜாஸ்தி கூர்மைபட்டே வர வேண்டுமல்லவா? இதர உத்யோகஸ்தர்களுக்கு இவ்விதம் தங்கள்புத்தியை நிரந்தரமாகஉபயோகிக்கவாவது தீட்டிக்கொள்ளவாவது ஸந்தர்ப்பங்கள் கிடையாது.

வ: அப்படித்தான் தோன்றுகிறது.

ம: தோன்றுகிறது என்பானேன்? அப்படித்தான் இருக்கிறது என்றே சொல்லுங்கள். இந்த காரணத்தினால் தான் எந்த ஜனஸமூகத்திலும், நல்ல விஷயத்திலோ, கெட்ட விஷயத்திலோ, முன் நிற்கிறவர்கள் வக்கீல்களாகவே இருக்கிறார்கள். இதே காரணத்தினால்தான் வயது முதிர்ந்த காலத்திலும் இவர்கள் புத்தி வன்மையுடன் இருக்கிறார்கள்.

வ: ஆமாம்

ம: இவ்விதமாக இதர உத்யோகங்களில் கிடையாத சில அனுகூலங்கள் உங்கள் உத்யோகத்திலிருக்கின்றன. ஸ்வகார்யத்தைக் கருத அதிகமாய் அவகாசம் கிடையாது; நிஷ்காம கர்மாநுஷ்டானத்திற்கு ஒரு பயிற்சி ஸ்தலமும் ஆகிறது; உங்கள் புத்தியைக்கூர்மையாக்கிக்கொள்ள விசேஷ சௌகர்யங்களும் இருக்கின்றன.

வ: வாஸ்தவம். ஆனால் இதவரை இவ்வளவு கவனித்துத் தெரிந்து கொண்டதில்லை.

ம: வக்கீலுக்கு வயதாய் விட்டதென்பது ஒரு குறையில் சேர்ந்ததல்ல வென்று ஒப்புக்கொள்ளலாமா? வயதாக வயதாக புத்திகூர்மைப்பட்டிருக் கக்கூடியதால், வயதானதே வக்கீலுக்கு ஓர் அனுகூலமல்லவா? புத்தி மாராட்டமும் தளர்ச்சியும் ஏற்படக்கூடிய வயதை நான் சொல்லவில்லை.

வ: அப்படியே

ம: புத்தி தீக்ஷ்ணமாயிருந்தால் ஒரு விஷயத்தைக் கிரஹிக்க அவகாசம் கொஞ்சம் கிடைத்தால் போதுமல்லவா?

வ: ஆம்.

ம: ஆகையால் இதார்கள் ஒரு விஷயத்தைக்கிரஹிக்கஅபேக்ஷிக்கும் அவகாசம்வக்கீலுக்குக் கிடைத்தால், அதே அவகாசத்தில் பலவிஷயங்களை இவர் கிரஹித்து விடலாமல்லவா?

வ: ஆம்.

ம: எல்லாருக்கும் ஆயுட்காலம் ஒரே மாதிரி என்று வைத்துக்கொண்டால், இதார்கள் தெரிந்துகொள்வதைவிட வெகு ஜாஸ்தி விஷயங்களைத் தெரிந்துகொள்ள வக்கீலுக்கு ஸாத்தியப்படவேண்டுமல்லவா?

வ: யுக்திக்கு ஸரிதான்.

ம: ஒரே விஷயமான ஞானத்தை ஸம்பாதிக்கவோ பல விஷயமான ஞானத்தை ஸம்பாதிக்கவோ, இதார்களைவிட வக்கீலுக்கு அவகாசம் கொஞ்சம் கிடைத்தாலும் போதுமல்லவா?

வ: ஆம்.

ம: இதார்களைவிட லௌகிக் கார்யங்களில் இவர் ஈடுபட்டவராகத் தோன்றினாலும், தனக்கு கிடைக்கும் ஸ்வல்பமான அவகாசத்தையும் நன்கு உபயோகப்படுத்திக் கொள்வதற்கு பாதகமில்லையே?

வ: இல்லை.

ம: வாஸ்தவத்தில் கவனித்துப் பார்த்தால், மிகவும் சுறுசுறுப்பாக இருப்பவர்களுக்குத்தான் அவகாசம் ஜாஸ்தியிருக்கும். சோம்பேரிகள்தான் நேரம் இல்லை என்று சொல்வார்கள். இதற்குக் காரணம், சுறுசுறுப்புள்ளவர்கள் காலத்தை உபயோகிக்கிறார்கள். சோம்பேறிகள் வியர்த்தமாக்குகிறார்கள். இது இருக்கட்டும்..........உங்களுக்குக் கிடைக்கும் அவகாசத்தை எப்படி உபயோகித்து வருகிறீர்கள்? உங்கள் காலம் பூராவையும் உத்தியோகத்திற்காகவே செலவழிக்க முடியாது. மனதின் குதூகலத்தை யுத்தேசித்தாவது வேறு கார்யமும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமே?

வ: தமிழ்க் கிரந்தங்களை வாசிக்கிறேன். விலைமதிக்கத்தகாத உபதேசங்கள் அவைகளில் நிரம்பிக்கிடக்கின்றன.

ம: அதில் என்ன ஸந்தேஹம்? இருந்தாலும், அத்தமிழ்க் கிரந்தங்களில் அத்யாத்ம விஷயமாகவாவது மத விஷயமாகவாவது ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஒரு மூலக்கிரந்தத்தை அபேக்ஷிக்காமல் ஏதேனும் விஷயங்கள் உங்களுக்குத் தட்டுப்பட்டிருக்கின்றனவா?

வ: எனக்கு அகப்படவில்லை. சில நவீன தமிழ் வித்வான்கள் மாத்திரம் தமிழ் மதம் வேறு, ஆர்யமதம் வேறு என்று காட்ட முயலுகிறார்கள்.

ம: ஸம்ஸ்கிருதத்திலுள்ள மூலக்கிரந்தங்களையே நீங்கள் படித்துவிட்டால் நல்லதென்று தோன்றவில்லையா?

வ: ஆனால் எனக்கு வயதாகிக்கொண்டு வருகிறது. இனிமேல் ஸம்ஸ்கிருதம் படிக்க வாரம்பித்தால் ஸாத்தியப்படுமென்று தோன்றவில்லை.

ம: ஜாஸ்திவயது வக்கீலுக்கு பிரதிகூலமில்லையென்றும் அனுகூலமேதான் என்றும் முன்னமேயே நாம் முடிவுகட்டிக்கொண்டதை மறக்காதீர்கள். அத்தீர்மானத்தை உலைக்கவும் கூடாது.

வ: ஸாத்தியப்படுமா?

ம: பிரயத்னம் செய்து பார்த்து பிறகு ஸாத்தியமா அஸாத்தியமா என்று சொல்லுங்கள்கள். மேலும், நீங்கள் பிராஹ்மணராக இருப்பதால் ஸம்ஸ்கிருதம் படிக்க அதிகாரமும் கடமையும் உண்டு. நாஸ்திகர் நிறைந்த இக்காலத்திலும், உங்களுக்கு உங்கள் பெற்றோர்கள் கிரமப்படி உபநயன ஸம்ஸ்காரத்தை செய்து வைத்திருக்கிறார்கள். வித்யை க்ஷீணித்து வந்திருக்கும் இக்காலத்திலும், உங்களுக்குசொல்லிகொடுக்கத் திறமையும் மனமும் உள்ள வித்வான் அநேகர் இருக்கிறார்கள். இந்த ஸந்தர்ப்பத்தை வீணுக்கிக்கொள்ளக்கூடாது. அடுத்த ஜன்மத்தில் இவ்வித ஸௌகர்யங்கள் இருக்குமென்று யாரால் சொல்லமுடியும்.

# தர்ம வீர ஜதாவின் குடந்தை விஜயம்.

கும்பகோணம் 10—8—38.

தர்ம வீர ஜதா அங்கத்தினர்கள் ஆடி அமாவாஸையன்று காவேரிப்பட்டணமிருந்து புறப்பட்டு, சீயாழி, சிதம்பாம், உடையார்பாளையம், அரியலூர், திருச்சி, தஞ்சாவூர் முதலிய நகாங்களுக்கும், இடையிலுள்ள பல கிராமங்களுக்கும், கால் நடையாகவே விஜயம் செய்து, ஹிந்து தர்ம ரக்ஷணத்தின் கடமையை பிரசாரம் செய்து கொண்டு 10—8—38 புதன்கிழமை காலை 8½-மணிக்கு இந்நகருக்கு வந்து சேர்ந்தனர்.

ஹிந்து யுவர் சங்கத்தின் சார்பாக மாலை 6½-மணிக்கு ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலில் ஸ்ரீ R. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் ஹிந்துமகாஜனங்களின் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அச்சமயம் ஹிந்து மக்களின் சார்பாக வக்கீல் M. K. ஸ்ரீ வைத்யநாதய்யர் அவர்களால் தர்ம வீர ஜதாவின் அங்கத்தினர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதற்குப்பிறகு ஜதாவைச்சார்ந்த ஸ்ரீ முத்துகிருஷ்ணசர்மா, ஜதா தலைவர் ஏ. குப்புசாமி இவர்கள் ஹிந்துக்கள்ஸ்வதர்மங்களை அனுஷ்டானத்தில்வைத்துக்கொள்ளவேண்டிய அவச்யத்தையும் அரசாங்கம், சட்டசபைகள், காங்கிரஸ் மகாசபை இவைஉள்பட அரசியல் ஸ்தாபனங்கள் எவையும் மத விஷயங்களில் மத விரோதமான, சட்டங்கள் செய்வதற்கு உரிமை பெறவில்லை யென்றும், அவைகள் மத விஷயங்களில் சட்டரூபமான பலாத்காரத்தால் ஒரு மதத்தினரின் நம்பிக்கை சம்மந்தப்பட்ட அனுஷ்டான ஒழுக்க வழக்கங்களை தடைப்படுத்தி,மதவிரோதமான காரியங்களை ஜனங்கள் செய்யும்படி நிர்ப்பந்தித்தல் அநீதியென்றும், காங்கிரஸ் மகா சபை மத விஷயங்களில் தலையிடாமலும், மத விரோதமான பிரசாரங்களை செய்து வருவதை உடனே நிறுத்தியும் ஹிந்துமக்களின் நம்பிக்கையைப் பெறவேண்டு மென்றும் விரிவாகப் பேசினார்கள்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)



(2-ம் பக்கம் தொடர்ச்சி)

பிறகு ஸ்ரீ R. நடாாஜன் பேசுகையில், காங்கிரஸ் மகாஸபை காாச்சி தீர்மானங்களில் கண்ட மத சுதந்திரம் என்ற பிரிவை நடையில் அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்றும், மத சீர்திருத்தத்தின் பெயரால் சட்டங்கள் கொண்டுவருவதற்கும், ஹிந்து மக்களின் ஏகபோக பிரதிநிதி ஸ்தாபனம் என்று சொல்லிக் கொள்வதற்கும் யாதொரு உரிமையும் காங்கிரஸ் மகாஸபைக்கு கிடையாதென்றும், காங்கிரஸ் மந்திரி சபைகளும், அங்கத்தினர்களும், காங்கிரஸின் 'மத சுதந்திர' விதியின் தத்வத்தை அனுஷ்டானத்தில் நிரூபிப்பதற்கு அறிகுறியாக, காங்கிரஸ் மந்திரி சபைகளின் இப்போதைய சட்டசபை காலத்திற்குள்ளாகவே சாரதாசட்டம், விவாகதிருத்த சட்டம் இவைகளை ரத்து செய்தும், ஆலய பிரவேச மசோதா முதலான மதவிரோத மசோதாக்களை சட்ட சபைகளில் கொண்டு வராமல் செய்தும். தங்கள் நல்லெண்ணத்தை தெரிவிக்க வேண்டுமென்றும், அவ்வாறின்றி மேலும் மதத்தை அழிக்கும் மசோதாக்களுக்குஆதரவு அளிப்பார்களானல், காங்கிரஸ் ஸ்தாபனத்தையே எதிர்த்துப்போராட வேண்டிய அவச்யம் ஏற்படுமென்றும், இந்த சந்தர்பத்தில் சட்டத்தை மீறுவதென்ற கொள்கையை லக்ஷ்யமாக கொள்ளாமலே, மதாநுஷ்டானங்களை அனுஷ்டித்தல் நமது கடமை என்ற முறையில் சட்ட விரோதமாயிருந்தாலும் மதாநுஷ்டானங்களை விட்டு விடாமல் தீரமாய் சரிவா அனுஷ்டித்து வா வேண்டியதே ஹிந்து தர்மம் என்று பேசினார்.

பிறகு, அரசாங்கமும் சட்டசபைகளும், மததநில் பிரவேசிப்பதை கண்டித்து ஸ்ரீமான் ராமானுஜ தாத்தாசாரியாால் ஒரு பிரேரபணை கொண்டுவரப்பட்டு மஹாமஹோபாத்யாய ஸ்ரீ R.V. கிருஷ்ணமாசாரியார் ஸ்ரீ கோபால தேசிகாசார்யார் இவர்களால் ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிறகு அக்ராஸனருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் பூர்த்தி அடைந்தது.

இக்கூட்டத்திற்கு வக்கீல்கள் ஸ்ரீமான்கள் G.V. வெங்கடாாமய்யர், K. குப்புஸாமி அய்யர், S. மகாலிங்கய்யர் முதலானவர்களும், ஸ்ரீ எம். ஆர். ஸ்ரீனிவாஸாசாரியார் முதலிய பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர்.

தர்மவீரஜதா அங்கத்தினர்கள் 10-8-38 இரவே கால்நடையாக திருவிடமருதூருக்கு பிரயாணமாயினர். தென்னாற்காடு, வட ஆற்காடு முதலிய தமிழ்ஜில்லாக்கள் பூராவும் பிரசாரம் செய்துவிட்டு, பிறகு தெலுங்கு ஜில்லாக்களிலும், அதற்கப்பால் வட இந்தியாவிலும் கால்நடையாகவே பிரசாரம் செய்யப்போவதாக அறிகிறோம்.

நமது நிருபர்.

| | | | |
|---|---|---|---|
| **K. V. சுப்ரமணிய சாஸ்திரிகள்.** | | | |
| ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிரேந்தா: | 1 | 0 | 0 |
| ஸுபனீதிகுசமாலா | 0 | 8 | 0 |
| **K R. V. சாஸ்திரிகள் பிரசுரங்கள்:—** | | | |
| த்யானஸ்லோகம் | 0 | 1 | 0 |
| சாஸ்வதி பூஜாகல்பம் | 0 | 1 | 0 |
| ஜவஹர்லால் நேரு | 0 | 4 | 0 |
| நாதரூபாவளி | 0 | 4 | 6 |
| ஸப்தமஞ்சரி | 0 | 5 | 0 |
| **N. ஸ்ரீனிவாஸ சாஸ்திரிகள். பிரசுரங்கள்.** | | | |
| சிவகீதிமாலா. | 0 | 4 | 0 |
| ராமாஷ்டோத்தாம். | 0 | 1 | 0 |
| சங்கர பகவத்பாதாள். | 0 | 8 | 0 |
| தமிழ் சிக்ஷா. | 0 | 4 | 0 |

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# 'தற்கால நிலைமையும் நமது கடமையும்'

## ஸ்ரீமான் டி. எல். ஸுப்பய்யரின் பிரஸங்கம்.

ஸ்ரீ வைதிக வர்த்தினீ ஸபையின் ஆதரவில் மேற்கண்ட விஷயம் பற்றி திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீT. L. சுப்பய்யரவர்கள் (B A. B, L) புதுக்கோட்டை டவுன் ப்ராஞ்சு காலேஜ் கட்டடத்தில் 3-8-38உ. புதவாரம் மாலை 7 மணி முதல் 9 மணி வரை ஓர் அரிய உபந்நியாஸம் செய்தார்கள்.

சுமார் 70 ஆஸ்திகர்கள் வந்திருந்தனர். அப்பெரியரைப்பற்றி வெகுவாக ஆஸ்திகர்கள் அறிந்திருக்கக்கூடுமாகையால், அவர்களின் உபந்யாஸத்தின் ஸாராம்சத்தை இங்கு கூறுகிறேன் :—

தற்காலத்தில் பலவித இயக்கத்தார் ஏற்பட்டும், அரசாங்கத்தாரும் ஒரு வித முறையும் இல்லாமலும் கார்யங்கள் நடைபெறுவதில் பரம்பரா தர்மங்கள் வெகுவாகக்குறைந்தும், ஜனங்களுக்கு தன் தன் ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ள வேண்டிய மார்க்கங்களை அநுஷ்டிப்பதில் கூட சுவாதீனமில்லாமலும் ஏற்பட்டிருக்கிறதுஇதற்குநம்மவர்களே, முக்கியமாக பிராமணர்களும் கூட காரணஸ்தர்களாக இருப்பது தான் வியசனிக்கத்தக்கது. எந்த ராஜ்யமும் செழிப்பாகவும், சௌக்கியமாகவும், ஸகலமான சௌகர்யங்களுடன் வாழவேண்டுமானால் ஒரு பத்ததியில் கட்டுப்பட்டு ஸர்வ ஜனங்களும் நடந்தால் தான் ஆகும். இவ்விதம் லோக க்ஷேமார்த்தமாக ஏற்பட்ட சாதனம் தான் வேதம். அந்த வேதமானது நமக்கு நல் வாழ்க்கைக்கும், நமது அபிவிருத்திக்கும் அவசியமான முறைகளை எடுத்துக்கூறுகிறது. இவ்வுண்மையை உணராமல் தான் அறிவிற்சிறந்த பெரியோர்கள் கூட தப்பான வழியில் புத்தியைச்செலுத்திவிடுகிறார்கள்.

எப்படி ஒரு ராஜாங்கத்தில் பல இலாகாக்கள் அவசியமோ அப்படியேதான் வைதீகர்கள் ஜாதிவித்யாசத்தை மதிக்கிறார்கள் என்ற உண்மையைக் கவனிப்பதில்லை. சிற்பிகள் ஆலோசனை சொல்லக்கூடிய விஷயத்தில் வைத்திய இலாக்காார் சொன்னால் அந்த யோஜனை ஏற்கப்படுமா? எந்த இலாகாவாயிருந்தால் அவரவர்களுக்கு வேண்டிய ஆதாவுகளைப் பொதுவாக உள்ள ஓர் மேலதிகாரியிடமிருந்து தானே பெறவேண்டும்? இவ்வித லௌகிக அனுஷ்டான முறையைத் தான் வேதமானது ப்ரதிபாதிக்கிறது என்ற உண்மையையும், ஆகையால் தர்மசாஸ்திரங்கள் லோகத்து ஸாதகமானவைதான் என்றும் அறியத்தக்கது.

மேலே குறிப்பிட்டப்படி இதிஹாஸ புராணுதிகளிலேயே கலியுகத்தில் தர்மங்கள் மலினமடையுமென்றும் இப்போதிருப்பதைவிட இன்னும் குறையக்கூடுமென்றும் தீர்க்க தர்சிகள் ஏற்கனவே எழுதியிருக்கிறார்கள். அதே க்ரந்தங்கள் 'கலிஸ்ஸாது:' என்றும் கூறுகிறது. ஏனெனில் மற்ற யுகங்களில் வெகுகாலம் தபஸ்செய்து அடையும் பலனை இந்த யுகத்தில் சொற்பகாலம் அநுஷ்டிப்பதனுலேயே மனிதன் அடைகிறான். அந்தந்த வர்ணத்தார் அவரவர் கடமைகளை விடாது செய்துவந்தால் அக்கடமைகளை விதித்த பகவானுடைய கிருபைக்குப் பாத்ரர்களாகி யாதொரு குறையுமில்லாமல் ஜீவித்து கடைசியாக நித்யானந்த நிலைமையை அடைகிறார்கள். இராமாயணுதி கிரந்தங்களில் நல்ல ராஜாக்கள் தர்ம மார்க்கத்தில் பரிபாலநங்களை நடத்தினதால்தான் அக்காலங்களில் தேசத்தில் துர்பிக்ஷமின்றியும், அகாலமாணம், ரோகங்கள், தாரித்ரியம் முதலிய கஷ்டமில்லாமல் இருந்ததாகக் காண்கிறோம்.

இதற்கு நேர்மாறாக ஸமத்துவமும், தப்பான ஸ்வாதீனமும் ஏற்படுகிற இக்காலத்தில் உண்மையான பலத்தை நாம் வெகுவாக குறைத்துக்கொள்ளுகிறோமே தவிர அடைகிற லாபமே ஒன்றுமில்லை. நாம் வெகு ஸாதகமென்றும், முன்னறியப்படாத விஷயங்களெல்லாம் இப்போதறியப்படுகிறதென்று பெருமை பேசிக்கொண்டு மிருப்பதெல்லாம் நம்மை முற்றிலுமடிமைப்படுத்திக்கொள்வதற்கு நாமே கைக்கொள்ளும் உபாயம் என்பது என்று நம்மவர் உணர்வார்களோ அறிகிலேன்! நவீன நாகரீகமெல்லாம் யாரோ ஒருவன் கண்டதை நாம் விலைகொடுத்துத்தானே வாங்கி சந்தோஷிக்கிறோம்? நாம் ஒவ்வொருவருமே நம்முடைய சரீரத்துக்குள்ளிருக்கும் இயந்திரத்தைக்கொண்டே இவ்வித ஆனந்தத்தை யடைந்து ரஷிகளையும் காணமுடியுமானல் அதில் நமது மனதைச் சற்று செலுத்தக்கூடாதா? 'கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா?'' என்று கூறிய உத்தமி கொங்கணவரிஷியின பெயரை எப்படி அறிந்தாள். கொக்கின் விருத்தாந்தம் எப்படித் தெரிந்தது? நேற்று 2-8-38உ சுதேசமித்திரனில் ஒரு பெண் தன் தாவர்தத்தை அறிவித்து பகவானை நோக்கிப் பாடியது காரணமாக 'மீன்' மழை பெய்தாகக் கண்கூடாகக்கண்டு எழுதியிருப்பது பொய்யா? 'நந்தனார்' இப்பொழுது நாம் பெருமையாகக் கூறுமவர் ''ஐயர்'' விடைக்கு எதிர்பாராமல் சிதம்பர தர்சனம் போனரா? ஆனல் அந்த ஆர்வம் மிகுதியாயிருந்தும் கடமையைப் பெரிதாக நடத்தினதால் தானே அவரறியாமலே உலகம் புகழும்படியாக ஓரிரவில் ''கதிரொருமுழமே நீளும், கட்டுமுக்கலமே காணும்'' என்று அவர் வயலில் விளைவு ஏற்பட்டது? இவற்றின் ரஹஸ்யத்தை உணராமல் கூத்துப் பார்ப்பதில் என்ன பயன்? அதனுல் தான் சிறு பிராயத்திலேயே உண்மைகளை நீதி வாக்கியங்களாக இயற்றிக்கல்விபுகட்டினர் முன்னோர். அம்முறையும் மாறிக்கொண்டு வருகிறது. ஆனல் உண்மை என்றும் மாருது. அதனுல்தான் பகவான்

''தைவாதீனம் ஜகத் ஸர்வம், மந்த்ராதீனம் துதைவதம், தன்மந்த்ரம் ப்ராஹ்மணாதீனம், ப்ராம்மணோ மம தேவதா'' என்றார்.

கொண்டான் குறிப்பறிவாள்பெண்டாட்டி
கொண்டன செய்வகை செய்வான் தவசி
கொடிதொரீ நல்லவை செய்வானரசன்
இம்மூவர் பெய்யெனப் பெய்யுமழை''

என்றும் 'நல்லாரொருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும்மழை'' என்றும் கூறிய பழமொழிகள் இன்றைக்கும் உண்மையே.

நாம் சிலர்தானே இருக்கிறோம், வைதிக மார்க்க விரோதிகள் ஏராளமாக இருக்கிறார்களே என்று மயங்கவேண்டாம். வஸிஷ்டர் முன் விஸ்வாமித்திரர் தன் பரிவாரங்களுடன் போருக்கு நின்றபோது அவருக்கு ஸாதகமாயிருந்தது யாது? ஜயித்தது யார்? இப்போதும் இவ்வளவு Radio, phonography முதலியவை எதன் சக்தியாய் ஆகின்றன? Sound waves, light waves களைக்கொண்டுதானே. அதே சமாசாரம் நம்முடைய வேதாத்யயனம், ஜபம், தபஸ், கர்மானுஷ்டானம், இவைகளைக் காலந்தவறாது நடத்துவதால் நம்முடைய சத்ருக்கள் நம்மை யாது செய்யமுடியும்! தாமாகவே மனமாறுதலடைந்தோ, பலம் குன்றியோ விலகுவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

நாம் சொற்பமாக இருந்தாலும் நமது கர்மானுஷ்டானத்தையும், வேதாத்யயனாதிகளையும் நடத்த ஊக்கமுடனிருக்கவேண்டும்;

(தொடர்ச்சி 6-பக்கம் பார்க்க.)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ௗு ஆவணி-மீ 2உ

## மலையாளத்தில் ஆலயப்பிரவேச பரீக்ஷையாம்!

சென்னை சட்ட ஸபையில் ஸ்ரீமான் எம். ஸி. ராஜா என்பவரால் ஆலயப்பிரவேச விஷயமாக ஓர் மசோதா கொண்டுவரப்பட்டது யாவரும் அறிந்ததே. இந்த மசோதாவைப்பற்றி சட்ட ஸபை காங்கிரஸ் கக்ஷியாரும் மந்திரிகளும் யோஜனை செய்து ஒரு முடிவு செய்திருப்பதாக 15உ வெளியான ஹிந்துப்பத்திரிகையில் ஒரு ஸமாசாரம் வெளிவந்திருக்கிறது. அதாவது,

> ஸ்ரீமான் எம். ஸி. ராஜாவின் மசோதாவை அனுஸரித்த மாதிரியில் ஆலயப்பிரவேசத்தை முதலில் மலையாளம் ஜில்லாவில் மாத்திரம் அமுலுக்கு கொண்டு வந்து பரீக்ஷை செய்து பார்ப்பதென்றும், இந்த நிபந்தனைமீது, ஸ்ரீமான் ராஜா தமது மசோதாவை வாபீஸ் பெறும்படி கேட்கப் படுவா ரென்றும், அதற்கு அவர் ஸம்மதிக்காத பக்ஷத்தில் கவர்ன்மெண்டாரும் காங்கிரஸ் மெம்பர்களும் ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்த்து ஓட் செய்ய வேண்டுமென்றும்

சட்ட ஸபைக்கக்ஷிக்கூட்டத்தில் முடிவு செயப்பட்டதாக ஹிந்துப்பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது. இந்த ஸமாசாரம் பெரும்பாலும் உண்மையாகவே யிருக்குமென்று நினைக்கிறோம். ஆகையால் மதுவிலக்குப்பரீக்ஷையைப்போல் ஆலயப்பிரவேசத்தையும் முதலில் மலையாளத்தில் பரீக்ஷை செய்து பார்த்து, பிறகு மற்றவிடங்களிலும் கொண்டுவரலாமென்பது ஸர்க்கார் கொள்கையெனத் தெரிகிறது. இது ஓர் விசித்ரமான கொள்கை. ஆலயப்பிரவேசமென்பது அசாஸ்திரீயமென்பதும், அது தைவத்தின் பரிசுத்தியையும், ஸான்னித்யத்தையும் குறைத்துவிடுமென்றே தார்மிகர்கள் வாதாடி வருகிறார்கள் ஆகவே இது முற்றிலும் மத ஸம்பந்தமான ஒரு கொள்கையைப்பொறுத்திருக்கிறது. ஆதலால் மத ஸம்பந்தமான ஒரு கார்யத்தில் ராஜியாகப்போவதென்பது ஒரு வேடிக்கையான கொள்கையே. அத்தேசக் கோவிலுள்ள தெய்வங்களின் ஸான்னித்யம் மட்டும் கெடலாமா? மலையாள தேசத்திலுள்ள தேவாலயங்களில் மட்டும் பஞ்சமர் புகுந்து தொழுவதற்கு சாஸ்திர ஆதாரம் ஏதாவது இருக்கிறதா? அந்தக்கோவில்களில் புகுவது பாதகமில்லையானால் மற்றவிடங்களிலும் புகுவதற்கு தடை எதற்காக? ஆகையால் மத விருத்தமான ஒரு கார்யத்தில் ராஜி செய்து கொள்வதென்பது அங்கீகரிக்கத்தக்கதல்ல. இந்தக்கொள்கையின்படி ஸர்க்கார் நடப்பார்களானால் அவர்கள் பொது ஜன அபிப்ராயப்படியோ, ஹிந்துக்களின் மதத்தை மதித்தோ நடந்தவர்களாகமாட்டார்கள். சீர்திருத்தக்காரர்களையும், காங்கிரஸ் வாக்குறுதியையும் மதித்து நடக்க வேண்டிய கஷ்டமிருப்பதாக மந்திரிகள் வாதிக்கலாம்.

காங்கிரஸ் எலெக்ஷன் அறிக்கையில் குறிப்பாக ஆலயப்பிரவேசம் செய்து வைப்பதாக எவ்வித உறுதிமொழியும் காணப்படவில்லை. வோட்டர்களிடம் அது தெரிவிக்கப்படவுமில்லை. மேலும் இந்த சீர்திருத்த விஷயமாக மந்திரிகள் ஸமீபகாலத்தில் பலவிடங்களில் பேசியதில் தாங்கள் பொதுஜன அபிப்ராயத்தை அறிந்தே நடந்துகொள்ளப் போவதாக உறுதிகூறிவந்திருக்கிறார்கள். ஸமீபத்தில் கனம், ராமன்மேனன் ஒரு இடத்தில் பேசியதில், ஆலயப்பிரவேசம்போன்ற மத ஸம்பந்தமான சீர்திருத்தங்களுக்கு சட்ட ஸபையை உபயோகித்துக்கொள்ள ஸர்க்கார் இஷ்டப்படவில்லையென்று சொல்லியிருக்கிறார். இது உண்மையானால் காங்கிரஸ் மந்திரிகள் மலையாளத்திற்குமட்டும் ஆலயப்பிரவேசச்சட்டம் இயற்ற நியாயமில்லை. மேலும் மலையாளப் பரீக்ஷையை மற்றவிடங்களுக்கு ஸாதகமாக உபயோகித்துக்கொள்ள சூழ்ச்சி நடக்கும். காங்கிரஸ்காரர்களும் சீர்திருத்தக்காரர்களும் மலையாளத்தில் ஆலயப்பிரவேசம் வெற்றியடைந்துவிட்டதாயும், பொதுஜனங்கள் அளவுகடந்து ஆதாவுகாட்டுவதாயும் மாயாபிரசாரம் செய்வார்கள். பத்திரிகைகளிலும் ஆடம்பரம் நடக்கும். உடனே இதை நம்பி மற்றவிடங்களிலும் அதை அமுலுக்குக் கொண்டுவா முயற்சி நடக்கும். இது காங்கிரஸ் நீதியில் நாம் அநுபவத்தில் கண்ட விஷயம். திருவாங்கூர் ஆலயப்பிரவேச உண்மை வேருக இருக்கையிலும் அதை உதாஹரணமாகக் காட்டி விஷமம் செய்யப்படவில்லையா? ஆதலால் மலையாளப் பரீக்ஷையென்பது ஒரு சூழ்ச்சியென்றே நினைக்கவேண்டும்.

காங்கிரஸ் கவர்மெண்டார் இவ்விஷயத்தில் தார்மிகர்களின் கக்ஷியென்னவென்பதை நன்கு அறிந்ததாகத் தெரியவில்லை. அதை மதிப்பதாயும் தெரியவில்லை. ஆலயப்பிரவேசம்போன்றவைகள் மதஸம்பந்தமான உரிமைகளில் தலையிடுவதாகும். இதில் சட்ட மூலமான நிர்ப்பந்தம் ஏற்படுத்தித் தங்களுடைய உரிமையைப் பறிக்ககூடாதென்றே தார்மிகர்கள் விரும்புகிறார்கள். இந்த நியாயம் காங்கிரஸ் கவர்ன்மெண்டில் கிடைக்குமா வென்றே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இப்போது மலையாளத்தில் பரீக்ஷை செய்ய உத்தேசிப்பது தார்மிகர்களின் அடிப்படையான உரிமையை அலக்ஷ்யம்செய்வதாகவே ஆகும். இந்த முடிவினால் தார்மிகர்கள் ஸந்தோஷப்படவோ, கவலையற்றிருக்கவோ இடமில்லை. மாகாணம் முழுவதும் இந்த சட்டத்தை உடனே செய்ய மந்திரிகள் தயங்குவதிலிருந்து பொதுஜன அபிப்ராயம் தங்களுக்கு அநுகூலமாயில்லையென்பதை அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும். இது வாஸ்தவமானால் எம். ஸி. ராஜாவின் மசோதாவை அடியோடு அவர்கள் எதிர்த்துத் தள்ளவேண்டியதே நியாயமாகும். ஏற்கனவே மந்திரிஸபைமீது அதிருப்தி அதிகரித்து வருகையில் இந்த விஷப்பரீக்ஷையில் இறங்குவது விவேகமாகாதென்று நாம் காங்கிரஸ்காரர்களுக்கு எச்சரிக்கிறோம்.

## குறிப்புகள்.

### தீண்டாமை விலக்கிற்கு ஆதரவில்லையே?

ஆமதாபாத் நகரித்திலுள்ள ஹோட்டல்களில். தீண்டாமை விலக்குக் காரணமாக நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பம்பாய் கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் இயற்றிய சட்டப்படி தீண்டாதாரை உள்ளேவிட மறுக்கும் ஹோட்டல்களுக்கு லைஸென்ஸ் கிடையாது. இதை யனுசரித்து ஆமதாபாத் ஹோட்டல்களில் தீண்டாதார் அநுமதிக்கப்பட்டார்கள். இதைக்கண்டு அதிருப்தி யடைந்து ஜாதி ஹிந்துக்கள் அந்த ஹோட்டல்களை பஹிஷ்கரித்துவிட்டனர். கடைசியாக ஹோட்டல்களில் வியாபாரமே நடக்காமல் அவைகளை மூடவேண்டியதாயிற்று. இம்மாதிரி அந்த நகரத்தில் அநேகமாக எல்லா ஹோட்டல்களும் மூடப்பட்டுவிட்டனவாம். இந்த நெருக்கடி நிலைமையை ஸர்க்காரிடம் அறிவிக்க ஹோட்டல்காரார்கள் ஒரு டெபுடேஷனும் சென்று விளக்கினார்கள்.

இந்த நிலைமையிலிருந்து காங்கிரஸ்வாதிகள், முக்யமாக காந்திஜீ, ஜனங்களின் புத்திப் போக்கை நன்கு அறிய ஓர் ஸந்தர்பம் ஏற்பட்டிருக்கிறது. பொது ஜனங்கள் தீண்டாமை விலக்கிற்கு விசேஷ ஆதரவு காட்டுவதாகக் காங்கிரஸ் வாதிகள் பறையடிப்பது உண்மையல்லவென்பது விளங்கும். பம்பாய் சட்டஸபையில் காங்கிரஸ் மந்திரிகள் பொதுஜனங்கள் பெயரால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டார்களாயினும் உண்மையில் பொது ஜனங்கள் சட்டமூலமான தீண்டாமை விலக்கிற்கு உள்படத் தயாராக இல்லையென்பது தெளிவாகிறதல்லவா? ஜாதி ஹிந்துக்கள், தீண்டாதாருடன் ஒரு ஹோட்டலில் ஸமமாக உட்காரவோ, சாப்பிடவோ மறுத்துவிட்டதிலிருந்து தீண்டாமைவிலக்கு இயக்கத்திற்கே தேசத்தில் ஆதரவு இல்லையென்பது விளங்கும். பொதுஜன அபிப்ராயப்படியே சீர்திருத்தச் சட்டம் செய்யப்போவதாகச் சொல்லிக்கொள்ளும் காங்கிரஸ் ஸர்க்கார் இந்த விஷயத்தில் இனி ஸந்தேகம்கொள்ளக் காரணமேயில்லை. பொதுஜன ஆதாவில்லாத இச்சட்டத்தை ரத்துசெய்யவே கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆமதாபாத் ஸம்பவமானது தீண்டாமை விலக்கு இயக்கத்திற்கே ஓர் எச்சரிக்கையென்பது தெளிவு.

### ரங்கூன் கலஹப் படிப்பினை.

பர்மாவிலுள்ள ஒரு மஹம்மதியர் பௌத்த மதத்தைப்பற்றி தூஷணம்செய்து ஒரு புஸ்தகம் பிரசுரித்தார். இதனால் கோபமடைந்த பௌத்தமதாசாரியர்களும், பௌத்த ஜனங்களான பர்மியர்களும் பெருத்த கலஹம்விளைவித்தனர். இந்த வகுப்பு கலகத்தினால் அங்கு ஏராளமான பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டுவிட்டன. முக்யமாக மஹம்மதியர்களுக்கு இதில் அதிகம் கஷ்டநஷ்டமேற்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந்த பர்மாக் கலஹமானது மதவெறி பிடித்து இதா மதங்களைத் தூஷிப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாயிருக்கிறது. அதிலும் முஸ்லீம்களுக்கு இது ஓர் படிப்பினையாகும். மததூஷணங்களையோ, மதக்கலஹங்களையோ நாம் பலமாகக் கண்டிக்கிறோம். அவரவர் தம் தம் மதத்தை உயர்ந்ததென்று கௌரவித்துக் கொண்டாட உரிமையிருக்கவேண்டும். இதார்கள் அதை ஆக்ஷேபிக்கவோ, அடக்கவோ இடமிருக்கக்கூடாது. இதுதான் நியாயமான ராஜநீதியும், பிரஜா உரிமையுமாகும்.



443

பர்மாதேசம் முழுவதும் பௌத்தமதம் நிறம்பியது. பர்மியாகள் யாவரும் பௌத்தர்கள். மஹம்மதியர்களோ அங்கு குடியேறியவர்கள். சிறுபான்மையோர். இந்த நிலைமையில் அங்கு அத்தேச மதமாகிய பௌத்தத்தை தூஷிப்பதென்றால் அது பெரும் அசட்டுத்தனமாகும். பௌத்தத்தை தூஷித்து புஸ்தகம் உண்டாக்கிய மஹம்மதியரின் மதாபிமானத்தை நாம் கொண்டாட முடியாது.

இந்தியாவில் நடக்கும் ஹிந்து முஸலீம் கலஹங்களுக்கு இந்த மத வெறியே பெரும்பாலும் காரணமாயிருக்கிறது. மஹம்மதியர்கள் இதா மதத்தை ஸஹிக்காமலும், தங்கள் மதத்தை இதார்கள் இழிவாகப் பேசக்கூடாதென்பதிலும் விசேஷ ஆக்ரஹம் காட்டுவதைப் பார்த்துவருகிறோம். தாங்கள் பெரும்பான்மையோராக இருக்கும் மாகாணங்களில் அல்லது கிராம, நகரங்களில் தங்களுடைய மதஸமூக ஆதிக்யமே மேலோங்கி நிற்கவேண்டுமென்று பிடிவாதம் காட்டுகிறார்கள். கத்தி, ரத்தக்களரி முதலிவைகளுக்குத் தாங்கள் தயாராயிருப்பதாக பஹிரங்கமாகப்பேசி பயமுறுத்துகிறார்கள். கார்யத்திலும் அதை காட்டுகிறார்கள். இந்த முரட்டுத்தனம் இந்தியாவில் சிற்சில விடங்களில் பலித்துவிடுகிறதாயினும் பர்மா போன்ற சிறுபான்மை மஹம்மதியர் உள்ள விடங்களில் இது பலிக்குமா? அத்தகைய விடங்களில் இவர்கள் ஜாக்ரதையாக இருப்பதே விரும்பத்தக்கது. பர்மாவில் முஸ்லீம் ஸமூஹத்தினருக்கு நேர்ந்த கஷ்ட நஷ்டங்களுக்கு நாம் வருத்தப்படுகிறோம். இந்தப் படிப்பினையைக்கொண்டு மதவெறி பிடித்தவர்கள் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது அவச்யமாகும்.

## ஹிந்துதர்ம வீர் ஜதா சுற்றுப்பிரயாணம்.

### அரியலூர் (3-8-38)

ஹிந்துதர்ம வீர ஜதா இவ்வூருக்கு சுமார் காலை 1--மணிக்கு வந்து உடையார்பாளையம் சமஸ்தானாதிபதி அவர்களின் விடுதியில் தங்கினார்கள். பின்பு அன்று மாலை சுமார் 5-30 மணிக்கு ஓர் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் இவ்வூர் பிரபல வக்கீலும் தர்மசிந்தனையுள்ளவருமான மகா-ா-ா-ஸ்ரீ T. S. வைத்தினதய்யர் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். அக்கிராஸனரின் முடிவுரைக்குப் பிறகு ஜதாவைச் சேர்ந்தவர்கள் இந்துதர்மத்தின் தற்கால நிலைமையும் நமது கடமையும் என்பதைப்பற்றி ஓர் அரிய சொற்பொழிவுநிகழ்த்தினார்கள். அன்று முழுவதும் ஜதாவைச் சேர்ந்தவர்கள் அவ்வூர் பிரபல வக்கிலான பிரம்மஸ்ரீ N. சுப்பிரமணி அய்யர் அவர்களின் விருந்தினர்களாக தங்கியிருந்தார்கள்.

### லால்குடி (4-8--38)

ஷை ஜதா லால்குடியைச் சேர்ந்தவுடன் மகா-ா-ா-ஸ்ரீ L. K. ஸப்தரிஷி அய்யர் அவர்களால் வரவேற்கப்பட்டு அவ்வூரிலிருக்கும் பகவத் பாதசங்கரமடத்தில் தங்கியிருந்தார்கள். அன்று மாலை சுமார் 5-30 மணிக்கு இந்திய யுவர்சங்கத்தின் கட்டிடத்தில் ஸ்ரீ S. R. தாஸ் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது அக்கிராஸனாதிபதியின் முகவுரை முடிந்தவுடன் A. குப்புசாமி சுமார் 45 நிமிஷ நேரம் ஹிந்து தர்மத்தின் தற்காலமுள்ள நிலைமையைப்பற்றியும் அவரவர்கள் கடமையை ஒழுங்கே நடத்தவேண்டுமென்றும் ஓர் உபந்யாஸம் செய்தார். அக்கிராஸனாதிபதியின் முடிவுரைக்குப் பிறகு கூட்டம் கலைந்தது. பிறகு இரவு சுமார் 9-30 மணிக்கு ஜதா திருவானைக்காவலுக்கு புறப்பட்டது. பிக்ஷையாண்டார் கோயிலில் இரவு தங்கி காலை சுமார் 7-மணிக்கு ஜம்புகேசுவரம் வந்து சேர்ந்தது.

### திருச்சிஞப்பள்ளி (5-8-38)

ஜம்புகேசுவரத்திலுள்ள லோககுரு ஸ்ரீ சங்காரசார்யார் மடத்தில் மூன்று தினங்கள் தங்கினார்கள். திருச்சியில் 6-8-38, 7-8-38 இரண்டு தேதிகளிலும் ஆரியன் உயர்தரப் பாடசாலையில் போலகம் ஸ்ரீமான் சுந்தர சாஸ்திரிகள் அக்கிராஸனத்தின்கீழ் இரண்டு பொதுக்கூட்டம் நடந்தன. இவ்விரண்டு கூட்டங்களிலும் ஹிந்து தர்மத்திற்கு தற்காலம் ஏற்பட்டுள்ள இடையூறைப்பற்றியும் ஆஸ்திகர்களின் கடமையைப்பற்றியும் சொற்பொழிவுகள் நடந்தேறின. இரவு சுமார் 8-மணிக்கு ஸ்ரீ பிரம்மாநந்த சரஸ்வதி ஸ்வாமிகளின் அக்கிராஸனத்தின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடந்தேறியது. அவ்வமயம் ஜகத்குரு வித்யாஸ்தான அத்யக்ஷகரான ஸ்ரீராமா சாஸ்திரிகள், திருச்சி பிரபல வக்கீல் ஸ்ரீ V. ஜெயருமய்யர் முதலியோர்கள் ஜதாவின் நோக்கத்தைப்பற்றி பேசியபின் ஜதாவைச் சேர்ந்தவர்கள் சாரதா சட்டத்தையும் ஆலயப்பிரவேச மசோதாவையும் கண்டித்துப் பேசினார்கள்.

### தஞ்சாவூர் (8-8-38)

திருச்சியிலிருந்து திருவெம்பூர் பூதலூர் முதலிய ஊர்வழியாக தஞ்சாவூருக்கு சுமார் மாலை 2-மணிக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று தஞ்சை ஹஸூர் மஹாடி அரண்மனையில் தங்கியிருந்தார்கள். சாயங்காலம் பஜனையுடன் ஸ்ரீஹேம காமாக்ஷி கோயிலுக்குச் சென்று தரிசனம்செய்து கொண்டபின் அவ்வூர் வைதீகர்களால் வேத பாராயணத்துடன் அவ்வூர் பிரபலஸ்தர்களால் வரவேற்கப்பட்டு முகாஸா கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் அங்கு பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அக்கிராஸனத்தின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் நடந்து ஜதாவின் தலைவர் சாரதா சட்டம், பஞ்சம ஆலயப் பிரவேசம் இம்மசோதாக்களை முறையே கண்டித்து 1-30 மணி நேரம் பேசின பிறகு கூட்டம் கலைந்தது. அவ்வூர் சிறந்த சம்ஸ்கிருத வித்வானும் ஓர் வியாபாரியுமான ஸ்ரீமான் சுந்தரேச சர்மா அவர்களால் ஓர் அரிய விருந்தளிக்கப்பட்டது.

G. சங்கர நாராயண வாஜபேயர்.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பையிண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.
தமிழ், இங்கிலீஷ், நாகா, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலாலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவாங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## வாரக்குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.

திருடனுக்கு திருட்டுபுத்தி! ஈகன் எனும் வடநாட்டு ஊரிலே சீர்திருத்தக்காரர் வேத நிந்தை செய்ய, ஆஸ்திகர் பலகேள்விகளைக் கேட்டனர். பதில்கூறமுடியாமல் வைதிகரே நமது மதத்துரோஹி என்றார். அதை நம் நாட்டு மதாபிமானமற்ற பத்திரிகை பலமாக பிரசுரம் செய்கிறது.

கோட்டையிலே புகுந்தது!. ஆமதாபாத் காந்திஜீயின் கோட்டை. அங்கு பஞ்சமரைச் சிற்றுண்டி சாலையில் விடமுடியாதென பலத்த கிளர்ச்சி நடக்கிறது. லைஸன்ஸ் கொடோம் என்ற சட்டபலத்தையும் தார்மிகர் மதிக்கவில்லை.

கட்டில்லை பயமில்லை! பண்டைய காலத்தே ஸமூஹக்கட்டுண்டு. பாலோக பயமுமுண்டு. ஒன்று சிறிது குறைந்தாலும் மற்றொன்று ஸமூஹத்தை ரக்ஷித்தது. ஓர் தனிப்பட்ட மனிதர் மஹாத்மா என அழைக்கப் பட்டார். இப்போது சென்னையில் ஒருவர் பரமாத்மா—என்றழைக்கப்படுகிறார். இதற்கு மேல்?

ஏமார்ந்தார் ஏமாருவார்! விச்வகர்ம பிராமணர் எனும் கர்மகாரஜாதியை எக்காரணத்தாலோ விச்வகர்மா என்று அழைக்க ராஜாஜி உத்திரவிட்டார். அவர்கள் கிளர்ச்சி பலக்கவே பழயபடி மாற்றிவிட்டார். கிருஸ்துவர் மதுவிலக்குச் சட்டத்தில் தங்கள் ஜாதிக்கு மதுவிலக்கு வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்கள். என்னசெய்வார் ராஜாஜி பார்ப்போம்.

தர்மமே முக்யமல்லவா? ஆலயங்களில் சென்றேனும் பாலோகவழியைத் தேடலாமென்று செல்ல அங்கும் பணத்தையே முக்யமாகக் கருதி பணவசூல் செய்வது அதர்மமல்லவா? ஸ்ரீரங்கம் கோவில் குத்தகைக்காரர் காவேரிக்கரையில் உட்கார்ந்து ஸங்கல்பம் செய்துவைக்கும் உபாத்தியாயருக்கும் அச்வத்த பிரதக்ஷிணம் செய்வோருக்கும் வரிவிதிக்கிறாராம்.!!

அக்ரம வரி!! சென்னை ஜனரல் ஆஸ்பத்திரியில் சீக்ரமாக மருத்து வாங்கிச்செல்ல விரும்புவருக்கு இரண்டணுவரி விதிக்கப்படுகிறது. பல வைத்யர் இலவசமாக வேலைசெய்ய அமர்தப்பட்டனர்!! இதன் கருத்து என்னவோ!

நீதி ஸ்தலத்தில் தமிழ் பேசுக! தேசாபிமானம்! பாஷாபிமானம்! பேச்சிலேதான்! சில ஜில்லா ஸபைகள் தமிழிலே வியவஹாரம் நடத்தத்தீர்மானித்தன! நீதியை நாடி வருபவன் கோர்ட் பீஸ்! வக்கீல்பீஸ்! குமாஸ்தா பீஸ்! சீக்கிரம் கார்யமாக வேண்டுமானால் ரஹஸ்ய பீஸ்! இவ்வளவும் கொடுத்து என்ன பேசுகிறார் வக்கீல்? எதிர் கக்ஷி! ஜட்ஜ்? என அறிய முடியாத நிலை மிக மிக வருந்தத்தக்கதல்லவா?

மாம்ஸ உணவைத்தடுப்பாரா? ஆலயங்களில் மிருக பலியை நிறுத்த ஓர் சட்டம் கொண்டு வரும்படி சிலர் கூறுகின்றனர்! அங்கு சிலமிருகங்களே கொல்லப்படுகின்றன! உணவுக்காக கொல்லப்படுபவைகளை நிறுத்தினால் ஓர் நாளில் பல்லாயிரக்கணக்கான உயிர் காக்கப்படும்! ஏனிதற்கு ஒருவரும் முன் வாவில்லை?

ஓர் நியதி வேண்டும்? சட்ட ஸபையில் நுழைந்தவுடன் தன்னையே ஜகத் ரக்ஷகராகக் கருதி பலர் வேண்டாத பலதைச்சட்டமாக்கி தன் கீர்த்தியைத்தேடுகின்றனர். எந்த ஸமூகத்திற்காக சட்டம் கொண்டு வரப்படுகிறதோ, அந்த சமூஹத்தில் பாதிக்குமேல் விரும்பினாலல்லது சட்டம் கொண்டு வரக்கூடாதென ஓர்நியதி இருந்தால் மிக நலம்! பொட்டுக்கட்டும் வழக்கத்தை நீக்க ஓர் சட்டம் வருகிறது!

# தொல்காப்பியத்துப் பார்ப்பான்.

(அக்னி ஹோத்ரம் ராமாநுஜதாதாசார்யர்.)

தொல்காப்பியம் தமிழ் பர்ஷையில் உள்ள புராதனக்கிரந்தம். பண்டை தமிழர்களின் நாகரீகம் வெளியாக இக்ரந்தம் ஒருவாறாக உதவுகிறது. அகஸ்தியர் எழுதிய ஒரு க்ரந்தம் இதற்கு மூல க்ரந்தமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. இவ்வகஸ்தியர் ஆர்ய வகுப்பைச் சேர்ந்தவரோ. ஆர்ய நாகரீகம் கலை இவைகளை இவர் பரப்பியது போலவே புராதனக்குடிகளான த்ராவிடர்களின் கலை நாகரீகம் இவைகளைப்பரப்ப மிகவும் உதவியுள்ளார். ரிக் வேதத்தில் அகஸ்தியரைப் பற்றிச் சொல்லும்பொழுது "உபௌவர்ணௌ வுக்ரரிஷி:புபோஷ" என்று சொல்லப்படுகிறது. இதனால் ஆர்யத்ராவிட வகுப்புகள் விஷயத்தில் ரிக்வேத மந்த்ரகாரரான அகஸ்தியர் கொண்டுள்ள ச்ரத்தை நன்கு விளங்குகிறது. ஆகவே இப்பொழுதுள்ள தமிழ்கலை ஆர்யர்களால் பரப்பப்பட்டதே. "மறையோர்தே எட்டுமன்றலெட்டனுள்" என்று வைதிகர்களின் 8வித விவாஹ முறையை வெளியிடும். இது போலுள்ள தொல்காப்பியத்தை ஸ்தூலமாக கவனித்தாலும் "விவாஹம" "ஜாதி முறை" முதலியவைகளில் வைதிக ஸம்பிரதாயம் பூர்ணமாகப் பின் பற்றப்படுவது நன்கு வெளியாகும். இதற்கு பிறகு ஏற்பட்டுள்ள க்ரந்தங்களின் வைதிக நாகரீகம் கலை முதலியவை கட்டுப்பாடாக ஆதரித்துக் கொண்டாடப்படுகிறது. "சதேகைஸ்து என்றவிடத்தில் ஆர்ய இனத்தைச்சேர்ந்த க்ஷத்திரியர்களே தங்களுடைய கடமையிலிருந்து வழுவினதால் ஆர்ய ஸமூகத்திலிருந்து வேறுபட்டு "த்ராவிடர்கள்" என்பராக ஆனர்களென்று மனுகூறுகிறார்.

உலக சரித்ரத்தில் ஆர்யர்களின் சரித்ரம் ஆச்சர்யகரமானது. Pre-Historic time என்று சொல்லக்கூடிய சரித்திரத்திற்கு முன் இருந்த காலத்திலும் வெகு தூரத்திலுள்ள தேசங்களுக்குச் சென்று ஜனங்களை நாகரீகமுள்ளவர்களாக்கினர்கள். ஜாவா, ஸுமத்ரா, போர்னியோ கம்போடியா முதலிய இடங்களில் சிலாசாஸநங்களை கவனித்தால் வெகு ஸமீபகாலம்வரை அநாகரீக ஜனங்களை ஆர்யர்கள் நாகரீகப்படுத்திவந்தது ஸ்பஷ்டமாகிறது.

தொல்காப்பியத்தில் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னரையர் யாத்தனர் காரணமென்ப" என்பது ஒரு ஸூத்ரம் இது கற்பின் லக்ஷணங்களைக் கூறுமிடத்துச் சொல்லப்பட்டது. ஆராய்ச்சிக்காரர்கள் இதை முக்யமாகக்கொண்டு ஆர்யர்களாலேயே கற்புநிலை த்ராவிடர்களிடையில் தோற்றுவிக்கப்பட்டதென்று முடிவு கூறுகின்றனர். எப்படியும் தமிழர்களுடைய ஸமூஹத்தில் ஒரு ஸமயம் பொய்யும் வழுவும் பரவி இருந்தது நிச்சயமாகத் தெரிகிறது. அந்த ஸமயத்தில் ஆர்யர்கள் விவாஹ முறையை பரப்பினர்களென்றும் தெரிகிறது.

இதுபோன்ற உண்மைகளை மனதில் கொண்டால், தமிழ் நாகரீகம் ஆர்ய நாகரீகத்திற்கு எதிரானதென்று கூறுவது ஆபாஸமென்பது விளங்கும். பொறுப்புள்ள எந்த தமிழாசிரியர்களும் ஆர்ய நாகரீகத்தை அங்கங்கு புகழ்ந்தே எழுதுகின்றனர். இதுவரை ப்ரஸித்த ப்ரமாணமாக ஒப்பப்பட்டுள்ள எந்த இலக்கண இலக்கியங்களிலும் ஆர்ய நாகரீகத்தை தூஷித்து யாரும் எழுதவில்லை.

இந்நிலையில் தமிழர் நாகரீகம் கலை இவைகளைப்பற்றிப் பேசும்பொழுது ஆர்யர்களைத் தூற்றிப் பேசுவது அஸந்தர்ப்பமானது என்றே ஏற்படுகிறது.

சென்றமாதம் குடந்தையில் பேசிய ஒருவர் ப்ராஹ்மணர்களை தூஷித்துப்பேசினர். தமிழில் "அந்தணர்" "பார்ப்பான்" என்பவை வேறு வேறு மனிதனைக் குறிப்பிடுமென்று கூறினராம். பார்ப்பான் என்பது இழிவான பதம், அப்பெயர் தனக்குவேண்டாமென்றும் சொன்னராம். தொல்காப்பியத்தில் பார்ப்பான் இழிவான தொழிலை செய்வதாகச் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறினர். இதிலிருந்து அக்கும்பலைச் சேர்ந்தவர்கள் "பார்ப்பான் தமிழ் நாட்டில் ஈன தொழில் செய்யவந்ததாக கூற முன்வருகிறார்கள். உண்மையென்ன?

தொல்காப்பியம் முதலிய எந்த தமிழ் க்ரந்தத்தையும் வைதிக க்ரந்தங்களில் பரிசயமில்லாதவர்கள் எளிதில் அறியமுடியாது. ஸம்ஸ்கிருத க்ரந்தங்களை நன்கு பயின்றவர்களுக்குத் தொல்காப்பியத்தில் மேற்கண்டவாறு பிரமமுண்டாக நியாயமில்லை. பார்ப்பானர் ஈன தொழில் செய்தனர் என்ற கூற்றுத் தொல்காப்பியத்தின் உணர்ச்சிக்கே மாறுனது. தமிழர்களிடம் கற்புநிலையை பார்ப்பானே பரப்பினதாகச் சொல்லும் க்ரந்தம் அதற்கு விபரீதமாக எப்படிச்சொல்லும்?

தொல்காப்பியத்தில் "பார்ப்பான்" என்ற சொல்லால் தலைவனின் தோழன் குறிப்பிடப்படுகிறன். நச்சினர்க்கினியர் இதற்கு உரை எழுதும்பொழுது "பார்ப்பானென்பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவானெனப்படும்." என்று கூறுகிறார்.

பார்ப்பாருக்கு உரியவற்றைச் சொல்லுங் காலையிலும்,

"காமநிலையுரைத்தலுந் தேர்நிலை யுரைத்தலுங் கிழவோன் குறிப்பினையெடுத்தனர் மொழிதலுமாவோடுபட்ட நிமித்தங் கூறுதலுஞ் செலவுறு கிளவியுஞ் செலவழுங்கு கிளவியுமன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய"

இங்கு தலைவனுடைய காமமிகுதியைக் கண்டு இதன் நிலை இன்னதென்று இழித்துச் சொல்வதும், அதற்கான காரணங்களையெடுத்துக்காட்டி தேருதல் கூறுவதும், தலைவனின் தூர்நடத்தைகளை வெளிப்படுத்திக்கூறுதலும் பார்ப்பானுடைய கார்யமாகச்சொல்லப்படுகிறது. பசுக்கள் நன்கு பால்கறப்பது குறைந்து கறப்பது இவைகள் மூலம் தலைவனுக்கு வரக்கூடிய நன்மைதீமைகளைக்கூறுவதும், மற்றும் தலைவன் புறப்படும் ஸமயங்களில் நல்ல சகுனம் கெட்ட சகுனம் இவைகளைக்கூறி உசிதானுசிதங்களைக்கூறுவதும் அந்தணருடைய கார்யமாக சொல்லப்படுகிறது."

இங்கு மிகவும் உயர்ந்த நிலைமையிலேயே பார்ப்பான்செய்யவேண்டியவை சொல்லப்படுகின்றன. இதனால் மனிதரிடை நல்லொழுக்கம் பரவ பார்ப்பனர் மிகப்பாடுபட்டனரென்றே வெளியாகிறது. ஸமூகத்தில் மிகவும் உள்புகுந்து காமத்தினால் உண்டாகக்கூடிய தீமைகளைஎடுத்துக்கூறும் பார்ப்பான் மக்களிடையே வியபசாரம் பரவ உதவினன் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

வேதம் ஸ்மிருதி, புராணம் முதலியவைகளை ஆராய்ந்தால் பிராம்மணர்கள் நல்லொழுக்க உபதேசத்திற்கே பிறந்தவர்கள் என்பது தெளிவாகும். நல்லொழுக்கத்தை ப்ராஹ்மணர்களே பெரும்பான்மையாக உபதேசிப்பது சரித்ர ப்ரஸித்தமன்றோ! ஸமூஹநன்மையை தன்னுடைய கடமையாகக் கருதுவதே பார்ப்பனீயம். மக்களிடை நல்லொழுக்கத்தைப்பரப்பி அவர்களைக் காப்பாற்றவே பார்ப்பனர்களை பகவான் படைத்தார். ஸ்ருஷ்டிகாலமுதல் இன்றுவரை மக்களுக்கு நல்லொழுக்கத்தை அவர்கள் எங்கும்போதித்துவருகிறார்கள். இந்நிலையில் அந்த ஸமூஹம் தீயவழிக்கு வழிகாட்டியாக இருந்ததாகப் பழி சொல்வது அடியோடு அபத்தமானது.

ஆகவே தொல்காப்பியத்தில் பார்ப்பான் தீயவழிக்கு வழிகாட்டியாக இருப்பவனாகக் கூறப்படுகிறனென்பது முற்றிலும் முறண்பட்டது.

# திருப்புகழும் பக்தி ரஸமும்.

கும்பகோணம் அத்வைத ஸபையின் ஆதரவில் ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் மடத்தில் பிரும்மஸ்ரீ ஆங்கரை ரெங்கசாமி சாஸ்திரிகள் அவர்களால் ஷை விஷயத்தைப் பற்றி உபன்யாஸம் செய்ததின் ஸாராம்சம்.

सुब्रह्मण्यं नमस्कृत्य सुब्राह्मण्यस्यगुप्तये ।
श्री कीर्तिश्च रसो भक्तोरिति विद्विन्निरूप्यते ॥

இதன் பொருள், நமோபிரும்மண்யதேவாய, பிரும்மண்யம் ஸர்வதர்மயக்ஞம், பிரும்மண்யோபிரும்மகிருத்பிரும்ம என்றது முதலான வசனங்களால் பிரும்மணர்களுக்கு ஹிதத்தைச்செய்யும் தெய்வம் என்று பிரஸித்தி பெற்றவன் ஸ்ரீகிருஷ்ணன், பூமியில் பிரும்மமான பிராம்மண்யத்தை ரக்ஷிக்கவே வசுதேவருக்கு தேவகியிடத்தில் அவதரித்தார்— என்று கீதாபாஷ்யாரம்பத்தில் ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் அருளியுள்ளார். அவ்வித பிராம்மண்யம்ஸூதாரம் வாய்ந்த ஒரு தெய்வம். சுப்பிர்மண்யம் என்ற பெயரினாலேயேவிளங்கும். அது தேவஸேனபதியன்றோ? தேவர்களும் அசுரர்களும் பிரஜாபதியின் புதல்வர். என்றபிருகதாரண்யக வாக்கியத்தின் சங்கர பாஷ்யப்படி ஸாத்துவிக விருத்திகளுக்குத்தலைவன் ஸாத்துவிக விருத்திநிறைந்தவனே பிரும்மணன். ஆகவே புத்தியை தூண்டுபவன் நல்ல புத்தியுடன் சேர்க்கட்டும். என்று காயத்ரீயின் பொருளாய் நிற்கும் சைதன்யமே ஸ்கந்தன் எனப்பெறும் அவனை வணங்கிக் கொண்டு 'திருப்புகழும் பக்திரஸமும்' என்னும் விஷயத்தைப்பற்றிச்சிறிது விவரிப்போம்:—

நேயர்களே! பிரகிருத விஷயத்தை நிரூபிக்கத் தொடங்குங்கால் முதலில் திருப்புகழ் என்பது யாது. அது யாரைப்புகழ்கின்றது. அதநிமித்தமென்ன. பயன் என்ன. எவ்விதம் அதில் பக்தி ரஸம் ததும்புகிறது என்றது முதலான விஷயங்கள் விவரிக்கவேண்டியதாயினும் ஸௌகர்யமாக நியாயத்தால் முதன் முதலில் பக்தி ரஸம் என்றால் என்ன. பாதமுனி செய்த சாஸ்திரத்திலாவது மம்மடர்முதலானோர் இயற்றிய அலங்கார சாஸ்திரங்களிலாவது சிருங்கார கருணை அத்புத ஹாஸ்ய பயாநக பீபத்ஸ ரௌத்திர என்று எட்டு ரஸங்களோ அல்லது சாந்திரஸம் உள்பட ஒன்பது ரஸங்களோடுக் கட்டுப்படுவதேயன்றி பக்தி என்று ஒரு விதமான ரஸம் இருப்பதாக எவ்வாற்றாலும் புலப்படவில்லை. நாமங்களையும் லிங்கங்களையும் அநுஸாசநம் செய்த அமரஸிம்மனும் இதையே பின்பற்றினன். ஆதலால் பக்திக்கு ரஸத்துவம் எவ்வாறுபொருந்தும் என்றது முதலான சங்கைகளுக்குச் சமாதானம்கூறி பக்திரஸமே பக்தியும் ரசம், பக்தியோகம் என்பதை ஸ்தாபித்துக் கொண்டு அதைத் திருப்புகழ் எவ்வாறு புகட்டுமென்பதைப் பிறகு விளக்கத் துணிவோம்.

(தொடரும்)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

தனிகர்களான ஆஸ்திகர்களும் தங்கள் உதவியால் வைதிக சிரத்தையுள்ளவர்களை அவர்கள் நெறிகளில் தவறாது நிற்க தகுந்த பொருளுதவிபுரியவேண்டும். "லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோபவந்து" என்ற நம்முடைய கோரிக்கையானது கூடியசீக்கிரத்தில் எளிதில் தானகவே கைகூடுமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

G. மலையப்ப சாஸ்திரிகள்,
காரியதரிசி.



# ஸாமோபாகர்ம நிர்ணயம்.

இவ்வருஷத்தில் ஸாமோபாகர்மா பிரசுரிதம் பஞ்சாங்கங்களில் போட்டிருக்கிற பிரகாரம் ஆவணிமீ 12உ தான் செய்யவேண்டியது. இதற்கு முரணாக வேறு எவ்விதமும் இடமில்லை.

இவ்வருஷத்தில் வைகாசிமீ 3உ ஸாம சாகாதீசனான அங்காரகனுக்கு அஸ்தமனம் ஏற்பட்டு ஆவணிமீ 18உயில் தான் உதயம் ஏற்படுகிறது. ஆவணிமீ 12உ அங்காரக அஸ்தமனகாலமானதால் அந்த தினத்தில் உபாகர்மம் செய்யக்கூடாதோ என்று சிலருக்கு சம்சயம் தோன்றியிருக்கிறது. ஆனால் இவ்வருஷத்தில் அந்த சம்சயத்திற்கு இடமில்லை. ஏனென்றால் க்ருஹ்ய ஸூத்திரத்தில் "பிரௌஷ்டபதீம் ஹஸ்தேநாத்யாயாநுபாகுர்யு:" என்று ஒரு ஸூத்ரமும், சிராவணீமித்யேகே என்று அடுத்த ஸூத்ரமும் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது, ப்ரோஷ்டபதஹஸ்தத்தில் உபாகர்மா செய்யவேண்டுமென்றும், ச்ராவணீ ஹஸ்தத்திலோ, ச்ராவணீ பௌர்ணமியிலோ மற்றொரு காலமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிப்படி முக்கிய காலமான ப்ரோஷ்டபத ஹஸ்ததினமாகிய ஆவணிமீ 12உயும், கௌண காலமான ச்ராவணீ பௌர்ணமீ தினமாகிய ஆடி 27ம்உ இன்னும் பக்ஷாந்தர கௌணகாலமான ச்ராவணீ ஹஸ்ததினமாகிய ஆடி 17-ம் அங்காரக அஸ்தமன தோஷத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. க்ருஹ்ய ஸூத்ரத்தில் இவைகளைத்தவிர வேறு உபாகர்ம காலம் சொல்லப்படவில்லை.

ஆகையால் இவ்வருஷத்தில் க்ருஹ்யோக்தமான காலங்கள் எல்லாவற்றிற்கும் தோஷமிருக்கிறபடியால் அவைகளுக்குள் முக்கிய காலமான ப்ரோஷ்டபதீ ஹஸ்ததினமாகிய ஆவணிமீ 12உ தான் ஸாம உபாகர்மம் நடத்தவேண்டியதென்று ஏற்படுகிறது.

'ஆர்யதர்மம்' ஆடிமீ 13 தேதி பத்திரிகையில் 3ம் பக்கத்தில் இவ்வருஷத்திய உபாகர்மாவை ஸாமவேதிகள் புரட்டாசிமீ 8உ சனிக்கிழமை யன்று செய்யவேண்டுமென்று ஓர் பெரியார் எழுதியிருக்கிறார். அம்மாதிரிகூறுவதற்கு எவ்வித ஆதாரமும் வரையப்படவில்லை. ஆதாரத்தையும் கூறியிருந்தால் சிலாக்கியமாக இருந்திருக்கும்.

ஒருக்கால் வைத்தியநாத தீக்ஷிதீயத்தில் வர்ணாச்ரம காண்டத்தில்:— "ஸாமவேதிந: ஸிம்ம பாத்ரபதே மௌட்யாதிநா தூஷிதேஸதீ கந்யாமாஸாபரபக்ஷே ஹஸ்தநக்ஷத்ரே உபாகாணம் குர்வந்தி" இத்யாதி வாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு ஷை பெரியார் கூறியிருக்கலாமோவென்று சந்தேகிக்கிறேன். இந்த வசனங்களுக்கு அர்த்தம் செய்வதில் கொஞ்சம் விசேஷமுண்டு. ஆயினும் இந்த பங்திகளின்பதங்களுக்கு யதாஸ்திதமாகவே அர்த்தம் செய்வதென்றே ஒப்புக்கொண்டாலும், "கன்யாமாஸ அபரபக்ஷ ஹஸ்தநக்ஷத்திரம்" என்றல்லவா இந்த வாக்கியங்களின் அபிப்பிராயமாகிறது? இவ்வருஷம் கன்யா மாதத்தில் (அபரபக்ஷத்தில்) ஹஸ்தநக்ஷத்திரமே இல்லையே. அப் பெரியார் சித்தாந்தப்படியுள்ள புரட்டாசிமீ 8உ சனிக்கிழமை (சுக்ல) பிரதமையல்லவா? க்ருஷ்ணபக்ஷமல்லவே?

ஸார்வபௌமீயத்தில் "சாகாதீசே சக்தியுக்தே" என்ற வாக்யத்தின் பொருள் என்னவென்றால் அந்தந்த சாகாதீசன் தோஷரஹிதனாயிருந்த காலத்தில், அந்தந்த சாகிகள் உபாகர்மா செய்யவேண்டியது என்றமட்டில்தான். சாகாதீசன் தோஷரஹிதமாக இருக்கும் காலமானது உபாகர்மா செய்வதற்கு அநுக்தமான காலத்திலகூட உபாகர்மா செய்யலாமென்று அர்த்தமில்லை. சாகாதீச மௌட்யாதி ரஹிதகாலம் தான் சிலாக்கியம் என்று சொன்னால் க்ருஹ்ய சூத்ரம் முதலியவைகளுக்கு வையர்த்தியமும், அப்ராமாண்யமும் வந்துவிடும். ஷை வாக்யத்தின் தாத்பர்யம் என்னவென்றால், உசிதமான பல காலங்களுக்குள் தோஷ ரஹிதமானகாலம் கிராஹ்யம் என்று அர்த்தமே ஒழிய உபாகர்மாவுக்கு அநுக்தமான காலத்தில் செய்யவேண்டுமென்பது முற்றிலும் முரணாகும்.

ஆகையால் இவ்வருஷத்தில் முக்கிய கௌண காலங்கள் எல்லாவற்றிற்கும் அங்காரக மௌட்ய தோஷமிருப்பதால் முக்கிய காலமாகிய ஆவணிமீ 12உ தான் ஸாமவேதிகள் அங்காரக சாந்தி புரஸ்ஸரமாக உபாகர்மா செய்யவேண்டியது

G. மலையப்ப சாஸ்திரி, புதுக்கோட்டை.

## ஸாமோபாகர்ம.

இந்த வருஷம் ஆவணிமீ 12ந்உயே ஸாமகர்கள் உபாகர்மம் செய்வது தான் சாஸ்திரீயம்.

ஸாமகர்களுடைய உபாகர்மாவுக்கு க்ருஹ்யோக்தமான காலம் "பாத்ரபத சுக்ல ஹஸ்தம்" முக்ய காலம். இரண்டாவது "ச்ராவண பூர்ணிமை"

இதைத்தவிற க்ருஹ்ய ஸூத்ரத்தில்வேறு காலம் படிக்கவில்லை. வைத்யநாத தீக்ஷிதரவர்கள் ஸ்மிருதியில் மேல் சொல்லப்பட்ட க்ருஹயோக்தமான இரண்டு காலங்களும் மௌட்யாதி தோஷத்தினால் துஷ்டமாய்ப்போனால் "கன்யா மாஸ அபர பக்ஷ ஹஸ்தத்தில் செய்ய வேண்டுமென்றும் அந்த ஹஸ்தம் ஸூர்யாஸ்தமனத்துக்கு முன்மூன்று முஹூர்த்தம் இருக்க வேணுமென்று கண்டோக்தியாய் படித்திருப்பதால் "கன்யா மாஸ அபர பக்ஷ ஹஸ்தம்" மூன்றுங்காலம்.

சிலர் ஷை தீக்ஷிதரவர்கள் ஸ்மிருதியில் ஸாமோபாகர்மப்ரகரணக்கடைசியில் ஆசௌசிகளுக்காக சொல்லப்பட்ட "பரோஹஸ்த: க்ராஹ்ய:" என்கிற வசனத்தைக்கொண்டு ஸாமகர்களுக்கு ஹஸ்த நக்ஷத்திரம் மட்டுந்தான் முக்யமென்றும் மாஸம் வேறாகயிருந்தால் தோஷமில்லை யென்றும் இவ்வருஷம் ஸம்பவித்திருக்கிற "ஆச்வயுஜ சுக்ல ஹஸ்தத்தில்" செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது யுக்தமல்ல.

ஏனென்றால் க்ருஹ்ய ஸூத்திரத்தில் "ப்ரௌஷ்டபதீம்ஹஸ்தேநாத்யாயாநுபாகுர்யு:" என்கிற வசனத்தால் ப்ரௌஷ்டபத மாஸத்தில் ஸம்பவிக்கக்கூடிய முக்கிய காலமான "சுக்ல ஹஸ்தமும் அது துஷ்டமாய்ப்போனால் கௌணகாலமான "க்ருஷ்ண ஹஸ்தமும்" என்று ஏற்படுகிறதின்பேரில் தான் நமது தீக்ஷிதரவர்கள் "கன்யா மாஸ அபா ஹஸ்த நக்ஷத்ரம் என்றுநன்றாய் மூன்று இடங்களில் படித்திருக்கிறார்.

தீக்ஷிதரவர்களுக்கு ஹஸ்த நக்ஷத்ரம்மட்டும் முக்யமென்றும் மாஸம் ப்ரதானமல்ல என்றும் தோன்றியிருந்தால் "அடுத்த ஹஸ்தம்" என்று படித்திருப்பாரே தவிற "கன்யா மாஸ அபாபக்ஷ ஹஸ்தமென்று" படித்திருக்கமாட்டார்.

தவிற ஷையாருடைய க்ரந்தத்தில் ஸாமோபாகர்மப்ரகரணத்தில் நிர்ணய ஸிந்துவில் கமலாகாரால் சொல்லப்பட்ட "ச்ராவண சுக்ல ஹஸ்தத்தை" ஸூத்ரவிருத்தமாகையால் அதை உபேக்ஷித்த தீக்ஷிதரவர்கள் நிராதாரமான "ஆச்வீயுஜ சுக்ல ஹஸ்தத்தை" ஒப்புத்துக்கொள்வாரா என்று கொஞ்சம் நிதானிக்கவேண்டும். ஆகையால் தான் அதே ப்ரௌஷ்டபத மாஸத்தில் ஏற்படக்கூடிய க்ருஷ்ண ஹஸ்தத்தைக் குறிப்பிட்டார்கள்.

தவிற சென்ற "ருத்ரோத்காரி" வருஷம் பாத்ரபத சுக்ல ஹஸ்தத்திற்கு மௌட்ய தோஷம் ஏற்பட்டு மித்ரக்ஷேத்ரத்தில் அங்காரகன் இருந்திருப்பதால் ஷை ஹஸ்தமானது நிர்துஷ்டமாயிருந்தபோதிலும் அதே பாத்ரபத மாஸத்தில் க்ருஷ்ணபக்ஷத்தில் ஹஸ்த நக்ஷத்ரம் ஸம்பவித்தும் மௌட்ய தோஷமும் நிவர்த்தியாகி விட்டபடியால் அந்த வருஷம் புரட்டாசிமாதம் செய்தது யுக்தமாகும்.

ஆகையால் இந்த வருஷம் "ஆச்வயுஜ" மாஸத்தில் ஸம்பவித்திருக்கிற சுக்ல ஹஸ்தமானது மௌட்யதோஷம் இல்லாமலிருந்தபோதிலும் மாஸம் வேறானபடியால் அதை உபேக்ஷித்து க்ருஹ்யோக்த முக்ய காலமான "பாத்ரபத சுக்லஹஸ்தத்திற்கும் கௌண காலமான ச்ராவண பூர்ணிமைக்கும்" மௌட்ய தோஷமிருப்பதாலும் இவ்வருஷம் (கன்யாமாஸ அபரபக்ஷ ஹஸ்தம்) ஸம்பவிக்காமல் போனதாலும், சாகாதீசன் மௌட்யத்தை யடைந்ததுமல்லாமல் கடகத்தில் நீசனாய் போய்விட்டபடியாலும் "கோபிலேயக்ருஹ்யத்தில்" "ப்ரோஷ்டபதீம் ஹஸ்தேநோபாகரணம்" என்கிற ஸூத்ர பாஷ்யத்தில் சந்திர தர்க்காலங்கார் "ஸோய மேக: கால: ந காலத்வயம்" என்றுபடித் திருப்பதாலும் க்ருஹ்யோக்த முக்யகாலமாகிய பாத்ரபத சுக்லஹஸ்தமாகிய ஆவணி மாஸம் 12உந்யன்றே சாந்தி பூர்வகமாக ஸாமகர்கள் உபாகர்மம் செய்வதுதான் சாஸ்திரீயமென்றும் ஸாது என்றும் தோன்றுகிறது.

ராமனுதச்ரௌதிகள், மேட்டுதெரு.

## ஸாமோபாகர்ம.

(மேலக்காவேரி கே. ஆர். வைத்தியநாத சாஸ்திரிகள் எழுதியது.)

சென்ற ஆர்யதர்மத்தில் திப்பிராஜபுரம் ஸ்ரீ நாராயண சிரௌதிகள் தான் புரட்டாசிமீ 8உயே ஸாமோபாகர்மம் செய்யப்போவதாயும் எல்லோரும் அதில் செய்யவேண்டுமென எல்லோரையும் வற்புறுத்துகிறார். இது சரியல்ல. இந்த உபாகர்மம் முதலியவைகள் இதுபோன்ற ஸம்ஸ்காரங்கள் ஸ்மிருதிகளில் அபிப்ராய பேதங்களுடன் காணப்படுகின்றன. இது முதலியவைகளை வைத்யநா தீக்ஷிதர் முதலிய நிபந்தனைக்காரர்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் (யதா ஸூத்ரம் வியவஸ்தா) என நிர்ணயம் செய்து அனுஷ்டிக்கவேண்டும். தன் சாகையைச் சேர்ந்து உரைக்கப்பட்ட ஸ்மிருதிகளுக்கு அதிக கௌரவமும் தன் ஸூத்ரபாஷ்யங்களுக்கு ஸர்வ கௌரவமும் கொடுத்து நிர்ணயம் செய்வதே யாக்ஞிகர்களான பெரியோர்களின் அபிமதமாகும். (உபாகர்ம ஸ்வ கிருஹ்யோக்த காலேகார்யம் த்விஜாதிபி:) என்ற அத்ரி வசனத்தாலும் க்ருஹ்ய காலத்தின்படி அநுஷ்டிக்கவேண்டுமென்பதை சிரௌதிகளும் மறுக்கமுடியாது. நமக்கு உபாகர்மாவை அனுஷ்டிக்கும்படி விதிக்கும் ஸூத்ரங்கள் இரண்டு (ப்ரோஷ்டபதீம் ஹஸ்தே நாத்யாயாநுபாகுர்யு: ச்ராவணீமித்யேகே என இந்த வசனங்களைப் பார்த்தால் பாத்ரபத சுக்ல ஹஸ்த நக்ஷத்ரம் உபாகர்மாவுக்கு முக்யகாலமாகவும் ச்ராவண பௌர்ணமீ கௌணகாலமாகுமென விளங்குகிறது. இவ்வருஷம் சாகாதீசரான அங்காரகன் மௌட்ய தோஷத்தால் சக்தியற்றிருப்பதால் அதுசரியான காலமில்லை என்பதேன்:

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

(முன்பக்கத் தொடர்ச்சி).

மித்திரரின் எண்ணமாகும். குரு சுக்ராதிகளுக்கு மௌட்ய தோஷகாலத்தில் சிற்சில கர்மாக்கள் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை அக்காலத்தில் செய்வதில்லை. அதுபோல இதைவிடாமல் உபாகர்மாவை சாந்தியுடன் செய்யவேண்டுமென்பதே நமது முடிவு. (யக்ஞோபவீதம் கர்தவ்யம் ச்ராவணே குரு சுக்ரயோ:) என்ற வசனத்தின் தாத்பர்யமும் அதுவே. ருத்ர ஸ்கந்தாசாரியரும் ஸூத்ராபிப்ராயத்தைப் ப்ரௌஷ்டபதமாதத்திய ஹஸ்த நக்ஷத்ரமென்றும் விளக்கியிருக்கிறார். (ப்ரோஷ்டபத்யாம் ஹஸ்தர்க்ஷே) என ஸங்கல்பமும் ஸம்பிரதாய ஸித்தமானது. தவிர முன் வந்து இப்படியே பெரியோர்கள் செய்திருக்கிறார் என நிகமனம் செய்திருப்பதும் ஸாஹஸமே. புரட்டாசி 8உ ஆச்விஜ சுக்லபிரதமையில் ஆச்விஜத்தில் செய்ய பிரமாணம் எங்கிருக்கிறது? இருந்தால் ஏன் கூறலாகாது? காதிரகோபில ஸூத்ரங்களில் (அர்த்த பஞ்சமாஸாநதீத்ய பௌஷீ முத்ஸர்க:) என்பதை பரிசீலனை செய்தாலும் ச்ராவண பூர்வஹஸ்தமென்பதை நிர்ணயம் செய்யலாம். தீக்ஷிதாவர்கள் கௌணகாலமாக கன்யாமாஸாபரபக்ஷத்தில் செய்கிறார்களென கூறியிருக்கிறார். அவரிஷ்டப்படிப்பார்த்தால் இவ்வருஷம் அப்படி நக்ஷத்திரமே இல்லை. நமக்கு அவரிடத்தில் ஆதரவிற்கு யாதொரு குறைவுமில்லை. ஆனாலும் (யாவந் மூலதர்சனம் அனனுஷ்டான லக்ஷணமப் பிராமாண்யம்) என்றபடி ஸமாதானம் அடையவேண்டுமென தோன்றுகிறது. இவரது கொள்கை ஆசாரத்தை ஒட்டியிருக்குமானால் அதற்கு கௌரவம் கொடுத்து அநுஷ்டிப்பவர்களை நாம் தடுக்கவில்லை. அதற்கு ஸங்கிரஹ வசனம் மட்டுமே பிரமாணமாகலாம். வசன பலாபலன்களைப் பார்த்தால் ஸூத்ரக்காரர் மதமே ஸித்தாந்தமென கூறலாம். ஷடி கண்டனவைகளைப்பார்த்தால் ஆவணி 12உ ஞாயிறு அன்று சாந்திபுரஸ்ரமாய் உபாகர்மா செய்ய வேண்டும். ஸ்ரீ சிரௌதிகள் இதை கவனித்தும் பாதகமானால் மறுத்து உண்மையை அறிவிக்கவும் ஸாதகமானால் சிஷ்யர்களுடன் முக்ய காலதில் சிஷ்யவர்கங்களுடன் அநுஷ்டித்து ரிஷிகளின் பிரஸாதங்களை அடையும்படிவேண்டுகிறேன்.

## ஸாமோபாகர்ம காலம்.

ஸாமோபாகர்ம விஷயமாய் கீழ்சொல்லப்பட்ட கிரந்தங்களில் கௌதம தர்மத்தில் ஹஸ்தநக்ஷத்திரத்தைப்பற்றிச்சொல்லவில்லை. மற்ற கிரந்தங்களில் ஹஸ்த நக்ஷத்திரத்தை முக்கியமாக சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் பிரோஷ்டபத மாஸத்தில் முன் வரும் ஹஸ்தத்தில் தான் அனுஷ்டிக்க வேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

வைத்யநாத தீக்ஷிதீயத்தில் சொல்லியபடி சாகாதிசே என்ற வாக்கியப்படி அங்காரக மௌட்யத்திற்காகபின்னடிசெய்வதாகவிருந்தாலும் கந்யாபரபக்ஷ ஹஸ்தத்தைத்தான் காலமாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அங்காரகமௌட்யத்தைப் பற்றி கௌதம தர்ம பாஷ்யத்திலும் க்ராஹ்யஸூக்த ருத்ரஸ்காந்தவிருத்தியிலும் வாமந காரிகையிலும் ஒன்றும் சொல்லப்படவில்லை.

அங்காரகமௌட்யத்திற்காக பின்னடி அனுஷ்டிக்க இவ்வருஷம் காலமில்லை. ப்ரோஷ்டபத மாஸத்தைத்தாண்டி ஆச்விஜமாஸத்தில் அநுஷ்டிக்க ஆதாரமொன்றுமில்லை.

கன்யா அபரபக்ஷ ஹஸ்தத்தில் என்று காலக்கிரத்தையும் சொல்லி விட்டதாலும் இவ்வருஷம் ஆச்விஜ சுக்ல பிரதமையில் இரண்டாவது ஹஸ்த நக்ஷத்திரம் வருவதாலும் இவ்வருஷம் ஆவணிமீ 12உயிலேயே ஒரே காலமான ஹஸ்த நக்ஷத்திரத்தில் நிஸ்ஸந்தேகமாய் அனுஷ்டிப்பது உசிதமாகத்தோன்றுகிறது.

அதிலும் பிரதமோபாகர்மாவுக்கு மட்டும் சாந்தி வேண்டும். மற்றதுக்கு அவசியமில்லையென்றும் தெரியவருகிறது,

முன் ஒரு தடவை அங்காரக மௌட்யத்தில் இரண்டாவது ஹஸ்த நக்ஷத்திரம் கன்யா மாஸ அபர பக்ஷத்தில் வந்துதான் அனுஷ்டிக்கப்படுகிறது. ஆச்விஜ மாஸத்தில் அனுஷ்டிக்கவில்லை.

ஏ. ராமபத்ர சாஸ்திரி. மாத்துரை.

## காயத்ரீஜப காலம்.

இவ்வருஷம் காயத்ரீஜபமும் யஜுர் உபாகர்மாவும் ஆடிமீ 27உயன்று செய்யவேண்டுமென்று ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ கார்யம் ஸ்வாமி எழுதியுள்ள பிரசுரமும் அதற்கு கண்டனமாக 27, 28உகளில் தனி தனியாக ஷடி கர்மாக்களை செய்யவேண்டுமென்று அக்னிஹோத்ரம் ஸ்வாமி எழுதியுள்ள பிரசுரமும் ஜூலைமீ 28உ ஆர்யதர்மத்தில் வெளி வந்துள்ளதை பார்க்கும்படி நேர்ந்தது. ஸ்ரீ அழகிய சிங்கர்கள், புத்தம் கோட்டம் ஸ்வாமி, முதலானவர்களுக்கு முதல் பக்ஷம் சம்மதமென்றும், அக்னிஹோத்ரம் ஸ்வாமி, சோழவந்தான் பிரம்மஸ்ரீ சங்காசாஸ்திரிகள், அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ உ. வே. தில்லையம்பூர் வெங்கடாசார்ஸ்வாமி முதலானவர்களுக்கு பிந்தின பக்ஷம் சம்மதமென்றும் வியக்தமாகத் தெரிகிறது. ஸந்தி என்றபதத்திற்கு பாரிபாஷிகமான அர்த்த மிருந்தபோதிலும் உபாகர்ம பிரகாணத்தில் அதற்கு ஸங்கதி இல்லையென்றும் சாதாரண அர்த்தம்தான் ஸங்கதமென்பதும் முதல் பக்ஷத்தின் தாத்பர்யம். மற்ற பிரகரணங்களில் போலவே இந்த இடத்திலும் பாரிபாஷிகார்த்தம் தான் நியாயமென்பது பிந்திய பக்ஷத்தின் தாத்பர்யம். பிந்திய பக்ஷத்தில் வைத்யநாத தீக்ஷிதர், தோழப்பர், முதலிய நிபந்தனக்காரர்களுக்கு நோக்கமில்லையென்பதை காட்டுகிறோம்.

ஆடி-மீ 27உ பௌர்ணமி $12\frac{1}{2}$-நாழிகையிருப்பதாகவும் மறுநாள் பிரதமை $10\frac{1}{4}$ நாழிகை க்ஷயரீதியில் இருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது ஸந்திசப்தத்திற்கு பாரிபாஷிகமான அர்த்தப்படி க்ஷய நாழியை இரண்டை பாதியாக்கி கிடைத்த ஒருநாழிகையை பௌர்ணமி $12\frac{1}{2}$நாழிகையில் கழித்தால் $11\frac{1}{2}$-நாழிகையாகும். அப்பொழுது உபாகர்ம அந்த புச்ச தினத்தன்று செய்வதா அல்லது முதல் நாள் செய்வதா என்ற விசாரத்தில் பிந்தின பக்ஷப்படி முதல் நாள் செய்ய பிராப்தமாகும். இஷ்டாபத்தியெனில் உபாகர்ம பிரகாணத்தில் சொல்லியுள்ள "ததேவம் த்வாதச கடிகாதிக கிஞ்சித் காலவ்யாபிந்யாம் பௌர்ணமாஸ்யாயாம்'' என்ற தீக்ஷிதீய வசனமும் பர்வண்யௌதயிகே, ப்ரதிபத்ஷண்முஹூர்த்தகை: இதுமுதலான பல வசனங்களும் விரோதிக்கும். ஆகையால் முந்திய பக்ஷம் தான் நிபந்தனகார சம்மதமென ஸ்பஷ்டம். இப்படியிருக்க, பிந்தின பக்ஷம் தான் சாஸ்திர சம்மதமென சொல்லி ஜனங்களிடம் ஹாஸ்ய ரசத்தை விருத்தி செய்து பிரசாரம் பண்ணி வருகிற ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் தில்லையம்பூர் வெங்கடாசார்ய சுவாமி கிருபைசெய்து தன்பக்ஷத்திற்கு சாதகமான யுக்திகளை பத்திரிகை மூலமாவது வெளிப்படுத்தினால் உபகாரமாகயிருக்கும்.

வித்வான், நெரூர் நாராயண அய்யங்கார், மதுரை.

## திண்டுக்கல் வேதபாடசாலை.

ப்ரதம வார்ஷிகோத்ஸவம்.

சென்ற ஜூலைமீ 24ம் உ ஞாயிற்றுக்கிழமை திண்டுக்கல் வேதபாடசாலையின் ப்ரதம வார்ஷிகோத்ஸவமானது ஸ்ரீஜகத்குரு மடத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அன்றுகாலையில் ஸ்ரீ ஜகத்குரு மடத்திலிருந்து ஸ்ரீ காயத்ரீ தேவியின் படத்துடன் மங்களவாத்யத்துடனும் வேத கோஷத்துடனும் ஊர்வலம் வந்தார்கள்.

மாலை வைபவத்திற்கு அகில பாரதீய வர்ணாச்ரம ஸங்க கார்யாத்யக்ஷரும், மதுரை அட்வகேட்டுமான ப்ரம்ஹஸ்ரீ ராவ்சாகிப் என். நடேசய்யாவர்கள் விஜயம் செய்திருந்த ஒரு பெரிய ஸதஸுக்கு அக்ராஸனம் வஹித்தார்கள். ஸ்வஸ்திவாசனம், ஈச்வரப்ரார்த்தனைக்குப்பிறகு மாணவர்களில் ஒருவனால் ஸம்ஸ்கிருதத்தில் "ஸதாச்சாரம்'' என்பதைப் பற்றி ஒருசொற்பொழிவு நிகழ்ந்தது. ஸங்கக் கார்யதரிசியால் பாடசாலையின் வருஷாந்திர அறிக்கை படிக்கப்பட்ட பிறகு மாணவர்களுக்குப்பரிசு அளிக்கப்பட்டது. ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளிடமிருந்து வந்த ஆசீர்வாத ரூபமான ஸ்ரீமுகம் படிக்கப்பட்டது. மஹா ஸன்னிதானத்தால் அனுக்ரஹிக்கப்பட்ட திவ்யாவ்யாஸாக்ஷதை ஸஹிதபுஸ்தகங்களும் மாணவர்களுக்குப் பரிசாகவளிக்கப்பட்டன. இன்னும் திருநெல்வேலி அட்வகேட் ப்ரம்ஹஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி ஐயாவர்கள், சோழவந்தான் ப்ரம்ஹஸ்ரீ ராமகிருஷ்ணய்யாவர்கள் முதலியவர்களிடமிருந்து வந்த லிகிதங்கள் படிக்கப்பட்டன

சோழவந்தான் வேதசாஸ்திர பாடசாலை அத்யாபகரான ப்ரம்ஹஸ்ரீ யக்ஞதீக்ஷிதாவர்கள் "வேத மஹிமையும் அத்யயனத்தின் அவச்யமும்'' என்பதைப்பற்றி ஓர் அரிய உபன்யாஸம் செய்தார்கள். உபன்யாஸகாவர்கள் வேதம் அபௌருஷேயம் என்பதைப் பற்றியும் ஒவ்வொரு த்விஜனும் த்விஜத்வம் ஸித்திக்கும்பொருட்டு அவச்யம் சில முக்ய பாகங்களையாவது அத்யயனம் செய்ய வேண்டுமென்றும் உருக்கமாயும் ஸபாரஞ்சகமாயும் உபன்யஸித்தார்கள்.

தலைவரவர்கள் தன் முடிவுரையில் ஆங்கிலக் கலாசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆஸ்திக்யமும் வைதிக தர்மத்தில் ச்ரத்தையும் குறையாமலிருக்கும்வண்ணம் இப்படிப்பட்ட பாடசாலைகள் மிக்க அவச்யமென்றும் இம்மாதிரி ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் உள்ள கோவில்களில் இருக்கவேண்டுமென்றும், ஸநாதனிகள் இனியும் ஓஷியானு தேசத்திய பெங்குவின் பறவைகள் போல் அஜாக்ரதையாயிருந்தால் நம் தர்மத்திற்கு க்லானி வருவதால் நமக்கே ஹானி வரும் என்றும், தேசோத்தாரகர்கள் என்று தங்களை யழைத்துக்கொள்ளும் விஷமிகளான சீர்திருத்தக்காரர்களால் நம் காங்கிரஸ் நிரம்பப்பட்டிருப்பது மிக்க துக்கிக்கத்தக்கதென்றும், நம் வர்ணாச்ரம ஸதாசாரத்தை நாம் காப்பாற்றுவது நம் கடமையென்றும் நீண்டதோர் ப்ரஸங்கம்செய்தார்கள்.

தங்கள் வ்யாஸ பூஜையை முடித்துக் கொண்டு சாதுர்மாஸ்யத்தை இவ்விடம் நடத்திவருகிற ஸ்ரீ ஸம்ஸ்கிருதானந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளவர்கள் சில உபதேச மொழிகள் கூறினார்கள்.

பாடசாலா ப்ரவர்த்தகரான ப்ரம்ஹஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதாவர்கள், B.A., L.T., ஸபையோர்களுக்கு வந்தனோபசாரம் கூற ஸபை இனிது கலைந்தது.

அன்றிரவு பங்களூர் கதாரத்னம் ப்ரம்ஹஸ்ரீ கிருஷ்ண பாகவதாவர்கள் "ஸ்ரீராமநாம வைபவம்'' என்பதைப்பற்றி ஓர் அரிய ஹரிகதா காலக்ஷேபம் செய்தார்கள்.

காரியதரிசி



## புராணக்கதை.

### அஸத்யம் கூடாது!

குருவிடம் பொய் கூறிய கர்ணன்.

பஞ்சபாண்டவரின் தாயாகிய குந்திதேவியிடம் அவள் கன்னிகையாயிருக்குங்காலத்தில் கர்ணன் பிறந்தான். அவன் ஆங்கிரஸ வம்சத்திற் சிறந்தவரும் பாண்டவர்களின் குருவுமான துரோணாசாரியரிடம் தனுர்வேதாப்யாஸம் செய்தான். அப்போது அவன் பாண்டவரின் பலம், ஸாமர்த்தியம், புத்தி வினயம், அவர்களுக்கு கிருஷ்ணனோடு உண்டான சிநேஹம், அவர்களிடம் பிரஜைகளுக்குண்டாயிருக்கும் அன்பு இவைகளைநினைத்து நினைத்து மிகவும் தாபமடைந்தான். தெய்வ ஸங்கல்பத்தால் அவன் பாண்டவர்களின் பகைவனான துரியோதனனுடன் இளமை முதலே ஸ்நேஹித்தான். இப்படி யிருக்கும் போது ஒரு தடவை அவன் ரஹஸ்யமாய் துரோணரிடம் சென்று தனக்கு பிரம்மாஸ்தாத்தை பிரயோக நிவிர்த்தி முறைகளோடு உபதேசிக்கும்படியும் யுத்தத்தில் தான் அர்ஜுனனோடு ஸமமாக இருக்கவேண்டுமென்பது தனது விருப்ப மென்றும் பிரார்த்தித்தான். அப்போது துரோணர் அவனது துஷ்ட புத்தியை அறிந்து விதிப்படி விரத தர்மானுஷ்டானம் செய்த ப்ராம்மணனும் மிகுந்த தவமுடைய க்ஷத்திரியனுமே பிரம்மாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ளத்தக்கவனேயன்றி மற்றவர்களல்லவென்று கூறினார். கர்ணன் உடனே துரோணரிடம் விடைபெற்றுக்கொண்டு மஹேந்த்ர மலையை நோக்கிச்சென்று அங்கு பரசுராமரையடைந்து தான் ப்ருகு வம்சத்திற்பிறந்த பிராம்மணன் என்று பெருமையாகச் சொல்லிவணங்கினான். அவர் அவனை அங்கீகரித்து அவனிடம் மிகவும் பிரியமாயிருந்தார். அங்கு அவனுக்கு கந்தர்வர் யக்ஷர் முதலியவர்களுடன் சேர்க்கை ஏற்பட்டது. பரசுராமரிடம் விதிப்படி அஸ்த்ராப்யாஸம் செய்தான்.

அவன் ஒருக்கால் ஆயுதங்களுடன் ஆச்ரமத்திற்குச் சமீபத்தில் ஸஞ்சரிக்கும்போது அங்கு வஸித்த ஒரு அந்தணரது ஹோமப் பசுவைத் தற்செயலாய்க்கொன்றான். அப்போது அவர் "நீ உன்னுடைய பகைவனுடன் யுத்தஞ் செய்யும்போது உன்னுடைய தேருருளையைப் பூமி விழுங்கப்போகிறது. அப்போது உன் சத்ரு உன் தலையை ஆக்ரமித்துத் தள்ளப்போகிறான்'' என்று கர்ணனைச் சபித்தார். அதனால் மிகவும் பயமடைந்து பரசுராமரிடம் வந்தான். பரசுராமர் அவன் தனக்குச்செய்த பணிவிடையிற் களித்து அவனுக்குப் பிரம்மாஸ்திரத்தை உபதேசித்தார். இப்படியிருக்க ஒரு காலத்தில் உபவாஸத்தினால் களைப்படைந்திருந்த பரசுராமர் விசுவாஸத்தால் கர்ணனது மடியில் தலையை வைத்துக்கொண்டு நித்திரை செய்தார். அப்போது இரத்தப்ரியமுள்ள பயங்கரமான ஓர் புழுவானது கர்ணன் ஸமீபம் வந்து அவனது தொடையைத் துளைத்தது. குருவினிடமுள்ள பயத்தால் அவன் அதைத் தள்ளாமலே பொறுத்திருந்தான். கர்ணனது ரக்தம் தன் சரீரத்தில் பட்டதும் பரசுராமர் விழித்தெழுந்து கர்ணனிடம் கோபிக்கக் கர்ணன் நடந்த விஷயத்தை அவரிடம் தெரிவித்தான். பரசுராமர் அந்தப் புழுவைப் பார்த்தவுடன் அது உயிர் துறந்து ஒரு ராக்ஷஸ உருவத்துடன் தோன்றி தன் பூர்வ விருத்தாந்தத்தைக் கூறி மறைந்தது. பிறகு பரசுராமர் கர்ணனைக் கோபத்துடன் பார்த்து'' ஏ மூடா! இப்பெரிய துக்கத்தை க்ஷத்ரியனைத்தவிர பிராம்மணன் ஒருக்காலும் ஸஹிக்கமாட்டான். உனது உண்மையான விருத்தாந்தத்தைச் சொல்'' என்று கூறினார். அப்போது கர்ணன் அவரை நோக்கி "நான் அந்தணருக்கும் க்ஷத்ரியருக்கும் வேறான ஸூத ஜாதியைச் சேர்ந்தவன்.

அஸ்த்ரவித்தை அப்யஸிக்கவேண்டுமென்ற ஆவலால் தங்களிடம் நான் பார்க்கவன் என்று சொன்னேன்'' எனத்தெரிவித்தான். இவ்விதம் சொல்லி பூமியில் விழுந்து நடுங்கும் அக்கர்ணனைப் பார்த்துப் பரசுராமர் "அஸ்த்ரத்தில் உள்ள பேராசையால் நீ பொய்சொல்லியபடியால் இந்தப்ராம்மாஸ்திரமானது உனக்கு ஸமானமானவனுடன் யுத்தஞ் செய்யும் உனது மரணகாலத்தைத்தவிர மற்ற காலத்தில் உனக்குத் தோன்றவேண்டாம். பிராமணரல்லாதவரிடம் பிரம்மாஸ்த்ரம் ஒருபோதும் நிலைத்திருக்கமாட்டாது. யுத்தத்தில் உனக்கு ஸமமான க்ஷத்ரியன் பூமியிலிருக்கமாட்டார்கள்'' என்று சொன்னார். ஆகையால் பொய்சொல்லி ஒரு காரியத்தை சாதிப்பது எப்போதுமரிது.

ராமச்சந்திர ஹரி:

## வெளியூர்ச் செய்திகள்.

### திருவிடமருதூர்.

நியமாத்யயன பாடசாலை.

சென்ற ஐந்துவருடங்களாக சாமமே உருவெனத்தோன்றும் லோகோத்தர சிஷ்ய ஸம்பத்துடன் கூடின பிரம்மஸ்ரீ உபயவேதி விச்லேச்வர சாஸ்திரிகளால் போஷிக்கப்பட்டு வந்த ஸ்ரீ ஜோதிர்மய மகாலிங்க சுவாமி நியமாத்யயன பாடசாலை அம்மகானின் வியோகத்திற்கு பிறகு அவர்கள் உத்தம சிஷ்யர்களான பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சிரௌதிகள், பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகள் இவர்களால் சாமவேதம் யஜுர்வேதம் கற்பிக்கப்படுவது யாவரும் அறிந்த விஷயமே. இரு வேதங்களிலும் நிகரற்று விளங்கிய அம்மகானுபாவரின் வியோகத்தினால் தை மாதம் நடக்கவேண்டிய இப்பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் இவ்வருடம் ஆடிப்பூரத்தன்று மாலை 4-மணிக்கு ஸ்ரீ ஸ்வாமி கோயிலில் இப்பாடசாலையின் ஒரு பிரிவாக முடிகொண்டானில் விளங்கும்காலம் சென்ற இப்பெரியாரால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்கள் முக்ய சிஷ்யர் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சிரௌதிகளால் அத்யயனம் செய்விக்கப்பட்டு வருகின்றதுமான பாடசாலையை ஆதரிப்பவருள் ஒருவரான மகா-ா-ா-ஸ்ரீ M. ராமய்யர் அவர்களின் தலைமையின் கீழ் நடந்தேறியது. அவ்வமயம் பிரம்மஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகளால் இப்பாடசாலையின் 5-ம் வருஷத்திய வரவு சிலவு கணக்கு படிக்குப்பட்டு ஸ்ரீ அம்பிகை சன்னதியில் சபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு திருக்கருகாவூர் மகா-ா-ஸ்ரீ T. L. சுப்பய்யர் அவர்கள் வேதமும் ஆசாரமும் என்பதைப்பற்றி நன்கு தத்துவார்த்தங்களுடன் உபந்யஸித்தார்கள். அதாவது ஞானத்தை புகட்டக்கூடியதும், ஸ்ரீ பரமேஸ்வரனால் அருளப்பட்டதுமான நம் வேதமானது பரம புருஷார்த்தங்களுக்கும் சாதனமென்றும், ஆகையால் நாம் நியமமாக ஆசாரத்துடன் அவர் அவர்களுக்குண்டான சாகையை அத்யயனம் செய்து அதில் சொல்லிய கர்மாக்களை சிரத்தையுடன் செய்ய வேண்டுமென்றும், அவ்விதம் செய்வது நமக்கு இகபர சாதகத்திற்கு ஹேது என்றும் இக்காலத்தை யனுசரித்து நம் ப்ராசீன ஆசாரங்களை சயன்ஸ் மூலம் பார்த்தாலும் நம்மவர் நன்மைக்கே அது ஆகிறதென்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டி (அயல் நாட்டார்) உள்படநம் ஆசாரங்களை புகழ்கிறார்கள் என்றும், ஆகையால் நாம் முன்போல் அதைக் கொண்டுவரவேண்டுமென்றும், அதுவே நம்மவரின் கடமையென்றும், இந்த வேதமார்க்கத்தை செம்மைபடுத்தவே பிரம்மஸ்ரீ காலஞ்சென்ற சாஸ்திரிகள் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டார் என்றும் அவர்களின் பெருமையையும் இப்பாடசாலையின் பெருமையும்கூறி இனி ஆஸ்திகர்களாகியநாம் இப்பாடசாலையின் அபிவிருத்தியில் ஈடுபடவேண்டுமென்றும், அதற்கு ஸ்ரீமகாலிங்கஸ்வாமி அருள்புரிவாராக என்று உபன்யஸித்து முடித்தார்கள்.

பிறகு தலைவர் முடிவுரைகூற வந்தனோபசாரம் கூறி, சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறியது.

A. ராமசர்மா,

## கலிகால விந்தை.

### ஐயங்கார் ஐயரானார் ஐயர் மத்வரானார்

மதமாற்றம் பிற்று விசேஷமாயுள்ள தற்காலம் அவை கூடாதென எதிர்ப்பிரசாரம் பலமாயிருப்பதும் நியாயமென்பதற்கையமில்லை. முஸ்லீம் கிருஸ்தவர்களை இந்துவாக மாற்றுவதாக ஆர்யசமாஜிகள் ஆர்ப்பாட்டம் செய்துவருவதும் யாவரும் அறிந்ததேயாம். பிராமணர்களுக்குள் ஜாதிமாறும் விந்தையான செய்கை நடைபெறுவதாயிருப்பது குறிப்பிடத்தக்கதாம். கர்னூலில் நியாயாதிபதியாயுள்ள ஸ்ரீமான் ராமஸாமி ஐயங்கார் என்பவர் சமீபத்தில் ராமஸாமி ஐயர் என தன் பெயரை கெஜட்மூலம் மாற்றிக்கொண்டதுடன் ஸ்மார்த்த சம்பிரதாயத்தையே அனுஷ்டித்து வருவதாயும் தெரிகிறது. நாக்பூரிலுள்ள உபாத்தியாயர் (புரோகிதர்) ஐயங்காராயிருந்தவர் ஸ்மார்த்த சம்ப்ரதாயத்தை அனுசரித்து விபூதி பூசிக்கொண்டு உபாத்யாயம் செய்து வருவதையும் மேற்படியாரின் நடவடிக்கையை கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் கண்டித்து புத்திமதி கூறியதாயும் சொல்லப்படுகிறது. தவிர மதராஸில் ஓர் பிருகசரண (ஐயர்) பிராமணர், மத்வராக ஜாதி மாறியதாகவும் பிரஸ்தாபமாயிருக்கிறது. பிராமணர்களுக்குள்ளேயே ஜாதிமாற்றம் வைபவம் நடைபெறுவதாய்த் தெரிவது கலிகால விந்தையேயென யாவராலும் பேசிக்கொள்ளப்படுவதாயும் பெரும் பிரஸ்தாபமாயிருப்பது குறிப்பிடத்தக்கதாம்.

யதார்த்தவாதி.

## திருவல்லிக்கேணி.

வேதப்ரவசனம்.

எம். ஏம். அநந்தராயர் எழுதுகிறார்.—

பஹுதான்யஹு ஆடிமீ 21உ வியாழக்கிழமையில் மேற்சொல்லப்பட்ட கார்யாலயத்திற்கு வேதப்ரவசனத்திக்காக 56 வைதிகப்ராஹ்மணர்கள் வந்தனர். வேதப்ரவசன பிற்பாடு ஒவ்வொருவருக்கும் ஸன்மானம் செயப்பட்டது.

## 'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0

தபால் சிலவு பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.

215244

## ஆத்தன்குடி.

### ஸநாதன தர்ம மஹாசபையின் ஐந்தாம் ஆண்டு நிறைவுவிழா.

வெகுதானிய-ஞு ஆடி-மீ 21உ இந்த ஸபையின் ஐந்தாவது ஆண்டு நிறைவுவிழா தேவகோட்டை வழக்கறிஞர் பிரம்மஸ்ரீ T G. நாகரத்தின சாஸ்திரிகள் B.A., B.L., தலைமையில் திருவாளர் ராம. குமு. சு. வேதபாடசாலையில், முற்பகல் 9மணிக்கு, முத்து ஸ்கூல் மாணவர்களால் கடவுள்வாழ்த்துப் பாடப்பெற்று ஆரம்பமாயிற்று. சபையின் உபதலைவர், சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் வந்தனோபசாரப் பத்திரம் படித்து வரவேற்புரை நிகழ்த்தியபின்னர், தலைவரவர்கள் முகவுரையில் ஸநாதன தர்மத்தின் கொள்கைகளையும், அதன் மேன்மைகளையும் யாவரும் இன்புறுமாறு விளக்கி, தற்காலநிலையில் ஸநாதனிகள் ஒன்றுபட்டு, கிராமங்கள்தோறும் ஸபைகள் நிறுவி வேலைசெய்யவேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவுரை நிகழ்த்தியபின்னர், முக்கியமான 10 தீர்மானங்கள் தலைவரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் புனர் ஜன்மா, நித்தியகர்மா, காயத்ரீ, பாலருவாயர், கீதாதத்வம், ஆலய வழிபாடு, ஸ்வதர்மானுஷ்டானம், நமது நிலை, சைவத்தின் மாண்பு, என்பனபற்றி தேவகோட்டை வித்வான் நா. கிருஷ்ணசாஸ்திரிகள், திருவாவுகூடல் திருப்பணியாளர் பிரம்மஸ்ரீ A. V. சேஷகிரி சாஸ்திரிகள் தஞ்சாவூர் வித்வான் பிரம்மஸ்ரீ தியாகராஜ சாஸ்திரிகள், தேவகோட்டை சிவநேசச் செல்வர், பாலகவி வயிநாகரம் வே. இராமநாதம்செட்டியாரவர்கள், குனறக்குடி வித்வான் N. சுப்பிரமணிய சாஸ்திரிகள், தேவகோட்டை திருவாளர் கரு. கி. சொர்ணநாதன் செட்டியாரவர்கள் திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ T. L. சுப்பையாவர்கள் B.A., B.L., பாரதமித்திரன் ஆசிரியர் திருவாளர் ஆ. சத்திவேற்பிள்ளையவர்கள், காரைக்குடி, செட்டிநாடு ஜெனரல் மானேஜர் சிவநேசச் செல்வர் சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள் முறையே விரிவாகவும் அழகாகவும் உபந்நியசித்தும் இடையிடையே கோநகர் கற்பக விநாயக கலாசாலை தேவாா ஆசிரியர் இருவர் தேவாரம் பாடியும் சபையை மகிழ்வித்தார்கள். தலைவரவர்கள் முடிவுரை பகன்றபிறகு திரு. சு.வீர. கதிரேசன் செட்டியாரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று இரவு 11 மணிக்கு சபை இனிது நிறைவெய்தியது.

காரியதரிசி
M. திருவேங்கடமய்யங்கார்.

## திருச்செந்தூர் தேவஸ்தானம்.

### டிரஸ்டி சூப்ரண்டு தகராறு.

(நமது விசேஷ நிருபர்.)

திருச்செந்தூர், ஸ்ரீசுப்பிரமண்ய ஸ்வாமி கோயில் நிர்வாக சம்பந்தமாய் ஷை கோயில் டிரஸ்டி சூப்ரண்டெண்ட் இருவருக்கும் பலமான அபிப்பிராயபேதமுண்டானதாயும் அதன் மேல் சூப்ரண்டால் டிரஸ்டி மீது பல புகார்கள் கூறி சென்னை ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டுக்கு ரிபோர்ட் அனுப்பப்பட்டதாயும் போர்டாரால் டிரஸ்டி சஸ்பெண்டு செய்யப்பட்டிருப்பதாயும் தேவஸ்தானக்கமிட்டியாரும் போர்டாரும் இது விஷயமாய் தீவிரமாய் விசாரணை செய்து வருகிறார்களெனவும் சொல்லப்படுகிறது.

## தனியே சினிமா சென்ற மாது காது பறிபோயிற்று.

ஸ்ரீ வைகுண்டத்தில் நடைபெறும் ஹரிச்சந்திர மயானகாண்டம் சினிமாவைப்பார்க்க தனிமையில் சென்ற ஓர் மாது திரும்பி வீடு செல்கையில் அவளைத் தொடர்ந்து சென்ற திருடர்கள் திடீரென காதிலிருந்த நகையைக் கருதி காதை அறுத்துவிட்டதாயும் பெண்பால் கூக்குரலிடவே முன்பின் செல்வோர் ஓடிவரவும் கள்வர் சாமானை எறிந்துவிட்டு ஓடிவிட்டதாயும் சொல்லப்படுவதுடன் தனிமையில் பெண்பால் தனித்துச்செல்வதால் சங்கடமேயெனவும் பேசிக்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கதாம்.

ந. வி. கி.

## தேவஸ்தானக் கமிட்டிக்கு போர்டாரின் நோட்டீஸ்.

திருநெல்வேலி தூத்துக்குடி தேவஸ்தானக் கமிட்டிகளை ஏன்கலைக்கக்கூடாதென்பதற்குக் காரணமிருந்தால் தெரிவிக்கவேண்டுமெனக் குறிப்பிட்டு சென்னை ரிலிஜியஸ் போர்டார் இரு தேவஸ்தானக்கமிட்டிக்கும் நோட்டீஸ் அனுப்பியிருப்பதாய்த் தெரிகிறது. நெல்லை ஜில்லா பெரிய தேவஸ்தானங்களான திருச்செந்தூர், சங்கரநயினார் கோவில், திருநெல்வேலி, நெல்லையப்பர், குற்றாலம், ஆழ்வார் திருநகரி முதலான ஆலயங்களை நோட்டிபிகேஷன் மூலம் போர்டின் நேர் மேல்பார்வைக்கு எடுத்துக்கொள்ளவும் ஜில்லா போர்டுகள் போல் இரு தேவஸ்தானக்கமிட்டியையும் ஒன்றாக இணைத்து தேர்தல் நடத்தவும் சர்க்கார் யோசனை இருந்து வருவதாயும் சொல்லப்படுகிறது.

நமது விசேஷ நிருபர்.

## திவான்பகதூர் K.S. ராமஸ்வாமிசாஸ்திரிகள்

சென்ற 3—8—38 புதன்கிழமைதினம் பிரம்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுடைய ஷஷ்டி அப்தபூர்த்தி தினமானதால் நாகப்பட்டிணம் ஹிந்துமதாபிமான சங்கத்தின் ஆதரவில் அங்கத்தினர்களுடைய கூட்டம் ஒன்று ஸ்ரீசட்டநாதஸ்வாமி கோவிலில் நடைபெற்றது. ஸங்கத்தின் தலைவரும் நாகை அட்வொகேட்டுமான பிரம்மஸ்ரீ P-S. சிவராமய்யர் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள்.

நாகப்பட்டிணத்தில் உத்யோகமுறைமையில் இருந்தகாலத்தில் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் ஸங்க விஷயமாக வெகுவாக ஆதரவு காட்டியும் ஸங்கத்தின் ஆதரவில் பல உபன்யாசங்கள் செய்ததுடன் மூன்று வருஷோத்சவங்களுக்கு அக்ராசனம் வகித்தும் நடத்தி வந்திருப்பதுடன் பிறகும் ஸங்கத்தில் மிகுந்த அன்பு பாராட்டி வருகிறார்கள் என்றும் ஸநாதன தர்ம பிரசாரத்தில் ஈடுபட்டு அது சம்பந்தமாக மிகுந்த சிரத்தையுடன் பாடுபட்டு வருவதானது மிகவும் புகழத்தக்கதென்றும் தெரிவிக்கப்பட்டு அது சம்பந்தமாக தீர்மானங்கள் செய்யப்பட்டும் அவர்கள் இன்னும் த்ருடகாத்திரத்துடன் ஸநாதன தர்மத்திற்கு பாடுபடவேண்டி தீர்காயுசை அவர்களுக்கு அளிக்கும்படி ஸ்ரீசட்டநாத ஸ்வாமி ஸந்நிதானத்தில் அர்ச்சனை செய்து தீர்மானமும் ஈச்வர பிரசாதமும் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

நாகபட்டிணம் } N. ஸாம்பசிவ அய்யர்
14—8—38. } B.A., B.L.

## ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்.

கும்பகோணம் ஆதி வராஹப்பெருமாள் கோவிலில் பிக்ஷாண்டார்கோவில் ஸ்ரீமத் ராமாயண கதாம்ருத வருஷக ப்ரம்ம ஸ்ரீபாகவத கௌஸ்துபம் கோபாலபாகவதர் அவர்களால் (17-6-38) முதல் தனது குமாரர்கள் பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் பின்பாட்டுடன் ஆரம்பம் செய்யப்பட்டு நடத்திவந்த ஸ்ரீராமாயண ஸீரியஸில் 7-8-38 ஞாயிற்றுகிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீ ராம பட்டாபிஷேக சரித்திரம் விமர்சையாக நடத்தப்பட்டது. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்து பாகவதர் அவர்களுக்கு பல சன்மானங்கள் செய்தார்கள்.

காஷ்மீர தேசத்திலிருந்து அனுப்பிய சால்வையை கோவாபரேடிவ் பாங்கு இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி ஐயங்காரவர்களால் பாகவதர் அவர்களுக்கு சன்மானம் செய்யப்பட்டது. 8-8-38 திங்கள்கிழமை விடையாத்தி உத்ஸவத்தில் G. பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்களால் சுபத்திரா கல்யாண காலக்ஷேபம் விமர்சையாக நடத்தப்பட்டது

ஒரு நிருபர்.


## பொதுஜன வைத்திய உதவி.

டாக்டர் தேவையில்லை.

20ஞு அனுபவம் பெற்றது. குறைந்தசிலவில் சிறந்தகுணம், தினசரி ஏற்படும் 10, விதமான நோய்களுக்கு 8, வித செ. ஔஷதங்கள் எந்த செ. மருந்தும் 3 அணாதான். அது 40. கேசுகளுக்குப் போதுமானது. அனுபவத்தில் அதிசய குணம் காணலாம்.

தயாரிப்பவர்:— J. & J. டீசேன் ஹைதராபாத்,
ஏஜண்டு T. R. கோபாலய்யங்கார்,
12. பாணாதுறை சந்நதி கும்பகோணம்.
மற்றவிபரம் தபாலின் மூலம்.

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.

(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.

## ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்

(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர்வர்களால் மூலத்திலுள்ளபடியேசுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணா 0 8 0

## மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.

"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

[illegible]

25 - 8 - 1938

[illegible]

4

23 33

[illegible]

215245
OFFICE OF THE REGISTRAR OF BOOKS 1938 MADRAS
453

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 / 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்ய-ஞு ஆவணி-மீ 9உ 1938ஞு ஆகஸ்டு-மீ 25உ | வ 33

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0. தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## கமலாதேவி கைதியானாள்.

திருவாங்கூர் நடவடிக்கை.

பிரபல அபேதவாதினியான கமலாதேவி என்பவள் திருவாங்கூர் ஸமஸ்தானத்திற்கு வர முயற்சித்தாள். ஆனால் அந்த ஸர்க்கார் தடை உத்திரவு போட்டு அந்த ஸமஸ்தான எல்லைக்குள் நுழையக்கூடாதென்று தடுத்தார்கள். இந்த உத்திரவை அந்த அம்மாள் மீறிய காரணமாகக் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டாள். கேஸ் சீக்கிரம் விசாரணையாகும்.

## ராஜேந்திரரும்—பஜாஜும்.

ரமணாச்ரமத்திற்கு விஜயம்.

காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீமான்கள் ராஜேந்திரபிரஸாதும், யமுனாலால் பஜாஜும் திருவண்ணாமலையிலுள்ள ரமணாச்ரமத்திற்கு வந்து ரமண ரிஷியை தர்சித்துவிட்டு அங்கு 4 நாள் தங்கியிருந்தார்கள். இவர்களுக்கு அந்த ரிஷியிடம் பக்தி அதிக முண்டாம்.

## புனாவில் தீண்டாதாரின் துராக்ரஹம்.

பம்பாய் ஸர்க்கார், ஹோட்டல்கள் விஷயமாகப் பிறப்பித்துள்ள உத்திரவு காரணமாக புனாவில் ஹோட்டல்களுக்கு ஸங்கடம் விளைந்திருக்கிறது. ஹோட்டல்களில் வேலை செய்கிறவர்கள் தீண்டாதாருக்குப் பரிமாற மறுத்துவிட்டார்களாம். கட்டிடச் சொந்தக்காரர்கள் ஹோட்டல் வைக்கப்பட்டுள்ள தங்கள் வீடுகளில் தீண்டாதார் நுழைவதை அநுமதிக்கவில்லையாம். இதன்மேல் தீண்டாதார் கூட்டமாக ஹோட்டல்களில் நுழைய துராக்ரஹம் செய்கிறார்களாம். இவ்விஷயமாக ஹோட்டல்காரர்கள், பிரதம மந்திரியான கனம் பாலகங்காதர கேர் அவர்களிடம் தூதுசென்று தங்கள் கஷ்டங்களை எடுத்துக்கூறினார்கள்.

பலாத்காரமாகக் கூட்டம்போட்டு ஹோட்டல்களில் நுழைவதைத் தாம் கண்டிப்பதாக மந்திரி கூறினார்.

## பிரபல ஸநாதநியின் மரணம்.

சென்னையில் பிரபல ஸநாதனத் தலைவராக விளங்கிவந்த ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியர், பி. ஏ., பி. எல்., அவர்கள் சில தினங்களுக்கு முன் காலஞ்சென்றதை அறிந்து விசனிக்கிறோம். ஸ்ரீமான் ஆசாரியர் அகில இந்திய பிராம்மண ஸபை, வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸபை முதலிய ஸ்தாபனங்களில் சேர்ந்து உழைத்து வந்தார். அவ்வப்போது பத்திரிகைகளில் தர்ம விருத்த மசோதாக்களைக் கண்டித்தும் எழுதி வந்தார். சில வருஷங்கள் மதஸ்தாபன போர்டுக் கமிஷனராகவுமிருந்தார். இவருடைய மரணம் ஸநாதநிகளுக்குப் பெரிய நஷ்டமாகும்.

## "விடுதலை" தண்டனை ஊர்ஜிதம்.

அபராதம் குறைவு.

நீடாமங்கலம் பிரபல மிராசுதார் ஒருவர் தீண்டாதானை அடித்து அவமானப்படுத்தியதாக அவதூறு செய்த வழக்கில்விடுதலைப் பத்திரிகைக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனை தஞ்சை ஜில்லா கோர்ட்டில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் அபராதம் குறைக்கப்பட்டது.

## த்வஜஸ்தம்பம் வரையிலாவது விடவேண்டும்.

ஆலயபிரவேசம்பற்றி ஸ்ரீ பஜாஜ்

திருவண்ணாமலைக்கு வந்திருந்த காங்கிரஸ் பொக்கிஷதாரும், காந்திஜியின் அந்தரங்க சிஷ்யருமான ஸேத்யமுனாலால்பஜாஜ் அவர்கள் திருவண்ணாமலைக்கோவிலில் ஆலயப் பிரவேசத்தைப்பற்றி ஓர் பிரஸங்கம் செய்தார்.

தீண்டாதார் பிரவேசத்தால் தெய்வத்தின் ஸாந்நித்யமோ, சக்தியோ குறையாதென்றும், தெய்வத்தின் முன்பு எல்லா மனிதர்களும் ஸமமென்றும், ஆலயப் பிரவேசம் சாஸ்திரீயமென்று பல பண்டிதர்கள் அபிப்பிராயப்படுவதாயும், ஒருக்கால் கர்ப்ப கிரஹம் வரையில் அநுமதிக்கப் பொதுஜனங்களுக்கு இஷ்டமில்லையானால் த்வஜஸ்தம்பம் வரையிலாவது [illegible] அநுமதிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

## ஆந்திரமாகாணம் ஏற்பட சென்னை ஸர்க்கார் சிபார்சு.

ஆந்திரர்கள் செய்த பெரும் கிளர்ச்சி காரணமாக சென்னை ஸர்க்கார் இந்தியா மந்திரிக்கு ஆந்திர மாகாணத்தைத் தனியாகப் பிரித்துவிடும்படி சிபார்சுசெய்து எழுதியிருக்கிறார்களாம்.

## பம்பாயில் விவாஹ மசோதாக்கள்.

பம்பாய் சட்டஸபையில் விவாஹச் சீர்திருத்த விஷயமாக அநேக மசோதாக்கள் வருகின்றன. விவாஹ ரத்து, மறுமணவிவாஹத்தடை, விவாஹ ஏற்றத்தாழ்வுத் தடை, பிற மதம் மாறியவர்களைப்பற்றிய விவாஹ சீர்திருத்தம் போன்ற மசோதாக்களை மெம்பர்கள் கொண்டுவர நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

## கிரிமினல் திருத்தச் சட்ட ரத்து மசோதா. தோற்றுப்போயிற்று.

சென்னை சட்டசபையில் ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாசாரியர் கொண்டுவந்த ஷை மசோதாவை கனம் பிரதமமந்திரி எதிர்த்தார். அந்தச் சட்டத்தை ரத்துசெய்ய காங்கிரஸ் மந்திரிகள் தயாராக இருப்பதாயும், ஆனாலும் தற்போதைய நிலைமையில் அதை ரத்துசெய்ய முடியாதென்றும் மந்திரி கூறினார். கடைசியாக தீர்மானம் தோற்றுப்போய்விட்டது.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## கலியின் கூத்து.

ஞான திருஷ்டியால் பின் நடக்கப் போவதை முன்னறிந்து கூறும் தன்மைான் வாய்ந்த ரிஷிகள் பல கிரந்தங்களில் தர்மம் பலவிதமாய் கலியில் சீர்குலையுமென்றெழுதியுள்ளார்கள். அவர்கள் கூறியது உண்மையாயிருப்பதை கீழ்குறித்த நிதர்சனங்களால் தெரிந்துகொள்ளலாம்.

1. நியாயவாதிகள், பணப் பற்றில்லாமலும், தன்னைச்சேர்ந்த கக்ஷி, எதிரிகக்ஷி என்று வேறுபாடில்லாமலும் வாதிக்கவேண்டியிருக்க, மனச்சாக்ஷியை துட்டுக்கு விற்றோ, மறைத்துவைத்தோ, "தான்பிடித்த முயலுக்கு மூன்றே காலெ"ன ஆடம்பரமாய் வாதத்தில் வெல்லும் திறமை வாய்ந்தவர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் நியாய சபையிலும், இராஜ சபையிலும் அமரின், காரியங்களை செய்யவும், செய்யாமலிருக்கவும், மாறிச்செய்யவும் இடமேற்படும். நியாயவாதிகளென்ற பேருக்கு இவர்கள் உரித்தானவர்களோ ?

2. நடை, உடை, பாவனைகளால் ஒருவரை ஒரு தேசத்தார், ஓர் குலத்தார் என்று மதிப்பது இயல்பு. இந்த விஷயங்களில், இதாநாட்டார்களைக் கண்ணுற்ற மாத்திரத்தில், அவர்களின் பழக்க வழக்கங்களில் மூழ்கி, அவைகளைச் சிறிதும் வெட்கமின்றி பின்பற்றும் சில இந்தியர்கள், தாங்கள் 'ஸ்வ' தேசத்திற்குப் பாடுபடுவதாய்ச் கூவுகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களை ஜன சாமானியர்கள் முன்பின் யோசியாமல் உயர்த் தூக்குகிறார்கள் அவர்கள் தேசபக்தர்களோ?

3. சாதாரண ஜீவனமும் ஆழ்ந்த யோசனையும் (Simple living and high thining) கூடியிருந்த நம்மவர்கள் "உயர்தர ஜீவனமும் ஞானமும்"(High living and simple thinking) உள்ளவர்களானார்கள். "போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்தெ"ன்றிருந்த நம்மவர் ஜீவனத்திற்கு தற்காலம் மிதமேயில்லை. இதன் முடிவு சதா அஸந்தோஷம் திருப்திக் குறைவு.

4. வியவஸ்தை கெட்டு அவஸ்தை மேலோங்கலாயிற்று. வியவஸ்தைகளின் உட்கருத்து அறியத் திராணியற்ற பண்டித மானிகள் அவ்வியவஸ்தைகளைச் சீர்குலைக்க முயலுகிறார்கள். இகத்திற்கும், பரத்திற்கும் நிலைத்திருக்கக் கூடிய தம்பதிகளின் வியவஸ்தையை, ஸிவில் கண்டிராக்டாக மாற்றி இஷ்டப்படி ரத்துசெய்யக் கூடிய எண்ணிறந்த அவஸ்தைக்கு ஹிந்து சமூகத்தையும் உள்ளாக்க முயலுவர்களை படித்தவர்களாகக் கருதலாமேயல்லது, நுட்ப புத்தியுடன் ஸநாதன வியவஸ்தையின் கருத்தை உணர்ந்து படித்தவர்களெனக் கருத இடமில்லை. வியவஸ்தையின்கண் ஒழுகவேண்டுமென ஔவை தனது முதற் சூத்திரத்தில் "அறஞ்செயவிரும்பு" எனக் காட்டியுள்ளார். (அறம்=வரையறுக்கப்பட்டது.)

5. தொழிற் சாலைகளின் அமைப்புகள் நாட்டிற்கு வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணமாயின. அனேக ஏழைகள் கூலி செய்துவரும் வேலையை, சொற்ப சிலவில் இயந்திரங்கள் செய்துமுடிக்கின்றன. ஏழைகள் பிழைக்க வழியில்லை.

இயந்திரங்களின் இபக்கத்தின் பலன் வேலையில்லாக் கஷ்டத்தை மறைவாக வெளியிட்டாலும், நொண்டி, முடம் முதலிய அங்க ஹீனர்களின் சங்கியையாலும், அகாலமரண சம்பவங்களாலும்,வெளிப்படையாய்க் கஷ்டமென்றே வெளியாகிறது.

6. தருமத்தைத் தருமத்திற்காக வேலை செய்வதற்குப் பதிலாக,பேரும் பிரதிஷ்டைக்காக வேலைசெய்யும் ஜனங்கள் பலர் ஏற்பட்டுள்ளார்கள். அனேக பெரிய தேவாலயங்களில் கட்டிவைத்தவர்களின் பெயர்களைக் காணோம். தற்கால நாகரீகத்தில் இரண்டு ரூபா சிலவுசெய்து தண்ணீர்த்தொட்டி அமைப்பவன் தன் பெயரை சிறப்பாய் வெளிப்படுத்துகிறான். சுயநயத்திற்கல்லாது பாடுபடுதலென்பது பேரும் பிரதிஷ்டைக்கு இடங் கொடாமலிருப்பதுதான். இப்பேர்ப்பட்டவர்களின் சங்கியை குறைவே.

விரிக்கின் வளரும், ஸநாதனிகள் மேற்கண்ட சிரமங்களேற்படாமல், காத்துக் கொள்வார்களாக.

A. வெங்கடராமய்யர்.

## வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீவத்ஸ. வெ. ஸௌ. சர்மா.)

வடக்கே அதிவிருஷ்டி! புராணங்கள் கூறுமாறு ஆங்காங்கு அதர்மங்கள் அதிகமாகின்றன. அதற்கேற்ப அதிவிருஷ்டி அநாவிருஷ்டி முதலிய ஈதிபாதைகளுடன் பற்பல நோய்களும் கிளம்புகின்றன. இது அதர்மத்தினால்தான் என்ற புத்தியும் எது, தர்மம், எது அதர்மம் என்றபுத்தியும் பொதுமக்களுக்குண்டாகும்படி செய்வது நம் கடமை.

சேலத்தில் யக்ஞத்தால் மழை! இவ்வாண்டு சேலம் ஜில்லாவில்ஏதாபூரில் இரண்டு மஹாக்ருதுக்கள் மிக மிக விமர்சையாய் நடந்தன என்றும் காணாத பிராமணக்கூட்டம் வித்வத்ஸபை அன்னதானம் இதன் பலன் வேண்டிய அளவு ஸுபிக்ஷமான மழை பெய்தது என்பது ஆங்குள்ள பொது ஜன வாக்கு.

ராஜதந்தரம் போலும்! சைனாவில் அடிபட்டோருக்கு உதவி செய்ய இந்தியாவிலிருந்து தேசிய தலைவர் ஓர் வைத்ய படையை அனுப்பினர். உலகத்தவர்முன்னே விடுதலைக்குப் போராடும் இந்தியாவும் ஓர் உதவி செய்தது என்ற எண்ணம் தோற்றிவைப்பது நல்லதே. இங்கு வைத்ய உதவி இல்லாமல் தவிக்கும் குக்ராமங்களுக்கு நம்முறையில் உதவிபுரிய எவரும் முன்வரவில்லை என்பதே நமது குறை.

மரணத்தை மீறமுடியாது பிறக்காவிடில் இறக்காதிருக்கலாம். பிறப்புமிறப்பும் மனிதர் கையில் கட்டுப்பட்டதல்ல. டாட்ஜ் எனும் மோட்டார் வாஹன 'சொந்தக்கார கோடீச்வரர் ஒருவர் விவாஹமான மாதத்தில் ஓர் வெடி விபத்திலகப்பட்டு சிகித்ஸைக்காக செல்லும்போது படகு கவிழ்ந்து அவர் மாத்திரம் கடலில் மூழ்கி இறந்தார். நாஸ்திகருக்கோர் பாடமிது.

பலர் கற்கவேண்டிய பாடம் நன்னிலத்தில் ராஜவீதியில் மசூதி கட்ட மஹம்மதியர் உத்திரவு கேட்க கலெக்டர் அது சிவ விஷ்ணு ஆலய ரதவீதி. மசூதி கட்டில் பின்னர் வாத்யம் கூடாதென வீண் சண்டை வளரும் ஆதலின் வேறிடத்தில் மசூதி கட்டுங்கள் என உத்திரவிட்டார். இங்ஙனமதிகாரிகள் முன்யோசனையுடன் கார்யம் செய்தால் பல வீண் சண்டைகளகலும்.

நல்ல உபதேசம்! தேசத்தலைவர் ராஜேந்த்ர பாபு சிறந்த மதாபிமானியாகவும் காணப்படுகிறார். வழி எதாயினும் தற்சமயம் தென்னாட்டில் அரவிந்தாச்ரமம் ரமணாச்ரமம் முதலிய இடங்களுக்கு சென்று தர்சித்துவருகிறார். வடநாட்டுப் பத்ரிகையில் தேசியவாதிகளின் டாம்பிகத்தைக் கண்டிப்பதுடன் ஜெயில் சென்றதுபோன்ற தியாகங்களை மிகப் படுத்திப்போற்றி திரியாதே என பல உபதேசங்கூறுகிறார்.

பலருக்குப் பிடிக்கவில்லை! ஆதலின் இவரைப் பலர் தக்கபடி வரவேற்கவில்லை, உடன் சுத்தவுமில்லை. இதனால் தேசிய ஸபையின் பிற்போக்கு எப்படி இருக்கிறதென்றறியலாம்?

வளத்த கிடா மாரில் பாயும்! என்பது பழமொழி! அபாத்ரத்தில் தானம் கூடாதென்பது இதன் உட்கருத்து. ராஜாஜி பஞ்சமருக்குப் பரிந்து பேசப் பேச அவ்வினமே இவரைத் தாக்குகிறது. படித்த பஞ்சமரும் காலிகளும் இருவகையிலும் தாக்குகின்றனர். ஐயோ! பாவம்!!

பகிஷ்கார பிரசாரமே வழி!! ராஜாஜி ஆலயப்ரவேச விஷயமாக தனது வேலையை வெளியிட்டுவிட்டார்!! எந்த ஜில்லாவில் அவர் பரீக்ஷை ஆரம்பிக்கிறாரோ அங்கு பலத்த பிரசாரம் செய்து ஒருவர்கூட கோவிலுக்குப் போகாதபடி செய்தால் அதே தக்க பரிஹாரமாகும்!!

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி! ஸ்ரீ கிருஷ்ணாவதாரதினத்தில் சென்னை ஸ்ரீ சங்கரமடம் மைலாப்பூர் அகரம் என்ற இடங்களில் பகவத் ஸ்வரூபம் அவதார மஹிமை அவர் கூறிய தர்மம்! நமது கடமை முதலியன அமரகலாவிலாஸினி ஸபைத்தலைவரால் நன்கு உபன்யஸிக்கப்பட்டது!

## ஹிந்தி எதிர்ப்புக்காராகளுக்கு தண்டனை.

சென்னை சட்டஸபையில், ஒரு மெம்பர் ஹிந்தி எதிர்ப்புக்காரர்களை தண்டிக்கும் விஷயமாக ஒரு தீர்மானம் கொண்டுவந்து, இந்தக் கொள்கையை சென்னை ஸர்க்கார் விட்டுவிடவேண்டுமென்று பிரேரேபித்தார். பலர் இதை ஆமோதித்தனர். வேறு பலர் எதிர்த்தனர். பிரதம மந்திரியும், ரவின்யு மந்திரியும் தங்கள் கொள்கையை விளக்கினர். ஹிந்தி எதிர்ப்புக்காரர்களென்பதற்காக அவர்கள்மீது நடவடிக்கை செய்யவில்லையென்றும், துர்பாஷையாக பேசியும், துஷ்டத்தனமாக நடந்தும் விஷமம் செய்கிறவர்கள் மீதே கிரிமினல் சட்ட திருத்தப்படி நடவடிக்கை எடுத்திருப்பதாயும் ஸமாதானம் கூறினார்கள். கடைசியாக தீர்மானம் தோற்றது.

## சென்னை சட்டஸபைகள்.

சென்னை அஸம்பிளியும், ராஜாங்க ஸபையும் கூடி சில முக்ய மசோதாக்களையும், அலுவல்களையும கவனித்துவிட்டுக் கலைந்தன.

அஸம்பிளிக் கூட்டமானது மீண்டும் நவம்பர் 23உயில் கூடும்.

**Srimad Bhagavatham.**

Condensed, translated into english, illustrated by T. R Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 1—4—0
Ordinary and Bound PriceRs. 1—0—0

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிருமய்யரவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 1—4—0
சாதாரண பேபர் ரூ. 1—0—0
7,8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணா.

G. Subramaniam &Co.,
Sri Bhagavatham Publishing House,
Tinnevelly Jn.
Arya Dharmam Office, Kumbakonam.



## ஸாமோபாகர்ம காலநிர்ணயம்.

ஸாமகர்கள் நீண்டகாலமாக அநுஷ்டித்து வருவது காதிர கிருஹ்ய ஸூத்ரம். அதில் "ப்ரௌஷ்டபதீம் ஹஸ்தெநாத்யாயாநுபாகுர்யு:" (3-2-14) என்ற வசனத்தினாலே ப்ரோஷ்ட பதத்தில வரும் ஹஸ்த நக்ஷத்திரங்கள் முக்கிய காலங்களாகவும் "சிராவணீமித்யேகே" (3-2-15) என்ற ஸூத்ரப்படி அதன் பாஷ்யத்தை அநுசரித்து சிராவண பூர்ணிமா அடுத்த பக்ஷகாலமாகவும் ஏற்படுகிறது.

(2) இதில் முக்கியமான ப்ரோஷ்டபத மாஸத்தில் பொதுவாக ஹஸ்த நக்ஷத்திரம் என்றுமட்டும் சொல்லி இருப்பதாலும் ஷை மாதத்தில் இரண்டு நக்ஷத்திரம் (ஒன்று சுக்ல பக்ஷத்திலும் மற்றொன்று கிருஷ்ணபக்ஷத்திலும்) ஏற்படக்கூடுமானதாலும் இரண்டும் காலங்கள் என ஆகும். ஷை பாஷ்யம் இதர ஸ்மிருதிகள் இவைகளை அனுசரித்து ஆவணி மீ சுக்லபக்ஷத்தில் முதலில் வரும் ஹஸ்த நக்ஷத்திரத்தை முக்ய காலமாகவும் புரட்டாசிமீ கிருஷ்ண பக்ஷத்தில நேரக்கூடிய ஹஸ்தத்தை கௌணகாலமாகவும் கொள்ள வேண்டியது.

(3) இது விஷயமாக தர்மசார கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ள வாக்யங்களின் தாத்பர்யமாவது:—ப்ரௌஷ்டபதீம் என்று பொதுவாக குறிப்பிடப்பட்டு இருப்பதால் அதில் ஏற்படக்கூடிய இரண்டு நக்ஷத்திரங்களும் காலங்களாகும். அதில் ஆவணிமீ சுக்லபக்ஷத்தில் முதலில் ஏற்படும் ஹஸ்தநக்ஷத்திரம் முக்கியகாலம் புரட்டாசிமீ கிருஷ்ணபக்ஷத்தில் பிந்தி ஏற்படுவது கௌணம். இரண்டும் ப்ரோஷ்டபதமாசத்தில்தான்" ருத்திரஸ்கந்த காதிர பாஷ்யத்திலும் ப்ரோஷ்டபதமாதத்தில் இரண்டு சம்பவித்தால் முதலில் செய்ய வேண்டியது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

(4) நிர்ணய சிந்துவிலும் சிராவண ப்ரௌஷ்டபத மாசங்களைத் தவிற வேறு சொல்லப்படவில்லை. வைத்யநாததீக்ஷித வர்ணாச்ர தர்மத்தில் "சிம்மபாத்திரபத மாஸ ஹஸ்த நக்ஷத்திரத்தில் தோஷம் சம்பவித்தால் கந்யா மாஸ கிருஷ்ணபக்ஷ ஹஸ்தத்தில் சாமகர்கள் உபாகர்மா செய்கிறார்கள்." என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதில் ப்ரோஷ்டபதத்தில் என்று தாத்பர்யம் கொள்ளவேண்டும். பெரும்பாலும் கந்யாமாஸ கிருஷ்ண பக்ஷ கடைசீ தினமான அமாவாசை ப்ரோஷ்டபத மாஸ கடைசி தினமாகும். இதற்கு முன் புரட்டாசி மாதத்தில் சிஷ்டர்கள் அநுஷ்டித்ததும் இந்தமாதிரி ஏற்பட்ட விஷயந்தான். ஷை கிரந்தத்தில் ஷை பிரகரணத்தில் உள்ள "ஹஸ்தர் க்ஷமுதயே" என்ற சுலோகத்திற்கு இந்தமாதிரி அர்த்தம் செய்வதுதான் ஸங்கதமாகும் என தர்ம ஸாரக்காரரும் அபிப்பிராயப்பட்டு இருக்கிறார். (தர்மசாரம் 1-வது பரிச்சேதம் பக்கம் 30) இவ்வருஷம் அவ்விதம் வேறு நக்ஷத்திரம் இல்லை.

(5) ஆதலால் முக்ய மாசமான ப்ரோஷ்டபதத்தில் முக்கிய காலத்தைத் தவிற வேறு கந்யாமாஸ கிருஷ்ணபக்ஷ ஹஸ்த நக்ஷத்திரம் இல்லாததாலும் மற்றொரு பக்ஷ காலமான சிராவண பூர்ணிமாவில் குஜன் அஸ்தமித்து இருப்பதாலும் ஆசுவயுஜமாதம் கௌணகாலமாக ஒரு இடத்திலும் இருப்பதாக தெரியவாராததாலும் ஆவணிமீ த்தில்தான் செய்ய வேண்டியதாக ஏற்படுகிறது.

(6) இப்படி இருக்க திப்புராஜபுறம் நாராயண சிரௌதிகள் புரட்டாசிமீ 8உ (ஆசுவயுஜமாஸத்தில்) தான் அநுஷ்டிக்க போவதாக தெரிவிப்பது அவர் இஷ்டத்தைப் பொறுத்த விஷயம். ஆனால் தீக்ஷிதர் சொல்லிவிட்டார் என்று சொல்லுவது முற்றிலும் சரியல்ல. ஷை புரட்டாசிமீ 9உ தீக்ஷிதர் சொல்லியபடி அபரபக்ஷ ஹஸ்த நக்ஷத்திரமும் அல்ல. ஸூத்ரப்படி ப்ரோஷ்ட பத ஸம்மந்தமும் இல்லை. ஆனால் ஷை சிரௌதிகளை ஆசுவயுஜ மாத அநுஷ்டானத்திற்கு ஆதாரம் இருந்தால் ஸர்வஜநோபகாரமாக வெளியிடக் கோருகிறேன்.

(7) தவிர ஆவணிமீ குஜனுக்கு அஸ்தமன தோஷம் இல்லை என்றும் அதற்கு ஜோதிஷ ரீதியாக பலம் இருக்கிறது என்றும் ஒருவர் எழுதி இருக்கிறார். அதற்கு வசனம் இருந்தால் அதை வெளியிடவேண்டியதாகும். அல்லாமல் ஜோதிஷ ரீதியாக பலம் கட்டுவது கணித ரீதியாக தீர்மானம் செய்யவேண்டிய விஷயம். குரு கடகத்தில் ஒரு வருஷத்திற்குமேல் தங்க கூடும் அப்பொழுது அஸ்தமன தோஷம் இல்லையா? ஒரு கிரஹத்திற்கு அஸ்தமனத்தினால் அமாவாசை சந்திரன்போலாகி விடுவதாலும் ஷை தோஷத்திற்கு சுவல்ப பலங்கள் நிற்க தகுந்ததல்ல. ஆதலால் ஆவணி மாதத்தில் குஜனுக்கு மௌட்ய தோஷத்திற்கு உசித பரிஹார புரஸ்ஸரம் உபாகர்ம நடத்துவதுதான் சரியென கருகிறேன்.

மு. ந. ஜானகிராமய்யர், முடிகொண்டான்.

## ஸாமோபாகர்மம்.

சென்ற ஆடிமீ இரண்டாவது வாரப்பத்திரிகையில் இந்த வருஷத்திய ஸாமோபாகர்மாவை ஆவணிமீ 12ம்உயில் செய்வதில் சாகாதீசமௌட்டிய தோஷமிருப்பதால் புரட்டாசி மீ 8-ந் தேதி செய்வதாக பத்திரிகையில் தெரிவித்திருந்தேன். பிறகு, தோஷமிருந்தாலும் சாந்தி செய்து ஆவணிமீ செய்வதே தேவலை என்று அனேகம் வித்வான்கள் அபிப்ராயப்படுவதால் எனக்கும் அதுதான் தேவலை என்று தோன்கிறது.

நாராயண ச்ரௌதிகள்.

## ஹிந்துதர்ம வீர ஜதாவின் பிரசாரம்.

குடந்தை காந்தி பார்க்கில் கூட்டம்.

இந்நகர் காந்திபார்க்கில் ஸ்ரீ A. குப்புசாமி அக்ராஸனம் வகிக்க, ஹிந்து மகாஜனங்களின் பொதுக்கூட்டமொன்று 21—8—38 மாலை 6-மணிக்கு நடைபெற்றது. எல்லா ஜாதி மத வகுப்பைச் சேர்ந்த ஆயிரம் ஜனங்கள் வரையில் கூடியிருந்தனர்.

அச்சமயம் திருவானைக்காவல் ஜகத்குரு வித்யாஸ்தானம் ப்ரின்ஸிபல் ஸ்ரீராமா சாஸ்திரிகள், சிரோமணி S. Y. சுப்ரமண்ய சாஸ்திரி, R. நடராஜன், பாஷ்ய பாவக்ஞஸ்மிருதி பூஷண V. S. வெங்கடராம சாஸ்திரி, சேங்காலிபுரம் ப்ரஸங்கபானுவைத்யநாத சாஸ்திரி, ஸ்ரீராமனுஜ தாதாசாரியார் இவர்கள் பேசினார்கள். குறுகிய நோக்கத்தைவிட்டு, பரந்த நோக்கத்துடன் ஹிந்துமதத்தை ஆராய்ந்து,மதசம்பந்தப்பட்ட தர்மாசார ஒழுக்கங்களை ஹிந்து மதவிதிகளின்படி ஆசரிக்க எல்லா ஹிந்துக்களும் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், சட்டசபைகளும் ராஜீயக்கக்ஷிகளும் தங்களுக்கு தோன்றியபடி மதவிஷயங்களில் சட்டங்கள் செய்யக்கூடாதென்றும், ஹிந்துமக்கள் ராஜீய சட்டங்களை காட்டிலும் மதவிதிகளை பெரிதாக மதித்து, அதன்படி மதாசாரங்களை அனுஷ்டித்து வரவேண்டுமென்றும் விரிவாக பேசினார்கள்.

இரவு 8½-மணி சுமாருக்கு அக்ராஸனர் முடிவுரையுடன் கூட்டம் பூர்த்தி அடைந்தது.

ஷை பொதுக்கூட்டத்தை முன்னிட்டு விஜயம் செய்திருந்த தர்மவீர ஜதா அங்கத்தினர்கள் 22—8—38 காலை 4 மணிக்கு திருப்பனந்தாள் முதலான கிராமங்களுக்கு கால்நடையாக பிரயாணமானார்கள். ந. நி.

## திருப்புன்னைநல்லூர்.

திருக்குளத் திருப்பணி

தஞ்சாவூர் அரண்மனை இலாகா தேவஸ்தானங்களில் பரம்பரை டிரஸ்டியும், சத்ரபதி மாக்ஷிமை தங்கிய சிவாஜி மகாராஜா அவர்களின் பிரபௌத்திரரும், சீனியர் பிரின்ஸுமான ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாஹேப் அவர்கள் விசாரணைக்குட்பட்ட சோணாட்டின் தலைநகராகிய தஞ்சை புன்னைநல்லூரில் ஆன்மாக்கள் எல்லோரும் உய்தற்பொருட்டு ஸ்ரீ சதாசிவ பிரமேந்திராால் யந்திரபிரதிஷ்டை செய்யப்பட்டு திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ சர்வலோக சரண்யத் தடங்கருணை பராசக்தியாகிய ஸ்ரீ மாரியம்மன் கோவில் திருக்குளம், மேல்புரம், தென்புரம் படிகள் இடிந்து போயிருப்பதை புதிதாகப் படிகள், மதில்கள் கட்டவேண்டியதற்கு ரூபாய் 9000 ஒன்பதினாயிரம் வரையில் செலவாகக்கூடியதாக இருப்பதாலும் ஷை வேலைகளை செய்துமுடிக்க வேண்டிய தவசியமாக இருப்பதாலும் இதைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவரும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி புரிந்து அம்மையின் திருவருளுக்கு உரியராகும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அன்பர்களுடைய உதவித் தொகைகளை அடியிற் கையொப்பமிட்டவர்களிடமாவது ஷை தேவஸ்தானம் அமீனாவிடமாவது நேரிலாமது மணியார்டர் மூலமாவது கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை, B.A., B.L.,
மானேஜர்—டிரஷர்.
தஞ்சை அரண்மனை தேவஸ்தானங்கள்.

## மதுரை.

பொதுக் கூட்டம்.

20—8—38உயில் மதுரை விக்டோரியா எட்வர்டு ஹாலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1 இந்த ஸாமவேதாபிமானிகளின் கூட்டமானது ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானத்தில் ஸாமவேத பாராயண சம்மந்தமாய் யாதொரு ஏற்பாடு செய்யாமலும் அது விஷயமாய் 1—8—38 தேதியில் அனுப்பிய மகஜரைக்கூட கவனியாமலிருப்பது மிகவும் வ்யசனிக்கத்தக்கதென்று தீர்மானிக்கிறது. 2 மேற்கண்ட தீர்மானத்தை தேவஸ்தானம் எக்சிகூட்டிவ் ஆபீசர், ஹிந்து ரிலிஜஸ் என்டோவ்மெண்டு போர்டு ப்ரசிடெண்டு, கனம் மந்திரியவர்களுக்கும் தெரிவிக்கும்படி தீர்மானிக்கிறது. 3 ஷை விஷயத்தைப்பற்றி மேற்கொண்டு நடவடிக்கைகள் நடத்த அடியிற்கண்டவர்களை ஒரு கமிட்டியாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

1. ஸ்ரீ A. வெங்கிடசுப்பிரமணிய சாஸ்திரியார் (கன்வீனர்). 2. ஸ்ரீ N. S. விஸ்வநாதய்யரவர்கள் அட்வகேட். 3. ஸ்ரீ M. ஈஸ்வரய்யரவர்கள். 4. ஸ்ரீ T.R. கிருஷ்ணசாமி அய்யங்காரவர்கள் அட்வகேட். 5. ஸ்ரீ R. மஹாலிங்கய்யரவர்கள் அட்வகேட்.

Sd.N.S. விஸ்வநாதய்யர், மீட்டிங்கு சேர்மன்.

N.B. மகஜர் தேவஸ்தானம் எக்சிகூட்டிவ் ஆபீசர் போர்டு பிரஸிடெண்டு போர்டு மந்திரி பேருக்கும் அனுப்பியிருக்கிறது.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய-ஹூ ஆவணி-மீ 9உ

## எம். ஸி. ராஜா மசோதாக்கள்.

சென்னை சட்டஸபையில் எம். ஸி. ராஜா என்பவரால் கொண்டுவரப்பட்டிருந்த தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேச மசோதாக்கள் 17உ சட்டஸபைக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுவிட்டன. தீண்டாமை விலக்கு மசோதாவைச் சில திருத்தங்களுடன் நிறைவேற்றிவிட்டு, ஆலயப்பிரவேச மசோதாவை தற்காலிகமாக ஒதுக்கிவைத்திருக்கிறார்கள். மலையாளத்தில் ஒரு ஜில்லாவிற்குமட்டும் ஆலயப்பிரவேச சட்டம் செய்து பரீக்ஷை பார்த்துக்கொண்டு பிறகு மற்றவிடங்களுக்கும் அதைச் செய்யலாமென்று காங்கிரஸ் மந்திரிகளின் உத்தேசமெனச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முடிவிலிருந்து தார்மிகர்கள் அதிகம் கவலையும், பீதியும் அடையவே காரணமிருப்பதாக நாம் நினைக்கிறோம். மத ஸம்பந்தமான கார்யங்களில் பிரவேசிப்பதில்லையென்ற முக்யகொள்கையை காங்கிரஸ் மந்திரிகள் லக்ஷ்யம்செய்யப் போவதில்லையென்பது தெளிவாகிவிட்டது. பெருவாரியாக எல்லாவிடங்களிலும் ஆலயப்பிரவேசச் சட்டம் தற்காலம் செய்யப்படாவிட்டாலும் காலக்கிரமத்தில் அதைச்செய்து தீருவதென்ற பிடிவாதமிருப்பதை பிரதம மந்திரி வெளியிட்டுவிட்டார். மலையாள அநுபவத்தைப் பார்த்துக்கொண்டு மற்றவிடங்களில் செய்ய உத்தேசித்திருப்பதிலும் சிறிது தந்திரம் இருக்கிறது. அங்கு நூற்றுக்கு 75 வீதம் இந்தச் சட்டத்தை ஜனங்கள் ஆதரிப்பார்களென்று மந்திரி எதிர்பார்க்கிறார். மலையாளத்தில் தீண்டாத ஜாதிமட்டும் ஆலயத்தில் அனுமதிக்கப்படவில்லை யென்பதில்லை. அங்கு வேறு பற்பல உயர்வகுப்பினருக்கும் ஆலயப்பிரவேச அநுமதி இல்லை. ஆதலால் அங்கு அந்த வகுப்பினருடைய ஆதரவுமூலம் ஆலயப்பிரவேசத்திற்கு அதிக பின்பலமிருப்பதாகக் காட்டமுடியும். ஆகையால் மலையாள பரீக்ஷையைக்கொண்டுமட்டும் ஜாதி ஹிந்துக்களின் ஆதரவை அளவிடுவது நியாயமாக இராது. மலையாளத்தை விட்டு வேறு இடத்தில் இந்த பரீக்ஷை நடத்தினால் உண்மையான பொதுஜன மனோபாவம் வெளிப்படலாகுதுவுண்டு. இது தெரிந்திருந்தும் மந்திரி மலையாளத்தையே முதலாகப் பொறுக்கி யெடுத்ததில் அர்த்தமிருக்கிறது.

இந்த மசோதாவை மஹம்மதியர்கள் ஆதரித்துப் பேசியதுமக்கும் பெரிய கவலையையும் வருத்தத்தையும் கொடுக்கிறது. ஸ்ரீமான் ராஜா பேசுகையில், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும்கூட பஞ்சமர்களை தீண்டாதவர்களாக நடத்துகிறார்களென்றும், ஆகவே இது ஒரு தேசிய பிரச்னையாக ஆகிவிட்டதாயும் கூறினார். ஆதலால் இதர மதஸ்தர்களும் இந்த ஆலயப் பிரவேச மசோதாவுக்கு உதவிபுரிய வேண்டியது அவச்யமென அவர் கூறினார். ஹிந்துக்களுடைய தேவாலயத்தில் நடக்க வேண்டிய ஸம்பிரதாயத்தைப்பற்றி மஹம்மதியர் முதலியவர்கள் கூடக் கட்டளையிடுவதென்றால் இது ஸஹிக்கக் கூடியதல்ல. இந்த மசோதாவை ஆமோதிக்க முன்வந்த பஷீர் அஹமது என்ற மெம்பர் முஸ்லீம்களின் மத விஷயமான கார்யங்களில் ஹிந்துக்கள் அபிப்பிராயம் கூறுவதை ஒப்புக்கொள்ளுவாரா? மத விஷயத்தில் பிரிடிஷ் சட்ட மெதுவுமே தங்களைக் கட்டுப்படுத்தாதென்றும், தங்கள் மதப் புஸ்தகங்கள்படியே தாங்கள் நடப்பவர்களென்றும் மஹம்மதியர்கள் பெருமைசொல்லிவருகிறார்கள். தங்கள்மீது இதர மதத்தினர் ஆதிக்யம் செலுத்துவதை விரும்பாதவர்கள், பிறர் மதத்தில் புகுந்து நியாயம்பேச என்ன உரிமை இருக்கிறது! ஆயினும் இந்த வெட்கக் கேடான நிலைமை ஹிந்து மதத்திற்கு மட்டும்தான் ஏற்பட்டிருக்கிறது. எம். ஸி. ராஜா போன்ற சீர்திருத்த வாதிகள் இந்த நிலைமைக்கு லஜ்ஜைப்படுவதாகத் தெரியவில்லை. மஹம்மதியர்களுடைய ஓட்டு பலமில்லாமலே இத்தகைய மசோதாக்கள் நிறைவேற வழியிருக்கையிலும் சீர்திருத்தக்காரர்கள் வேண்டுமென்றே இந்த விஷமத்தை இப்போது ஆரம்பித்திருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி பிற மதஸ்தர்கள் நம்மீது ஆதிக்யம் செலுத்த இடம் கொடுக்கப்படுவதை வெகு பலமாக நாம் உடனே கண்டித்து கிளர்ச்சி செய்யவேண்டியது அவச்யமாகிறது.

இந்த விவாதத்தில் கனம் பிரதமமந்திரியின் போக்கு ஒருவராலும் நிர்ணயிக்கக் கூடாததாயிருக்கிறது. வெகு தந்திரமாக அவர் நடந்துகொண்டிருக்கிறார். எம். ஸி. ராஜாவே, தம்மைக் கண்டிக்கிறதான ஒரு நிலைமையை வெளிப்படுத்தித் தாம் ஜாக்ரதையாயும் நிதானமாயும் நடப்பதாகக் காட்டிக் கொண்டிருக்கிறார். இதன்மூலம் தார்மிகர்களின் அநுதாபத்தையும், பிரீதியையும் பெறலாமென்ற எண்ணம் அவருக்கு இருப்பதாக நாம் சொல்லவில்லை. ஆயினும் அதிகாரத்திற்கு வந்தும்கூட தாம், தமக்குபிடித்த கார்யத்தில் வெகு ஜாக்ரதை காட்டுவதாயும், நிஷ்பக்ஷபாதமாயும், அவஸரமின்றியும் நடப்பதாயும் காட்ட அவர் முயற்சிப்பது வெளியாகிறது. இது வோட்டர்களை மயக்கும் தந்திரமேயன்றி வேறில்லை.

மசோதாவைக் கொண்டுவரத் தூண்டியவர் தாமே என்பதை அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்போது அதை எதிர்ப்பவரும் அவரே. ஆகவே முதலில் தூண்டி விட்டு விட்டுத் தாமே எதிர்ப்பதென்றால் இது என்ன தந்திரமான கொள்கையன்பது விளங்கவில்லை. ஆரம்பத்திலேயே மலையாளத்திற்கு மட்டுமென்று மசோதா கொண்டுவரும்படி எம். ஸி. ராஜாவுக்கு இவர் ஏன் ஆலோசனை சொல்லியிருக்கக்கூடாது? ஆகையால் ராஜதந்திரமெல்லாம் ஏமாற்றும் வித்யையாகவே இக்காலத்தில் பரிணமித்து நிற்கிறதென்ற உண்மையையே இது வெளிப்படுத்துகிறதாக நினைக்கவேண்டியிருக்கிறது. எப்படியும் ஆலயப்பிரவேசக் கொள்கை மூலம் இம் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகள் பெரிய அமைதியின்மையை உண்டு பண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். இதன் விபரீத பலன் என்ன வென்பதை இவர்கள் அறிவதற்கு அதிகக்காலம் வேண்டியிராது.

## குறிப்புகள்.

### ஸித்தியடைந்த மஹான்.

சென்னையில் மிகப்ரஸித்த பண்டித சிரேஷ்டராக விளங்கிவந்தவரும், பூர்வாச்ரமத்தில் மஹாமஹோபாத்யாய, கருங்குளம், ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளென்று வ்யவகரிக்கப்பட்டு தற்போது ஸ்ரீ சங்கரானந்தஸ்வாமிகளென்ற திருநாமம் வஹித்துள்ளவருமான மஹான் கருங்குளத்தில் ஸித்தியடைந்ததை கேட்டு வருந்துகிறோம்.

இம்மஹானுடைய வியோகமானது தார்மிக உலகத்திற்கு அளவிடமுடியாத ஓர் நஷ்டமாகும். இம்மஹான் தர்க்க வேதாந்தாதிகளான சாஸ்திரங்களில் பெரிய நிபுணராயிருந்து அநேக சிஷ்யர்களுக்கு அவைகளை அத்யாபனம் செய்து வைத்திருக்கிறார்கள். அநேக வருஷ காலமாக மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகலாசாலையில் பிரதமஆசிரியராகவிருந்து ஸமீபத்தில் தான் விலகினார். கும்பகோணம் அத்வைத ஸபையில் பிரதம பண்டிதர்களில் ஒருவராக விளங்கி வந்தார். இனிமையாக உபந்யாஸம் செய்யும் சக்தி பெற்றவர். அத்வைத ஸம்பிரதாயத்தின்மேல் சொல்லப்பட்ட சில நவீன ஆக்ஷேபங்களைக்கண்டித்து "ஸூத்ராநுகுண்ய ஸித்தி,, போன்ற அநேக கிரந்தங்களை இயற்றியுள்ளார். இவருடைய படிப்பு, பிரவசன சக்தி ஆகியவைகளை மதித்து கவர்மெண்டார் மஹாமஹோபாத்யாய பிருதம் வழங்கினார்கள். இம்மஹான் இன்னும் சில காலம் இவ்வுலகில் இருந்து வித்யாப்ரவசனம் செய்து வரும் பாக்யத்தை நம்மவர்கள் பெறவில்லை.

பாரத தேசமானது ஓர் உயர்ந்த பண்டிதரத்நத்தை இழந்துவிட்டது.

### மற்றொரு பெரியாரின் பிரிவு.

இந்த வாரத்தில் நமது தார்மிக ஸமூஹமானது மற்றொரு பெரியாரையும் இழந்துவிட்டது. ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியரைப்பற்றி அறியாதவரிருக்கமாட்டார்கள். இவர் சென்ற வெள்ளிக்கிழமையன்று எம்பெருமான் திருவடிகளை அடைந்தஸமாசாரம் அனைவரையும் துக்கக்கடலில் ஆழ்த்துமென்பதற்கு ஐயமில்லை. ஸ்ரீமான் ஆசாரியார் நமது ஸநாதன தர்மக் கிளர்ச்சிக்கு ஓர் இரும்புத் தூணாக இருந்து உதவிபுரிந்துவந்தார். உயர்ந்தஸத்குலத்தில் பிறந்தவர். வக்கீல்தொழிலிலிருந்துவந்த போதிலும், விசிஷ்டாத்வைதவேதாந்தம், ரஹஸ்யங்கள் போன்ற ஸம்பிரதாய க்ரந்தங்களிலும் நல்ல பாண்டித்யம் பெற்றவர். வெகுகாலம்வரையில் வேதாந்த தீபிகை பத்திரிகையின் ஆசிரியராக இருந்து உயர்ந்த கட்டுரைகளை எழுதிவந்திருக்கிறார். உள்ளும் புறமும் ஒத்த தீவ்ர ஸநாதனி. ஸநாதந இயக்கங்களில் இவர் முன்னணியில் நின்று செய்துவந்த பேருதவியை அறியாதவரிருக்கமாட்டார். அவ்வப்போது கிளம்பும் அதர்மவாதங்களைத் தக்கமுறையில், எதிரிகளும் ஆச்சர்யப்படும்படி இங்கிலீஷ் பத்திரிகைகளில் கண்டித்து வியாஸம் எழுதிவந்தார்.

அகில இந்திய ப்ராமண ஸபை, வர்ணாச்ரம ஸபை போன்றவைகளில் நெருங்கிய ஸம்பந்தம் பெற்று சென்னை நகரில் அடிக்கடி பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தார். ஸைமன் கமிஷன் சென்னை வந்தபோது பிராம்மணர்களின் நிலைமையை விளக்கி ஓர் மெமோராண்டம் கொடுத்தார். சட்ட சபைகளில் பிராம்மண ஸமூஹத்திற்கு தனியாக பிரதிநிதித்வம் ஏற்படவேண்டுமென்பதை இவர் பலமாக வற்புறுத்திவந்தார். சென்னையில்



நடக்கும் தர்ம பிரசாரங்களில் இவர் ஸம்பந்தப்படாமலிருந்ததில்லை. இவ்வளவு சிறந்த ஸநாதனத் தலைவர் ஒருவரை நாம் இச்சமயம் இழந்தது மிகவும் வருந்தக் கூடியதே.

### கர்ப்பவாஸம் நீடிக்கிறது.

சென்னை காங்கிரஸ் ஸர்க்காரின் நிலவரிக் கொள்கையானது இன்னும் கர்ப்பவாஸத்திலேயே நீடித்து நிற்கிறது. சீக்கிரத்தில் வெளி வருவதாயில்லை. சென்ற வாரம் நடந்த சட்டஸபைக்கூட்டத்தில் சில மெம்பர்கள் கேள்வி மூலமாயும், தீர்மான ரூபமாகவும் ஸர்க்காரின் நிலவரிக்கொள்கையை அறியச்செய்த முயற்சி பலிக்கவில்லை. அதிருப்தியும், அவநியும், அடைந்து ஏங்கி நிற்கும் நிலச்சுவான்தார்களுக்குச் சிறிதாவது ஆறுதல் ஏற்படக்கூடிய வழியில் மந்திரிகள் பதிலளிக்காமல், வழக்கம்போல் மழுப்பிவிட்டார்கள். ராஜாங்க ஸபையில் மிஸ்டர் தாமஸ் என்பவர் இவ்விஷயமாக பிரரேபித்த தீர்மானத்தின் மேல் பல மெம்பர்கள் நிலவரிக்குறைவு அவச்யமென்பதை வற்புறுத்திப் பேசினார்கள். அஸம்பிளியிலும் ஒருவர் கேள்வி மூலமாக இவ்விஷயத்தைக்கிளப்பினார். கனம் மந்திரி பதிலளிக்கையில், கவர்ன்மெண்டார் இவ்விஷயமாக ஆலோசனை செய்து வருவதாயும், அடுத்த வரவு செலவு திட்டத்திற்கு முன் ஒரு முடிவுக்கு வந்துவிடப்போவதாயும் பதில் சொன்னார், இதேமாதிரியான பதில் சென்ற ஒரு வருஷமாகச் சொல்லப்பட்டே வருகிறது. எந்தக்கக்ஷி கவர்ன்மெண்ட் ஏற்பட்டாலும், நிலவரி விஷயமே முதன் முதலாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயமென்பது எலக்ஷன் காலப்பேச்சாகவே முடிந்துவிட்டது. காங்கிரஸ் மந்திரிகள் சென்ற [illegible] அநேக திட்டங்களையும் சட்டங்களையும் நிறைவேற்றிவிட்டதாகப் பெருமை பேசி வருகிறார்கள். அதில் நிலவரி விஷயத்திற்கு ஏன் முக்யத்வம் கொடுக்கவில்லையோ? நிலவரி விஷயமாக இதுவரையில் கணக்கற்ற மஹஜர்களும, டெபுடேஷன்களும், கமிட்டிகளும், கமிஷன்களும், கலெக்டர் ரிபோர்ட்டுக்களும் வெளியாகிவிட்டன. இன்னது தான் செய்யவேண்டுமென்பதைப் பற்றி இனி அதிக விசாரணை செய்யவேண்டியத வச்யமில்லை. ஆதலால் மீண்டும் இதைப்பற்றி மந்திரிகள் யோஜிக்கவேண்டிய விஷயம் என்னவோ?

கடைசியாக வந்துள்ள மார்ஷ்ஸ்பாங்க்ஸ் யாதாஸ்தை ஆதாரமாகக்கொண்டு ஆலோசனை செய்துவருவதாக மந்திரி சொல்லியதும் திருப்தியாயில்லை. 75 லக்ஷம் வஜா தாத்காலிகமாயிருந்துவருவதை சாச்வதமாகச் செய்துவிட மந்திரிகள் உத்தேசிப்பதாக ஓர் பிரஸ்தாபமிருந்துவருகிறது. அது உண்மையானால் அதைவிட ஏமாற்றகாமான விஷயமில்லை. 75 லக்ஷ வஜாவினால் சிறிது கூட மிராசுதார்கள் க்ஷேமமடையமுடியாது. இன்னும் 8 மாத காலம்வரையில் மந்திரிகள் யோஜிக்கப்போவதால் ஸ்திரமாயும் தாராளமாயும் ஒரு ஏற்பாட்டைச் செய்தாலல்லது மிராசுதார்கள் ஜீவித்திருக்கமுடியாது.

அடுத்தவருஷ கிஸ்திகாலத்திற்குள் ஒரு முடிவைச் செய்து அநுஷ்டானத்திற்கு கொண்டுவருவது விரும்பத்தக்கது.

### ஸமஷ்டி விவாதம்.

இப்போது வந்திருக்கும் ஸமஷ்டி திட்டத்தில் சில குறைகள் இருப்பது உண்மை. அவைகளைத் திருத்தவேண்டுமென்பதே இந்தியாவிலுள்ள எல்லா ராஜீயக்கக்ஷிகளின் அபிப்பிராயமாயிருக்கிறது. ஆகவே ஸமஷ்டியையே அடியோடு ஒருவரும் எதிர்க்கவில்லை. காந்திஜியே ஸமஷ்டி ஏற்படுவதை ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்போது இந்தியாவில் காங்கிரஸுக்குள்ள செல்வாக்கை அனுஸரித்து பிரிடிஷ் மந்திரிகளும், காங்கிரஸ் தலைவர்களின் விருப்பப்படி ஸமஷ்டியைத் திருத்துவார்களென்று தெரிகிறது. இவ்விஷயமாக ஸ்ரீமான்கள் புலாபாய், நேருஜி முதலியவர்கள் பிரிடிஷ் மந்திரிகளுடன் பேசி வருகிறார்கள். லார்டு லின்லிதோவும் இவ்விஷயத்தை முடிவு செய்யவே லண்டன் போயிருக்கிறார்.

மத்ய கவர்மெண்டிலும் உண்மையான ஜனநாயகம் ஏற்படவேண்டி மந்திரிகளுக்குச் சில அதிகாரங்களை அதிகரிக்க பிரிடிஷ் மந்திரிகள் ஸம்மதிப்பார்களென்று தெரிகிறது. ராணுவ விஷயத்திலும் இந்திய மந்திரிகளுக்கு ஆதிக்யம் ஏற்படுமாம்.

இந்த பக்வமான நிலையில் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் போஸ் பூஜை வேளையில் கரடியை விட்டடிப்பதுபோல் ஸமஷ்டியை வெகு உக்ரமாக எதிர்த்து சில வாரங்களுக்கு முன் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். ஸமஷ்டி யேற்பட்டால், காங்கிரஸ் அதை ஏற்றால், தாம் காங்கிரஸைவிட்டு விலகியாவது அதை எதிர்க்கப் போவதாகக் கூறியிருக்கிறார். காங்கிரஸ் தலைவரென்ற ஹோதாவில் இவர் இவ்வளவு பேசநியாயமுண்டாவென்ற ஸந்தேஹம் உதிக்கிறது.

இம்மாதிரி ஸ்ரீமான் போஸ் கூறியதை ஸ்ரீ ஸத்யமூர்த்தி வெகு பலமாகக் கண்டித்திருக்கிறார். சரியான திருத்தம் செய்யப்பட்டால் ஸமஷ்டியை ஏற்கவேண்டியதென்றும், காங்கிரஸும் அதை ஏற்குமென்றும் ஸ்ரீமான் போஸ் இப்படிக் கூறுவது அநுசிதமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்பதை முன் இப்படியே நேரு போன்றவர்கள் எதிர்த்தார்கள். ஆயினும் பதவியேற்ற பிறகு அதனால் விசேஷ பிரயோஜனமுண்டென்பதை நேருபோன்ற அபேதவாதிகள்கூட அறிந்துகொண்டார்கள். அதுபோல் மத்ய கவர்ன்மெண்டில் ஏற்படும் இரட்டையாக்ஷியிலும் மந்திரிகளுக்கு நல்ல அதிகாரம் ஏற்பட்டால் ஏன் ஸமஷ்டியை நடத்தி நலம் பெறக்கூடாது? இப்படியிருக்கையில் காந்திஜி முதலியவர்களையும் மீறி ஸ்ரீ போஸ் இப்படி முரட்டுத்தனமாகப் பேசுவது காங்கிரஸ் தலைவர்களுக்கே பிடிக்காது. இதற்கு ஸ்ரீமான் ஸத்யமூர்த்தியின் பதில் மிகவும் ஸமயோசிதமானது

இச்சமயத்தில் சில அபேதவாதிகளும், காங்கிரஸ் வாதிகளும், காங்கிரஸ் தலைவரை எதிர்த்துப் பேசியதற்காக ஸ்ரீஸத்யமூர்த்தி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூச்சலிடுவதற்கு அவர் பயந்தவரல்ல. சட்டஸபை பிரவேசத்தையும், பதவி ஏற்பையும் நிறைவேற்றிய தீரர் அவரே. சென்னையில் வெகுநாளாக ஊன்றிநின்ற ஒரு ஆக்ஷியைக் கலைத்தவர் அவரே. ஸமஷ்டியால் நன்மை ஏற்படும்படி செய்ய அதை ஏன் உபயோகிக்கக்கூடாது? ஸ்ரீமான் ஸத்யமூர்த்தியின் கொள்கைக்கு தேசத்தில் வலுவான பின்பலமிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. ஒரு நிருபர்.

### ஜாதிபேத உணர்ச்சி மறைந்ததா?

விச்வகர்ம வகுப்பினர் நீண்டகாலமாக பிராம்மண ஜாதியினராகத் தங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதை ஒருவரும் ஆக்ஷேபிக்க அவசியமில்லை. ஆனால் மலையாளதேசத்திலுள்ள ஒரு வகுப்பினர் தாங்களும் விச்வ பிராம்மணர்கள் தானென்றும், தங்களையும் பிராம்மணர்களென்று ஸர்க்கார் தஸ்தாவேஜிகளில் குறிப்பிடவேண்டுமென்றும் ஸர்க்காரிடம் வற்புறுத்தினர். அவர்களுக்கு பூணூல் முதலிய சின்னங்கள் இல்லாததுடன் வேறு ஸதாசாரங்களும் கிடையாது. மஹம்மதியர்கள் ஆக்ஷிகாலத்தில் தங்கள் பூணூல் அறுக்கப்பட்டு விட்டதாயும் அவர்கள் ஸமாதானம் கூறினார்கள். ஆயினும் தமிழ்தேச விச்வகர்மாக்கள், மலையாளிகளை விச்வபிராம்மணர்களென்று தங்களுக்கு ஸமமாக வியவஹரிக்க விரும்பவில்லை. ஆகையால் சென்னை காங்கிரஸ் ஸர்க்கார் இதில் ஒரு வழிகண்டு பிடித்து இருதேச விச்வகர்மாக்களையும் பிராம்மணர்களென்று குறிப்பிட வேண்டாமென உத்திரவு போட்டனர். இதனால் தமிழ் தேச விச்வகர்மாக்கள் கோபமடைந்து மந்திரி ஸபையைத்தாக்க ஆரம்பித்தார்கள். மந்திரிகளின்ராஜீய விரோதிகளான ஜஸ்டிஸ், சு. ம. கக்ஷியாரின் உதவிகளை நாடி ஆங்காங்கு கிளர்ச்சி நடத்தினார்கள். கடைசியாக சென்னை ஸர்க்கார் ஓர் உத்திரவு போட்டு, முன்போலவே அவர்களை பிராமணர்களென்று குறிப்பிட ஸம்மதித்து விட்டனர். இந்த ஸம்பவத்திலிருந்து பல உண்மைகள் வெளி வருகின்றன. தேசத்தில் ஜாதி பேத உணர்ச்சி மறைய வேணடுமென்றும், மறைந்து வருவதாயும் சிலர் பேசி வருவது உண்மையல்லவென்பது வெளியாகிறது. அவரவர் தம் தம் ஜாதி உயர்வையும் கௌரவத்தையும் விட்டுக்கொடுக்க இஷ்டப்படவில்லை. எல்லோரும் உயர்ந்தஜாதியினராகவே இருக்க விரும்புகிறார்கள். மலையாள விச்வகர்மாக்களை பிராம்மணர்களென்று அழைத்தால் தமிழ் நாடு விச்வகர்மாக்களுக்கது பிடிக்கவில்லை. ஏன்?

இதில் மற்றொரு வேடிக்கை யென்னவென்றால், சு.ம. கக்ஷியார் விச்வபிராம்மணர்களுக்குப் பரிந்துபேச முன் வந்ததேயாகும். ஜாதி மதம் அழியவேண்டுமென்றும், பாபம் [illegible] றும் கொள்கையுள்ளவர்கள் இந்த ஜாதிப் பூசலில் அநுதாபம் காட்டினார்கள். விச்வகர்மாக்களை பிராமணர்களென்று அழைக்க வேண்டுமெனச் சண்டையிட்டார்கள். பிராம்மண ஜாதியை மனம்போனபடியெல்லாம் திட்டி தூஷணம் செய்து அதை அழிக்க விரும்புகிறவர்கள், விச்வபிராம்மணர்களுக்குப்பிராமணப்பட்டம் நிலைக்கப்பாடுபடுவது விசித்திரமல்லவா? இதிலிருந்து அந்தக் கக்ஷிக்கொள்கையின் வேஷமே வெளியாகும். பிராமணப்பட்டம் வேண்டாமென்று விச்வகர்மாக்களுக்கு, சு. ம. சொல்லுவதல்லவோ நேர்மை?

விச்வகர்மாக்கள் இக் கிளர்ச்சியில், சு. ம. கக்ஷியை உதவிக்குக் கூப்பிட்டதும் ஒரு வேடிக்கை. பிராம்மணர்களைத் திட்டுகிறவர்களிடம்போய், தங்களுக்குப் பிராமணப் பட்டம் நிலைக்க உதவிசெய்யும்படி வேண்டியது நேர்மையா? சு. ம. கக்ஷி செய்யும் பிராம்மண நிந்தையில் விச்வ பிராம்மணர்களுக்கு பங்கு இல்லையா?
இந்த உணர்ச்சியின்றி அவர்கள் சு. ம. க்களைச் சேர்த்துக்கொண்டது விகாரமே.

மொத்தமாகப்பார்த்தால் இப்போது எதிலும், ஸத்யம் என்பது மறைந்து விட்டது. எல்லாம் மாயையாகவே இருக்கிறது. காங்கிரஸ் கவர்ன்மெண்டாரும் ஜாதிபேத உணர்ச்சிகளை அழித்துவிடலாமென்று கனவுகாணுவது பலிக்காதென்பதை இந்த ஸம்பவத்திலிருந்து அறிவது நலம். இந்த நிலைமையில் பிராம்மணர்கள் ஜாதி இறுமாப்புக் கொண்டவர்களென்றும், வேறு மாதிரியாகவும் அவர்களைத் திட்டுவதில்மட்டும் என்ன நியாயமிருக்கிறது?

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## கட்டாய ஹிந்தி எதிர்ப்பும், பிராம்மண நிந்தையும்.

"வித்யானந்தம்"

இது சென்ற மாதம் 1-உ சென்னையில் கொண்டாடப்பட்டது. கடைகளெல்லாம் மூடப்பட்டன. ஊர்வலங்கள் புறப்பட்டு ஆங்காங்கு மீட்டிங்குகள் நடைபெற்றன. 'தமிழ் வாழ்க,' 'ஹிந்தி ஒழிக'என்றும் பதங்கள் நிறைந்த அட்டைகள் வெகுவாய் சென்னை முழுவதும் பறந்தன. மைலாப்பூரிலும் இவ்வாறே நடைபெற்றது. மாலையில் ஸ்ரீரமணகுரு மைதானத்தில் மீட்டிங் நடந்தது. அநேகர் வெகு சாமர்த்தியமாய்ப் பேசினார்கள். ஆனால் அது பாஷை விஷயமாய் ஆரம்பமாகி பிராம்மண த்வேஷத்தில் முடிந்தது. இப்போது பிராம்மணர்மீது விரோதமே அதிகரித்திருக்கிறது. ஏனெனில் இப்போது காங்கிரஸ் ஆட்சியர்தலால் அது பிராம்மணர்களை முக்யமாய் உடையது. ஆதலால் அந்த பிராம்மணர்களே இவ்விதம் அநியாயம் செய்கிறார்கள் என்று தெரியாத ஜனங்களுக்கு இந்த த்வேஷத்தை உண்டாக்கியிருக்கிறார்கள். அதிலும் காங்கிரஸ் மந்திரி பதவியில் 4 பிராம்மணர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அத்தோடு இந்த காங்கிரஸ் ஆக்ஷியில் வரி அதிகம் போடுகிறாகள் என்றும் எல்லாம் ஜனங்களுக்கு அனுகூலம் மாதிரிதோன்றுகிறதேயல்லாமல்சௌகரியம் சிறிதும் இல்லையென்றும், ஜஸ்டிஸ் கக்ஷியாரின் ஆக்ஷியில் அவர்கள் நன்றாய் அனுபவித்தாலும் பொதுஜனங்களிக்குக் கஷ்டம் ஒன்றுமில்லையென்றும் பேசிக்கொண்டார்கள். அத்தோடு தெரியாத ஜனங்களிடம், ஆண் பிள்ளை பெற்றால் 5 ரூபாய் வரி போடுகிறார்கள் என்றும் பெண்பிள்ளை பெற்றால் 3 ரூபா வரி போடுகிறார்கள் என்றும் சொல்லிக் கிளப்பிவிட்டு பெண்டுகள் முதல் காங்கிரஸ் ஆட்சியை வெறுத்து நிந்திக்கும்படி செய்துவிட்டார்கள்.

பிராம்மணர்களுக்கு எப்போதும் கஷ்டந்தான். ஜஸ்டிஸ் ஆக்ஷியிலும் வகுப்புவாதம் வந்து சூழ்ந்துகொண்டது. இப்போது காங்கிரஸ் ஆக்ஷியிலும் பிராம்மணர்களுக்கு சௌகரியம் இல்லாமல் ஹரிஜனங்களே வெகுவாய் ஆதரிக்கப்படுகிறார்கள். இவ்விதம் பிராம்மணத்வேஷம் ஜஸ்டிஸ் கக்ஷியாராலும் சுயமரியாதைக் கக்ஷியாராலும் உண்டுபண்ணப்பட்டதானாலும் இப்போதும் அதே மாதிரி பிரசாரமே நடக்கின்றது. பிராம்மணர்களே பெரும் உத்தியோகத்திலிருந்துகொண்டு கெடுக்கிறார்கள் என்றே இப்போதும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

ஆகவே பிராம்மணர்களுக்கு எப்போதும் கஷ்டந்தான். இன்னும் எவ்வித கஷ்டங்கள் உண்டாகப் போகின்றனவோ. இதையெல்லாம் ஸர்வேச்வரன் தான் நிவர்த்தி செய்து காப்பாற்ற வேண்டும். பாஷாத்வேஷத்தில் ஆரம்பித்து ஜாதித்வேஷத்தில் முடிவது ஆச்சாயமாயிருக்கின்றது. இதற்கும் ஜஸ்டிஸ்காரரும் சுயமரியாதைக்காரருமே காரணம் என்று கூறுகின்றனர். 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது' போல் அவர்கள் எதையோ நினைத்துக் கொண்டு எதையோ செய்கின்றனர் என்று கூறுகின்றனர். அத்தோடு முதல் மந்திரி வீட்டிற்கெதிரேயும் சென்னை தியலாஜிகல் ஹைஸ்கூலுக்கெதிரேயும் ஸத்யாக்ரஹம் செய்வது யாவருக்கும் தெரிந்தவிஷயமே. இவ்விதம் செய்வதோடு ஹிந்தி உள்ள பள்ளிக்கூடங்களுக்கு நமது பிள்ளைகளை நாம் அனுப்பக்கூடாதென்றும், அவ்விதம் செய்தால் ஹிந்தி எப்படி விருத்தியாகுமென்றும் ஜனங்கள் வெகுவாய்ப்பேசிக்கொண்டனர். ஆதலால் இனி ஹிந்தி உள்ள பள்ளிக்கூடங்களுக்கு பிள்ளைகளைப்பெற்றோர் அனுப்பாமல் ஸத்யாக்ரஹம் நடைபெறும் என்றும் தோன்றுகிறது.

## மதிப்புரை.

### ஸ்ரீராமகுண ரத்நாகரம்.

இப்பெயர்கொண்ட அழகிய புஸ்தகமொன்று நமது விமர்சநத்திற்கு வந்திருக்கிறது. ஸ்ரீராமாயணத்திலுள்ள உயர்ந்த தத்வார்த்தங்களை யாவரும் எளிதில் அறிவது அஸாத்யம். இதுவரை அறிந்து வெளிப்பட்டவைகளும் மிகக் கொஞ்சமே. ஸமுத்ரத்திலுள்ளரத்னங்களுக்கு அளவில்லை. அதுபோல் ஸ்ரீராமாயணத்திலுள்ள அர்த்தரத்னங்களுக்கும் அளவு கிடையாது.

இப்புஸ்தக ஆசிரியர் சிறந்த வித்வான்களைக்கொண்டு ஸ்ரீராமனுடைய குணங்களை வெளியிடும் 108 வியாஸ ரத்னங்களை ஸ்ரீராமகுண ரத்நாகரம் என்ற பெயருள்ள புஸ்தக ரூபமாக வெளியிட முன்வந்திருக்கிறார். இந்த முதல் பிரசுரத்தில், பாதுகா ப்ரபாவம், அழகன், குஹஸக்யம்போன்ற சிறந்த வியாஸங்களை முறையே ஸ்ரீமான்கள் வி. கோபாலய்யங்கார் எம். ஏ, ஆர். திருமலை அய்யங்கார், திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்போன்ற அறிவாளிகள் எழுதியிருக்கிறார்.

ஸ்ரீமான்-களான எஸ். ஸத்யமூர்த்தி எம். எல். ஏ., டி. கே. பாலஸுப்ரமண்ய அய்யர் முதலிய பிரமுகர்கள் இம்முயற்சியை ஆதரித்தும் அபினந்தனம் செய்தும் முன்னுரை எழுதியிருக்கிறார்கள். இம்முயற்சியில் இறங்கியுள்ள ஆசிரியர் ஸ்ரீமான் ஏ. ஆர். ராஜகோபாலய்யங்காரை நாம் பாராட்டுகிறோம். இவருடைய முயற்சி வெற்றியடையுமாறு ஸர்வேச்ரன் அருள்புரிய வேண்டுகிறோம். பொதுமக்கள் இப்புஸ்தகத்தை ஆதரித்து வாங்கி படித்து ஸ்ரீராமகுணாநுபவம் செய்வார்களாக. ஸஞ்சிகை வி-அணா. 4. இரண்டாவது ஸஞ்சிகை விஜயதசமியன்று வெளிவரும். ஸ்ரீ வாணிவிலாஸ பிரஸில் இது அச்சாவதால் புஸ்தகத்தில் அழகை நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை, ஸ்ரீராமகுண ரத்நாகரம் ஆபீஸ், சித்ரகூடம் ஸ்ரீரங்கம் என்ற விலாஸத்தில் ஆசிரியரிடம் கிடைக்கும்.

### ஓர் விக்ஞாபனம்.

சக்ரவர்த்தி திருமகனுடைய அனந்த கல்யாண குணங்களை மஹரிஷி வால்மீகி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன், கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார், மஹாகவி காளிதாஸன் போன்றவர்கள் அநுபவித்தவண்ணம் நம்போன்ற பின்புள்ளோர்க்கு உபயோகப்படும் பொருட்டு, ஆராய்ச்சி முறையில் 108 சிறு வியாஸங்களைத் தொகுத்து புஸ்தகரூபமாய் வெளியிட வேண்டுமென சங்கல்பித்து, முதற்புத்தகம் வெளிவந்திருக்கிறது. ஆங்கிலம் ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலிய பாஷைகளில் பாண்டித்யம் பெற்று ரஸிகசிகாமணிகளாக விளங்கும் பெரியோர்கள் தமிழ்நாடு முழுமையும், வியாபித்திருப்பதால் அவரவர்களின் விலாஸம் தெரியவில்லை. போதிய ஸாதனங்களையும், சௌகர்யங்களையும் பெற்றிருக்கிற வித்வன்மணிகள் கைங்கர்யத்தையே புருஷார்த்தமாய்க்கொண்டு, ஆழ்வார்கள் ஒப்ப. பக்தி மேலிட்டால் ததும்பி நிற்கும் சிறு சிறு வியாஸங்களை சுத்த ஸரளமான தமிழ் நடையில் எழுதி அனுப்பப்பிரார்த்திக்கின்றேன். மற்ற விவரங்களுக்கும் அடியேனுக்கு எழுதுமாறும் வேண்டுகிறேன்.

ஏ. ஆர். ராஜகோபால ஐயங்கார்,
'ஸ்ரீராமகுணாத்நாகரம்'
பிரசுராலயம் ஸ்ரீரங்கம்.

## மஹா வித்வான் காலமானார்.

பூர்வாச்ரமத்தில், கருங்குளம், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளென்ற பெயருடன் விளங்கி தற்போதுஸன்னியாஸம்பெற்று ஸ்ரீ சங்கரானந்தஸரஸ்வதீ ஸ்வாமிகளென திருநாமத்துடன் விளங்கி வந்த மஹான் நாளது ஆவணிமீ 2உ (18-8-38) யில் கருங்குளத்தில் ஸித்தியடைந்த ஸமாசாரத்தை அறிவிக்கிறோம். 11உ மஹா பூஜை என்று ஷடியார் குமாரர் அறிவிக்கிறார்

## திருச்சினாப்பள்ளி.

(தர்மப்ரசாரங்கள்.)

(நமது விசேஷ நிருபர்.)

நமது நகர் கீழ ஆண்டார்வீதி மூலைப் பிள்ளையார் கோவில் பல ஆண்டுகளாக திருவையார் பிரும்மஸ்ரீ வித்வந்மணீ ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் இனிய ஸங்கீத ஸாஹித்யங்களுடன் பண்டித பாமரரஞ்ஜகமாக ஸ்ரீமத் ராமாயணம், பாரதம் முதலிய அநேக கிரந்தங்கள் ப்ரவசனம் செய்யப்பட்டு வருவதை நமது நேயர்கள் நன்கு அறிவார்கள். ஷடி ப்ரவசனத்தில் தற்காலம் 1—8—38 முதல் ஸ்ரீ பாகவதம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. இவ்விதம் பல ஆண்டுகளாக புராணப்ரவசனம் செய்வதன் மூலம் நமது மதத்தைக் காக்கும் பெரியாரை கொண்டாடாதவரில்லை. ஸநாதநமதம் வாழ்க. பெரியார் வாழ்க.

* * *

நமது நகர் ஆண்டார் வீதியில் பிரும்மஸ்ரீ பாகவதம் மகாதேவ சாஸ்திரிகளால் 30—7—38 முதல் ஸ்ரீ பாகவதம் ப்ரவசனம் செய்யப்பட்டு வருகிறது. இப்பெரியோர் இருவரும் நமது நகரின் கண்ணுள்ள ஆஸ்திகர்களுக்கு ஸநாதன தர்மத்தை போதித்து, அதன்மூலம் நமக்கும் நமது மதத்திற்கும் செய்துவரும் பேருபகாரத்திற்கு அளவில்லை. இவர்கள் போல தர்மப்ரசாரத்தில் ஈடுபடுவார்களானால் நமது மதம் சீக்கிரம் முன்னேற்றமடையு மென்பதில் தடையில்லை. இந்நகரில் விஜயம்செய்த தர்ம வீர ஜதா வின் செய்த அரியதொண்டின் பயனாக பலர் விழித்துக் கொண்டிருக்கின்றனர். ஸநாதனதர்மம்வாழ்க. பெரியோர்கள் வாழ்க. தர்ம ஜதா வாழ்க.

### ஓர் திருத்தம்.

சென்ற ஆர்யதர்மம் 5-வது பக்கம் நடுப்பத்தியில் (5—8—38) என்பதற்குக் கீழ் (6—8—38, 7—8—38) இந்த தேதிகளில் ஸ்ரீமான் போலகம் ஸுந்திரேச சாஸ்திரிகள் என்று இருப்பதை திருச்சி பிரும்மஸ்ரீ விதவந்மணீ திருவையார் ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் தர்ம வீர ஜதாவின் வரவேற்பு முதலிய கட்டம் நடைபெற்றதென திருத்தி வாசிக்கும்படி வாசகர்களை வேண்டுகிறேன்.


பொதுஜன வைத்திய உதவி.
டாக்டர் தேவையில்லை.
20ஸு அனுபவம் பெற்றது. குறைந்தசிலவில் சிறந்தகுணம். தினசரி ஏற்படும் 10, விதமான நோய்களுக்கு 8, வித நெ. ஔஷதங்கள் எத்த நெ, மருந்தும் 3 அணாதான். அது 40. கேசுகளுக்குப் போதுமானது. அனுபவத்தில் அதிசய குணம் காணலாம்.
தயாரிப்பவர்:— J. & J. டிசேன் ஹைதராபாத், ஏஜண்டு T. R. கோபாலய்யங்கார், 12. பாணாதுறை சந்நதி கும்பகோணம். மற்றவிபரம் தபாலின் மூலம்.




## தேவாலயமோ அல்லது ப்ரார்த்தனாலயமோ?

எம். எம். அனந்தராயர் எழுதுகிறார்:—

இக்காலத்தில் "தேவாலயப்ரவேசம்" என்கிற விஷயத்தைப்பற்றி இந்தியா தேசத்தில் முழுவதும் எல்லோருடைய பேச்சில் ப்ரபலமாய் வழங்கிக்கொண்டு வருகிறதானது நாம் தினந்தோரும் பார்த்துக்கொண்டு வருகிறோம். இப்படியிருக்க இது ஒரே கோலாஹலமென்று சொல்லலாம். இந்த கோலாஹலத்தை நன்றாக பார்த்தால் இதில் பலவித கக்ஷிகள் இருக்கிறதாக தோன்றுவருகிறது. இக்கக்ஷிகள் யாவை?

(1) ஆகம சாஸ்த்ராநுஸாரிகள்.

இவர்கள் ஆகம சாஸ்த்ரப்படி சுத்த ஜாதிகளுக்கு மாத்திரம் ஆலயப்ரவேசமானது சொல்லப்பட்டிருக்கிறதென்று கம்பீரத்வனியோடு உத்கோஷிக்கிறார்கள். "ஜாத்யேதர ஜனங்கள் ஆலயப்ரவேசம் பண்ணினால் ஈஸ்வர ஸாந்நித்யமானது ஆலயத்திலிருந்து அதேக்ஷணமே போய்விடும். அப்படி போய்விட்டால் ஈஸ்வர ஸாந்நித்யமிருந்த சமயத்தில் "தேவாலயம்" என்று சொல்லப்பட்ட இடத்திற்கு இனிமேல் அப்படி சொல்லலாகாது. இப்படி ஆகம சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இது ஓர் கக்ஷி.

(2) ராஜகீய வ்யவஹாரிகள்.

இவர்கள் போகிற வழியானது ஒரு நூதனமான வழி. இவர்கள் சொல்வது என்னவென்றால்—நாளுக்கு நாள் நன்றாக கவனித்து பார்த்தால் ஹிந்து ஸமூஹமானது ஸங்க்யையில்குறைந்துக்கொண்டேவருகிறது காரணமென்னவென்றால்—நாளுக்கு நாள் (தீண்டாமை ஜனங்கள் (ஹரிஜனங்கள்) ஸ்வமதத்தைவிட்டு இதர மதத்திற்கு போகிறார்கள். இப்படி போகவே ஹிந்து ஸமூஹத்தினுடைய ஸங்க்யையானது குறைந்துக்கொண்டே வருகிறது. இப்படியானால் ஹிந்து ஜனங்களுடைய ராஜகீய வ்யவஹார சக்தியானது ஸங்க்யானுகுணமாக குறைந்துக் கொண்டே வருகிறது. ஹிந்து ஜன ஸங்க்யையை குறையாமலிருக்கும்படி வழிகளை தேட தீண்டாமை ஜனங்களுக்கு அந்ய மதங்களில் போகாமலிருக்கும்படி செய்ய வேண்டியது. அப்படி ஸாதிக்கிறதற்கு உபாயங்களுக்குள் ஓர் உபாயமானது என்னவென்றால்—இந்திய தேசத்தில் இருக்கின்ற ஆலயங்கள் எல்லாவற்றும் தர்மப்ரஷ்டதையை அடைந்தாலுமடையட்டும், ஆனால் இப்படி செய்ததில் தீண்டாமை ஜனங்களிடத்தில் ஒருவிதமான த்ருப்தியை உண்டு பண்ணினால் ஸ்வமதத்தை விட்டு அந்ய மதத்திற்கு போகமாட்டார்கள். இப்படி செய்வதில் அவர்களுடைய பரமோத் தேசமானது—ராஜகீய வ்யவஹார சக்தியை ஹிந்து ஜனங்களிடத்திலேயே ஸங்க்யாப்ராபல்யேன இருக்கும்படி செய்தல். இது இரண்டாவது கக்ஷி.

(3) "ஆர்யஸமாஜ்" காரர்.

இவர்கள் சொல்வது என்னவென்றால்—பிறப்பினால் வர்ணத்தை நிச்சயிக்கிற விஷயத்தை நம்மத கொள்கையில் இல்லாமலிருந்தபடியால் அதை ஒப்புக்கொள்ளமாட்டோம். மேலும் உங்களுடை மூர்த்தி (அல்லது விக்ரஹ) ஆராதனை விஷயத்தில் நமக்கு கொஞ்சம்கூட நம்பிக்கை கிடையாது. இப்படியிருக்க, நீங்கள் சொல்லும் விஷயங்களில் ஆலயத்தில் அர்சாவதாரமூண்டு, மேலும் ஈஸ்வர ஸாந்நித்யம் அவ்விடத்தில் கிடைக்கிறது- இவ்விஷயங்களில் நமக்கு கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாது. ஆகையால் எந்த ஜாதியில் அல்லது வருப்பில் சேர்ந்திருந்தபோதிலும் ஹிந்து மதகொள்கைக்குள் வந்தால் ஒருவனுக்கு ஆலய ப்ரவேசம் பண்ணுகிறதில் அதிகாரமுண்டு – ஏனெனில் ஆலயமானது ஹிந்து மதத்தாருக்கு மாத்திரம் சொன்னபடியினால். இது மூன்றாவது கக்ஷி.

(4) தீண்டாமை ஜனங்கள்.

இந்த பூலோகத்தில் சுத்த ஜாதிகள் ஸ்ரிஷ்டிப்ப்ருதி ஜாதி சுத்ததையை காப்பாற்றிக் கொண்டு வந்திருந்தார்களேயாயின் வர்ண ஸாங்கர்யத்திற்கு கொஞ்சம்கூட இடம் கொடுக்காமல் "ஜாதியினால் தீண்டாமை" என்கிற விஷயத்திற்கே இருக்கிறதற்காக அவகாசமில்லாமலிருந்திருக்கலாம். ஜாதி சுத்ததையை முழுவதும் காப்பாற்றுகிறதற்காக முடியாமல் வர்ண ஸாங்கர்யமானது ஸம்பவிக்கிறதற்காக காரணங்களிருந்தபடியால் மனு ப்ரப்ருதி ஸ்ம்ருதிகாரர்களுக்கு வர்ணஸங்கர ஜாதிகளுக்கு வ்யவஸ்தையை ஏற்படுத்துகிறதற்கு அவகாசமுண்டாயிற்று. வர்ண ஸங்கரஜாதிகளில் "தீண்டாமை ஜாதி" எங்கிறது ஒன்று. இந்த "தீண்டாமை ஜாதி"கள் க்ராமங்களுக்கு வெளியே வர்ண ஸாங்கர்யமுண்டான காலம் பிடித்து இது வரையிலும் வாசம் செய்துக்கொண்டு வந்தன.

இந்த தீண்டாமை ஜாதிகளுக்கு அனேகமாய் ஆலய ப்ரவேசம் பண்ணுகிறதற்காக கொஞ்சம்கூட இச்சை கிடையாது. மேற்சொன்ன இரண்டாவது கக்ஷிகாரர்கள் (அதாவது ராஜகீய வ்யவஹாரிகள்) இத்தீண்டாமை ஜனங்களை தூண்டிக்கொண்டே வந்ததனால் அவர்களில் சிலர்களின் மேல் தேவாலய ப்ரவேசத்தினுடைய இச்சையானது இல்லாமவிடத்தில் ஆரோபணை பண்ணதாக ஆயிற்று. இவர்கள் நான்காம் கக்ஷி.

(5) "ப்ரம்ஹஸமாஜ்" காரர்கள்.

இவர்கள்கூட "ஆர்ய ஸமாஜ்" காரர்களுடைய கக்ஷிபோல் மூர்த்தி (அல்லது விக்ரஹ) ஆராதனையில் நம்பிக்கையில்லாதவர்கள். இவர்களுக்குக்கூட ஜாதி (அல்லது வர்ண) வ்யவஸ்தையில் கொஞ்சம்கூட நம்பிக்கையில்லை. இவர்களுக்கு ஜாதிபேதமானது இரண்டு வகை (ஆண்—பெண்) இவர்களுக்கு எந்த ஜாதியில் எந்த மதத்தில் இருந்தபோதிலும் ஒருவன் ப்ரம்ஹோபாஸனை செய்கிறதற்காக இச்சித்தால் அவன் இவர்கள்கூட சேர்ந்துக் கொண்டு உபாஸிக்கலாம். இவர்களுக்கு தேவாலயத்தினுடைய இடமானது ஈஸ்வர ப்ரார்த்தனைக்காக எல்லோரும் உபயோகம் செய்யத்தக்கது. எல்லோருக்கும் அந்த இடத்தை உபயோகிக்கிறதற்காக அதிகாரமுண்டு. "ப்ரம்ஹஸமாஜ்" காரர்களுக்கு அர்சாவதாரத்திலாவது ஈஸ்வர ஸாந்நித்யத்திலாவது கொஞ்சங்கூட நம்பிக்கையில்லை. இவர்கள் ஐந்தாவது கக்ஷி.

(6) 'ப்ரார்த்தன ஸமாஜ்'' காரர்கள்.

இவர்கள் எல்லோருக்கும் பொதுவான ஈஸ்வரப்ரார்த்தனை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குக்கூட அர்சாவதாரத்திலாவது, ஈஸ்வர ஸாந்நித்யத்திலாவது, மூர்த்யாராதனத்திலாவது கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லை. இவர்களுக்கு தேவாலயப்ரவேசமானது எல்லோருடைய ப்ரார்த்தனை ஸ்தானமாக இருக்கவேண்டுமென்று அபிப்பிராயமுண்டு. இவர்கள் ஆறும் கக்ஷி.

(7) அந்ய (அதாவது கிரிஸ்து அல்லது மஹமதிய அல்லது இதர) மதத்தார்.

அந்ய மதங்களுடைய கொள்கைகளில் மூர்த்யாராதனமானது யில்லாமலிருந்தபடியால் அர்ச்சாவ்தாரத்திலாவது, ஈஸ்வர ஸாந்நித்யத்திலாவது கொஞ்சம் கூட நம்பிக்கை கிடையாது. ஆகையால் எல்லா தேவாலயங்களை ஒழித்து விட்டு அவ்விடங்களில் மசூதி மாதாகோவில்கள் முதலானவைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லோரும் ஏழாவது கக்ஷி.

மேற்சொல்லப்பட்ட ஏழு கக்ஷிகளுடைய கொள்கைகளை நன்றாக ஆராய்ந்து பார்த்தோமேயானால் அடியிற் சொல்லப்பட்ட தீர்மானங்கள் எல்லோருக்கும் நன்றாக விளங்கிவிடும்.

மேற்சொல்லப்பட்ட ஏழு கக்ஷிகளை ஐந்து விதமாக பிரிக்கலாம்.

(1) ஆயிர வருஷக்கணக்காய் இது வரையிலும் ஆகமசாஸ்த்ர முறையோடு அர்சாவதாரமானது ஷடி ஈஸ்வர ஸாந்நித்யமானது இவ்விரண்டு ப்ராபவங்களை (இவைகளால் தேவாலயங்களெனப்படும்.) காப்பாற்றுகிறதற்காக சுத்த ஜாதிகளுடையது மாத்திரம் தேவாலயப்ரவேசம் வைத்துக்கொண்டிருத்தல்.

(2) தேவாலயத்தை ப்ரார்த்தனாலயமாக செய்து ஹிந்து மதத்தை ஸ்வீகாரம் செய்யப்பட்ட ஜாத்யேதர ஜனங்களை ஈஸ்வரனைப்ப்ரார்த்திக்கிறதற்கு அவ்விடங்களில் விடுதல்.

(3) எந்த ஜாதியிலும், எந்த மதத்திலிருந்தபோதிலும் எல்லோருக்கும் ஒன்று பொதுவான ப்ரார்த்தனையை ஒப்புக்கொண்டு இவ்விடங்களில் ப்ரார்த்திக்கிறதற்காகபோகுதல்.

(4) இப்பொழுது இருக்கப்பட்ட தேவாலயங்களெல்லாவற்றையும் மசூதிகளாகவும் அல்லது மாதாகோவில்களாகவும் செய்யவும்.

(5) ராஜகீய வ்யவஹாரத்திற்கு நம்மதத்தில் ஷடி மதாசாரங்களிருக்கின்ற மிகவும் மேன்மையான விஷயங்களை ஒவ்வொன்றாய் ஒளித்தல்.

மேற்சொன்ன முதல் பிரிவிலிருந்து இரண்டாம் பிரிவுக்கு வந்தால் இதனுடைய பரிணமங்கள்—

(1) அர்சையானது போய்விடும்.
(2) ஈஸ்வரஸாந்நித்யமானது போய்விடும்
(3) மந்த்ர மஹிமையானது போய்விடும்.
(4) ஆலயத்தில் வேதாத்யயனம் செய்யலாகாது.
(5) ஆலயத்தில் மந்த்ரங்களால் (வேத மந்த்ரங்களால்) காரியங்கள் செய்யலாகாது.
(6) ஹோமயாகாதிகள் ஆலயத்தில் செய்யலாகாது.
(7) சுத்த ஜாதி பக்தர்கள் ஆலயத்தில் போகமாட்டார்கள்.
(8) ஆலய பட்டாசாரிகள் அர்சக வேலைகளை விடுவார்கள்.
(9) தேவாலய முறைகள் சாஸ்த்ர ப்ரகாரம் காப்பாற்றிக்கொண்டுவரும் தர்மகர்த்தாக்கள் அவர்களுடைய தர்மகர்தா ஸ்தானங்களைவிட்டு இவ்விடங்களில் தர்மநாசகர்கள் வருவார்கள்.
(10) இனிவரையில் தேவாலயங்களுக்காக உத்ஸவ சேவாதி விஷயமாக வந்துக்கொண்டிருக்கிற வரும்படியானது குறைந்துக் கொண்டேவரும்.
(11) ஆலயத்தில் இருக்கப்பட்ட மிகவும் விலையுயர்ந்த சாமான்களென்ன, ஆபரணங்களென்ன இவைகளை களவு செய்துகொண்டு போகிறதற்காக அவகாசம் ஏற்படும்.
(12) ஆலய ஸொத்தானது, ஷடி அந்த சொத்தின் மூல்யமானது எந்த மார்கங்களில் உபயோகிக்கவேண்டுமோ அந்த மார்கங்களிருந்து நழுவி இதர மார்கங்களில் உபயோகிக்கிறதற்காக, ஸம்பவம் நேரிடும்.
(13) ராஜகீய சட்டப்ரகாரம் ஏற்பாடுகளை நிறைவேற்றுகிறதற்காக ப்ருத்யாதி வர்கங்களுக்கு உத்யோகங்களை கொடுக்கிறதற்காக ஸம்பவித்து ஆலயஸஞ்சயம் பண்ணி வைத்த மூலதனமானது க்ஷீணத்தை அடைந்துக் கொண்டே போகும்.
(14) ஜாதி த்வேஷமானது அதி தீவ்ரமாய் ஏற்படும்.
(15) மதத் த்வேஷமானது அதி தீவிரமாய் ஏற்படும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

(16) தர்மங்கள் நசிக்க நசிக்க இந்திய தேசத்தில் ப்ரஜைகளில் க்ஷோபமுண்டாகும்.

(17) மதகாரணம் கொண்டு பின்ன மத ஜனங்களுக்குள் இங்கும் அங்கும் சண்டைகள் ஸம்பவிக்கும்.

(18) சட்டசபையில் நியாயமார்க்கத்தில் ப்ரஜைகளை பரிபாலனம் செய்வதென்ன, ப்ரஜைகளுக்கு சுகங்களை உண்டுபண்ணுகிறதென்ன, ப்ரஜைகளுக்கு சண்டைகளில்லாமல் பரஸ்பர ஸ்நேஹ பாவத்தோடேயிருக்கும்படி செய்கிறதென்ன, ப்ரஜைகளுக்கு உணவுக்கு குறைவுவாமல் செய்கிறதென்ன, ப்ரஜைகளுக்கு தீர்காயுஸ்ஸுபர்யந்தம் வாழும்படி செய்யும் வழிகளை ஏற்படுத்துகிறதென்ன, மேற்சொன்ன ராஜதர்மங்களுக்கு மேலாக எல்லா ப்ரஜைகளுக்கு அவரவர்களுடைய வர்ண தர்மங்களென்ன, ஆஸ்ரம தர்மங்களென்ன, ஜாதிதர்மங்களென்ன, ச்ரேணீ தர்மங்களென்ன, குலதர்மங்களென்ன, தேச தர்மங்களென்ன, இப்படி அவரவர்களுடைய ஸ்வதர்மத்தின் ப்ரகாரமாய் நடக்கும்படி செய்யவும் ஷை அவரவர்களுடைய விருத்தியில் (ஸஹஜமாயிருந்தும் அல்லது ஆபத்கல்பமாக ஆஸ்ரயித்ததாக இருந்தும்) நியாயமாக நடக்கும்படி செய்யவும், இப்படியெல்லாம் ப்ரஜைகளுக்கு சாதிக்கிறதற்கு பண்ணுகிறதென்ன- இவைகளெல்லாம்சட்ட சபையில் ஸாதிக்காமல் வீண்வம்பில் இழுக்கும்படி செய்கிற மதபரிவர்த்தனத்திலும் தர்மபரிவர்த்தனத்திலும் கொஞ்சம்கூட நன்மை பண்ணும்லிருக்கின்ற விஷயங்கள்மேல் வ்ருதா காலக்ஷேபம் ஆகும்.

(19) ராஜகீய லோகவ்யவஹார தர்மாலயங்களில் (கோர்ட்களில்) வ்யவஹாரங்கள் மிகவும் வ்ருத்தியை அடைந்துகொண்டேவரும் (அதாவது கோர்ட்கேஸ்கள்-க்ரிமினலும்ஸிவிலும் மிகவும் ஜாஸ்தி ஆய்கொண்டேவரும்)- இந்த ஸ்திதியானது இப்பொழுது இருக்கின்ற ராஜகீயவ்யவஹாரிகளுடைய கொள்கை (அதாவது கோர்ட் கேஸ் கம்மி ஆகிக்கொண்டு வரவேண்டியது)க்கு விரோதமாயிருக்கிறது.

(20) மத ஸம்க்ஷோபங்களை, மத சண்டைகளை நிறுத்துகிறதற்காக ரக்ஷா புருஷர்களுக்கு (போலீசாருக்கு) ஸைன்யவர்க புருஷர்களுக்கு (மிலிடிரி ஜனங்களுக்கு) வேலைகள் மிகவும் வ்ருத்தி ஆய்கோண்டேவரும்.

(21) ஆலயப்ரவேசமான பிற்பாடு எந்த உத்தேசத்தோடே மூர்த்திகள் ஆலயப்ரவேசத்திற்கு முன் தேவாலயத்தில் ஸ்தாபிக்கப் பட்டதோ, அந்த உத்தேசமானது, நசிச்சு போனதினால் ஆர்யசமாஜ்காரர்கள் அம்மூர்த்திகளை கீழே தள்ளிவிடும்படி ஏற்பாடுகளை செய்வார்கள்.

(22) ராஜகீயவ்யவஹாரங்களில் [ராஜகீயவ்யவஹாரதர்மாலயங்களில், ரக்ஷா புருஷர்களுக்காக (போலீசாருக்காக) ஸைன்யவர்க புருஷர்களுக்காக (மிலிடரிக்காக) ஷை ஆலயங்களில் வீண் செலவுவ்ருத்தி ஆய்கொண்டே வரும்.

(23) இதர மதஸ்தர்கள் (கிரிஸ்த்து மதஸ்தர்கள் ஷை மஹமதீய மதஸ்தர்கள்) தீண்டாமை ஜனங்களுக்கு ஆலயப்ரவேசமானது கொடுத்ததினால் இதர மதங்களுக்கு போகமாட்டார்கள் என்று ப்ரமையோடு உத்தேசித்து இருக்கின்ற ராஜகீயவ்யவஹாரிகளை பார்த்து அவர்கள் ஸ்வமதங்களுக்கு வரும்படி செய்யும் முயற்சிகளுக்கு ஷை ஏற்பாடுகளுக்கு இவ்விதமாய் பங்கம் வருகிறதை பார்த்து மிகவும் தீவ்ரமானமுயற்சிகள் செய்வார்கள்.

இதர பரிணாமங்கள் அநேகமாய் இருக்கின்றன. மேற்சொன்ன பரிணாமங்கள் முக்யமானவை.

ஆலயங்கள் மேற்சொன்ன இரண்டாம் பிரிவில் வந்தவுடன்

# புராணக்கதை.

## கர்ம மார்க்கத்தின் மேன்மை.

(ராமசந்த்ர ஹரி:)

நற்குலத்திற் பிறந்தவர்களும் ஸம்பத்துள்ளவர்களும் தர்மம் செய்யத்தகுந்தவர்களுமான சில ப்ராமணர்கள், மதிக்குறைவால் மீசி முளைக்கு முன்னமேயே ஸன்யாஸம் நல்ல தர்மமென்றும் அதனால் காடுகளில் சுகமாய் இருக்கலாமென்றும் எண்ணித் தங்கள் சுற்றம் வீடு வாயில்களை விட்டுக்காடு சென்றார்கள். அவர்கள் விஷயத்தில் இந்திரனுக்குக்கருணையுண்டாக அவன் ஓர் பறவை உருவத்துடன் அவர்களை நோக்கி "விகஸத்தைப்புசிக்கும் மனிதர்கள் செய்யும் புண்ணியம் மற்றவர்களால் செய்ய முடியாது. அவர்களுடைய கர்மம் புண்யமானது. அவர்களே உயர்ந்த கதியடைவார்கள்" என்று சொன்னான்.

அந்தப்பிராம்மணர்கள் காய் கிழங்குகள் தின்றும் தங்களையே இப்பறவை புகழ்வதாய் நினைத்துச் சந்தோஷித்தார்கள். அப்போது அப்பக்ஷியானது "நான் உங்களைப் புகழவில்லை. விகஸத்தைப்புஜிப்பவர் வேறு என்று சொல்லிற்று. ரிஷிகள் "நாங்கள் இது மிகவும் நல்லவழி யென்று நினைத்தோம். வேறு நல்வழியுண்டாகில் அதை எங்களுக்குக்கற்பிக்க வேண்டும்" என்று அப்பக்ஷியை வேண்ட அது உபதேசித்ததாவது:—

நாற்கால் பிராணிகளுள் பசுவும், உலோகங்களுள் தங்கமும், சப்தங்களுள் வேதமும், இருகாற் பிராணிகளுள் பிராமணனும் சிறந்தவர்கள். பிராமணனுக்கு பிறப்பு முதல் இறப்பு வரையில் கர்மாக்கள் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கின்றன. அக்கர்மங்கள் சுவர்க்கமடையத்தக்க வழிகளுள் மேலானவை. கர்மங்கள் மந்த்ர ஸித்தங்களென்று வேதவாக்கியங்கள் கூறுகின்றன. இம்மார்க்கத்தில் பக்ஷ தேதைகள், மாஸ தேவதைகள், ருது தேவதைகள் முதலிய தேவதைகளை முன்னிட்டு பித்ரு லோக பதவி, தேவலோக பதவி, பரமாத்ம பதவி யென்றும் மூன்றுவித ஸித்திகளடையப்படுகின்றன.

பிராணிகள் கர்மத்தையே அனுபவிக்கின்றன. கர்மத்தால் எல்லா ஸித்திகளுமடையக்கூடும். கர்மமார்க்கத்தை இகழ்ந்து வேறு வழியை அடைகிறவர்கள் பாவத்தையே அடைவார்கள். இக் கர்மவழியானது உபாஸனத்தோடு சேர்ந்திருக்கவேண்டும். நிலைபெற்ற தேவகார்யம், பித்ருகார்யம், பிரம்ம கார்யம் குருவின் கார்யம்இவைகளைப் பகுத்தறிந்து செய்வதே கர்மமெனப்படுகிறது. கர்மத்தினாலேயே தேவர்கள் மேன்மையடைந்தார்கள். ஆகையால் உத்தமமான கிருஹஸ்தாச்ரமத்தை நீங்கள் வஹிக்கவேண்டும். பிரஜைகளுக்கு இக்கர்மமே மூலம். ஆகையால் அது உயர்ந்தது. ஸந்தேகமில்லை. குடும்பவிதியெல்லாம் இதில் நிலைபெற்றிருக்கின்றன. உத்தமப்ராமணர்கள் கிருஹஸ்த தர்மத்தைத் தவமென்கிறார்கள். வனத்தில் செய்யும் தவம் இதற்கடுத்ததோவிகஸசிகள் பிறரால் ஆக்ரமிக்க முடியாத பதவியடைகிறார்கள். குடும்பத்தில் காலை மாலை இரண்டு வேளையிலும் விதிப்படி அன்னத்தைப் பங்கிட்டு அதிதிகள், தேவர், பித்ருக்கள் உறவினர் இவர்களுக் களித்து மிச்சத்தை யுண்பவர் விகஸாசிகளெனப்படுவர். ஆகையால் தமக்குரிய கர்மமார்க்கத்திலிருந்து நியமமுடையவர்கள் ஸத்யவாதிகளும் குருக்களுமாகிறார்கள். செயற்கரிய கர்மமார்க்கத்தைச் செய்யும் ஜனங்கள் இந்த்ரலோகத்தை யடைந்து மாற்சர்யமின்றி வெகுகாலம் வஸிக்கிறார்கள்" என்று சொல்லிற்று. தர்ம ஸஹிதமான இவ்வார்த்தையைக் கேட்ட பிறகு அவர்கள் நாஸ்திக புத்தியைவிட்டு க்ருஸ்ஸ தர்மத்தையடைந்தார்கள். இதனால் ஸ்வதர்மத்திற் சிறந்த மார்க்கம் வேறில்லை என்றேற்படுகிறது.

"ஆலயங்கள் எல்லோருக்கும் பொதுவான சொத்து; ஆகையால் அதை (அந்த சொத்தை) எல்லோருமனுபவிக்கத்தக்க விஷயம்."

இந்த கொள்கை ப்ராரம்பித்தவுடன் அநேக வகுப்பு கலஹங்கள், வகுப்பு சண்டைகள் அநேகமத கலஹங்கள், மத சண்டைகள் இந்திய தேசத்தில் அங்குமிங்கும் ஸம்பவிக்கும்.

அன்ய மதஸ்தர்கள் மேற்சொன்ன நான்காம் பிரிவில் சொன்னபடி கூசனை செய்யப்பட்ட உத்தேசத்தை நிறைவேற்றுகிறதற்காக முயற்சிகளை செய்வார்கள்.

மேற்சொன்ன ஐந்தாவது பிரிவில் சொன்னபடி தர்மங்கள் நசிக்கிறதற்குப்ராரம்பித்த தர்மயேவ ஹதோஹந்தி தர்மங்களை நசிக்கும்படி செய்தால் அந்த நசித்த தர்மங்கள் நசிக்கும்படி செய்தவர்களுக்கு நாசம் செய்யும்.

எப்படியாயினும் மேற்சொன்ன முதல் பிரிவிலிருந்து இதர பிரிவுகளுக்கு தேவாலயங்கள் நழுவிப் போனால்

தேவாலயங்கள் நிஸ்சயமாய் ப்ரார்த்தனாலயங்களாக ஆய்விடும்.

தேவாலயங்கள் சதா தேவாலயங்களாக இருக்கவேண்டுமானால் இந்திய தேசத்திலிருக்கும் தேவாலயாபிமானிகளாக இருக்கின்ற பக்தகோடிகளெல்லோரும் ஆலய ப்ரவேச மசோதாக்களை சட்டங்களாகவாராமலிருக்கும்படி ஷை ஆன சட்டங்களை ரத்து செய்யும்படி ஏற்பாடுகளை செய்யவேண்டியது.

ஸனாதனதர்ம கார்யாலயம், மதராஸ்.


## அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2. | நால்வர் சரித்திரம் | 0 | 12 | 0 |
| 3. | ,, காலிகோ ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. | பாரதசாரம் | 1 | 2 | 0 |
| 5. | ஸ்ரீ ராமாயண வினாவிடை | 1 | 8 | 0 |
| 6. | பஞ்சரத்னம் | 0 | 12 | 0 |
| 7. | ஷண்முக விஷயம், | 0 | 12 | 0 |
| 8. | ஸ்ரீபாலஷண்முக விஜயம் | 0 | 8 | 0 |
| 9. | ருக்மிணி | 0 | 8 | 0 |
| 10. | தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. | ராஜாதேசிங்கு | 0 | 5 | 0 |
| 12. | திருக்குறள் நீதிக்கதைகள். | 0 | 10 | 0 |
| 13. | தசகுமார சரித்ரம் | 0 | 6 | 0 |
| 14. | திருப்புகழ் ரத்னமாலை | 0 | 3 | 0 |
| 15. | கந்தரலங்காரம் | 0 | 2 | 0 |
| 16. | திருஞான சம்பந்தர் | 0 | 2 | 6 |
| 17. | விசாரசன்மர் | 0 | 3 | 0 |
| 18. | மூர்த்தி நாயனார் | 0 | 3 | 0 |
| 19. | திருநாவுக்கரசர். | 0 | 2 | 0 |
| 20. | குகன். | 0 | 4 | 0 |
| 21. | திருவகுப்பு. | 0 | 4 | 0 |
| 22. | பாராயண திருப்புகழ் | 0 | 2 | 0 |
| 23. | வேல், மயில் விருத்தம் | 0 | 1 | 0 |
| 24. | திருப்புகழ் விருத்தியுரை | 8 | 0 | 0 |

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

## ஸ்ரீ ஸ்தவம்.

மூலம் நாகரத்திலும்தமிழிலும்
சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியரால்
எழுதிய உரையுடன்
விலை அணா 0—4—0
ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்கூடம் லிமிடெட்.
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்,




# கல்ப ஸூத்திரங்கள்,

(ப்ரும்மஸ்ரீ T. V. தர்மராஜ கனபாடிகள்.
(வேதபாடசாலை, திருகோகர்ணம்)

ஆர்யர்காள்! இக்கற்பங்களுள் ஆதிகால வரையில் எவர் சூத்திரத்திலுள்ளபடி ஸம்ஸ்காரத்தை அதாவது கற்பாதானத்தைப் பெற்றோ அவர் அச்சூத்திரத்தை விட்டால் பதிதராவர் என்றுள்ள வசனத்தின் கருத்து யாதெனில்:— இச்சூத்திரங்கள் அவசியம் ஓர் அந்தணர் செய்து கொள்ளவேண்டிய எல்லா ஸம்ஸ்காரங்களையும் சொல்லுவதால் அவைகள் எந்த சாகையினின்று எடுக்கப் பட்டனவோ அச்சாகை அச்சூத்திரத்தால் சுருக்கப்பட்டமையின் ஒரு சாகையில் சிறிதும், மறுசாகையிற் சிறிதும் ஸம்ஸ்கரிக்கப் பட்டினும் அவன் ஸம்ஸ்காரம் ஒரு வழியிலும் முற்றுப் பெறாது வீணாம். ஆதலாலும் தந்திர சங்கரதோஷமுண்டாமாதலாலும்சிறப்பாய் அவரவர்க்கு விதிக்கப்பட்ட விதியை விட்டொழித்துப் பொதுவாயுள்ளதைக்கொள்ளலாமாயினும் வேறொரு சார்பாருக்குச் சிறப்பாகாக விதிக்கப்பெற்ற மற்றொரு விதியைக் கொள்ளக்கூடாது, ஆதலாலும், அது பொருந்தாதென்பதே.

இனிப்பொதுவாயுள்ளது எதுவெனில், போதாயனமே யென ஸ்மிருதிக்காரர் பலவிடம் புகலுற்றார். மேலும் போதாயன மாமுனிவர் குரு, என்றும், மற்ற ஸூத்திரக்காரர் சீடரென்றும் அப்போதாயன முனிவர் எல்லாச் சாகைகளிலுமுள்ள எல்லா விஷயங்களையும் அடக்கி சூத்திரம் செய்திட்டார் என்றும், அச் சூத்திரத்தில் அகப்படாத தொன்றுமில்லை என்றும், அவர் சொன்ன பொது விஷயத்தை அறிஞர்களே அறிந்து அதன் வழி நடப்பாராதலால், அவ்விஷயம் வேண்டியதில்லை என்று கருதியே மற்ற ஸூத்திரக்கார் யக்ஞோபவீததாரணம், உதகசாந்தி, விருஷோத்ஸாஜனம், திருமாங்கல்ய தாரணம், சிவார்ச்சனம், ப்ரதிஷ்டை, விபூதி தாரணம், இவைபோன்ற பல விஷயங்களை விட்டு விட்டார். இவ்விஷயங்கள் மட்டில் இன்றும் இதர சூத்திரிகள் போதாயனத்திடமே கொள்வாராய் நிற்க, ஓர் சமயம் வேறு சூத்திரம் அகப்படாவிடம் அப்போதாயனத்தைக்கொண்டு எந்தக் கிரியை செய்யினும் செய்யலாம் என்று பெரியோர் சம்மதம்.

அதுவும் கிடைக்காவழி வேறு அங்கு கிடைக்கும் சூத்திரங்களைக் கொண்டேனும் கிரியையை நடத்திப் பிறகு தன் ஸூத்திரம் கிடைத்தபொழுது மந்திர விருத்தியாவது செய்துகொள்ளவேணடும். இனி எந்த ஸூத்திரமாவது ஒன்றைக்கொண்டே ஸம்ஸ்காரம்செய்து கொள்ளவேண்டி இருத்தலால் அவைகள் அந்த அந்தணர்க்கு முக்கியம் என்பது பசுமரத்தாணியாயிற்று. போதாயன ஸூத்திரம் மிக விரிந்தது. அதில் அடங்காப்பொருள் இல்லை. விரிவில் அதற்கடுத்தது ஹிரண்யகேசிய ஸூத்திரம் எனப்படும் ஸத்தியாஷாட ஸூத்திரம். ஆயின் ஸூத்திர சாங்கர்யம் வாராது கூடுமான வரையில் காக்க வேண்டும். அவ்விதம் சூத்திரங்களைப் பரிபாலித்து வந்தமையாற்றான் இவ்வளவு காலம் பிராமணர் வேதாதிகளை விட்டொழித்திடினும் வைதிக சம்ஸ்காரங்களை மட்டில் பெற்று வருகிறார்கள்.

நிற்க, அவற்றில் இக்கற்ப ஸூத்திரத்தால் மட்டில் இக்கலிகாலத்தவர் வருணாசிரமம் சிறிது இருக்கின்றது. அந்தோ! இவ்வளவிலே இச் சூத்திரங்களில் உள்ள சிரத்தையும் ஒருபுறம் குறைந்துவருகிறதைப் பார்க்க மனம் திடுக்கிடுகின்றது. பாருங்கள்! இக்கலியின் ஐந்தாவதாயிரத்திறுதியில் பிறந்த மகானுபாவராய வைதிகரும், லௌகிகரும் இந்த சூத்திரங்களை சற்றும் கவனியாது அலக்ஷியம் செய்து வருகிறார்கள். இவர்களில் லௌகிகர்க்கு அலக்ஷியம் உண்டாகக் காரணம் இதில் சிரத்தைக் குறைவும், அதை விசாரிப்பவரின்மையும், பரகீயபாடைப் பயிற்சியும், பரகீயர் சகவாஸமுமே. வைதிகற்கோ வீண் அகங்காரமும், அஞ்ஞானம், வஞ்சகம் எவர்க்கும் விரோதமின்றிப் பிழைக்கவேண்டியவெண்ணம் இவையே. இவர் இக்காலத்தில் எந்த ஸூத்திரம் பண்ணிவைக்க வேண்டும் எனினும் அதற்கு எழுத்துக்கூட்டித் தந்திரத்தை விட்டு மந்திரத்தைப் புரட்டி வேலையை முடித்துவிடுகிறார்கள். இவரை யாரேனும் ஏதேனும் ஒரு விஷயத்தில் ஸூத்திரத்தில் என்ன இருக்கிறது? என்று கேட்டால் இதுதான் இருக்கிறது என்று ஏதேனும் ஒருபழம்சுவடியைக்கொண்டுவந்து போட்டிடுவர். இவருக்குச் சூத்திரமிதுவே; கற்பமிதுவே; பாஷ்யம் இதுவே; காரிகை இதுவே; எல்லாம் இதுவே.

ஆனால் இக்காலத்தில் பெரும்பான்மையில் எல்லோரும் இதன்படி இருந்தாலும் சில மகான்கள் பாவபயத்தால் சூத்திர, பாஷ்ய காரிகா விருத்திகளைப் பார்த்தும் செய்வித்து வருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் 1000க்கு ஒருவர் இரண்டுபேர்கள்தான் இருப்பார்கள். மற்றவர்கள் எல்லாம் ஒன்றும் அறியாதவர்களே.

ஆகையால் உபாத்தியாயர்களை சீர்திருத்தும்பொருட்டு ஓர் சபையை ஏற்படுத்தி அந்த சபையில் பரீக்ஷையில் தேறினவர்களைக் கொண்டே நம்முடைய கர்மபத்ததியைச் செய்துகொள்ளவேண்டியது அவசியம். இங்ஙனம் ஓர் வியவஸ்தை நியமித்து எந்த் சூத்திரங்களால் நமக்கு மிகுதியான லாபமும் புகழுமுண்டாமோ அந்த சூத்திரங்களே வெளிப்படுத்தத் தக்கவைகள் என்றறிக.

ஆர்யதர்மாபிமானிகளே! மேலே சுருக்கி கூறிய விஷயங்களை சிந்தியுங்கள். இந்தக் கலியின் பெரு வெள்ளத்தில் அழுந்திப் போகாமல் நாமெல்லாம் தப்பிக்கொஞ்சகாலமாவது நம் வாணாளைக்கழிக்க வகையுண்டாவென்று யோசியுங்கள். இக்கடிதத்தையும் இதன் மேல் தங்களுக்குத்தோன்றும் அபிப்பிராயத்தையும், ஆரிய அபிமானிகளாகிய பத்திராதிபர் யாவரும் வெளியிடுங்கள்! நிருபநேயர்கள் வெளி வாருங்கள்.

இவ்வல்லல்கள் ஒருவாறு நீங்குமாறு வகை தேடுங்கள். மூலைக்கு மூலை ஸபை கூடுங்கள். சாதி சமயம் கெட்டாலும் கெட்டும்,சாண்வயிறு வளர்ப்பதே போதுமென்று அனியாயமாக ப்ரஷ்டர்களோடு சேர்ந்து அரிய ஜன்மத்தை வீணாக்காதீர்கள். நமது "ஆர்யதர்மத்தைப் போன்ற அரும் பத்திரிகைகளைப்பலருக்கும் வாசித்துக்காட்டி, அறிவை மூட்டி, அஞ்ஞானத்தை ஓட்டி, சபைகளைக்கூட்டி, சமர்த்துக்களை நீட்டி, துராசாரங்களை வாட்டி, கலியின் பீடையை வீட்டி, மேட்டான மேட்டியாய் வாழ நினையுங்கள். நண்பர்களே! வந்தனம். சுபம் — சுபம்.

(3-ம் காலம் தொடர்ச்சி)

விர்த்தி இந்தியாவில் முதலில் அவசியம். இன்னொரு விண்ணப்பம்:—பல விடங்களில் நடத்தும் ஸம்பவங்களைப் பத்திரிகைக்கு அனுப்புபவர்கள் உபந்யாஸம் முதலிய விஷயங்களின் விபரங்களை ஜாஸ்திசெய்தும், மற்றவைகளைக் கூடியவரையில் குறைப்பதும் மிகப் பிரயோஜனகரம் தாங்கள் அனுப்புபவைகளை ஸௌகரியப்படி மாத்தி பிரசுரிக்கப் பத்திராதிபாவர்களுக்கு அனுமதி கொடுத்தால் அவர் உசிதம்போல் பிரசுரிக்கவும் ஸௌகரியம்.

ஓர் அபிமானி.

# ஆஸ்திகர்களுக்கு ஒரு விண்ணப்பம்

News என்பது North, East, West, South ஆகிய எல்லா திக்குகளிலிருந்தும் வரும் வர்த்தமானம் ஆகையால் Newspaper (பத்திரிகை) லோக வாசனையை, விர்த்திசெய்வது. லோக வாஸனையோ ஆஸ்திக்யாபிவிர்த்தியை யுத்தேசித்துக் குறைத்து வந்துவிட்டு விடவேண்டியவைகளில் ஒன்று. ஆகிலும் கொஞ்சகாலமாக ஆங்கிலப் பத்திரிகைகளையும் ஆங்கிலம் தெரியாதவர்கள் ஸ்வபாஷைப் பத்திரிகைகளையும் மிகவும் விருப்பத்துடன் படிக்காதவர்கள் மிகக் குறைவு. அவைகள் அனாத்ம விஷயங்களையே விருத்திசெய்கின்றன. ஆஸ்திகர்களுக்கு உபயோகமில்லாததோடு விருத்தமும் அப்படியிருந்தும் பழக்கத்தை உடனே முழுவதும் விடுவது ஸாத்தியமல்ல. லோக வியவஹாரமும் நமக்கு சம்பந்தப்பட்டவரையில் அவசியம் ஆர்யதர்மபத்திரிகை இப்போது வாவா முன்னிருந்த குறைந்த சந்தாவை உயர்த்தாமலேயே பக்கங்களை ஜாஸ்தி செய்தும் ஆஸ்திக விஷயங்களோடுகூட நமக்கு அவசியான லோக விஷயங்களையும் பிரசுரித்து வருகிறது. இதரப் பத்திரிகைகளுக்கு வருஷத்திற்கு ரூ. 20, 30, ஆகிறது. இதற்கோ ரூ. 3 தான். இப்படியிருந்தும் அதற்குப் போதுமானவும் உசிதமானதுமான ஆதரவு இல்லையென்று தெரிகிறது. ஏராளமான சந்தாதார்கள் சேர்ந்தால் ஆர்ய தர்மம் பத்திரிகை இதே சார்ஜில் இன்னும் கொஞ்சம் பக்கங்கள்சேர்த்தும், இன்னும் லௌகீக விஷயங்களை ஜாஸ்தி செய்தும், இதரப் பத்திரிகைகள் அபேக்ஷயன்னியில் வெகுபேர்கள் அதொன்றைக்கொண்டே ஆஸ்திக விஷயங்களையும், லௌகீக விஷயங்களையும் தெரிந்துகொள்ளக்கூடியதாகும். ஆதரவு இன்னும் ஜாஸ்தியானால் இந்தப் பத்திரிகை வாரம் இரு முறை, மும்முறை, தினஸரி இப்படியாக மாறவும் ஸாத்தியம். வெகு காலமாக ஆஸ்திக தினஸரிப் பத்திரிகையின் அவசியம் எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு பிரதி ஸம்மேளனத்திலும், ஸபை மீட்டிங் முதலியவைகளிலும் அது ஒரு தீர்மானமாக ஏகமனதாய் நிறைவேறப்பட்டு வருகிறதே தவிர அப்படி இதுவரையிலும் ஒருபத்திரிகை கூட ஏற்படாதது ஆஸ்திகர்களின் துர்ப்பாக்கியமும், ஆஸ்திக்கியத்திற்கு செல்வாக்கில்லாத முக்கியகாரணங்களில் ஒன்றும். புதிதாய் ஒரு பத்திரிகை ஏற்படுத்துவது அநேக விஷயத்தில் சிரமம்.

ஆதரவு எத்தனை தூரம் குறைந்தும் உத்ஸாகக் குறைவன்னியில் நெடுநாளாகத் தொடர்ச்சியாய் நடத்தப்பட்டுவரும் ஸஹாயமும் அத்தியந்த உபகாரியுமாகிய இந்த ஆரிய தர்மப் பத்திரிகையை நாம் ஏன் ஏராளமான பேர்கள் ஆதரித்து சிரேயஸை அடைவதில்லையென்பது பெரிய ஆச்சரியம். இனியாவது நாம் அப்படியில்லாமல் இது முதல் ஒவ்வொருவரும், மிகச் சிரத்தையுடனும், உத்ஸாஹத்துடனும் சந்தாதார்களை ஸாத்தியப்பட்டவரை விர்த்திசெய்தும், கூடியவரையில் ஜாஸ்திப் பேர்கள் படித்துக் கிருதார்த்தர்த்தை அடையும்படி செய்யவேணுமாயும், பத்திராதிபாவர்கள் எப்போதும்போல் உத்ஸாகத்துடன் நடத்திவருவதோடு சிரமமாய் ஸாத்தியப்பட்டவரையில் அத்தியாவசியமான லௌகீக விஷயங்களை ஜாஸ்திப்படுத்தி இதரப் பத்திரிகைகளின் அபேக்ஷை ஸாதாரணமாய்த் தேவையில்லாதபடி செய்தும், பத்திரிகையை விர்த்திசெய்வதற்குத் தேவையுள்ளவைகளை அப்போதைக்கப்போது எல்லாரும் அறியும்படி பத்திரிகையில் பிரசுரிக்கவேணுமாயும் கேட்டுக் கொள்கிறேன். இவை அன்யோன்யாச்ரயங்களாகிலும் ஸஹாய

(தொடர்ச்சி 2-ம் காலம் பார்க்க)

461

275245

463

மார்சலியே



சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச்சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்




# வெளியூர்ச் செய்திகள்.

## திருவாதி.

### ஸ்ரீ கிருஷ்ணஷ்டமியில் ஸ்ரீ கிருஷ்ணவதார கதாப்ரவசனம்.

ஜன்மாஷ்டமீ புண்ய காலத்தில் திருவாதி பாவாஸ்வாமி அக்ரஹாரம் ஹநுமத் ஸன்னிதானத்தில் சென்ற வருஷம் போல், இவ்வருஷமும் மேலக்காவேரி பிரம்மஸ்ரீ சிவராம சாஸ்திரியளவர்களால்ஸ்ரீமத்பாகவதப்ரகாரம் ஸ்ரீ க்ருஷ்ணவதார கதாப்ரவசனம் செய்யப்பட்டது.

அதற்கு ஆஸ்திகர்களும், ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயர்களும், ஸ்திரீ பால வ்ருத்தர்களும் வந்திருந்தனர். கதாப்ரவசனத்தில் ஸ்ரீசாஸ்திரியளவர்கள் கோகுலாஷ்டமீ புண்யகாலத்தின் விசேஷத்தையும் ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தின் மஹிமையையும் அதை பாகவதக்ரந்த மூலமாய் ச்ரவணம் செய்வதிலுள்ள விசேஷத்தையும் ஸ்ரீ ராமனுடையவும், ஸ்ரீ கிருஷ்ணனுடையவும் அவதாரத்திலுள்ள விசேஷங்களையும் ஸ்ரீ க்ருஷ்ண பக்திதான் மோக்ஷஸாதனமான ஞானத்திற்கு அந்தரங்கஸாதனமென்பது மதுஸூதன ஸரஸ்வதி முதலிய பெரியோர்களுடைய அநுபவத்தினால் தெரிகின்ற தென்பதையும், பகவான் ஸ்ரீகிருஷ்ணனுடைய அவதாரகாலத்திய திருமேனியின் அழகையும் இன்னும் அரியபெரிய பல சாஸ்திரீய விஷயங்களையும் ப்ராசீன ஸம்பிரதாய முறையில் மிகவும் தெளிவாயும் பக்திரஸம் ஏற்படும் விதத்திலும் சிறந்த படிப்புடனும் மதுரமான வாக்குடனும் உபபர்தனம் செய்தது மிகவும் ச்லாக்யமானதாகும். ஷ சாஸ்திரியளவர்கள் பால்யவயதுள்ளவர்களாயிருந்த போதிலும் இவ்வளவு பர்யந்தம் அழகாய் உபந்யஸித்தது போற்றத்தக்கதே. ஸ்ரீசாஸ்திரியள் ஹநுமத்ஸந்நிதானத்தில் உபன்யஸிக்கும் பொழுது அக்ரஹார வாஸிகள்விசேஷ சிரத்தையுடன் ஸ்ரீஹநுமாருக்கு பூஜை முதலியவை செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு பிரார்த்தித்தது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விதம் உபன்யஸித்த ஷ சாஸ்திரியாளவர்களுக்கும் ச்ரவணம் செய்த என்னை போன்றவர்களுக்கும் மேன் மேலும் இத்தகைய கார்யங்களில் விசேஷ சிரத்தையையும், நல்ல பாண்டித்யத்தையும் ஆரோக்யத்தையும், கர்மாநுஷ்டானத்தில் ஊக்கத்தையும், பகவத் பக்தியையும், இஷ்டங்களையும் ஸ்ரீபகவான் கிருஷ்ணபரமாத்மா அளித்தருள் புரிவாருக.

சேஷருமசாஸ்திரீ.

## ஆத்தன்குடி.

### ஸநாதனதர்ம மகாஸபை.

வெகுதான்ய-ஸூ ஆவணி-மீ 4௳ இந்த ஸபையின் ஆருவதாண்டான முதற்கூட்டம் திரு. சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. கடவுள் வாழ்த்துக்குப்பின் ஐந்தாம் ஆண்டு நிறைவிழா சம்மந்தமான வரவு செலவு கணக்கு ஆஜர் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

P.S. சுப்பிரமணிய கனபாடிகள், வெங்கடராம கனபாடிகள், T. P. ஜகதிசய்யாவர்கள், S. வெங்கட்டராமய்யாவர்கள், M. திருவேங்கடமய்யங்காரவர்கள் முறையே, வித்யை, தெய்வபக்தி, காங்க்ரசும் ஆலயப்பிரவேசமும், அங்கத்தினர் கடமை, ஒழுக்கம் என்னும் விஷயம்பற்றி உபந்யசித்தபின் வந்தனோபசாரத்துடன் சபை இனிது நிறைவெய்தியது.

M. திருவேங்கிடமய்யங்கார்,
காரியதரிசி.

## திருவானைக்காவல்

### உபந்யாஸம்

இவ்வுலகில் ஆங்காங்கு தர்மப்பிரசாரம் செய்து ஆஸ்திக்யத்தை நிலைநாட்டிவரும் ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீஜகத்குரு பரமாசார்யாளின் அனுக்ரகத்தால் நடந்துவரும் ஸ்ரீஜம்புகேசுவரம் ஸ்ரீஜகத்குரு வித்யாஸ்தானத்தில் பகுதான்யஸூ ஆடிமீ 26-௳ பூர்வாசிரமத்தில் திருவிசலூரில் "சிரௌத பூஷணம்" முதலிய பிருதுகள் பெற்றுஆஹிதாக்னிகளாய் இருந்துதற்காலம் ஸன்யாஸம் பெற்று பிரகானந்த ஸரஸ்வதி என்று யோகபட்டம் பெற்று விளங்கும் மகான்கள் மிகவும் அழகாகவும் ஸரஸமாகவும் உள்ள நடையில் "உபாகர்ம" என்ற விஷயத்தை உபன்யசித்தார்கள். அவ்வுபன்யாஸத்தின் முக்ய விஷயம் பின் வருமாறு.

தற்காலம் எல்லோரும் சிஷ்ய சுத்த பௌர்ணமியில் அனுஷ்டிக்கவேண்டிய "அத்யாயோத்ஸர்ஜன" கர்மாவை செய்யாமல் (காமோகார்ஷீது) ஜபம் செய்து வருகிறார்கள். இந்த ஜபமானது உத்ஸர்ஜனார்த்தமாக எந்த ஸூத்ரக்காரர்களாலும் சொல்லப்படவில்லை.

மேலும் ஷ காமோகார்ஷீதுஜபமும், ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் முதல் தாச்னம் 26,27 கண்டங்களில் இருக்கும் வசனங்களில் ஏற்பட்டபடி காயத்ரீ ஜப ஹோமங்களும் விகல்பமாக மித்யாதீதபிராயச்சித்த தோஷவதபதநீய பிருயச்சித்தம் முதலானவைகளுக்காக ஏற்பட்டவைகள். ஆதலால் நியாயப்படி ஆச்வலாயந ஸூத்ரம் முதலியதை அனுசரித்து உபாகர்மதினத்தன்று காலையில் கௌணகல்பமாகவாவது உத்ஸர்ஜன ஹோமம் செய்து பிறகு உபாகர்ம செய்வதுதான் உசிதமாகும்.

என்று தகுந்த ஆகாரங்களுடன் உபன்யஸித்தார்கள். ஷ உபன்யாஸத்தைக் கேட்க பல பண்டிதர்களும் பல கனவான்களும் வந்திருந்தனர். அவ்விதமே ஷ வித்யாஸ்தானத்தில் உத்ஸர்ஜன ஹோமபூர்வமாய் உபாகர்ம நடந்தது.

சனுதனி.

## "பிரதம விவாகம்"

### ஒரு சந்தேகம்.

பிரதம விவாகங்கள் உத்தராயணத்தில் நடைபெறுகின்றன. ஆவர்த்தனங்களோ தக்ஷிணாயனத்தில் நடக்கின்றன. ஏதோ அநுகூலங்களை உத்தேசித்து பிரதம விவாகங்களும் இப்போது தக்ஷிணாயனத்தில் நடக்கின்றன இது சாஸ்திர சம்மதமா? ஆந்திரர் முதலியவர்களுக்கு இது அனுஷ்டானமாயிருக்கின்றது. ஆனாலும் ஒருநாள் விவாகம் மாதிரி இது திராவிடர்களுக்கு (ஸ்மார்த்த ப்ராம்மணர்களுக்கு) அநுஷ்டிக்கத் தகுந்ததா? சாஸ்திரப்படி விரோதம் இல்லையா? தக்ஷிணாயனத்திலும் ஆவணி மாதத்திலேயே செய்யலாமா? அல்லது மற்றமாதங்களிலும் இவ்வித ப்ரதம விவாகம் செய்யலாமா? இது விஷயத்தை நன்கு கற்றறிந்த பண்டிதர்கள் ஆராய்ந்து 'ஆர்யதர்மம்' பத்திரிகைமூலம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

## உடையாளூர்.

விநாயக சதுர்த்தி உத்ஸவம் எப்போதும் போல் நடந்துவருகிறது. வேதபாராயணம், சமாராதனை பிரம்மஸ்ரீ ஆத்மநாத சாஸ்திரிகள் ஏகதேசமாகவே நடத்துகிறார்.

ஒரு நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

4.68

ஆரியதர்மம்

1 - 9 - 1938

4 ல

23 34

215246

538 8
215246
467
OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS 28 SEP 1938

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

புஸ்தகம் 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஞு ஆவணிமீ 16உ 1938ஞு ஸெப்டம்பர்மீ 1உ | ஸஞ்சிகை 34

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

**விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| பக்கம் 1-க்கு தடவை 1க்கு | ரூ. | 20 0 0 |
| இஞ்சு 1-க்கு தடவை 1க்கு | அணா. | 0 8 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.

வாயநுதாபம் போதாது! திருச்சி ரயில் விபத்திற்கு ராஜப்ரதிநிதி கவர்னர் முதலியவர் அநுதாப தந்தி(தமது செலவில்)அடித்துவிட்டனர். இதுமட்டிலும் போதாது. இறந்த ஏழை குடும்பங்களை ரெயில்வே கம்பெனி செலவில் பாதுகாக்கவேண்டும். பலர்விளக்குடன் கூக்குரலிட அது கவனிக்கப்படாத காரணம், ஜலம் லயனை அறுத்த காரணமிரண்டையும் தேடி பரிஹாரம் செய்யவேண்டும். வண்டி ஓட்டுபவர் குடிக்கக்கூடாதென பொதுவான விதிசெய்யவேண்டும்.

விக்ஞானசாஸ்திரம் நல்லதற்கல்ல!என்ற முடிவிற்கு பல மேனாட்டவர் ஆதாவளிக்கின்றனர். ஆகாயவிமானம் வெடிகுண்டு,விஷப்புகை பீரங்கி முதலியன காருண்யத்தை அறவே ஒழித்து உலகத்தீமைக்கும் ஸங்காத மாணத்திற்கும் பயன்படுகின்றன. ஆதலின் விக்ஞான சாஸ்திரம் வெறுக்கப்படுகிறது. பௌதிகத்தில் அதிகம் ஊடாடாதே என்ற முன்னோர் கொள்கை ஆதரிக்கப்படுமா?

பாதிவிதைக்கு பாதி கரிக்கு:- என்பதே அர்த்த ஜாதிய நியாயமெனப்படும். கொள்கையில் ராஜாஜி பஞ்சாங்கம் கணிக்கும் நம் முன்னோரைப் போற்றுகிறார். ஆனால் அதே பெரியார் கூறும் தீண்டாமை முதலிய சாஸ்திரம் பிரமாணமல்ல என தூற்றுகிறார். என்னே நீதி.

நாலுமூன்றானல் யாதுபயன்? ரிலிஜஸ் எண்டோன்மெண்போர்ட் நால்வரைக்கொண்டது. தற்கால மந்திரி அதை மூன்றாக்குகிறார். வீண்செலவும் விபரீத செய்கையுமுள்ள அதை அடியுடன் ஒழித்து, ஆகமந்தெரிந்த ஆஸ்திக லௌகிகபண்டிதர்களை மேம்பார்வை பார்க்கச்சொல்லின் பூஜாதிகள் ஒழுங்காக நடக்கும். செலவுமில்லை. தர்மமும் விருத்தியாகும்.

ஜாதி அழிந்தால் குடும்பமுமழியும்! ஜாதி என்பது சாபக்கேடென இந்தியக்கிளிகளும் அன்னியர் சொல்லை அழகாக சொல்கின்றன. தாந்தோனியாய் கேவல சுயநலத்தையே கருதி, அமைதியான வாழ்க்கை, பரஸ்பர உபகாரம்,தன்பந்து தன் ஸமூஹம், தனது ஜில்லா, மாகாணம், என்று படிப்படியாக ஒழிக்கவே இத்தகைய பிரசாம் பயன்படும்.

விஷ பரீக்ஷைவேண்டாம்:-ஆழ்ந்த நாஸ்திக வாதம் வேரூன்றி அதனால் முளைத்ததே ஆலயப்ரவேசம். மலையாளத்தில் பரீக்ஷை பார்ப்பதைவிட 'ஒரே உத்திரவில் ஆலய சொத்துக்களை பறிமுதல்செய்து' தன்னிஷ்டப்படி அக்கட்டடங்களை கலாசாலையாகவோ, ஆஸ்பத்திரியாகவோ மாற்றிவிடலாம்.

நமது கடமை என்ன? முன்போல் எல்லா மடாதிபதிகளும் தத்தம் சீடருடன் விஜயம் செய்யவேண்டும். உடனே தீவ்ர தர்மபிரசாரம் செய்யவேண்டும். ஊரூராக கண்டனக்கூட்டம் கூட்டவேண்டும். பல மஹஜர்கள் பல்லாயிரக் கை எழுத்துடன் மந்திரி ஆபீஸை மறைக்கவேண்டும். சட்ட நிபுணர் நீதிஸ்தலத்தில் வழக்கு தொடரவேண்டும். உயிரையும் மதியாது தர்மத்தை காக்க அனைவரும் முன்வரவேண்டும். தொண்டர்படை திரட்டவேண்டும்.

உண்மையாயின் யாருக்குவெட்கம்!குடந்தை தார்மிகர் கூட்டம் குழப்பத்துடன் கலைந்ததாக சில பத்திரிகை கூறுகின்றன. அதைக்கலைத்த காங்கிரஸ்காரரும் ஸ்வராஜ்யத்திற்கு தியாகம் செய்த மந்திரிகளும் பேச சுதந்திரமளிக்காததற்கு வெட்கப்படுவாரா?

படக்காக்ஷியின் தீமை வெளியாகிறது சென்னையில் ஜீவநநிமித்தம் ஆடவந்த ஒரு சிறுமியின் கற்பை படக்காக்ஷி சொந்தக்காரர் கெடுத்ததாகவதந்தி நடக்கிறது. தார்மிகர் வெறுப்பது இதற்காகத்தான்.

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர், கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

## ஸ்ரீ சிதம்பர பாகவதர் காலமானுர்.

அபிநவ பாராசாரியரென்றும், மஹா கதக கண்டீரவமென்றும் பிருதங்கள் வாய்ந்தவரான மாங்குடி பிரம்மஸ்ரீ சிதம்பரபாகவதர் அவர்கள் 25உயன்று மாங்குடியில் காலமானுர். இவர் சிறிது நாளாக சரீர அஸௌகர்யமடைந்திருந்தார்.

ஸ்ரீமான் பாகவதர் சங்கீதத்திலும், கதை செய்வதிலும் நிகரற்ற பெருமைபெற்றவராயிருந்தார். தீவ்ரமான ஸநாதனதர்ம அபிமானம் பெற்றவர். கதைகள் நடத்தும்போது ஜனங்களுக்கு ஸநாதர்மாபிமானம் ஏற்படும்படி பிரஸங்கிப்பதை ஓர் விரதாகக் கொண்டிருந்தார். இவருடைய பிரிவு பல வழிகளிலும் வருந்தத்தக்கது.

## இந்தியா மந்திரி—வைஸ்ராய் தகராறு?

இந்தியாவில் ஸமஷ்டி திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயமாக லார்டு லின்லிதோவுக்கும் இந்தியா மந்திரிக்கும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டிருக்கிறதாம். காங்கிரஸ் கார்ர்களின் விருப்பப்படி ஸமஷ்டி திட்டத்தைச் சிறிது திருத்தி அமைக்க வேண்டுமென்று வைஸ்ராயும் அபிப்பிராயப் படுகிறாரும். இந்தியா மந்திரி இதற்கு ஸம்மதிக்கவில்லையாம். இவ்விஷயமாக இந்தியர்களின் அபிப்பிராயத்தை அறிய இந்தியா மந்திரி இந்தியாவிற்கு வரக்கூடுமென்றும் ஸிம்லாவில் பேச்சு நடக்கிறதாம்.

## படேலுக்கு அவமரியாதை.

மாணவர்களின் நடத்தை.

காராச்சியில் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் படேல் மாணவர் கூட்டமொன்றில் பேசும்போது பல மாணவர்கள் படேலுக்கு விரோதமாகச் சத்தம் போட்டனர். இதனுல் கோபமடைந்த ஸ்ரீமான் படேல் திடீரென்று பேசுவதை நிறுத்திவிட்டு வெளியே போக நேர்ந்ததாம். காங்கிரஸ் தலைவர்களுக்குக் கூடவா இது?

## முஸ்லீம் விவாஹ ரத்து மசோதா.

இந்திய சட்டஸபையில் முஸ்லீம் ஸ்திரீகளின் விவாஹரத்து விஷயமாக ஒரு மசோதா கொண்டுவரப்பட்டு விவாதத்திற்கு வந்தது. முஸ்லீம் ஜட்ஜே விவாஹரத்து வழக்குகளை விசாரிக்க வேண்டுமென்பதையும் மதம் மாறிய ஹிந்து ஸ்திரீகளைப்பற்றிய பிரிவையும் பலர் ஆக்ஷேபித்தனர்.

## 150 பேர் மாண்டனர்.

ஸமீபத்தில் பர்மாவில் நடந்த கல்ஹத்தினுல் இதுவரை 150 பேர் வரையில் இந்தியர்கள் கொல்லப்பட்டதாக தெரிகிறது, 600 பேர்வரை காயமடைந்தனர். நூற்றுக்கணக்கான ஜன்ங்கள் அந்த தேசத்தை விட்டு ஓடிவந்துவிட்டனர்.

## ஸுபாஷ் போஸ் வருகை.

ஸெப்டம்பர் 2உ சென்னை.

காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் ஸுபாஷ் சந்திரபோஸ் தென்னிந்திய சுற்றுப்பிரயாணத்திற்காக ஸெப்டம்பர் மாதம் 2உயன்று சென்னை வருவாரென்று தெரிகிறது.

## ஆமதாபாத் ஹோட்டல்களின் நிலைமை.

காந்திஜிக்குக் கடிதம்.

ஆமதாபாத்திலுள்ள ஹோட்டல்களில் தீண்டாதார் அநுமதிக்கப்படவேண்டுமென்ற ஸர்க்கார் உத்திரவு காரணமாக அநேக ஹோட்டல் மூடப்பட்டுவிட்டனவென்றும், இன்னும் பல மூடப்படவேண்டிய நிலைமையில் இருப்பதாயும், இவ்விஷயத்தை உடனே கவனிக்கத்தக்கது செய்யவேண்டியதென்றும் காந்திஜிக்கு ஹோட்டல்கார் ஸங்கத்தலைவர் அறிவித்திருக்கிறார்.

## மாணவர்களின் ஆர்ப்பாட்டம்.

காந்திஜீயின் முன்பாக நடந்தது.

மத்ய மாகாண மந்திரி ஸபைத்தகாறில் கார்யக்கமிட்டியானது டாக்டர் காரே விஷயத்தில் பக்ஷபாதமான முடிவு செய்து விட்டதாக காந்திஜீயிடம் புகார் சொல்லுவதற்காக ஆயிரக்கணக்கான மாணவர்கள் நாகபுரியிலிருந்து சிவகான் வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். காந்திஜி அவர்களைக்கண்டு தமது ஸமாதானத்தை விளக்கினராம்.

## முஸ்லீம்களுக்கு அதிக உத்யோகம்.

தீர்மானம் நிறைவேறியது.

வங்காள சட்ட ஸபையில் முஸ்லீம்களின் உத்யோக விதம் பற்றி ஓர் தீர்மானம் நிறைவேறி.விட்டது. அதன்படி முஸ்லீம்களுக்கு 100க்கு 60 வீதம் உத்யோகம் கொடுக்க வேண்டும். தீண்டா வகுப்பினருக்கு 20 வீதமும், மற்ற ஹிந்துக்களுக்கு 20 வீதமும், கொடுக்கப்படவேண்டுமாம்.

## தீண்டாதாருடன் சேர்ந்து படிக்க முடியாது.

ஜாதி ஹிந்துக்களின் பஹிஷ்காரம்.

வேதாரண்யத்தைச் சேர்ந்த தோப்புத்துறை என்ற கிராமத்திலுள்ள போர்டு பள்ளிக்கூடத்தில் தீண்டாத ஜாதிப்பிள்ளைகளைச் சேர்த்த விஷயமாக ஜாதி ஹிந்துக்கள் பலமாக ஆக்ஷேபித்துத் தங்கள் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்ப மறுத்துவிட்டனர். இதனுல் தீண்டாத பிள்ளைகள் அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போவதை நிறுத்தி விட்டார்கள். ஜாதி ஹிந்துப் பையன்கள் மட்டும் இப்போது போய் வருகிறுர்களாம்.

## ஸ்ரீ எம்பெருமானுர் ஜீயர் ஸ்வாமி யாத்ரா விஜயம்.

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார் திருநகரி உடையவர் கோயில் ஸ்ரீமத் எம்பெருமானுர் ஜீயர் ஆவணிமாத இறுதியில் திருப்பதி திவ்ய தேச யாத்ரையாக தமது பரிவ்ராங்களுடன் விஜயம்செய்வாரெனத் தெரிகிறது. தற்போதுள்ள ஜீயருக்கு முன்புட்டத்திலிருந்த ஸ்ரீ பராங்குச ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி ஸ்ரீ எம்பெருமானுர் ஜீயர் ஸ்வாமிகளும் அதிவிமரிசையாக யாத்ரையாய் எழுந்தருளியிருப்பதாயும் தெரிகிறது.

## "ஸ்ரீ ராமாநுஜதயாபாத்ர" உத்ஸவம்.

குடந்தையில் கொண்டாட்டம்.

ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆசார்ய சிரேஷ்டரான ஸ்ரீ வேதாந்ததேசிகரைப்பற்றிய ஸ்தோத்திரமான "ராமாநுஜ தயாபாத்ரம்" என்ற சுலோகம் உண்டாகிய 600-வது வருஷதினமானது குடந்தையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ சார்ங்கபாணிஸ்வாமி ஸன்னிதியில் வெகு விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. இந்த உத்ஸவத்தை நடத்த மஹாமஹோபாத்யாய, ஸ்ரீ கிருஷ்ணமாசாரியஸ்வாமியும், ஸ்ரீமான் அக்நிஹோத்ரம் சக்ரபாணி பாட்டாசாரியரும் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார்கள். கோவில் டிரஸ்டிகளும் ஒற்றுமையுடன் உதவிபுரிந்து நடத்திவைத்தார்கள்.

அன்று காலையில் காவிரியிலிருந்து, ஸகல பிருதுகளுடனும், வேதகோஷத்தினுடனும் திருமஞ்ஜன தீர்த்தம் கொண்டுவரப்பட்டு ஸ்ரீ தேசிகனுக்கு வெகு சிறப்பாக திருமஞ்ஜனம் நடத்தப்பட்டது.

மாலை 3-மணிக்கு ஸ்ரீ தேசிகன் ஸன்னதி வாசலில் பெரிய ஸபை நடந்தது. வித்வான்களும், லௌகிக பிரமுகர்களுமாக அநேகர் கூடியிருந்தார்கள். ஸபையோர் பிரார்த்தனைப்படி ஸ்ரீ. உ. வே. வித்வான் அக்நிஹோத்ரம் ஸ்ரீநிவாஸதாதாசாரியஸ்வாமி அக்ராஸநம் வகித்து மேற்படி உத்ஸவத்தின் கருத்தையும், "ராமானுஜ தயாபாத்ர" சுலோகத்தின் அர்த்தத்தையும், ஸ்ரீ தேசிகனுடைய ஞான, வைராக்ய, அநுஷ்டான குண விசேஷங்களையும் பற்றி பல மேற்கோள்களுடன் இனிய பிரஸங்கமொன்று செய்தார்கள்.

அதன் பிறகு, ஸ்ரீமான்கள் என். ராஜகோபாலாசாரியர், பி. எ. பி. எல், வித்வான் குரிச்சி, ஸ்ரீநிவாஸரங்காசாரியர், ஸாரநாதாசாரியர், பி. எ. பி. எல். மஹாமஹோபாத்யாய ரா. கிருஷ்ணமாசாரியஸ்வாமி முதலியவர்கள் மேற்கண்ட விஷயத்தைப்பற்றி உபந்நியஸித்தார்கள்.

மாலை 6-மணிக்கு ஸ்ரீ ஆருவமுதன் ஸன்னதியில் ஸ்ரீதேசிகன் மங்களா சாஸனமும் மரியாதைகளும் நடந்து, "ராமாநுஜதயாபாத்ர"த்தனியனுடன் பிரபந்த ஸேவை, கோஷ்டி முதலியவை சிறப்பாக நடைபெற்றன.

இரவு 8 மணிக்கு ஸ்ரீ தேசிகனுக்குப் பெரிய வீதி புறப்பாடு வெகு விசேஷமாக நடத்திவைக்கப்பட்டது. ஏராளமான கூட்டம் வந்திருந்தது. "ராமாநுஜதயாபாத்ர" சுலோகம் எழுதப்பட்டிருந்த த்வஜம் ஸ்ரீதேசிகன் முன்பாகக் கொண்டுபோகப்பட்டது. வெகு அழகாய் இருந்தது,

இந்த உத்ஸவத்திற்கு இவ்வூர் ஸ்ரீவைஷ்ணவர்கள் விசேஷ சிரத்தைகாட்டி பல வழிகளிலும் இயன்ற அளவு உதவி செய்தார்கள். இக்காரியத்தில் முன் நின்று உழைத்த ஸ்ரீமான்கள் திருவஹீந்திரபுரம் ஸ்ரீநிவாஸாசாரியர், பாவாசிப்பேட்டைஸ்ரீநிவாஸ அய்யங்கார் இவர்களுடைய கைங்கர்யம் யாவராலும் பாராட்டப்படுகிறது.

இந்த உத்ஸவத்தில் பாடுபட்ட சிலருக்கு பட்டங்கள் கொடுக்க சீக்கிரத்தில் ஓர் மஹாஸபை நடக்குமெனத் தெரிகிறது.

நமது நிருபர்.

## வங்காளத்தில் கைதிகள் விடுதலை.

வங்காளத்திலுள்ள ராஜீயக் கைதிகள் பந்தோபஸ்துக்கைதிகள் உள்பட யாவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். இனி அங்கு ராஜீயக்கைதி ஒருவர் கூட இல்லையாம்.



469

## திருப்புகழும் பக்திரஸமும்.

பிரம்மஸ்ரீ ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள் அத்வைத ஸபை ஆதரவில் கும்பகோணம் ஸ்ரீமடத்தில் செய்த பிரஸங்கம்.

(முன்தொடர்ச்சி.)

ரஸம் என்ருல் என்ன? ஆனந்தம் "ர்ஸம் ஹ்யேவாயம்லப்த்வாநந்தீபவதி" என்று ரஸத்தையடைந்து ஆனந்தவானுகிருன் என்றபடியால் இரண்டும் ஒன்றெனத்தகும். அவ்விதானந்தம் "ரஸோவைஸ:" என்ற ச்ருதிப்படி பரப்பிரும்மத்திற்கே பொருந்தும். ஆதலால் அதை அபிவ்யக்தி செய்யக்கூடிய ததாகாராதாபத்தி ரூபமான பக்தி ஒன்றுக்கே முக்ய ரஸத்வம். மற்றவைகளுக்கு பரிச்சின்னமான ஆனந்தத்தை ஸ்பூர்த்தி செய்வதாலான கௌணமான ரஸத்வம் தானென்றும் விபாவங்களாலும் அனுபாவங்களாலும் ஸாத்விக பாவவ்யபிசாரி பாவங்களாலும் ஸ்வாதுத்வம் வருவிக்கப்பட்ட ஸ்தாயியான பாவமே ரஸமெனப்படும். என்ற லக்ஷணப்படி பார்த்தாலும் பகவந்மூர்த்தி என்கிற ஆலம்பநவிபாவத்தாலும், துளசீகோபீ சந்தனம் பஸ்மம் ருத்ராக்ஷம் முதலிய உத்தீபநவிபாவத்தாலும் நிர்வேதம் முதலான ஸாத்விக பாவங்களாலும் புளகம் முதலிய வ்யபிசாரி பாவங்களாலும் ப்ரகாசப்படுத்தப்பட்ட ஸ்தாயியான பாவம் பகவதாகாரம்தான் ஆதலினிது ரசமே. உருக்கின அரக்கில் இரத்தினம் பதித்தால் அசையாமல் ஸ்தாயியாகவிருக்கும். சாதாரணமாய் நெகிழ்ச்சியுள்ள அரக்கில் அந்த நெகிழ்ச்சியை நம்பிப் பதித்தால் உதிர்ந்துவிடும். அதுபோல் ச்ரவண கீர்த்தனுதிகளினுலே மனது உருக்கமடைந்தால் அதில் பகவத் ரூபம் பதிந்து ஸ்தாயியாயிருக்கும் "ப்ரணயரசனயாத்ருதாங்கிரிபத்ம:" என்று பாகவத வசனம் ஆதலால் உக்தலக்ஷணப்படி துருதமான சித்தத்தில் பகவதாகாராதா ரூபபக்தி ரஸமே என்றும் கூறியும். "தசமீம் ஏதிரஸதாம்" என்று நாட்டியத்தில் எட்டு ரஸமேயாயினும் சாந்தி ரஸம் ஒன்பதாவது ரஸத்வத்தை அடைவது போல பக்திரஸம்பத்தாவது ரஸத்வத்தையடைவதால் பக்தியும் ரஸம் என்று ஸ்ரீமது ஸுதன ஸரஸ்வதீ ஸ்வாமிகள்வாள். தமது பகவத் பக்தி ரஸாயனத்தில் பகர்ந்துள்ளார். ஸர்வதாபக்தி ரஸம் பரமானந்தமே. அதுவே பேரின்பம். அதை திருப்புகழ் ஊட்டும்விதம் யாதென விவரிப்பானுய் முதலில் திருப்புகழ் என்ற பெயரின் பொருளைச் சிறிது ஆராய்வோம்.

திருவென்ருல் அழகிய என்று பொருள்படும். புகழ் என்ருல் கீர்த்தி. எனவே அழகிய கீர்த்தியைப்பற்றிய பாடல்கள் அல்லது நூலென்ருகும். அழகென்பதும் சாமான்யமாய் காம்பீர்யம் ஔஜ்வல்யம் முதலானவையேயன்றி "ச்ரவணமங்களம் ஸ்ரீமதாததம்" என்றவிடத்தில் உரை செய்ததுக்கேற்ப சாந்தி ரஸம் பொருந்தியதென்றும் பொருள் கோடவேற்கும். மற்றவை மாதகம் என்பது துணிவே. மேலும் "ஸாஹிஸ்ரீரம்ருதா ஸதாம்" என்ற வேதபிரமாணத்தால் ருக், யஜுஸ்ஸாமம் என்ற மூன்று வேதமும் ஸ்ரீயெனப்படும். அவைகளில் நுதவப்படும் புகழ் எனில் "ஸர்வே வேதா: யத்பதமாமனந்தி" என்றபடி பகவத் ரூபத்தையே பாடும் நூல் திருப்புகழேயாகும். அதிலும் திருப்பெருமை திருக்குணம் என்றல்லாது புகழ் என்றதின் கருத்து பரமாத்மாவே புகழ் என்பதைப் போதிப்பதுதான் 'வாச்யத்திற்கும் வாசகத்திற்கும் பேதமில்லை' என்பார் பெரியோர் "ஸத்கீர்த்தி: ச்சின்னஸம்சய:" என்பதாக பகவானை கீர்த்திமானெனப் புகழும் ஸஹஸ்ரநாமம், "கீர்த்தனீயஸ்யகேசவஸ்ய" என்றும் புகழத் தகுந்தவனென்றே விதந்து கூறுகிற்கும் "கீர்த்தன்ய தீர்த்தயசஸ:" என்பதும் காண்க. "நாமான்ய நந்தஸ்ய யசோங்கிதாநி" என்று பகவானது புகழினுல் அலங்கரிக்கப்பட்டமையினுலேயே ப்ரதிச்லோகம் வழுவுற்றதாயினும் அந்தச்சொல் ஜனங்களின் பாவத்தை யழிக்கும். சாதுக்கள் அதைச் சொல்லுபவனிருந்தால் கேட்டும், கேட்பவனிருந்தால் பாடியும் தனிமையாயுள்ள காலம் கீர்த்தனம் செய்துகொண்டும் பாபசமனமடைவார்கள் என்று பாகவதம் பரவுகின்றதன்ருே மேலும் சாந்தோக்யம் எட்டாவது அத்தியாயம் கடைசியில் ஒரு மந்திரம், அதாவது:—

"யசோஹம் பவாமி ப்ராஹ்மணுநாம்ய, சோயாக்ஞாம் யசோவிசாம் யசோஹமனுப்ராபத்ஸி" என்பது.

இது யசோரூபமாக ஆத்மாவை வர்ணிக்க முற்பட்டதும் ஈண்டு கவனிக்கற்பாலது. எனவே மூன்று வேதப்பொருளான பரமாத்மா திருப்புகழ். "நதஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்யச:" என்றும் "நதஸ்யேசே கச்சன தஸ்ய நாம மஹத்யச:" என்றும் வாக்கியங்கள் எவன் பெரும் புகழ்வாய்ந்தவனே அவனுக்கு நிகரில்லையென்றும் அவனுக்கோ புகழ்பெரிது. அவனில் மேம்பட்டாரில்லை. ஒப்பாரும் மிக்காருமிலன் புகழாலே என்று விசேஷமாய் கூறலும் கவனிக்குக. நிற்க சகலவிதமான காரியங்களுக்கும் முன்னதாகக் கும்பிடப்படும் விநயகரைத் துதிக்கும் சுருதியும் கவிகளால் மற்றவருக்கு ஒப்பிடப்படும் புகழ்வாய்ந்தவனை என்று சிலாகிக்கிறது. "ஸுச்லோக:" "புண்யச்லோக:" "உத்தமச்லோக:" என்றும் புகழினுலேயே ப்ராத: ஸ்மரணீயத்வம் வந்திருப்பதும் இங்கு உதாகரித்தல் மிகையாகாது. \ ஆகையால் ஸ்ரீ கீர்த்தி என்ற திருப்புகழ் ஸ்ரீமதான பகவத்ரூப பரமாநந்தப் பாடல் என்பது பெற்ருேம். இனி இதன் நிமித்தத்தை சிறிது ஆராய்வோம்.

உலகில் லாபம் பூஜா. அல்லது க்யாதி நிமித்தமாகவே ஏனைய பாடல்கள் பாடப்படுகின்றன. பாகவதம் பகவத்கீதை முதலானவைகளோ "மந்தர்கள் மந்த மதிகள் மந்தபாக்யர்கள் உபத்ரவமடைந்தவர்கள்" என்றபடி கலியில் புத்திக்குறைவும் அதிர்ஷ்டமின்மையும் அல்ப ஆயுளும் வியாதிபீடையும் உள்ள ஜனங்களின் நன்மையைக் கோரியவையே. அதுபோல் இதுவும் ஷண்முகனது திருவருளை நாடும் ஜனங்களின் முன்னேற்றத்தையே கருதியது. 'சங்கப்பாடல் பனுவல் கதை எனத் தொடங்கி, அகந்தை தவிர்ந்திடாதோ' (63) என்பது முடிவாகப் பாடப்படும் திருச்செந்தூர் பாடல் காண்க. மேலும் சம்பந்தன் அன்னையின் திருமுலை பாலினுல் பாடினுன். மூகன் தேவியின் தாம்பூல பலத்தால் பாடினுன் என்பார் பெரியோர். ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் அங்கயற்கண்ணியின் கடாக்ஷ பாதத்தினுல் கவி செய்தாராம். அதுபோல இந்தப் பாடலும் "செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமோடு செப்பன எனக்கருள் கைமறவேனே" என்றபடி குகனருளால் அவனிடம் ஞானுேபதேசம் ஜபமாலைப் பெற்று பாடப்பட்டவை யென்பதினுலும் ஸர்வோத்கிருஷ்டமென்பதி லய்யமில்லை.

இவ்வித திருப்புகழின் பயனைக்கூறப்புகின் விரியுமாகிற் சுருக்கமாய் 'ஸர்வார்த்தசித்திகரம் என்று கூறலாம் '—திருப்புகழைப்பயோதீர் | பரகதிக்கஃதேணி அருட்கடலுக்கேற்றம் மனத்தளர்ச்சிக்காணிபிறவிக்காம்" என்றுமான வெண்பாவே இதற்குப்போதுமான சான்ருகும். வெண்பாவை கவனிப்போமானுல் பாகதிக்கேணி திருப்புகழோதலென்றும் பவத்திற்கு அரம் என்றும் கூறுகின்றது. பவம் என்ருல் சம்ஸாரம். அதைச் சேதிப்பதற்கு அரம் என்றதினுல் "அஸங்க சஸ்த்ரேண த்ருடேனசித்வா" என்பதுபோல் ஞானத்தால் அஞ்ஞான நிவர்த்திசெய்வித்து முக்தியளிக்கலல்ல ஸாதன விசேஷமென்ருயிற்று. பாகதிக்கேணி என்றதினுல் ஸகுணுேபாஸநா ஸாத்யமான ப்ரும்ம லோகத்துக்கு ஸாதனமென்றபடி. இது கருதியே அர்ச்சிராதிபர்வஸ்தானமுள்ள ஏணியென இயம்பிற்று. "தெஅர்ச்சிஷமபிஸம்பவந்தி" என்று சாந்தோக்யோபநிஷத்து. 'அக்னிர்ஜோதிக: சுக்ல: ஷண்மாஸா: உத்தாராயணம்" என்று கீதை. அருட்கடலிற்கேற்ற மென்பதினுல் ஷண்முகனது அருளை நமது மனதாகிய வயலில் பாய்ச்சுவதற்கேற்றமென்று கூறி "ஆவ்ருத்தி ரஸக்ருத் உபதேசாத்" என்ற நியாயப்படி திருப்புகழையோதி யோதி அருளை நிரப்பவேண்டும். ஆவ்ருத்தி செய்யச்செய்ய அருள் நிறையும். அருள் முதிரவே அருளாலாகாதொன்றுமில்லை எனவே ஐகிகாமுஷ்மிக ரூபமான ஸர்வார்த்த சித்தியும் கைகூடுமென்பது கருத்து. மனத்தளர்ச்சிக்கு ஆணி என்றதினுல் மனுேதார்ஷ்ட்யத்திற்கு காரணமென்ருயிற்று. அஃதின்றேல் ஒன்று மேபலிக்காது.

கீதாசாரியாள் இந்திரியம் போனவழியில் மனதை நழுவவிடுவானேயாகுல் அம்மனது பெருங்காற்ருனது சமுத்திரத்தில் கப்பலை கவிழ்ப்பது போல மனிதனது புத்தியை கவிழ்த்து விடுமாதலின் ஸ்திதப்ரஜ்ஞனுயிருத்தல் வேண்டுமென்று பகர்கிறுர் "கச்சித்தீர: ப்ரத்யகாத்மானமைக்ஷத்" என்று ச்வேதாச்வதரோபநிஷத்தும், பூர்வார்த்தத்தில் பிரும்மதேவன் ச்ருஷ்டிகாலத்திலேயே இந்திரியங்களை பகிர்முக நோக்குள்ளதாகவே படைத்து ஹிம்ஸித்து விட்டார். அதினுலேயே ஜனங்கள் பெரும்பாலும் பாக்த்ருஷ்டியுடனிருக்கிறுர்கள் ஒருவரும் ப்ரத்யங்முகமான த்ருஷ்டியுடையாரிலர். ஆனல் பூர்வ புண்யவசத்தால் ஈசனருளடைந்த ஒருவன் மனதைத்தளர விடாமல் ப்ரத்யங்முகமான த்ருஷ்டியுடன் பரமாத்ம ஞானத்தினுல் அம்ருதத்வத்தையுமடைவாவரன் அவனே தீரன். நியமாயதிபுத்தியைத் தன்வசத்தில் நடத்துபவன் எனப்பொருள்பட கூருநிற்கும். ஆகவே ஐகிகாமுஷ்மிகபோகங்கள் ப்ரும்மலோகாதி பதவிகள் அஞானநிவர்த்தி பூர்வகமான ஆனந்தப்பிராப்தி ரூபமான மோக்ஷம் யாவும் திருப்புகழோதலின் பயனெனச் சித்தித்தது.

(தொடரும்)


## ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்தபஷ்யம்.

ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே ஸௌம்யநாராயணுசார்ய ஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்நகோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது விலை. ரூ. 1 8 0

## மதருஸ் லாஜர்னல் அச்சுக்கூடம் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| From his masters Lips | 1 | 0 | 0 |
| Hindu Ideal | 3 | 0 | 0 |
| வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்) | ரூ. | அ. | ப. |
| தின்பேப்பர் | 5 | 0 | 0 |
| நிக்பேபர் | 4 | 0 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.
Town High School Road, Kumbakonam



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.
பகுதான்ய௵ ஆவணி௴ 16௳

## கலஹம் விளைவிக்க ஆரம்பம்.

சென்னை காங்கிரஸ் ஸர்க்கார் ஆலயப் பிரவேச அதிக்ரம மூலமாகப் பெரிய கலஹத்தைக் கிளப்பிவிட முன்வந்திருக்கிறார்கள். மலையாளதேசத்தில் செய்யப்போகிற ஆலயப் பிரவேசச் சட்டத்தின் ஸ்வரூபத்தை கெஜட்டில் பிரசுரம் செய்திருக்கிறார்கள். ஒரு கோவிலைச் சுற்றியிருக்கும் ரயின்யூடிவிஷன் வோட்டர்கள் அக்கோவிலில் தீண்டாதார் பிரவேசிக்க மெஜாரிடியில் அபிப்பிராயங் கொடுத்தால் அந்தக் கோவிலைத் தீண்டாதாருக்குத் திறந்துவிட வேண்டுமென்றும் இதை யொட்டி வேறு சில விஷயங்களையும் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றிப் பிறகு நாம் விவரமாக விமர்சிக்கப்போவதால் இப்போது பொதுவாகச் சில விஷயங்களையே குறிப்பிடவேண்டியிருக்கிறது. ஆலயப் பிரவேசம்போன்ற தீவ்ரக்கொள்கைகளை எந்த ஆதாரத்தின்மீது காங்கிரஸ் வாதிகள் தற்போது அஸநுரித்து வருகிறார்களோ அது, மிகுந்த விபரீத பலனையே கொடுத்து வருவதை அவர்கள் உணரவில்லையென்றும், அக்கொள்கையானது காலக்கிரமத்தில் அவர்களையே தலை கீழாகக் கவிழ்த்துவிடக்கூடியதென்பதையுமே ஞாபகப்படுத்தவேண்டியது அவசியமாகிறது.

ஆலயப்பிரவேச எண்ணமானது தெய்வப்பக்தி மேலீட்டாலோ, பரலோக நம்பிக்கையாலோ ஏற்பட்டதல்லவென்பது அவர்களே ஒப்பவேண்டிய விஷயம். ஸ்வதந்திரம், ஸமத்வம் என்ற பொதுவான அர்த்தமற்ற உரிமையைக் காட்டிப் பாமரர்களை ராஜ்ய-மத விஷயங்களில் தப்ப வழியில் போகும்படி ராஜ்யத் தலைவர்கள் துர்போதனை செய்து வந்திருக்கிறார்கள். இந்த அவ்யவஸ்தையின் விபரீத பலனை அவர்களே இப்போது அநுபவிக்க நேரிட்டிருப்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம். ஸ்வதந்திரம், ஸமத்வம், என்ற கொள்கையின் கீழ் இப்போது கிளர்ச்சி செய்யப்படாத விஷயமே கிடையாது. யாரும், எதையும் அந்தக் கொள்கையின் கீழ் கொண்டுவந்து உபயோகமற்ற விஷயங்களுக்கெல்லாம் ஸத்யாக்ரஹம், சட்டமறுப்புபோன்ற வழியில் இறங்கிவிடுவது ஸாதாரணமாகிவிட்டது. இது காந்திஜீ போன்ற தலைவர்களுக்கே தலைவேதனையாகி வெறுக்கப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். தீண்டாதாருக்கு மந்திரி பதவி கொடுக்காததற்காக காந்திஜீயின் வாசலிலேயே பட்டினி கிடந்து ஸத்யாக்ரஹம் நடக்கிறது. இது நியாயமானதல்லவென்று காந்திஜீயே எதிர்க்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி ராஜ்ய விஷயத்தில், அதிலும் காங்கிரஸ்காருக்குள்ளேயே இப்போது நடந்து வரும் கணக்கற்ற சச்சரவுகளை நாம் பார்த்து வருகிறோம். இவையெல்லாம் ஸ்வதந்திரம், ஸமத்வம் என்ற உரிமையை வியவஸ்தையின்றி போதித்து ஜனங்களைத் தூண்டி விட்டதன் பயனே யல்லது வேறில்லை. காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாகத்திலேயே அவர்களுடைய அவ்யவஸ்தையான உபதேசத்தின் பலன் உபத்ரவத்தைக்கொடுக்க ஆரம்பித்துவிட்டதால் அவர்களே திண்டாடவேண்டிவந்துவிட்டது. வோட்டர்களைத் தப்பி வழியில் இறக்கி, அதீதமான ஆசைகளை காட்டிக் கலஹ ருசி யுண்டு பண்ணியதன் பலனே இது. காங்கிரஸ் வாதிகளுக்கு மேலாக அபேதவாதிகள் தோன்றி விட்டதும் இதற்கு ருஜு. ஸநாதநிகளுக்கும், காங்கிரஸ் காரர்களுக்கும் எவ்வளவு வேற்றுமையுள்ளதோ, அவ்வளவு காங்கிரஸ்காரர்களுக்கும், அபேதவாதிகளுக்குமிருந்து வருகிறது. இதுவும் அதீதமான அவ்யவஸ்தை போதனையின் பலனல்லவா?

ஆதலால் தற்போது மந்திரிகள் ஸமத்வம், ஸ்வதந்திரம் என்ற கொள்கையின் கீழ் பாமரரைக் கிளப்பிவிட்டு விட்டு, அதற்காக ஆலயப் பிரவேசச்சட்டம் செய்யவேண்டுமென்பது பிற்காலத்தில் அவர்களையே பாதிக்கக் கூடியதாகிவிடும். திருவாங்கூர் ஆலயப் பிரவேசத்தை மந்திரிகள் உதாஹரணமாகக் காட்டுகிறார்கள். உண்மையைப் பார்த்தால் இது இவர்களுக்கு விபரீதமாகவே இருக்கிறது. திருவாங்கூரில் ஹிந்துக்களில்ஸமத்வம் ஏற்பட்டு அமைதி நிலவவேண்டுமென்ற எண்ணத்தாலேயே ஆலயப் பிரவேசம் அவசியமென வற்புறுத்தப்பட்டது. இப்போது அந்த பலன் உண்மையில் அங்கு ஏற்பட்டிருக்கிறதா? முன்னைவிட அங்கு ஒற்றுமைக் குறைவும், கக்ஷிச்சண்டையும், கலஹமும் அதிகரித்து அமைதியே மறைந்துவிட்டதைப் பார்க்கிறோம்.

ஸ்வதந்திரமென்றும், ஸமத்வமென்றும் கிளப்பிவிட்டதால் அங்குள்ள ஜனங்கள் வரம்புமீறிப் பெரிய அநீதியான கலஹங்களில் இறங்கிவிட்டது பிரத்யக்ஷமாகும். இந்த அனர்த்தத்தை மந்திரிகள் உணர்வது நலம்.

வோட்டர்களை ஆலயப்பிரவேசத்தை ஆதரிக்கும்படி தூண்டுவது ஸுலபம். அவர்களும் அதற்கு உட்படலாம். உண்மையில் இப்போது எந்தவிஷயத்திலும் காங்கிரஸ் வாதிகளைவிட அபேத வாதிகளுக்கு ஓட்டர்களிடம் செல்வாக்கு இருந்துவருகிறது. அவர்களுக்கு அதிக ஓட்டுக்கிடைக்கக் காரணமிருக்கிறது. கோவில்களை ஆள்பத்திரிகளாக மாற்றிவிட வேண்டுமென்று அபேதவாதிகள் தூண்டினால் அதற்கும் ஓட்டு கிடைத்துவிடும்.

ஆயினும் இவையெல்லாம் வரம்புகளையும் நீதி மார்க்கங்களையும் மீறிய பிரசாரங்களேயாகும். இந்த வழியில் புகுந்து கலஹம் விளைவிப்பது இப்போது மந்திரிகளுக்கு நியாயமாகத்தோன்றினும், பின்பு இவர்களே இதனால் விளையக்கூடிய வரம்புகடந்த செய்கைகளை ஸமாளிக்க முடியாமல் தலைகீழாக விழவேண்டிய காலம் வந்துவிடு மென்பது பல உதாரணங்களால் வெளிப்பட்டிருப்பதை மறக்கவேண்டாம்.

---

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

---

# குறிப்புகள்.

## கோவிலை இடிப்பதா?

டில்லியில் க்வீன்ஸ் கார்டன் என்ற விடத்திலுள்ள சிவன் கோவிலை முனிஸிபாலிடியார் இடித்துவிட்டதைப்பற்றி ஹிந்துக்களுக்கு மிகுந்த வருத்தமேற்பட்டிருக்கிறது. வெகு காலமாக இருந்துவந்த தேவாலயத்தை இடிக்குமுன் முனிஸிபாலிடியார் ஹிந்துக்களின் மத உணர்ச்சிக்குப் பங்கம் செய்யப்படுவதைப்பற்றிச் சிறிதும் லக்ஷ்யம் செய்ததாகத் தெரியவில்லை. டில்லி ஹிந்துக்கள் வீர உணர்ச்சியுடன் இந்த அக்ரமத்தை எதிர்த்துப் போராட முன் வந்திருப்பது இந்தியாவில் இன்னும் ஹிந்துக்கள் தங்கள் ஆண்மைத்தனத்தை இழந்து விடவில்லையென்பதைக் காட்டுகிறது.

கோவிலை இடித்த இடத்தில் ஸ்வாமியை வைத்துப் பூஜை முதலியவை செய்து ஸத்யாக்ரஹம் செய்வதாக டில்லி ஹிந்துக்கள் முடிவுசெய்து அதன்படி நடத்தியும் வருகிறார்கள். ஏராளமான ஹிந்துக்கள் சட்டத்தை மீறவும், தண்டனைக்குட்படவும் முன் வந்திருக்கிறார்கள். பிரதிதினமும் அனேகர் கைதியாகி தண்டிக்கப்படுகிறார்கள். இதற்கு ஏராளமானபேர்கள் தொண்டர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட், ஜாமீன் கொடுக்கும்படியும், மன்னிப்புக் கேட்கும்படியும் சொல்லிய போதிலும் யாவரும் அதற்கு உள்படாமல் சிறைவாஸத்தையே விரும்பி வீரத்தனத்தை வெளியிட்டுவருகிறார்கள்.

பூனாவில் மாருதிகோவில் ஸத்யாக்ரஹம் வெகு கட்டுப்பாடாகவும், திறமையாகவும் நடந்து வெற்றியளித்ததுபோல் டெல்லியிலும் வெற்றியேற்படுமென்பதில் ஐயமில்லை. அதிகாரிகள் ஹிந்துக்களின் மன உறுதியை அலக்ஷியம் செய்யமுடியாது. டில்லி ஸத்யாக்ரஹத்திற்கு, அவசியமானால் இதர மாகாணங்களும் உதவிசெய்யப் பின் வாங்காது. ஹிந்துமஹாசபையும் இதில் சிரத்தைகொண்டிருப்பது ஸந்தோஷத்திற்கு இடமளிக்கிறது.

டில்லி முனிஸிபாலிடியார் இவ்விஷயமாக யோஜனை செய்து ஹிந்து முஸ்லீம்களடங்கிய ஓர் கமிட்டியை நியமித்து விசாரணை செய்ய முன் வந்திருப்பது வீண் ஆர்ப்பாட்டமேயாகும்.

மீண்டும் கோவிலை அங்கு ஸ்தாபித்துக் கொடுப்பதைத் தவிர வேறு ராஜிக்கு வழியொன்றுமில்லை. இந்தியா முழுவதும் டெல்லி ஸத்யாக்ரஹ வெற்றியை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது. 'கோவிலை இடிப்பதும், குளத்தை தூர்ப்பதுமே ஸர்க்கார் வேலையாயிருப்பது ஒழியவேணும்.

---

## திருவாங்கூரின் துர்பாக்ய நிலைமை.

நேற்று வரையில் மிக்க அமைதியுடன் முன்னேறி அபிவிருத்தியடைந்து வந்த திருவாங்கூர் ஸம்ஸ்தானம் இன்று பரம துர்பாக்கிய நிலைமைக்கு வந்து விட்டது. ஆலயப்பிரவேச விளம்பரம் ஏற்பட்ட காரணமாக அந்த ஸம்ஸ்தானம் தார்மிக ஜனங்களால் ஒரு புறம் வெறுக்கப்பட்டு வருகிறது. இப்போது ராஜ்யக்கிளர்ச்சிக்காரர்களும் அங்கு பொறுப்பாக்ஷி பிரசா வியாஜம் கொண்டு ராஜ்ய நிலைமையில் பெருத்த அமளியை உண்டு பண்ணிவிட்டார்கள். இதனால் அங்கு அரசரின் பாடு ஸங்கடமாகிவிட்டது. ஒருவருக்கும் அவர் நல்லவராகப்பெயர் வாங்கமுடியவில்லை. துணிவுடன் பெரிய மாறுதல் செய்து பாமர ஜனங்களைக் கிளப்பி விட்டதே இந்த விபரீத நிலைக்குக்காரணமாகும். இந்த ஆலயப்பிரவேச விளம்பரத்தால் ராஜ்ய வாதிகளை திருப்திசெய்து விடலாமென்று அவர் எண்ணியதும் ஏமாற்றகரமாக முடிந்து விட்டது.



தற்போது அங்கு பொறுப்பாக்ஷி வியாஜத்தில் அரசரிடம் த்வேஷம் முற்றி வருகிறது. அரசனுக்கு எதிரான கிளர்ச்சி அதிகரிக்கும்படி துஷ்பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆலயப்பிரவேசத்திற்காக மெய்மறந்து அரசரைத்துதிபாடிய கோஷ்டியாரே இப்போது அரசரை பொம்மையாக்கி அதிகாரத்தைப் பறித்து விட தீவ்ரமாக கிளர்ச்சியில் இறங்கிவிட்டார்கள். இது காரணமாக அங்கு கலஹமும் அராஜகமும் தோன்ற ஆரம்பித்து விட்டது.

இந்தக் கிளர்ச்சியை அடக்கவேண்டியது அந்த ஸர்க்காருக்கு அவச்யமாகியது. 144 போன்ற தடைகள் பிரயோகிக்கப்பட்டன. கூட்டங்கள் தடைசெய்யப்பட்டோ, கலைக்கப்பட்டோ போலீஸாரால் நடவடிக்கை செய்யப்படுகிறது.

மாணவர்கள் முக்யமாய் கட்டுக்கடங்கவில்லை. காங்கிரஸ்வாதிகளின் உபத்ரவம் அதிகமாகிவிட்டது. காங்கிரஸ் வாதிகள் சட்டத்தை மீற ஆரம்பித்துவிட்டார்கள். அதன்மேல் ஸர்க்காரும் கிரிமினல் திருத்தச் சட்டம்போன்ற ஓர் அவஸரச்சட்டத்தை இயற்றிவைத்துக்கொண்டிருக்கிறார். இதன்படி அங்கு வீடு சோதனைகளும், அரஸ்ட்களும், தண்டனைகளும் ஆரம்பித்துவிட்டன.

மொத்தத்தில் அங்கு அமைதி நசித்துவிட்டது. இந்த சச்சரவினால் நியாயமான ராஜ்ய அபிவிருத்தி வேலைகள் கூட தடைப்பட்டு ராஜ்யம் கீழ் நிலைமைக்கு வர ஹேதுவுண்டாகியிருக்கிறது.

இவ்வளவுக்கும் காரணம் அரசர் தமது முன்னோர்களின் வழியில் உறுதியாக நிற்காமல் நவீனநாகரிகவலையில் விழுந்ததேகாரணம். அவ்யவஸ்தையின் பலனையே அவர் இப்போது அநுபவிக்கிறார். இன்னும் அங்கு என்னென்ன நடக்கப்போகிறதோ! எப்படியும் அங்கு மத-ராஜ்ய விபரீத அமளியை அடக்க வேண்டியது அரசரின் முக்ய கடமையாயிருக்கிறது.

---

## நேருஜீயின் பரதேச வேஷம்

மஹா தேசாபிமானியாக விளங்கிவரும் ஸ்ரீமான் ஜவஹர்லால் நேரு ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவரும் விவரம் நமது நேயர்கள் அறிந்ததே. முக்யமாகப் பொதுவுடமை, அபேதவாதம் முதலிய கொள்கையுடன் நடந்து வரும் தேசங்களில் அவர் அதிக ஆஸ்தையுடன் சுற்றி அக்கொள்கையினருக்கு உத்ஸாஹம் அளித்து வருவதுடன் அதன் ஸூக்ஷ்மங்களையும் அறிந்துகொண்டு வருகிறார். ஐரோப்பாவிலும் மற்ற விடங்களிலும் பொதுவுடைமை தத்வம் நசித்துவிடக்கூடாதென்பது அவர் கவலையாயிருக்கிறது. இது நிற்க.

நேருஜி மேற்றிசைகளில் சுற்றும்பேது அவர் தாம் இந்தியரென்பதை மறந்து அந்நியத்துணிகளைக்கொண்டு அந்நியர் மாதிரியில் உடைதரிப்பதாக அவர்போட்டோக்களைக்கொண்டு நிச்சயமாகிறது. வெள்ளைக்காரர்களின் மத்தியில் இவரும் ஐரோப்பியரீதியில் உடை தரித்து வருகிறார்.

இந்திய தேசாபிமானிகளுக்கு இது ஏற்றதாயிருக்குறதா? அன்னியர்களின் மத்தியில் கூட நமது உடை, உடுத்தல் முதலியவைகளை விட்டுக்கொடாமல் இருப்பதன்றோ உறுதியுள்ள தேசாபிமானமாகும்? ஸ்ரீமான் காந்தி ஸர்வகக்ஷி மகாநாட்டிற்காக லண்டன் சென்றிருந்தபோது பிரபல ராஜதந்திரிகளான வெள்ளைக்காரர்களுடன் பழகி வந்தார். அப்போதும் அவர் தமதுஎளிய உடையுடன் இந்தியரீதியில் உடுத்தி வரவில்லையா? காங்கிரஸ் மந்திரிகள் கவர்னர்களுடனும், வேறு வெள்ளைக்காரர்களுடனும் பழகி வருகையிலும் கதர் உடுத்தியும், இந்தியரீதியில் உடை அணிந்துமேவருகிறார்கள். நேருஜியும் மேற்றிசைகளில், கதர் மஹிமையையும், இந்தியர் உடைதரிக்கும் முறையையும்காட்டி ஏன் பெருமைப்படக்கூடாது? மனிதருக்குத்தக்கபடி, இடத்திற்குத்தக்கபடி வேஷம் போட்டுக்கொள்வது ஸத்யாக்ரஹிக்கு ஏற்றதா? ஏற்கனவேயே நேருஜீ தம்பெண்களை சீமையில் படிக்கவிட்டிருப்பதைப்பற்றி புகார் பேசப்பட்டு வருகிறது. பேச்சில் இந்திய அபிமானமும், கார்யத்தில் வேறுமாதிரியும் இருப்பது நேர்மையா?

வெள்ளைக்காரர்களும், மஹம்மதியர்களும் இம்மாதிரி தங்கள் தேச, ஜாதி, மத உடைகளை உதறி அன்னியமாதிரிக்கு அடிமையாவார்களா? இந்தியாவுக்கு வரும் எந்த அந்நியராவது இந்தியரைப்போல் உடை அணிவாரா? நேருஜீ இதைக்கவனித்தாரா? இந்தியாவில் ஒரு மாதிரியாகவும், வேறு இடம் போனால் வேறு மாதிரியாகவும் இருப்பது உண்மையான தேசாபிமானமாகுமா?

---

## வங்காள ஹிந்துக்களின் துர்க்கதி.

வங்காளத்திலுள்ள ஹிந்துக்களின் நிலைமை நாளுக்குநாள் கேவலமாகிவருகிறது. அங்கு ஹிந்து ஸமூஹம் இருப்பதா இறப்பதா என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே வகுப்புத் தீர்ப்பு அநீதியால் அங்கு ஹிந்துக்களின் உரிமைக்கு விசேஷ உபத்ரவம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வகுப்புத் தீர்ப்பை ஆதாரமாகக்கொண்டு நடத்தப்பட்டுவரும் மாகாண ஸ்வய ஆக்ஷியில் ஹிந்துக்களுக்கு நன்மையேற்படுமென்று யார்தான் எதிர்பார்க்க முடியும்? மஹம்மதியர்கள் மந்திரி ஸபையை அமைத்து தங்கள் மனம்போனபடி ஆக்ஷி நடத்துகிறார்கள். ஹக் மந்திரி ஸபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் செய்து அதைக் கவிழ்த்துவிடச் செய்த முயற்சி கனவாகிவிட்டது. முன்னைவிட பஸ்லுல்ஹக் தைர்யமாகக் கார்யம் நடத்துகிறார். இரண்டொரு ஹிந்து மந்திரிகள் பெயரளவில் அங்கு உட்கார்ந்திருந்தாலும் அவர்கள் அப்பாவிகளே.

தற்போது வங்காளத்திலுள்ள உத்யோகங்களில் 100-க்கு 60 வீதம் மஹம்மதியர்களுக்கும், 20 வீதம் ஷெடியூல் வகுப்பினரென்ற தீண்டாத ஜாதியினருக்கும், பாக்கி 20 வீதமே ஜாதி ஹிந்துக்களுக்கு என்றும் தீர்மானம் சட்ட ஸபையில் மந்திரிகளின் ஆதரவுபெற்றுநிறைவேறியது. இதைக்கண்டிக்க காங்கிரஸ் கக்ஷி மெம்பர்களுக்கு பௌருஷமில்லாமல் அவர்கள் முஸ்லீம்களுக்குப் பயந்து பின் வாங்கி நின்றார்கள். தீர்மானம் நிறைவேறிவிட்டது. நூற்றுக்கு 20 வீதமே வங்காள ஹிந்துக்களுக்கு இனி உத்யோகம் கிடைக்குமென்று நினைப்பதும் தவறு. குறிப்பிட்ட இரண்டு வகுப்புக்கு 80 ஸ்தானம் போய்விட்டால் பாக்கி 20பொது ஸ்தானமாகிறது. இந்த 20 வீதத்திலிருந்து தான் கிறிஸ்தவர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர் போன்றவர்களுக்கும் பங்கு ஏற்பட வேண்டும். இவ்வளவும் போக ஹிந்துக்களின் வீதம் எவ்வளவுயிருக்குமென்பதை கவனிக்கவேணும்.

இந்த அவமானத்தை, அநீதியை வங்காள ஹிந்துக்கள் எப்படி ஸஹிப்பார்களோ தெரியாது. இவர்கள் இன்னமும் காங்கிரஸை நம்பிக்கெட்டுப்போகாமல், அதிலிருந்து பிரிந்து பெரிய கிளர்ச்சிநடத்தி கார்யசித்திபெறுவது அவச்யமாகிவிட்டது. இனி அங்கு நடக்கப் போவதை ஹிந்துஸமூஹம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும்.

---

## தென்னிந்தியாவிலும் இந்தத்துன்பமா?

வட இந்தியாவில் ஜமீன்தார்களுக்கும் குடிகளுக்கும் தகராறு உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. இத்துடன் கிஸான் என்ற கிருஷிகர் கிளர்ச்சியும் காங்கிரஸ்காரர்களால் கிளப்பப்பட்டு பெருத்த நெருக்கடி ஏற்பட்டுவிட்டது. இந்த கிஸான் இயக்கத்தைத் தென்னிந்தியாவிலும் பரப்பிவிட இங்குள்ள சில அபேதவாதிகள் முயற்சிக்கிறார்கள். முத்துப்பேட்டையில் கிஸான் மஹாநாடு ஒன்றும் ஒரு அபேதவாதியின் தலைமையில் நடந்தது. வட இந்திய அநுபவத்தைக்கொண்டு பார்த்தால் இந்த கிஸான் இயக்கத்தால் தென்னிந்தியாவின் உயிர்நாடியாகிய வியவஸாயத் தொழிலுக்கு விசேஷக் குந்தகம் விளையுமென்பது நிச்சயம்.

மிராசுதார்களுக்குக் கீழ்ப்படியவேண்டாமென்றும், விளைவில் பாதியை கிருஷிகன் பிடுங்கிக்கொள்ளவேண்டுமென்றும் இல்லையேல் வேலை செய்யக்கூடாதென்றும் போதனை செய்யப்படும். ஏழை கிருஷிகர்கள் இதை நம்பி சுயபுத்தியை இழந்து தப்புவழியில் செல்லக்கூடும்.

இப்போதே சில கிராமங்களில் சில காங்கிரஸ்காரர்கள் கிருஷிகர்களைக் கலைத்து மிராசுதார்களுக்கு விரோதமாக வேலைசெய்கிறதாக நாம் அறிகிறோம். அதனால் அந்த கிருஷிகார்கள் உழவு முதலிய வேலைகளைச்செய்ய மறுப்பதாயும் தெரிகிறது. சிலவிடங்களில் வெளியூர்களிலிருந்து ஆள்களைத் தருவித்து வேலைநடப்பதாயும் தெரிகிறது.

இந்த நிலைமையில் கிஸான் மஹாநாடும் கூட்டி அவர்களையும், மிராசுதார்களையும், வியவஸாயத் தொழிலையும் பாழாக்க முயற்சிப்பதை வியவஸாயிகள் பலமாக எதிர்த்துக்கண்டிக்க வேண்டியது அவசியம். நல்ல எதிர் பிரசாரமும் நடத்தி கிருஷிகர்களுக்கு புத்தி சொல்லவேண்டும்.

கவர்ன்மெண்டாரும் முன்ஜாக்கிரதையாக இதில் தக்கது செய்யவேண்டும்.

---

# மதிப்புரை.

## ஜ்யோதிஷவிமர்சனி.

மேற்படி பத்திரிகையின் 2வது ஸஞ்சிகை வரப்பெற்றோம். இதில் ஆராய்ச்சி நிறம்பிய பலகட்டுரைகள் காணப்படுகின்றன. ஜ்யோதிஷம் பொய்யா, பாவாதி பலன்கள், அயனம்சம், ஆகஸ்ட்மாத பலன், க்ரஹஸ்வரூபம் ஹோராஷ்டபஞ்சிகா, ஸ்ரீகிருஷ்ணனின் ஜாதகம் இவைகள் கவனிக்கத்தக்கவை. வழக்கம்போல் இங்கிலீஷ் வியாஸமும் வெளிவந்திருக்கிறது. தேவராஜமுதலித்தெரு பார்க்டவுன் என்ற விலாஸத்தில் ஆசிரியர் பண்டிட் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியாரிடம் கிடைக்கும். வருஷசந்தா ரூ 2. தனி காபி அணா 2.

---

Books by Mr. S. Aiyadurai Iyer

| | | | |
|---|---|---|---|
| Adwaida Siddhantham | 0 | 8 | 0 |
| Ramayana as on illus tration Yoga Sastra | 0 | 8 | 0 |
| Bharatham and Bagavatham in the light of Yoga Sastra | 0 | 4 | 0 |
| பொதுமத போதினி | 0 | 4 | 0 |

Copies can be had of:—
The Sri Janardana Printing Works,
Ltd., Town High School Road,

## ஹிந்து தர்ம வீரஜதாவின் சுற்றுப்பிரயாணம்.

### (22—8—38) திருப்பனந்தாள்.

இன்று காலை, ஹிந்து தர்ம வீர்ஜதாவைச் சேர்ந்தவர்கள், கோவிலாசாரி, சோளபுறம் முதலிய கிராமங்கள் வழியாக திருப்பநந்தாள், வந்து சேர்ந்தார்கள். காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி அய்யர் கிரஹத்தில் தங்கினார்கள். அன்று மாலை, அவ்வூர் முழுவதும் வீடுதோறும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. மாலையில் பொதுக்கூட்டம் முடிந்தபின் இரவு சுமார் 7-மணிக்கு அணைக்கரையையடைந்து, அங்கு துண்டு பிரசுரங்கள் வழங்கினார்கள். இரவு அவ்விடம் தங்கிவிட்டு, மறுநாள் காலையில், புளியந்தோப்பு என்ற கிராமத்திற்கு பிரயாணமானார்கள்.

### (23—8—38) புளியந்தோப்பு.

இன்று காலை, இவ்வூரில் உள்ள T. G. ஏகநாதய்யர் வீட்டில் அதிதிகளாக தங்கியிருந்து, மழையினால், மறுதினம் காலை வரை அவ்விடமே இருந்தார்கள்.

### (24—8—38) ஸ்ரீமுஷ்ணம்.

24—8—38 புதன்கிழமை காலை சுமார் 3 மணிக்கு புளியந்தோப்பு கிராமத்தைவிட்டு கிளம்பி, சுமார் 11 மணிக்கு, பாளயங்கோட்டை கிராமத்தை அடைந்து, அங்குள்ள குறைந்த எண்ணிக்கையான ஜனங்களுக்கு ஹிந்து தர்மத்தின் பெருமையையும் ரக்ஷிக்க வேண்டிய அவச்யத்தைப்பற்றியும் சொல்லிவிட்டு, சாயங்காலம் ஸ்ரீமுஷ்ணம் என்ற ஊரை அடைந்தார்கள். சிறிது அவகாசம் கொடுத்தபோதிலும், அவ்வூர் மகாஜனங்கள் இரவு 7 மணிக்கு, ஸ்ரீபூவாரகஸ்வாமிகோவில் எதிரில் உள்ள மண்டபத்தில் ஏராளமான திரளாகக்கூடினர். ஸ்ரீமான் விஜயேந்திராசாரியார் அவர்கள் கூட்டத்திற்கு அக்ராசனராக இருந்தார். அக்கூட்டத்திற்கு, உள்ளூர் யூனியன் போர்டு ப்ரெஸிடெண்டும், ஸப் ரிஜிஸ்தாரும், லோகல்பண்டு டாக்டரும், தேவஸ்தானத்து மானேஜரும், இன்னும் மற்ற உள்ளூர் உத்யோகஸ்தர்களும், பல காங்கிரஸ் வாதிகளும் வந்திருந்தனர். கூட்டத்தில், பிராம்மணரல்லாதார் மிகுதியாக காணப்பட்டதிலிருந்து, பிராம்மணர்களைக் காட்டிலும், இதரர்களுக்கு, மதத்திலுள்ள பற்றை விளக்கியது.

அக்ராசனரின் முகவுரைக்குப்பிறகு, ஜதாவின் தலைவர், ஸ்ரீமான் A. குப்புஸாமி அய்யர் சுமார் ஒருமணிநேரம் சாரதா சட்டத்தால் உண்டாகியிருக்கும் கெடுதல்களையும், வரப்போகும் ஆலயப்ரவேச மசோதா, ஹிந்துமதத்தின் அடிப்படையான கொள்கைகளை அழிக்குமென்றும், சட்டசபைகளுக்கு மதத்தில் தலையிட அதிகாரமில்லை என்றும், ஒவ்வொரு ஊரிலும், மாதத்திற்கு ஒன்று அல்லது இரண்டு கூட்டங்கள் போட்டு மேற்படி அசாஸ்திரீயமான மசோதாக்களை கண்டிக்கவேண்டுமென்றும், அவச்யமிருந்தால், எலெக்ஷன்களில், ஹிந்துமதாபிமானிகளின் வோட்டுகளை, மதவிஷயங்களில் புகும் மெம்பர்களுக்கு கொடுக்கக்கூடாதென்றும், விஸ்தாரமாகப் பேசினார். சாரதா சட்டத்தையும், ஆலயப்ரவேச மசோதாவையும் கண்டித்தும், மதவிஷயங்களில் சட்டசபைகள் சட்டங்கள் செய்வது தவறு என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அக்ராசனர் முடிவுரைக்குப்பிறகு கூட்டம் கலைந்தது. பின்பு, ஸ்ரீபூவாரகஸ்வாமி தேவஸ்தான மானேஜர் அவர்கள், ஜதாவைச்சேர்ந்தவர்களுக்கு ஸ்ரீபூவாரகஸ்வாமியை தர்சனம் செய்துவைத்து, ஓர் விருந்தும் நடத்தினார். உணவிற்குப்பின், ஜதா 5மைல் தூரத்தில் உள்ள ராஜேந்திர பட்டணத்திற்கு பிரயாணமானார்கள்.

### (25—8—38) விருத்தாசலம்.

இரவு ராஜேந்திர பட்டணத்தில் நித்திரை செய்துவிட்டு, காலையில் விருத்தாசலம் அடைந்தார்கள். ஸ்ரீ விருத்தாம்பிகா, பாலாம்பிகா ஸமேத ஸ்ரீ விருத்தகிரீச்வரரை, மணிமுக்திதாநதி ஸ்நானத்திற்கு பிறகு தர்சனம்செய்து கொண்டார்கள். மழையினால் அன்று சாயங்காலம் நடக்க இருந்த கூட்டம், ஒத்திவைக்கப்பட்டது. மறுதினம் காலை விருத்தாஜலம் விட்டு ஜதா உளுந்தாண்டார் கோயில் மார்க்கமாய் திருக்கோயிலூருக்குப் போனார்கள்.

### (27—8—38) திருக்கோயிலூர்.

பல கிராமங்கள் வழியாக இன்று காலை இவ்விடம் வந்து மகா-௱-ஸ்ரீ C. V. நாராயணஸ்வாமியய்யர் வீட்டில் தங்கியிருந்தார்கள். இன்று மாலை 7-மணிக்கு இவ்வூர் பிரபல வக்கீலும் காங்கிரஸ் வாதியுமான ஸ்ரீமான் C. V. நாராயணஸ்வாமி அய்யர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். மங்களாசரணத்திற்கு பிறகு, ஜதாவின் தலைவர் ஸ்ரீமான் A. குப்புஸாமி அய்யர் "ஹிந்துதர்மத்தின் தற்கால நிலைமையும், மதாபிமானிகளின் கடமையும்" என்பதுபற்றி ஓர் அரிய உபன்யாஸம் செய்தார். பின்பு, சாரதாசட்டம் ஆலயப்ரவேச மசோதா முதலிய மதவிருத்தமான சட்டங்களை கண்டித்தும் சட்டசபைகள் மத விஷயங்களில் தலையிடுவதை கண்டித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டம் கலைந்த பின்னர் ஜதாவைச்சேர்ந்தவர்கள் ஸ்ரீஉலகளந்தபெருமாள் ஸன்னதியில் தர்சனம் செய்துகொண்டார்கள். இன்றிரவு ஸ்ரீமான், ராமகிருஷ்ணய்யர் (வக்கீல்) ஜதாவைச்சேர்ந்தவர்களுக்கு ஓர் விருந்து அளித்தார். போஜனத்திற்கு பிறகு, ஜதா அகரம் கிராமத்திற்கு புறப்பட்டார்கள்.

### (28—8—37) அகரம்.

இன்று காலை இவ்வூர் அடைந்த ஹிந்து தர்ம வீர்ஜதா, காலையில், ஸ்ரீமான் ராமநாதய்யர் (உள்ளூர் தர்மகர்த்தா) கிரஹத்தில் சிற்றுண்டிகள் அருந்தினபிறகு, ஹிந்து தர்மத்தின் உயர்வையும், அதன் தற்கால நிலைமையும், மதப்ரசாரத்தின் அவச்யத்தைப் பற்றியும், உபன்யாஸம் செய்துவிட்டு அருகாமையிலுள்ள, மணலூர்பேட்டைக்கு சுமார் 9-மணிக்கு பிரயாணமானார்கள்.

### மணலூர்ப்பேட்டை.

சுமார் 11-மணிக்கு இவ்வூரை யடைந்த ஹிந்து தர்ம வீர்ஜதா, தக்ஷிணபிநாகினியில் ஸ்நானம் செய்து பிறகு ஸ்ரீமான் M. K வெங்கட்ரமணய்யர் கிரஹத்தில் தங்கினார்கள். இன்று மாலை, இவ்வூர் ஸ்தலஸ்தாபன இலாகாவைச் சேர்ந்த சத்திரத்தில், சுமார் 5-மணிக்கு, பிரம்மஸ்ரீ பாலேச்வர சாஸ்திரிகளின் அக்ராசனத்தின்கீழ், ஓர் பெரிய பொதுக்கூட்டம் நடந்தது. கூட்டத்தில் ஏராளமான பிராம்மணர்களும், இதரரும், அநேகம் பஞ்சமர்களும்(ஒருபுறத்தில்) வீற்றிருந்தார்கள். கூட்டத்தில், ஜதாவின், தலைவர், A. குப்புசாமி ஹிந்துமதத்தின் தற்கால நிலைமையையும், அதற்கு ஹிந்துக்கள் செய்யவேண்டிய கார்யங்களைப்பற்றியும் விவரமாய், சுமார் 1-மணி நேரம் பேசினர். பின்பு சாரதாசட்டம், ஆலயப்ரவேச மசோதா, முதலிய அசாஸ்திரீயமான மசோதாக்களையும் சட்டங்களையும் கண்டித்து தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின. இரவு, ஸ்ரீ அகஸ்தீச்வரஸ்வாமி கோவிலிலும், ஸ்ரீ மாணிக்கவாசகஸ்வாமி பஜனைமடத்திலும் பஜனைகள் செய்த பிறகு, இரவு சுமார், 8-மணிக்கு சுக்காம்பாளயம் என்ற ஊருக்கு புறப்பட்டார்கள்.

### (29—8—38) சுக்காம் பாளயம்—திருவண்ணாமலை.

29—8—38 சுக்காம்பாளயம் கிராமத்தில் உள்ள ஜனங்கள், ஜதாவின் வருகையைக் கண்டு மிகவும் சந்தோஷித்து, பழம் பால் முதலியவைகள் கொடுத்து உபசரித்தனர். பின்பு ஏராளமான ஓர் கூட்டம் கூடிற்று. அவ்விடம் கூடிய ஜனங்கள் அனைவரும் பிராம்மணரல்லாதார் என்பது குறிப்பிடத்தக்க விஷயம். கூட்டத்தில் தர்மப்ரசாரம் ஜதாவின் தலைவரால் செய்யப்பட்ட பிறகு ஜனங்கள் ஆத்திரத்துடனும், துக்கத்துடனும் தீர்மானங்கள் நிறைவேற்றியதைப்பார்க்க ஜதாவில் உள்ளவர்களுக்கே ஆச்சர்யம் ஏற்பட்டது. பின்பு திருவண்ணாமலைக்கு காட்டு மார்க்கமாய் ஜதாவைச்சார்ந்தோர் பிரயாணமானார்கள்.

சுமார் 12-மணிக்கு நல்ல வெயிலில் ஜாதா திருவண்ணாமலையை அடைந்தார்கள். விநாயக சதுர்த்தி பூஜை செய்துவிட்டு, போஜனமருந்தியபின்னர், இவ்வூர் நகரத்தார் தர்மசாலையில் தனிப்பட்ட ஓர் விடுதியில் தங்கியிருக்கிறார்கள்.

G. சங்கரநாராயண வாஜபேயர்.

---

## கும்பகோணம்.

### விநாயக சதுர்த்தி மஹோத்ஸவங்கள்.

இந்நகர் மத்தியில் விளங்கும் உச்சி விநாயகரின் மஹோத்ஸவம் சென்ற 28-8-38 ஞாயிற்றுக்கிழமை, நகர ஸினிமா சிப்பந்திகளால் சென்ற வருஷத்தைக்காட்டிலும், வெகு சிறப்பாக நடத்தப்பட்டது.

ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரன் கோவில் புதுக்க மிஷனர் ஸ்ரீமான் கோபாலய்யர் அவர்கள் மேற்பார்வையில், அவ்வாலய விநாயகரின் மஹோத்ஸவமும், இது வரையில் கண்டிராத விதத்தில் வெகுநன்றாக நடைபெற்றது. இன்னவரின் முயற்சியால், இவ்வாலயத்தாரால் சில வருஷங்களாக நிறுத்தப்பட்டிருக்கும் பல உத்ஸவங்களும், சிறப்புடன் நடைபெறுமெனத் தெரிகிறது.

ஷை ஆலயத்திருமஞ்சன வீதி படித்துறையிலிருக்கும் ஸ்ரீவரஸித்தி விநாயகரின் சதுர்த்தி மஹோத்ஸவமும் வழக்கப்படி ரெட்டிராயர் குளத்தெரு மாணவர்களால் பல கனதனவான்களின்பொருளுதவியால் மிகச்சிறப்புடன் நடத்தபட்டது. 'பலதுளி பெருவெள்ளம்' என்றபடி ஆஸ்திகர்கள் கொடுக்கும் பொருளுதவி சொற்பமேயான போதிலும் அதன் மூலமாய் வசூலாகும் நூற்றுக்கணக்கான ரூபாய்களுக்கு வரவு செலவு ஜாப்தா வகுத்து சென்ற ஒன்பது வருஷகாலமாய் இவ்வுத்ஸவத்தை சிரத்தையாக நடத்தி வரும் இம்மாணவர்களை நாம் பாராட்டுகிறோம்.

பொதுவாக நாட்டில் நாஸ்திகம் எவ்வளவுக்கெவ்வளவு வளர்ந்தும் கூட அவ்வளவுக்கவ்வளவு ஆஸ்திகமும் பதின்படங்காக அதிகரிப்பதை இவ்வருஷ விநாயகசதுர்த்தி மஹோத்ஸவங்களே நிரூபித்துவிட்டன.

(ந. நி.)

---

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.



## தேசிகன் தேன்மொழிகள்.

### வக்கீல் உத்யோகம்.

### 3. நம் கடமை.

வ:—கிருஹத்தில் நடத்தவேண்டிய ஸாதாரண விசேஷங்களுக்குக் கூட ஸரியான வைதிகர்கள் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. அவர்களுடைய நடத்தை மனதுக்குப் பிடிக்காமல், அநேக விசேஷங்களை நிறுத்தியே விட்டேன். ஸாமான்ய வைதிக கார்யங்களுக்கே காலம் இப்படியிருக்கும்போது எனக்குச் சொல்லிக்கொடுக்க ஸரியான பண்டிதர்கள் எங்கு அகப்படப் போகிறார்கள்?

ம:—காலம் வரவரக் கெட்டுக்கொண்டு தான் வருகிறது, தர்மானுஷ்டானத்திற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் குறைந்துதான் வருகின்றன, என்பதை வாஸ்தவமாக நம்புகிறீர்களா?

வ:—அதில் என்ன ஸந்தேஹம்?

ம:—இன்னும் நூறு வருஷம் சென்ற பிறகு நம் ஜன ஸமூஹம் எப்படியிருக்குமென்று நினைக்கிறீர்கள்?

வ:—அதோ கதிதான்.

ம:—அப்படிச் சொல்லக்கூடாது. கலியுகாந்தத்தில் அதாவது நான்கு லக்ஷம் வருஷங்களுக்குமேல் சென்று, பகவான் அவதாரம் செய்ய உத்தேசித்திருக்கிற காலத்திலும் அவர் ஜன்மமெடுக்கக் கூடிய சில பரிசுத்தமான தார்மிகக் குடும்பங்கள் இருந்தே தீரும் என்று தெரிகிறது. ஆகையால் மிகவும் கெட்டிருக்கும் என்று மாத்திரம் சொல்லுங்கள்.

வ:—அப்படியே.

ம:—நாம் இருக்கும் இதே இடத்தில் நூறு வருஷங்கள் கழித்து ஜன்மம் எடுக்கும் ஒரு மனிதனுக்கு வைதிக கர்மானுஷ்டானத்திற்காவது நல்ல ஞானம் ஸம்பாதிக்கவாவது இப்பொழுதுள்ள ஸௌகர்யங்கள் இராதல்லவா?

வ:—இராது.

ம:—ஓர் ஊரில் சாப்பாட்டுக்கு வழியில்லை யென்று தெரிந்தால், அந்த ஊருக்குப் போகாமலிருப்பதே நலமல்லவா?

வ:—ஆம்.

ம:—போய்த்தான் தீரவேண்டுமென்றிருந்தால், அந்த ஊரில் தாமஸிக்கும்படி ஏற்படக் கூடிய காலத்திற்கு வேண்டிய ஆஹாரத்தை இங்கிருந்தே கொண்டுபோக வேண்டும்.

வ:—ஆமாம்.

ம:—அதாவது, போகாமலிருக்கப் பார்க்க வேண்டும், அல்லது அங்குள்ள அசௌகர்யங்களுக்குத் தக்கபடி இங்கிருந்தே ஜாக்கிரதையாய் ஸௌகர்யத்தைத் தயாரித்துக் கொண்டு போகவேண்டும்.

வ:—ஆம்.

ம:—இதே நியாயப்படி, இப்பொழுது ஜீவித்திருக்கிற ஒருவன் மறுபடியும் தனக்கு நூறு வருஷம் கழித்து ஜன்மம் ஏற்படலாமென்று தெரிந்து கொண்டிருப்பதுடன், அப்பொழுது இப்பொழுதுள்ள ஸௌகர்யங்கள் கிடையாதென்று வாஸ்தவமாய் நம்பினானேயானால், அவன் செய்யவேண்டிய கார்யம் என்ன?

வ:—இப்பொழுதே தயார் செய்துகொள்ள வேண்டும்.

ம:—அல்லது, ஜனிக்காமலே இருந்துவிடலாம்.

வ:—வாஸ்தவமே ஆனால் மறு ஜன்மம் அவசியம் ஏற்பட்டே தீரும் என்று நாம் நம்பும்போது, ஜனிக்காமல் எப்படி யிருக்கமுடியும்?

ம:—ஜனன மரணத்திற்கு அதீதமாய் மோக்ஷம் என்ற ஒரு நிலை உண்டென்று சொல்லும் நாம் மறு ஜன்மம் அவசியம் ஏற்பட்டேதீரும் என்று நம்புகிறோம்?

வ:—அது சரி, மோக்ஷம் அவ்வளவு சுலபமாகவா கிடைக்கிறது?

ம:—சுலபமோ, துர்லபமோ, மனிதனுடைய பிரயத்தினத்தினால் அடையக்கூடியது தானே?

வ:— ஆம்.

ம:—அவ்விதம் அடையக்கூடியதாயிருந்து அதையடைந்தால் ஸகல க்லேசங்களும் சாசுவதமாய் நம்மைவிட்டு விலகுமென்றிருந்தால், அந்நிலையையடைய, அல்லது அந்நிலைக்கு எவ்வளவு ஸமீபத்தில் நெருங்க முடியுமோ அவ்வளவு நெருங்க, நம்மால் கூடியமட்டும் பிரயத்தினம் செய்தே தீரவேண்டுமென்பது நம் கடமையல்லவா?

வ:— அப்படியே.

ம:— ஆகையால் இன்னும் நூறுவருஷம் கழித்து நீங்கள் மறு ஜன்மம் எடுக்க நேர்ந்தால் ஸத்கதிக்கு ஸாதனமாயுள்ள பிரயத்தினங்களைச் செய்ய வேண்டியதற்கான ஸௌகர்யங்கள் இராது என்று நீங்கள் வாஸ்தவமாய் தீவிரமாய் நம்பினீர்களேயானால், மறுபடியும் பிறக்காமலே இருப்பதற்காக இப்பொழுதுள்ள ஸௌகர்யங்களை ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் இருமடங்கு மனோவேகத்துடன் உபயோகித்துக் கொள்ள வேண்டாமா?

வ:— நியாயமே.. இருந்தாலும், என்னைப் போல் உள்ளவர்கள் இந்த ஜன்மத்திலேயே மோக்ஷம் கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியுமா?

ம:— உங்களுக்கு யோக்கியதையில்லையென்று நினைத்துக்கொள்ள எவ்வித காரணமுமில்லை. எப்படியும், நூறு வருஷங்களுக்குப்பின் ஏற்படக்கூடிய ஜன்ம காலத்தில் ஸௌகர்யங்கள் குறைந்தேயிருக்குமானால், அதற்குத் தக்கபடி இப்பொழுதே ஸாமக்கிரிகளை தயார் செய்துகொள்ள வேண்டுமென்பது உண்டா இல்லையா?

வ:— உண்டு.

ம:— இந்த ஜன்மத்தில் ஸம்பாதிக்கப்படும் பணம், அன்னம், வஸ்திரம் இவைகளெல்லாம் சாகிற ஸமயத்தில் விட்டுவிட்டுப் போகவேண்டிய பதார்த்தங்களே. பின் ஜன்மத்திற்கு வேண்டிய ஸாமக்கிரிகளில் இவை சேரா.

வ:— சேராதுதான்.

ம:— சரீரத்தைவிட்டுப்போகும் ஜீவனுடன்கூடப் போவது தர்மம், அதர்மம் இவைதான் அல்லவா? தர்மம், அநுகூலம், அதர்மம், பிரதிகூலம். ஆகையால் இந்த ஜன்மத்தில் எவ்வளவு தர்மம் ஸம்பாதிக்கமுடியுமோ அதை ஸம்பாதிக்க வேண்டும். அதர்மத்தை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்க வேண்டும்.

வ:— இதுதான் மிகவும் சிரமமான கார்யமாயிருக்கிறது. ஒரு சின்ன வைதிக கார்யம்கூட சரியாய் நடத்துவதற்கு சாத்தியமில்லாமல் சுற்றியுள்ள சந்தர்ப்பங்கள் அவ்வளவு கெடுதலாயிருக்கின்றன.

ம:— இருக்கலாம். ஆனால் தர்மம் இரண்டுவிதமல்லவா? அநேக மனுஷ்யர்களையும் அநேகப் பதார்த்தங்களையும் எதிர்பார்த்தே செய்யவேண்டிய வைதிக கிரியைகள் ஒருவிதம்; தானாகவே இருந்துகொண்டு செய்யக்கூடிய ஜபம், மனதை ஒருமைப்படுத்தல், தத்வ விசாரம், இவைகள் மற்றொரு விதம். பின் சொல்லிய தர்மத்தை சம்பாதிப்பதில் சுற்றியுள்ள சந்தர்ப்பங்கள் பாதகமாயிருக்க முடியாதே.

வ:— எப்படியும் நம் தேசத்தில் இப்பொழுது மூடிக்கொண்டுவரும் அஞ்ஞான இருட்டு மிகவும் அதைர்யத்தை உண்டு பண்ணுகிறது.

ம:— பிரதிதினமும் ஸாயங்காலம் ஸூர்யன் அஸ்தமிக்கிறார், ராத்திரி இருட்டு சூழ்ந்து கொள்கிறது. இதற்காக ஸூர்யன் அஸ்தமித்தவுடன் நாம் படுத்துக்கொண்டு விடுகிறோமா? இருட்டு வந்துவிட்டது, இனி ஒன்றும் செய்வதற்கில்லையென்று இருந்துவிடுகிறோமா? நாம் ஒவ்வொருவரும் ஒரு சின்ன தீபத்தையாவது ஏற்றிக்கொண்டு அத்தீபத்தினுடைய பிரகாசத்தின் ஸஹாயத்தினால் நாம் செய்யக்கூடிய நம் வழக்கமான கார்யங்களை செய்துவருகிறோமல்லவா? அவசியமேற்பட்டால் மினு மினுவென்றிருக்கிற ஒரு சுளுந்தை வைத்துக்கொண்டு எவ்வளவு இருட்டானாலும் கவனிக்காமல் மைல்க்கணக்காக நாம் நடந்துபோவது கிடையாதா? ஸூர்யன் அஸ்தமித்து விட்டார் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருந்து விடுகிறோமா?

வ:— அதில்லை.

ம:— ஆகையால் ஜனன மரண சக்கிரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டியது அவசியமென்று மனப்பூர்வமாய், தீவிரமாய் எண்ணமிருக்கும் விஷயத்தில், தேசத்திலிருக்கும் அஞ்ஞான இருளை பொருட்படுத்தாமல் உங்களுக்கு இருளை விலக்கி வழிகாட்டக்கூடிய ஒரு பிரகாசத்தைக் கைப்பற்றுவீர்கள். ஊருக்கெல்லாம் இருள் விலகவில்லையே என்றால் உங்களுக்கு என்ன? இவ்வழிகாட்டும் பிரகாசத்தையே "குரு" என்பார்கள். அத்யாத்ம விஷயத்தில் அவரே உங்கள் யஜமானர். அவரையே பூஜ்யராக சரணம் அடையுங்கள். உங்களைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு, படிப்படியாக மேலே கொண்டுவிடுவார். சுற்றியிருக்கும் இருட்டு அவரை பாதிக்காது. பிசகாமல் உங்களை அழைத்துச் செல்வார். ஆனால் அவரிடம் உங்களுக்குத் திடமான விசுவாஸம் வேண்டும்.

வ:— இந்தக்காலத்தில் அவ்விதமான குரு எங்கு கிடைக்கிறார்?

ம:— இது அனாவசியக் கேள்வி. பூர்ண விசுவாஸத்துடன் நீங்கள் விரும்பும் விஷயத்தில் அந்த க்ஷணத்திலேயே உங்கள் முன்பு தோன்றுவார். உங்களுக்கு குருவாகும்படியான யோக்கியதை அவரிடமிருக்கிறதா வென்று பரீக்ஷிப்பதற்காக அவர் தோன்ற வேண்டுமென்று நினைத்தால், முன்னைவிட வெகுதூரம் விலகிவிடுவார். இதிருக்கட்டும்—பிகிருதத்தில், இப்பொழுது உங்களுக்குக் கிடைத்திருக்கும் பிராஹ்மண ஜன்மாவை நன்கு பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும், அதற்கு அங்கமாக ஸம்ஸ்கிருதம் வாசிக்கவேண்டுமென்றும் சொல்ல வந்தேன்.

வ:— ஸம்ஸ்கிருதம் வாசிக்கவேண்டுமென்று வற்புறுத்தக் காரணம் என்ன?

ம:—ஸம்ஸ்கிருத கிரந்தங்களில் தர்மம், பிரஹ்மம் முதலிய அநேக விஷயங்கள் தெரிகின்றன். அவையின்னவென்று தர்ஜமா முதலிய இதர ஸாதனங்கள் மூலமாய் அறிய முடியாது.

வ:— ஏன் முடியாது?

ம:— உங்கள் பையன் யாராவது மேல் வகுப்பில் வாசிக்கிறானா?

வ:— ஏன்? ஒருவன் பி. ஏ.ல் வாசிக்கிறான்.

ம:—அங்கு அவன் விசேஷமாய் கற்றுக் கொள்கிற விஷயம் என்ன?

வ:—"பிஸிக்ஸ்"

ம:—அவ்வார்த்தையை உச்சரிக்கும் காலத்தில் ஏற்படும் சப்தம் என் காதில் விழுகிறது. ஆனால் அந்த பாஷை எனக்கு பரிச்

(தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க.)

(7ம் பக்கத்தொடர்ச்சி.)

சயமில்லாததினுல், அது ஒரு சப்தம் அல்லது ஒரு ஸாங்கேதிச நாமம் என்று மாத்திரம்தான் தெரிகிறது. அதனுடைய அர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியும்படியாய் தமிழில் சொல்லுங்கள்.

வ:—அது பௌதிக சக்திகளைப்பற்றி சொல்லும் சாஸ்திரமாகும்.

ம:—இப்பொழுது தெரிந்தது. இடியும், மழையும் எப்படி ஏற்படுகிறதென்று சொல்லும் போலும்.

வ:—இல்லை, இல்லை. அதைச் சொல்லும் சாஸ்திரத்திற்கு "பிஸியாக்ரபி" என்பார்கள். இதில், ஒரு பதார்த்தத்திற்கும் மற்றொரு பதார்த்தத்திற்கும் ஏற்படக்கூடிய அன்னியோன்னிய ஸம்பந்தம் சொல்லப்படுகிறது.

ம:—வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு சேர்ந்தால் ஏன் சிவப்பாகிறதென்று சொல்லும் போலத் தெரிகிறது.

வ:—அப்படியுமல்ல, அதைச் சொல்வது "கெமிஸ்ட்ரி" என்ற சாஸ்திரத்தைச் சேர்ந்தது. ஒரு பதார்த்தத்திற்கும் மற்றவைகளுக்குமுள்ள ஸம்பந்தத்தினுல் ஏற்படக்கூடிய சலனுவஸ்தைகள், சலனமற்ற அவஸ்தைகள் இவைகளை மாத்திரம் இது சொல்லும்.

ம:—இப்பொழுது தெரிந்தது. இந்த சாஸ்திரத்தினுல் ஆகாசத்தில் பூமி, சந்திரன, நக்ஷத்திரங்கள் இவைகள் 'எப்படி நிற்கின்றன, எப்படி சலிக்கின்றன, என்று தெரிந்துகொள்ளலாமென்று தோன்றுகிறது.

வ:—அப்படியுமல்ல. அது "அஸ்ட்ராணமி" என்ற ஜ்யோதிஷ சாஸ்திரத்தைச் சேர்ந்தது.

ம:—அப்படியானுல் நீங்கள் உச்சரித்தீர்களே அந்த இங்கிலீஷ் பதத்திற்கு ஏற்பட்ட அர்த்தம் என்ன?

வ:—அர்த்தத்தை சரியானபடி தமிழில் எடுத்துச் சொல்ல எனக்குத் தெரியவில்லை. தமிழிலும் சரியான வார்த்தையில்லை, பல வாக்கியங்களைக்கொண்டு எடுத்துச் சொல்வோமானுலும் அப்பதத்தின் பூரு அர்த்தத்தையும் சொல்ல முடியுமென்று தோன்றவில்லை.

ம:—பாதகமில்லை. தமிழ் இருக்கட்டும். தெலுங்கு, கன்னடம், ஏதேனும் உங்களுக்குத் தெரிந்த பாஷையில் சொல்லுங்கள்.

வ:—அதுவும் முடியுமென்று தோன்றவில்லை.

ம:—இங்கிலீஷில் ஒரு பதத்தினுல் வியவஹரிக்கக்கூடியதாயிருக்கிற ஒரு சாஸ்திரத்தின் தன்மை என்னவென்று பல வாக்கியங்களை உபயோகித்தாலும் இதர பாஷைகளில் சொல்லமுடியாமல் இருக்கிறதென்று சொல்கிறீர்கள்?

வ:—அப்படித்தான் இருக்கிறது.

ம:—இதே நியாயம் எங்களுக்கு மாத்திரம் கிடையாதா? ஸம்ஸ்கிருதத்தில் ஒரு பதத்தினுல் சொல்லக்கூடிய விஷயம் இதர பாஷைகளில் எவ்வளவு எடுத்துச் சொன்னுலும் மனதில் பதியக்கூடாததாக இருக்கலாமென்று ஏன் ஒப்புக்கொள்ளக் கூடாது?

வ:—இருக்கலாமென்று தான் இப்பொழுது தெரிகிறது.

ம:—அவ்விஷயங்களில் ப்ரஹ்மம் ஒன்று "ஔபநிஷதம்" என்று சொல்வதால், உபநிஷத்துக்களின் மூலமாய்த்தான் அதை அறியமுடியும். எப்படியும், உபநிஷத்துக்களை மூலக்கிரந்தத்தில் படிக்க அதிகாரமற்றவர்களும், வேறு விதத்தில் யோக்கியதையற்றவர்களும், தர்ஜமா முதலானதுகளால் தெரிந்துகொள்ளட்டும். எவ்வளவு தூரம் பிரயோஜனப்படும் என்பது ஸந்தேஹமே. உங்களுக்கு அப்படிச் செய்ய என்ன அவசியம் என்பதுதான் நான் சொல்கிற விஷயம்.

# புராணக்கதைகள்.

## செங்கோலின் மேன்மை ஸுத்யும்ன ராஜன் சரிதை.

சங்கர் என்றும் லிகிதர் என்றும், இரண்டு சகோதரர்களிருந்தனர். அவர்கள் அத்யுக்ரமான தவமுடையவர்கள். பாஹுதை என்னும் நதிக்கரையில் அவர்களாச்ரமம் அமைந்திருந்தது. அவ்விடம் எப்பொழுதும் பூக்களும், பழங்களும் நிறைந்த பலமரங்களால் சூழப்பட்டிருந்தது. இவ்விருவரும் அவரவர்கள் ஆச்ரமத்தில் தனித்தனியே இருந்து வருங்காலத்தில் ஒருக்கால் லிகிதர் சங்கரது ஆச்ரமத்துக்கு வந்தனர். ஆச்ரமத்திலிருந்து சங்கர் அச்சமயம் வெளியில் சென்றிருந்தார். சகோதரர் ஆச்ரமம் சென்ற லிகிதர் அப்பொழுது அங்குலாவிக்கொண்டிருந்து, அவ்வாச்ரமத்தில் நன்றுய்ப் பழுத்திருந்த சில பழங்களைப் பறித்துத் தின்றுர். அச்சமயத்தில் லிகிதர் தன் ஆச்ரமத்திற்கு வந்து பழங்களைத் தின்னும் தம்பியான லிகிதரைப் பார்த்து இப்பழங்கள் எங்கிருந்து கிடைத்தன? ஏன் தின்கின்றுய்?என்று கேட்டனர். அப்போது லிகிதர் ஜேஷ்டரான சங்கரை நமஸ்கரித்து இங்கிருந்து தான் இப்பழங்களை எடுத்துக்கொண்டேன்" என்று சிரித்துக் கொண்டு சொன்னுர். உடனே சங்கர் மிகுந்த கோபத்துடன் நீ செய்த இக்காரியம் திருட்டாகையால் அரசனிடம் போய் "அரசனே! கொடாத பழத்தை எடுத்ததால் நான் திருடன் ஆனேன். எனக்கு அதற்குத் தகுந்த தண்டனை விதித்து உமது நீதியைக் காப்பாற்றும்," என்று தெரிவித்துக் கொள் என்றுர். உடனே லிகிதர் தன் தமயனுர் உத்திரவுப்படி ஸுத்யும்னன் என்ற அரசனிடம் செல்ல இவரது வரவைக்கேட்ட அரசன் மந்திரியுடன் இவரை எதிர்கொண்டு வந்தான். அவ்வரசன் தர்மமறிந்த லிகிதரை நோக்கி "ஸ்வாமின் வந்த காரியத்தைத் தெரிவித்தால் உடனே செய்கிறேன்" என்று சொல்ல, லிகிதர் அரசனிடம் "அரசே! தமையனுரால் கொடுக்கப்படாத பழத்தை நானே எடுத்துத் தின்ற குற்றத்திற்காக என்னை உடனே தண்டிக்கவேண்டும்" என்றுர். இதைக்கேட்டு அரசன் "தண்டம் விதிப்பது என்னைச் சேர்ந்ததானுல் அனுமதி கொடுப்பதும் என்னைச் சேர்ந்ததே. ஆகையால் நான் உமக்கனுமதிக் கொடுத்தேன். நீர் குற்றமற்றவர். வேறு வேண்டியதைக் கேட்கலாம்" என்றுன். ஆனுல் லிகிதர் சிக்ஷையைத் தவிர வேறெதையும் வேண்டவில்லை. பிறகு அரசன் லிகிதரின் கையை அறுத்துவிட்டான். அவர் உடனே தமையனிடம் சென்று "நான் சிக்ஷையடைந்தேன். என்னை மன்னிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

அப்போது சங்கர் அவரைப்பார்த்து "எனக்கு உன்னிடம் கோபமில்லை. பரிசுத்தமானதென்று பிரஸித்தமான நமது குலத்திற்குக் குற்றமுண்டாகாமலிருக்கவே உனக்கு இந்த பிராயச்சித்தம் கூறினேன். நீ சீக்கிரம் பாஹுபதைநதிக்குச்சென்று விதிப்படி தேவரிஷிபித்ருக்களுக்கு தர்ப்பணம் செய். இனி அதர்மம் செய்யாதே. தெரிந்தவர்கள், பிரம்மஹத்தி, ஸுராபானம், திருட்டு, குருபத்னிகமனம் இவை செய்தவர்களுடன் சேர்க்கை, இவை மஹாபாதகங்களென்கிறுர்கள். அவைகளிலும் திருட்டுக்கு ஒப்பான பாவமில்லை. அது பிரம்மஹத்திக்கொப்பாகும். பாதகத்துக்கெல்லாம் பெரும்பாலும் சரீர தண்டனை கூறப்படுகிறது. பாவஞ் செய்தவர்கள் அரசர்களால் தண்டிக்கப்பட்டால் அப்பாவத்தினின்றும் விலகிப் புண்யவான்கள் போல் ஸ்வர்க்கமடைகிறுர்கள். நீ தண்டனையடைந்தபடியால் நமது குலம் உயர்ந்ததாயிற்று என்கிறுர். சங்கரது வார்த்தைப்படியே லிகிதரும் நதியில் ஸ்நானம் செய்து தர்ப்பணம், செய்யத்தொடங்கும் போது அவருக்கு இருகரங்களுமுண்டாயின. அதுகண்டு ஆச்சரியப்பட்டு லிகிதர் தன் கைகளை தமயனுக்குக்காட்ட "சங்கர் இது என் தபோ மஹிமையால் செய்யப்பட்டது. உனக்கு ஸந்தேகம் வேண்டாம்" என்று சொன்னுர். "உமது தவத்துக்கு இவ்வளவு மகிமை இருந்தால் என்னை முன்னமேயே ஏன் பரிசுத்தம் செய்திருக்கக் கூடாது" என்று லிகிதர் கேட்க இந்த சக்தி எனக்கிருப்பினும் உனக்குத் தண்டனை விதிக்கும் அதிகாரம் எனக்கில்லை. இப்போது அரசன் பரிசுத்தனுனன். உன் முன்னேருடன் நீயும் பரிசுத்தனுனுய்" என்றுர்.

"பாண்டவச்ரேஷ்ட உத்தமனுன ஸுத்யும்னன் அந்தத்தண்ட விதியைச் செலுத்தியதனுல் தக்ஷரைப்போல் உத்தமமான ஸித்தியைப்பெற்றுன். அரசர்களுக்கு ப்ரஜைகளைத் தீயவழியிற் செல்லாது காப்பதே பெரியதர்மம். சோகத்தில் மனம்செல்ல வேண்டாம். அர்ஜுனன் சொல்லும் ஹித வசனத்தைக்கேள். க்ஷத்ரியர்களுக்குச் செங்கோல் செலுத்துவது தர்மமேயொழிய வேறொன்றுமில்லை" என்று வியாஸர் செங்கோலின் மேன்மையைத் தர்மருக்குபதேசித்தார்.

S ராமச்சந்திரன்,

வ:—தெரிந்துகொண்டேன் தங்கள் உபதேசம் பிரகாரம் நடக்கப் பார்க்கிறேன்.

ம:—செய்யுங்கள். உங்கள் நன்மைக்காகத் தான் இவ்வளவும் சொல்கிறேன். முன்சொன்ன ரீதியாக மறுபடியும் ஜன்மம் எடுக்கிற ஸமயத்தில் இப்பொழுதுள்ள ஸௌகர்யம் இருக்குமென்று யார் சொல்ல முடியும்? இப்பொழுதுள்ள ஸௌகர்யங்களை முடிந்தவரையில் உபயோகித்துக் கொள்ள வேண்டும். சாத்தியமானவரையில் பிரயத்தினப்பட்டும், ஜனன மரண சக்கிரத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாமல் போனுலும்கூட பின் ஜன்மத்தில் ஏற்படக்கூடிய அஸௌகரியங்களை ஸஹித்துக் கொள்ள வேண்டியதற்குள்ள பலமாவது ஸம்பாதித்துக் கொள்ளலாமல்லவா? லௌகீக விருத்தியில் இருப்பவர்களுக்குள் அவ்விதம் தயார் செய்து கொள்வதற்கு உங்கள் உத்யோகத்தில் அனுகூலங்கள் பலஇருக்கின்றனவென்று எடுத்துக் காட்டினேன். இவ்வித அனுகூலங்களை உபயோகித்துக்கொண்டு அவைகளின் பலனை யடைவீர்களென்று நம்புகிறேன்.

வ:—தங்கள் கருணை மிகுந்த அனுக்ரஹத்தினுல் அவ்விதமே நடக்கலாமென்று நம்புகிறேன்.


தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றும் பதிப்பு)

பிராம்மணர்களின் தர்மானுஷ்டானங்களை, விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.




# காலஞ்சென்ற ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியர்

## சென்னையில் அநுதாபக்கூட்டம்.

அகில இந்திய பிராஹ்மண மஹா ஸபை, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம், சென்னை வர்ணுச்ரமஸ்வராஜ்ய ஸங்கம் இவற்றின் ஆதரவில் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபிலமடத்தில் 25-8-38 தேதி வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு, காலஞ்சென்ற ஸநாதனித் தலைவர் ஸ்ரீ. யன். ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமியின் மானுநுதாபக் கூட்டம் அட்வகேட் ஸ்ரீ ஆர். கேசவய்யங்காரவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது.

தலைவர் முன்னுரையில் காலஞ்சென்ற ஸ்ரீநிவாஸாசாரியாரைத் தனக்கு நன்கு தெரியுமென்றும், வக்கீல் என்டௌமெண்டு கமிஷனர் பதவிகளில் இருந்ததுமன்றி ஸம்ப்ரதாயத்தில் மிக ஊற்றமுள்ளவரென்றும், பகவத் பாகவத கைங்கர்ய துரந்தரனென்றும், வேதாந்த தீபிகையின் பத்திராதிபராக வெகு காலமிருந்து அதனை நன்கு நடத்திவந்தாரென்றும், ஸ்ரீபாஷ்யாதிகளை நன்கு ஸேவித்தவரென்றும், ராமாநுஜதாஸத்வம் நன்கு உடையவரென்றும், எக்காரியத்தையும் வஞ்சனையில்லாமல் செய்யும் மஹானென்றும், அவரை சமீபத்தில் எம்பெருமான் அநுக்ரஹித்ததால் நமக்கு வருத்தமேயென்றும் வெளியிட்டார்.

பகவத் விஷயம் அட்வொகேட் ஸி. நாஸிம்மாசாரியார் பேசியதின் ஸாராம்சமாவது:—

ஸ்ரீநிவாஸாசார் ஸ்வாமியைக் கடந்த இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாகவே தெரியும். வக்கீலாக இருந்த காலத்திலும், வக்கீல்களுக்குத் தன்னகத்தில் ஸ்ரீபாஷ்யாதிகள், ஸ்தோத்ர பாடங்கள், திவ்ய ப்ரபந்தம் இவற்றை நன்கு கற்றுக்கொடுப்பார். என்டௌமெண்டு கமிஷனராக ஆங்காங்குள்ள ஆலயங்களுக்குச் செல்லும்போதெல்லாம் அங்குள்ளவர்கட்கு ஹிதோபதேசமே செய்வார். சில சமயங்களில் நான் இதை நேரில் கண்டும், கூட இருந்தும் அநுபவித்திருக்கிறேன். அவருக்கிருந்த வைதிகப் பற்று வேறொருவருக்கும் இல்லையென்று கூறுவேன். வைதிக மதத்துக்கே ஒரு, கண் போய்விட்டது. வேலையினின்று ஓய்வு எடுத்துக்கொண்ட காலத்திலும் மிக ஆஸ்திக சிரத்தையுடன் விசேஷ உழைப்பு நடத்திவந்தார். ஒளிக்கொண்ட சோதியுமாய் உடன் கூடுவதென்று கொலோவென்றே அடிக்கடி அவர் பிரஸ்தாபித்துக்கொண்டிருந்தபடி அவர் விண்ணுலகு எய்திவிட்டார். அவர் சுத்தாத்மா. அவருக்கு யாதொரு குறையுமில்லை. அவரைப் பிரிந்த நமக்கு இன்னும் இங்கு அவரிருப்பின் எவ்வளவு உபகாரம் பெறலாமோ அவ்வளவும் போய்விட்டபடியால் நமக்கு சோகம். இறந்ததைக் குறித்துத் துக்கம்வேண்டுமென்பதில்லை. லௌகீக ரீதியல் நம் அநுதாபத்தை அவரது உற்றுர் உறவினருக்கு அறிவிப்போம். அவரை அங்கும் விசேஷ கடாக்ஷம் பண்ணவேண்டுமென்று எம்பெருமானைப் ப்ரார்த்திப்போமாக.

பின்னர் ஸ்ரீ திருமலை அய்யங்கார் பேசியதின் சுருக்கம் பின்வருமாறு:—

இன்று ஏற்கனவே பத்திரிகைகளில் குறிப்பிட்டிருந்தபடி மூன்று ஸபைகளின் ஆதரவில் இக்கூட்டம் நடைபெறுகிறது. அகில இந்திய பிராஹ்மண மஹா ஸபையில் நீண்டகாலம் உபதலைவராக இருந்து வெகு பரிச்ரமப்பட்டிருக்கிறுர். சைமன் கமிஷன் இவ்விடம் வந்தபோது பிராஹ்மணர்களின் நிலைமையை விளக்கி சிறந்ததோர் மேமோராண்டம்கொடுத்தார். இவர் செய்த சுயநலமற்ற தீவிர ப்ரசாரத்தாற்றுன் அப்ராமணர் ராஜ்யத்தை நடத்தி வந்த காலத்திலே மதபோர்டு கமிஷனர் பதவியேற்றுர். அங்கும் நன்றுகத் தனது வேலையைத் திறமையுடன் நடத்தினுர். திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தில் விசேஷ அபிமானம் உடையவர்.

சென்னை வர்ணுச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் தலைவராகத்திகழ்ந்தார். திருவநந்தபுரம் மஹாராஜா, ஆலயப்பிரவேசப்பிரகடன காலத்தில் இவரொருவரேஎன்றும்போல் வைதிகப்பற்று எள்ளளவும் விடாமல் உறுதியாக நின்று போராடியவர். தர்ம மத விஷயங்கட்கு எவராயினும் இடஞ்சல் செய்வதாக இருந்தால் அதை முதலில் தெரிந்து உடனே ஹிந்து மதராஸ் மெயில், சுதேசமித்திரன், ஆர்யதர்மம் முதலிய பத்திரிகைகளில் ஆங்கிலம், தமிழ்களில் ஆணித்தரமாக தருமப்பாதுகாப்பைப்பற்றி நன்கு எழுதுவார். வாதப்போர்களில் சற்றும் மனம் தளராது இடைவிடாமல் நற்போற்புரிந்து ஜயிப்பார். சநாதன தர்மப் பிரசாரம் என்றுல் அழைப்புக்காகக்கூட எதிர்பாராது முன்னரே வந்து உற்சாகமூட்டுவர். முதன் முதலில் அவரை யான் சந்தித்தது திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில், முதமுதலாக, காசி யு. பி. கிருஷ்ணமாசாரியாரின் விசேஷ விடாமுயற்சியால் நடந்த வர்ணுச்ரம தர்ம மஹாநாட்டிற்றலைமை வஹித்த காலத்தேதான். அச்சமயம் அவரது தலைமைப்ரசங்கம் ஒப்புயர்வற்றது. அக்ராஸநம் வஹிக்க முன் வாராது அநேகர் தயங்கிய காலத்தில் சுத்தவீரராய் இப்பெரியார் அப்பணியேற்று நடத்தி வைத்தது மிக அழகியது. அப்பிரசங்கம்என்றும்அழியா இயல்புடையது. அதனைப் படிப்போர் இன்றும் வீரமுடன் ஸநாதன தர்மத்தைக்காக்க எழுவர் என்பதில் ஐயமில்லை. பழகுதற்கு மிகவும் குணமுடையவர். அவரகத்திற்குச்செல்வோரை அவர் கொண்டாடும் இயல்பு நேரில் அநுபவித்தவருக்கே நன்கு புலப்படும். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் அவருக்கிருந்த ஊற்றம் வேறொருவருக்குமில்லையென்றே கூறலாம். வேதாந்த தீபிகையின் பத்திராசிரியராகவிருந்து விசேஷ தொண்டுகளாற்றினுர். அவரது ஆசார்ய பக்தி மிகவும் போற்றற்குரியது. இதே இடத்தில் முன்னர் சாரதாச்சட்டக்கண்டனக்கூட்டத்தில் கடைசியாக வெகு அழுத்தமாகப்பேசினுர். உள்ளும் புறமும் ஒரே விதமாகயிருந்த உத்தமர். அவரது பிரிவாற்றுமை நம்மனத்தை மிகவும் வருத்துகிறது.

கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது:—

இக்கூட்டமானது பிரபல ஸநாதனித் தலைவரும் சிறந்த தர்ம வீருமான ஸ்ரீ. யன். ஸ்ரீநிவாஸாசாரியாரின் அகால மாணத்தைக் குறித்து மிகவும் வருந்துவதோடு தங்களது தாபத்தை அவரது உற்றுர் உறவினருக்குத் தெரிவித்துக்கொள்வதுமன்றி அவரது ஆன்மா நிரதிசய ஆனந்தஸாம்ராஜ்யம் பெற்று விளங்குமாறு பகவானிடத்தில் விண்ணப்பம் செய்துகொள்கிறது.

தலைவர் முடிவுரையில் லௌகீகர்கள் வைதிக சிரத்தையுடனிருப்பது துர்லபமாகிக் கொண்டிருக்கும் தருவாயில் ஆசாரியாரது பிரிவு மனதிற்குத் துயரத்தைக்கொடுத்திருக்கிறதென்றும், இவர் பிரதி ப்ரயோஜனத்தைக் கருதாது தர்மவழியில் உழைத்துவந்த உத்தமர் என்றும், எளிய வாழ்க்கையுடன் உலகத்துடன் நன்கு கலந்து பழகி வந்தாரென்றும், அவரது சீரியகுணங்களை நாம் கைக்கொண்டு உத்தமராக வர முயற்சிப்பதே அவரைக் கொண்டாடியதாகும் என்றும் நன்கு வற்புறுத்தி எடுத்துரைத்தார்.

காரியதரிசி வந்தனுேபசாரம் வழங்க ஸபை நன்கு நிறைவெய்தியது.

ப. வெ. திருமலை ஐயங்கார்,
காரியதரிசி.

## ஸ்ரீமான் டி. எஸ். ராமஸ்வாமி அய்யரின் அநுதாபம்.

சென்னை வர்ணுச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கக்காரியதரிசியான ஸ்ரீமான் டி. எஸ் ராமஸ்வாமி அய்யர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியர் காலம் சென்றதைப்பற்றி ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் தெரிவிக்கிறுர்.

## ஸ்ரீமான் சிதம்பர பாகவதரின் பௌதிக தேஹவியோகம்.

ப்ரபல ஸநாதனித்தலைவரான ஸ்ரீமான் மஹாகதக கண்டீரவ அபினவ பராசார்ய அகரமாங்குடி சிதம்பர பாகவதர் அவர்கள் 58 வயதில் தனது வீட்டில் ஆவணி௴ 10௳ குரு வாரத்தில் பௌதிக சரீரத்தை பரித்யாகம் செய்ததைக்கேட்க நாம் மிகவும் வ்யஸனிக்கிறேரம். ஸ்ரீ பாகவதர்கள் தமது ஸநாதன தர்மத்திற்கு ஓர் மூலஸதம்பமாகவிருந்தார் என்று சொல்வது மிகையாகாது. ஆஸ்திக்யத்திலும் ஈச்வரபக்தியிலும்பாண்டித்யத்திலும், ராஸிக்யத்திலும், ஸங்கீதத்திலும், ஸாஹித்யத்திலும், அபினயத்திலும் இவருக்கு ஸமமானவர் இவர் தான். இவரின் தேகவியோகத்தினுல் நமது மதத்திற்கு இருந்த போதாவு குறைந்து விட்டது. ஸ்ரீமான் பாகவதர்களின் குணுதிசயம் அவர் வியோகத்தினுல் அவர் நண்பர்களுக்கு மிகுந்த வ்யஸனத்திற்கு ஹேதுவானது.

இவருக்கு குருவான தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர்களிடம் இவருக்கு மிகுந்த பக்தி உண்டு. அந்த குருபக்தியின் பெருமையால் இவர் இவ்வுலகத்தில் சிறந்த பாகவதருய் ப்ரகாசித்து வந்தார். குரு வாரத்தில் இவர் வியோகம் இவருடைய குரு பக்தியையே காண்பிவிக்கிறது. ஸ்ரீ பாகவதர் அவர்களின் பெருமையை பண்டித உலகத்திற்கு யான் தெரிவிப்பது ஸூர்யனை தீபத்தால் ஜனங்களுக்கு காண்பிவிப்பதேயாகும். இவர்களின் பல பாஷைகளில் விசேஷ பரிச்சயமும் சட்டங்களில் கூர்மையான புத்தியும், புஸ்தகங்களைச்சேகரிப்பதிலும், அவைகளை எப்பொழுதும் படிப்பதில் விசேஷப்ரியமும், நமது வைதிக மதத்தில் அபாரமான நம்பிக்கையும் கருத்தும் வேதாத்யயனஞ் செய்தவர்களிடம் விசேஷ பக்தியும் ஆஸ்திகர்களுக்கு விசேஷமான ஆனந்தத்தையளித்து வந்தது. கலியின் கோலாஹலம் கரை புரண்டு வேகத்துடன் செல்லும் இச்சமயத்தில் ஸ்ரீமான் பாகவதர்களின் ப்ரவசனம் ஒரு பெரிய அணைபோல விருந்தது என்பதில் ஐயமில்லை. ஷியாருக்கு 4 பெண்களும் ஒரு ஸ்வீகார புத்ரனும் இருக்கிறுர்கள். நமது பாரத பூமியானது இவர் மாதிரியான பல பண்டிதரத்னங்களை உண்டு பண்ணி ஆஸ்திக உலகத்தை உஜ்ஜீவிக்குமாறு ஸர்வேச்வரன் அநுக்ரஹிப்பாரென்று எதிர்பார்க்கிறேரம். இவருடைய ஸந்ததியாருக்கு நமது நிஜமான வருத்தத்தை தெரியப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேரம். இவர்களுடைய கதா நிரூபணங்களையும் பலஸ்தோத்ரங்களையும் ஆஸ்திக தனவான்கள் அச்சிட்டு உபகரிப்பார்களென்று நம்புகிறேரம்.

சேஷாருய சாஸ்திரி, திருவாதி.

## காந்தி ஜாகையில் மறியல்.

### தீண்டாதார் சண்டித்தனம்.

மத்யமாகாண மந்திரி ஸபையில் தீண்டாத ஜாதியருக்கு மந்திரி பதவி கொடுக்காத காரணமாக அதிருப்தி யடைந்த தீண்டாத ஜாதியார் பலர் ஒன்று சேர்ந்து சிவகான் கிராமத்தில் காந்திஜீ வீட்டின் முன்பாக ஸத்யாக்ரஹம் செய்ய ஆரம்பித்திருக்கிறுர்கள்.

215246

# வெளியூர் செய்திகள்.

## ஆழ்வார் திருநகரில் ஸ்கீம் ஏற்படுத்த எதிர்ப்பு.

(நமது விசேஷ நிருபர்.)

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் தீர்த்தமரியாதைகள் விஷயமாய் பலமான தகராறுகளிருப்பதாயும் சண்டைசச்சரவுகள் நடைபெற்று வருவதாயும் தகராறுகள் நடவாலிருக்குமாறு தீர்த்த மரியாதைகள் விஷயமாய் ஓர் ஒழுங்கு முறை (ஸ்கீம்) ஏற்படுத்தவேண்டி தீவிர விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொண்டு சென்னை ரிலிஜியஸ் ஒண்டோமெண்ட் போர்டில் இவ்வருடத்திய ஓ. ஏ. 344-ம் நெம்பர் கேஸாக ஸ்ரீமான் எ. கே. சுதர்சனம் ஐயங்கார் வகையறா ஐவர்வாதியாயிருந்து ஸ்ரீ அஹோபிலம் திருக்குறுங்குடி வானமாமலை மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளையும் பிரதிவாதியாக்கி தொடர்ந்து வந்த வழக்கு 19-8-38ல் ஸ்டேட்மெண்டுக்காக வாய்தாப் போடப்பட்டிருந்தது. கோயில் தீர்த்தமரியாதைக்காரர்களான ஸ்ரீமான்கள் அனந்தவெங்கடாசாரியார், வி. எம். சுந்தராஜய்யங்கார் எ.டி. ராமாநுஜய்யங்கார் முதலிய பலராலும் ஆழ்வார் கோஷ்டியில் மடாதிபதிக்குள்ள தாவாக்கள் சிவில் கோர்ட்டிலிருந்து வருவதாயும் தீர்த்தகாரர்களுக்குள் தற்போது யாதொரு தகாறும் கிடையாதெனவும் தவிர கோவில் சம்பந்தமான எவ்விஷயமும், விசேஷ பாத்யத்தையுள்ள அத்யாபக மிராசுதார் தீர்த்தக்காரர்களைக்கேட்டு அபிப்ராயம் தெரிந்தே முடிவுசெய்யவேண்டுமெனவும் இந்தக்கேஸில் முக்யமாக தினசரி சம்பந்தமுள்ள தீர்த்தகார்களைச் சேர்க்காமல் பல ஆண்டுகளுக்கிடையில் ஒருதடவை உத்ஸவத்தில் மட்டும் விஜயமாகும் மடாதிபதிகளை ப்ரதிவாதியாக்கியது தவறுதலெனவும் தற்போது அவசியமில்லாத நிலையில் போர்டாரின் நேரத்தை வீணாகக்கழிக்கும் மாதிரிலேயே இவ்வழக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாய்த் தெரிவதால் இவ்வழக்கைத் தள்ளுபடிசெய்ய வேண்டுமெனக்கோரி எதிர்வாதம் (ஸ்டேட்மெண்டு) போடப்பட்டிருப்பதாயும் தெரிகிறதுடன் இந்நகர் உடையவர்கோவில் ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் சார்பாக மதராஸ் அட்வொகேட் ஸ்ரீமான் வீ. ராமஸாமிஐயர் ஆஜராய் இவ்வழக்கை எதிர்த்து ஸ்டேட்மெண்ட் கொடுத்திருப்பதாயும் தெரிகிறது.

## தேவஸ்தானக் கமிட்டியைக் கலைக்க மறுப்பு.

ஆலயக்கமிட்டிகள் அபிப்பிராயம்.

திருநெல்வேலி தூத்துக்குடி தேவஸ்தான கமிட்டிகளை ஏன் கலைக்கக்கூடாதென்பதற்குத்தகுந்த காரணங்காட்டுமாறு சென்னை போர்டிலிருந்து நோட்டீஸ் வந்ததின் மேல் போர்டார் காட்டும் காரணங்கள் சரியாகவில்லையெனவும் தவிர ஜன நாயக கவர்மெண்ட் நடைபெறுவதாய் சொல்லப்படும் தற்காலம் ஜன ப்ரதிநிதிகளாக எலக்ஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களடங்கிய கமிட்டியைக்கலைப்பதொழுங்கும் நியாயமுமாகாதெனவும் சில மாதங்களில் தேர்தல் நடக்கும் நிலையில் கமிட்டியின் காலம் குறுகிவிட்டபடியால் அதற்குள் அவசரம் தேவையில்லையெனவும் தூத்துக்குடி கமிட்டியார்கள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாய்த்தெரிவதுடன் திருநெல்வேலி கமிட்டியார்களும் பலமாக எதிர்த்து ஆக்ஷேபத்தீர்மானம் செய்தனுப்பியிருப்பதாயும் தெரிகிறது. நமது விசேஷ நிருபர்.

## நெரிஞ்சிப்பேட்டையில் ஸநாதனதர்ம பிரசாரம்.

ஸ்ரீ வைசிய ஜகத்குரு ஸ்ரீமத் தர்ம சிவாசார்யஸ்வாமிகள் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் அக்ராஸனத்தின் கீழ் மதுரை ஸநாதன தர்மப்ரசாரக பிரும்மஸ்ரீ M. N. சுப்பிரமண்ய சாஸ்திரிகளால் 23-8-38 முதல் 27-8-38 வரை 5-நாள் முறையே பக்தியோகம், தர்மஸ்வரூபம், ஹேயோபாதேயம், விவாஹம், ஸந்தியாவந்தனம் முதலிய விஷயங்களைக் குறித்துக் கேழ்ப்பவருக்கு உருக்கமாக இருக்கும்படியும் விவாஹத்தில் அஷ்டவிதம் சாஸ்த்ரீயமென்றும் அதில் முதல் நான்கு தான் ப்ராம்மணர்களுக்கு ஏற்றதென்றும், மற்றவை இதரர்களுக்கென்றும், ஸ்மிருதி வசனங்களைக்கொண்டு நன்கு நிரூபித்து பிரகிருதம் நாம் செய்யும் விவாஹம் ஆஸுரமாக இருக்கிறதென்றும், இதனால்தான் கஷ்டங்கள் நேரிடுகிறதென்றும், இதை ஒட்டியே சட்டங்கள் நேரிட்டிருக்கிறதென்றும், இம்மாதிரி சட்டங்கள் ப்ராம்மணர்களுக்கு மட்டில் இகபர பாதகங்கள் இல்லை என்றும், ஸமஸ்த தர்மங்களுக்கும் ஸகல வர்ணங்களுக்கும் விவாஹமே மூலகாரணமாக இருப்பதாலும் ப்ராம்மணர்களாகிய நாம் ஐகமத்யத்தோடு இதைப் பிரசாரம்செய்து நம்முடைய நம்தேசத்துடையவும் க்ஷேமத்தைக் கோறவேண்டுமென்றும் இல்லாவிடில், தர்மநாசம் என்று பெரியோர்கள் கூறிய பிரகாரம் நேரிடுமோ என்ற பயம் யாவருக்கும் வேண்டுமென்றும் மிக உருக்கமாகப் பேசி முடித்தார்கள். கடைசியில் இது விஷயமான சட்ட நிர்பந்தத்தை சாஸ்த்ரோக்தமாக மீறுவதற்கு யாவரும் தயாராக இருக்கவேண்டுமென்றும் அதாவது ஒவ்வொரு கிராமத்திலும் பிரசார மூலம் பிரகிருதம் விவாஹம் செய்யவேண்டிய கன்னிகைகளுக்கு ஐகமத்யத்துடன் குறிப்பிட்ட தினத்தில் விவாஹம் செய்யத் தயாராக இருக்கிறோமென்று உறுதி பெற்று அவ்விதமே ஸநாதனப் பெரியோர் குறிப்பிடும் தினத்தில் எல்லோரும் விவாஹத்தை, நடத்தவேண்டுமென்றும் சாஸ்திரோக்தமாக நடத்தப்படும் இக் காரியத்தைத் தடுப்பது நியாயமில்லை என்பதை ராஜகீயர்களுக்கு முன்னதாகவே தெரிவித்துச் செய்வது அநுகூலமென்றும் இச்சட்டப்படி பார்த்தால் அனேகமாக ருதுவிற்குப் பிந்தியே விவாஹம் செய்யவேண்டி வருமென்றும் ருதுவான கன்னிகையை விவாஹம் செய்கிறவன், விருஷளன் என்றும் சொல்லியிருப்பதால் அத்தம்பதிகளுக்கு அது ஸித்திக்குமென்றும் ஆனதால் தத்ஸந்ததியும் துஷ்டமாகுமென்றும் ஆனதால் இச்சட்டம் ஸாக்ஷாத்தாக ப்ராம்மண்யத்தை அழிப்பதாகயிருப்பதால் மேலே சொன்னப்பிரகாரம் எதிர்த்தாலொழிய ப்ராம்மண்யத்தைக்காப்பாற்ற முடியாதென்றும் இதற்கு ப்ரசாரமும் ஒற்றுமையும் தான் தேவையென்றும், இச்சட்டத்தை நம் ஸமூஹத்திலிருந்து விரட்டினால் தான் மற்ற மத சம்பந்தமான அநீதி சட்டங்களைக்கொண்டு வர நம் எதிரிகள் தயங்குவார்களென்றும், அக்காலம் சீக்ரகிம் வரும் என்றும் சொன்னதில் ஸபையில் இருந்த கிராம ஆஸ்திக மகா ஜனங்கள் யாவரும் அதை எதிர்பார்த்துத் தயாராகயிருக்கிறோமென்று ஏகமனதாக உறுதி கூறினார்கள், 27-8-38 கடைசி தினம் உபன்யாஸம் முடிவு பெற்றதும் ஸ்ரீமடம் ஆஸ்தான பண்டிதர் N. K வெங்கட்ரமண சாஸ்திரிகளால் உபன்யாஸகருக்கும் ஆபையோருக்கும் ஸ்ரீஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில் உபசாரம் கூறப்பெற்று சபை இனிது முடிவடைந்தது.

N. S. வாதராஜ சாஸ்திரி,
ஸ்ரீமடம் ஆஸ்தானபண்டிதர்.

## திண்டுக்கலில் தர்மபிரசாரம்.

திண்டுக்கல் "தர்ம ஸம்ரக்ஷண ஸபா"வின் ஆதரவில் திருநெல்வேலி அட்வகேட் ப்ரம்ஹஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்கள். M.A. B.L., சென்ற (21-8-38) ஞாயிற்றுக்கிழமை 7-30-மணிக்கு ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் "நிஷ்காம்யகர்மா" என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் அபூர்வமான உபன்யாஸம் புரிந்தார்கள். அவ்வமயம், இந்நகரில் தங்கள் சாதுர்மாஸ்யத்தை நடத்திவரும் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீ விமலானந்த தீர்த்த யதீந்திராளவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள்.

உபன்யாஸகரவர்கள் ஸ்ரீ பகவத் பாதாளின் "சோபான பஞ்சக"த்தின் ரஹஸ்யங்களையும் தத்வங்களையும் விரிவாயும் சாஸ்திரீயமாயும் எடுத்துரைத்தார்கள். ஸகல சப்தராசிகளிலும் அபௌருஷேயமான வேதங்களே ப்ரமாண மூர்த்தன்யமென்றும், அதைத்தான் த்ரைவர்ணிகர்கள் நியமமாயும் நிரந்தரமாயும், அக்ஷரக்ரஹண அர்த்தக்ரஹண ரூபமான அத்யயனத்தைச் செய்து, வேதங்கள் வேத துல்யங்களான ஸ்மிருதி முதலியவைகளால் விதிக்கப்பட்ட நிஷித்தேதரமான கர்மங்களைக் கட்டாயம் தங்களாலியன்ற மட்டும் அப்யுதய நிச்ரேயஸ் காமர்கள் அனுஷ்டித்தே தீரவேண்டுமென்றும் உரைத்தார்கள். சாஸ்திரவிஹித கர்மாக்கள் நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்றுவகைப்படும் என்றும், அவைகளெல்லாவற்றையும் காமாஹிதமாய்ச் செய்யவேண்டுமென்றும், "வேதவிஹித காம்ய கர்மங்களைக்கூட காமபாவனையின்றி நித்யவதவச்யம் செய்ய வேண்டு"மென்றும் எடுத்துரைத்தார்கள்.

நித்திய நைமித்திக கர்மானுஷ்டானமானது பலோன்முகமாகவிருக்கும் ஸஞ்சித பாபகர்மங்கள் நம்மையணுகாவண்ணம் காக்கின்றன. நித்ய நைமித்திக கர்ம பரித்யாகத்தினால் அப்பாபகர்ம பலன்கள் உத்ரேகத்தையடைந்து நம்மையணுகிஜலத்திலுள்ள பாசம் போல் மறைகின்றன.

நியாயப்படி அபாவமான இன்மையிலிருந்து பாவோத்பத்தி யேற்பட முடியாது. அதுபோல் ஸந்தியாவந்தனாதி கர்மானுஷ்டானாபாவத்தால் ஸாக்ஷாத்தாக ஒருவித தோஷமும் உத்பத்தியாகாமற் போனாலும் பலோன் முகங்களாக விருக்கும் ஸஞ்சித பாபகர்மங்கள் நம்மை யணுக ஹேதுவையளிக்கும். ஆகையாற்றான் நித்ய கர்ம பரித்யாகம் பதனஹேதுகமென்று சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன. உதாஹரணமாக, ஏதோ ஓர் காலத்தில் மட்டும் சரியாக சாத ப்ரக்ஷாளனம் செய்யாத புண்ய ஜன்மாவாகிய நள மஹாராஜனுக்கு கலிப்ரவேசம் சம்பவித்தது சந்தியாவந்தனாங்க லோபத்தால் என்பது 'ஔப சாரிகம்' என்றும் மிக விரிவாக கர்மாக்களின் ஸூக்ஷ்மங்களை உரைத்தார்கள். பிறகு எல்லா சாஸ்திரங்களாலும் விதிக்கப்பட்ட ஸகல நித்ய நைமித்திகங்களும் முக்யபலனாகிய சித்த சுத்தியையும் அத்துடன் அவாந்தர பலன்களாகிய ஸ்வர்காதி ஸுகங்களையும்" கூட கொடுக்கிறதென்றும், அதனால், தீவ்ரமுமுக்ஷுவானவன் வைராக்யாதி சதுஷ்டயங்களைப்பெற்று விவிதிஷா ஸன்யாஸத்தால் வித்வத்ஸன்யாசியாகி பிறகு ஸாயுஜ்ய பதவியான ப்ரம்ஹாகாரமாய் விடுகிறான் என்ற நீண்டதொரு ப்ரஸங்கம் செய்தார்கள்.

அக்ராஸனம் வஹித்த ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் சில உபதேசமொழிகள் கூற ஸபை இனிது கலைந்தது.

காரியதரிசி.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

ஆரியதர்மம்.

8-9-1938

ல

4
23

35

215247

1539 9

215247

481

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 SEP 1938
MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஹு ஆவணிமீ 23உ 1938ஹு செப்டம்பர்மீ 8உ | ஸ 35

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0. தனிப் பிரதி அணா 1.

### விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு, தடவை 1க்கு அணா. 0 8 0
நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## உதவி இந்தியா மந்திரி இந்தியா வருகிறார்.

இந்திய நிலைமையை நேரில் கண்டறிய வேண்டியதற்காக, பிரிடிஷ் மந்திரிகளின் அபிப்பிராயப்படி இந்திய உதவி மந்திரியான கர்னல் மூயிர் ஹெட் 24உ யன்று லண்டனை விட்டு இந்தியாவுக்கு ப்புறப்படுகிறார்.

ஸமஷ்டி விஷயமாகவும் பொதுஜன அபிப்பிராயத்தை இவர் அறிவார். காங்கிரஸ் தலைவர்களையும், மற்றவர்களையும் ஸந்தித்துப் பேசுவார்.

## பறிமுதலான நிலங்கள்.

### திருப்பிக்கொடுக்கச் சட்டம்.

பம்பாய் மாகாணத்தில் பர்டோலி முதலிய விடங்களில் சட்டமறுப்புக்காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களை மறுபடி அதன் சொந்தக்காரர்களுக்கே திருப்பி வாங்கிக்கொடுக்க பம்பாய் மந்திரிகள் செய்த முயற்சி பலிக்கவில்லை. ஆதலால் இவ் விஷயமாக ஓர் சட்டம் செய்ய மந்திரிகள் முயற்சிக்கிறார்கள். இதன்படி ஸர்க்கார் செலவில் அந்த நிலங்கள் சட்டமறுப்புக்காரர்களுக்கு திருப்பிக்கொடுக்கப்படும். இந்தியா மந்திரியின் முன்னனுமதியும் இதற்குக் கிடைத்துவிட்டதாம்.

## திருவாங்கூர் ராஜிய கலஹம்.

### 6 பேர் மரணம்.

திருவாங்கூரில் காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் சட்டமறுப்புக்கலஹத்தால் நெய்யாற்றங் கரையில் கலஹமொன்று நடந்தது. போலீஸ் மோட்டார்களை ஜனங்கள் கொளுத்தினர். போலீஸாருக்கு கல்லடியும் விழுந்தது. பஸ்ஸில் போகும் பிரயாணிகளும் கலஹக்காரர்களால் ஹிம்ஸிக்கப் பட்டனர். "காந்திஜிக்கு ஜே" என்று கத்தும்படி [illegible] இதன்மேல் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்தனர். குண்டு காயத்தால் 5 பேர் இறந்தனர். காங்கிரஸ் தலைவர்கள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டனர்.

கொல்லத்திலும் சட்டமறுப்பு நடந்தது. அங்கு கலகம் நடந்து ஒருவர் துப்பாக்கிக் காயத்தால் இறந்தார்.

## ஆமதாபாத்தில் ஹோட்டல் பிரவேசம்.

### அம்பேத்கார் கக்ஷியின் எதிர்ப்பு.

ஆமதாபாத்தில் தீண்டாதார் ஹோட்டல்களில் பிரவேசிக்கும் விஷயமாகத் தீண்டாதார்களுக்குள்ளேயே பிளவு ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் தீண்டாதார்தான் ஹோட்டல்களில் நுழைய விஷமம் செய்கிறார்கள். அம்பேத்கார் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் இதை விரும்பவில்லை. ஆதலால் இருகக்ஷியினருக்கும் ஒரு கூட்டத்தில் தகராறு ஏற்பட்டு கூட்டம் கலைந்து போயிற்று.

## 326 கோடி ரூபாய் தங்கம் போய்விட்டது.

சில மாதங்களாக இந்தியாவிலிருந்துவெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த தங்கத்தின் மூலமாக 326 கோடி ரூபாய் பொறுமானமுள்ள தங்கம் இந்தியாவை விட்டுப் போய்விட்டதாக இந்தியா சட்ட ஸபையில் ஒரு கேள்விக்குப் பதில் கிடைத்தது. இந்தியாவிலுள்ள தங்கத்தின் மதிப்பு 1454 கோடி என்று தெரிகிறது.

## ஜில்லா கல்வி ஸபைகள் எடுக்கப்பட்டன.

இதுவரையில் எல்லா ஜில்லாக்களிலுமிருந்து வந்த கல்வி ஸபைகளை எடுத்து விடுவதென்று சென்னை ஸர்க்கார் தீர்மானித்து விட்டனர்.

## எலிமெண்ட்ரி ஸ்கூல்கள்.

### பிரதி மாஸமும் ஸர்க்கார் கிராண்ட்.

சென்னை மாகாணத்திலுள்ள எலிமெண்ட்ரிப் பள்ளிக்கூடங்களுக்கு வருஷத்திற்கு ஒரு முறை ஸர்க்கார் கிராண்ட் கொடுக்கும் வழக்கத்தை மாற்றி, இனிமேல் ஒவ்வொரு மாதமும் கிராண்ட் தொகையை பிரித்துக் கொடுக்க நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர்களின் சௌகர்யத்தை உத்தேசித்தே இப்படிச் செய்யப்படுகிறது.

## கும்பகோணம் பாங்கி, லிமிடெட், கும்பகோணம்.

(1904-ம் ஹு த்தில் ஸ்தாபிக்கப்பட்டது)

ஹெட் ஆபீஸ்:- பெரியதெரு, கும்பகோணம்.
லோகல் சப் ஆபீஸ் யானையடி ரோடு.
பிராஞ்சுகள்:— மன்னார்குடி, நாகப்பட்டணம், நன்னிலம், அய்யம்பேட்டை.

| | |
|---|---|
| ஏற்படுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 5,00,000 |
| வசூலிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 2,82,575 |
| காப்புநிதிகள் | ரூ. 1,54,718 |
| கண்டிஞ்சென்ட் பண்டுகள் | ரூ. 64,178 |

ஷை பாங்கி ஆபீஸுகளில் சகலவிதமான பாங்கி வேலைகளும் நடத்தப்படும்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்.

# திருப்புகழும் பக்திரஸமும்.

(சென்ற வாரம் தொடர்ச்சி)

இனி அக்ஞான நிவர்த்தி ஞானமின்றி வாரததாலும் அந்த ஞானம் வேதாந்த வாக்யத்தாலேயே கோடல்வேண்டுமாதலாலும் அக்ஞான நிவர்த்தி ரூப மோக்ஷ ஸாதனத்வம் திருப்புகழ் ஓதலுட்கு எவ்வாறு கூறல் தகுமெனின் கூறுவோம்— உபநிஷத் என்றும் வேதாந்தமென்றும் ஒரு பொருட் சொற்களேயாயினும் உபநிஷத் பதத்திற்கு முக்யார்த்தம் ஞானமே. உப சமீபத்தில் நி நிச்சயமாய்ச் சேர்ப்பித்து ஸாதயதி அவித்யை நசிப்பிக்கிறதாலெனபாஷியம். அப்பேர்ப்பட்ட ஞானத்தை புகட்டுவதாலேயே வேதாந்தங்கள் உபநிஷத்துக்களென (அமுக்யமாய்) கௌணமாய் வழங்கப்படுகின்றன. ஆதலால் அவ்வித ஞான நிமித்தமான எல்லா நூல்களு முபநிஷத்துக்களேயாகும். "பகவத்கீதாஸூபநிஷத்ஸு" என்றமை ஈண்டு கவனிக்கத்தகுந்தது. த்ருஷ்டார்த்தமான ஞானமுதிப்பதற்குநியமம்உபயோகமில்லையாதலால் இத்திருப்புகழால் ஞானம் உதித்தபின் அத்ருஷ்டார்த்ததாக மகா வாக்யச்ரவணம் செய்தாலும் போதும். அல்லது திருப்புகழை ஓதுவர்க்கு ஸ்ரீஸ்வாமிநாதனே ஸத்குருவாக வந்து தத்வோபதேசம் செய்தருளானென்பது திண்ணம். "யமேவைஷவ்ருணுதேதெ நலப்ய:" என்ற வசன முறைத்தலறிக.

ஆயின் ஸம்ஸ்கிருத பாஷையை விட்டுத் தமிழில் பாடியதின் காரணமென்னனில் எல்லோரும் எளிதில் உணரவியலுமென்ப தொன்று. தமிழ் மொழி இனியதாதலால் இனிமையான மொழியில் பாட வேண்டுமென்பது மற்றொன்று. "பைந்தமிழ் பின் சென்ற பச்சைப்பசுங்கொண்டலே" என்றபடி ஸ்ரீரங்கநாதன் ஆழ்வாரது தமிழுக்குருகி தேருடன் விரைந்து சென்ற பெருமையை இத்திருப்புகழிலேயே "வண்டமிழ்பயில்வோர் பின் திரிகின்றவன்" (12) என நன்கு விளங்குகின்றது. "நம்லேச்சிதளவ" என்ற நிஷேதம் அபசப்த விஷயமேயொழியத் தமிழ் மொழியைப்பற்றியதல்ல. இதிஹாஸம், புராணம். பாஷாப்ரபந்தங்கள் யாவும் மனத்திற்குரியவைகளே. வடமொழி நூல்களை விட தமிழ் நூல்களால் மனனம் செய்தால் தெளிதற்கேதுவாகும். ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாஷ்யாதி காலக்ஷேபம் செய்து விட்டு திருவாய்மொழி முதலிய பகவத் விஷய மனனம் செய்தலும் இதற்குக்குச் சான்றாகும். இதுபற்றியே "தேவர் குறளும் திருநான் மறைமுடியும் மூவர் தமிழும் முனிமொழியும் | கோவைத்திருவாசகமும் திருமூவர் மந்திரமும் ஒரு வாசகமென்றுணர்!!" என ஔவையாரால், பிரும்ம சூத்திரங்களும், ஸகலமான உபநிஷத்துக்களும், திருவாசகமும் ஒரே அர்த்தத்தை உணர்த்துமென கூறப்படிருந்த போதிலும், நால்வர் நாள்மணி மாலையில் "விளங்கிடைபசிர்த்தகளைமிடற்றண்ணல் விளம்பிய வேதஆரணமொழியோவாதவூரண்ணலுரைத்த திருவாசகமோயாதோ சிறந்தது என்குவீராகில் வேதமோதில் விழிநீர் பெருகி நெஞ்சமெளக்குருகி நிற்பவர் காண்கிலம். திருவாசகமிங்கொரு காலோதில் மெய் விதிர்ப்ப விழி நீர் பெருக்கி நெஞ்சமுருகி நிற்பார் மாந்தர்—" என்பதாக பக்தி ரஸத்தை விளைவித்தாலேயே திருவாசகம் சிறந்ததெனத்துணிந்தார் பெரியோர்.

அதிலும் வசனநடையாயுரைப்பதிலும், சூத்திர நடையாய்ச் சுருக்குவதிலும், சந்தப் பாடவாய்ப் பாடுவதில் விசேஷமுண்டு. அதுவே மனதுக்கு வசகாம், தேவதைகட்குப் பிரீதிகாம். "நர்விதா கானலோலுபா" என்று ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் தேவிக்குப் பாட்டில் அதிகப் பிரீதியுண்டெனக் கூறியிருத்தல் காணவும். "ஸாமகானப்ரியா" என்பதாக ஸர்வ வேதப் பிரியையாயினும் ஸாமகானத்தில் அதிகப் பிரீதியென விதந்து கூற்று. ஸாமப்ரியனன்றோ சிவபெருமான். கைலாஸத்தைப் பெயர்த்த குற்றத்திலிருந்தும் ஸாமகானத்தினல் சிவனைக் களிப்பித்தே இராவணன் விடுபட்டான். "சந்தோக ஸாமமோதும் வாயானை" எனத் தேவாரம். "பசுர்வேத்தி சிசுர்வேத்தி வேத்திகானரஸம்பணீ" என்று பசுக்கள் சிசுக்கள், பாம்பு முதல் கானரஸத்தை அறியுமென்பதையறியார்தாறிலர். ஆதலால் கானத்தால் புகழ்தலே சிறந்தது. அதிலும் ஸ்திதப்ரக்ஞனுய் ஆத்மானுபூதியுடன் பாடும் பாடல்களின் பெருமை சொல்லவும் வேண்டுமோ. "ஹஸத்யதோரோதிதிரௌதி காயத்யுன்மாதவந்ருத்யதி" என்று ஜீவன் முக்தனுன பக்தனுடைய நிலைமையைக் கூறமிடத்து ஒருவருக்கும் வசப்படாத பகவானை வசப்படுத்திவிட்டோமென சிரிக்கிறான். இத்தனை காலமாய் இவனையறியாமல் வீணே போக்கினேமேயென்று கரைகின்றான். உலகீர் வாரும் பகவானைப் பணியும் என்று கூவுகிறான். எல்லோரையும் அனுக்ரஹிக்கவேண்டுனெப் பொருட்பட பாடுகிறான், க்ரஹக்ருஹீதன் போலக் கூத்தாடுகிறான் என்றுரையாதலால் உலக நன்மைக்காகவே அப்பாடல்களென பகரப்பட்டுள்ளது. எந்த பாட்டிலிருந்து கேட்டவுடன் பகவானிடத்தில் பக்தியும், பரமாத்மானுபவமும் விஷயத்தில் வைராக்கியமும் உதிக்குமோ அதுவே சிறந்த ஞானஸாதனப் பாடலாம்.

"பக்தி: பரேசானுபவ விரக்திரன்யத்ர சைஷத்ரிக ஏக கால: | ப்ரபத்யமானஸ்ய யதாச்நத: ஸ்யாத் துஷ்டி: புஷ்டி: க்ஷுதபாயோऽநுகாஸம் ||" என சாதித்தபடி ஒருவன் சாப்பிடும்பொழுது ஒவ்வொரு கபளத்திலும் சிறிது த்ருப்தி, சிறிது புஷ்டி கொஞ்சம் பசியாறல் ஏற்பட்டே பூரணமாக புசித்த பின்னர்முழுப்பசியாறல்,முற்றிலும் திருப்தி, பூர்ணமான புஷ்டியும் உண்டாவதுபோல் ஒவ்வொரு பாட்டிலும் ஒவ்வொரு தரம் பாடும்போதும் கொஞ்சம் கொஞ்சமாய் விஷய வைராக்யம் பரானுபவம், ஈசுவர பக்தி என மூன்றும் பகவத்குண கானத்திற்கு பலமாகத் தெளியலாம்.

இவ்வளவு இனிமையாக பாடப்படும் பாடலில் ப்ரதிபாதிக்கும் பொருளோ ஞானஸ்கந்தன். தத்க்ரது நியாயத்தாலும் ஞானம் வேண்டுபவர் அவனையே சரணமடையவும் பாடவும்வேண்டும். "ஆசார்யவான் புருஷோவேத" என்ற ச்ருதியை அர்த்தவத்தாக்க செய்யும் பொருட்டு ஸர்வவித்யாதிபதியான சங்கரருக்கும் ப்ரணவத்தை உபதேசித்த உமாஸுதனும் அனுஸயமும் பரஸ்பரம் முரண்படாது ஒரே நோக்குள்ளதென்பதை போதிக்கவே ஆறுமுகத்துடன் க்ருத்திகா தேவிகளின் ப்ரீதி வியாஜமாய் சரவணத்திலுதித்த தேஜோ ரூபம், ஆறுருதுக்களும் ஆறு முகங்களையும் பன்னிரெண்டு மாதங்களிலும் பன்னிரெண்டு புஜங்களாகவும் காலஸ்வரூபமாயிருந்து காலனென மயனுகாமலவனிரு பாதகமலமினி தருளுமருள்மூர்த்தி. பனிரெண்டுயிர்களும், பன்னிநகாரங்களாகவும், பதினெண்மெய்களும், பதினெட்டு கண்களாகவும் கொண்டு தமிழ் தைவமாய் வடமொழியைப் பாணினிக்கு நடராஜ வடிவுடன் உபதேசித்ததுபோல அகத்தியருக்குத் தென்மொழியை பாலசுப்பிரமணிய வடிவுடனுபதேசித்தமுருகன்.

இவ்வளவு மகிமை வாய்ந்த பாடல்களைப் பாடியவரின் பெயர் அருணகிரிநாதர் என்பார். இவரது சரித்திரம் சிறிது ஆராய்வோம்—இவர் "ஸ்மரணாதருணாசலே" என்று நினைத்தால் முக்தியளிக்கவல்ல திருவண்ணாமலையில் ஓர் பக்தருடைய ஸுக்ருத பரிபாகமாகத்தோன்றியவர். பால்யத்தில் சிற்றின்பத்தில் மூழ்கி வறுமை பிணி முதலியவற்றால் நொந்து வருந்தி தீனசரண்யனுன ஷண்முகக்கடவுளால் அனுக்ரஹிக்கப்பட்டு அவராலேயே மவுன நிலையும் உபதேசிக்கப்பெற்று அவாளித்த ருத்திராக்ஷ மாலையை தரித்து "முத்தைத் தருபத்தி' என்றவாராலேயே அடியெடுத்துக்கொடுக்கப்பட்ட பாட்டின் ஆரம்பத்தை முதலாக வைத்துக் கொண்டு க்ஷேத்திரங்கள் தோறும் ஸ்ரீ சுப்பிரமண்ய கடவுளை சென்று தெரிசித்துப் பணிந்து புகழ்ந்துவாரென்றும், திருச்சிராப்பள்ளிக்கடுத்த வயலூர் பதிக்கு வரும்படி ஆக்ஞாபித்ததாயும், அங்கிருந்து விராளிமலையிலும், திருச்செந்தூரிலும், பலவித அநுக்ரகங்களைப்புரியப்பெற்றவராயும், சுவாமிமலையிலும், செந்திலப்பதியிலும், மயூரமேறிந்ருத்தெரிசனம் காண்பித்தருளப்பெற்றாரென்றும், திருவடி சிரமேவளிக்கப்பட்டாரென்றும் தெரிகிறது. இவர் பிரபுடதேவராசனென்றும்அரசனது வேண்டுகோளுக்கிறங்கி மயிலேறி வா வேண்டுமென ஒரு நாள் ஷண்முகனை துதி செய்த போது இவருக்கிடையூறு செய்யவொண்ணி அந்த அரசனிடம் ஆஸ்தான வித்வானுக அமர்ந்து அகந்தை குடிகொண்டவரான சம்மந்தாண்டாரென்பவர் தனக்கு உபாஸ்யதைவமான தேவியை துதித்து உன் மகனுன ஷண்முகனைப் போகவிடக்கூடாதென வேண்டியும் முருகன் பக்தருக்கிரங்கி மயில்மீதேறி அதிவேகமாய் வந்து அரசன் மனோரதத்தை பூர்த்தி செய்வித்தனனென்றும் நேரெதிரிடையாக சம்பந்தாண்டன் தோற்றானென்றும் பெரியோர்கள் கூறுவார்கள். எனவே பிரபுடாசன் காலமே இவரது காலமாதல் வேண்டும். அவ்வரசன் காலமோ சரித்திர ஆராய்ச்சி வல்லுவரால் கி.பி. 1460 எனத்தீர்மானிக்கப்படுவதால் இன்றைக்கு 500 வருடங்களுக்கு முன்னர் என ஏற்படுகின்றது. வில்லிபாரதமென பிரசித்தி பெற்ற தமிழ் மகாபாரதம் பாடின வில்லிப்புத்தூராரும் இவர் காலத்தவரே. இவரால் செய்யப்பட்ட க்ரந்தாதியில் ஒரு செய்யுளுக்குப்பொருள் புலப்படாமல் தோல்வியடைந்தாரான்றும் பிறகு அருணகிரிநாதனருளால் இதற்கு முழுதும் தாமே உரை செய்துளாரென்றும் கூறுநிற்பர். கந்தரனுபூதி கந்தரலங்காரமென்னும் இதர நூல்களும் இவரருளிப்பாடியதாகத்தெரிகிறது.

இவரது பாடலை "கடல் மடைதிறந்த வெள்ளம்" எனக்கவிகள் கொண்டாடுகின்றவர். தாயுமானவரும் "அய்யா அருணகிரி அப்பாஉனைப்போலே மெய்யாகவோர்சொல் விளம்புவர் யார்" என்று வியந்தார். 'கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தையருளுடியிருக்கு நானென்றுளே' எனககதறினர். தாயுமானவருக்குத் தமது குருவானுபதேசிக்கப்பட்ட "அறிவை யறிவது பொருளௌனருளிய பெருமாளே என்ற திருப்புகழ் பாடலும் இங்கு காட்டத்தகும். இதுபற்றியே 'வாக்கிற்கருணகிரி வாதவூரார் கனவில் என்று புலவர் வழிக்கூற்றும் பிறந்துளது. கடைசியில் இவர் சுகபிரும்மம்போல் கிளிரூபமாய் முக்தி பெற்றாரென்றும் பகரப்படும், பரம பக்த சிகாமணியாய் விளங்கும் இப்பெரியருடைய அருள் வாக்கான திருப்புகழ் பக்திரஸத்தைப்புகட்டுவதில் சிறந்தது.

இவ்வாறு உபநிஷதர்த்தமான பக்தி, ஞான வைராக்யாதிகளையும் பிரும்மஸ்வரூபத்தையும் செவ்வனே போதிக்கவல்ல இத்திருப்புகழானது உபநிஷத்மூலகமெனினும், விருக்ஷத்தினின்றும் பழுத்த பழம் போலும் கரும்பினின்றும் வந்த சர்க்கரை போலும்

(3-ம் பக்கம் பார்க்க.)



# ஹிந்து தர்ம வீர ஜதாவின் சுற்றுப் பிரயாணம்.

## திருவண்ணாமலை (29-8-38)

இன்றையதினம் மாலை [illegible] 7 மணிக்கு ஸ்ரீ அருணாசலேச்வரர் ஆலயத்தின் எதிரில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்திற்கு, அவ்வூரில் உள்ள பிரபல வக்கீல்களும், ராவ்சாகிப் சேஷாசலய்யர், M. நாராயணஸாமி அய்யர், இன்னும் அநேக பிரபலஸ்தர்களும் விஜயமாகியிருந்தார்கள். பிரம்மஸ்ரீ கிருஷ்ணதனபாடிகள் அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்தில் ஜதாவின் தலைவர், சுமார் இரண்டுமணிநேரம் ஹிந்து தர்மத்தின் பொதுக் கொள்கைகளைப் பற்றியும் தற்காலம் வரப்போகும் ஆலயப்ரவேச மசோதாவைக் கண்டித்தும் விவரமாக பேசினர். பின்னர் ஸ்ரீமான் சேஷாசலய்யர், ஜதா தலைவரின் பேச்சை மெச்சியும், ஆதரித்தும், ஓர் இனிய சொற்பொழிவு நடத்தினர். சாரதாசட்டம், ஆலயப்ரவேச மசோதா, முதலிய அசாஸ்திரீயமான சட்டங்களை கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றின பிறகு கூட்டம் கலைந்தது. பிறகு ஸ்ரீ அபீதகுசாம்பிகாஸமேத ஸ்ரீ அருணாசலேச்வரஸ்வாமியை தர்சனம் செய்து கொண்டு, ஸ்ரீமான் ராவ் சாகிப் சேஷாசல அய்யரின் வீட்டில் விருந்துண்டபின் ஜதா திருவண்ணாமலையை விட்டு புறப்பட்டது.

## கொளத்தூர் (31—8—38)

இவ்வூரில், ஓர்பொதுக்கூட்டத்தில் ஜனங்களுக்கு, ஆலயப்ரவேசத்திற்காக, சென்னை சர்க்கார் கொண்டுவரப்போகும் மசோதாவைப்பற்றி விவரித்துக்கூறியும், அதனால் ஏற்படக்கூடிய கெடுதல்களை விளக்கியும், ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

## காஞ்சீபுரம். (2—9—38)

ஏதோஷ்ண ஸ்திதியின், காரணத்தாலும், ஜதாவிலுள்ளவர்களில் [illegible] தேக அசௌக்யத்தாலும், [illegible] முகாமில் சேர்க்கப்பட்டுள்ள [illegible] களில் சில தொத்து வியாதியின் [illegible] வருவதாலும் முகாம் [illegible] சில ஊர்களை கைவிட [illegible] (—9—38) கஞ்சிமாநகரத்தை [illegible] அவர்கள் அன்றுதினம் [illegible] துண்டு பிரசுரங்களை [illegible] அவ்வூரில் உள்ள ஸ்ரீ [illegible] ஸ்ரீ ஏகாம்பரநாதர், ஸ்ரீ [illegible] ச்வரர், ஸ்ரீ குமாரஸ்வாமி, [illegible] தேவாலயங்களில் ஸ்வாமிதர்சனம் [illegible] டார்கள். காஞ்சீபுரம் [illegible] புறப்பட்டனர்.

## [illegible] ([illegible]—38)

இன்று தினம் [illegible] இவ்வூரையடைந்த ஜதாவுக்கு, உள்ளூர் உயர்தர பாடசாலையின் உபாத்யாயர் ஸ்ரீமான் P. K. நாராயணஸ்வாமி அய்யர் வரவேற்று, விருந்து அளித்தார். மாலையில் ஸ்ரீ [illegible]மஸ்வாமி கோவிலுக்கு எதிரில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடந்தது. அவ்வமயம் மகாராஜஸ்ரீ மாடபூசி கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைமை வகித்தார். உள்ளூர், யூனியன் போர்டு பிரஸிடெண்ட், ஸ்ரீமான் K. N. ஸ்ரீரங்காச்சாரியார், போஸ்டுமாஸ்டர், இன்னும் அநேகம் காங்கிரஸ் வாதிகளும், கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டத்தில் ஜதா தலைவர், ஸ்ரீமான் A. குப்புசாமி, விவரமாக ஹிந்துமதத்தின் தற்கால நிலைமையையும், ஹிந்துக்கள் செய்யவேண்டிய கார்யங்களையும் பற்றி நன்றாய் பேசினர். இவர் பேசி முடித்தவுடன், தலைவரின் அநுமதியின் பேரில், சென்னையிலிருந்து அவ்வூருக்கு வந்திருந்த ஸ்ரீமான் அருணாசலம் என்பவர், சாரதாசட்டம், ஆலயப்ரவேச மசோதா முதலியவைகள், அத்யந்தம் அவச்யமென்று பேசினர். பின்பு கூட்டத்தின் அக்ராசனர் முன்னவர் பேசியவைகளைக் கண்டித்தும், அவர் எழுப்பிய பிரச்னைகளுக்கு சரிவர பதில் சொல்லினர். பின்பு, சாரதாசட்டம் ஆலயப்ரவேச மசோதா முதலியவைகளை கண்டித்தும் சட்டசபைகள் மேற்படி மத விஷயங்களில் தலையிடுவது தப்பு என்றும், தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன. கூட்டம் முடிந்தபின்னர், இரவு போஜனத்தை முடித்துக்கொண்டு ஜதா இவ்வூரை விட்டு புறப்பட்டனர்.

G. சங்கரநாராயண வாஜபேயர்.

## விளங்குடி.

(கும்பகோணம் தாலுகா.)

லக்ஷார்ச்சனை பூர்த்தியும், மண்டலாபிஷேக பூர்த்தியும்:—

விளங்குடி யென்று வழங்குகிற "கபித்தவன" க்ஷேத்ரத்தில் அனவரத ஸான்னித்தமாக விளங்கிக்கொண்டிருக்கிற ஸ்ரீ ஆனந்தவல்லி சமேத ஸ்ரீ இந்திரநேத்ரப்ரதானேச்வரஸ்வாமிக்கு (சென்ற ஆனிமீ 30உ அஷ்டபந்தன மஹாஸம்ப்ரோக்ஷணம் நடந்து அது முதல் 48 நாட்களாய் நடந்து வந்த) மண்டலாபிஷேக லக்ஷார்ச்சனையின் பூர்த்தியானது நாளது ஆவணிமீ 15உயன்று காலையில் பலரது வேண்டுகோளின்பேரில் விஜயம் செய்திருந்த இலந்துறை, "ஸமரஸகுடீரம்" பிரும்மஸ்ரீ சிவாசார்ய கங்காஜடேச சர்மா அவர்களது அத்யக்ஷதையில் மிகவும் சிறப்பாக, ஸ்ரீ இந்த்ரநேத்ரப்ரதானேச்வரஸ்வாமிக்குப்பகலில் ஏகாதசருத்ரமஹன்யாஸ பூர்வகமான மஹாபிஷேகமும் திவ்யாலங்கார விபூதி அபிஷேகமும் ஈசானாதி பஞ்சமுகங்களுக்கு தனித்தனி 5 ஆசார்யர்களைக்கொண்டு தனித்தனியான 5 ஸஹஸ்ரநாம அர்ச்சனைகளை பஞ்சபில்வங்களைக்கொண்டு அர்சித்து ஐந்துவித அன்னம் 5 விதபக்ஷ்யங்கள் பல வர்க்கங்களுடன் பூஜை நடத்தி ராத்ரி திவ்யாலங்காரத்துடன் ஸாயரக்ஷை பூஜை ஆனதும் ப்ரஹ்மஸ்ரீ சிவாசார்ய கங்காஜடேச சர்மா அவர்களால் "கலிதோஷ நிவர்த்தி மார்க்கம்" என்ற விஷயம் பல ஸம்ஸ்க்ருத தமிழ் மேற்கோள்களுடன் பண்டிதபாமரரஞ்சிதமாக மிக அருமையான உபன்யாஸஞ் செய்யப்பட்டது.

பிறகு உள்ளூர் ப்ரஹ்மஸ்ரீ பாலராம தீக்ஷிதரவர்கள் உபசாரணைப்ரஸங்கம் செய்தார்.

உள்ளூர் ஸ்ரீசுப்பிரமண்ய சிவாசார்யரது இடைவிடாத உழைப்பும் ச்ரத்தையுமே இவைகளுக்கெல்லாம் மூலகாரண மென்றும் பாராட்டிப்பேசிய பிறகு தீபாராதனையும் ஆனபிறகு திவ்ய கோஷங்களுடனும் ஸ்வஸ்தி வாசன கோஷ்டிகளுடனும் உள்ளூர் ஸ்ரீகல்யாண (ராம) பாகவதருடைய பஜனை கோஷ்டியும் மிகவும் ஆனந்தமாய் பஜனை செய்து கொண்டுவர ஸ்வாமி புறப்பாடு நடந்து ஸகல ஜனங்களுக்கும் பலப்ரஸாத விநியோகங்களுடனும் உத்ஸவமானது பரிஷ்காரமாய் பூர்த்தியானதைப் பலரும் கொண்டாடுகிறார்கள்.

ஸேவார்த்தி.

## காட்டுமன்னார்கோவில்.

பிராம்மண மஹா ஸபை

பிரசாத வரவேற்பு.

டி ஸபையின் ஸங்கம் 28-8-38 மாலை ஸபாமண்டபகதில் கூடிற்று. ஊரிலுள்ள பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கார்யதரிசியால் சென்ற ஸபை நடவடிக்கைகளையும், ஹிந்து தர்ம வீர ஜதா வந்து பிரசாரம் செய்ததையும் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன் குண்டூர் முகமில் இருந்து ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீஸ்வாமிகளால் இவ்வூர் மகா ஜனங்களுக்கு அனுக்ரஹிக்கப்பட்டிருந்த ஸ்ரீ வியாஸாக்ஷதப்பிரசாதங்களையுபகரித்து, ஆசாரமஹிமையையும் பற்றி உபந்யசித்து எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமிகளின் சிஷ்ய வாத்ஸல்யத்தையும் அனுக்ரஹஅபிமானத்தையும் சிரஸால் பணிந்து ஏற்கப்பட்டது.

புது ஹு ஸபை அமைப்பு.

நாளது ஹுத்திற்கு கீழ்கண்டபடி ஸபை கமிட்டி திட்டம் செய்யப்பட்டது.

ஸ்ரீமான் வீரநாராயணப்பெருமாள் கோயில் டிரஸ்டி ஸ்ரீரங்காசாரியர் தலைவர். 'கிருஹயக்ஞ வி. உமாமகேஸ்வர சாஸ்திரி காரியத்ரிசி.கமிட்டி மெம்பர் ஸ்ரீமான் பூர்ணம் ஸ்ரீநிவாஸாசாரியார் ஸபையின கௌரவ வேதவாத்தியார்: ஸ்ரீமான் கோபாலசாரியார் ஸ்ரீமான் திருக்காமேச்வரய்யர் உள்ளூர் இதர பிராமணர்கள் அனைவரும் ஸாமான்ய மெம்பர்கள். ஸபையின் விதிகள்.

1. ஸ்வதர்ம விதிகளை வழுவாது பாதுகாற்றல்.
2. சிறுவர்களுக்கு இலவசமாய் வேதத்துடன் உபயுக்த பாகங்கள் கற்பித்தல்.
3. பிராமணர்களின் சுபா சுபங்களில் வேற்றுமை காட்டாமல் ஒற்றுமையுடன் இருந்து கார்யங்களை நிருவித்தல்.
4 மாலை தோறும் ஸஹஸ்ரநாம பாராயணம் செய்வித்தல்.
5. ஸபையினுல்தேறுதலடைந்த ஒவ்வொருமாணுக்கனும், ஸந்நதியில் நடைபெறும் திருமஞ்சன, புறப்பாடுகளில் பிரதிப்பிரயோஜனம் கருதாமல் கைங்கர்யம் புரிதல்.
6. ஸபையங்கத்தினர் தானுகவே பூணூல் நூற்று தரித்துக்கொள்ளுதல்.

சென்ற ஹு விதிகளுடன் மேற்கண்ட விதிகளும்பக்கத்துணையாகசேர்க்கப்பட்டது

"கிருஹயக்ஞ" வீ.உமாமகேச்வர சாஸ்திரி.

## புத்தக தரவு.

ஸ்ரீ ஆண்டாள் திருமணம், கப்பல் (ஓடம்) நடராஜஸ்தவரத்நமாலா, வைத்தியேச ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்திரங்கள், ஸ்ரீபதி அநுபவ ஜாதகம், இந்தியக்கைத்தொழில் அபிவிருத்தி சங்கர விலாஸம், ஆகிய புத்தகங்கள் மதிப்புரைக்காகக் கிடைத்தன. மதிப்புரை பிறகு வெளியாகும்.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

கோவினின்றும் வந்த நெய் போலும் ஸாரபூதமாதலால் மிகவும் பாராட்டத்தக்கதேயாகும்.

இவ்விதம் ஷண்முகனது புகழைத் துதிக்குமின்னால் பகவானது துதியென்றலும்பொருத்தமே, நான்கு வேதங்களும் புருஷ வடிவமாக கைலாயத்தில் கடியம் கூறிநின்கின்றவையன்றோ. "வந்திபூதேச்ருதி கதம்பே" என்றான்றோ. இப்பவும் தேவாலயங்களில் "ருக்வேதமவதாரய" என்று தொடங்கி வேதவசனத்தால் துதி செய்தலும் கன்கூடன்றோ. ஸ்ரீ மத்பாகவதம், ச்ருதி, கீதையே சாக்ஷி "யதாசயானம்ஸம்ராஜம் புருஷா: போதயந்திஹி" என்றது. ஆதலால் வேதநிகரான ஸ்துதி என்பதில் ஐயமில்லை. (தொடரும்)



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்.

பகுதான்ய-ளூ ஆவணி-மீ 23உ

## ஆலயப்பிரவேச மசோதா.

ஆலயப்பிரவேச அக்ரம கிளர்ச்சியில் நமது பிரதம மந்திரி ஏற்கனவே முன்னணியில் நின்று வேலை செய்தவர். ரங்கய்யர் மசோதாவை நிறைவேற்ற அவர் காட்டிய பிடிவாதமும் அதற்காக டில்லி சட்ட ஸபை மெம்பர்கள் வீட்டு வாசல்களிலும், வெள்ளைக்கார ஸர்க்கார் மெம்பர்களின் முன்னிலையிலும் அவர் நின்று படாதபாடு பட்டவர். சாரதாச்சட்டத்திற்கு, மிஸ் ராத்போன் போன்ற வெள்ளைக்காரி உதவியை நாடியதுபோல் [illegible] பெர்டிராண்ட் ரஸ்ஸல் போன்ற வெள்ளைக்காரர் சிபார்சைக்கொண்டு இந்தியா கவர்ன்மெண்டாரை வசப்படுத்தவும் அவர் சிரமமெடுத்துக்கொண்டது மறந்து விடவில்லை.

ஆலயப்ரவேச விஷயமாக அவர் பிடிவாத புத்தியுள்ளவராதலால், தார்மிகர்கள் எவ்வளவு நியாயமான கக்ஷியைச்சொல்லிய போதிலும் அவர் அதை காதில் வாங்கக் கூடியவரல்லர். மேலும் இவ்விஷயத்தில் தார்மிகர்களுடைய கக்ஷி யென்ன வென்பதை அவர் அறியாதவரும் அன்று. அதை அவர் வெகுவாக நன்கு அறிந்து கொண்டிருக்கவேண்டும். இந்த நிலைமையில் தார்மிகர்கள் ஆலயப்பிரவேசத்திலுள்ள அநீதிகளை இப்போது மீண்டும் விஸ்தாரமாக எடுத்து அவருக்கு நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. தூங்குகிறவர்களை யல்லவோ எழுப்ப வேண்டும்! ஆதலால் வேண்டுமென்றே அக்ரமம் செய்யத்துணிந்து நிற்போரிடம் நாம் விவாதித்துக்கொண்டிருப்பதில் பயன் கிடைக்குமாவென்பது ஸந்தேஹமே. ஆயினும் இப்போது அவர் ஜனநாயக கவர்ன்மெண்டாரின் பிரதான நிர்வாஹியாயிருப்பதால் எல்லா ஜனங்களுடைய அனுமதியை பெற்றே எதையும் செய்யக்கடமைப்பட்டவர். அப்படியிருந்தும் எலெக்ஷன் காலத்தில் ஓட்டர்களிடம் பிரஸ்தாபித்து அவர்களுடைய அபிப்பிராயமோ அநுமதியோ பெறாத நிலைமையில் அவர் தற்போது இந்தப்பெரிய மதப்புரக்ஷியைச் செய்ய முற்பட்டிருப்பதால், ராஜீய தர்மப்படியும் ஜனநாயகதத்வப்படியும், பொது ஜனங்கள், முக்யமாக வோட்டர்கள் தங்களுடைய ஆக்ஷேபத்தை அவருக்கு தெரியப்படுத்துவது உசிதமாயிருக்கும். அந்த வழியில் ஜனங்களை இறங்கிக்கிளர்ச்சி செய்யும் படி தூண்டவேண்டியது தார்மிகர்களின் கடமையாயிருக்கிறது.

இந்த மசோதாவின் பூர்வ பீடிகையில் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களும், காரணங்களும் ஆசாரச் சீர்திருத்தக்காரர்களின் பேச்சைப்போன்றிருக்கின்றனவே யல்லாது, பொறுப்புள்ள ஒரு கவர்ன்மெண்டின் பேச்சாகக் காணப்படவில்லை. "ஹிந்துக்களில், சில வகுப்பார் இதர ஹிந்துக்களைப்போல ஆலயங்களில் பிரவேசிப்பதற்கு இருந்து வரும் தடையை நீக்கவேண்டுமென்று பொதுமக்கள் அபிப்பிராயம் வளர்ந்து கொண்டுவருவதாக"க் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது முற்றிலும் உண்மைக்கு மாறுனது. தீண்டாதார் ஹிந்துக்களா, அல்லவா என்றதைப்பற்றியே நமது தலைவர்களுள் ஓர் பலத்த அபிப்பிராயபேதமிருந்து வருகிறது. அதைப்பற்றி இங்கு நாம் இப்போது விவாதிக்கவில்லை. ஆனால் பொதுமக்கள் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு அளிப்பதாகச் சொல்லுவது வெறும் பகட்டுவார்த்தையே யாகும். காங்கிரஸ் ஹிந்துக்களைப்பற்றிய வரையில் இது உண்மையாயிருக்கலாம். ஆனால் பெரும்பாலோரான மதப்பற்றுள்ள மற்ற ஹிந்துக்கள் இதை ஆதரிப்பதாகச் சொல்லமுடியாது. இதை பிரதம மந்திரி எப்படி அறிந்தார்? எலக்ஷன் காலத்தில் வோட்டு மூலம் இதையறிந்தாரா? இல்லை. ஆனால் ஆலயப்ரவேசத்திற்கு எதிரான உணர்ச்சியை இவர் அறிந்து அதற்காக வோட்டர்களுக்கு உறுதியளிக்கவேண்டி வந்ததை இவர் மறக்கமுடியாது. மேலும் ரங்கய்யர் மசோதா விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் சேகரித்த அபிப்பிராயத்தில் பெரும்பான்மையான ஜனங்கள் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பதாகவே ஸர்க்கார் தஸ்தாவேஜிமூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க எந்த ஆதாரத்தைக் கொண்டு பொதுமக்கள் ஆதரவிருப்பதாக இவர் கூறுவது [illegible] காங்கிரஸ் காரர்கள், ஸ்வதந்திரம், ஸமத்வம் என்ற அபத்தக் கொள்கையைக்கொண்டு பாமரர்களைக் கிளப்பிவிட்டார்கள். ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று கிளர்ச்சிசெய்ய ஒரு சிலரைத் தூண்டிவிட்டார்கள். ராஜீய காரணத்தை உத்தேசித்தும், தாழ்ந்த ஜாதியாரை தங்கள் வசம் சிக்கவைத்துக்கொள்ள நினைத்தும் இவர்கள்செய்த சூழ்ச்சியாலேயே சிலர் ஆலயப்பிரவேசம் வேண்டுமென்று சொல்ல முன் வந்திருக்கிறார்களேயல்லது வேறில்லை. ஆகவே ஆலயப்பிரவேசம் வேண்டுமென்பவர்கள் ஸ்ரீ. ராஜகோபாலாசாரியால் ஸிருஷ்டிக்கப்பட்ட ஒரு சிறிய கூட்டமேயல்லது உண்மையான பொதுமக்கள்களல்ல.

"தீண்டாதார்கள் தென்னிந்தியாவின் ஒரு பகுதியில் சில முக்யக்கோவில்களில் போகலா மென்றிருக்கையில் இக்கோரிக்கையைவிட்டுவைப்பதற்கில்லை"யென்றும்பூர்வபீடிகையில்சொல்லப்பட்டிருக்கிறது இதுவும் ஓர் ஸாரமற்ற, அபத்தக்கக்ஷியே. தென்னிந்தியாவிலுள்ள எந்த பிரபலக்கோவில்களிலும் தீண்டாதார் அநுமதிக்கப்படுவதாகத் தெரியவில்லை. திருவாங்கூர் கோவிலையே இவர் நினைத்துப்பேசுவதாகத்தெரிகிறது திருவாங்கூர் ஆலயப்பிரவேச விஷயமான உண்மையை உலகமறியுமாதலால் அதை எந்த விவேகியும் உதாரணமாகக்கொள்ள முடியாது. அந்த அரசர் பொதுஜன அபிப்பிராயத்தைக்கேட்டு அதைச்செய்தவரல்லர். யதேச்சாதிகாரமாகவே அதைச்செய்திருக்கிறார். பொது ஜனங்கள் இதை ஆதரிப்பதாகச் சொல்லமுடியாது. மேலும் திருவாங்கூர் விஷயமும் காங்கிரஸ் வாதிகளால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. பொதுவானதல்ல. திருவாங்கூரில் பலாத்கார ஆலயப்பிரவேசம் நடந்திருக்கிறதேயல்லது ஜன அபிப்பிராயமாக நடத்தவில்லையென்பதை நமது தலைவர் பிரும்மஸ்ரீ என். நடேசய்யரவர்கள் நேரில் சென்று பார்த்து தமது அநுபவத்தை வெளியிட்டிருப்பதை இன்று வரை மறுத்தவர்களில்லை.

ஆதலால் பூர்வ பீடிகையில் சொல்லியுள்ள காரணங்களே முற்றிலும் நியாயமற்றவைகளாயும் ஊத்துக்கு நிற்காதவைகளாயும் பிடிவாத நோக்கமுள்ளவைகளாயும், ஏமாற்றும் வித்யையாகவுமிருப்பதை ஓட்டர்கள் கவனிப்பது நலம். மற்றவைகளையும் பிறகு விவரிப்போம்.

## குறிப்புகள்.

### காந்திஜியின் திண்டாட்டம்.

காந்திஜி தம்மைப் பற்றிய வரையில் உண்மையான ஸத்யவாதி. ஆத்ம சக்தி பெற்றவர். உள்ளும் புறமும் ஒத்து நடப்பவர். ஆயினும் தம்மைப்போல் ஒரு மனிதனையாவது அவர் தயாரிக்க முடியவில்லை. காந்திஜியைப்பின் பற்றுகிறவர்களாகப் பல்லாயிரக்கணக்கானவர்கள் வேஷம் போட்டாலும் அவருடைய ஆத்ம சக்தியை இன்னமும் அடையமுடியவில்லை. காந்திஜி ஆரம்பித்த அநேக ஸத்யாக்ரஹ இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம் போன்றவை பலிக்காமல் அவைகளை அவர் கைவிட நேர்ந்ததே இதற்கு உண்மையான ருஜு. அஹிம்ஸா தத்வம் காங்கிரஸ் வாதிகளிடையில் உண்மையாகப் பரவாத காரணத்தினாலேயே தாம் மேற்படி இயக்கங்களை நிறுத்த நேர்ந்ததென்பதை அவரே வெளியிட்டிருக்கிறார்.

எதெற்கெடுத்தாலும், ஸத்யாக்ரஹம், பட்டினி ஹடம், போன்ற கெட்ட வழிகளை காந்திஜி, புத்தி பரிபக்குவமடையாத பாமரிடமும் காட்டியதன் பலனை அவரே இப்போது அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

மத்ய மாகாண மந்திரி ஸபையில் தீண்டாதாருக்கு மந்திரி பதவி அளிக்காத காரணமாக சிவகானில் காந்திஜி வீட்டின் முன்பாகத் தீண்டாத ஜாதியார் ஸத்யாக்ரஹமும், பட்டினி ஹடமும் போட ஆரம்பித்திருக்கிறார்கள். காங்கிரஸ் வாதியும், காந்தி சிஷ்யனுமான ஒரு தீண்டாத ஜாதித் தலைவரே இந்த ஸத்யாக்ரஹத்தை முன்னின்று நடத்துகிறார். பாவம்! காந்திஜீ என்ன செய்வார்? என்ன சொல்லுவார்? இந்த ஸத்யாக்ரகத்தை நிறுத்திவிட காந்தி சிஷ்யர்களான ராஜீயத் தலைவர்கள் படாதபாடுபட்டு வருகிறார்கள். அப்படியும் பயனில்லை. ஸத்யாக்ரஹம் நீடித்திருக்கிறது. இந்த ஸத்யாக்ரஹம் அநீதியென்றும், ஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டதென்றும் காந்திஜி சொல்லிப் பார்த்தார். அதுவும் பலிக்கவில்லை.

ஸத்யாக்ரஹத்தில் ஸூக்ஷ்மம் இருக்கலாம், தத்வமிருக்கலாம். அவைகளை காந்திஜி அறிந்திருக்கலாம். மற்றவர்களுக்கு அவை எப்படித் தெரியும். எந்த ஸத்யாக்ரகம் அஹிம்ஸை மூலமானது, எது ஹிம்ஸை மூலமானதென்பதை காந்திஜி சொன்னாலும் மற்றவர்களுக்கு அது புரியக்கூடியதாயில்லை, ஆகவே அவர் இப்போது பேசும் ஸத்யாக்ரஹ தத்வத்தை யார் காதில் வாங்கப்போகிறார்கள்.

சென்னையில் நடக்கும் ஹிந்தி ஸத்தியாக்ரஹத்தையும் காங்கிரஸ் மந்திரிகள், ஹிம்ஸை மூலமென்று வர்ணிக்கிறார்கள். எதிர் கக்ஷியாரோ இதை ஒப்பவில்லை. ஆகவே தேசத்தில் ஓர் பெரிய உபத்திரவம் ஏற்பட்டு விட்டது. இதனால் காந்திஜியும் திண்டாட வேண்டியதாகிவிட்டது.

இனிமேல் எதற்கும் ஸத்யாக்ரஹம், பட்டினி முதலியவை கூடாதென்று காங்கிரஸ் மந்திரிகள் சட்டமியற்றுவார்களா?



## திருவாங்கூர் ராஜீயக்கலஹம்.

திருவாங்கூர் அரசனும், அமைச்சரும் ஆலயப்பிரவேச விஷயமாகச்செய்த அநீதியை தார்மிகர்கள் பலமாக கண்டித்தே வருகிறார்கள். ஆயினும் தற்போது அங்கு தெய்வசாபக் கோளாறு போல் நடந்துவரும் விஷமக் கலஹத்தை நியாயபுத்தியுள்ள எந்த மனிதனும் அங்கீகரிப்பதற்கில்லை. தார்மிகர், எந்த லௌகிக விஷயத்திலும், அல்லது வைதிக விஷயத்திலும் நீண்டகால வ்யவஸ்தையை அழிக்கவோ வரம்புமீறி கார்யம் செய்யவோ ஸம்மதிக்கக் கூடியவர்களல்ல. திருவாங்கூரில் சில ராஜீய விஷமிகள் வேண்டுமென்றே கிளப்பி விட்டுள்ள கலஹத்தை அடக்க கவர்ன்மெண்டார் தகுந்த முயற்சி எடுப்பது அவச்யமே. அஹிம்ஸாவாதிகளெனச்சொல்லிக்கொள்ளும் காந்தி சிஷ்யர்கள் காந்திஜியின் பெயரைச்சொல்லிக்கொண்டு அங்கு பொது ஜனங்களுக்கும் ஸர்க்காருக்கும் செய்து வரும் விஷமங்களைப்பத்திரிகை மூலம் படிப்பவர் எவரும் ஆத்திரப்படாமலிருக்க முடியாது. அரசனுக்கும், பிரஜைகளுக்கும் ஏற்பட்டுள்ள உயர்ந்த ஸம்பந்தத்தை துஷ்பிரசாரம் மூலம் குலைத்து அதன் மூலம் அத்தேசத்தில் ஸமாதானமாக வாழும் ஜனங்களுக்கும் பெரிய ஆபத்து ஏற்பட்டு விட்டது.

காந்தி சிஷ்யர்கள் அங்கு பலாத்காரத்தில் இறங்கி விட்டது திட்டமாகத் தெரிகிறது. வண்டிகளிலும், மோட்டார்களிலும் போகும் பிரயாணிகளை ஹிம்ஸித்து "காந்திக்கு ஜே" என்ற கோஷம் செய்யும்படி நிர்ப்பந்திக்கிறார்கள்- அநேக மோட்டார்கள் தாக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் போய்விட்டன. ஜனப்பாதுகாப்புக்காக ஏற்பட்ட போலீஸ் படையை கல்லால் அடித்து அவமதிக்கிறார்களாம். இம்மாதிரி எவ்வளவோ துஷ்ட செயல்கள் அங்கு அதிகரித்துவிட்டதாக திவான் தக்க ஆதாரத்துடன் வெளியிட்டிருக்கிறார்.

இந்நிலைமையில் அங்கு அமைதியை நிலைநாட்டி ஸாத்விகர்களுக்குக்கஷ்டம் நேராமல் காக்கவேண்டியது கவர்ன்மெண்டாரின் கடமை. எந்த அரசனும், மந்திரியும் இந்த விஷமத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. நியாயமான அபிலாஷைகளை நியாயமான வழியில் கவர்ன்மெண்டார் பூர்த்தி செய்யவேண்டியது அவசியமே. ஆனால் ஜவாப்தாரி ஆட்சி என்ற வியாஜம் கொண்டு காங்கிரஸ்காரர்கள் பலாத்காரம் செய்வதைக்கண்டிக்கவேண்டியது பொது ஜனங்களின் கடமை.

இந்த நிலைமையில் காந்திஜி தங்கள் சிஷ்யர்களுக்குப் பரிந்து, திருவாங்கூரில் அடக்குமுறை நடப்பதாகக் கூறுவது பக்ஷபாதமாகவே இருக்கிறது. இதன் மூலம், அவர் உண்மையை அறியாமல் ஹிம்ஸையில் முனைந்துள்ள சிஷ்யர்களின் செய்கையை ஆதரிக்க முன் வந்தது அதிசயமாயிருக்கிறது. இந்த மாதிரியே இவர் கிளப்பிவிட்ட விஷமங்கள் பலவற்றால் நம் தேசத்தின் அமைதியும், வரம்பும் நசித்து பெரிய க்ஷோபம் ஏற்பட்டிருக்கிறது. இன்னமும் இவர் இந்த வழியில் நிற்பது தகுதியல்ல. இவர் கிளப்பிவிட்ட விஷமங்கள் இவரையே தாக்க ஆரம்பித்திருப்பதை கவனிக்கவில்லைபோலும், காந்திஜியின் கண்டனத்திற்கு திவான் கொடுத்துள்ள மறுமொழியானது உண்மையை விளக்குவதாயிருக்கிறது. திருவாங்கூரில் காந்திஜி இப்போது மந்திரியாயிருந்தால் என்ன செய்வார்?

## வாரக்குறிப்பு.

(ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா)

மூலம் யார்? மாணவர்களை ராஜீயவழியில் இழுத்துப் பல கெட்ட வழக்கங்களை உண்டு பண்ணியது தலைவர்களே. இப்பொழுது அடக்கமுடியாத மாணவர் தொல்லையால் விழிப்பதுமவர்களே!! பாம்பே மாணவர் நாட்யம் கீதம் முதலில் நடக்கட்டும் என மந்திரி திகைத்து கூட்டத்தைக் கலைத்து விடும்படி செய்தனர்!

வேலை நிறுத்தம்!! இந்த வித்யைக்கும் குரு அவர்களே! கல்கத்தா மாணவர்! சென்னை செங்கல்வராயர் சாலை மாணவர்! லக்ஷ்மணபுரி மாணவர் சென்ற வாரம் இவ்வளவு வேலை நிறுத்தம்!! பத்ரிகையில் வாராதெவ்வளவோ? ஸத்யாக்ரஹம் நல்லதாயிருக்கலாம்!! அநதிகாரிகள் அதைக்கெடுக்க வழிகாட்டியது பெருந்தவறு!! இப்போதாவதுணர்வீரா?

நல்லவழி! அந்தந்த ஸம்ப்ரதாயம் மங்கும் காலத்திலே பொதுமக்கள் விழித்துக் கைகொள்ளும்படி செய்ய ஏதேனும் ஓர் உத்ஸாஹ செயல் அவச்யம் வேண்டியதே!! ஸ்ரீ ராமானுஜ தயாபாத்ரம் 600 ஆண்டான விழாவை ஸ்ரீ வி. வி. ஸ்ரீ அய்யங்கார்வாள் நடத்தியதும் ஸ்ரீ மடாதிபதிகள் பட்டமளித்ததும் மிக மிக கொண்டாடத்தக்கது! ஏனைய ஸம்ப்ரதாயத்தவரும் கற்பாரா?

ரக்ஷகரா பக்ஷகரா? அறை குறையான எதுவும் ஆபத்திற்கேயாம். திருவண்ணாமலை ஆலயத்தில் அநாசாரம் நடவாதிருக்க ஓர் ஸபை ஏற்பட்டதாம். அது வைதிகதர்ம ஸபையா? சண்டாளாதிகளை உள்ளேவிடும் ஸபையா என அந்நகர் ஆஸ்திகர் எழுது

பிராம்மணரைத் தூற்றுதே! நல்லதைக் கல்! என சென்னை மேயர் தன் ஜாதியான பஞ்சமருக்கு நல்லுபதேசஞ் செய்தார். இத்தகைய உபதேசமே தேச க்ஷேமகாம்.

சாந்தி நிலவுமா? நாளுக்கு நாள் திருவாங்கூர் ராஜீய கிளர்ச்சி முழுமோசமாகி வருகிறது. டில்லி சிவாலய ஸத்யாக்ரஹமும் வலுக்கிறது! இரண்டிடத்திலும் சாந்தி உண்டாகுமாறு இறைவனை வேண்டுகிறோம்.

(3ம் காலம் தொடர்ச்சி)

சொல்லவேண்டியவர்களிடம் சொல்லிவிட்டேன்.

மலையாளத்திலுள்ள கோவில்கள் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமானவை. ஜாதி ஹிந்துக்கள் மாத்திரம்தான் அங்கு வரலாம். சென்னை ஹிந்துமத பரிபாலன சட்டத்தின்படி இந்தக் கோவில்கள் பொதுக் கோவில்களென்று அறிவிக்கப்பட்டன. இந்த சட்டமே கோவில் சொந்தக்காரர்களின் உரிமைகளில் ஒரு ஆக்ரமிப்பு. ஆனால், ஹரிஜனங்கள் இந்தக் கோவில்களுக்குள் எப்போதுமே அனுமதிக்கப்பட்டதில்லை.

மத உணர்ச்சிகளை கவனியாமல், அரசியல் காரணங்களுக்காகவே காரியங்கள் செய்யப்படும் ஒரு சட்ட சபையில் எதுவும் நடக்கக் கூடும். மிகவும் அபாயகரமான விளைவுகள் ஏற்படக்கூடிய ஒரு சட்டத்தைப்பற்றிசென்னையிலுள்ள காங்க்ரஸ் சர்க்காருக்கு எச்சரிக்கவேண்டியது என் கடமையாகும்.

ஜாமோரின் தலைமையின் கீழ் மலையாளத்தில் ஒரு மகாநாடு கூட்டி, காங்கிரஸ் மந்திரி சபையின் நோக்கத்தைத் தோற்கடிப்பதற்கு சாத்தியமானவற்றையெல்லாம் செய்வதென்று உத்தேசித்திருக்கிறேன்."

## கும்பகோணம் அத்வைத ஸபை

### 44-வது வருஷாந்தர ஸதஸ்.

பஹுதான்ய ளூ ஆவணி-மீ 5-ம் தேதியிலிருந்து ஒரு வாரம் வரை கும்பகோணம் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீபரமாசார்யாளுடையபூர்ண அநுக்ரஹத்தால் 44-வதுவருஷத்திய வித்வத் ஸபை வெகு சிறப்பாக நடந்தேறியது. உள்ளூர் வெளியூர்களிலிருந்து அநேகவித்வான்கள் வழக்கம்போல் விஜயம்செய்திருந்தார்கள் ப்ரஸ்தானத்திலும், மற்றவைகளிலும், வாசிக-லேககாபரீக்ஷைகள் நடந்தன. ஒவ்வொரு தினங்களிலும் மாலை 5-மணிமுதல் அத்வைத விஷயத்தைப்பற்றி ஸபைக்கு வந்தசிலபண்டிதர்கள் உபந்யஸித்தார்கள். இரவில் பரீக்ஷாதிகாரிகள் ஆசார்ய சரிதம், காயத்ரீமஹிமை, ஸ்திரீதர்மங்கள் போன்ற முக்யமான விஷயங்களைப்பற்றி சிறந்த பிரஸங்கம்செய்தார்கள். ஒவ்வொருதினத்திலும் நகரத்திலுள்ள பிரபுக்களும் பொதுஜனங்களும் ஸ்திரீகளும் ஏராளமாக வந்திருந்து உபந்யாஸங்களை கேட்டு ஆனந்தித்தார்கள்.

கடைசி தினத்தில் சென்னை பிரபல அட்வகேட் ஸ்ரீமான், திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையில் வித்வத்ஸம்பாவனை செய்யப்பட்டது. அச்சமயத்திலும் அநேக பிரபலஸ்தர்கள் வந்திருந்தனர். அக்ராசனர், அத்வைதத்தைப்பற்றியும் பொதுவாகவும் அழகிய பிரஸங்கம் செய்தார். கார்யதரிசி ஸ்ரீமான் ஜி. வி. வெங்கடராமய்யரவர்களால் தலைவருக்கும், வித்வான்களுக்கும், வந்தனோபசாரம் செய்யப்பட்டபின் ஸபை பூர்த்தியாகியது.

அன்று இரவு ஸ்ரீகும்பேச்வர ஸ்வாமி ஸன்னிதியில் திருப்புகழ் மணி ஸ்ரீமான் டி. எம். கிருஷ்ணஸாமி அய்யர் அவர்களால் பக்தி ரஸம் ததும்பும்படி திருப்புகழ் பஜனை நடத்தப்பட்டது. ஜனங்கள் இதைக்கேட்டு பாவசமடைந்தனர்.

ஓர் நிருபர்

## கொல்லங்கோடு ராஜாவின் வீர மொழிகள்.

### ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பார்.

'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையில், ஒரு நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

கொல்லங்கோடு ராஜாவான சர். வாசுதேவ ராஜா (மத்ய அஸெம்பிளியில் மலையாள பிரதிநிதி), கள்ளிக்கோட்டை ஜாமோரினைப் பார்ப்பதற்காக இன்று மலையாளத்திற்குப் பிரயாணமானர்

கொல்லங்கோடு ராஜா பின்கண்ட அறிக்கையை விடுத்திருக்கிறார்.

"சென்னை சர்க்கார் ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் அனுமதித்து சட்டம் கொண்டுவரப் போவதாகக் கேள்விப்பட்டதினால் தான் நான் இப்போதே போகிறேன்.

நான் எப்போதுமே இதை எதிர்த்து வந்திருக்கிறேன். இந்த ஆலயப்பிரவேச எண்ணம் பரவுவதைத் தடுத்து, என் ஹிந்து சகோதரர்களிடம் அறிவுறுத்தல்வேண்டியது எனது கடமையென்று கருதுகிறேன். இது பற்றி என்னுடைய அபிப்பிராயத்தையும், ஸநாதனிகளுடைய அபிப்பிராயத்தையும்,

(தொடர்ச்சி 2ம் காலம் பார்க்க)

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## INSTRUCTION TO PARENTS.

### Our duty towards Divine Law and King's Law.

Mr. M. M. Ananta Row, Manager, Sanatana Dharma Karyalaya, Triplicane, Madras, writes:—

The following is the English rendering of the Holy orders (Srimukham) of his Ho'iness Srimat Paramahamsaparivrajakacharya Srimat Chandrasekarendra Saraswathi Swamigal, the Dharmacharya and the Spiritual Head of Sri Kamakotipeeta mutt (Headquarters–Kumbakonam–S. India) as proclaimed by Rao saheb N. Natesa Aiyer, B. A., B, L., the Secretary of the All India Varnashrama Swarajya Sangha:

### Sastraic Observances.

1. Those who are our present Rulers, be they Kings, ministers, or Councils of Government, whether they are Kshatriyas or not, are, according to our Sastras, endowed with a part of the Power of Mahavishnu and the eight guardians of Humanity.

(1) Iswara is the Ruler over all these. The Power they are now exercising is only that which they have derived from Iswara.

(2) They are, thus, the obedient Servants of Iswara who are charged with the duty of carrying out the Orders of Iswara. They are not at all competent to pass orders of their own accord, quite contrary to the already existing Orders of Iswara. If they pass such contrary orders we should not follow them. The orders of Iswara are really the orders for us.

2. At present, our Ruler, Minsters and the councils of Goverment have been passing successively, one after another, legislations which are quite contrary to the Orders of Iswara–Amongst such Sarda Navalrai–Das Legislation is one. The Orders of Iswaras are that girls should be married at the age of eight. If this is not possible they should be married at least when they are nine or ten failing which, they should invariablo be married before puberty. These orders (of Iswara) have been given to us through the Sruthis (the Vedas), the smrithis (the Dharmasastras), the Ithihasas (History).and the puranas(Ancient History). The orders contained in the above are the only Orders of Iswara.

(3) The Sarda legislation thunders, in contravention of the Orders of Iswara that girls.) before they have completed the age of fourteen, shall not be married. In this critical situation, there is thus a conflict between the Kings law and the Divine Law. The highest decision, acording to sastras, is that, by setting aside the King's Law, marriage should be performed only at the proper time as enjoined upon us by the Sastras.

(4) So also the mahasabha which assembled atBenares in the year 1928 and the Akhilabharatavarshiya Sanatana Dharma Vidwat Parishad which had its sessions at madras in the year 1937, have also decided in the same strain. The same also is the opinion of the great Adi Acharya. His Holiness SriKamakotipeetaswamigal enjoins upon all his innumerable Shishyas (disciples) to scrupulously follow the same.

3. In this state of affairls every father and mother of the boy and the girl or their guardians must see that every girl should be married before puberty. On both sides (on the side of the boy and that of the girl) they must become united and perform the marriages without fear. If, everywhere, a very large number of marriages are perforomed in this way this would give rise to the repeal of the Child Marriage Bestraint Act. If we do not do this (If we donot conduct marriages in the manner enjoined upon us by the Sastras), it would certainly be considered as our having given our wholehearted acquiescence to the marriage legislation. If our wives, children & our mothers are forcibly carried away by wicked men what alacrity would be exhibited, and again if our houses are actually on fire what alacrity would beexhibited, the same kind of alacrity should be shown in the case of the performance of srastraic marriages by the fathers and mothers of the boys and the girls. If this is not done certainly we become enemies of Iswara and traitors to his mandate. Wo must carefully consider the serious implication involved in the Divine Law.

4. We must not be afraid of prison life and there-by, of the obstruction to our religious observances during that period. There are five ways of answering the objections as ordained in the Sastras.

(a) It is quite possible to perform the religious observances even in prison. In this matter the authorities concerned under Government are bound to give all the possible facilities. If these facilities are not given to us, it is quite enough if we perform our religious observances mentally in prison in the same manner in which Vasudeva and the Pandavas did.

(b) There is no sin even if it is not possible to really perform the daily religious observances or perform them at least mentally. Why? These religious observances will not be abandoned according to one's own free will and pleasure. On the other hand, on account of King's restraint, we have become as if incapacitated (to freely discharge the religious duties and responsibilities as o r d a i n e d by the Sastras.) We become sinners o n l y when we have the freedom of will and [physical] ability to perform or not, the religious observances as ordained by the Sastras and do not actually perform them.

(5) In prison there is not such freedom of will. It is not so in the case of a marriage performed in a house. It is the King's Law. The freedom of will which we possess for the performance of marriage in the house has not been entirely taken away from us. What does it (the King's Law) say? It (the King's Law) says only this much—you can do as you please, but you have to pay the fine or you have to lead a prison life for some time. It (the King's Law) does not make the marriage law null and void. If we are afraid of this (this King's Law) we become disobedient to the Divine Law. We will be only increasing the burden of sin day by day.

(c) Apart from this, it should be said that religious observances are means to an end and not an end in themselves. The fruits in their performance are:—

Mind-purification; Safisfaction to Iswara; Knowledge and moksha (Salvation.)

These fruits we do realise from the time of the marriage performed at the proper time as ordained in the Sastras. If a King whose duty it is to chastise his subjects by making them obey the Divine Law should send us to prison for the mere fact of our having followed the Divine Law and, there by, be the cause of obstruction to our religious observances, the sin arising out of this would be on his (King's) head, It (that sin) won't affect us. The Love of Iswara(for us)will drive that sin away from us and our performance of the purificatory ceremonies afterwards would reduce (that sin) to ashes.

(d) Not only this, the sin as the result of the non-observance of our religious observances is likely to affect only those who have lived a life in prison. Where as the sin as the result of the non performance of the marriage Samskara (sacred rite) at the proper time as ordained by the Sastras would certainly render the bride and the bride-groom and their respective families and their future generations quite lose their competency to perform any religious rite or ceremoeny.

(e) Pure women are the root cause of all our Dharma and those who have not been married at the proper time as ordained by the Sastras are veritably impure and at no time and under no circumstance can their progeny be considered to possess *Brahmanyam* (the true character of a Brahmana). Religious observances and their performance (Karmanustana) and the chanting of the Vedas (Vedadhyayana) shall, in their cases, lose their power and efficacy.

5. There is not even a semblance of Sastraic authority in support of the view taken by a party which says, that it is Sastraic if simple betrothal at the proper age as ordained by the Sastras is observed and after fourteen years the marriage ceremony proper, Saptapadi (the ceremony of seven steps to make the marriage irrevocable)& etc are gone through. As soon as the betrothal is made the girl and the boy become wife and husband respectively. At once the Sarada (Child marriage restraint) Act will pounce upon the parties responsible and catch hold of them. In respect of the irrevocability of marriage there is no difference between betrothal and *Saptapadi* [the seven steps ceremony.] After the betrothal is made, if the boy, owing to some reason or other, forgets to perform the marriage the girl is still the wife of the boy [even without the marriage.] The boy is still the husband of the girl [even without the marriage.] She cannot marry another man Sage Parasara has allowed this [ie a girl being married to another boy] only in five instances..

In such a state of affairs, therefore, the parents of the boys and the girls or their guardians should completely disobey the Sarda [the Marriage Restraint] Act and have their girls married at the proper time as ordained by the sastras. In so doing they will be said to have rightly followed the Sastras.

## ஸ்ரீமான் ஸவர்க்காருக்கு உபசாரம்.

### ஹிந்துக்களின் எதிர்ப்பு—முஸ்லிம்களின் ஆதரவு.

### கராச்சியில் விநோதம்.

ஹிந்து மஹாத்தலைவரான ஸ்ரீமான் ஸவர்க்கார் காரச்சிக்கு வரும்போது அவருக்கு உபசாரப்பத்திரம் படிக்க வேண்டுமென்று முனிஸிபாலிடியில் ஓர் தீர்மானம் விவாதத்திற்கு வந்தது.

காங்கிரஸ் வாதிகளான ஹிந்து மெம்பர்கள் இதை ஆக்ஷேபித்தனர். ஸவர்க்காருக்கு உபசாரம் அளிக்க அர்ஹதையில்லையென்றனர். முஸ்லிம்கள் அனைவரும் ஸவர்க்காரைப்பாராட்டி அவருக்கு உபசாரம் அவச்யமென்றனர். தீர்மானம் தோற்றது. இது ஓர் விசித்திர ஸம்பவமாகும்.

## அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி.

### டெல்லியில் 24௳

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமானது டெல்லியில் 24௳ நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. நாகபுரி மந்திரிஸபைத் தகராறு முதலிய பல முக்ய விஷயங்கள் விவாதிக்கப்படும். பெரிய தகாராறு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

## காங்கிரஸ்ஸை எதிர்க்கத் தீர்மானம்.

### ஹோட்டல்காரர்களின் உறுதி.

நாஸிக்கிலுள்ள ஹோட்டல் காரர்களின் கூட்டத்தில், காங்கிரஸ்ஸை எதிர்க்க வேண்டுமென்றும், ஒருவரும் காங்கிரஸ் மெம்பராகக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதை பிரசாரம் செய்ய பலமான கமிட்டி நியமிக்கப்பட்டது. தீண்டாதாரை ஹோட்டல்களில் நுழையும்படி காங்கிரஸ்காரர் விஷமம் செய்வதே இதற்கு காரணம்.



## மலையாளம் ஆலயப்பிரவேச சட்டம்.

### மசோதாவின் முழு விபரம்.

சென்னை சர்க்கார் கொண்டுவர உத்தேசித்துள்ள மசோதாவின் விவரமாவது:—

ஹிந்துக்களில் ஒரு சாரார் ஹிந்து ஆலயத்துக்குள் பிரவேசம்செய்து வழிபடக்கூடாதென்றிருந்து வரும் பழக்க வழக்கத்தை நீக்க இம்மசோதா கொண்டுவரப்படுகிறது.

ஆலயங்களில் டிரஸ்டிகள் சட்டப்படிக்கு இப்பழக்கத்தில் ஏதாவது ஓர் புதிய வழியை உண்டாக்க அதிகாரமிருக்கிறதா வென்று சந்தேகங்களும் இருந்துவருகிறது. ஆலயங்களிருக்கும் பிரதேசத்திலுள்ள ஹிந்துக்கள் பொதுவாக இம்மாதிரி ஆலயப்பிரவேசத்துக்குச் சாதகமாகவிருந்தால் கோயில் டிரஸ்டிகள் ஆலயத்துக்குள் ஹிந்துக்களின் சகல வகுப்பாரையும் அனுமதிக்க அதிகாரங் கொடுக்கவேண்டும். கோளத்தின் ஒரு பகுதியில் ஆலயங்கள் விஷயத்தில் சம உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதே பிரதேசத்தைச் சேர்ந்த மற்றொரு பாகத்திலும் வழக்கம், பாஷை பழக்கங்கள் ஒன்றாகவேயிருக்கின்றன. ஆகவே, இந்த இடத்தில் முதன் முதலாக இம் மசோதாவை நிறைவேற்றுவது சுலபம்.

மேற்சொன்ன காரணங்களால் இம் மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இச் சட்டம் 1938-ம் வருஷத்திய மலையாளம் ஆலயப்பிரவேசச் சட்டம் என வழங்கப்படும்.

இச்சட்டப்படி "போர்டு" என்றால் 1926-ம் வருஷத்திய சென்னை ஹிந்துமத பரிபாலனபோர்டு சட்டத்தின் 10-வது பிரிவுப்படி நிறுவப்பட்ட கமிஷனர்களின் போர்டு எனப்படும்.

"ஒதுக்கப்பட்ட ஜாதி" யென்றால் நிலைத்துப்போன சம்பிரதாயங் காரணமாக ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதென நீக்கப்பட்டிருக்கும் எந்த ஹிந்து வகுப்புச் சாதியாரும் ஆவார்.

'விதிக்கப்பட்ட' என்றால் ஹிந்து மத போர்டு சட்டம் 10-வது பிரிவில் விதிக்கப்பட்டது என்பதாகும்.

"கோயில்" என்றால் நீக்கப்பட்டோரைத் தவிர ஹிந்து வகுப்பார் எல்லோரும் வழிபாடுக்காக உபயோகிக்கும் பொது ஸ்தலமாகும்.

"டிரஸ்டி" எனில் கோயில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருப்பவராவார்.

"வாக்காளர்கள்" எனில் ஒதுக்கப்பட்ட வகுப்பாரைத் தவிர ஜில்லாபோர்டு வாக்காளர் ஜாபிதாவிலுள்ள, கோயிலிலிருக்கும் ரெவின்யூ தாலூகாவைச் சேர்ந்தவர்களாவார்.

50 வாக்காளர்கள் ஒதுக்கப்பட்ட வகுப்பாருக்கு ஆலயங்களைத் திறக்கவேண்டுமென்று கையொப்பமிட்டு டிரஸ்டிகளுக்கு விக்ஞாபனம் கிடைத்தால், டிரஸ்டிகள் இவ்விஷயத்தை வாக்காளர்கள் கவனத்துக்குக் கொண்டுவந்து விதிக்கப்பட்டபடி அவர்களுடைய அபிப்ராயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்படி வாக்காளர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்ததும். பெருமிதமான வாக்காளர்கள் ஆலயபிரவேச விஷயத்துக்குச் சாதகமாக விருக்கக் கண்டால் ஆலயம் ஒதுக்கப்பட்டவர்களுக்குத் திறந்து விடப்படுமென விதிக்கப்பட்ட பிரகாரம் ஓர் உத்திரவைப் பிரசுரிக்கவேண்டும்.

ஒதுக்கப்பட்டவர்களுக்கு ஆலயத்தைத் திறந்து விடும்படி உத்திரவிட உத்தேசித்திருப்பதாக டிரஸ்டிகள் விதிக்கப்பட்ட பிரகாரம் ஓர் நோட்டீஸை வெளியிட வேண்டும். நோட்டீஸ் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் பிரஸ்தாப உத்தேசம் சம்பந்தமாக ஆட்சேபம் ஏதாவதிருந்தால் தெரிவிக்கலாமென அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்படவேண்டும்.

உப பிரிவு (1)ல் குறித்தபடி நோட்டீஸ் பிரசுரமான தேதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் 50 வாக்காளர்கள் எழுத்து மூலமாக உத்தேசிக்கப்பட்ட விஷயத்துக்கு ஆட்சேபம் தெரிவித்தால் ஆலயத்தைத் திறப்பதா இல்லையாயென்ற பிரச்னையை வாக்காளர்களின் அபிப்பிராயத்துக்குக் கொண்டுவர வேண்டும்.

உப பிரிவு (1)படி டிரஸ்டிகள் நடவடிக்கையெடுத்துக்கொண்டு உப பிரிவு (2) படி ஆட்சேபம் ஏதும் வாராமலிருந்தாலும், அல்லது உப பிரிவு (2) படி பிரஸ்தாபம் ஏற்பட்டாலும் மெஜாரிட்டி வாக்காளர்கள் ஒதுக்கப்பட்டோர்களுக்கு ஆலயத்தைத் திறந்திடச் சாதகமாகவிருந்தால் விதிக்கப்பட்ட பிரகாரம் டிரஸ்டிகள் இனிமேல் ஆலயம் ஒதுக்கப்பட்டோருக்குத் திறந்து விடப்படுமென ஓர் உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

மாகாண சர்க்காரோ அல்லது அவர்களால் அதிகாரங் கொடுக்கப்பட்ட அதிகாரியோ உப பிரிவு (1) படி கொடுக்கப்பட்ட விக்ஞாபனத்தை 25 பேர்களுக்கு மேல் வாக்காளர்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் வாபீஸ் பெற வேண்டினால் அங்ஙனம் வாபீஸ்பெற அனுமதிக்கலாம். அதன் பின்னர் விக்ஞாபனத்தின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட சகல நடவடிக்கைகளும் மேல் நடவடிக்கைகள் ஏதுமின்றி ரத்தாகி விட்டதாகக் கருதப்படும்.

வாக்காளர்களுக்கு இத்துறையில் எந்த விஷயத்தைப்பற்றியேனும் முடிவு அறிவிக்கப்படுமுன்னர் பிரஸ்தாப விஷயங்கள் யாவற்றையும் நிறுத்திவைத்துவிட்டதாகவும் முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டுவிட்டதென்றும் எடுத்துக்கூறி மாகாண சர்க்கார் எப்பொழுதும் உத்தரவிடலாம்.

பிரிவு 3. உட்பிரிவு (1) படியோ அல்லது பிரிவு 4 உட்பிரிவு (2) படியோ வாக்காளர்களுக்கு அறிவிக்கப்பட்டு பெருமித வாக்காளர்கள் ஒதுக்கப்பட்டோர்களுக்கு ஆலயப் பிரவேச மளிப்பதில் சாதகமாகவிருந்தால், அதே ரெவினியூ தாலூகாவிலுள்ள கோயில்களை மேற்கண்டவாறு வாக்காளர் அபிப்பிராயங்கேட்ட இரண்டு வருஷத்திற்குள் சம்பந்தப்பட்ட டிரஸ்டிகள் 50 வாக்காளருக்கு குறையாமல் ஆலயங்களைத் திறக்க வேண்டுமென்று கையொப்பமிட்டு விக்ஞாபித்துக் கொண்டால், டிரஸ்டிகள் விதிக்கப்பட்டபடி கோயில் ஒதுக்கப்பட்டோருக்கு திறந்து விடப்படுமென உத்திரவிடலாம்,

பிரிவு 3, உள்பிரிவு (2), அல்லது பிரிவு 4. உட்பிரிவு (3), அல்லது பிரிவு 6படி பிரசுரமான உத்திரவானது எந்த ஒதுக்கப்பட்டநபரும் ஆலயத்தினுள் பிரவேசிக்க சட்டப்படி சரியாகும்.

கோயிலின் ஒழுங்கு, சுத்தம் முதலியவைகளைப் பொறுத்து டிரஸ்டிகள் செய்யும் ஷரத்துகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு ஒதுக்கப்பட்ட ஜாதியார் ஆலயத்திற்குள் மேற்கண்ட முறையில் செல்லலாம். மெஜாரிட்டியார், ஆலயங்களை தாழ்த்தப்பட்டோருக்கு திறந்துவிடுவதற்கெதிராகவிருந்தால், அம்மாதிரியான அபிப்பிராயங் கிடைத்த தேதியிலிருந்து 2 வருஷகாலத்திற்கு மேற்கொண்டு எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

போர்டின் முன் அங்கீகாரம் பெற்று டிரஸ்டிகள் ரெகுலேஷன்களைச் செய்யலாம்.

(அ) கோயிலின் ஒழுங்கு சுத்தம்.

(ஆ) கோயில் வைதிகச் சடங்குகள் அவற்றின் அனுஷ்டானம். முதலியவைப் பற்றி ரெகுலேஷன்களைச் செய்யலாம்.

இச்சட்டத்தின் ஷரத்துகளை அமுல் நடத்த மாகாண சர்க்கார் விதிகளைச் செய்யலாம். இச்சட்டத்தின்படியுள்ள எல்லா விஷயங்களைப்பற்றியும் மாகாண சர்க்கார் விதிகளைச் செய்யலாம். விக்ஞாபனங்களைப் பற்றியும், மனுக்களைப்பற்றியும் எங்ஙனம் சமர்ப்பிப்பது என்பதுபற்றியும் மாகாண சர்க்கார் விதிகளேற்படுத்தலாம். டிரஸ்டிகள் உத்திரவுகளையும், நோட்டீஸ்களையும் பிரசுரிதகும்விதம்; வாக்காளர் அபிப்பிராயத்தை நிர்த்தாரணம செய்யும் முறை; வாக்காளர்களுக்குள் இது சம்பந்தமாக ஏற்படும் சச்சரவையோ அல்லது அபிப்பிராயங்களை நிர்த்தாரணம் செய்து கொள்வதுபற்றியோ முடிவு செய்தல்; முதலியவைகளைப் பொறுத்தும் சர்க்கார் விதிகளேற்படுத்தலாம்.

(3) இப்பிரிவுபடி செய்யப்படும் சகல விதிகளும் உத்தியோக தோரணையில் வெளிவரும் கெஜட்டில் பிரசுரிக்கப்படும். அம்மாதிரி பிரசுரமானதிலிருந்து அது சட்டமாகிவிட்டதாகப் பாவிக்கப்படும்.

11. இச்சட்டத்தின் ஷரத்துகளை அமுல் நடத்துவதில் ஏதாவது கஷ்டங்களேற்படுமானால் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு மாகாண சர்க்கார் இக்கஷ்டத்தை நீக்க அவசியமான எதையும் செய்யலாம்.

12 இச்சட்டத்தில் வியாக்கியானம் செய்யப்பட்டபடி ஒரு இடம் கோயிலா அல்லது கோயில் அல்லவா என்ற பிரச்னை எழுமானால் இதை மாகாண சர்க்கார் முன்கொண்டு வரப்படவேணடும். அவர்கள் முடிவே தீர்ப்பாகும்.

13 192-ம் வருஷத்திய சென்னை ஹிந்து மத பரிபாலன போர்டு சட்டம் 40-வது பிரிவில் "1938-ம் வருஷத்திய மலையாளம் ஆலயப்பிரவேசம் சட்டத்துக்குட்பட்டு" என்று ஆரம்பத்தில் சேர்க்கப்படும்.

### நோக்கங்களும் ஹேதுக்களும்.

ஹிந்துக்களில் சில வகுப்பார் இதரஹிந்துக்களைப்போல ஆலயங்களில் பிரவேசிப்பதற்கு தடை இருந்து வருவதை நீக்கவேண்டுமென்ற பொதுமக்கள் அபிப்பிராயம் வளர்ந்துகொண்டே வருகிறது. இதுவரையில் ஆலயங்களுள் அனுமதிக்கப்படாதிருந்தவர் தென்னிந்தியாவின் ஒரு பகுதியில் முக்கியமான ஹிந்து கோயில்களுக்கெல்லாம் போகலாமென்றிருக்கையில் இக்கோரிக்கையை விட்டு வைப்பதற்கில்லை. திருவாங்கூர் சமஸ்தானத்திலும், மலையாளம் ஜில்லாவிலும், பாஷை பழக்கவழக்கங்கள் முதலியவைகள் பொதுவாக விருப்பதால் மேற்கண்ட தடை நீக்கத்தை முதலாவதாக மலையாளம் ஜில்லாவில் கொண்டு வரலாமென்று கருதப்பட்டது. இச்சட்டம் ஆலயப்பிரவேசத்துக்கனுமதியளிப்பதாகவிருக்கும். கோவிலிருக்கும் ரெவினியூ தாலூகாவிலுள்ள பெருமிதமான வாக்காளர்கள் ஒதுக்கப்பட்ட வகுப்பினரை ஆலயத்துக்குள் அனுமதிப்பதற்குச் சாதகமாகவிருந்தால் இம்மசோதாவின்படி எந்தக் கோயிலையும் திறந்துவிடலாம். இம்மாதிரியான அபிப்பிராயம் தேசமுழுதுமுள்ள ஹிந்துக்கள் அபிப்பிராயமெனக் கருதலாம். இந்த சீர்திருத்தத்திற்குச் சாதகமாக அபிப்பிராய மிருக்குமானால் எந்த ஹிந்துக்கோயிலைத் திறக்கும் விஷயத்தைப்

(8-ம் பக்கம் பார்க்க.)

## விதவா விவாஹம்.

விவாஹம் என்பது ஒரு முக்கியமான ஸம்ஸ்காரம். அஃது எக்காரணத்தாலும் மாற்ற இயலாதது. கர்மத்தை ஒப்புக்கொள்கிற மதமாயின் ஒரு ஆடவனும் பெண்ணும் மணந்தபின் அவர்களது சேர்க்கை மரணத்தாலும் பிரிக்கவொண்ணாததென்பதே அதன் தத்துவமாகயிருத்தல் வேண்டும். புருடன் இறந்தபின் அவனது மனைவி கைம்பெண்ணாகயிருந்து தூய வாழ்க்கையை நடத்தற்குரியள். விதவைகள் புனர் விவாஹம் செய்துகொள்ளலாம் என்று தற்காலத்தில் சில அறிவுகேடர் வாயில் வந்தபடி பிதற்றி வீண்வாதம் செய்யத் தலைப்பட்டதுமல்லாதல் அப்படிப்பட்ட விவாஹங்களையும் நடத்திவருவதாகப் பறைசாற்றித் திரிகின்றனர். என்னே இவர்களின் மதி விகற்ப்பு? ஒருவன் சுவைத்த வஸ்துவையே பிறனொருவன் நுகர்தல் எவ்வளவு மனவெறுப்பை உண்டாக்கக் கூடியது? விவாஹத்தின் அடிப்படையான தத்துவம் என்ன? விலங்குகட்கும், மக்கட்கும வாசியில்லையா? விதவா விவாஹத்தை ஆதரிக்கின்றவர் நன்கு ஆலோசித்தனரா? விதவைகள் அதிகரித்துவிட்டனர். அவர்கள் கண்ணீர் விடுகின்றனர். ஹிந்து ஸமூகம் சீர்கேடடைந்துவிட்டது. என்று கூக்குரவிடுபவர், இவர்கள் ஏன் விதவைகளானார்கள் என்று கேள்விகேட்டுக்கொண்டு அதன் காரணத்தை யறிந்து அதை விலக்கினலல்லவா அல்லலொழியும்? வியாதியைக் கணிசியாமல் சிகித்ஸை செய்வதில் பயனுண்டா?

வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலாம் அனைத்தாய நூலகத்தும் இல்லை. காமநுகர்ச்சியை அதிகரித்துக் கொள்வது அறிஞர் கடப்பாடல்ல. எவ்வளவுக்கெவ்வளவு தடைகள் உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு இறுதியில் நன்மையே. சரீர அழகு நித்யமல்ல. கேவலம் அதர்ம நெறியில் நடந்தால் அனர்த்தத்தைத் தவிற வேறென்ன உண்டாகும்? நன்னெறி கடைப்பிடித்து ஒழுகுதலே நன்மை பயப்பது. மநு முதலிய மஹான்கள் கூறிய வழியே நன்னெறி. அவர்களினும் மேம்பட்ட அறிஞர் அவனியில் இதுகாறும் தோன்றவில்லை என்பது ஒருதலை. விதவா விவாஹத்தை ஆசை அஞ்ஞானமடியாகச் செய்துகொண்டவர் முடிவில் துன்பமே எய்தி வருந்தியதைக் கண்கூடாகப் பார்த்துளோம். ஒருவனைப்பற்றி ஓரகத்திரு. கொழுநனே பதிவ்ரதாஸ்திரீக்குத் தெய்வம். அவன் இறக்க வேறொருவனைப் புணர்வது குலதர்மமே அல்ல. குலநாசமே உண்டாம்.

பால்ய விவாஹமே வேண்டியதெல்லாம் காக்கக்கூடியது. ஸநாதன தர்ம நெறி என்றும் நன்மையையே பயந்து நாட்டை உய்விக்கும்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## தர்மாபிமானிகளுக்கு வேண்டுகோள்.

தேச முன்னேற்றத்தில் பற்றின்றி ஒருவனும் இரான் என்பது திண்ணம். மதாபிமானம் அத்யாவசியகம். எக்காலத்தும் தர்மத்தை மறக்கலாகாது. தர்ம விதிகள் நூல்களில் பரக்கக் காணகலாம். நமது முன்னோர் அநுட்டானமே மிகவும் சிரியது. அதன்படி ஒழுகவே நமது முதற்கடமை. அடியிற் கண்ட சில முக்ய விஷயங்களை அன்பர்கள் உற்றுநோக்கி சீலத்தைவிடாது நடந்துவர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. ஒழுக்கமே விழுப்பந்தருவது. அதனினும் உயரியது இல்லை. அதுவே வர்ணாச்ரம தர்மம். சிகையின்றி எவ்வித வைதிக கார்யமும் செய்வதற்கில்லை. அது கேவலம் வெளி வேஷம் என்று நினைப்பது தவறு. ஒருவனது மனோநிடம் செவ்வனே சிகை போற்றலிருந்து நன்கு அறியலாம். உத்யோகஸ்தர்கள் இதனைச் சரிவர வைத்து நடத்த இயலாதெனக் கூறுவது சண்டிச் சமாதானமே. வைராக்யமற்ற தன்மையையே வற்புறுத்தும். திருமுடி விளக்க நெறிகளையும் நன்கு அநுட்டித்தால் தேகாரோக்யமும் தீர்க்காயுளும் உண்டாம். முககூஷவரம், அர்த்த கூஷவரம் அநாரோக்யத்தையும் அற்ப ஆயுளையுந்தான் அளிக்கும். தீக்ஷாவிதிகளைக் கவனித்து நடந்துவர குடும்பத்துக்கே க்ஷேமமுண்டு. எதிலும் அசட்டை உண்டாயின் அசம்பாவிதந்தான். பரிஹாரியின் வாயிலும் மண்போட நினைத்து அவன் தொழிலைத் தாமே நடாத்துபவர் விஷயத்தில் நமக்குப் பரிதாபமே உண்டாகிறது. தொழிலுரிமை வேண்டும் என்பது போராட்டம். செய்வது விபரீதம். மாமனார்களும் பொற்கருவிகள் வழங்குவதாகக் கேள்வி. இதனினும் மேம்பட்ட அவமானமிருக்க முடியுமா? ஸர்வாங்க கூஷவரம் செய்துகொள்ள வேண்டியவர்கள் அங்ஙனம் செய்யாதிருப்பது தவறே. அதற்குக் கழுவாயுமில்லை. வைதிகர்களாகப் பிறரால் கொண்டாடப்படும் லௌகீகர்களும் இது விஷயத்தில் முன் ஜாக்ரதையுடனிருத்தல் உத்தமம்.

2. புண்ட்ரதாரணம் நமக்கு மிகவும் அத்யாவசிகமானது. அவரவர் குலாசாரப்படி இதனைக் கிரமமாகத் தரித்தல் சாலச் சிறப்பளிக்கும். இராமபிரானுக்குத் திருநாமஞ் சாத்தி மகிழ்கிறார் கம்பநாட்டாழ்வார்.

3. உடைதரித்தலில் வெகு கவனம் செலுத்தவேண்டும். கிருஹஸ்தர்கள் பஞ்சகச்சமின்றி வெளிவருவது மிகவும் சோகிக்கத் தகுந்தது. இங்கேயே தங்கி நிற்கும் மேல்நாட்டான் தனது நாட்டு உடையைக் கைவிடாது நிற்றலை நன்கு உற்று நோக்குக.

4. கர்மாநுஷ்டானங்களைக் கூடியவரையில் சிரத்தையாகச் செய்தல் வேண்டும். காயத்திரியினும் மஹாமந்திரம் வேறொன்றில்லை. ஸந்த்யாவந்தனம் கிரமமாக நடத்தல் வேண்டும். ஜபத்தை அனுவசியமாகக் குறைக்கலாகாது.

5. புறத்தூய்மையுடன் மனத்தூய்மை அவசியம். பிறர் அநர்த்தங்கண்டவிடத்து ஐயோ என இரங்கல் வேண்டும். தம்மாலியன்றவரை பரோபகாரம் செய்க.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## குன்னத்தில் ஆருணகேதுக சயநம்.

பிரும்மஸ்ரீ கோதண்டராம ஸோமயாஜி அவர்கள் 12 நாள் விரதானுஷ்டானத்துடன் ஆருணகேதுக சயநமும் ஆவணி 23உ குருவாரம் நிரூடபசுபந்த ஸங்கல்பமும் ஸ்வத்ரவ்யத்தைக் கொண்டே நடத்துகிறார்.

நமது நிரூபர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றியும் பொதுவாக கெடுக்கவேண்டிய தவசியமில்லை.

கோயிலைப்பற்றிய குறிப்புகள் முக்கியமான கோயில்களை உத்தேசித்தே போடப்பட்டிருக்கின்றன. கோயில் டிரஸ்டிகளுக்கு ஹிந்துமத போர்டின்முன் அங்கீகாரம்பெற்று கோயில்களின் ஒழுங்கு, சுத்தம் முதலிய வைகளைப்பத்தி விதிகள் செய்வதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருக்கின்றது. வாக்காளர்களின் அபிப்பிர்யத்தை நிர்த்தாரணம் செய்துகொள்ளவும். மசோதாவின் ஷரத்துக்களை அமுல் நடத்தவும் விதிகளைத் தயாரிக்க அதிகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## மதிப்புரை.

யஜுஸ் ஸந்தியாவந்தனம். தேவநாகாலிபியில் மூலமும், ஸ்வர அடையாளமுமுள்ளது. விலை 3 அணு தபால் கூலி 0—0—6

கலியின் கொடுமையால் மற்ற வைதிக கர்மங்களை அனுஷ்டிக்க முடியாவிடினும் ஸந்தியாவந்தனத்தை மட்டுமாவது அனுஷ்டித்து வந்தால் பிராம்ஹணன் தனது பிராம்ஹண்யத்தை ரக்ஷித்துக்கொண்டவனாவான் என்றும், அதிலுபயோகிக்கப்படும் மந்திரங்களை ருஷி, சந்தஸ் தேவதை ஸ்வரம் இவற்றுடன் அக்ஷரலோப மின்றி உச்சரித்தலவச்யமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இப்புஸ்தகத்தில் ஒவ்வொரு மந்திரத்துக்கும் ருஷி முதலியவைகள் கூறப்பட்டிருப்பதால் மனப்பாடம் செய்வதற்கு இது மிகவுமுபயோகமாகவிருக்கின்றது. மேலும் அமாவாஸ்யாதர்ப்பணம், ப்ரம்ஹயக்ஞம், யக்ஞோபவீததாரணம் இவற்றின் மந்திரங்களு மிப்புஸ்தகத்தில் ஸ்வர அடையாளத்துடன்தேவநாகா லிபியிலச்சிடப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகம் ப்ராம்ஹணர்களுக்கு மிகவு முபயோகமுள்ளதாகும் எனக் கருதுகிறோம். புஸ்தகம் வேண்டுவோர் "கடலங்குடி நடேச சாஸ்திரிகள், 72 பெரியதெருவு, திருவல்லிக்கேணி சென்னை" என்ற விலாஸத்துக்கு 0—3—6 அணுவுக்கு ஸ்டாம்பு வாங்கி அனுப்பிபெறலாம்.

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றம் பதிப்பு)

பிராம்மணர்களின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. ப்ரத்யேகம்.

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரா.

## வே. ஸோ. சர்மவின் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சங்கரோபதேசம். | 2 | 0 | 0 |
| பத்ம புராணம். | 0 | 12 | 0 |
| மார்கண்டேயபுராணம் | 0 | 6 | 0 |
| வாமந புராணம். | 0 | 6 | 0 |
| வைகுண்ட ஏகாதசி | 0 | 0 | 6 |
| ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி | 0 | 1 | 0 |
| ப்ரஹ்மவை வர்த்தபுராணம் | 0 | 12 | 0 |
| கூர்மபுராணம் | 0 | 6 | 0 |
| ப்ரஹ்ம புராணம் | 0 | 12 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.

## பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தந அச்சுக்கூடம், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.



## மேல்மங்கலம்.

### ஆஸ்திக மஹாஜனசபை.

ஆவணிமீ 16ம்உ புதன்கிழமை மாலை $3\frac{1}{2}$ மணிக்கு ப்ரம்மஸ்ரீ பிலாஞ்சேரிசுப்பிரமணி அய்யர் தலைமையின் கீழ் சபை கூடிற்று. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்

அத்யக்ஷரவர்கள் விவாஹஸம்ஸ்காரம்என்னும் விஷயம் பற்றியும் ப்ரம்மஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் தற்கால நெருக்கடியும், நமது கடமையும் என்னும் விஷயம் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று மாலை 6 மணிக்கு சபை நிறைவெய்திது.

கிராமத்தில் ப்ரம்மஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களால் பிரவசனம் செய்யப்பட்டு வந்த தேவீ பாகவதம் முடிவடைந்து மறுபடியும் ஷை சாஸ்திரிகளால் ஆவணி-மீ 17-ம்உ வியாழகிழமை உத்தர ராமாயணம் ஆரம்பிக்கப் பெற்றது. பிரதிதினம் மாலை $3\frac{1}{2}$ மணிமுதல் $5\frac{1}{2}$ மணி வரையில் பிரவசனம் செய்து ஜனங்களை பரவசப்படுத்துகிறார்கள்.

சிவரூமகணபதி கனபாடிகள் காரியதரிசி.

## விவாஹ ஸம்ஸ்காரம்.

பிராம்மணர்களுக்கு தர்மம் அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதற்கு விவாஹம் என்பதுதான் அடிப்படையில் ஸம்ஸ்காரமாகும். சாஸ்திரத்தில் விதித்தகாலத்தில் உபநயனம் செய்துகொண்டு வேதாத்யயனத்தால் ரிஷி ருணத்தைத்தீர்த்து குரு[illegible] குலஸமானமான கன்னிகையை விதிவத்தாக கிரஹித்துக்கொள்ளுவதே விவாஹ ஸம்ஸ்கார்மாகும் அவ்விதம் ஸ்திரீ பரிக்ரஹத்தால் காரஹஸ்த்யம் என்ற ஆச்ரமத்தை அடைந்த பிறகு தான் பத்னீ ஸமேதனாய் இருந்துகொண்டு யக்ஞாதிகர்மாக்களால் தேவர்களை திருப்திசெய்தும், ஸத்ஸந்தான ஸ்மிருத்தியால் பிதிர்களை திருப்திசெய்தும், இஹபாசுக சாதனமான ச்ரௌத கர்மாக்களையும், ஸ்மார்த்த கர்மாக்களையும்செய்து தன் ஜன்மாவை ஸபலமாகச் செய்துகொள்வதற்கு அதிகாரி ஆகிறான். ஆகையால் விவாஹ ஸம்ஸ்காரம்தான் மூலதர்மமாக ஸித்திக்கிறது.

தர்மா தர்மங்கள் பிரத்யக்ஷமாகப் புலப்படுகிற வஸ்துவல்ல. சாஸ்திரங்களின் மூலம்தான் இவைகளின் ஸ்வரூபத்தை அறியமுடியும். சாஸ்திரங்களில் தர்மங்களை எந்த எந்தக் காலங்களில் அனுஷ்டிக்கச் சொல்லி போதிக்கிறதோ அக்காலங்களில்தான்அவைகளை அனுஷ்டிக்கவேண்டும். தர்மங்கள் எல்லாம் காலத்தையே பிரதானமாக உடையது. லௌகிகமான சாகுபடி முதலிய கர்மாக்களில்கூட காலத்தை எதிர்பார்த்தே பிரயத்தனம் செய்கிறோம். மழைகாலத்தில் சாகுபடி என்ற கார்யத்தைச் செய்தால்தான் அதன் பலனான தான்யங்களை அறுவடைகாலத்தில் எதேஷ்டமாக அனுபவிக்கின்றோம். திருடர்கள்கூட இருட்டாயுள்ள இரவுகாலத்தில்தான் தங்கள் திருட்டுத் தொழிலைச்செய்து அதன் பலனான பணத்தை அடைகின்றனர். காலம் மாறிக் காரியம் செய்யும்பக்ஷத்தில் அதன் பலனுக்கு நாசம் ஏற்படுவதுடன் தானும் நாசமடையவேண்டியது என்பதை யாவரும் சாமான்யமாக அறியக்கூடிய விஷயம். இதுகள்போலவே வைதிக கர்மாக்களுக்கு மூலமான விவாஹ ஸம்ஸ்காரத்தை சாஸ்திரத்திரத்தில் கூறப்பட்ட காலத்தில் நடத்தினால்தான் நம்மவர்களால் செய்யப்படும் கர்மாக்கள் வீர்யமுள்ளதுகளாயும் ஸபலமுள்ளதுகளாகவும் ஆகும்.

விவாஹ ஸம்ஸ்காரம் ஸ்திரீகளுக்கு முக்யமானது, உபநயன ஸம்ஸ்காரம் புருஷர்களுக்கு எவ்வளவு முக்யமோ அதுபோல் ஸ்திரீகளுக்கு விவாஹம் முக்யம். புருஷனுக்கு உபநயனத்திற்குப் பிறகு வேதாத்யயனம் முதலிய கர்மாக்களில் அதிகாரம் ஏற்படுவது போல் ஸ்திரீகளுக்கு விவாஹத்திற்குப் பிறகு தான் பிராம்மண்யம் ஸித்தித்து சகல கர்மாக்களிலும் அதிகாரம் ஏற்படுகிறது.

சாஸ்திரங்களில் ஸ்திரீகளுக்கு 8-வது வயது விவாஹத்திற்கு முக்ய காலமாகவும், 9, 10-ம் கௌணத்தில் முக்யகாலமாகவும், 10-க்குமேல் ருதுவாவதற்கு முன் செய்வது கௌணத்தில் கௌணகாலமாகவும் சொல்லப்படுகிறது. ருதுவானதிற்குப் பிறகு எந்த ஸ்திரீக்கு விவாஹம் செய்யப்படுகிறதோ அந்த ஸ்திரீயின் தாய், தகப்பன், தமையன் முதலியோர் கொடிய நரகத்தை யடைகிறார்களென்றும், ஸ்திரீயின் பர்த்தாவோ வ்ருஷளனென்றும், பிராம்மணர்களில் விலக்கத்தக்கவனென்றும், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் பதிதர்களாகி விடுகிறார்களென்றும் சாஸ்திரங்கள் நிந்திக்கின்றன. சாஸ்திரத்திற்கு விருத்தமாக ஸ்திரீகளுக்கு 14 வயதிற்கு மேல் தான் விவாஹம் செய்ய வேண்டு மென்று ராஜாக்ஞை பிறந்திருக்கிறது. ராஜாக்ஞைக்கு உள்பட்டு ஸம்ஸ்காரத்தை நடத்தினால் நாம் சாவதற்கு நாமே விஷமுண்டவர்களாக ஆவோம். சாப்பிடக் கூடாதென்று ராஜாக்ஞை பிறக்கிறது.

அப்பொழுது அந்தச் சட்டத்தை மீறுமல் நாம் வாழமுடியுமா? அப்பொழுது நமக்கு எவ்வளவு பறபறப்பு ஏற்படும். அதைக் காட்டிலும் பறபறப்பு ஏற்படவேண்டிய இக்காரியத்தில் நாம், சட்டத்தைமீறி ஈஸ்வர ப்ரசாரத்தையும், நம் கடமையையும் செய்தே தீரவேண்டியதுதான் தார்மிகர்களின் கடமையாகும். சோம்பலினலாவது அதைர்யத்தினலாவது இச்சட்டத்தைப் பொறுத்துக் கொள்வது என்று ஆரம்பித்துவிட்டால் வர்ண வ்யவஸ்தைகளில் தார்மிகமான கர்மாக்களைச் செய்யமுடியாதவர்களாக ஆய்விடுவோம்.

பால்யத்தில் விவாஹம் செய்வதால், பால்யத்திலேயே புருஷ ஸம்ஸர்க்கம் ஏற்பட்டு ஸந்ததிகள் சீக்கிரமாக உண்டாகிறார்களென்றும், அவ்விதம் பால்ய ஸ்திரீகளுக்கு ஏற்படும் குழந்தைகள் பலஹீனர்களாயும், ஆயுள் குறைந்தவர்களாயும் ஆகிறார்களென்றும் இப்பொழுதுள்ள நவீனர்கள் வாதம் செய்கிறார்கள். லௌகிகமான பலம் பிராமணர்களுக்கு முக்யமல்ல. வைதிக பலமே அவசியம். லௌகிக பலத்தை முக்யமாகக்கொண்ட துரோணர் முதலிய பிராம்மணர்கள் நாசமடைந்ததாகவே புராணங்கள் மூலம் தெரிகின்றன. பிராம்மணர்களுக்கு முக்யமான சாந்தம், அமைதி, யோகபலம் இவைகளை விட்டு க்ஷத்ரியர்களின் செய்கையை கடைப்பிடித்ததே மேற்சொன்னவர்களின் நாசத்திற்குக் காரணம். தன்னுடன் யுத்தத்திற்கு வந்த விஸ்வாமித்ரரை அவரது சைன்யங்களுடன் யோகபலத்தால் வென்று வைதிக பலத்திற்கு ஸமானமானது ஒன்றுமில்லை என்பதை நிதர்சனம் செய்தார் வஸிஷ்டர்.

அந்த வைதிக பலத்தை அடையவோ பால்ய ஸ்திரீகளிடத்தில் பிறந்தது காரணமாகாது. தனது உத்தமமான ஸம்ஸ்காரத்தினலும், புத்தி சக்தியினலும், வேத சாஸ்திர அப்யாசத்தினலும், ஸத்ஸங்கத்தினலும் உத்தமமான வைதிக பலத்தை அடைந்துவிடலாம். இதிஹாஸங்களிலும், புராணங்களிலும், பால்யத்தில் பிறந்த பிராம்மணர்கள் தேஜோவான்களாயும். திடகாத்திரர்களாயும், ஆயுள்வான்களாயும் இன்னும் இருப்பவர்களாகவே தெரிகிறது. பலக்குறைவிற்கு தற்காலத்தில் காணப்படும். ஆசாரக் குறைவும், தர்ஜன ஸங்கமும், துஷ்ட ஆஹாரமும், சாஸ்திர விதிக்குமாறான விவாக ஸம்ஸ்காரமும், அதிக போகமும்தான் காரணம்.

மேற்றிசைகளில் வயது மணமுறையை அனுஷ்டிக்கும் நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சியை கொஞ்சம் ஆராய்ந்து நம் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதன் கெடுதிகள் வெள்ளிடைமலைபோல் தெரியவரும். ஸ்திரீகள் ஒளித்தோடுகை, கள்ளச் சேர்க்கை, தாய், தகப்பன் தெரியாத அனாதைக் குழந்தைகள், சிசுஹத்தி இவைகள் அந்நாடுகளில் எதேஷ்டமாக நிறைந்திருக்கின்றன. அந்நாடுகளின் கதியை நம்தேசமும் அடைய வேண்டும் என்ற எண்ணம்போலும் சீர்திருத்தக்காரர்களுக்கு? மேலும் சீர்திருத்த வாதிகள் ஸ்வதேச இயக்கம் என்றுசொல்லிக் கொண்டு பரதேச இயக்கத்தைக் கைக்கொள்வது தர்மமாகமாட்டாது. அவர்கள் நம் ஸமூஹத்தின் உள் விரோதிகளே ஆவர். நம் தர்மங்களை இழந்து அதன் மூலம் கேவல சுகத்தை அடைவதைக் காட்டிலும் நம் சமூஹமும் நாமும் உயிரிருப்பதுமேல் ஆகையால் நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். சீர்திருத்த வெள்ளம்புரண்டு வருகிறது. அதற்கு சரியான அணைபோட்டு மேலோங்காமல் நசுக்கவேண்டிய பிரயத்தனத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜில்லாக்களிலும், கிராமங்கள்தோறும், பட்டணங்கள் தோறும் இடைவிடாமல் வித்வான்களைக் கொண்டு தர்மபிரசாரம் செய்யச் சொல்ல வேண்டும். அவர்களை ஆதரிக்க ஒரு நிதி திரட்டவேண்டும். ஒவ்வொரு இடங்களிலும் தர்ம வீரஜதை கிளம்பி தீவ்ரமான பிரசாரத்தில் ஈடுபடவேண்டும். கும்பகோணத்திலிருந்து ஓர் ஜதை தர்மப் பிரசாரத்திற்காக கால் நடையாகவே புறப்பட்டிருப்பதைப் பற்றி அளவில்டங்காதசந்தோஷமடைகிறோம். அதுபோல் நூற்றுக்கணக்கான ஜதையாவது கிளம்பவேண்டும். சாரதாச் சட்டம் முதலிய அதார்மிகச் சட்டங்களை மீறவேண்டும். அதன்மூலம் நம் எதிர்ப்பை பலப்படுத்த வேண்டும். நம் எதிர்ப்பால் ராஜாங்கம் நடுங்கவேண்டும். அதன்மூலம் நாம் ஜயம்பெற வேண்டும். அதுதான் வழி, வேறு வழி இல்லை. அதற்கு வேண்டிய முயற்சியை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தார் கவனிப்பது அவசரத்திலும் அவசியம். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். தர்மம் ஓங்குக. அதர்மம் வீழ்க.

சிவரூம கணபதி கனபாடிகள்,
மேல்மங்கலம்.

## சென்னை.

### கண்டனக்கூட்டம்.

சென்னை முத்யால்பேட் ராமாநுஜம் கலாசாலையில் 4உ பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா தலைமையில் ஓர் கூட்டம் கூடிற்று. பல பக்தர்கள் (பெண்மக்களும்) வந்தனர். தலைவர் ஆலயப்பிரவேச மசோதவை எதிர்த்து அதனல் விளையக்கூடிய இஹபா துக்கங்களை விளக்கி இது நிறைவேறின் தேசிய ஸபை ஆக்ஷிக்கும். அச்சபைக்குமே முடிவுகாலம் என்றும் இது தர்மா தர்ம முடிவான யுத்தமானதால் அனைவரும் உடல் பொருளாவி மூன்றையும் தியாகம் செய்ய முன்வரவேண்டுமென்றும் குருவாயூர் போல் இதையும் எதிர்த்து வெற்றி பெற தார்மிகரும், மடாதிபதிகளும் முன்வர வேண்டுமென்றும் பேசினர். கண்டனதீர்மானம் பலரால் பேசப்பட்டு மந்திரிக்கனுப்பப்பட்டது. வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது.

நமது நிரூபர்

215247



அநாவசியமாக ஏன் - -
- - அவஸ்தைப்படுகிறீர்கள்

அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து உங்கள் தொந்திரவை நிவர்த்தித்துக்கொள்ளுங்கள். சகலவிதமான வலிகளையும் போக்கவல்லது




அமிர்தாஞ்சனம்

## பழூவூர்.

### வேதாந்தபாடசாலை.

1. வருஷாரம்பத்தில் 3 வித்யார்த்திகள் இருந்தார்கள். ஏற்கனவே இந்தப்பாடசாலையில் படித்து ஊருக்குச்சென்ற K. S. வெங்கிட்டரும சர்மா என்பவர் ஸித்திப்ரஹ்மாநந்தீய பாடம் ஆரம்பித்து நடந்து வருவதை முன்னிட்டு 4-வது வித்யார்த்தியாகச் சேர்க்கப்பட்டார் ஷை 3 வித்யார்த்திகளில் இரண்டுபேர் கும்பகோணம் அத்வைத ஸபையில் ப்ரஸ்தானத்ரய பரீக்ஷைகொடுத்து பாஸ் செய்தார்கள். திருச்சி அத்வைத ஸபையில் உபநிஷத்பாஷ்யம் பரீக்ஷை கொடுத்து பாஸ் செய்தார்கள். 4-வது வித்யார்த்தியாகச் சேர்க்கப்பட்டவர் உத்யோக விஷயமாக மாசிமீ 12உ புறப்பட்டு விட்டார். 2 வித்யார்த்திகள் சென்னை யுனிவர்ஸிடி வேதாந்த சிரோமணி (Final) பரீக்ஷை கொடுத்து பாஸ் செய்தார்கள். மற்றொருவர் ஏற்கனவே வியாகரண சிரோமணி பரீக்ஷை பாஸ் செய்திருந்தபடியால் பரீக்ஷைக்குப் போகவில்லை. ஆக வருஷக்கடைசியில் 3 வித்யார்த்திகள் இருந்தார்கள். அத்யாபகர் ஒருவர் இருந்து வருகிறார்.

2. வேத பாடசாலையில் வருஷாரம்பம் முதல் 6 வித்யார்த்திகள் இருந்துவருகிறார்கள். ஷை பையன்களுக்கு வைகாசி மாதத்திலும் கார்த்திகை மாதத்திலும் 2 பரீக்ஷைகள் அல்லூர் பிரும்மஸ்ரீ தாண்டவேசுவர கனபாடிகளைக்கொண்டு நடத்தப்பட்டன. ஒரு பையன் நீங்கலாக மற்ற யாவரும் பாஸ் செய்தார்கள். ஷை கனபாடிகளுக்கு பிரதிப்ரயோஜனமன்னியில் செய்த உதவியை நன்றி பாராட்டி வந்தனமளிக்கப்படுகிறது. வேத பாடசாலைக்கு அத்யாபகர் இருந்துவருகிறார்.

3. ஸ்ரீ பரமாசார்யாளுடைய ஆக்ஞையின் பேரில் ஸ்ரீ ஜம்புகேசுவரத்தில் வைத்யசாலை ஒன்று நடத்தி வந்தது ஏதோ சிலகாரணத்தால் நிறுத்தப்பட்டு மறுபடி கூடிய சீக்கிரம் ஆரம்பித்து நடத்தவேணும் என்ற அவா இருந்துவந்ததினால் ஸ்ரீ ஆசார்யாளுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு ஈசுவர-ஷு மாசி-மீ 28உ (11-3-38) வெள்ளிக்கிழமையன்று தி. தா. சிருகமணி கிராமத்தில் அநுக்ஞை விக்நேசுவர பூஜை முதலானதுகள் செய்து உபக்ரமிக்கப்பட்டது. இது ஸம்மந்தமான விஷயங்கள் யாவும் அடுத்த ரிபோர்ட்டில் விபரமாக பிரசுரிக்கப்படும்.

P. ராமச்சந்திரய்யர்,
ரிடையர்டு டிப்டி கலெக்டர் & டிரஸ்டி.
வேதாந்த பாடசாலை.

## திப்பிராஜபுரம்.

### பிரும்மவித்யா ஸபா.

ஈசுவர-ஷு தை-மீ முதல் சனிக்கிழமை ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்யஸ்வாமிகள் அநுக்கிரஹத்தை முன்னிட்டு திப்பிராஜபுரம் கிராம மஹாஜனங்களுடைய பிரேரணையின் பேரில் மஹோபதேசக கவிரத்னம் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகளவர்களாலும், திருக்கருகாவூர் மகா-ா-ாஸ்ரீ டி. எல். சுப்பய்யர் அவர்களாலும் இந்த ஸபையானது ஆரம்பிக்கப்பட்டு பிரதி சனிக்கிழமைகளிலும் இரவில் அநேக வித்வான்களால் உபன்யாஸம் செய்யப்பட்டு வருகிறது. அந்த ஸபைக்கு மகா-ா-ஸ்ரீ வி. கிருஷ்ணஸாமி அய்யர் ப்ரஸிடெண்டாகவும், மகா-ா-ா-ஸ்ரீ டி. எஸ். வெங்கிட்டராமய்யர் ஸெகரெட்டரியாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நிகழும் ஆவணி-மீ 11உ சென்ற சனிக்கிழமை உள்ளூர் பிரும்மஸ்ரீ மந்திரமூர்த்தி கிருஷ்ணசாஸ்திரிகள் வேதப்பிரகாசம் என்ற விஷயத்தை ரொம்ப நன்றாக உபன்யஸித்தார்கள். பிரும்மவித்யாஸபா சார்பாக பந்தி நாகராசம்பேட்டை பிரும்மஸ்ரீ ராமாயணம் ராமஸ்வாமி சாஸ்திரிகளவர்களால் வால்மீகி ராமாயணம் பிரதிச்லோக தாத்பர்யத்துடன் ஒருமாத காலமாக பிரவசனம் நடந்துகொண்டு வருகிறது. ஆவணிமாதம் 15உ புதன்கிழமை ராத்திரி ஸீதாகல்யாண மஹோத்ஸவம் ஷை சாஸ்திரிகளால் மிகவும் நன்றாக பிரவசனம் பண்ணப்பட்டது. சேங்காலிபுரம் பிரஸங்கபானு பிரும்மஸ்ரீ வைத்திநாதசாஸ்திரிகள் அவர்கள் அன்று விஜயம் செய்திருந்தார்கள். இந்த ஊரில் சாதுர்மாஸ்யத்தை நடத்திக்கொண்டு வருகிற ஸ்வாமிகளுடைய ஸன்னிதானத்தில் பகல் நாலுமணிக்கு ஷை பிரும்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளால் சாந்தோக்ய உபநிஷத்தில் பிரும்மாவினால் இந்திர விரோசனர்களுக்கு உபதேசிக்கப்பட்ட ஆத்மஸ்வரூபத்தை ஸர்வ ஜனங்களுக்கும் நன்றாய் மனதில் பதியும்படி உபந்யஸிக்கப்பட்டது. ஷை சாஸ்திரிகளவர்கள் ஸீதாகல்யாணத்திற்கும் விஜயம் செய்திருந்தார்கள.

கிராமத்து மகா ஜனங்கள் மோதிரப்பணம் போட்ட பிற்பாடு பிரம்மஸ்ரீ வைதிநாத சாஸ்திரிகளவர்கள் கிராமத்து மகா ஜனங்களுடைய சிரத்தையைப்பற்றியும் ஷை சாஸ்திரிகளவர்கள் ராமாயணத்தைப் பற்றியும் பத்து நிமிஷம் ஆனந்தக் கடலில் மூழ்கும்படி பேசினார்கள். பிறகு பிம்மஸ்ரீ நாராயணஸ்வாமி திரௌதிகள் சேங்காலிபுரம் பிரும்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் இன்று ஸீதா கலியாணத்திற்கு விஜயம் செய்ததானது கிராமத்து மகா ஜனங்களுடைய பாக்யமென்றும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்ட வால்மீகி ராமாயண பாதுகா பட்டாபிஷேகம் பர்யந்தம் நிர்விக்நமாய் நடப்பதற்கு ஸ்ரீராமன் அநுக்ரஹம் செய்யவேணும் என்றும் ஸர்வ ஜனங்களும் தினப்படி கேட்டு ஆனந்திக்கும்படி ஸபையில் வெகு அழகாய் பேசினார்கள். பிறகு ஸபையில் உள் ஜனங்களுக்கு சந்தனம் சர்க்கரை கற்கண்டு பழம் புஷ்பம் தாம்பூலம் முதலியவைகள் கொடுத்து ஸீதா கல்யாணம் ரொம்ப விமரிசையாக நடைபெற்றது.

இப்படிக்கு,
சாம்பசிவன்,

## காலஞ்சென்ற சிதம்பர பாகவதருக்கு அநுதாபம்.

சென்ற (31-8-38) மாலை 5-45 மணிக்கு நாகூர் நாஷனல் ஸ்கூல் ஹாலில் உள்ளூர் மஹா ஜனக்கூட்டம் ஒன்று, இவ்வூர் டவுன் காங்கிரஸ் கமிட்டி தலைவர் ரூ. அ. ய. அய்யாரு செட்டியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்போது அடியில்கண்ட தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

பிரும்மஸ்ரீ மஹா கதக காண்டீரவ அபிநவ பர்தாசார்ய சிதம்பர பாகவதர் அவர்களின் அகால மாணத்தைக் குறித்து இக்கூட்டம் ஆருத்துயரத்தை அடைகிறதென்றும், கூட்டத்தின் அநுதாபத்தை மேற்படியார் குடும்பத்துக்கு அறிவிப்பதென்றும் தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானத்தை ஆமோதித்து மேற்படி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் சுந்திரம் அய்யர் போஸ்டுமாஸ்டர் சுந்திரேச அய்யர் டி. வீருசாமி அய்யர், சோமு அய்யர், க. வெங்கிட்டராம அய்யர், கே. வெங்கிடசுப்பிரமண்ய சர்மா முதலியவர்களால் சொற்பொழிவுகள் நடைபெற்றன. பாகவதருடைய கலைஞானத்தைப்பற்றியும், குண விசேஷங்களைப்பற்றியும், யாவரும்பேசி, அவருடைய மாணத்தால் சங்கீத உலகத்துக்கே ஒரு பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறினார்கள்.

தலைவர் அவர்கள் ஸ்ரீமான் பாகவதர் அவர்கள் தன்னுடைய கதாபிரசங்கத்தின் வாயிலாக தேசிய உணர்ச்சியை பொது ஜனங்களுக்கு புகட்டி வந்தபடியால், அன்னாரின் மாணத்தால், தேசத்துக்கே பெரிய நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறி முடித்தார்.

நமது நிருபர்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A, Gopaladesikachariar, and S. Kalyanasundaram,

அச்யதாரம்

15-9-1938

ல

H

23 36

215248

1540 1540 215248 495

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்.

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

OFFICE OF THE REGISTRAR OF ... 28 SEP 1938 MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

| ௪ 23 | கும்பகோணம் கலி 5040 பகுதான்யஸு ஆவணிமீ 30௨ 1938ஸு ஸெப்டம்பர்மீ 15௨ | ஸ 36 |

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணு 1.

### விளம்பர விகிதம்

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. | 20 | 0 | 0 |
| இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணு. | 0 | 8 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபீஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## பூஜகருக்கு கத்திக் குத்து.

மகம்மதியனின் மூர்க்கத்தனம்.

டில்லி சிவாலயத்தகராறு விஷயமாக ராஜி ஏற்பட்டு விட்டதாக வெளிவந்த செய்தி உண்மையல்லவென்று நிச்சயமாகிறது. நிலைமை இன்னும் கேவலமாகி வருகிறதாம். சிவாலய பூஜகர் ஒருவரை ஓர் மஹம்மதியன் கத்தியால் குத்தி விட்டான். இதனால் வகுப்புக்கலஹம் ஏற்படுமென்று அஞ்சப்படுகிறது ராணுவ முஸ்தீப்பு அதிகமாயிருக்கிறது. ஹிந்துக்கள் ஹர்த்தால் செய்தனர். கூட்டமதிகமாயிருப்பதால் போலீஸார் தடிகொண்டு அதைக்கலைக்கவேண்டியிருக்கிறது.

## மன்னிப்புக் கேழ்கின்றனர்.

ஹிந்தி மறியல்காரர்கள் விடுதலை.

சென்னையில் கட்டாய ஹிந்திக்காக மறியல் செய்த 6 பேர்கள் தங்கள் செய்கைக்காக வருந்தி ஸர்க்காரிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டதால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

## விசாரணை கிடையாது.

திருவாங்கூர் நிலைமையைப்பற்றி வெளிமனிதர் ஒருவரைக்கொண்டு 'நிஷ்பக்ஷபாதமான விசாரணை நடத்தவேண்டுமென்று காந்திஜி கூறியதை ஸர். ஸி. பி. ஏற்க முடியாதெனச் சொல்லிவிட்டார். ஆதலால் எவ்வித விசாரணையும் நடக்காது.

## "மிஸ்டர் காந்தி" எனக் கூடாதாம்.

மத்யமாகாண மந்திரியின் உத்திரவு.

மத்யமாகாண பிரதம மந்திரி வெளியிட்டுள்ள ஓர் உத்திரவில், ஸ்ரீமான் காந்தியை 'ஸர்க்கார் தஸ்தாவேஜிகளில் 'மிஸ்டர் காந்தி' என்று குறிப்பிடக் கூடாதென்றும், "மஹாத்மா காந்தி" என்றே குறிக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டிருக்கிறார்.

## ஹைதராபாத் காங்கிரஸ் ஸபை சட்ட விரோதமானது.

ஹைதராபாத் ஸமஸ்தானத்தில் சிலர் சேர்ந்து ஓர் காங்கிரஸ் ஸபை அமைத்தனர். அது சட்ட விரோதமான ஸ்தாபனமென்றும், அதைக் கலைத்து விடவேண்டுமென்றும் அந்த கவர்ன்மெண்டார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

## முஸ்லீம் விவாஹ ரத்து மசோதா. இறந்துபோய் விடுமா ?

டில்லி சட்ட ஸபையில் முஸ்லீம் விவாஹ ரத்து மசோதா விவாதத்திற்கு வந்தது. அதில் ஹிந்துக்களைப் பாதிக்கக் கூடிய விஷயங்களைப்பற்றிப் பலர் ஆக்ஷேபம் செய்தனர். மேலும் முஸ்லீம் ஜட்ஜுகளே விவாக ரத்து வழக்குகளை விசாரிக்கவேண்டுமென்ற பிரிவும் பலரால் ஆக்ஷேபிக்கப்பட்டது. கடைசியாக விவாதம் முடியாமலே மசோதா ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த கூட்டத்திற்குள் இந்தியா சட்டஸபையின் காலகெடு முடிந்துவிடுவதால் இந்த மசோதாவும் சட்டப்படி மரித்துவிடுமெனத் தெரிகிறது.

மசோதாவைக் கொண்டு வந்தவர், இவ்விஷயமாக ஹிந்து மெம்பர்களின்மீது குற்றம்சாட்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறார். ராணுவ மசோதா விஷயமாக முஸ்லீம்கள் செய்த அநீதிக்குப் பதிலாக இந்த விஷயத்தில் அவர்கள் புத்தி கற்பிக்கப்பட்டார்கள் போலும்!

## இஞ்ஜினீயர் பட்டதாரி வெற்றிலை விற்கிறார்.

லூடியானா வாஸியான ஸ்ரீமான் பி. எல். வர்மா என்றவர் அமெரிக்கா சென்று எலெக்டிரிக் இஞ்ஜினீயர் பரீக்ஷையில் தேறிப்பட்டம் பெற்றவர். இந்தியாவில் அவருக்கு எவ்வித வேலையும் கிடைக்காததால் அவர் தெருவில் வெற்றிலை விற்று ஜீவித்து வருகிறார் ஜனங்கள் இதை வேடிக்கை பார்க்கிறார்கள். இவர் இந்தியா முழுவதும் சுற்றிவர உத்தேசிக்கிறாராம்.

## க்வெட்டாவில் கோவில் கட்ட வைஸ்ராய் பண உதவி.

பூகம்பத்தினால் குவெட்டாவில் இடிந்துபோன ஹிந்து ஸநாதந தர்மிகளின் கோவிலை மீண்டும் கட்டுவதற்காக வைஸ்ராய் பூகம்ப உதவிநிதியிலிருந்து 12 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்.

Books by Mr. S. Aiyadurai Iyer

| | | | |
|---|---|---|---|
| Adwaida Siddhantham | 0 | 8 | 0 |
| Ramayana as on illus tration Yoga Sastra | 0 | 8 | 0 |
| Bharatham and Bagavatham in the light of Yoga Sastra | 0 | 4 | 0 |
| பொதுமத போதினி | 0 | 4 | 0 |

K. V. சுப்ரமணிய சாஸ்திரிகள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷேந்த்ரா: | 1 | 0 | 0 |
| ஸூனீதிகுசமாலா | 0 | 8 | 0 |

" ஆர்யா சதகம் "
Mr. G. V. கணேசய்யர், B.A., B.L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.
100 பக்கங்களுக்குமேல் கொண்டது.
தபால் செலவு வேறு] [விலை அணு 0—8—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு விலை அணு 6.
Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.
Town High School Road, Kumbakonam

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T. B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

## திருப்புகழும் பக்திரஸமும்.

(சென்ற வாரம் தொடர்ச்சி)

ஆனல் ஸ்துதி என்றால் சிலது ப்ரசம்ஸார்த்தமாகவே இல்லாததையும் சொல்லுமாம். பூனைக்கண்ணனை புண்டரீகாக்ஷனென வர்ணிப்பது மியல்பே. காளிதாஸனும்

भूतार्थ व्याहृतिः सा हि न स्तुतिः परमेष्ठिनः

(பூதார்த்த வியாஹ்ருதிஸ்ஸாஹிநஸ்துதி: பரமேஷ்டின:) என்பதாக ஒரு தெய்வத்தைத் துதிக்குமிடத்து இது உண்மையே அல்லாது துதி அல்ல எனக்கூறுவதனல் துதி என்பது பெரும்பாலும் பொய்யே என ஒரு சங்கை நிகழும். அவ்விதமான சங்கைக்கு இடமில்லை. ஏனெனில்

यामिमां पुष्पितां वाचं, वेदाः परोक्ष वादा हि

(யாமிமாம் புஷ்பிதாம் வாசம் வேதா: பரோக்ஷவாதாஹி) என்றது முதலான வசனங்களால் வேதமானது குடஜிஹ்விகாந்யாயத்தால் மனிதர்களுக்கு ருசியுடன் ப்ரவிருத்தியை உண்டுபண்ணுவதற்காக வேண்டி அர்த்த வாத பாகத்தை அதிகம் உடையது. அந்த அர்த்த வாதம் மூன்று விதமாகும். குண வாதம். அநுவாதம். பூதார்த்த வாதம் என்பனவாம். அவை என்னவெனில் ப்ரமாணாந்தர விருத்தமானல் குண வாதம். ப்ரமாணாந்தர ப்ராப்தமானல் அநுவாதம். விரோதமின்றி ப்ராப்தியும் இல்லாவிடில் பூதார்த்த வாதம். 'ப்ரஜாபதி தன் சரீரத்தை கிழித்து வபை எடுத்தார்' என்னுமிடத்து ஒருவன் தன்சரீரத்தை கிழித்து வபைஎடுத்து ஹோமம்செய்வதுஎவ்வாறாதலால்இவ்வசனம் வபாயாகம் உயர்ந்தது என்பதற்காக வந்த ஓர் ப்ரசாம்ஸார்த்த வாதம். 'அக்னி குளிரைப்போக்கும்' என்னுமிடத்தில் விரோதமில்லையாயினும் அவ்விஷயம் யாவர்க்கும் தெரிந்ததாதலால் அநுவாத ரூபமான இதுவும் ஓர் அர்த்த வாதம். 'இந்திரன் வஜ்ரபாணி என்னுமிடத்திலோ விரோதமுமில்லை. நமக்கு தெரிந்த விஷயமுமில்லை. அது பூதார்த்த வாதமெனப்படும். இது பற்றியே காளிதாஸன் தன்னல் வர்ணிக்கப்பட்ட ஸ்துதி எல்லாம் பூதார்த்த வாதமே தவிற குணவாதமல்ல. என்று சொல்வானுனன் இந்த திருப்புகழிலோ எல்லாம் அபதானஸ்துதியே தவிற வேறு அநுவளவேணும் இல்லையென்று எவ்வாற்றுலும் பெருமையுடையது திருப்புகழ் என உரைத்தோம். இனி இப்பாடல்கள் ஒவ்வொன்றும் எவ்விதம் எந்த அர்த்தத்தை விளக்குகிற தென்றும் எவ்வாறு பக்தி ரஸம் பயக்குகிற தென்றும் எனது சிறிய புத்திக்கெட்டியவரை சிந்து விவரிக்க முயலுகிறேன். ஷண்முகன் துணையினல் எதையும் பெறலாம்.

அருணகிரிநாதர் பாடிய பாடல்கள் பதினாறுயிரம் என்பது ஆன்றோர் வழக்கு. இப்பொழுது வேதத்தின் சாகைகள் உத்ஸன்னமாயினபோல் அந்த அம்சத்திலும் வேத துல்யதையை விடக்கூடாதென்று பதினாயிரத்து சொச்சம் மறைந்தன போலும். எஞ்சியிருந்து இப்பொழுது அகப்பட்டு அச்சிடப்பட்டிருப்பது ஆயிறத்து இருநூற்று சொச்சமே என்பதும் தமிழ் நாட்டாரின் தௌர்பாக்யம் என்பதற்கில்லை, அது வேதத்துக் கியல்பன்றோ. ஆயிரம் சாகைகள் உள்ள ஸாமவேதம் ஒன்றிரண்டு சாகையுடன் ஒலிக்கிறதே. ஆகையால் அந்த ஆயிரத்து இருநூறு பாடல்களிலும் பிரதிவாக்யம் ப்ரதிபதம் சொற்சுவை, பொருட்சுவை. ரஸம் அலங்காரம் ரீதி சய்யை முதலியன பொருந்தியிருப்பதோடு பக்தி ரஸம் ததும்பக்கிடப்பதும் பகவத்குணநுஸந்தானம் ஏற்படுவதும் இன்றியமையாதது.

சங்கரன் மைந்தன் விஷ்ணுவின் மருமகன் கணேசன் இளையோன் பார்வதி புதல்வன் வள்ளிமணளன் என்ற விசேஷணங்கள் முறையே ஞானத்தையும் ரக்ஷணத்தையும் விக்ந நிவிருத்தியையும் அருள்பேற்றையும் ஸௌபாக்ய ஸம்பத்தையும் தத்க்ருது நியாயத்தால் பிரார்த்திக்கிறது. அத்யாரோபாபவாத நியாயத்தால் முதலில் விஷபவர்ணமும் பிறகு நிராகரணமும் நிரூபிக்கப்படுகிறது.

அடிமுதல் நுனிவரை ஒவ்வொரு பாடல்களிலும் உபநிஷதர்த்தம் ஊடுருவியும் பக்திரஸம் பாவியும் இருப்பதனல் முழுதுமே விவரணம் செய்தல் அவசியமேயாயினும் ஷண்முகன் கிருபையினல் கூடியசீக்கிரம் விஸ்தாரமாக விவரணம் வெளியிட ஏற்படுமாயின் இப்பொழுது ஸ்தாலீபுலாக நியாயத்தால் சில பாட்டுக்களில் மாத்திரம் விவரிக்கின்றேன். சில பாடல்கள் ஸத்ஸங்கத்தை சிறப்பித்தும், சில, விஷய வைராக்யத்தை விதந்தும் பல பாட்டுக்கள் பகவானது குண சிரவணத்தை பன்னியும், சிலவை கீர்தனத்தைக் கருகியும், ஸ்மரணத்தை ஸாதித்தும் பாத ஸேவனத்தை பாவியும், அர்ச்சனையை அரைந்தும், வந்தனத்தை வலியுறுத்தியும், தாஸ்யத்தை தாகமாய் நாடியும், ஆத்ம நிவேதனத்தை ஆவலாய் வேண்டியும், பக்தியையே பிரதிபாதிப்பதுடன் அமானித்வாதி ஸாதனத்தை யபேக்ஷிப்பதும், தேகாத்மபாவ நிவிருத்தியைத் தேடுவதும், குருவினுபதேசத்தைக் கோறுவதும், சிரவணம் மனநம் நிதித்யாஸனம் இவைகளை சிலாகிப்பதும், ஜீவர்பிந்ந பிரம்ஹஞானத்தை சிரபடுத்துவதுமாய் உபநிஷதர்த்தங்களின் உபப்ரும்ஹணமாம். மற்றும் சில பாடல்கள் யோக மார்க்கத்தை ஓதுவதும் பிரம்ஹாநுபூதியைப் பாடுவதுமாய் 'ஸர்வே வேதா யத்பதமாமநந்தி'' என்பதுபோல் சகலமான பாடல்களும் அத்விதீய பிரம்ஹ சைதன்யத்தையே பாடுகின்றன என்பது உறுதி.

முதலில்,

"முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர—என
வோதும்
முக்கட்பா மற்குச் சுருதியின்
முற்பட்டதைக் கற்பித்திருவரும்
முப்பத்துமூவர்க்கத் தமரும்—அடிபேண
பத்துத்தலைத் தத்தக்கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டைக் கிரிகொடு இற
[வாக
பத்தற்கு இரதத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பக்ஷத்தொடுரக்ஷித்தருள்வதும்ஒருநாளே"

என்ற முன்பாதி இதுவே குஹனல் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டப் பாடலென்பர்.

இதில் 'அதீஹிபகவ:' என்ற மந்திர புரஸ்ஸரம் உபஸத்தி செய்த கிரிகேத்திரனுக்குப் பிரணவார்த்த முபதேசித்தவன். ஏக பாணத்தால் தசகண்ட சிரச்சேதம் செய்தவனும், பார்த்தஸாரதியாய் நின்று சக்கிரத்தினல் சூரியனை மறைத்து பகலை இரவாகச் செய்தவனும் மேகசியாமள மூர்த்தியுமான ஸ்ரீ விஷ்ணுவின் மருமகன் பக்ஷமுடன் என்னை இரக்ஷிப்பது, ஒருநாள் அமையுமென துதிக்கலுற்றார்.

(தொடரும்)

## நாகப்பட்டணம் ஹிந்து மதாபிமான ஸங்கம்.

### 47-வது வருஷபூர்த்தி உத்ஸவம்.

ஸ்ரீசட்டைநாதஸ்வாமிகோவிலில் அடியில் கண்ட தினங்களில் உபன்யாஸங்கள் நடைபெறும்.

திருநெல்வேலி அட்வோகேட், ப்ரஹ்மஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் M.A., B.L, அவர்கள் அக்ராஸனம் வஹிப்பார்கள்.

பகுதான்ய-ஸு ஆவணி-மீ 32உ (16—9—38) வெள்ளிக்கிழமை இரவு 7மணி முதல், அக்ராஸனர் அவர்கள் வரவேற்பு, அறிக்கைப் பத்திரம் வாசித்தல், அக்ராஸனரவர்கள் முன்னுரை உபந்யாஸம்.

நாகை வக்கீல், ஸ்ரீ-உப-வே S. நாராயண அய்யங்கார் ஸ்வாமிகள் அவர்கள் 'ஈச்வரஸ்வரூபம்.'

புரட்டாசி-மீ 1உ (17—9—38) சனிக்கிழமை காலை 7½மணி முதல் போலகம் ப்ரஹ்மஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் 'கர்மபக்திஸாமரஸ்யம்'. திப்பிராஜபுரம், ப்ரஹ்மஸ்ரீ நாராயணஸ்வாமி ச்ரௌதிகள் அவர்கள் 'ஸத்யே ஸர்வம்பிரதிஷ்டிதம்'. மாலை 3½மணி முதல் கும்பகோணம் ஸ்ரீ-உப-வே அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரிய ஸ்வாமிகள் அவ்ர்கள் 'ஹிந்துமதமும் நவீனலோகமும்'. காளியாகுடி ராமாயண வித்வான், ப்ரம்ஹஸ்ரீ நடேச சாஸ்திரிகள் அவர்கள் 'விச்வாமித்ராகமனம்'. இரவு 7-மணி முதல் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசகர் கவிரத்னம், ப்ரஹ்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் 'அவதாரங்களின் தத்வம்'. போலகம், பிர்ம்மஸ்ரீ ஸ்ரீராம சாஸ்திரிகள் அவர்கள் 'தத்காலபரிஸ்திதியும் அதன் குணா குணங்களும்'.

புரட்டாசி-மீ 2உ (18-9*37) ஞாயிற்றுக்கிழமை காலை 7½மணி முதல் ஷை ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீராம சாஸ்திரிகள் அவர்கள் 'மானிட வாழ்க்கையின் லக்ஷ்யமும், அதற்கான கடமையும்'. அக்ராசனர் அவர்கள் 'ஸுகஸ்வரூபம்'. மாலை 3½மணி முதல் சிரோமணி திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் பண்டிதர், ப்ரஹ்மஸ்ரீ N. வைத்தியநாத சாஸ்திரிகள் M. R. A. S அவர்கள் 'நமது நிலைமையும், கடமையும்'. சீர்காழி வக்கீல், ஸ்ரீ-உப-வே T. சுந்தராச்சாரியார் ஸ்வாமிகள் அவர்கள் 'ஸஹஸ்ரநாமம்'. இரவு 7மணி முதல் திருக்கருகாவூர், ப்ரஹ்மஸ்ரீ T. L. சுப்பய்யர் B.A., B.L., அவர்கள் 'நமது ஆசார அனுஷ்டானங்களும், நவீன ஆராய்ச்சிகளும்'. ஷை போலகம் ப்ரஹ்மஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் 'ஆஹார நியமம்'. அக்ராசனர் அவர்கள் முடிவுரை.

19-9-38 திங்கட்கிழமை நடக்கக்கூடிய உபந்யாசங்களின் விபரம் பிந்தி தெரிவிக்கப்படும்.

நிர்வாகசபையார், நாகபட்டணம்.


Mr. N. E வெங்கடேச சர்மா, எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸம்ஸ்கிருதஸ்வபோதினி. | 1 | 0 | 0 |
| ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி. | 4 | 0 | 0 |

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பாகவதம் காலிகோபயிண்டு | 2 | 0 | 0 |
| ராப்பர் | 1 | 8 | 0 |
| ,, இங்கிலீஷ் | 2 | 0 | 0 |
| 7, 8, 9 ஸ்கந்தங்களில் தமிழில் | 0 | 8 | 0 |

The Sri Janardana Printing Works, Limited, KUMBAKONAM.




## ஸ்ரீ ராமாநுஜ தயாபாத்ர தனியனின்

### பத்தாவது ஷட்ஷ்யப்தபூர்த்தி மஹோத்ஸவம்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த ஆசார்ய ச்ரேஷ்டர்களில் ப்ரதானரான ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனை விஷயமான இந்தனியன் அவதரித்த தினம் கலி. 4440வதான பஹுதான்ய-ஸு ஆவணி-மீ ஹஸ்த நக்ஷத்திரம் என்பது ஸகலரும் அறிந்த விஷயமே. அதனுடைய பத்தாவது ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்தை விசேஷித்துக் கொண்டாடவேண்டும் என்றும் அப்படிக் கொண்டாடவேண்டிய இடம் ஆசார்யனுடைய அவதாரஸ்தலமான திருத்தண்கா (ஹிமவனம்) என்றும் கொண்டு சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார சபையார் அதை 10 நாள் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்ததையும் அவர்கள் பிரசுரம்செய்த துண்டுப் பத்திரிகைகளிலிருந்து ஸகலரும் அறிந்திருப்பார்கள் பகவத்பாகவத ஆசார்யர்கள் அனுக்ரஹத்தினல் அந்த உத்ஸவம் மிகவும் நன்ருக நடைபெற்றது. நமது ஸம்ப்ரதாயத்தில் உள்ள ப்ரபல பண்டிதர்க்ரேஸர்களும், லௌகிக ப்ரமுகர்களும், த்ராவிட வேதாத்யாபகர்களும், ஸம்ஸ்க்ருத வேதபாராயணகாரர்களும்,மற்றும் பலரும் வந்திருந்தனர். சாற்றுமுறையன்று நடந்த வீதி உத்ஸவத்தில் முன் கோஷ்டிக்கும் பின் கோஷ்டிக்கும் சுமார் ஒரு பர்லாங்தூரம் ஸ்ரீ தேசிக பக்தர்களினல் குழுமப்பட்டிருந்தது.

இந்த மஹோத்ஸவம் நடைபெறும்படியான பாக்யம் பெற்ற இடம் திருத்தண்காவில் விளக்கொளி எம்பெருமான் ஸந்நிதிக்கு முன்பு ஸ்ரீ பரகாலஸ்வாமி ஆதரவின் கீழ் ஜடாப்ரம்மசாரியால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ஹயக்ரீவன் ஸ்ரீ தேசிகன் இவர்களுடைய ஸந்நிதியண்டையில். இந்த உத்ஸவத்தை இவ்வளவு [illegible]படியாகச் செய்த மஹாபுருஷன் சென்னை மாஜி ஹைகோர்ட்டு ஜட்ஜ், [illegible] அட்வகேட்டுமான ஸ்ரீ-[illegible] ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமிதான். இந்த மஹோத்ஸவத்தில் தேசிக ஸம்ப்ரதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் [illegible] ப்ரீதியை அக்காலத்தில் [illegible]வர்களே அநுபவிக்க முடியும்.

ஆவணி [illegible] தேதி [illegible]க்கிழமை மாலை 5-மணி ஸுமாருக்கு ஸ்ரீ தேசிக பக்தர்கள் அந்த மண்டபத்தில் கூடினர்கள். அங்கு அர்ச்சாரூபிகளாய் இருக்கும் ஸ்ரீஹயக்ரீவன் ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ [illegible]ஸ்ரீ ப்ரும்மதந்த்ரஸ்வதந்த்ரர் இவர்கள் திருமுன்பே ஸஹஸ்ரநாம பாராயணமும் ஸ்ரீ அபீதிஸ்தவமும், அநுஸந்தானமும் நடைபெற்றது. பிறகு விசேஷ ஆராதனமான பிறகு வைநதேயர்களையும், ப்ரும்மதந்திரஸ்வதந்திரரையும் தோளுக்கினியானில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ தேசிகஸ்தவத்தை அநுஸந்தித்து ஆசார்யஸார்வ பௌமனை இந்த உத்ஸவத்தை கண்டருளவேணும் என்று அவர்கள் ப்ரார்த்திப்பதாக சில ஸ்லோகங்களில் அனுஸந்திக்கப்பட்டன. பிறகு அவர்களுக்கு அருளப்பாடிட்டருளி, அப்படியே தாம் அப்புபகமம் செய்ததாக சில ஸ்லோகங்கள் அநுஸந்திக்கப்பட்டன. பிறகு ஸப்ததி ரத்னமாலிகை அநுஸந்திக்கப்பட்டது.

உத்ஸவம் பத்து நாட்களிலும் காலை மாலை இரண்டு வேளைகளிலும் [illegible] புமான்களுக்கும் விசேஷமான ததீயாராதனை நடந்தது. ஒரு வேளைக்கு சுமார் 700, 800 பேர்களுக்கு ததீயாராதனம் நடந்தது.

ப்ரதிதினம் காலையில் 7மணிக்கு ஸேவா காலமும் வேதபாராயணமும் உபக்ரமிக்கப்பட்டு 10-11மணிக்கு சாற்றுமுறை செய்யப்பட்டது. மாலை 3-மணிக்கு ப்ரபல பண்டிதர்களைக்கொண்டு உபந்யாசங்கள் நடத்தப்பட்டன. மாலையில் மறுபடியும் ஸேவா காலமும் வேதபாராயணமும் நடைபெற்று சாற்றுமுறை நடந்தது.

பத்து தினங்களிலும் தினம் தேசிக மங்களா சாஸனத்தோடு கோஷ்டியில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீஸ்துதி, வரதராஜ பஞ்சாசத், ரகுவீரகத்யம், த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்னாவளி முதலான எல்லா ஸ்தோத்ரங்களும் அனுஸந்திக்கப்பட்டன.

ஒவ்வொரு நாளும் பல ப்ரஸித்த பண்டிதர்களுடைய உபந்யாசமும் நடந்தது.

மைஸூர் ஸ்ரீ பரகாலஸ்வாமி மடத்திலிருந்து ஹயக்ரீவனுக்கு ஸ்வர்ண கவசமும் ஸ்ரீ தேசிகன் முதலியவர்களுக்கு பீதாம்பரமும் அனுப்பப்பட்டிருந்தது. ஸ்ரீ அஹோபில மடத்திலிருந்து இந்த உத்ஸவத்தை இவ்வளவு விமரிசையாய் நடத்துவித்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ அய்யங்காருக்கு ஆசி கூறும் ஒரு ஸ்ரீமுகமும் மரியாதைகளும் அனுப்பப்பட்டிருந்தன. அது சபையில் வாசிக்கப்பட்டது

சாற்றுமுறை தினத்தன்று ஸ்ரீ-உப-வே ஸ்ரீநிவாஸ அய்யங்காருக்கு 'ஸ்ரீ தேசிக ரத்னதீபம்' என்கிற பிருதும் உயர்ந்தபட்டும் ஸ்ரீ பரகாலமடத்தில் இருந்தும் ஸ்ரீ முக பூர்வமாய் அனுப்பப்பட்டிருந்தன. அவைகள் வாசிக்கப்பட்டுஅவரிடம் கொடுக்கப்பட்டன.

பிறகு ஸபையோரால் அங்கு எழுந்தருளி இருக்கும் வித்வான்களுக்குப் பிருது முதலியவைகள் அளிப்பதற்காக சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜ் கனம் கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரை அக்ராஸனம் வகிக்கும்படி ப்ரார்த்திக்கப்பட்டது.

"தேசிக தர்சந பாமை காந்தி" 1 ஸ்ரீ. உப. ஆராவமுதாசார், ஸ்ரீ ஹயக்கிரீவன் ஸந்நிதி.

"தேசிக தர்சந விஜயத்வஜ" 2 ஸ்ரீ.உப.வே. ஐயா கிருஷ்ண தாதாசார்யர் ஸ்வாமி. 3 சேட்லூர் வித்வான் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி. 4 புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, 5 திருக்கோட்டியூர் ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி. 6 ஆத்மகூர், தீக்ஷாசார்யர், மஹாராஜா காலேஜ், மைஸூர்.

"தேசிக தர்சந ஆசார்ய" 7 ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யம் வெங்கடாமாசார்யர், 8. ஸ்ரீ உப. காருகுறிச்சி கோபாலரங்காசார். 9 திருக்கோட்டியூர் ஸ்ரீராம தேசிகாசாரியர்.

"தேசிக தர்சந துரந்தர" 10 ஸ்ரீ உப. இளையவில்லி ஸ்ரீநிவாஸாசார்யர். 11 ஸ்ரீ உப சேட்டலூர் ஸ்ரீநிவாஸமூர்த்தி அய்யங்கார். 12 பாவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர். 13. பண்டிட் துரைசாமி அய்யங்கார். 14 தேவநாதாசார்யர் நாவல்பாக்கம். 15 திருமலை தாதாசார்யர். 16 ஸ்ரீ உப. உத்தமூர் வீரராகவாசார்யர், 17 நீலமேகாசார்யர், 18 வெங்கடாத்ரி அகரம் அநந்தாசார்யர். 19 அம்மணம்பாக்கம் நரசிம்மாசார்யர், 20 இளங்காடு ரங்காசார்யர், 21 ப லக்ஷ்மீ நரசிம்மாசார்யர், 22 தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்,

"தேசிக தர்சந ஆநந்த" 23 திருவேங்கடசார்யர், தேவனர்விளாகம்,

"தேசிக தர்சந உத்தாரக. 24 தி. ஈ. சடகோபாசார்யர் 25 ஸ்ரீ. உப டி. ராஜகோபாலசார்யர், 26 ஷை கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்கார். 27 ஷை ஆர். கேசவய்யங்கார். 28 எஸ். லக்ஷ்மீ நரஸிம்மாசார்யர். 29 அ. ஸ்ரீநிவாஸராகவாசார்யர். புதுக்கோட்டை,

பிருதுகள் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்ட ஒரு பத்திரத்துடனும் ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கரால் சமர்ப்பிக்கப்பட்ட மோதிரத்துடனும்,மற்றும் உசிதமான ஸம்மானத்துடனும் ஸமர்ப்பிக்கப்பட்டன.

ஸபாத்யக்ஷரான ஸ்ரீ உப. ஸ்ரீநிவாசய்யங்கார் இந்த உத்ஸவ விஷயமாய் ப்ரவிருத்தித்தது முதல் மேல் மேல் எல்லா ஸௌகர்யங்களும் தாம் எதிர்பாராத காரணமாய் பகவத் ஸங்கல்பத்தினல் ஏற்பட்டன வென்றும் நாம் எல்லோரும் கவனத்துடன் கூடினவர்களாய் நமது ஸம்ப்ரதாயத்தை மேல் மேல் வளரச் செய்யப்ரயத்தனம் செய்ய வேண்டும் என்றும் பகவான் நம்முடைய ப்ரயத்தனத்தை தலைக்கட்டி வைப்பான் என்பதில் ஒரு ஸந்தேகமும் இல்லையென்றும் தாம் அனுபவித்தபடியே மிகுந்தஉத்ஸாகத்துடன் ஒரு உபன்யாஸம் செய்தார். அக்ராசனதிபதியானகனம் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமிய்யங்கார் நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பரஸ்பர ஹிதைஷிகளாத் வர்திக்கவேண்டும் என்றும், இத்தால் மற்றவர்களை வெறுக்க வேண்டும் என்பது ஏற்படாது என்றும், யாராயினும் நம்முடைய மதத்தில் சேரவிரும்பினல் அவர்களை வரவேற்கவேண்டுமென்றும் சொன்னர்.

ஸ்ரீ-உப அநந்தாசார்யர் வந்தனோபசாரத்தைத் தெரிவித்தார். பிறகு உபய கோஷ்டி கைங்கர்யங்களில் அந்வயித்த ஸ்வாமிகளுக்கும், பத்து தினங்களிலும் ஆருயிரப்படி ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகள் முதலியவைகளைப் பாராயணம் செய்தவர்களுக்கும், ஸ்தோத்ரபாட பரிக்ஷையில் தேறினவர்களுக்கும் வேஷ்டி முதலிய ஸம்மானங்கள் செய்யப்பட்டன.

மாலை 6 மணிக்கு திருவீதி உத்ஸவம் உபக்ரமிக்கப்பட்டு, வெகு விமர்சையுடன் சின்ன காஞ்சீபுரம் தெருக்களை எல்லாம் அலங்கரித்தபிறகு மீண்டும் ஆஸ்தானம் எழுந்தருள இரவு 1மணி ஆயிற்று. பிறகு ததீயாராதனம் ஆனபிறகு சாற்றுமுறையும் கோஷ்டி விநியோகமும் நடந்தன. பேரருளாளனின் திருவருளால் ஸ்ரீ தேசிகனுடைய உத்ஸவம் விமரிசையாக நடந்தது. அ. ஸ்ரீ.

## ஹிந்துமதாபிமான ஸங்கம்.

### நாகபட்டிணம்.

நாகபட்டிணம் ஹிந்துமதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற (22-8-38) திங்கள் கிழமையன்று ஆரம்பிக்கப்பட்டு தில்லையம்பூர் பிரசங்காமிருத மஹாவித்வான் ஸ்ரீ உப. வே. ராஜகோபால அய்யங்கார் ஸ்வாமிகள் அவர்களால் கம்பராமாயணப் பிரவசனமானது நடைபெற்று சென்ற புதன்கிழமை யன்று ஸ்ரீ ராமசந்திரப்பட்டாபிஷேக கட்டமானது உபன்யசிக்கப்பட்டு பூர்த்தி அடைந்தது. அய்யங்கார் ஸ்வாமிகளவர்கள் கம்பராமாயணத்தை வெகு நன்ருக பயின்று அழகான வாக்விலாசத்துடனும் கம்பீரமான சாரீர சம்பத்துடனும் உபன்யாசம் செய்ததில் மிகுதியான பக்தகோடிகள் சிரவணம் செய்ததில் அந்தந்த இடங்களில் தர்மங்களை எடுத்து விளக்கிக்காட்டியதில் எல்லோருக்கும் பயன்படக்கூடியதாகவும் இருந்தது. கடைசியில் மஹா ஜனங்களால் உபன்யாசகருக்கு விசேஷ சம்மானங்கள் செய்யப்பட்டு வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு உபன்யாசங்கள் இனிது முடிவடைந்தன.

நாளது (16-9-38) வெள்ளிக்கிழமையன்று ஸங்கத்தின் 47-வது வருஷோத்சவமானது மாலை 7-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 18-9-38 ஞாயிற்றுக்கிழமை இரவு முடிபெறும். திருநெல்வேலி வக்கீல் பிரம்மஸ்ரீ, R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் M.A., B.L., அவர்கள் அக்ராசனம் வகிப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பல வித்வான்களால் விசேஷ உபன்யாசங்கள் நடைபெறும்.

N. ஸாம்பசிவ அய்யர், B.A.B.L., காரியதரிசி.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்ய-ஹூ ஆவணி-மீ 30உ

## மத விஷயத்தில் ஓட்டு மூலம் நிர்ணயமா?

சென்னை ஸர்க்கார் வெளியிட்டுள்ள ஆலயப்பிரவேச மசோதாவின் பூர்வ பீடிகையைப்பற்றிச் சென்ற வாரம் சிறிது விமர்சித்தோம். இப்போது, அந்த மசோதாவில், உலகம் தோன்றிய நாள்முதல் எந்த தேசத்திலும், எந்த ராஜ நீதியிலும் கண்டும், கேட்டுமிராத ஓர் அநீதியிருப்பதை விளக்க விரும்புகிறோம். மதஸம்பந்தமான ஒரு பிரச்னையை முடிவு செய்வதென்றால், மதத்தலைவர்கள், மதப்படிப்புள்ளவர்களின் அபிப்பிராயம் கேட்கப்படுவது வழக்கமேயல்லது, ஆள் கணக்கெடுத்து வோட்டு மூலம் அதை நிர்ணயிப்பது வழக்கமில்லை. ஆனால் இந்த ஆலயப் பிரவேசமசோதாவில் இந்தப் புதுமையான நீதி புகுத்தப்பட்டிருப்பது காங்கிரஸ் ராஜ்யத்தில் தான் காணக்கூடியதாயிருக்கிறது.

தீண்டாதாரை ஆலயங்களில் அநுமதிக்கலாமா என்பதற்கு அந்தக் கோவிலைச்சுற்றியுள்ள ஜனங்களின் மெஜாரிடிவோட் கிடைத்துவிட்டால் போதுமென்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆலயப்பிரவேசம் வேண்டுமா, வேண்டாமா என்ற பொறுப்பை பொது ஜனங்களிடம் விட்டு விட்டதாயும், தங்கள்மீது அந்தபாரம் சுமாரதென்றும்மந்திரிகள்நினைத்திருக்கலாம். இதனால் தாங்கள்நேர்மையாகவும், பக்ஷபாதமின்றியும் நடந்து கொண்டு விட்டதாயும் அவர்கள் நினைக்கலாம். உண்மையில் இதற்கிடமில்லை. மத விஷயத்தில், ஓர் முக்யமான, அடிப்படையான தத்வத்தில் இவர்கள் அச்சமின்றி கை வைத்திருக்கும் குற்றத்தை ஒருவரும் மறைக்கமுடியாது. ஆலயப்பிரவேச விஷயமானது மத ஸம்பந்தமான விஷயமானதால், அதனால் ஏற்படக்கூடிய பலாபலன்களை மத க்ரந்தங்களைக்கொண்டு மதாசார்யர்கள் முடிவு செய்யக்கூடியதே யல்லது ஆள்கூட்டமல்ல. தீண்டாதார்கள் உள்ளே நுழைவதால் ஆலயத்தின் சுத்தி எப்படி பாதிக்கப்படுகிறது, தெய்வத்தின்ஸான்னித்யத்திற்கு என்ன்பங்கமுண்டாகுமென்பவைகளை ஸாதாரண ஜனங்கள் எப்படி அறிந்திருப்பார்கள்? ஒரு ரவின்யூ டிவிஷனில் வஸிக்கும் வோட்டர்களில் எவ்வளவு பேர்கள் இத்தகைய மத விஷயத்தை முடிவு செய்ய அர்ஹதையுள்ளவர்களாகயிருப்பார்கள்? சாஸ்திர தத்வத்தை அறியாத வோட்டர்கள் மெஜாரிடியாக அபிப்பிராயம் கொடுத்துவிட்டால் உடனே மத விஷயத்தில் ஒரு மாறுதலைச் செய்து விடலாமா? காந்திஜி, ஸத்யம், அஹிம்ஸை போன்ற தர்மங்களை வற்புறுத்தி வருகிறாரல்லவா? காலப்போக்கை அநுஸரித்து ஸத்யம் பேசுவதைச் சிறிது மாற்ற வேண்டுமென்று பொது ஜனங்களிடம் வோட் கேட்கலாமா? அதற்கு மெஜாரிடி கிடைத்தால் பொது ஜன அபிப்பிராயப்படி, இனி ஸத்யம் பேசவேண்டியது அவச்யமில்லையென்று காந்திஜி தீர்மானிப்பாரா? இந்த மாதிரி மதக் கட்டளைகளைப்பற்றி வோட் எடுப்பதும், அதன்படி நடப்பதும் ஏற்பட்டு விட்டால் உலக வியவஸ்தை ஒரு நிமிஷமும் நிலைத்திருக்க முடியாது. மத ஸம்பந்த விஷயத்தில் ஒரே ஒருவர் ஆக்ஷேபித்தால் கூட அவருடைய உரிமை காப்பாற்றப்படவேண்டியதே ராஜதர்மமாயிருக்கிறது.

ஜனநாயக ஆட்சியில்கூட அநேக விஷயங்கள் வோட்டுக்குவிட அர்ஹதையில்லாதவைகளாக ஒதுக்கப்பட்டிருப்பதை ராஜீய விஷயத்தில்கூடக் காண்கிறோம். அதுபோல் வோட்மூலம் நிர்ணயிக்கக்கூடாத விஷயங்களில் மத விஷயமும் முக்யமானதென்பது எல்லா தேசத்திலுமிருக்கும் வழக்கமாயுள்ளது. ஆலயப்பிரவேசத்திற்கு மெஜாரிடி கிடைத்துவிட்டால், அதைத் தடுக்கும் சாஸ்திரங்களின் கதியென்ன? அவை தானாகவே மாறிவிடுமா, அல்லது பொதுஜன அபிப்பிராயப்படி அந்த சாஸ்திரங்களையே திருத்திவிடவேண்டுமென்று நமது மந்திரிகள் நினைக்கிறார்களா?

சாஸ்திரத்தினிடம் போகாமல் கேவலம் யுக்தியைக்கொண்டு மட்டும் இவ்விஷயத்தில் வோட் எடுத்து கார்யம் செய்வதும் விபரீதத்தையே விளைக்கும். எல்லா மனிதர்களும் போகும்கோவிலில் ஏன் ஒருபிரிவினர்மட்டும் தடுக்கப்படவேண்டுமென்ற யுக்தியைமட்டும் அடிப்படையாகக்கொண்டு வோட்எடுத்தால் மெஜாரிடி கிடைத்துவிடலாம். அப்படியானால் கவர்னர்,மந்திரிகள், ஹைகோர்ட் ஜட்ஜ்கள் இவர்களுடைய ஜாகைகளிலும், கார்யாலயங்களிலும் யார்வேண்டுமானாலும் நுழையலாமென்று ஏற்படும். இதற்கு வோட் எடுத்தால் பூர்ண மெஜாரிடி கிடைப்பது நிச்சயமே. ஜனநாயக தத்வப்படியும் இது நியாயமாகலாமே. இதற்கு ஓர் மசோதா கொண்டுவந்து காரணமும், ஹேஷ்யமும் கற்பித்து எழுதுவதும் சிரமமில்லையே. இந்தமாதிரி அவ்யவஸ்தைக்கு இடம்கொடுத்தால் ராஜ்யம் நிலைப்பதெப்படி?

இனி ஓட் மூலம் ஆலயப்பிரவேசத்திற்கு மெஜாரிடி கிடைப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது மைனாரிடியாயுள்ள மதாபிமானிகள் என்ன செய்வது? நீண்டகாலமாயுள்ள தங்கள் உரிமையை இழந்து அவர்கள் கோவிலுக்குப் போவதை நிறுத்திவிடலாமா? மெஜாரிடியார் கோவிலைப்பிடித்துக் கொள்ள உரிமையுண்டா? இதில் சட்டரீதியான நியாயம் என்ன? இதை யோஜித்தால் மெஜாரிடியார் ஆலயப்பிரவேசம் வேண்டுமென்றாலும்கூட அவர்கள் கோவில்களை ஆக்ரமித்துக்கொள்ளபாத்யமுள்ளவர்களல்ல. கோவில்களையும், அதன் ஸொத்துக்களையும் ஏற்படுத்தியவர்களின் ஆதி உத்தேசத்திற்கு மாறாக எவ்விதச் சட்டம் செய்தாலும் அது செல்லக்கூடியதல்ல. இந்தியாவில் உள்ள ஆயிரக்கணக்கான கோவில்களில் இன்றுவரை தீண்டாதார் நுழையும் வழக்கமில்லை. ஆகையால் இது கோவிலையும் ஸொத்துக்களையும் ஸ்தாபித்தவர்களின் ஆதி உத்தேசமென்று நன்கு விளங்குகிறது. அந்த உத்தேசத்திற்கு மாறாக மெஜாரிடி ஏற்பட்டாலும் மெஜாரிடியார் கோவிலை வசப்படுத்திக் கொள்ள பாத்யமற்றவர்களே.

ஜனநாயகத்திற்குப் பெயர்போன பிரிடிஷ் ராஜ்யத்திலேயே இந்த தத்வம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. லார்டு ஸபையில் ஒரு சர்ச் விஷயமாக விவாதம் ஏற்பட்டபோது, புதுக் கொள்கைக்கார்ரர்கள் சிலர், தாங்கள் மெஜாரிடியாரென்ற சலுகைமீது, சர்ச்சை ஆக்ரமித்துக்கொள்ள முயன்றார்கள். ஆனால் இவர்கள் ஆதியில் அந்த தர்ம ஸ்தாபனம் செய்தவர்களின் கொள்கைக்கு மாறான அபிப்பிராயமுள்ளவர்களாயிருந்ததால் அந்த சர்ச்சுமீது இவர்களுக்கு பாத்யமில்லையென்றும், மைனாரிடியார் ஆதி உத்தேசத்தை அநுஸரிப்பவர்களாயிருப்பதால் அவர்கள் வசமே அந்த சர்ச்சு இருக்கவேண்டுமென்றும் லார்டு ஸபை தீர்மானித்தது. லார்டு சான்ஸலரின் தீர்ப்பும் இப்படியே ஏற்பட்டிருக்கிறது. பிரிடிஷ் நீதி நிபுணர்களான லார்டுடேவி போன்றவர்களும் இந்த நியாயத்தை ஸ்தாபித்துள்ளார்கள். ஆதலால் ஆலயப்பிரவேசத்திற்கு மெஜாரிடி கிடைத்தாலும் மைனாரிடியாரைப் பாதிக்கும்படிச்சட்டம் செய்ய எந்த சட்டஸபைக்கும் பாத்யமிருப்பதாகத்தெரியவில்லை மேலும்வோட்டு எடுக்கும் காலத்தில் ஏற்படக்கூடிய தப்புகள், கோணல்கள், வஞ்சனைகள் ஆகியவைகளைப்பற்றி முன் குருவாயூர் வாக்கெடுப்பதில் நடந்தவைகளை உலகமறிந்ததே. ஆதலால் பொதுஜன அபிப்பிராயப்படி நடப்பதாக மந்திரிகள் காட்டிக்கொள்ள விரும்புவது விவேகிகள் ஏற்கக்கூடியதல்ல.

## குறிப்புகள்.

### காந்திஜியின் பக்ஷபாதம்?

சென்னையில் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாசாரியர் ஹிந்தி எதிர்ப்பாளர்மீது கிரிமினல் திருத்தச் சட்டத்தை பிரயோகித்து தண்டிக்கிறார். திருவாங்கூரில் ஸர். ஸி. பி. இதே மாதிரியான அவஸரச்சட்டத்தை இயற்றி, பலாத்காரத்திலிறங்கியுள்ள காங்கிரஸ்காரரைத் தண்டிக்கிறார். இப்படியிருக்கையில் ஸ்ரீமான் காந்தி, ஸி. ஆர். செய்கையை ஆதரித்தும், ஸி. பி. செய்கையைக் கண்டித்தும் பேச முன் வந்திருப்பதில் நியாயமிருப்பதாகத் தெரியவில்லை.

சென்னையில் நடக்கும் ஹிந்தி எதிர்ப்பு தாராக்ஹத்தைக் கண்டித்தும், இதில் பிரதம மந்திரி செய்துள்ள கார்யங்களை ஆதரித்தும் காந்திஜி நீண்ட அறிக்கையொன்றை பிரசுரித்திருக்கிறார். அதில் ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரின் குணங்களை புகழ்ந்துவிட்டு, அவர் ஹிந்தி எதிர்ப்புக்காரர்மீது எடுத்துக் கொண்டுள்ள அடக்குமுறையை காந்திஜி ஆதரிப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஹிந்தி எதிர்ப்புக்காரர்கள் விகாரமான பலாத்காரத்தில் இறங்கிவிட்டதாயும், அவர்களை அடக்காமல் அப்படியே விட்டுவிட்டால் ராஜீய நிர்வாஹம் ஸ்தம்பித்துவிடுமென்றும் காந்திஜி வாதிக்கிறார். இது முற்றிலும் உண்மையாயிருக்கலாம். ஹிந்தி எதிர்ப்புக்காரர் அநுஸரிக்கும் தீயவழியை ஒருவரும் அங்கீகரிக்க மாட்டார்கள். அக்கக்ஷித் தலைவரான பெரியார் ராஜாவே அந்த முறையை கண்டிக்கிறார். ஆதலால் பிரதம மந்திரி இவ்விஷயத்தில் அநுஸரிக்கும் கொள்கை அவச்யமாயிருக்கலாம்.

ஆனால் இதே நியாயம் திருவாங்கூர் விஷயத்தில் காந்திஜிக்குத் தோன்றாததுதான் ஆச்சர்யமாயிருக்கிறது. அங்கு காங்கிரஸ்காரர்கள் பஹிரங்கமான பலாத்காரத்தில் இறங்கியிருப்பது ப்ரத்யக்ஷமானது. அவ்வூர் காங்கிரஸ் தலைவர்களே இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். திவானும் தக்க ஆதாரத்துடன் இதை ருஜு செய்திருக்கிறார். பஸ்



வண்டிகளில் போகும் பிரயாணிகளைத் துன்புறுத்தியும், மோட்டார் வண்டிகளைக் கொளுத்தியும், போலீஸ் அதிகாரிகள்மீது கல்லெறிந்தும், திவானை ஆபாஸமாகத் திட்டியும் காங்கிரஸ்காரர்கள் பலாத்காரம் செய்து வருவது உலகமறிந்த விஷயமல்லவா? இந்த துஷ்டச் செய்கையை அடக்காமலிருப்பது நியாயமா? சென்னையில் அடங்காத நிலைமை ஏற்பட்டு விடுமென்று அச்சமுறும் காந்திஜி, திருவாங்கூரில் அந்த நிலைமை ஏற்படாதென்று நினைக்கக் காரணமென்ன? அரசனும், அமைச்சனும், காங்கிரஸ்காரர்களின் பலாத்காரத்தை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது நியாயமென்று காந்திஜி கருதுகிறாரா? எப்படியும் சென்னை நிலைமைக்கும், திருவாங்கூர் நிலைமைக்கும் வித்யாஸமில்லை. உண்மையைப் பார்த்தால் சென்னையைவிட திருவாங்கூர் நிலைமையே மோசமானது. இப்படியிருக்க அங்கு மட்டும் திவான் அமைதியை நிலைநிறுத்தக் கையாளும் முறையை காந்திஜி கண்டிப்பது நேர்மையாயில்லை. காங்கிரஸ்காரர் கிளர்ச்சி என்பதற்காக திருவாங்கூர் பலாத்காரத்தை காந்தி ஆதரிக்கிறாரென்று நினைக்க இடம் கொடுக்கலாகாது.

### விவாஹமானவர்களுக்கே உத்யோகம்!

இதாலி மந்திரி ஸபையார் ஸமீபத்தில் பிறப்பித்துள்ள ஓர் உத்திரவின் விவரம் இந்தியப் பத்திரிகைகளில் வெளி வந்துள்ளது. ஒரு ஸமயம் மேற்றிசைகளில் தலைவிரித்தாடிய கர்ப்பத்தடைக் கிளர்ச்சியில் இதாலிய யுவதிகள் அதிகம் பங்கு எடுத்துக்கொண்டார்கள். விவாகத்தை வெறுத்தும், புருஷ ஸம்ஸ்கர்த்தைக் கைவிட்டும், துர்மார்க்க வழியால் பெற்ற கர்ப்பத்தை அழித்தும் வந்தார்கள். இதனால் அங்கு பல தீங்குகள் நேர்ந்தன. காலக்கிரமத்தில் அங்கு ஜனஸங்கியையானது பயங்கரமான ரீதியில் குறைய ஆரம்பித்துவிட்டது. இதிலிருந்து ராஜதந்திரிகள் பயந்தனர். இதாலிய ஜன ஸங்கியைக் குறைவு காரணமாக, அந்நியர்படையெடுப்பை ஸமாளிக்க முடியாத நிலைமை ஏற்படுமென்பதை ராஜதந்திரிகள் திட்டமாக அறிந்தார்கள். அதன்பின், கர்ப்பத் தடைக் கொள்கையைக் கைவிட்டு, பிரஜாவிருத்திக்கு வேண்டிய கிளர்ச்சியில் இறங்கவேண்டியதாயிற்று.

ஆயினும் நீண்டகாலமாக இருந்து வந்த அப்யாஸத்தை லகுவில் நிவர்த்திக்க முடியுமா? அதன் மேல் ஸர்க்கார் பிரஜாவிருத்திக்காகவென்று கிராண்டு கொடுத்து ஜனங்களைத் தூண்ட முற்பட்டார்கள். இந்த வேலையை ஸீனர் முஸோலினி வெகு தீவ்ரமாக நடத்தி வருகிறார். விவாஹம் செய்துகொள்ள முன் வரும், ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் ஸர்க்கார் பண உதவி செய்து வருகிறார்கள்.

இப்போது அங்கு ஸர்க்கார் உத்யோகங்களும் பிரமோஷன்களும் விவாஹமானவர்களுக்கே கொடுக்கப்படுமென்று ஓர் உத்திரவுபோடப்பட்டிருக்கிறதாம். இதுபிரஜாவிருத்தியின் கொள்கையின்கீழ் செய்யப்பட்ட உத்திரவாம். தப்பு வழியில் போய் முட்டிக்கொண்டு மீண்டும்நல்லவழிக்குதிரும்பியுள்ள இதாலியானது, கர்ப்பத்தடையில் முனைந்துள்ள இந்தியச்சீர்திருத்தக்காரர்களுக்கு நல்ல புத்தி கற்பிக்குமென்று எதிர்பார்ப்போம்.

## ஸ்ரீ ராமானுஜீயர்கள் என்ன செய்கிறார்கள்?

ஸ்ரீ ராமானுஜரைப்பற்றி ஸினிமாப்படம் எடுக்கப்படுவதையும், அதில் ஆசாரத் திருத்தக்காரர்கள் செய்ய முற்பட்டுள்ள விஷமங்களையும்பற்றி ஏற்கனவே விரிவாக நாம் இப்பத்திரிகையில் எச்சரித்துள்ளோம். ஆயினும் இவ்விஷயமாக ராமானுஜ ஸம்பிரதாயஸ்தர்கள் எவ்வித சிரத்தையும் எடுத்துக் கொண்டதாகக் காணவில்லை. இப்போது ஸ்ரீ ராமானுஜ சரித்திரத்தைப்பற்றிய படம் ஸினிமாக்களில் காட்ட ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தென்னிந்தியாவிலுள்ள அநேக பிரதான நகரங்களில் சுவர்களில் இந்த விளம்பரம் வெகு அடம்பரமாகக் காணப்படுகிறது. "தீண்டாமையை ஒழித்த பெரியார்" "ஜாதிபேதத்தைத் தொலைத்த ஆசாரியார்" இத்யாதிகளான சொற்களால் அந்த விளம்பரம் ஜ்வலிக்கிறது. இதைப்பார்த்து ஸஜ்ஜனங்களின் உள்ளம் பதைக்கிறது.

இதைக்கொண்டே இப்படத்தின் போக்கு எத்தகையதென்பது விளங்கும். தீவ்ர ஆசார திருத்தக்காரர்களும், தீண்டாமையை ஒழிக்க முன்வந்துள்ள காங்கிரஸ்காரர்களுமே இந்தப் படத்தில் நடிகர்களாயிருக்கிறார்களாம்.

ஏற்கனவேயே ஸ்ரீ ராமானுஜர், வர்ணாச்ரம முறையைத் தகர்த்தவரென்றும், தீண்டாமையைத் தொலைத்தவரென்றும் துஷ்பிரசாரம் செய்துவந்தவர்கள் இப்போது இந்தப் படம் மூலமும் அந்த மஹாசாரியாரின் மீது அபாண்டப் பொய்களை ஜனங்களிடையில் பரப்ப முன்வந்திருக்கிறார்கள். இதன் மூலம் ஸ்ரீ ராமானுஜரும், அவரது ஸத்ஸம்பிரதாயமும் உலகில் நகைப்பிற்கு இடமாகிவிடுமென்பதில் ஸந்தேஹம் வேண்டியதில்லை.

வர்ணாச்ரம முறையை உயிர் நிலையாகக் கொண்ட ராமாநுஜ ஸம்பிரதாயத்திற்கு இதைவிட வேறு அவமானம் என்ன? கோடிக்கணக்கான ராமாநுஜீயர்களின் முன்னிலையில் அவரது உபதேசமும், ஸம்பிரதாயமும் ஆதாரமற்ற பொய் கதை மூலம் இழிவுபடுத்தப்படுவதை ராமானுஜீயர்கள் ஸஹிக்கப் போகிறார்களா?

ஸ்ரீ ராமாநுஜர் வர்ணாச்ரமமுறைகளை மீறினரென்பது அவருடைய கிரந்தங்களுக்கு விரோதமான கூற்றேயல்லவா?

ஸ்ரீராமாநுஜர் வர்ணாச்ரம முறைக்கு விரோதமான கார்யங்களைச் செய்தாரென்பது பொய்யானால் இந்த ஸினிமாப்படத்தை அந்த ஸம்பிரதாயஸ்தர்கள் கண்டிக்கவேண்டியதைத்தவிர வேறு கடமையில்லை. மஹம்மதியர், ஜைநர், பௌத்தர், கிறிஸ்தவர் முதலிய மதஸ்தர்கள் தங்கள் மதாசாரியரைப் பற்றியோ, மதத்தைப்பற்றியோ ஸினிமா படமெடுப்பதை எவ்வளவு சிரத்தையுடனும் கட்டுப்பாடுடனும் ஆக்ஷேபித்துக் கிளர்ச்சி செய்கிறார்களென்பதை ஸ்ரீ ராமானுஜ சிஷ்யர்கள் கவனிக்கவேண்டாமா?

காஞ்சியில் ஸமீபத்தில் வைஷ்ணவர்கள் பெரிய வைபவத்தை முன்னிட்டுக் கூடினார்கள். ஸேவாகாலமும், ததீயாராதனமும், ஸம்பாவனையும், பிருதுகளும் நன்றாக நடந்ததாக வர்ணிக்கப்படுகிறது.

ஆனால் நவீன ரீதியில் இந்த ஸம்பிரதாயத்திற்கும், ஆசாரியர்களுக்கும் ஏற்பட்டுள்ள அபவாதத்தைப்பற்றி இந்தக் கூட்டம் ஸ்மரித்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீ ராமானுஜரைப்பற்றிய அபவாதங்களை மறுத்து ஒருவாவது ஒருவார்த்தையாவது அங்கு பேசினதாகத் தெரியவில்லை. அப்படிச் செய்வது ஸ்ரீ தேசிகனுக்குத் திருவுள்ளமாயிராதா? அப்பெரிய கூட்டத்திலிருந்து ஓர் கண்டனம் வெளியிட்டிருந்தால் இந்த ஸினிமாப் படத்தின் உண்மையை ஜனங்கள் உணரநேரிடும்? வைஷ்ணவப் ஸமூஹப் பெரியோர்கள் இவ் விஷயமாக என்ன செய்தார்கள்? மடாதிபதிகள் கவனித்தார்களா? ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த பிரசார சபையாரின் கார்யமென்ன?

இப்போதாவது இவ்விஷயத்தில் இந்த ஸமூஹம் கவனம் செலுத்துமா? இப் படத்தை தடைசெய்யுமா? அல்லது தக்க நடிகர்களைக்கொண்டு வர்ணாச்ரம முறை தவறாமல் உண்மையாக ஸ்ரீ ராமானுஜ சரித்திரத்தை நடித்து வேறு ஓர் படத்தை உண்டாக்குமா? ஸினிமா படங்களில் ஆசார்யர்களை ஸம்பந்தப்படுத்துவதை நாம் வெறுக்கிறோமாயினும் இப்போதுள்ள நிலைமையில் கடைசி யோசனையே ஸுலபமானது. இதற்கு உடனே வழி செய்யப்படுமென்று நம்புகிறோம்.

ஒருநிருபர்.

### ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

எல்லாவிதமான அச்சு, பைண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் சீக்கிரமாகவும் நயமான சார்ஜிலும் செய்து கொடுக்கப்படும்.

தமிழ், இங்கிலீஷ், நாகர, கிரந்த, எல்லா அக்ஷரங்களிலும் புஸ்தகங்கள் அச்சுப் போடுவதில் விசேஷமாய்ப் பலராலும் ஆதரிக்கப்பெற்றது. வேண்டிய விவரங்களைத் தெரிவிக்க ஸித்தமாய் இருக்கிறோம்.

மானேஜர்.

### 12-9-38-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை | 4—0—0 |
| டை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | 3—2—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை | 9—2—0 |
| டை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை | 7—6—0 |
| தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை | 4—8—0 |

தாசில்தார்.

| R. S. சர்மா பிரசுரங்கள் | Rs. | A. | P |
|---|---|---|---|
| ஆதித்யஹ்ருதயம் | 0 | 2 | 6 |
| கும்பேச்வா சாரங்கபாணி ஸ்தோத்ரம் | 0 | 1 | 0 |
| நவக்ரஹஸ்தோத்ரம் | 0 | 4 | 0 |
| ஸாவித்ரீ ஸ்தோத்ரம் | 0 | 3 | 0 |
| ஹரிசந்த்ரோபாக்யானம் | 1 | 4 | 0 |
| ஸ்கந்த ஸ்தோத்ரம் | 0 | 2 | 0 |

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.
குண்டூர்.
Guntur.

## வாரக்குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.

பாரத சக்தி வருக! சென்னையில் வ்ராத்தி கோர் பத்திரிகைப் புதிது புதிதாக தோன்றுகிறது. ஆனால்தார்மிக கொள்கை நிறைந்தது இரண்டு வாரமாக வெளி வரும் பாரத சக்தி ஒன்றே! நமது ஆர்ய தர்மத்திற்கு அரிய கட்டுரை அளித்த ஸ்ரீமான் எ. நாராயண சாமிஅய்யரே இதனாசிரியர். இத்தகைய பத்திரிகை பெருக வேண்டும்.

ஒழுங்காயிருந்தால் நலமே!ஸ்ரீ ராமாநுஜர் படம் வந்து விட்டது! ஸ்ரீ சங்கரர்படம் அறையில் இருக்கிறது! இதை தர்மப்ரசாரமென்று அர்த்த பார் கூறுவது ஸஹஜம்! ஆனால் பண்டிதர்களைக் கொண்டு அனுவளவும் பெரியார் சரித்திரத்தில் குறை இல்லாமல் சுத்தமாக நடிக்கப்படின் ஒரு சிலரேனும் ஏற்பர்! தன் வருமானத்திற்காக அஸஹ்யமான அம்சங்களும் விபரீதமானதும் சேர்க்கப்படுகிறது.

மதாபிமானிகள் மறுப்பர்! ஆட்டத்தையே வெறுப்பாருண்டு! அதிலும் ஸதாசார்ய வேஷத்தை அநர்ஹர், தரிப்பது மிக மிக கண்டிக்கத்தக்கதே! இன்னும் ஓர்மதத்தினர் படக்காக்ஷிக்கிடமளிக்காமலிருப்பது கவனிக்கத்தக்கது!

மாமனார் வீட்டில் ஸத்யாக்ரஹம்! ஆக்ராவில் ஓர் உத்யோகஸ்தர் தன் மனைவியை அனுப்பாவிடில் பட்டினி கிடந் திறப்பதாக சண்டித்தனம் செய்கிறார்!! ஸ்ரீகாந்திக்குஜே!

விசித்ர பிறவி! ஹர்தாய் ஜில்லாவில் ஓர் கர்ப்பிணி கனவு கண்டபடி 3 குழந்தைகளைப் பெற்றாள்! அதில்நடுக்குழந்தை விநாயகரைப் போல் துதிக்கையுடனிருக்கிறதாம்.

ராஜீய-வானம் கருக்கிறது!! ஆங்காங்கு புகைந்து கொண்டிருந்தது! விரைவில் மேனாட்டில் யுத்தாக்நி பற்றி எரியும் போலிருக்கிறது!! ஆங்காங்கு ரஹஸ்யமாக செய்திகள் வெளி வருகின்றன! அதற்கு முந்தியே சில சாமான்கள் விலை ஏறுகின்றன!

மற்றோர் கண்டனம்! ஞாயான்று சாந்தாச்ரமத்தில் ஓர் கூட்டம் மலையாள ஆலயப்ரவேச மசோதாவை எதிர்த்து சென்னையில் கூடிற்று. பல கையெழுத்துக்கள் வாங்கி மந்திரிக்கனுப்பப்பட்டது!!

எல்லாம் திரும்பும்!! குடந்தை நகரஸபை தெருக்களுக்கு பழயபடி கிருஸன் விளக்கு போட தீர்மானித்தது! விரைவில் எல்லா ஸபைகளும் எல்லாவற்றிற்குமே பழய கொள்கைக்குத்திரும்பும்!! என்பது நிச்சயம்.

## சென்னை.

ஸத்ஸங்கம்! தியலாஜிகல் கலாசாலையில் உபாத்யாயர்களால் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் இச்சங்கத்தில் நேற்றுசனிக்கிழமை காலை ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் உபநிஷத்தும் புராணாகமங்களும் என்ற விஷயத்தை ஒன்றரை மணி மிகத் தெளிவாக உபன்யஸித்தார்கள். வேதத்தின் கருத்தே புராணாகமங்களாக மந்தாதிகாரிகள் பொருட்டுத்தோன்றின என யுக்தியுக்தமாகவும் ஸப்ரமாணமாகவும் லௌகிகாதிகளுடனும் எடுத்துக்காட்டியபோது அநேகர் ஆனந்தமக கரகோஷத்துடனும் கேட்டாநந்தித்து உபன்யாஸகரைக்கொண்டாடினர்.

பண்டிதர் காலமானார்! பிரும்மஸ்ரீ பலாக்கூர் ராமனுஜ சாஸ்திரிகள் சென்ற வாரம் 53 வயதில் மைலாப்பூரில் இறந்தார். இப்பெரியார்சிறந்த கவி! அபூர்வமானகிரந்தங்களை சேகரித்து அடையார் புத்தகசாலைக்களித்தவர் சென்னையில் நடந்த பண்டித ஸபைக்குப்பேருபகாரம் செய்தவர்! பல அரிய நூல்களை தமிழில் எழுதி வெளியிட்டவர்!! ஜ்யோதிஷ பத்ரிகை நடத்தி வந்தார்! ஆசார்ய பக்தி நிறைந்தவர்! அவரது ஸுக்ருதத்தினால் புண்யலோகத்தை அடைந்தாரெனினும் அருமை தந்தையை அவர் புத்ரருடன் அரிய விஷய தாதாவை இழந்த ஆர்ய தர்மப் பத்திரிகை நேயருடன் அவர் வியோகத்திற்காக நாமும் வருந்துகிறோம்.

## பாஞ்சராத்ர ஆகம தீக்ஷை.

### குடந்தையில் நடந்தது.

பாஞ்சராத்ர ஆகம விதிப்படி ஏற்பட்டுள்ள விஷ்ணு தேவாலயங்களில் பூஜை செய்கிறவர்கள் ஆகம தீக்ஷை பெற்றவர்களாக இருக்கவேண்டியது சாஸ்திர விதியாகும். இப்போது அத்தகைய தீக்ஷை பெற்றவர்கள் கிடைப்பது சிரமமாயிருக்கிறது. இந்தக் குறையை நீக்கவேண்டி கும்பகோணம் ஸௌராஷ்ட்ர தர்ம பரிபாலனக் கமிட்டி ஆதீனத்திலுள்ள ஸ்ரீ வேத நாராயணப் பெருமாள் ஸன்னிதியில் மேற்படிக்கோவில் டிரஸ்டிகளால், காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜ ஸ்வாமிகோவில் பரம்பரை அர்ச்சகரான ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸ பட்டர்ஸ்வாமியைக் கொண்டு ஆவணி-மீ 20உ முதல் மூன்று தினங்களில், வேதாத்யயன ஸம்பந்நர்களான அநேக வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு சக்ராப்ஜமண்டலதீக்ஷை வெகு விமர்சையாக நடத்திவைக்கப்பட்டது. இந்நகரத்திலுள்ள ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் போன்ற லௌகிக, வைதிக, வைஷ்ணவப் பெரியோர்கள் யாவரும் இந்த தீக்ஷையை நடத்தத் தூண்டியும், உத்ஸாஹப்படுத்தியும, உபகரித்தும் ஆதரித்தனர். ஸ்ரீ. உ. வே பெருகவாழ்ந்தான் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி தலைமையில் நடந்த ஸபையில் தீக்ஷை பெற்றவர்களையும், தீக்ஷைசெய்துவைத்தவர்களையும் சிலாகித்து மஹாமஹோபாத்யாய ஸ்ரீகிருஷ்ணமாசாரியஸ்வாமிகள், வாஜபேயம் ஸ்ரீநிவாஸதாதாசாரியர் முதலியவர்கள் பேசினர். தீக்ஷைபெற்றவர்களுக்கு யோக்யதா பத்திரமும் அச்சிட்டு ஸபையில் அளிக்கப்பட்டது.

கமிட்டி கார்யதர்சி ஸ்ரீமான் ராமகிருஷ்ணய்யரும், டிரஸ்டி ஸ்ரீமான் ராஜகோபாலய்யரும் பேசுகையில், ஸமீபத்தில் தங்கள் கோவில்களில், தீக்ஷை பெற்ற ஸ்ரீவைஷ்ணவர்களைக்கொண்டு ஆராதனம் நடந்து வருவதற்கு இவ்வூரில் ஸகலப் பிரிவுகளிலுமுள்ள பிரபலஸ்தர்களிடமிருந்து பெருத்த ஆதரவு கிடைத்திருப்பதாயும், இனி இந்த ஏற்பாட்டை ஒரு போதும் மாற்றக்கூடாதென்று அவர்கள் வற்புறுத்துவதாயும், தாங்கள் ஒரு போதும்மாற்ற போவதில்லையென்றும் கூறி அனைவருக்கும் வந்தனோபசாரங்கள் கூறினார்கள்.

தீக்ஷை பெற்ற எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் தேவாலய பூஜையில் அதிகாரமுண்டென்றும், அப்படியே, காஞ்சீபுரம், திருவள்ளூர், முதலிய தேவாலயங்களில் நடைபெற்றுவருவதாயும் ஸ்ரீநிவாஸ பட்டர் ஸ்வாமி அபிப்பிராயம் எழுதிக்கொடுத்தார். இப்போதுதீக்ஷை பெற்றவர்களைக்கொண்டு அங்காங்கு அவச்யமுள்ளவிடங்களில் பூஜையை நன்கு நடத்திக்கொள்ள இனி ஸௌகர்யமுண்டு. தேவாலய அதிகாரிகள் இதைக்கவனிப்பார்களாக.

தீக்ஷை பெற்றவர்கள்:— சிருங்கட்டூர் வரதாசாரியர். ரெட்டியூர் வீராகவாசார்யர், வங்கிபுரம், விஜயராகவாசாரியர், பெருகவாழ்ந்தான் ஜகந்நாதாசாரியார், அழிசூர் கிருஷ்ணமாசாரியார், புரிசை வெங்கடாசாரியர், குமாண்டூர் ஸ்ரீநிவாஸாசாரியர், இல்லைஸ்தானம் ராமபத்ராசாரியர், நாஸிம்மதாதாசாரியர் கிடாம்பி ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்கள்.

ஒருநிருபர்.

## காலஞ்சென்ற ஸ்ரீநிவாஸாசாரியார்

### திருநகரில் அனுதாபக் கூட்டம்.—

பிரபல சனாதன ப்ரமுகரும் சென்னை மதஸ்தாபன போர்டி மாஜி கமிஷனரும் வேதாந்ததீபிகையின் மாஜி ஆசிரியருமான மதராஸ் அட்வொகேட் ஸ்ரீமான் உ. வே. என். ஸ்ரீநிவாஸாசாரியார் சமீபத்தில் மாணமானதைக் குறித்து வருந்தி அனுதாபம் தெரிவிக்கவேண்டி ஆழ்வார்திருநகரில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றதில் விஷமப்ரசாரங்களை எதிர்த்து அதிதீவிரமாக காலஞ்சென்ற ஸ்ரீமான் ஆசாரியார் போராடி உழைத்து வந்திருக்கிறாரெனவும் அன்னார் மாணத்தால் சனாதனிகளுக்கே பெருத்த நஷ்டமெனவும் கூறி பல முக்யஸ்தர்களாலும் மிக உருக்கமாய் உபந்யசிக்கப்பட்டன. ஜில்லா சனாதனதர்ம மஹா சபையின் நிர்வாஹ சபை மெம்பரான ஸ்ரீமான் அ. தே. ராமாநுஜய்யங்காரால் முடிவுரை கூறப்பட்டு கூட்டம் முடிவெய்தியது. தென்னாற்காடு (கடலூர்) முனிசிபல் சேர்மன் அட்வொகேட் ஸ்ரீமான் ராமாநுஜாசார்யார் (அவரது மாப்பிளை)க்கும் குடும்பத்தாருக்கும் இக்கூட்டத்தின் அனுதாபத்தீர்மான விபரத்தை அறிவிக்க திருநகரி சனாதனசபா செகரெட்ரிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதாயும் தெரிகிறது.

ந. வி. நி.

## ஆலயப்பிரவேச மசோதாவுக்கு பலமான எதிர்ப்பு.

### ஆழ்வார்திருநகரில் பொதுக்கூட்டம்.

[நமது விசேஷ நிருபர்.]

திருநெல்வேலி ஜில்லா சனாதன தர்ம மகா சபையின் நிர்வாகசபைமெம்பரான ஸ்ரீமான் அ. தே. ராமாநுஜய்யங்கார் தலைமையில் ஆழ்வார் திருநகரில் நடைபெற்ற பிரும்மாண்டமான பொதுக்கூட்டத்தில், சென்னை சர்க்கார் கொண்டுவரயிருக்கும் மலையாள ஆலயப்பிரவேசச் சட்டத்தைக்கண்டித்தும், சர்வாதிகார ஆட்சி நடைபெறுவதாய்ச் சொல்லப்படும் திருவாங்கூரிலேயே குழப்பமாயும் தகராறாகவுமிருக்கும் கோயில் பிரவேசச்சட்டநடவடிக்கை பிரிட்டிஷ் மலபாரில் மிகவும் மோசமான நிலையில் குழப்பத்தையே விளைவிக்க ஹேதுவாயிருக்குமென எச்சரிக்கை செய்வதாயும் இச்சட்டதை உபயோகமற்றதாகச்செய்ய வேண்டி தீவிரமாய் முன் வந்துள்ள மேன்மை தங்கிய கொல்லங்கோடு ராஜா அவர்களின் வீரத்தனத்தையும் தார்மிகப்பற்றுதலையும் விசேஷமாய் பாராட்டுவதாகவும் கூறி பலமுக்யஸ்தர்களாலும் சொற்பொழிவு உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. தலைவரின் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவெய்தியது. கண்டனத்தீர்மான விபரங்களை கனம் பிரதம மந்திரிக்கும் பத்திரிகைக்கும் அனுப்ப திருநகரி சனாதன தர்ம சபாச்செகாட்ரிக்கு அனுமதி கொடுக்கபட்டது.

## ஸ்ரீ மஹாபாரதச் சுருக்கம்

(ஆதிபர்வம்.)

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர் வர்களால் மூலத்திலுள்ளபடியேசுருக்கமாக எளியநடையில் எழுதப்பட்டது. பாரதக் கதைகளை இலகுவில் அறிய இன்றியமையாததென்று மேதாவிகளால் புகழப்பெற்றது.

விலை அணா 0 8 0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன்ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.



## மலையாளம் ஆலய பிரவேச மசோதா.

### காங்கிரஸ் மந்திரிகளிடம் மதாபிமானிகளுக்கு நம்பிக்கையில்லை.

(R. நடராஜன்)

சென்னை மாகாண சர்க்காரும் இந்திய மத்ய சர்க்காரும் அல்லது மாகாண சட்டசபைகளும் இந்தியா சட்டசபையும் எல்லா மதங்களுக்குமாவது அல்லது ஏதாகிலும் குறிப்பிட்ட ஒரு மதத்திற்காவது ஜவாப்தாரியான பிரதிநிதித்வமுறையில் அமைக்கப்படவில்லை. சர்க்காரும் சட்டசபைகளும் ராஜீயத் துறையில் அதிகார பலத்தை ஆதாரமாகப்பெற்று நிர்வாகம் நடத்திவரும் அரசாங்க சாதனக் கருவிகளாகக் கருதப்படலாமேயல்லாமல், மதவிஷயங்களில் மகா ஜனங்களின் சுதந்தர உணர்ச்சியைத் தழுவிய நெறி முறையை அஸ்திவாரமாகக்கொண்ட ஜனநாயக ஸ்தாபனங்களாக கருதப்பட முடியாது.

ஹிந்துமதம் என்ன என்பதை பரிசீலனம் செய்பவர்களாவது, ஹிந்து மதநூல்களை பயின்றவர்களில் ஏதாவது குறைந்த பக்ஷமான, அல்லது நிர்த்தாரணம் செய்யப்பட்ட யோக்யதாம்சத்தை பெற்றவர்களாவது, ஹிந்துமதத்தையும் மதானுஷ்டானங்களையும், பிரச்னையாகக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டாவது, அல்லது ஹிந்துமதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் என்ற முறையிலாவது சட்டசபைகளுக்கு பிரதிநிதிகள் அனுப்பப்படாததால், மத ப்ரதிநிதிகளாக அனுப்பப்படாத அங்கத்தினர்களடங்கிய சட்டசபைகள் மதவிஷயங்களில் சட்டம் செய்வதற்கு உரிமை கிடையாது. இங்கிலையில் அதிகார மேடையில் வீற்றிருப்பதன் காரணமாக சட்டமூலம் நிர்பந்தம் ஏற்படுவது பழுத்த பலாத்காரத்திற்கு சமானமாகும்.

காங்கிரஸ் ஸ்தாபனம் ஹிந்துக்களின் பிரதிநிதி ஸ்தாபனமல்ல. சட்டசபைகள் ஹிந்துக்களின் பிரதிநிதித்வநீதியில் அமைக்கப்படவில்லை. காங்கிரஸ் அங்கத்தினர் விதிகளில் காங்கிரஸ் அங்கத்தினர் யாவரும் அந்தந்த மதத்திற்கு சம்பந்தப்பட்ட குறைந்த பக்ஷமான மதானுஷ்டானங்களையாவது செய்துவரவேண்டுமென்றாவது, மத நூல்களில் குறிப்பிட்ட ஒரு யோக்யதையை அடையவேண்டுமென்றாவது விதி இல்லை இச்சந்தர்ப்பத்தில்மதப்பயிற்சி பெரும்பாலும் இல்லாதவர்களாயும், மத நூல்களில் நம்பிக்கையை கொள்கையாக அங்கீகரியாதவர்களாயும், எந்த சமயத்திலும் மத சம்பந்தமான ஒழுக்கங்களை தியாகம் செய்வதற்கு தயாராக இருப்பவர்களாயும், ஹிந்து மதத்திற்கு புறம்பான அன்னிய கல்வி நாகரீகம் பெற்றவர்களாயுமுள்ள மிகவும் குறைவான எண்ணிக்கையுள்ள ஹிந்துக்களை அங்கத்தினர்களாக கொண்ட காங்கிரஸ் ஸ்தாபனம், இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான ஹிந்துக்களுக்கு பிரதிநிதி ஸ்தாபனமாக ஆகமாட்டாது காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டு காங்கிரஸ் கட்சி அதிகாரத்திற்கு வந்தும்கூட பெருவாரியான ஹிந்துக்கள் காங்கிரஸில் சேராமல் காங்கிரஸிலிருந்து விலகியிருப்பதன் மூலம் ஹிந்துக்களில் பெரும்பாலோருக்கு காங்கிரஸில் நம்பிக்கையில்லையென்பது ஸ்பஷ்டம்.

ராஜீயத்துறையிலும் கூட ஹிந்துக்களின் க்ஷேமமான உரிமைகளுக்கு பாதகம் ஏற்படும் ரீதியில் காங்கிரஸின் போக்கு இருப்பதால், ஹிந்து மகாசபை ராஜ்யத்தில் ஹிந்துக்களின் பிறப்புரிமையை காப்பாற்றுவதற்காக காங்கிரஸுக்கு புறம்பான ஸ்தாபனமாக இருந்து வருகிறது.

மத விஷயங்களில் ஹிந்துக்களின் பிரதிநிதி ஸ்தாபனங்களான அகில இந்திய பாரத தர்ம மகாமண்டலம். அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம், 1937 டிஸம்பரில் சென்னையில் கூடிய அகில இந்திய ஹிந்து பிரதிநிதிகளின் பரிஷத்து இவைகள் காங்கிரஸுடன் இணைக்கப்பட்ட ஸ்தாபனங்களாக இல்லாமலிருப்பதாலும், காங்கிரஸின் கொள்கைகளை ஹிந்து மதவிரோதமானவைகளென்று கண்டிப்பதாலும், காங்கிரஸ் சபையோ, அலே இந்திய காங்கிரஸ் கமிட்டியோ, மாகாண கமிட்டிகளோ, காங்கிரஸ் மந்திரி சபைகளோ ஹிந்துமத பிரச்னைகளில் தங்கள் அபிப்ராயங்களை காங்கிரஸ் அங்கத்தினரல்லாதவர்களும், காங்கிரஸை பிரதிநிதி ஸ்தாபனமாக அங்கீகரியாதவர்களும், காங்கிரஸ் சபையில் நம்பிக்கையில்லாதவர்களுமான மகாஜனங்களின் மேல், சட்டரூபமாக நிர்பந்திப்பது குரூரமாகும். மந்திரி பதவிகளிலிருந்தும் காங்கிரஸ் தலைவர்கள் எந்த சொந்த கொள்கைகளையும் மகா ஜனங்களின் மேல் திணிக்காமல் பிரசாரமூலம் பரப்புவது தான் கண்யமான முறையாகும்

சுமார் 20 கோடிக்கு மேற்பட்ட இந்திய ஹிந்து ஜனத்தொகையில் சில லக்ஷங்களுக்கு உட்பட்டவர்களாகவே காங்கிரஸ் அங்கத்தினர்கள் இருந்துவருகிறார்கள். அதனால் காங்கிரஸ் மந்திரிசபைகள் மதவிரோதமான காங்கிரஸ் மந்திரிகளிடத்தில் நம்பிக்கையில்லாத ஹிந்து மகாஜனங்களிடையே சட்ட நிர்பந்தம் செய்யாமலிருப்பது அவர்கள் கடமையாகும்.

காங்கிரஸின் கொள்கைகளை அங்கீகரியாதவர்கள் எவ்வாறு காங்கிரஸின் காரியகமிட்டி நடவடிக்கைகளில் கலந்துகொள்ள அர்ஹதையற்றவர்களோ, அவ்வாறே ஹிந்து மதத்தின் ஆசார அனுஷ்டான நல் ஒழுக்க லக்ஷ்யங்களை அங்கீகரியாதவர்கள் அல்லது அவைகளில் நம்பிக்கையில்லாதவர்கள் ஹிந்துக்களின் சார்பாக மத பிரச்னைகளில் பிரவேசிக்க அதிகாரம் கிடையாது.

மேலும் எலெக்ஷன் காலங்களில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஆலயப் பிரவேசம் முதலான மத பிரச்சனைகளை வெளியிட்டு தேர்தலுக்கு நிற்கவில்லை என்பது தெளிவு. ஒருக்கால் ஹிந்துக்களின் பூர்ண ஆதரவு இருப்பதாக அவர்கள் தைரியமாக கருதினால் தங்கள் ஸ்தானங்களை காலிசெய்து மறு எலக்ஷனுக்கு நிற்பதே பெருந்தன்மையாகும். எதிர்பாராத பொருள் சிலவு ஏற்படுமென்று பயங்கவேண்டாம். உண்மையில் அவர்களுக்கு மகாஜனங்களின் பேராதரவு இருக்குமானால், மத விஷயங்களை பிரச்னையாக ஏற்படுத்தி அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் விசேஷ சிலவுகளுக்கு இடமிராதென்றே சொல்லவேண்டும். பெரும்பான்மை மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபை ஆட்சி செலுத்துவதால், சர்க்காரை மறு எலெக்ஷனுக்கு ஏற்பாடு செய்யும்படி கேட்கவும், இப்போதைய காங்கிரஸ் மந்திரிகளிடத்தில் ஜனங்களின் நம்பிக்கையை நன்றாக உறுதிப்படுத்தவும் இது சரியான சந்தர்ப்பம்.

ஜனநாயக தத்வத்தை பெரிதாக கருதும் காங்கிரஸ் சட்டசபை அங்கத்தினர்களும், மத விஷயங்களில் அபிப்ராயம் தெரிவிக்க இஷ்டப்படும் இதா சட்டசபை அங்கத்தினர்களும் உடனே ராஜிநாமாசெய்து, மத விஷயத்தில் ஜனங்களின் நம்பிக்கையை பெற்று, அவ்வாதரவுடன் சட்டசபைகளை பிடித்து, அந்தந்த மதத்தினர்களின் ஆதரவுபெற்ற சீர்திருத்தங்களை கொண்டுவர ஏற்பாடு செய்யும்படி சட்டசபை பிரதிநிதிகளை கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மறு எலக்ஷனுக்கு நிற்பதற்கு தைர்யமிருந்தால், எலக்ஷன் அறிக்கையில் ஹிந்துமதம் என்பது என்ன, ஹிந்துக்கள் யார் என்பதுபற்றி அவர்களது அபிப்ராயத்தை வெளிப்படுத்தவேண்டியது அவசியம்.

இந்த ஏற்பாட்டிற்கு காங்கிரஸ் மந்திரி சபைகளும், இதா சட்ட சபை அங்கத்தினர்களும் தயங்குவார்களானால், அத்தகைய அங்கத்தினர் கொண்ட சட்டசபைகளும், காங்கிரஸ் சபையும் எவ்வளவுதூரம் ஜனநாயக தத்வத்தை அநுஸரிக்கின்றன என்பதை தேச மகாஜனங்கள் நிர்த்தாரணம் செய்துகொள்ளலாம். அடுத்த எலக்ஷன்களில் இத்தகைய பிரதிநிதிகளும் ஹிந்து மதத்திற்கு துரோஹம் செய்யும் காங்கிரஸ் அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்படாமலிருக்க இது முதற்கொண்டே மகாஜனங்கள் கிளர்ச்சி செய்யவேண்டும்.

கடைசியாக, மத விஷயங்களில் அதிகாரம் கொடுக்கப்படாத அங்கத்தினர்களடங்கிய சட்டசபைகளால் நிறைவேற்றப்படும். சட்டங்களால் பாதிக்கப்படும் மகாஜனங்கள், பலாத்காரமான அநீதமான சட்டங்களை மீறி, ஜனங்களின் மத சுதந்திரத்தை நிலைநிறுத்திக் கொள்வதும் ஜனநாயக தத்வத்தை அனுஸரித்த புனிதமான காரியமாகும்.

## ஒரு விசித்திர விக்ஞாபனம்.

சில நாட்களாக "தேசிகன் தேன்மொழிகள்" என்ற தலையங்கத்தின் கீழ் சில வியாஸங்கள் ஆர்யதர்மத்தில் பிரசுரமாகி வருகின்றன. முதல் வியாஸத்தில் என் பெயர் காணப்பட்டிருக்கிறது. பிறகு அநேகமாய் என் பெயரை அச்சிடவில்லை. அவ்விதம் அச்சிட அவசியமும் தெரியவில்லை. இவ் வியாஸங்களை வாசித்து அநுமோதித்த ஒரு நண்பர் மற்றொரு வாசகரிடம் பேசிக்கொண்டிருக்கையில் "தேசிகன் தேன்மொழிகள்" என்ற வியாஸங்களைப் பார்த்தீர்களாவென்று கேட்டார். அதற்கு அவர் தலையங்கத்தை மாத்திரம் பார்த்தேனே தவிர உள் புகுந்து வாசிக்கவில்லையென்று சொன்னார். ஏன் என்று கேட்டதற்கு "அதற்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம். ஏதோ வைஷ்ணவ ஸம்பிரதாயமாக இருக்கும்" என்று சொல்லி விட்டார். "தேசிகன் என்றால் ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் என்று நினைத்துக்கொண்டீர் போலும், அவ்விதமில்லை; எழுதுவதும் ஸ்மார்த்தர் தான்; விஷயங்களும் எவ்வித ஸம்பிரதாயத்தார்களுக்கும் பொதுவாகவே இருக்கின்றன" என்றுரைக்க, "அப்படியானால் வாசித்துப்பார்க்கிறேன்" என்றார். இவ்வித ஸம்பாஷணையை நான் கேட்க நேர்ந்ததிலிருந்து மிகவும் வருத்தமேற்பட்டது. என்ன விஷயமென்றுகூட கவனிக்காமல் வெறும் பெயரிலேயே உதாஸீனம் செய்யும்படி தோன்றின மனோபாவத்திற்கு மிகவும் வருந்துகிறேன். ஸ்ரீமத் வேதாந்ததேசிகரின் ஸூக்திகளாகவே இருக்கட்டும், அதினால் ஸ்மார்த்தர்களினால் கிராஹ்யமில்லையென்று எப்படி ஆகிவிட்டது. அவர்களுடைய திவ்ய ஸூக்திகளுக்கு பரம சார்பவரான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரவர்களே வியாக்யானம் செய்திருக்கவுல்லையா? ஸம்பிரதாயம் வேறாகயிருந்தாலும் நம்மைவிட எவ்வளவோ மடங்கு பெரியவர்தானே. அவர்களுடைய ஸூக்திகளை உதாஸீனம் செய்ய என்ன நியாயம்? இவ்விதமான மனப்போக்குகளுக்கு நம் ஆர்யதர்மம் வாசகர்கள் இடங்கொடுக்காமல் இருக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

.கிருஷ்ணஸ்வாமி அய்யர்.
அட்வகேட் திருநெல்வேலி.

# கொக்கு பிடிக்கப் படும் பாடு.

(அத்வைதஸபாபண்டிதர் கல்லிடைக்குரிச்சி ராமலிங்க சாஸ்திரி எழுதுகிறர்.)

முற்காலத்தில், கொக்கைப் பிடிப்பதற்கு செய்யப்படும் சிரமத்தை வடமொழியில் பகபந்தனப்ரயாஸம் என்று அறிஞர் கூறுவர்; இப்பழமொழியை ஓர் கவி இவ்விதம் விவரிக்கிறர்:—

மரத்தின் நுனியில் கொக்கு, தூங்கும் பொழுது அதன் தலையில் வெண்ணெயை வைத்து, வெண்ணெய் உருகி அதன் கண்களை மறைக்கும் வேளையில் கொக்கைப்பிடிக்க முயலுதலால் நிகழும் ப்ரயாஸத்தை என்று கூறுகின்றனர்; ஓர் காரியத்தை நிறைவேற்றுவதற்கு வீணாக கஷ்டப்படுபவனைப் பார்த்து இவ்விதம் ஏளனம் செய்வது வழக்கம்; 18 வயது முதிர்ந்தவன் 14-வது முதிர்ந்தவளை அச்சமற்று இச்சைகொண்டு, அடைந்துகொண்டு இன்புற வாழலாம் என்ற சட்டத்தை இயற்றுவித்து இராப்பகல் துயிலுறாய் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் மனப்பூர்ணமாய் அநுபவித்துவரும் விசாரதருடைய ப்ரயாஸத்தை நாம் 'கொக்கு பிடிக்கப் படும் பாடு' என்று அழகாக அழைப்போம்; ஆர்யர்களின் ஆசாரத்தை அடியோடு கெடுத்த இந்த மேதாவிக்கு கிடைத்த வெகுமானம் யாது?

நிவர்த்திக்க முடியாத இகழ்ச்சியும், மஹாபாதக வீழ்ச்சியுந்தான் என்று புலப்படுகிறது; கால வேற்றுமையாலும், புத்தி மௌட்யத்தாலும், பிறநாட்டாரின் நாகரிகம், பழக்க வழக்கம் இவற்றின் அநுபவத்தாலும், பணத்திமிராலும் எத்தேசத்தினரும், முக்யமாக இந்திய தேசத்திலுள்ள ப்ராம்ஹண குடும்பத்தார் உள்பட யாவரும், தான்தோன்றிகளாக நடக்க ஆரம்பித்து விட்டனர்; இதனால் சில விடங்களில் அதிக மழைபெய்தும், சிற்சில விடங்களிருவமழை பொழியாமலும், கோடிக்கணக்கான ஜனங்கள் பிழைக்க வழியின்றி பரிதவிக்கின்றனர்; ஐந்து ரூபாய் மாதம் ஒன்று செலவுசெய்து ஜீவனஞ் செய்த ஓர் எளியவனுக்கு பத்து ரூபாய் செலவுசெய்ய ஸௌகர்யமிருந்தும் திருப்தி வருவதில்லை; ஏனெனில், ஸாதாரணப் பணக்காரன் நடத்திவரும் ஆடம்பரச் செலவுகளில் ஈடுபட்டு, தானும் அவர்களைப் பின்பற்ற முயலுகின்றான்; ஆடம்பரத்தினால் விளையும் கெடுதிக்கு அளவில்லை; இது தர்மம், இது அதர்மம் என்ற பகுத்தறிவில்லாமல், மனம்போன போக்குப்படிக்கெல்லாம் சட்டத்தை நிலைகாட்டி காட்டிலுள்ள தார்மிகர்களுடைய மனதை புண்படுத்திவரும் இப்புண்டவானுக்கு எந்த புண்யலோகம் தயாராயிருக்கின்றதோ?

ஒருவன் செய்யும் நல்வினை தீவினைப் பயன் இவ்வுலகிலேயே சீக்கிரத்தில் கைகூடும் என்று பகவத்கீதை, மிகமேல் மிஞ்சிப் போன பாபங்களுக்குப் பலனை இவ்வுலகத்திலேயே அடைவான் என்று ஸ்மிருதி விதிக்கின்றது; நிற்க, 8-வயது முதற்கொண்டு விவாஹம் செய்தால் என்ன கெடுதி? 14-வது வயதில் செய்தால் என்ன நன்மை? 14-வது வயதில் செய்யப்பட்ட விவாஹத்திலும் ஒரு மாதத்திற்குள் வரன் இறந்துவிட்டானே, சட்டபடி ஏற்பட்ட விவாஹத்திலும் சாந்தி முஹூர்த்தம் நடைபெறுமல் மணமகன் அய்யலூர் ரயில்வே விபத்தில் மரணமடைந்தானே! வினைப்பயனை மாற்ற விசாரதரால் முடியுமா? அவனவன் செய்த வினைப்பயனை அவனவனே அநுபவித்துத் தீரவேண்டுமே அல்லாது, கொள்ளு என்றால்,—வாயைத் திறக்கவும் கடிவாளம் என்றால்—வாயை மூடிக்கவும் முடியது; ஆதலால் நல்வினையோ தீவினையோ இவற்றால் நிகழும் பயனை செய்தவன் அடைந்தே ஆகவேண்டும்; கோடிக்கணக்கான வருடங்கள் சென்றாலும் வினைப்பயனை விலக்க எவனால் முடியும்?

வர்ணாச்ரமாசாரங்களை மீறி நடப்பவனுக்கு புண்ய—பாபங்கள் என்ன செய்து விடும் என்று வினவலாம். நல்வினையின் பயனாக நற்பிறவியை அடைகின்றனர்; தீவினையின் பயனாக தாழ்மை (அதம)ப்பிறவியை அடைகின்றனர்; இன்பத்தை அநுபவிக்கவோ, துன்பத்தை விலக்கவோ சக்தியற்ற ஜீவன் புண்ய—பாபபலனை அநுபவிக்கத்தகுந்த தேவர்கள் வஸிக்கும் ஸ்வர்க்க லோகத்தை யாவது, சித்திரவதை செய்யும் தர்ம ராஜன் பட்டணத்தையாவது அடைந்து மகிழ்ச்சியையும், தளர்ச்சியையும் உணர்கிறன்; உத்தம பதவியையடைய புண்யமே காரணம்; தாழ்ந்த பதவியையடைய பாபமே காரணமாம்; ஒருவன் ஓர் கெட்ட கார்யத்தை துணிவுடன் செய்து விடுகிறன்; அதன் பலனை கோடிக்கணக்கான ஸாதுக்கள் அநுபவிக்க நேரிடுகின்றது; விருக்ஷ மிருக்ஷத்தையும் பழ விருக்ஷத்தையும் வளர்த்தவனுக்குக்கூட பலன் கொடுக்குங் காலத்தில் பழம் கொடுக்கும் மரத்தின் பழத்தை புசிப்பதில் தான் மனம் நாடுகின்றது; பஞ்சுப் பொதியில் தீப்பொறி பறந்து பற்றிக்கொண்டால் நெருப்பை அவிப்பது ஆண்டவனாலும் இயலாது; அவனன்றி ஓர் அணுவுமசையாது; இரக்ஷகன், கடவுள். (protector.)

ஹே அர்ஜுன, ஸர்வ வல்லமையுள்ள கடவுள் ஸகல ஜீவராசிகளுடையவும் ஹ்ருதய கமல பீடத்தில் வீற்றிருந்து, மாயாபாசத்தால் இயந்திரத்தில் இணைக்கப்பட்ட இப் பிராணிகளை மனோமூலமாக ஐம்புலன் வழியாக அதனதன் விஷயங்களில் செலுத்திக்கொண்டு, 'அந்தர்யாமி' எனும் காரணப் பெயருடன் எப்பொழுதும் இலங்குகின்றார்; அப் பரம்பொருளையே நீ (மனஸா வாசா கர்மணா) த்ரிகரணத்தாலும், தஞ்சம் என்று நம்பி அஞ்ஜலி செய்து, வழிபடு, க்ரமமாக (அ. 18—62) அப்பரமாத்மாவின் அநுக்ரஹத்தால் அளவற்ற பொருமையையும் பேரின்ப நிலையையும் பெற்று, ஆநந்தம் உய்வாயாக!

நிற்க, சாரதா சட்டத்திற்குப் பயந்து, சா(கி)றதா? இருக்கிறதா? என்று ஓர் மஹான் வருந்துகிறர்; ஆகையால், சட்டசபை மேதாவிகள் ஒன்றுகூடி புனராலோசனை செய்து, இன்னும் ஓர் வருடத்திற்குள் சாரதா சட்டத்தை ரத்துசெய்துவிடுவார்கள், என்று ஸநாதன தர்மிகள் யாவரும் மனப்பூர்ணமாய் நம்புகிறோம்; இன்றேல் ப்ராஹ்மணர் எல்லோரும் மறைந்துகிடக்கும் தமது ஆத்ம ஜ்யோதிஸ்ஸை உலகத்தினரின் கண்களுக்கு புலப்படும்படி செய்ய முயலுவார்களென்பது திண்ணம்;

பளபளவென்றும் மழமழவென்றும் விளங்கும் ஸூர்யகாந்தக்கற்களில் ஸூர்யகிரணம் ஒளிறும்பொழுது தன்னியற்கை குணத்தை வெளிப்படுத்தல்போல பொறுமையே பெருந்தனமாக வாய்ந்த அந்தணரிடம் எரிக்கும் சக்தியுற்ற தேஜஸ் ஒன்று மறை பொருளாக விளங்குகின்றது; அஃது உற்ற தருணத்தில் ஜனங்கள் கண்களுக்கு புலப்படும் என்று காளிதாஸ மஹாகவியின் இயற்கை வர்ணனைப்படி ஆத்ம ஜோதிஸை அபிவிர்த்தி செய்ய முயலவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறோம்.

## இது ஒரு நல்ல சமயம்.

ஸநாதன தர்ம ஸபைத் தலைவர்களுக்கும் ஸநாதனிகளுக்கும் வணக்கமாய் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால்:—சென்னை மாகாணம் சட்ட சபையில் சமீபத்தில் நடந்த அஸம்பிளியில் ஸ்ரீ. எம். ஸி. ராஜா கொண்டுவந்த ஹரிஜன ஆலயப் பிரவேச மசோதாவை அநேக அங்கத்தினர்கள் சட்டமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்ட போதிலும் நமது மாகாணம் பிரதம மந்திரி ஸ்ரீ. ஸீ. ராஜகோபாலாசாரியார் எவ்வித காரணத்தைக் கொண்டோ ஷை மசோதாவை வாபீஸ்வாங்கிக்கொள்ளும்படிசெய்து ஸர்க்காராலேயே தனிப்படச் சட்டம் ஒன்று நிர்மாணித்து சென்ற மீ 30உ யன்று வெளிவந்திருக்கிறது. அந்தச் சட்டம் தற்போது வடமலையாளம் ஜில்லா மட்டிலும் கட்டுப்படுத்துமாம். அந்தச் சட்டத்தின்படி விசேஷ நிர்வாஹ அதிகாரம் அந்த ஜில்லாவிலுள்ள தேவஸ்தானங்களின் டிரஸ்டிகளுக்கும் அந்தந்த ஊர்களில் வஸிக்கும் ஜாதி ஹிந்துக்களின் அப்பிராயங்களுக்கும் பொறுத்தது என்றும் தெரிய வருகிறது. ஆகையால் எப்போதும் ஸநாதன தர்மத்தில் ஈடுபட்டு உழைக்கும் தர்ம துரந்தரர்களான அக்ராஸன அத்யக்ஷர்களுக்கும் தர்மப் பிரசாரகர்களுக்கும், ஸநாதன தர்மத்தை ரக்ஷிப்பதற்கும் இனி இவ்விதமான இடையூறுகள் அடிக்கடி உண்டாகாமல் காத்துக்கொள்வதற்கும் இதுவொரு நல்ல சமயமென்று ஞாபகப்படுத்துகிறேன்.—அதாவது எல்லா ஜில்லாக்களிலும் உள்ள ஸநாதனிகள் யாவரும் சென்ற டிஸம்பர்மீ சென்னையில் கூடியதுபோல இப்போதும் வடமலையாளம் ஜில்லாவிலுள்ள முக்கிய க்ஷேத்திரங்களிலும் பட்டணங்களிலும் சபைகள்கூடி அங்கங்கே உள்ள ஸாமான்ய ஜனங்களுக்கும்கூட தர்ம தத்வத்தை உபதேசம் பண்ணி அவரவர்கள் மனதிலிருக்கும் சங்கைகளை நிவாரணம் செய்து ஷை தேவஸ்தானங்களின் டிரஸ்டிகளுக்கு ஆகம சாஸ்திரப்படி நியமித்திருக்கும் ஆலய தர்ம தத்வங்களை தெரியப்படுத்தி விசேஷப் பிரசாரங்களைச்செய்து அவரவர்களே நியாயமின்னது என்று தெரிந்து கொள்ளும்படியும் செய்து அது ஸம்பந்தமான வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள முன்வந்தால் உசிதமாக இருக்கும். தற்காலம் அங்கங்கே தர்மப் பிரசாரம் செய்துகொண்டு திருவண்ணாமலை யாத்திரை செய்து வருகிற தர்ம வீரஜா கோஷ்டியார்களும் வடமலையாளம் சென்று ஷை தர்மப் பிரசார கைங்கரியம் செய்வது காலோசிதமாகும்.

ஏ. சுந்தரம் அய்யர், சநாதனி,
சோழவந்தான்.


## அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திருப்புகழ் பாராயண திருமுறை | 1 | 4 | 0 |
| 2. | நால்வர் சரித்திரம் | 0 | 12 | 0 |
| 3. | ,, காலிகோ ராப்பர் | 0 | 10 | 0 |
| 4. | பாரதசாரம் | 1 | 2 | 0 |
| 5. | ஸ்ரீ ராமாயண வினாவிடை | 1 | 8 | 0 |
| 6. | பஞ்சரத்னம் | 0 | 12 | 0 |
| 7. | ஷண்முக விஜயம், | 0 | 12 | 0 |
| 8. | ஸ்ரீபாலஷண்முக விஜயம் | 0 | 8 | 0 |
| 9. | ருக்மணி | 0 | 8 | 0 |
| 10. | தேசிங்குராஜன் | 0 | 10 | 0 |
| 11. | ராஜாதேசிங்கு | 0 | 5 | 0 |

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.




# வருண குலம்.

வருணகுலம் என்பதைக் கபில பாணர் என்பதுபோலக் கொள்க. வருணம் நான்கு. அவையாவன. பிராமண, க்ஷத்ரிய, வைசிய சூத்திரமென்பன. இவற்றை நால்வகை உத்தமக் குடிகளெனவும் கூறுவர். புறக்குடிகள் மூவகையாம். அவையாவன உயர்ந்தன, இழிந்தன, மயங்கவைத்தன என்பன. இவற்றுள் உயர்ந்தன அநுலோமர் பிரதிலோமர் என்றிருவகையின. அவற்றுள் உயர் குலத்தானும் இழிகுலப் பெண்ணும் கூடிப்பெற்றவர் அநுலோமர். இழிகுலத்தானும் உயர்குலப் பெண்ணும் கூடிப்பெற்றவர் பிரதிலோமர். இந்த அனுலோமப் பிரதிலோமர் தமக்குள்ளே யொவ்வொருவரும் அறுவகையாயிருப்பர். இழிந்தன, அந்தராளர், விராத்தியர் என்றிருவகையின. அவற்றுள் அநுலோமத்தானும், பிரதிலோமப் பெண்ணுங் கூடிப்பெற்றவர் அந்தராளர். பிரதிலோமத்தானும் அநுலோமப் பெண்ணுங் கூடிப்பெற்றவர் விராத்தியர். மயங்கவைத்தன. மேற்கூறப்பட்ட உயர்ந்தன, இழிந்தன என்னும் இருவகைக் குடிகளின் கூட்டத்திலுண்டாயின. இவ்வாறின்றி கைம்பெண் வயிற்றிற் பிறந்தவராகிய கோளகரையும், வேற்றூரிடத்துப் பிறந்தவராகிய குண்டகரையும், கந்நிகை வயிற்றிற் பிறந்தவராகிய கானீநரையும் புறக்குடிகள் என்பாருமுளர்.

ஒழுக்கமுடைமையாவது,வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினையுடையராதல். நிலையாவது ஆசிரமம். ஒருவனுக்கு உயிர்போலச்சிறந்தது யாதொரு பொருளும் இல்லை. அவ்வாறுயினும் அவ்வுயிர் நல்வினைக்கும் தீவினைக்கும் காரணமாய் நின்று இன்பதுன்பங்களை வருவித்துக் கொள்ளுகின்றது. ஒழுக்கமோ அவ்வாறுகாமல் இன்பத்தை உண்டாக்குவதற்கே காரணமாயிருக்கின்றது அதுவுமன்றி இது உயர்ந்தார்க்கும் இழிந்தார்க்கும் சமமாகச் சிறப்பினைத் தருகின்றது,எனவே அவ்வொழுக்கம் உயிரினும் நன்கு பாதுகாக்கப்படும். ஒருவனுக்கு நல்லொழுக்கம் அறத்திற்குக் காரணமாய் இருமையினும் துன்பம் பயக்கும். ஒழுக்கம் என்பது ஆசாரம். இம்மை மறுமைகளே இருமை.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனர் தாம் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளில் பின்வரும் இருகுறட்பாக்களை இங்கு கவனிப்போம். அவையாவன:—

1. "ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்."
2. "மறப்பினும் ஒத்துக்கொளலாகும்பார்ப் [பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்."

இவற்றிற்குப் பண்புடைய பரிமேலழகர் உரைதருதும்.

1. "எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்கமுடைமை குலனுடைமையாம்; அவ்வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத்திற்றாழ்ந்த வருணமாய் விடும்.

பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்கம் உடையாராக உயர்குலத்தவராகலின் 'குடிமை' யாமென்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத்தாழ்ந்த வருணத்தாராவாராகலின் 'இழிந்த பிறப்பாய் விடும்' என்றும் கூறினார். உள் வழிப் படுங்குணத்தினும் இல்வழிப்படுங் குற்றம் பெரிதென்றவாறு. பயன் இடையீடின்றி எய்துதலின், அவ்விரைவுபற்றி அவ்வேதுவாகிய வினைகளே பயனாக வோதப்பட்டன.

[குலனுடைமையும் தாழ்ந்த வருணமுமாகிய பயன் (பிரயோஜனம்) இடையீடின்றி (காலதாமதமின்றி) யெய்துதலின் (உண்டாதலினால்) அவ்விரைவுபற்றி (அந்த விரைவு நோக்கி) அவ்வேதுவாகிய வினைகளே (குலனுடைமையும் தாழ்ந்த வருணமுமுண்டாவதற்குக் காரணமாகிய ஒழுக்கமுடைமையும் இழுக்கமுமாகிய வினைகளே) பயனாக (குலனுடைமை இழிந்த பிறப்பு என்னும் பிரயோஜனமாக) ஓதப்பட்டன.]

2. "கற்றவேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணங் கெடாமையின் பின்னும் அஃது ஓதிக்கொளலாம். அந்தணனது உயர்ந்த வருணம் தன்னொழுக்கங் குன்றக்கெடும்.

மறந்தவழி இழிகுலத்தனுமாகலின், மறக்கலாகாதென்றுங் கருத்தான் 'மறப்பினும்' என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணங்கட்குங் கொள்ளப்படும்."

[தொன்றுதொட்டு ஒருவர்க்கு ஒருவரால் ஓதப்பட்டு வருங் காரணத்தினால் வேதத்திற்கு ஒத்து என்னும் பெயர் வழங்கப் பெறுகின்றது. பார்ப்பான் என்பதற்கு அந்தணன் என உரைவரைந்து சிறப்புடை வருணம் என்று பின் தெளிவுரையிற் குறிப்பிடுகிறார் உரையாசிரியர். பார்ப்பான் என்பதைப் பின்னுள்ளோர் பிராமணன் என்று ஸ்பஷ்டமாகவே உரை கூறியுள்ளனர். பிராமணர் வேதத்தின் பொருளையே பிரதானமாகக் கொண்டு பார்ப்பதுபற்றி அவர் பார்ப்பார் என்று சொல்லப்படுகின்றார். கலித்தொகையுரையில் நச்சினார்க்கினியர் "வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு பார்ப்பார்" என்று கூறுகிறார். பெரியவறங்களைச் சிதைத்தலாவது ஆன் முலையறுத்தலும், மகளிர் கருவினைச் சிதைத்தலும், பார்ப் பார்த்தபுதலும் முதலிய பாதகங்களைச் செய்தல் எனப் பரிமேலழகர் பிறிதோர் குறளிற் கூறுவர். பார்ப்பார்த்த புதலாவது, பிராமணரைக் கொல்லுதல் அதாவது பிரமஹத்தி (பிராமண வதை) இது வாக்காற் சொல்லவும் படாமை பற்றி மறைத்துக் கூறினர். "பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும் .... .... .... வறம்பாடிற்றேயாயிழை கணவ" என்பது புறநானூறு (34) 'பார்ப்பனச் சிட்டர்கள்' என்று பிரயோகிக்கிறள் சங்கத் தமிழ் மாலை முப்பது மியற்றிய ஸ்ரீ ஆண்டாள். பிராமண பதமே பார்ப்பனர் எனப் பிராகிருதத்தில் சிதைந்துவரும் என்று கூறுக. இதன் உண்மைப்பொருள் நன்கு அறியாதார் கூறும் கூற்றுக்கள் பிதற்றலே. 'அதற்குச் செவிசாய்ப்பது ஆன்றோர் கடன் அன்று. சிறப்புடைய வருணத்தவராகிய பிராமணருக்கு ஆசாரங் குறைய வருணங்கெடும் என்று கூறினமையின் ஆசாரங் குறையச் சாதிகெடுமென்னுமிவ்விஷயம் மற்றைய வருணங்கட்கும் கொள்ளப்படும் என்று கூறியது உபலட்சணம்.]

மேற் கூறியவாற்றால் வருணம், குலம் என்பனவற்றின் பொருள் நன்கு விளங்கும்.

'குலந்தாங்கு சாதிகள் நாலிலும்' என்ற ஆழ்வார் பாசுர வியாக்கியானமான ஈட்டில் "க்ரம விவாஹத்தாலும் அநுலோம ப்ரதிலோம விவாஹத்தாலுமுள்ள குலங்களை தரிப்பதான ப்ராஹ்மணதியான நாலு ஜந்மத்திலும்" என்றிருப்பது ஈண்டு அறியத் தக்கது.

நல்ல குலமென்றுந் தீயகுலமென்றுஞ் சொல்லளவல்லாற் பொருளில்லை. தொல் சிறப்பினெண்பொருள் ஒன்றோ? தவம் கல்வி, ஆள்வினை என்றிவற்றுனுங்குலம். ஆசாரமே ஆன்றோர் போற்றுவது. கற்றபின் அதற்குத்தக நிற்றலே கற்றுணர்ந்தார் கடமை. ஆசாரத்தாலுயர்ந்து விளங்குவது நம் பாரதநாடே. இத்தனிச் சிறப்பை என்றும் விடாது நடத்தலே விழுமியது. கல்விக்குப் பயன் அறிவு. அறிவிற்குப்பயன்

## ஸ்ரீ சங்கராநந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகளின் சித்தி வைபவம்.

திருநெல்வேலி ஜில்லா கருங்குளம் கிராமத் தில் பூர்வாச்ரமத்தில் கிருஷ்ண சாஸ்திரிகள் என்றும் நாமம் பெற்று உலகமெங்கும் பிர சித்தர்களாய் விளங்கி கொஞ்சகாலம் வேதா ரண்யம் என்னும் க்ஷேத்திரத்தில் பிரகாசித் துக் கொண்டிருந்த வித்யாஸ்தானத்தில் அத்யாபகர்களாயிருந்து அனேகம் சிஷ்யர் களுக்கு காவ்ய நாடகாலங்காரங்களையும் தர்க்க வியாகரணம் வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களையும் சொல்லிவைத்துப் பிறகு கொஞ்சகாலம் ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யா ளின் அனுக்கிரஹத்தால் நடைபெற்றுவரும் கும்பகோணம் அத்வைத சபையில் பண்டித பதவியையடைந்து அனேகம் தேசங்களில் அத்வைத் வித்யையை உபன்யாசமுகமாய் பரவச்செய்து மறுபடியும் கொஞ்சகாலம் பாலகாட்டுச் சமீபமாயுள்ள சித்தூர் என்றும் கிராமத்திலிருக்கும் வித்யா ஸ்தானத்தில் உபாத்யாயர்களாய் இருந்து அனேகம் வித் யார்த்திகளை பிரசித்த வித்வான்களாகச் செய்து பிறகு சென்னபட்டணத் தில் மைலாப்பூரில் விளங்கும் ஸம்ஸ்கிருத கலாசாலையில் பிரின்ஸ்பால் பதவியிலிருந்து அனேகம் சிஷ்யர்களை எல்லாச் சாஸ்திரங் களிலும் பண்டிதர்களாகச் செய்வித்து அனேகம் ராஜ சபைகளிலும் வித்வத் சபை களிலும் வேதாந்த விபூஷணம் சாஸ்தி ரத்நாகரம் முதலிய பிருதங்களுடன் கவர்ன மெண்டாரால் அளிக்கப்பெற்ற மஹாமஹோ பாத்யாய பிருதத்தையுமடைந்து பிரகாசித்து கொண்டுவந்தார்கள்.

இவ்வித மகிமைதள் வாய்ந்த இம் மஹான் தன்னுடைய 72வது வயசில் தனது கிரா மான கருங்குளம் கிராமத்தில் வெகுதான்ய வருஷம் வைகாசிமீ 26உ துரீயாஸ்ரமத்தை யடைந்தார்கள். சங்கரானந்த ஸரஸ்வதீ என்று நாமதேயம் பெற்றார்கள். பிறகு தேக அசக்தியால் வெளியில் சஞ்ச ரிக்க அசக்தர்களாய் கொஞ்சகாலம் அந்த கிராமத்தையே யலங்கரித்துக்கொண்டிருந்து வெகுதான்யஹூ ஆவணிமீ 2உ குருவாரம் தன்று சித்தியடைந்தார்கள். அந்தக் கிரா மத்திலிருக்கும் பக்தகோடிகளனைவரும் ஷை ஸ்வாமிகளின் பூர்வாசிரம குமாரனை வெங்கடாசல சாஸ்திரிகளை முன்னிட்டுக் கொண்டு சித்திமுதல் ஆராதனை முடிவான 13 தினங்களில் செய்யக்கூடிய நற்காரியங் களை மிகவழகாக நடத்திவைத்து ஸ்வாமிகள வர்கள் பரிபூர்ண கிருபைக்குப் பாத்திரர்களா னார்கள். ஒவ்வொரு தினமும் மாலை 8மணி முதல் ஷை ஸ்வாமிகளின் பூர்வாசிரம மருமானும் அவர்களிடமிருந்து தர்க்க வேதாந்தாதி சாஸ்திரங்களை யப்யசித்தவராயும் தேவகோட்டையிலிருக்கின்றவருமான பிரம்மஸ்ரீ நா. கிருஷ்ணசாஸ்திரிகளால் சத்குரு மகிமை என்ற அரிய உபன்யாசத்துடன் ஸ்ரீமத் ஆதி சங்கரபகவத்பாதாசாரியர்களுடைய சரித்திரோபன்யாசமும் மிகத் தெளிவாய் நன்றாக உபன்யசிக்கப் பெற்றது.

வெங்கடாசல சாஸ்திரி.

ஒழுக்கம். ஒழுகுதலைக் கற்றல் அடிப்படுதல். அதாவது பெரியார் நடந்தபடி நடக்கத் தொடங்கல். பெரியோர் ஒழுக்கத்தை மேற்கொண்டு ஆசரித்துவர நன்மை பல உண்டாகும்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

2152.48

## மேல்மங்கலம்.

### ஆஸ்திக மஹாஜன சபை.

ஆவணி-மீ 16ம்வ புதன்கிழமை மாலை 3½-மணிக்கு பிர்ம்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிம அய்யாவர்களின் தலைமையின் கீழ் சபைகூடிற்று. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்.

அத்யக்ஷகாவர்கள் விவாஹ ஸம்ஸ்காரம் என்னும் விஷயம்பற்றியும் பிர்ம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் 'தற்கால நெருக்கடியும் நமது கடமையும்' என்னும் விஷயம்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பெற்று மாலை 6-மணிக்கு சபை நிறைவெய்தியது.

கிராமத்தில் பிர்ம்மஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களால் பிரவசனம் செய்யப்பட்டுவந்த தேவீபாகவதம் முடிவடைந்து மறுபடியும் ஷை சாஸ்திரிகளால் ஆவணி-மீ 17ம்வ வியாழக்கிழமை உத்திர ராமாயணம் ஆரம்பிக்கப்பெற்றது. பிரதி தினம் மாலை 3½-மணிமுதல் 5½-மணிவரை பிரவசனம் செய்து ஜனங்களை பரவசப்படுத்திக்கிறார்கள்.

சிவரும கனபாடிகள், காரியதரிசி.

## சிதம்பர பாகவதர்.

### உருவப்பட திறப்பு விழா.

நாகூர் மேல அக்கிரஹாரத்தில், ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ ராம பஜனை மடம் டிரஸ்டியும் ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட்டுமான ஸ்ரீமான் D. வீராஸாமிஅய்யரின் அழைப்பிற்கிணங்க கூட்டப்பட்ட மீட்டிங்கில் 11-9-38 மாலை 4மணிக்கு ஷை மடம் ஹாலில் மஹாகதக, கண்டீரவ, அபிநவ பாதாசார்ய, பிரும்மஸ்ரீ அகாமாங்குடி சிதம்பா பாகவதாவர்களுடைய, உருவப்படத்தை மதுராஸ் காயனபடு, கீர்த்தனபடு, ஸ்ரீமதி C. ஸாஸ்வதி பாய் அம்மாளால் திறந்து வைக்கப்பட்டு, காலஞ்சென்ற பெரியாரின் குண விசேஷத்தைப்பற்றியும் கலாஞானத்தைப்பற்றியும் சொற்பொழிவாற்றி பகவத் பஜனமும், கீர்த்தனை குணானுபவங்களும் ஸ்தோத்திரங்களும் செய்யப்பட்டது, ஷை வைபவத்தில் ஈடுபட்ட பிரமுகர்களால் காயகசிகாமணி C. ஸாஸ்வதி அம்மாளுக்கு தான் எடுத்துக்கொண்ட சிரமத்துக்கு தக்கபடி உபசரிப்பு வார்த்தைகள் சொல்லப்பட்ட பின் வந்திருந்த மகா ஜனங்களுக்கு சந்தன புஷ்ப தாம்பூலம் வழங்கி கூட்டம் இனிட முடிந்தது. ந. நி.

## அனந்தப்பூரில் பண்டித யு. பி. கிருஷ்ணமாசார்யர்

காசி, பண்டித யு. பி. கிருஷ்ணமாசார்யா அனந்தப்பூரில் ஒருமாதகாலம், ஒவ்வொரு நாள் சாயங்காலமும், ஸநாதனதர்ம முறைகளுடையவும், அனுஷ்டானத்தினுடையவும், சாஸ்த்ரீய ஸம்ப்ரதாயங்களைப்பற்றி பிரஸங்கம் செய்தார். அவர் எப்படி ஸநாதன தர்மத்தை நம்முடைய தின வாழ்க்கையில் நடத்தலாம் என்பதைக் காட்ட முப்பத்தோரு உபந்யாஸங்களும், அது தவிர சில தனி உபன்யாஸங்களும் நடத்தினார். அந்தக் காலங்களில் அவர் ஸநாதன தர்மத்தின் அடிப்படையான முறைகளைப்பற்றி விரிவாகவும்சொன்னார். தவிர அவர் எப்படிநமதுபழங்காலத்து ஸநாதன முறைகள் இப்பொழுதுள்ள புதிய மேற்றிசை ஸயன்ஸ் மூலமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதையும் எடுத்துக்காட்டினார். அவர் முக்யமாக ஹிந்துக்களின் விவாஹ முறைகளையும், ஒரு நிஜமான ஹிந்துவினுடைய தினகாலக் கடமைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் அவர் இரண்டு நாட்கள் எல்லா விஷயங்களிலுமுள்ள கேள்விகளுக்கு (ஆலயப்பிரவேசம் உட்பட) பதிலளித்தார்.

சநாதன சபை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு அதின் முதல் சபையும் கௌரவமுள்ள மெம்பர்களுடன் நடந்தது. அனந்தப்பூர் ஸநாதந தர்மகர்களுக்காக ஒரு நன் கொடை (தர்ஸ்) பண்டிதருக்கு கொடுக்கப்பட்டது. அவர் ஹிந்து விவாகதர்மத்தைப்பற்றி தான் சொன்னதை ஒரு சிறு புஸ்தகமாக வெளியிட்டார். பண்டிதர் உண்மையாகவே அனந்தப்பூர் வர்ணாச்ரமிகளுக்கு ஸநாதன தர்மத்தில் ஒரு புதியஸ்தானத்தை உண்டாக்குகிறார்!

என். கே வெங்கடேசன்.

## ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஸைகதலிங்க கும்பாபிஷேகம்.

இக் கும்பாபிஷேகம் ஆவணி-மீ 24வ ஆரம்பிக்கப்பட்டு இன்று காலை 9-மணிக்கு மேல் மஹாபிஷேகத்துடன் முடிவுபெற்றது. இரவு உற்சவ மூர்த்தி ரிஷபவாகனரூடராய் பரிவார ஸகிதம் வேதபாராயணம், தேவார பஜனை ஸஹிதம் திருவீதி ஊர்வலமாய் கொண்டுவரப்பட்டார். உள்ளூர் வெளியூர்களினின்றும் ஏராளமான ஸேவார்த்திகளும் கூடியிருந்தனர்.

ஸ்ரீமான் பழனிசிவம் அவர்களின் பெருமுயற்சியால் நான்கு தினங்களாக கங்காபாய் சத்திரத்தில் பிராம்மண ஸந்தர்ப்பணை நடந்துவருகிறது.

எக்சிகூடிவ் டிரஸ்டீ ஸ்ரீமான் திரு. பரமசிவ முதலியாருடைய பரம சிரத்தையாலும் தார்மிக குணத்தாலும் இவ்வாலய பரிபாலனம் சிறப்பாக நடந்தேறிவருவது காஞ்சீவாஸிகள் பாக்யம்.

ஸத்யவ்ரதன்.

## காயத்ரீ ஜப கால விசாரம்.

### ஓர் பதில்.

நாளது ஸூ சென்ற ஆடிமீ 28வ யில் நடந்த காயத்ரீ ஜப விஷயமாக ஏற்பட்ட சர்ச்சைகளும் அதன் ஸித்தார்த்தமும் சுதேசமித்ரன், ஆர்யதர்மம் பத்திரிகைகளின் மூலம் யாவருமறிந்த விஷயம். இது சம்பந்தமாக மதுரையில் நடந்த ஓர் வித்வத் பரிஷத்திலும் அனேகபண்டிதர்கள்கூடி வியவஹரித்துஸித்தாந்தம் செய்தபடி, அக்ராஸனரும்தீர்மானம் சொல்லி ஸாதித்தபடி ஆடிமீ 28வயே எல்லோரும் காயத்ரீஜபம் அனுஷ்டித்திருக்கிறார்கள். அப்படியிருக்க மதுரையிலிருக்கும்நெரூர் ஸ்ரீஉப-வே-நாராயணய்யங்கார்-"பௌர்ணமி நாழிகை 13- மறுநாள் பிரதமை நாழிகை-9- ஆக இருக்குங்கால்— விருத்திஹ்ராஸஸமீகரணம்செய்யும் போது பௌர்ணமிநாழிகை 11 ஆவதால் தீக்ஷிதாவர்கள் சொல்லிய உபாகர்மஸித்தாந்தத்திற்கு, பாதகம் ஆகுமே, இதற்கென்ன சமாதானம் என்று ஆர்யதர்மப் பத்திரிகை மூலமாகக்கேட்டிருக்கிறார். இக்கேள்வியும் இதற்கு சமாதானம் சொல்வதும் முன் சாப்பிட்ட சாதத்துக்கு பின் ஊறுகாய் தேடுவது போல் இருக்கிறது.

இவர் காலமாதவீயத்திலும், தீக்ஷிதீய நிதி நிர்ணயகாண்டத்திலும், விருத்திஹ்ராஸஸமீகரண விஷயமாய் எடுத்துக்காட்டியவுதாஹரண பங்க்தியைப் பார்த்திருந்தாலாவது அதையனுஸரித்து- அக்னிஹோத்ரம்- ஸ்ரீ- உப-வே- கோபாலதேசிகாசாரியர்எழுதியிருக்கும் வாக்யபங்க்தியைவாசித்திருந்தாலாவது, மதுரையில் நடந்த வித்வத்பரிஷத் சங்கத்துக்கு வந்திருந்தாலாவது, வந்திருந்தவர்கள் மூலம் கேட்டுத்தெரிந்து கொண்டிருந்தாலாவது, அந்த ஆக்ஷேபணையை எழுதியிருக்கமாட்டார்.

பத்திராதிபர் அவர்கள்—அருமையான ஆத்யதர்ம பத்திரிகையில், நாராயணையங்காரலர்களுக்கு, அனுவசியமாய் இடங்கொடுத்தது போல, எனக்கும் இடங்கொடுத்து அநுக்ரகித்து, எங்களிருவர்களையும் மன்னிக்க வேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எ. சுந்தரம் அய்யர். சோழவந்தான்

## மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்.

மதுரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தினுடைய ஆதரவில் 4-9-38 ஞாயிற்றுக்கிழமை ஆர். கிருஷ்ணசாமி ஐயங்கார் தலைமையில் ஒருபொது கூட்டம் நடந்தது.

அப்பொழுது சேர்மனால் கொண்டுவரப்பட்ட கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 ஸநாதன தர்மத்திற்கு ஆதரவு அளித்த ஸ்ரீமான் என். ஸ்ரீநிவாஸாசாரியாரின்பிரிவிற்காக வருத்தம் காட்டுகிறது. 2 அய்யனூர் விபத்தில் சிக்குண்டு அவஸ்தையடைந்தவர்களுக்கும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் தன் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. 3 சமீபத்தில் திருவாங்கூரில் நடந்த சம்பவங்களால் ஏற்பட்ட 12 மரணங்களும், பலபேர்களுக்கு காயம் நேர்ந்ததையும் குறித்து வருத்தப்பட்டு திருவாங்கூர் ராஜாங்கத்தை ஒரு சமரஸ ஏற்பாடு கொண்டுவர வற்புறுத்துகிறது.

4 சென்னை சட்டஸபையில் கொண்டுவரப்பட்டுள்ள மலையாள ஆலயப்பிரவேச மசோதாவானது, புரட்சிகரமாயிருப்பதாயும், ஹிந்துமதத்தின் மூலாதார உரிமைகளையும், கொள்கைகளையும் அழிப்பதாயுமிருப்பதால், அதைக் கண்டிக்கிறது. இந்த தீர்மானம், தில்லையம்பூர் ஸ்ரீ உப. வெ வெங்கடாசாரியாரால் பிரேரேபிக்கப்பட்டு, பிரம்மஸ்ரீகளான விச்வநாத சாஸ்திரிகள், ஸீதாராம சாஸ்திரிகள் இவர்களால் ஆமோதிக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் நிறைவேறியது. ந. நி

## 'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.

தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0

மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜநார்தந அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அச்யுதர்மம்

22.9.1938

4 வ
23 37

215249

1541
1541
509
215249
Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)

குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபால்தேசிகாசாரியார்

OFFICE OF THE REGISTRAR ... 28 SEP 1938 MADRAS

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

4 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஷு புரட்டாசிமீ 6உ 1938ஷு ஸெப்டம்பர்மீ 22உ | ஸ 37

## ஆர்யதர்மம்

ஸநாதனதர்மத்தைப் போதிக்கும் ஓர் சிறந்த வாரப்பத்திரிகை. வருஷ சந்தா ரூ. 3 0 0.
தனிப் பிரதி அணா 1.

விளம்பர விகிதம்

பக்கம் 1-க்கு தடவை 1க்கு ரூ. 20 0 0
இஞ்சு 1-க்கு தடவை 1க்கு அணா 0 8 0

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
ஆர்யதர்மம் ஆபிஸ்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

## வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.

துருபிடித்த ஸம்ப்ரதாய மதம்! ஸர். ராதாக்ருஷ்ணன் நமது மத ஸம்ப்ரதாயங்களை கௌரவத்துடன் அழைக்கும் சொற்களில் இஃதொன்று. உண்மையாக அவர் அப்படி அபிப்ராயப்பட்டால் அவர் காலஞ்சென்ற ஸர்ஜான் உட்ராப் நூல்களைப் படித்தல் நலம்! ஸர் முதலிய தற்கால புகழுக்காக பேசுவதாயின் இவர் வேதாந்தம் கிராமபோன் ப்ளேட்டுக்குப் பயன்படும்!

சென்னைக்கு இதுவும் வந்து விட்டதா? மேனாட்டிலிருந்து நவநாகரிகங்கள் பெரும்பாலும் வடநாட்டிற்கே இறக்குமதியாகின்றன! பின்னர் படிப்படியாக சென்னைக்கு வருகிறது வழக்கம்! பெண்களும் ஆண்களும் வடநாட்டு வழக்கத்தை வெகுதூரம் அடைந்துவிட்டனர். வீடுகளும் 4, 5 மாடிகள் கட்டப்படுகின்றன. அங்கு அடிக்கடி வரும் பூகம்பம் பாக்கியாயிருந்தது. அதுவும் சென்றவாரம் தென்னாட்டில் தோன்றிவிட்டது. ஆனால் அதிக ஆபத்தில்லாததற்கு சந்தோஷப்படவேண்டும்!

பூமிக்குள் பாதையாம்! சென்னை நகர பரிபாலன ஸபை பீச்சுக்குப்போகிறவர்களுக்கு ஸஹாயமாக பூமிக்குள்ளேயே ஓர் பாதை போடப்போகிறதாம்! மேல் நாட்டைப் பூர்ணமாக அநுஸரிப்பதே முதற்கடமை என நினைப்பது ஸகஜமாகிவிட்டது! இதைவிட இன்னும் எவ்வளவு உபயோகமான முக்யமான வேலைகளிருக்கின்றன.

கணக்களித்தால் அழகாயிருக்கும்! சென்னை நகரஸபை மாகாணத்திலுள்ள எல்லா ஸபைகளுக்கும் வழிகாட்டுவதாகும்! இது ஓராண்டிற்கு எத்தனை வரவேற்பளிக்கிறது? அதற்கான செலவென்ன? என்பதைத் தெரிவித்தால் பொதுமக்கள் பணம் பொறுப்பற்றவரால் ஜனநாயகத்தின் பெயரால் எப்படி பாழாக்கப் படுகிறதென்பது நன்கு விளங்கும்!

கடன் கடன் தானே? மறுபடியும் சென்னை தேசீய மந்திரி ஸபை கடன் வாங்கிற்று. செலவிற்குமேல் வரவிருக்கிறதென்றும் லாபமுள்ள வழியில் செலவு செய்யப்படுமென்றும் பத்ரிகைகள் பல்லாண்டு பாடுகின்றன! ஆனால் கடன்காரருக்கு ஓர் வழி காட்டிய கருணை அரசாங்கம் பொது விஷயத்திற்குத் தானே செலவு செய்கிறோமென்று மிக்க கடனாளியாகலாமா?

பாஞ்ச ராத்ர தீக்ஷை!! குடந்தை ஸௌராஷ்ட்ர ஸபை, ஆலயங்களில் அர்ச்சகராக வருபவருக்கு பூர்ண யோக்யதையும் தீக்ஷையும் இருக்கவேண்டுமென இத்தகைய கார்யம் செய்தது மிகமிகக்கொண்டாடத்தக்கது. ப்ராசீனமான தேவாலயங்களும் இம்முறையைக் கைப்பற்றி அர்ச்சகர்களை முதலில் ரக்ஷிக்க வேண்டும்!

நன்றி! நன்றி!! கலியில் தேசீய ஆக்ஷியில் பற்பல மத விருத்தமான கார்யங்களைக் காணலாம்! இன்று பஞ்சமரை ஆலயத்தில் நுழைப்பவர், கடவுள் முன் எல்லோரும் ஒன்றே என்ற நியாயத்தைத் தழுவி பூசாரியாகவும் அவர்களை அமர்த்தலாம். அப்படி தர்மம் அழிக்கப்படும் போது துணிவாகப் பலருக்குப்பொருள் செலவு செய்து பாஞ்சராத்ர தீக்ஷை செய்துவைத்த ஷை ஸபையை எவ்வளவு கொண்டாடினாலும் போதாது!! மஹிஷீக்கு ப்ரஸவ வேதனை! மஹிஷத்துக்கு மன்மத தாபம்!! என ஓர் பழமொழி உண்டு. இதை டில்லி மஹா ஸபையைச் சார்ந்தவர் தேசீய தலைவருக்கு எடுத்துக்காட்டி நாங்கள் ஆலயத்தை இடிப்பவருடன் போர் புரிந்து நாங்கள் சாக, உமக்கு ஊர்வலமா? விருந்தா? எனக்கேட்கிறார்!

தென்னாலியில் நவராத்ரி பூஜையா? ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் சென்ற பூர்ணிமை யன்று குண்டூரிலிருந்து விச்வரூப யாத்ரை கிளம்பி சீராளா சென்று தென்னாலியில் நவராத்ரி பூஜை நடத்தலாமென தெரிகிறது!!

நவராத்திரியில்
ஸ்ரீ அம்பாள் அநுக்ரத்தைப்பெற
ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ரநாமத்தை
பாராயணம் செய்யுங்கள்.

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0.
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால்சிலவு அணா 0—1—0

இந்த லலிதாஸஹஸ்ரநாம புஸ்தகம் ஸ்ரீமான் கணேசய்யாவர்களால் மொழி பெயர்த்து அச்சாகிவருகிறதும், ஏற்கனவே ஆர்யதர்மத்தில் பிரசுரமாகி வந்ததுமான ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம புஸ்தகத்தை அநுஸரித்து ப்ரிண்ட் செய்திருக்கிறது

'ஸௌந்தர்ய லஹரீ.'

காபி ஒன்று விலை ரூ. 1—8—0
தபால் சிலவு பிரத்யேகம்.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் சிலவு வேறு] [விலை அணா 0—8—0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்த்தந அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:— T.B. சீதாராம் டென்டிஸ்ட், பெரியதெரு; கும்பகோணம்

# தேசிகன் தேன் மொழிகள்.

## விவாகச்சீர்திருத்தம்.

### 1. வரதக்ஷிணை.

ஸமூஹ சீர்திருத்தம் என்ற நவீன இயக்கத்தில் கொஞ்சம் ஈடுபட்டிருந்தும், ஸ்ரீமகா ஸ்வாமிகளிடம் விசேஷ பக்தியுடைய பிரபு ஒரு நாள் வந்து வந்தனம செய்து பேசிக்கொண்டிருக்கிற மத்தியில்,

பிரபு: பிராஹ்மணர்கள் சாப்பாட்டுக்குக்கூட திண்டாடிக்கொண்டிருக்கிற இக்காலத்தில், கல்யாணங்களில் கண்டபடி பணத்தைச்செலவழிக்கிறார்கள். இப்படி பணத்தைச்செலவழித்து அநேக பெரியகுடும்பங்கள் க்ஷீணித்துவிட்டன. கல்யாணத்தை ஒரு நாளில் நடத்திவிட்டால், நான்கு நாள் ஐந்து நாள் என்று இழுக்காமலிருந்தால், இவ்வளவு செலவும் குறைபடும்.

மஹாஸ்வாமிகள்: விவாஹ ஸந்தர்ப்பங்களில் அனுவசியமாக ஜாஸ்தி பணம் செலவழிகிறது வாஸ்தவம். ஆனால் அதற்கும் விவாஹ சடங்குகள் நாலைந்து நாட்கள் நடப்பதற்கும் என்ன ஸம்பந்தம்?

பி: சடங்கை நீட்டினால் செலவும் ஜாஸ்தி தானே ஆகும்.

ம: அப்படியல்ல. விவாஹ காலத்தில் ஜனங்கள் செய்து வரும் தமாஷாவையும் வைதிகக்கிரியைகளையும் பகுத்தறியாமல் சொல்கிறீர்கள். வைதிக கர்மாவுக்குச் செலவே கிடையாது. பிடி அக்ஷதையும் ஸமித்தும் இருந்தால் போதும். இத்துடன் நின்று கொண்டால், பணத்திற்காவது மனதிற்காவது எவ்வித சிரமுமன்னியில், எத்தனை நாள் வேண்டுமானாலும் [illegible] பாட்டுக்கச்சேரி, விருந்து, வாண வேடிக்கை என்று பணம் செலவழிக்க வாரம்பித்தால், அது நம் மதத்தின் குற்றமா? ஒரு செலவையும் அபேக்ஷிக்காமல் நிரபாதியான வைதிக கார்யங்களைக்குறைக்க வேண்டுமென்று சொல்ல எவ்வித நியாயமும் கிடையாது.

பி: வைதிகத்திற்கு செலவு இல்லை என்றிருந்தாலும், அவை முடியும் வரை ஸ்நேகிதர்களையும் பந்துக்களையும் ஆதரிக்க வேண்டியிருப்பதால், மனதிற்கும் பணத்திற்கும் சிரமம் தானே.

ம: அவ்விதம் நினைத்தீர்களேயானால், முதல் நாள் மாத்திரம் தான் அவர்கள் வரவேண்டுமென்று அழைப்பு அனுப்புங்களேன். மற்ற நாட்களில் பெண்ணும் மாப்பிள்ளையும் தான் அவசியமாக இருக்க வேண்டியவர்கள். இரண்டாம் நாள் காலையில் மற்றவரெல்லாரையும் அனுப்பி விடலாம்.

பி: அது மரியாதையாய் இருக்குமா?

ம: ஒரு நாள் கல்யாணமாயிருந்தால், எப்படியும் மறு நாள் காலையில் அவர்களை அனுப்பத்தானே போகிறீர்கள்?

பி: வாஸ்தவம். ஆனால் அப்பொழுது, இரண்டாம் நாள் கார்யமில்லையென்று தெரிந்துவிடுமாதலால் அவர்களே புறப்பட்டு விடுவார்கள்.

ம: இப்பொழுது இரண்டாம் நாள் காலை முதல் அவர்கள் இருக்க வேண்டுமென்று நீங்கள் அபேக்ஷிக்கவில்லை யென்று அவர்களுக்குத்தெரிந்து விட்டால், தானே புறப்பட்டுவிடுவார்கள். தன்னை இருக்கவேண்டுமென்றபேக்ஷிக்க வில்லை யென்று தெரிந்து விட்டால், மரியாதையுள்ள எவரும் உங்களைத் தொந்திரவு செய்துகொண்டு தாமதிக்கமாட்டார்கள். இதிருக்கட்டும். கல்யாணத்தில் பந்துக்கள் முதலானவர்களுக்கு அன்னம் போடுவது தாங்கள் இவ்வளவு பயப்படும்படி ஒரு செலவு கார்யமா? இப்போது நடந்து வரும் கல்யாணச்செலவுகளை கவனித்துப்பார்த்தீர்களேயானால், வைதிகச்செலவும், போஜனச்செலவும் இதர அம்சங்களை உத்தேசித்து எவ்வளவோ அல்பமாயிருக்கும். அப்படியிருக்க, இன்னம் இந்தச்செலவுகளை மாத்திரம் குறைக்க எண்ணுவது என்ன நியாயமென்று தெரியவில்லை. இவைகளை விட வெகு ஜாஸ்திப்பணச்செலவை யபேக்ஷிக்கிறவைகளும், மிகவும் அவசியமற்றவைகளும், விட்டுவிடக்கூடியவைகளுமான அநேக அம்சங்கள் இருக்கின்றன. உங்கள் பந்துக்களுக்கெல்லாம் விலையுயர்ந்த ஆடைகள் வாங்க வேண்டுமென்று நம் மதம் சொல்லவில்லை. கண்டவர்களையெல்லாம் அழைத்து பணச்செலவு செய்து விருந்தளிக்கவும் சொல்லவில்லை. பாட்டுக்கச்சேரி வைத்து பணத்தைச்செலவழிக்கவேண்டுமென்றும் நம் மதம் சொல்லவில்லை மாப்பிள்ளைக்குக்கண்டவாறு வரதக்ஷிணை கொடுக்க வேண்டுமென்றும் நம்மதம் சொல்லவில்லை. இக்கடைசி விஷயம் நம் தமிழ் நாட்டுக்கென்று ஏற்பட்ட ஒருதுக்ககரமான விஷயம்.

பி: எப்படியோ இக்கெடுதல் நம் ஸமூகத்தில் நுழைந்து விட்டது. தங்கள் செல்வாக்கை உபயோகித்தாவது இதைத் தொலைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ம: அப்படியே! என்னால் கூடிய மட்டும் செய்து வருகிறேன். ஆனால் என் செல்வாக்குஎவ்வளவு? இக்கெடுதலை உண்டு பண்ணிவிட்டு நிலை நிறுத்தி வருகிற அவனுடைய பிரபாவம் எவ்வளவு?

பி. அவன் யார்?

ம: வேறு யார்? ஆசாபிசாசுதான். அவனையே காமம் என்றும் லோபம் என்றும் சொல்வார்கள். பிராஹ்மணர்கள் தங்கள் மதத்திற்குக் கட்டுப்பட்டும் தங்கள் ஆசார்யார்களுக்கு அதீனமாகவும் இருந்து வந்த வரையில இம்மாதிரி கெடுதல்கள் காணப்படவில்லை. தங்களுக்கு ஸ்வபாவ ஸித்தமான திருப்தியை விட்டு, ஆசைக்கும் போரசைக்கும் இடங்கொடுத்தவுடன், இந்த வாசுல்கம் உள்பட அநேகக் கெடுதல்கள் உள் நுழைந்தன. இவை மனதில் குடி கொண்டிருக்கும் வரையில் நானோ, வேறு யாரோ, என்னபுத்திமதியோ உபதேசமோ செய்தாலும் காதில் ஏறாது. மிகவும் பலசாலியாயிருக்கிற காமன் அதே காலத்தில் விபரீதமான உபதேசம் செய்து கொண்டிருப்பான். அதுவே பலிக்கும்.

பி: ஆசை, போரசை எல்லாம் பணம் கேட்கிற மாப்பிள்ளையைச்சேர்ந்தவர்களிடமல்லவா இருக்கும்? அதற்கு பெண் வீட்டுக்காரர்களல்லவா அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது?

ம: மாப்பிள்ளை வீட்டுக்காரர்களுக்கு மாத்திரம் தான் போரசை என்பதை நானொப்புக்கொள்வதற்கில்லை. பெண் வீட்டுக்காரரும் அப்படியே தான்.

பி: அதெப்படியிருக்க முடியும்? பணம் கொடுக்கிறவர்களல்லவா அவர்கள்?

ம: வரதக்ஷிணையே இல்லாமல் கல்யாணம் செய்து கொள்ளத்தயாராயிருக்கிற ஒரு வைதிகப்பையனும், இரண்டாயிரம்ரூபாய்கொடுத்தாலொழிய முடியாதென்று சொல்கிற ஓர் உத்யோகஸ்தன் பையனும், இருந்தால் பெண்ணின் தகப்பனார் எவனைப் பொறுக்குவார் சொல்லுங்கள்.

பி: தன் ஸ்திதியை விற்றுவது அந்த உத்யோகஸ்தனுடைய பையனே வேண்டுமென்று தான் கருதுவார்.

ம: ஏன்?

பி: தனக்கு இப்பொழுது அஸௌகர்ய மேற்பட்டாலும், பின்னால் தன் பெண் ஸௌக்கியமாயிருக்கட்டுமே என்ற எண்ணம் தான் காரணம்.

ம: அப்படியே. அதாவது, தன் பெண்ணுக்கு அந்த உத்யோகஸ்தனுடைய ஆஸ்தி வேண்டு மென்ற எண்ணம்.

பி: அப்படித்தான் சொல்லவேண்டும்.

ம: போரசை ஒரு பக்கத்தில் மாத்திரம் இல்லை யென்று தெரிந்ததா?

பி: இப்பொழுது அஸௌகர்யமிருந்தாலும் தன் பெண் பின்னால் ஸுகமாய் வாழவேண்டுமென்று நினைத்தால் தப்பிதமா?

ம: தப்பிதமென்று சொல்லவில்லை. அவளுடைய பர்த்தாவாவது மாமனாவதுபணக்காராயிருந்தால், அவள் ஸுகமாய் வாழ்வாளென்று நினைக்கிறது தான் தப்பிதம். மற்றவர்களுடைய அபிப்பராயம் எப்படியிருந்த போதிலும், பிராஹ்மணனாக பிறந்தவனுக்கு தன் பயிற்சியினாலும் அனுபவத்தினாலும், பணத்திற்கும் ஸுகத்திக்கும் காரண கார்ய சம்பந்தம்கிடையாதென்றும், பணமிருந்தால் ஸுகம் கிடைக்கு மென்ற எண்ணம் பிரயோஜனமற்றதான தவறுதலான எண்ணம் என்றும், தெரிய வேண்டாமா? தன் பெண் ஜனிக்கும் போதே அவளுக்கு இந்த ஜன்மத்தில் அனுபவிக்கவேண்டிய ஸுகம்இவ்வளவு, துக்கம் இவ்வளவு, என்று முன்னமேயே தீர்மானித்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், அந்த அளவில் கொஞ்சம் சேர்க்கவாவது குறைக்கவாவது தனக்கும், யாருக்கும், சக்தி கிடையாதென்றும், தெரிய வேண்டாமா? இவ்விதமாகத் தன்னையும், ஸகல கர்ம பலன்களையும் வகுத்துக்கொடுக்கும் பகவானையும் மறந்து விட்டு, பணம் வேண்டுமென்ற துச்சமான ஆசைக்கு இடங்கொடுத்தால், சிரமம் ஏற்படத்தானேற்படும்

பி: இந்த வா சுல்கம் தொலைய தாங்கள் தான் என்ன வழி உத்தேசிக்கிறீர்கள்?

ம: பிராஹ்மணனுக்கு முன்னிருந்த மனஸ்ஸமாதானமும் திருப்தியும் திரும்பி வந்தால் தான் வழி.

பி: தற்காலம் ஜன ஸமூஹம் இருக்கும் நிலையில் இது ஸாத்தியமாய் தோன்றவில்லை.

ம: கேட்டால் கொடுக்க சக்தியற்றும், கொடுக்க நினைத்தாலும் கொடுக்க முடியாமலும், இருக்கக்கூடிய தாரித்திரியதசை பிராஹ்மணனுக்கு வந்தாலும், தானே நின்று விடும்.

பி: இந்த நிலை வேண்டுமானாலும் வந்து விடலாம். அதுவும், வெகு சீக்கிரமே வந்து விடும் என்று கூடத் தோன்றுகிறது.

ம: இன்னம் அந்த ஸ்திதி வரவில்லை. அதற்குள் பிராஹ்மணர்கள் விழித்து கொள்ள மாட்டார்களா வென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

பி: பெண்களை அதி பால்யத்தில், எப்படியும் ருதுவாவதற்கு முன், விவாஹம் செய்து கொடுக்க வேண்டு மென்ற நிர்ப்பந்தத்தினாலேயே இந்த வா சுல்கத்தொந்திரவு ஏற்பட்டிருப்பதாக எங்கள் சிலருக்குதோன்றுகிறது.

ம: அதெப்படி? ஹிந்து ஸமூஹம் ஏற்பட்டநாள் முதற்கொண்டு பால்ய விவாஹமிருக்கிறது, வரதக்ஷிணை வழக்கம் இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறது. தெலுங்கு தேசத்திலாவது கர்னாடக தேசத்திலாவது, பொதுவாய் வடதேசத்திலாவது, இந்த வரதக்ஷிணை சிரமம் கிடையாது. தமிழ் தேசத்தை விட இன்னும் அதி பால்யத்தில் அங்கு விவாஹம் நடக்கிறது. இருந்தாலும் இந்த வரதக்ஷிணை சிரமம் அங்கில்லை. அப்படியிருக்க, இதற்கும் பால்ய விவாஹத்திற்கும் என்ன ஸம்பந்தம்? ஒரு ஸம்பந்தமும் சொல்வதற்கில்லை, வயதான பிறகு விவாஹம் செய்யவேண்டு மென்று கொள்கையுள்ள சிலர்கள் மாத்திரம், பால்ய விவாஹத்திற்குக் கொஞ்சமேனும் ஸம்பந்தமில்லாத அநேகம் அனர்த்தங்களை, அதினால் ஏற்பட்டவை போல, வேண்டுமென்று சொகிறார்கள். அப்படிச்சொல்வதில் சீர்திருத்தக்

(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்க)



5 II

# திருப்புகழும் பக்தி ரஸமும்.

ஆசார்யவான் புருஷோவேத" என்ற சாந்தோக்யச்ருதியின் படி எல்லோரும் ஆசார்ய மூலமாகவே வித்தையை அடைதல் வேண்டும். அதுவே ஸாரதரம் என்று கூறி ப்ருஹதாரண்யகத்தில் "ப்ரும்மவா இதமக்ர ஆஸீத்" ததாத்மானமேவாவேத்" என்று கூறியிருத்தல் முரண்படுவதாக சங்கை நிகழாவண்ணம் ஸர்வவித்யாதீச்வரனை சங்கரனுக்கும் ஆசிரியனாக அபிநயித்துக் காண்பித்த அவஸரத்தைக்கொண்டாடுகிறார் ஈசனாயிருந்தாலும் நாரதர் பிருகு இவர்களைப் போல் "அதீஹிபகவ:" என்ற சாஸ்திரப்படி குருவே! ஓதுவிக்க வேண்டும் என்ற நியமத்தை அனுஷ்டித்ததாக நிரூபிப்பானாய் "முத்தைத்தரு"என்று ஆரம்பித்து "குருபர" என்றது வரை விளக்கலுற்றார். குருவானவர் ப்ரஸன்னமாயிருக்கும் பொழுதே வித்தையை கோடல் வேண்டும் என்பதால் மந்தஹாஸ முகமுள்ள ஹே வடிவேலா என வேண்டுகின்றார்.

'சுத்தவித்யாங்குராகாரத்விஜபங்க்தித்வயோஜ்வலா" என்றார் மகரிஷியும்.

"அத்திக்கிறை" என்றதினால் அசுர ஸம்ஹாரம்செய்து தேவசேனா ஸமேதராய் விளங்குவதுபோல தமோ ரஜோ குணங்களை நிவர்த்தி செய்து சுத்த ஸத்வ விருத்தியை அருள வேண்டுவது என கருத்துவிளங்கும்.

"முத்திக்கொருவித்து" என்பதினால் "தமேவைகம் ஜானத ஆத்மானம்" என்றபடி குஹஸ்வரூபமாய் ஹ்ருதய குகையில் அமர்ந்த உன் ஸ்வரூப ஞானமே முக்தி பீஜம் என்றபடி.

"குருபர" என்றதினால் "ப்ரும்ம விதாப்ஞோதிபரம்" என்பது போல் குருவே பரம்பரமே குரு என்றதுநுதலிற்று. "அனன்யப்ரோக்தேகதிரத்ரநாஸ்தி" என்ற கடவல்லீ வசனமும் காண்க.

"ச்ருதியின் முற்பட்டதை" என்றதினால் 'யோவேதாதௌஸ்வர: ப்ரோக்த: என்ற உபநிஷத்தர்த்தம் உத்கோஷிக்கப்பட்டது. 'ஆத்ய: ப்ரணவ. ச்சந்தஸாம" என்ற காளிதாஸன் "ஸ்ரவத்யனோங்கிருதோவேத: என்று ஸ்மிருதியும் கூறு நிற்கும் "இருவரும் முப்பத்து முதர்க்குத்தமரும்" என்றதினால் ஸமஸ்த்தேவ ஸேவ்யமானத்வம் உரைக்கப்படுவதுடன் "த்ரயஸ்திரிம் சத்வைவதேவா: என்ற பிருஹதாரண்யகத்தின் பாவமும் நன்து விளக்கப்பட்டது.

இனி இராவண வதம் செய்தும் அமிருத மதனம்செய்து தேவர்களுச்கு அமுது அளித்தும் பார்த்தஸாரதியாய் பகலை இராவாக்கி பக்தர்க்கருள் புரிந்தும் என்று விஷ்ணுவிற்கு விசேஷணங்கள் கொடுத்ததின் கருத்தைச சிறிது விசாரிக்கப் புகுவோம்.

தத்க்ரதுநியாயம் என்று ஓர்நியாயம். எவ்வித ஸங்கல்பத்துடன் எந்த குணமுள்ள வனை ஈசனை த்யானிக்கின்றாரோ அந்த பலத்தை அவனால் அளிக்கப்பட்டு அடைகிறான் என்பது இந்நியாயத்தின் ஸாரம். தமோ ரூபியான இராவணனது பத்துத்தலைகளையும் ச்சேதனம் செய்யச் செய்ய அவை திரும்ப முளைத்தன. அதுபோல் அகங்காரக் கிழங்கானது அறுத்தெரிய எரிய திரும்ப முளைக்குமாம். கடைசியில் இராமர் ஓரே பாணத்தினால் பனங்காய்களை வீழ்த்துவதுபோல் அவைகளை வீழ்த்தி அழித்தனரன்றோ? அதுபோல் சாம சாக்ஷாத்காரமென்ற ஒரு விருத்தி ஞானத்தினால் அவித்யை வேரற அறுத்திடவேண்டுமென்பது கருத்தாற "பத்துத்தலை தத்தசணைதொடு" என்றா

அமிருத மதனம் செய்து தேவர்களுக்கு அமுது ஊட்டினமையால் ஞானமிர்தத்தை ஊட்டவேண்டுமென்பது கருத்தாகும். சமுத்திரம் கடைந்து அமிர்தமெடுத்து தேவர்களை உண்ணுவிப்பான் வேண்டி மந்தரத்தைப் பெயர்த்து கருடனால் கொண்டுபோய் சேர்த்தும் கடையுங்கால் மந்திரமலைமுழ்கவே ஆமையாய் நின்று தாங்கியும் மத்துமேலே குதிக்கவே மேல்நின்று அழுத்தியும் வாசுகி அயரவே அவனுடலில் புகுந்து பலப்படுத்தியும் தேவர்கள் இழுக்கமுடியாமல் திணரவே தானும் நான்கு கைகளுடன் பிடித்துக்கடைந்தும் உதித்த அமுதத்தை தன்வந்திரியாய் கொண்டுவந்து கொடுத்தும் மோகினி வேஷத்துடன் அசுரர்களை ஏமாற்றி தேவர்களுக்கு மாத்திரம் அமுதம் பரிமாரி தேவர்களை களிக்கச்செய்தும் இவ்விதம் சரணாகதர்களை ரக்ஷிப்பதற்காக தனது பும்ஸ்த்வத்திலிருந்தும் சலித்தாவது ரக்ஷிக்கும் குணமுள்ள மகானுபாவன் புருஷோத்தமனது மருமகன் என்ற குறிப்பினால் நீயும் அவ்வாறே எம்மைக்காத்தருள் என்றபடி.

"பக்தர்க்கிரதத்தைக் கடவி" என்றதினால் பார்த்தசாரதியான திருக்கோலத்துடன் பக்தவாத்ஸல்யம் பிரதர்சனம் பண்ணின பரந்தாமன் என்றது. பீஷ்மர் சரதல்பத்தில் சயனித்துக்கொண்டு பகவானை துதிசெய்யுங்கால் முதலில் 'த்ரிபுவனகமனம் தமால நீலம்' என்றாரம்பித்து பார்த்த ஸாரத்யம் பூண்ட பகவானிடம் என்மனது பதியட்டும் என்று கூறி "ஸ்வநிககமமபஹாயமத்ப்ரதிஞாம்" என்றதினால் ஆயுதமெடுப்பதில்லை என்ற தனது ப்ரதிக்ஞையை நழுவவிட்டு கிருஷ்ணனை ஆயுதம் எடுக்கச்செய்கிறேன் என்ற என் ப்ரதிக்ஞையை நிறைவேற்றி வைத்த பக்த பாரதீனன்றோ என பாரவச்யத்துடன் கறைகிறார் அதாவது—

பாரதயுத்தம் நடக்கிறது. பீஷ்மருடன் பத்துநாள் யுத்தம். 8 நாள் ஆனதும் துரியோதனன் பீஷ்மரைப்பார்த்து கோபத்துடன் தாத்தா என்றான். என்ன என்றார் நீர் பாண்டவ பக்ஷபாதி என்பது இப்போது தான் விளங்கிற்றென்றான். எதனால் என்றார் உமக்கெதிரில் நின்று யுத்தம் செய்யவும் ஒருவனால் முடியுமோ பரசுராமனைத் தோற்கடித்த பலவானன்றோ? நீர் அவ்விதமிருந்தும் அர்சுனனிடமிருந்த அன்பினால் விளையாட்டாகவே யுத்தம் செய்கிறீர்போலும் என்று சீறினான். பார்த்தார் பீஷ்மர். சுயோதனா! நாளையதினம் யுத்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை ஆயுதமெடுக்கச் செய்வேனென்றார். அதாவது அர்சுனன் திணறும்படி கடுமையாய் யுத்தம்செய்தால்தான் கண்ணன் ஆயுதமெடுப்பானாதலால் அவ்வளவு கடுமையாக போர்புரிவேன் என்பது பொருள். மறுநாள் யுத்தகளத்திற்குவந்தார். வஞ்சனையின்றி ஸர்வவல்லமையுடன் போர் புரிகின்றார். ஆயினும் சர்வேச்வரன் அன்றோஸாரதி. ஹநுமானேத்வஜத்தில் என்ன செய்வார். அத்தருணம் பக்த வத்ஸலனான பரமாத்மா தனது ப்ரதிக்ஞையும் நழுவவிட்டு பீஷ்மர் பிரதிக்ஞையை நிறைவேற்றவேண்டி சக்ராயுதத்தைத் தாங்கி தேர் நின்றும் குதித்து உத்தரீயம் புரள, பூமி அதிர, யானையைக் கொல்லவரும் சிங்கம்போல் என்முன் வந்தானே, அவனிடம் என் மனது பதியட்டும் என்ற துதிப்படி பக்தவாத்ஸல்யத்தை காண்பித்த பரமனின் மருமானே! நீயும் என்னிடம் வாத்ஸல்யத்தினால் நீதி, நியதி, கருமம் என்ற ஒன்றும் கவனியாது காக்கவேண்டு மென்பது பொருள்.

சக்ரத்தினால் பகலை இரவாகச் செய்து என்பதும் பக்த ப்ரதிக்ஞாபாலனத்தையே புகழ்வதாகும். ஜயத்ரதனைக் கொல்வதாக சபதம் செய்தான் பார்த்தன். இன்று சூர்யாஸ்தமனத்திற்குள் அவன் தலையை வீழ்த்தாவிடில் அக்னிப்பிரவேசம் செய்வேன் என்றானும். ஜயத்ரதனோ ஒளிக்கப்பட்டு விட்டான். மணி ஐந்தாகிவிட்டது பார்த்தான் கருணாநிதி ஆழியால் ஆதித்யனை மறைத்தான். அஸ்தமித்ததென ஆரவாரத்துடன் யாவரும் வெளி வந்தார்கள். அக்நி வளர்த்தாகி விட்டது. ஜயத்ரதனும் வேடிக்கை பார்க்க முன் வந்தான். ஆழியை அகற்றினான் அரவிந்தநாபன். கதிரவனும் கண்பட்டான். அகப்பட்டான் சத்ரு. அர்ச்சுனன் பிரதிக்ஞை நிறைவேறியது. இப்படி பக்தர்களைகைதூக்கிவிடும் பாரம்பூண்ட பகவானின் மருகோனே பக்ஷமுடன் என்னை ரக்ஷித்தருளவேண்டும் என்று இம்மாதிரியே எல்லாப் பாடல்களிலும் இருப்பதால் விரிக்கில் பெருகுமென நினைத்து ஆங்காங்கு சில பாடல்களையே எடுத்து விவரிக்கின்றேன்.

குறிப்பு:— பாடல்களின் இலக்கங்கள் த. வ. சுப்பிரமணிய பிள்ளை பதிப்பை அனுசரித்து கொடுக்கப்பட்டிருக்கின்றன.

3. "உனைத் தினந்தொழுதிலன்—"என்னும் பாடலில் சிரவணம் கீர்த்தனம் ஸ்மரணம் அர்ச்சனம் ஸத்ஸங்கம் முதலியவை செய்திலேன் என் பயமறவே மயிலின் முதுகின்மேல் ஏறிவரவேண்டு மென்றலால் "யதாஹி— அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே அதஸோ அபயம் கதோபவதி" என்ற ச்ருதிப்படி அபயத்தை அடைவதற்கு ஸாதனம் ஞானம். அது குர்வதீனமான வேதாந்த விசாரத்தினாலேயே ஸாத்யம். அதை புரிந்திலனாதலால் "யமைவேஷ வ்ருணுதேதெநலப்ய:, தஸ்யைஷ ஆத்மாவ்ருணுதேதநூம் ஸ்வாம்" என்றபடி மயூராதிரூடனாய் மகாவாக்யகூடமான பிரும்மத்தை உபதேசித்தருளல்வேண்டும் எனப் பிரார்த்தனை நுதலிற்று.

59. "தொந்திசரிய" என்னும் பாடலில் ஜராதிக்ரஸ்தனான என்னை ஜடுதியில் வந்து அனுக்ரஹிக்கவேண்டுமென "ஜன்மம்ருத்யு ஜராவ்யாதி துக்க தோஷாநுதர்சனம்" என்ற கீதை 13-வது அத்யாயததில் கூறப்பட்ட ஞானஸாதனம் கமிலுவதுடன் "எந்தை வருக ரகுநாயக வருக" என்று கௌசல்யை தாலாட்டிய கருமுகில் வண்ணா என்னை கருவில் உதிக்கவிடாதே என்ற வேண்டலும் விளங்குகிறது. தொடரும்

(2ம் பக்கம் தொடர்ச்சி)

காரர்களுக்கு ஓர் உத்ஸாஹம். ஆனால் வாஸ்தவத்தில் அப்படிச்சொல்ல எவ்வித, ஆதாரமும் கிடையாது. வாஸ்தவத்தில் கவனித்துப் பார்த்தால், பெண்களுக்கு வயதான பிறகு கல்யாணம் செய்கிறதானால், வரதக்ஷிணை ஜாஸ்தியாகத்தான் ஆகுமென்று எனக்குத் தோன்றுகிறது,


## அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 12. திருக்குறள் நீதிக்கதைகள். | 0 | 10 | 0 |
| 13. தசகுமார சரித்ரம் | 0 | 6 | 0 |
| 14. திருப்புகழ் ரத்னமாலை | 0 | 3 | 0 |
| 15. கந்தாலங்காரம் | 0 | 2 | 0 |
| 16. திருஞான சம்பந்தர் | 0 | 2 | 0 |
| 17. விசாரசன்மர் | 0 | 3 | 0 |
| 18. மூர்த்தி நாயனர் | 0 | 3 | 6 |
| 19. திருநாவுக்கரசர். | 0 | 2 | 0 |
| 20. குகன். | 0 | 4 | 0 |
| 21. திருவகுப்பு. | 0 | 4 | 0 |
| 22. பாராயண திருப்புகழ் | 0 | 2 | 0 |
| 23. வேல், மயில் விருத்தம் | 0 | 1 | 0 |
| 24. திருப்புகழ் விருத்தியுரை | 8 | 0 | 0 |

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ ஜனர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்.
டவுன் ஹைஸ்கூல் ரோடு கும்பகோணம்.



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பகுதான்ய-ஞு புரட்டாசி-மீ 6வ

## "மெயில்" பத்திரிகையின் கூற்று!

சென்னை மெயில், பத்திரிகையானது ருது மதீ விவாஹத்தைப்பற்றி நமக்கு உபதேசிக்க முற்பட்டிருக்கிறது. சாரதாச்சட்ட நிர்ப்பந்தத்தால் ஆஸ்திகர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று ஒருவர் ஜகத்குரு ஸ்ரீஸ்வாமிகளைக்கேட்டிருந்தாராம். ஸ்ரீ ஸ்வாமிகள் அநுப்பிய ஸ்ரீமுகத்தில், ருதுவான பிறகு விவாஹம் செய்வது முற்றிலும் சாஸ்திர விரோதமென்றும், சாஸ்திர விரோதமன்றியே விவாஹத்தை நடத்த வேண்டியது ஆஸ்திகர்களின் கடமை யென்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் நியமித்திருந்தார்களாம். இந்த ஸமாசாரத்தை மெயில், பத்திரிகை பிரசுரித்து விட்டு இதை ஆக்ஷேபித்து ஓர் சிறிய தலையங்கத்தைச் சில தினங்களுக்கு முன் எழுதியிருக்கிறது.

ஸ்ரீ ஸ்வாமிகள், ருதுவிற்குப்பிறகு விவாஹம் செய்வது அசாஸ்திரீயமென்பது பழய கதை யென்றும், இப்போது நாம் எந்த நிலையில் இருக்கிறோ மென்பதை ஸ்ரீ ஸ்வாமிகள் கவனிக்க வேண்டு மென்றும், ருதுவான பிறகு விவாஹம் செய்வது சாஸ்திரத்திற்கும் பிராசீன வழக்கத்திற்கும் ஒத்ததாயிருப்பதாக ஹிந்துக்களிலேயே பலர்ஒப்புக்கொண்டிருப்பதாயும், ஆதலால் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீமுகம் விடுத்தது ஸரியல்லவென்றும் மெயில், பத்திரிகை எழுதியிருக்கிறது.

ஸ்ரீ ஸ்வாமிகள் என்ன ஸ்ரீமுகம் விடுத்தார்கள், யாருக்கு அனுப்பினார்கள் போன்ற விவரம் நமக்கு நன்ருகத் தெரியாததால் அதைப்பற்றி நாம் விவரமாக எழுதுவதற்கில்லை. ஆயினும் இப்பத்திரிகை சொல்லும தகவல்களைக்கொண்டே நாம் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது.

நமது வைதிக ஹிந்து மதத்தின் தற்கால துர்க்கதியைப்பற்றி அடிக்கடி நாம் குறிப்பிட்டு வருகிறோம். இதர மதஸ்தர்கள் நமது மதத்தின்மீது அபிப்பிராயம் சொல்லுவதும், அவர்கள் சொற்படி நாம் மதாசாரங்களைத் திருத்தி மாற்றி அநுஷ்டிக்கவேண்டுமென்பதும் ஓர் விபரீதமான துர்பாக்யமான நிலைமையாகும். வைதிக ஹிந்துமதம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. அதைப் பரிஷ்கரித்து ஸம்ரக்ஷித்தவர்களோ சுயநலம் கருதாத தபஸ்விகளான மஹர்ஷிகள். அவர்கள் உலக அநுபவத்தையொட்டியும் சாஸ்திரவிதிகளைத் தழுவியும் நமது ஸமூஹ மதாசாராதிகளை நமக்கு நிர்ணயித்துக் கொடுத்திருக்கிருர்கள். அதன்படி நடப்பதால் நமது ஸமூஹம் மற்றவர்களை விட இன்றும் சிறப்புற்றும் நாகரீகமாயும், வாழ்ந்து வருகிறது. இந்த நிலைமையில் நமக்கு அந்நியர்கள் மதாசார உபதேசம் செய்யவேண்டிய அவசியமொன்றுமில்லை. ஆயினும் இப்போது ஹிந்து மதமென்ருல் வெகுளாகவமாயிருக்கிறது. அதை பரிஷ்கரிக்கவேண்டுமென்று யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். இத்தகைய விபரீத நிலைமைக்கு நம் முன்தோன்றியுள்ள கோடரிக் காம்புகளே காரணமென்பது சொல்லித் தீர்ந்த விஷயம்.

காலரீதியை அநுஸரித்து நாம் நமது பழைய ஆசாரங்களை மாற்றிக்கொள்ள வேண்டு மென்ற உபதேசத்தையே இப்பத்திரிகை நமக்கு முக்யமாகச்செய்கிறது. தற்காலம் உலகமிருக்கும் போக்கை நாம் கவனிக்க வேண்டு மென்றும் கூறுகிறது தற்கால உலகநிலைமை இன்னது தானென்று மெயில் பத்திரிகை நிர்ணயித்து கூற முடியுமா? மத விஷயத்திலோ, ராஜீய, ஸமூஹ விஷயத்திலோ, உலகில் தற்போது நிலையான கொள்கை என்ன இருக்கிறது? எங்கும் குழப்பமல்லவோ காணப்படுகிறது. நினைத்தபடியெல்லாம் பேசுவதும் எழுதுவதும், செய்வதுமாக இருக்கையில் எதை ஆதரிப்பது, எதை நிராகரிப்பதென்ற முடிவை இப்பத்திரிகை செய்து விட முடியுமா? உலகமெங்கும் தான்தோன்றித்தனமே தலைவிரித்தாடுகையில் எதில் நியாயமிருக்கிறதென்று இப்பத்திரிகை கண்டது? தவிர, ஹிந்துக்கள் மத ஸம்பந்தமான முறையில் விவாஹம் நடத்துவதற்கும், உலக நிலைமைக்கும் என்ன ஸம்பந்தம்?

ஐரோப்பா நெடுகப் பொது உடமை தத் [illegible] திரிகையோ, அல்லது அதன் ஜாதியினரோ பொது உடமையை ஆதரிப்பார்களா? உலகப் போக்கை அநுஸரிக்க வேண்டுமென்று நமக்கு இது உபதேசம் செய்கிறதல்லவா? தவிர மதஸம்பந்தமான விஷயத்தில் நமது ஆசார்யர்களைவிடத் தனக்கு அதிக பாத்யமிருப்பதாக இந்த ஆங்கிலேயப் பத்திரிகை பாத்யம் கொண்டாடுவது வெகு விநோதமாயிருக்கிறது. ஹிந்துக்களுடைய மதங்களையோ, மதத்தவங்களையோ, ஆசார ரஹஸ்யங்களையோ, இதர மதஸ்தர்கள் சிறிதாவது அறியமுடியுமா? தனது மதத்தைச் சேர்ந்த பாதிரிகளுக்கு இப்பத்திரிகை இம்மாதிரி ஆலோசனைகூறத் துணிவு கொள்ளுமா? அல்லது கூறினுல் அவர்கள் லக்ஷ்யம் செய்வார்களா? ஆதலால் இந்தப் பத்திரிகை நமக்கு மத உபதேசம் செய்ய எவ்வித அர்ஹதையுமுள்ளதல்ல.

சாரதாச் சட்டத்திற்கு இப்பத்திரிகை பரிந்து பேசுவதாயிருந்தாலும் அதிலும் நியாயமில்லை. சாரதாச்சட்டமானது ஹிந்துக்களின் மதவிஷயத்தில் நேரகப் பிரவேசிக்கிறதென்பதை காந்திஜீயே ஒப்புக்கொண்டிருக்கிருர். திவான்பஹதூர் ஏ. ராமஸ்வாமி முதலியார் போன்றவர்களும் இந்தச் சட்டம் நிர்பந்தப்படுத்தும் தன்மை வாய்ந்ததென்றும் நியாயமற்றதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிருர்கள். முஸ்லீம்கள், தங்கள் மத விஷயங்களில் சட்டஸபை சட்டம் செய்யக்கூடாதென்றும், தங்கள் மதாசாரியர்களே அதில் முடிவு சொல்லக்கூடியவர்களென்றும் வாதிப்பதை மெயில் பத்திரிகை ஆக்ஷேபிக்கக் காணோம். முஸ்லீம் மதஸம்பந்தமான விஷயங்களை முஸ்லீம் ஜட்ஜுகளே விசாரிக்கவேண்டுமென்றும் அவர்கள் கிளர்ச்சி செய்கிருர்கள். அவர்களைப்பற்றி இப்பத்திரிகை என்ன சொல்லுகிறது? மதமும், சட்டமும், பரஸ்பரம், முரண்படும்போது மதக்கட்டளையே பெரிதென ஆஸ்திகர்கள் நினைப்பார்கள். இந்த பாரமார்த்திக தத்வத்தின் நுண்பமான உண்மையை மெயில் பத்திரிகை அறிய வழியில்லை.

கட்டாய ஹிந்தி போன்றவைகளை நிர்ப்பந்தமென்று கண்டிக்க இப்பத்திரிகை சாரதாச்சட்ட நிர்ப்பந்தத்தை மட்டும் ஆதரித்து அதன்படி நடக்கும்படி நமக்கு உபதேசம் செய்வது மிக்க விபரீதமல்லவா? எப்படியும் நமது மதாசாரியர்களின் மதஸம்பந்தமான அபிப்ராயத்தையோ, கட்டளையையோ, மெயில் போன்ற நியூஸ் பத்திரிகை ஆக்ஷேபித்தெழுதுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

# குறிப்புகள்.

## நியாயம் புலப்படுகிறதோ?

எந்த ராஜீயக்கக்ஷியாயினும்ஸரி, வெளியில் பேசும்போது ஒருமாதிரியாகவும் ஸர்க்கார் நிர்வாஹத்தில் புகுந்தால் வேறுமாதிரியாகவும் முரண்படப் பேசுவது ஸஹஜமாகிவிட்டது. சென்னையில் ஜஸ்டிஸ், காங்கிரஸ் கக்ஷிகளின் நிர்வாஹத்தில் இதை கண்கூடாகப் பார்த்துவிட்டோம். வெளி பிரசார காலத்தில் "அதைச் செய்வோம்" "இதைச் செய்வோம்" என்று பகட்டாகச் சொன்னுலும், ஸர்க்காருக்குள் நுழைந்தவுடன் வேறு நியாயம் பேசுவது வழக்கம். நமது காங்கிரஸ் மந்திரிஸபையானது, நீதி நிர்வாஹப் பிரிவினை நிலவரிவஜா, கோர்ட் கட்டணம் போன்ற அநேக விஷயங்களில் வேறு மாதிரியாக ஆகிவிட்டதைப் பார்க்கிறோம். கடைசியாக, காங்கிரஸ்காரர்களை அடக்க ஏற்பட்டதும், அவர்களால் எதிர்க்கப்பட்டதுமான கிரிமனல் திருத்தச்சட்ட பிரயோகத்திலும் நமது மந்திரிகள் முனைந்து நிற்பதும், அதற்கு காந்திஜிகூட ஆதரவு காட்டிப் பேசுவதும் நம் எதிரில் நடக்கிறது. ஜஸ்டிஸ்காரர் ஆக்ஷியிலும் இப்படியே நடந்தது. ஜஸ்டிஸ் ஆக்ஷி நடக்கும் காலத்தில் பிரஜா உரிமைகளைப்பற்றிப் பேசினுல் அவர்களுக்குக் கேலியாக இருக்கும். மெஜாரிடி பலத்தைக்கொண்டு எதையும் செய்துவந்தார்கள். சாரதாச்சட்டம், ஆலயப்பிரவேசம் போன்ற புரட்சிகளுக்கு ஆதரவளித்து பிரஜாஉரிமையைப் பாழாக்கிவந்தார்கள்.

ஆனுல் இப்போது ஜஸ்டிஸ் தலைவர்கள், பிரஜா உரிமைக்கு பங்கமான கார்யம் எதையும் செய்யக்கூடாதென்றும், பலாத்காரமாக எந்த சட்டத்தையும் ஜனங்களின்மீது நிர்ப்பந்தப்படுத்திச் சுமத்தக்கூடாதென்றும் நியாயம் பேச முன்வந்திருக்கிருர்கள். பொப்பிலி ராஜா, ஸர். பி. டி. ராஜன் போன்றவர்களுடைய பேச்சுக்களிலும், ஹிந்தி எதிர்ப்புக் கூட்டத்திலும் இந்தப் பேச்சை அதிகம் பார்க்கிறோம். ஹிந்தியைக் கட்டாயமாக்கக்கூடாதென்ற கக்ஷியை வற்புறுத்துகையில் எந்த ஜனங்கள்மீதும், அவர்கள் விரும்பாத விஷயத்தை கட்டாயப்படுத்தி சுமத்தக்கூடாதென்று பொப்பிலியும், ஸர் ராஜனும் பேசுகிருர்கள். ஸநாதநிகள் இந்த நியாயத்தை வெகு காலமாகவே வற்புறுத்தி வந்தும் எந்த ராஜீயக் கக்ஷியாரும் இதை பொருள்படுத்தவில்லை, ஆயினும் இப்போதுதான் ஜஸ்டிஸுக்கு இது உறைத்திருக்கிறது. இந்தப் பொதுநியாயத்தை அடிப்படையாகக்கொண்டால் பிரஜைகளில் பெரும்பாலோர் விரும்பாத சாரதாச் சட்டத்தையும் ஆலய பிரவேசத்தையும் இவர்கள் எதிர்க்கவேண்டியவர்களே. அப்படியிருந்தும் ஸர், பி.டி. ராஜன் ஆலயப் பிரவேசச் சட்டம் செய்யாததற்காக மந்திரிகளைக் கண்டிக்கிருர். இது நிர்ப்பந்தச் சட்டமல்லவா? கட்டாய ஹிந்தியை எதிர்க்க இவர் பேசும் நியாயம் ஆலய பிரவேசத்தில் எங்கே போச்சு? எப்படியும் ஜனங்கள் மீது நிர்ப்பந்தமாகச் சட்டங்களை சுமத்தக்கூடாதென்ற நியாயம் இப்போது எங்கும் பேசப்படுவதை நாம வரவேற்கிறோம்.



## காந்திஜிக்கு காரேயின் ஸம்பாவனை!

எந்தக்கக்ஷியாயினும் ஸரி, அதில் பலத்த கக்ஷிக்கட்டுப்பாடும், தலைவரிடம் நம்பிக்கையும் அவச்யம் வேண்டியதே. இவ்விஷயத்தில் மற்ற ராஜீயக் கக்ஷிகளை விட காங்கிரஸ் அதிகக்கட்டுப்பாடுடன் இருப்பது விரும்பத்தக்கதே. கக்ஷி கட்டுப்பாட்டை மீறியவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் காங்கிரஸ் தனது கௌரவத்தையும், உறுதியையும் ஸ்திரப்படுத்திக்கொண்டு வருகிறது. காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறிய காங்கிரஸ்வாதிகள் அநேகர் உண்டாயினும், மத்ய மாகாணம் தான் இதில் உலகம்சிரிக்கும் வழியில் பிரஸித்தியடைந்துள்ளது. முன்னம்,ஸ்வராஜ்யக்கக்ஷியில் சேர்ந்து பிரபல காங்கிரஸ்காரராய் வியங்கிய டாக்டர் ராகவேந்திரராவ் என்பவர் கக்ஷிக்கட்டுப்பாட்டை மீறி ஸர்க்கார் உத்யோகமேற்று கவர்னர்பதவிவரையில் ஏறினர். இப்போதோ அந்த ஊரிலேயே டாக்டர் காரே கிளம்பியுள்ளார். இவர் காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறியதுடன், தமது பெரிய தவறை காந்திஜி முன்பாக ஒப்புக்கொள்ளவும் செய்தார்.

இப்படியிருந்தும் டாக்டர் காரே இப்போது தேசத்தலைவராகிய காந்திஜியையே நேரில் விகாரமாகத் தாக்க புறப்பட்டிருக்கிருர். காந்திஜி, நியாயம் சத்யம் இவைகளை மீறிப்பேசுகிறதாயும் அவர் பக்ஷபாதமுள்ளவரென்றும், தம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாய்வலையில் சிக்கிக்கொண்டிருப்பவரென்றும் கண்டபடியெல்லாம் காந்திஜியைத் தாக்கி பத்திரிகைகளில் எழுதியிருக்கிருர். இதைப்பார்த்த காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் போஸுக்கு பெருத்த கோபாவேசம் வந்துவிட்டது. டாக்டர் காரே போன்ற கக்ஷித்ரோஹிகளை ஜர்மானியர் பீரங்கி வாயில் வைத்துச் சுட்டிருப்பார்களென்றும், இந்தியர்களாகிய நாம் அப்படிச் செய்வதற்கில்லையென்றும் போஸ் கூறுகிருர்.

காந்தி பக்தராயும், சிஷ்யராயும், காங்கிரஸ் தலைவராயும் மதிக்கப்பட்டுவந்த டாக்டர்காரே இப்போது நேரிட காந்திஜியையும், காங்கிரஸையும் ஒரு எதிரிபோல் தாக்கமுற்பட்டிருக்கிருர். காந்திஜியும், காங்கிரஸும் தகாத வழியில் தங்கள் செல்வாக்கை உபயோகிப்பதாக காரே கூறுகிருர். மாசற்ற தலைவர் மீதும், ஸபைமீதும் இப்படி அவதூறு கூறுவது அந்யாயமல்லவா? டாக்டர் காரேயின் கூற்றுக்குப் பின்பலமாக ஆயிரக்கணக்கான ஜனங்களும். மாணவர்களும் நின்று காங்கிரஸைத் தாக்கியும், காந்திஜிக்கு "ஸம்பாவனை" செய்தும் வருவதும் விசேஷமா யிருக்கிறது.

## வீட்டுவரி உயர்வுக்கு விமோசனமில்லையா?

கும்பகோணம் முனிஸிபாலிடியார் சில தினங்கள் முன் நடந்த கூட்டத்தில் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிருர்கள். அதிகச் செலவு ஆகும் காரணமாக மின்சார விளக்குகளை நிறுத்திவிட்டு பழையபடி கிரோஸின் எண்ணை விளக்குகளை உபயோகிக்க வேண்டுமென்பது ஒன்று. மற்றொன்று இந்நகரில் கட்ட உத்தேசிக்கப்படும் சாக்கடைகளை பூமிக்குக்கீழ் கட்டவேண்டுமென்பது.இதற்கு அதிகச் செலவு ஆகும். ஆனுல் அதை வரிசெலுத்துவோரிடமிருந்து வாங்கி விடலாமென்று உத்தேசமாம். இந்த பிரேரணையைக் கொண்டுவந்தவர் இதை தெளிவாகக் கூறியிருக்கிருர். ஸ்ரீமான் கந்தஸாமி மூப்பனர், மீண்டும் அதிக வரியைச் சுமத்துவதை பலமாக ஆக்ஷேபித்தும், ஜனங்களின் உண்மையான கஷ்டதசையை எடுத்து விளக்கியும் பேசியிருக்கிருர். தீர்மானமென்னவோ நிறைவேறிவிட்டது.

பூமிக்குள் சாக்கடை கட்டுவதற்காகக் கூடிய அதிகச் செலவை கவர்ன்மெண்டார் கொடுப்பார்களென்பது பகற்கனவேயாகும். ஆதலால் இந்த ஆலோசனை உறுதிப்பட்டால் இந்தச் செலவும் துர்ப்பாக்யசாலிகளான வரிசெலுத்துவோர் தலையிலேயே சுமரப்போவது நிச்சயம். கௌன்ஸிலர்கள் செய்யக்கூடிய உதவி, இதுதான் போலும்? ஏற்கனவே ரிவிஷனில் உயர்த்திய வரியைப்பற்றிப் பொதுஜனங்களுக்குக் காங்கிரஸ் அபேக்ஷகர்கள் கொடுத்துள்ள வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. பலமாதங்கள் ஆகியும் இவ்விஷயமாகக் கௌன்ஸிலர்கள் என்ன செய்திருக்கிருர்கள், என்ன செய்ய உத்தேசமென்பதையும் பொதுஜனங்களுக்கு அறிவிக்கவில்லை. எலெக்ஷனுக்கு முன்பு,தினம் தவருமல் காந்திபார்க்கில் மீடிங்போட்டு "இதைச் செய்வோம், அதைக் செய்வோமென்று பெருமை பேசியவர்கள் இப்போது என்ன செய்துள்ளார்களென்பதைப்பற்றிச் சொல்ல ஒரு மீடிங்கும் நடத்தவில்லையே? அடிக்கடி கூட்டம் போட்டு ஏன் விஷயங்களை விளக்கக்கூடாது?

முக்கியமாக, உயர்த்தியுள்ள அதிக வரியைப்பற்றியே நகரமெங்கும் கவலையும், பேச்சுமாகயிருக்கிறது. வரி உயர்வை ஆக்ஷேபித்து செய்து கொள்ளப்பட்ட மனுக்களின் கதி என்னவாயிற்றென்று தெரியவில்லை. இதற்குள், உயர்த்திய வரி விகிதப்படி பணம் செலுத்த வேண்டு மென்று நகரமெங்கும் டிமாண்ட் நோடீஸ் கொடுத்தாகி விட்டது. ஜனங்கள் அடைந்துள்ள திகிலுக்கு அளவில்லை. கமிஷனர் சில மனுக்களை விசாரித்து ஒட்டகைக்கு பாரம் தள்ளுவது போல் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறாராம். 10 ரூபாய் செலுத்தியவனுக்கு 30 ரூபாய் வரி விதித்து விட்டு அதில் 2 ரூ தள்ளிவிட்டால் போதுமா? சில வார்டுகளில் கண்மூடித்தனமாக எவ்விதக் கொள்கையுமிலாமல் வெகு குரூரமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த வார்டுகளைப்பற்றிய முடிவுஎன்ன? கேழ்வி முறையில்லையா? உயர்த்திய வரியை கொடுக்க வேண்டியது தானு? குடந்தை ஜனங்களின் துரதிஷ்டத்தை வர்ணிக்க முடியவில்லை. எலெக்ஷன் காலத்தில் இதைப்பற்றி அதிகம் பேசப்பட்டதாயினும் இப்போது இதைப்பற்றிப்பேசுவோரைக்காகாணேம்.

காங்கிரஸ் கௌன்ஸிலர்களுக்குள்ளேயே இதில் அபிப்ராயபேதமேற்பட்டிருக்கிறதாம். சில புண்ணியவான்கள் உயர்த்திய வரியை அப்படியே வசூல் செய்துவிடவேண்டுமென்று துடிப்பதாகத் தெரிகிறது. வரி வஸூல் ஸமயம் நெருங்கிவிட்டதால் ஜனங்கள் உறங்காமல் மறுபடியும் பெரிய கிளர்ச்சியை ஆரம்பிக்கவேண்டும். அடிக்கடி கூட்டம்போட்டு பொதுஜன எதிர்ப்பை வெளிப்படுத்தவேணும். வாக்குறுதி கொடுத்த கௌன்ஸிலர்களை உறுதிமொழியை நிறைவேற்றும்படி நிர்பந்திக்க வேணும். இப்படிச் செய்யாவிட்டால் வரி செலுத்துவோர் அதிகவரியினுல் அழ்ந்து போகவே நேருமென்பது திண்ணம். ஒவ்வொரு வார்டு வரிசெலுத்துவோரும் உடனே தக்க கிளர்ச்சி செய்ய முன்வரவேண்டும்.

வரிசெலுத்துவோன்.

## அஸ்ஸாமிலும் காங்கிரஸ் மந்திரி ஸபை.

அஸ்ஸாம் மாகாண சட்டஸபையில் காங்கிரஸ் கக்ஷிக்கு மெஜாரிட்டியில்லையாகிலும், இதரக்கக்ஷிகளுடன்கலந்துகொண்டு ஸ்ரீமான் கோபிநாத் பார்டோலாய் தலைமையில் காங்கிரஸ் மந்திரி ஸபை அமைக்கப்பட்டிருக்கிறது. ஐந்து ஹிந்து மந்திரிகளும் மூன்று முஸ்லீம் மந்திரிகளும் இருப்பார்.

## திருவாங்கூர் நிலைமை.

திருவாங்கூரில் நடைபெறும் சட்ட மறுப்பை உத்தேசித்து ஓர் ஜதா அவ்விடம்வந்தது ஆனுல் அதை அப்படியே கைது செய்து விட்டார்கள், கோர்ட் பஹிஷ்காரம், பள்ளி பஹிஷ்காரம் வரிகொடாமை போன்ற வேலைகளையும் ஆரம்பிக்க யோஜனை நடக்கிறதாம்.

## ஸர்வஜன வோட் எடுக்க மறுப்பு.

ஸெகஸ்லவேகியாவில் ஸுடடன் பிரதேசவாஸிகளான ஜர்மனியர்க்கு சுய ஆட்சி கொடுத்து ஒதுக்கிவிடவேண்டுமென்றும், அதற்காக பொதுஜன அபிப்ராயம் வோட் மூலம் அறியவேண்டுமென்றும் ஹெர் ஹிட்லர் கூறிய யோஜனையை ஸெக் ஸர்க்கார் நிராகரித்துவிட்டனர்.

## ஸினிமா பைத்யம்.

### சென்னையில் ஓர் பெண் மிதிபட்டு மாண்டாள்.

சென்னையில் கெயிடி தியேட்டரில் ஓர் படத்தை இலவசமாகக் காட்ட ஏற்பாடு செய்திருந்ததால் ஏராளமாக ஜனங்கள் கூடினார்கள். ஜன நெருக்கடியால் பலர் கீழே விழுந்து மிதிக்கப்பட்டார்கள். இதனுல் ஒரு பெண் அங்கே இறந்துவிட்டாள்.

## பாங்கு மோசடி அதிகரிக்கிறது.

சில வாரங்களாக ஆங்காங்கு பாங்கு மோசடி ஸமாசாரங்கள் அதிகம் வெளிவருகின்றன. சென்னையில் ஸி. ஸி. ஸி. பாங்கின் மானேஜராயிருந்த ஸ்ரீமான் கிருஷ்ணஸாமி அய்யங்கார் என்பவர் ஒருலக்ஷத்திற்கு மேற்பட்ட தொகையைக் கையாடியதாக குற்றம்சாட்டப்பட்டு போலீஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் காவலில் வைக்கப்பட்டிருக்கிருர்.

## காந்திஜியிடம் நியாயமில்லை.

திருவாங்கூரில காங்கிரஸ்காரர்கள் செய்து வரும் சட்டமறுப்புக் கிளர்ச்சியில் காந்திஜி அநுதாபம்காட்டி அவர்களுக்கேபரிந்துபேசி வருகிறபடியாலும் பக்ஷபாதமாயும் ஒருதலைப் பக்ஷமாயும் காந்திஜி பேசுவதால் அவரிடம் நியாயமில்லையென்றும், எல்லாபலத்தையும் உபயோகித்து சட்டமறுப்பை அடக்கப் போவதாயும் திவான் கூறுகிருர்.

ஸ்ரீ ஜகத்குரு
விஜயயாத்திரை முகாம்.

மர்காபூர்.
Markapur Road Railway Station,
(Karnool Dt.)

## MALABAR TEMPLE ENTRY BILL.

*Rao Sahib N. Natesa Aiyer.*

1. The Malabar Temple Entry Bill no less than its stillborn predecessors and its threatened successors, is a direct challenge to the fundamentals of Hinduism. Barring the misnamed "Child Marriage Restraint Acts", Marriage Dissolution Bill" and "Polygamous Marriages Restraint Bill", no other recent measure will be found to be a greater menace to the peace and tranquility of the nation than this Bill. It is a very clever manouevre to place the rest of the presidency off its guard and prevent them from thinking, talking and acting as a whole and as a nation and secure an easy passage for it in the legislature. Not one in ten thousand has a word to say in its favour in spite of the tremendous and overpowering organised ministerial propoganda in support of it. It is a revolutionary measure unparallelled for its ruthless vandalism and open defiance of the basic principles of Hindu Religion as formulated in Religious texts including the Agamas and Tantras. It is wholly repugnant to Hindu genius and sentiment and carries with it a grim potentiality for more harm than good. The most alarming feature about it is that it is the so called popular Government pledged to the creed of religious liberty in thought, word and deed it is this very Government-that is actively working in an organized manner for its destruction. The policy of religious neutrality which an alien Government was religiously observing, is being brutally and tyrannically violated by our own "Popular Government". The central idea behind this Bill and the so called Civic Disabilities Removal Act and similar Bills is certainly the destruction of caste system (Varnashrama Dharma) and through it the destruction of Hinduism itself. Instead of achieving this object in this indirect and crooked manner and maiming Hinduism limb by limb, a simple measure styled "A Bill for abolishing caste and Hinduism" will serve the object more efficiently and it will be easy for the Cabinet to pass it into law on the very day of its introduction in the Assembly.

2. The Bill purports to be one for removing the disabilities of certain classes of people. "Disability" implies that the said classes had the capacity to enter and were somehow, by somebody, and at some time deprived of that capacity. The removal of this superimposed incapacity is said to be the object. This is a misrepresentation. There is no case of ability, disability, or removal of disability. The blood of the excluded castes had the taint-inherently. There was no super-imposition.

3. The Bill makes two assumptions for neither of which there is any basis. It considers the disabilities to have been imposed by custom and usage. The disabilities have been imposed by the Srutis, Smirities and Puranas and Agamas and Tantras which are God's spoken words and remembered words. Customs and usages are but proofs of the Gods spoken words and the willing obedience rendered in the circling centuries by the Hindus including the the excluded classes. The second fallacy is this—It considers that it is sufficient to repeal the usages and customs. If it is established that the repeal of the usages and customs does not mean the repeal of the Strutis etc., the Bill stands defeated of its purpose. The bar to entry created by the Srutis still exists. The Bill fights shy of the Srutis because it is afraid of touching that delicate matter as otherwise it will lead to the huge conflagration which is now pulverizing Travancore.

4. It states that doubts have been entertained regarding the powers of the trustees to throw open the temples and have to be removed by law. The doubts exist only in the imagination of the author of the Bill and his choir. The law is settled without a single dissentient voice that the trustees have no such power. No doubts, no removal of doubts, no law therefore for removal of them.

6. The selection of Malabar as the theatre for the operation of the Bill is wicked in its conception. The reference to the cultural unity of Kerala as the ground for making the experiment in Malabar and the assertion that it has been peacefully brought into effect in one part and the further explanation that by reason of common traditions and identity of language customs, forms of worship and the like, there is a more insistent demand for the removal of the disabilities in Malabar which is more easy of accomplishment are Machiavellian in design.

7. The definition of "voters" is the most dangerous part of the definitions. It excludes all Hindus outside the Revenue Firka wherein the temple is situate. To exclude from its ambit person outside the Revenue Firka in respect of temples of All India importance has no justification. To leave the fate of the temple in the hands of this small body amenable to local pressure threat and undue influence is unholy.

Section 6 enabling the result of a successful referendum regarding one temple to another temple in the same Firka is a *coup de etati*.

Section 4 giving the power to trustee to notify *suo moto* is arbitrary.

Objects:— Growing volume of opinion demanding removal is a myth. The allegation that there is no justification for resisting the alleged demand after introduction in Travancore is wholly unsupportable.

The Legislation itself is not permissive but coersive and expropriatory.

## Why Land values have not risen.

(M. K. Vaithinathan.)

Credit has shrunk considerably as was expected on account of the Agriculturist Relief Act. The vast majority come under the definition of agriculturists under the Act. Even those who are outside the purview of the Act are not able to command credit as there is a general feeling that similer relief might be statutorily granted to them at any moment. The failure of the Travancore National & Quilion Bank Ltd, has intensified the situation. On account of the scare caused thereby, Banks are naturally anxious to conserve their energy for all emergencies and are unwilling to lend. The investing public are feverishly rushing to the Post Office and the Imperial Bank. Why does not money run towards land as it did after the failure of the Arbuthnot Company? The reason is there is a widely prevalent apprehension that i.e legislation may be taken up diminishing the land lord's mirasdar's rights in ryotwari tracts and creating rights in the cultivators of the soil. This must necessarily diminish the value ef land and reduce its attarctiveness. The apprehension is strengthened on account of persistent propaganda which is said to be going on in many villages urging tenants to insist upon larger portions of the yield from land as their renumeration than they were hitherto content to receive. Unless Government comes out with a solemn assurance that the existing incidents of land tenure will not be interfered with, land is not likely to command a market and the agriculturist could not discharge even the scaled down debt.

## ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஸ்வாமிகள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் விஜய யாத்திரையும் அனுக்ரஹ விசேஷமும், யாவருக்கும் மிகுந்த ஆச்சர்யத்தை யடையும்படி செய்கிறது. குண்டூருக்கு, ஸமீபத்திலுள்ள, மகாம்சேம்பூரூல், என்கிற கிராமத்திற்கு, சாதுர்மாஸ்யம் முடிந்து, 10-9-38ல் விஜயம் செய்து அவ்விடம் சனி, ஞாயிறு, திங்கள், இந்த மூன்று நாட்களுமிருக்கும் பொழுது, குண்டூரில், தினந்தோறும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தெரிசனம் செய்து, உபந்யாஸத்தை கேட்டு பரமானந்தத்தை யடைந்தது போல், வந்து ஆனந்தித்தார்கள். பரமாசார்யாள், எத்தனை பாஷையில் உபந்யாஸஞ் செய்வார்களென்பதை ஜனங்களால் தீர்மானம் செய்ய முடியாவண்ணம் குழந்தைகளும் உணருமாறு வெகுலளிதமாய், பிரவசனம் செய்து வருகிறார்கள் எவ்வளவு நாழியானாலும், நிறுத்துகிறார்களே. என்று, இருக்கிறது. மற்றுமுள்ள நியமங்களோ, வஸிஷ்டர் முதலியவர்கள், அனுஷ்டித்தவாரிருக்கிறது இராமாயணத்தில், "யச்ச ராமம் நபச்யேத்து யம்ச ராமோ நபச்யதி,, என்று சொன்னவாரிருக்கிறது. இராமனை எவன் பார்க்கவில்லையோ, அவனை, அவன் புத்தி கூட நிந்திக்கிறது. என்று அர்த்தம். பாக்ய வசத்தால் பரமாசார்யாளையாவது, இவன் பார்க்க வேண்டும், பரமாசார்யாளாவது இவனைப்பார்க்க வேண்டும். இல்லாதபோனால் நிஷ்பலமான ஜன்மா. ஒவ்வொரு நாளும், புதிய விஷயமாயிருக்கிறது. வேதம் முதலிய பிரமாண வாக்யங்களை பிரமாணமாக எடுத்துரைத்தும் கல்லும் கரையும் படி அனேக யுக்திகளையும் சொல்லி மிகவும் தெளிவாய் ஒவ்வொரு நாளும் போன இடங்களில் எல்லாவிடத்திலேயும் உபன்யாஸஞ் செய்து வருகிறார்கள். பாஷ்யமும் நடத்துவார்கள். கேட்டவர்களுக்கெல்லாம் ஏராளமாக ஸந்தேகம் நிவர்த்திக்கிறது. ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாளே இந்த ரூபமாய் அவதரித்திருக்கிறாளென்பதே எல்லோர்களுக்கும் திண்ணம். மகாம் சேம்பூரில் 3நாள் மத்தியில் அநேக தேசத்து வித்வான்கள் வந்து வாக்கியார்தங்கள் சொல்லி, கணக்கில்லாத ஸம்பாவனுனுக்கிரகத்தை யடைந்தார்கள்.

"ஷடி பண்டிதர்கள் வாக்யார்த்தகாலத்தில் தஞ்சாவூர் ஜில்லா அம்மனூர், பிரம்மஸ்ரீ A. R. வெங்கடராம சாஸ்திரிகளென்பவர், வந்திருந்தனர். குருங்குளம் பிரம்மஸ்ரீ K. S. கிருஷ்ணசாஸ்திரிகளவர்களிடம், நியாய வேதாந்த ஸாஹித்யங்களை பூராவாக அப்பியஸித்து மைசூர் புதுகோட்டை முதலிய ராஜஸம்ஸ்தானங்களில் பரீக்ஷை கொடுத்து ஸம்பாவனை பெற்றவர்கள், ஸதாசார ஸம்பன்னர், கிருஷ்ணராயபுரம் முதலிய இடங்களில் அநேக வித்யார்த்திகளுக்கு அத்யாபனஞ் செய்து வருகிறார்கள். ஸநாதந தர்மத்தையும் ஸ்ரீராமாயணம் முதலிய பிராமணங்களைக் கொண்டு உபந்யஸித்து வருகிறார்கள். ஷடியார்களுக்கு அவர்களுடைய, ஞான விசேஷத்தை நன்கு அறிந்த ஷடி பீடாதிபதிகளான ஸ்ரீமகாசார்யாள் (11-9-38) ஞாயிற்றுக்கிழமை வேதாந்த விபூஷணம்,

वेदान्त विभूषणम् என்கிற பிருதத்தை கொடுத்தநுக்கிரகம் செய்தார்கள். இன்னும் ஷடியார்களை அநேக இடத்திற்கு உபன்யஸிக்கவே பெரியவாள் ஆக்ஞை செய்து யிருக்கிறார்கள். நவராத்திரியை யுத்தேசித்து மார்க்காபுரத்திற்கு சீக்கிரம் போகவேண்டுமென்று குண்டூர் "சந்திரமௌளீசுவர" அக்கிரகாரத்தில் செவ்வாய் புதன் தங்கி அனுக்கிரகித்துவிட்டு மார்க்காபுரத்தை குறித்துப் புறப்பட்டுவிட்டார்கள், இவ்விடம் பெரியவாள் சஞ்சார மகிமையால் போதுமான மழையினால் சௌக்கியம். குண்டூர் மஹா ஜனங்கள்,



## மஹாலயபக்ஷம்.

(காக்கழனி கிருஷ்ணமூர்த்தி)

மஹாலயம் என்றால் ஒளி பொருந்திய கிரஹணங்களின் சேர்க்கை எனப்படும். கன்யா மாதத்தில் கன்யா ராசிக்கு அதிபதியான புதன் உச்சமடைவதும், அவனோடு ஜகத்துக்குப் பிதுர் காரகனான சூரியனும், மாதுர் காரனான சந்திரனும் அம்மாத அமாவாசையில் ஒன்று சேருவதும், சூரியனையே அநுஸரித்துச்செல்லும் சுக்கிரன், செவ்வாய் இவர்களும்நெருங்குவதாலும் ஒளி பொருந்திய கிரஹங்களின் லயமான மஹாலயமாகிறது.

பௌர்ணமி எந்த நக்ஷத்திரத்தோடு சேருகிறதோ அதையநுசரித்து அந்தந்த மாதங்களின் பெயர்கள் விளங்குவதாக ஊஹிக்கப்படுகிறது. உதாரணமாக, சித்ரா நக்ஷத்திரமும் பௌர்ணமியும் சேரும் மாதம் சித்திரை. விசாக நக்ஷத்திரமும் பௌர்ணமியும் சேரும் மாஸம் வைசாகம். கேட்டையும் பௌர்ணமியும் சேரும் மாதம் ஜேஷ்டம் அல்லது ஆனி. இவ்விதமே ஆடி மாதத்தை ஆஷாடமென்றும், ஆவணி மாதத்தை சிராவணமென்றும் சொல்லுகிறார்கள். இது போல ஆவணி மாத பௌர்ணமிக்கும்பிறகு வரும் அமாவாசை சிரவண நக்ஷத்திரத்திற்கு 14வது நக்ஷத்திரமாகிய மக நக்ஷத்திரத்தில் வருமென கணக்கிட்டு புரட்டாசி மாத அமாவாசையை மஹாலய அமாவாஸை என சொல்லவும் சொல்லலாம். இவ்விதமாக மஹாலயமெனம்படும் அமாவாசையுள்ள பக்ஷம் மஹாலயபக்ஷமென சொல்லப்படுகிறது.

மக நக்ஷத்திரத்திற்கு தேவதையாயுள்ளவர்கள் பிதுர்க்களாகையால் அப்பக்ஷம் பிதுர்க்களின் பக்ஷமாக கருதப்படுகிறது. சில வருஷங்களில் பூரம், உத்திரம், ஹஸ்தம் என்ற நக்ஷத்திரங்களில்கூட கன்யாமாஸ அமாவாசை வரக் கூடுமானதால் அந்த மூன்று நக்ஷத்திரங்களுக்கும் முறையே பகன், அர்யமா, ஸவிதா என்று பிதுர்க்களையும், சூரியனையும் புகழக்கூடியதான மாற்றுப் பெயர்களமைந்திருக்கின்றன.

இந்துக்களில் ஆஸ்திக சிகாமணியாயுள்ளவர்கள் அமாவாசைமுதலான பிதுர்தினங்களில் திலதர்ப்பணம் என்ற கர்மாவைச் செய்து வருவதுபோல் இந்த பிதுர் பக்ஷமான மகாலயபக்ஷத்திலும், மாளயம், ஹிரண்ய சிரார்த்தம், திலதர்ப்பணம் முதலியவைகளை அவரவர்கள் யதா சௌகர்யப்படி செய்து பிதுர்தேவதைகளினநுக்கிரகத்தை யடைகிறார்கள்.

அமாவாஸ்யாதி பிதுர்தினங்களில் செய்யப்படும் திலதர்பணாதிகளால் பிதுர்தேவதைகளுக்கு திருப்தி ஏற்பட்டு அதனால் வம்சாபிவர்த்தியும், க்ஷேமலாபங்களும் எவ்விதமுண்டாகிறதெனில், அமாவாசையில் சூயர்னும் சந்திரனும் ஒன்றுசேருகிறார்கள். சூரிய சந்திரர்களின் தேஜஸால்தான் ஜகத்தில் கொடிசெடிகளான சர்வமும் உற்பத்தியாகி போஷிக்கப்படுகிறது. அவ்விதம் அபிவிர்த்தியாகும் அநேகம்தான்யங்களை மனுஷியர்களாகிய நாம் புசித்து புஷ்டியை அடைகிறோம். நமக்கு சக்திகளைத்தரும் தேஜஸ், ஓஜஸ் முதலான வீர்யங்களையும் நாம் சந்திரகாந்தியின் பிரபாவத்தாலேயே அடைகிறோம்.

இதனுண்மையை நமக்கு "ஓஷதய:, ஓஷதீப்யோந்நம், அந்நாத் புருஷ:, ப்ரஜா: ப்ரஜாயந்தே" என்னும் தைத்திரிய உபநிஷத் வாக்கியம் நன்கு விளக்குகிறது.

பலவித போகபோக்கியங்களைக் கொடுக்கக்கூடிய சர்தனமான ஓஷதிகளை அபிவிர்த்தியடையச் செய்யும் ஓஷதீசனான சந்திரனின் கிரணம் அபிவிர்த்தியடையவும், அதனால் பல நன்மைகள் நமக்குண்டாகவுமே நாம் யாவரும் பிதுர்தின, பக்ஷங்களில் திலதர்பபணாதி, சிரார்த்தங்களைச் செய்து பிதுர் தேவதைகளின் கருணைப்பிரவாக பிரசாதத்திற்கு பாத்திரபூதர்களாகிறோம் என்று ஒப்புக்கொள்ளக்கூடிய யுக்திப் பொருத்தம் உள்ளது.

திலதர்ப்பணாதிகளில் பிதுர்க்களை வசுக்கள் எனவும், ருத்திரர்கள் எனவும், ஆதித்தியர்கள் எனவும் மூவகையாக வரிக்கிறோம். அஷ்டவசுக்கள், ஏகாதசருத்திரர்கள். துவாதச ஆதித்தியர்கள் என ஓர் கணக்குண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோடியின் கணக்காகும். இவ்விதம் கணக்கிடுவதில் 8-கோடி வசுக்களையும் 11-கோடி ருத்திரர்களையும், 12-கோடி ஆதித்தியர்களையும் 1-கோடி விச்வே தேவர்களையும், 1-கோடி அச்வினி தேவர்களையும் ஆக 33 கோடி தேவர்களையும் திலதர்ப்பணமூர்லமாய் பூஜித்து அவர்களை திருப்திசெய்துவைப்பதான ஒருபுண்யம் தர்ப்பண கர்மாவினால் ஏற்படுகிறது.

பிதுர் தேவதைகளுக்குமுன் நின்று நமக்கு பலவித நன்மைகள் செய்துவரும் வசுக்களுக்கும், நமக்கு ஒருவித தீங்குகளும் அணுகாவண்ணம் அருள்புரியும் ருத்திரர்களுக்கும், வம்சாபிவிர்த்தியையும், பல போக்கிய சுகங்களையும் தந்தருளும் ஆதித்தியர்களுக்கும் இந்த பிதுர்பக்ஷமாகிய மகாலயபக்ஷத்தில் சிரார்த்த தர்ப்பணாதிகளைச்செய்து நம் முன்னோர்களை நினைந்துகொடுக்கும் திலோதகபூர்வமாய் பிதுர்தேவதைகளின் அநுக்கிரக பலம் உண்டாகி நமக்கு பலவித நன்மைகள் சித்திப்பதாகும்.

ஆகையால் இகலோகசுகத்தையும் பரலோக வாழ்வையும் விரும்பும் கிரஹஸ்தர்கள் இக்கார்யத்தில் சிரத்தையுடன் விளங்குகிறார்கள். ஏதாவது அசௌகர்யத்தால் இந்த பக்ஷத்திற்குள் சிரார்த்ததர்ப்பணாதிகள் செய்ய முடியாமற்போனாலுங்கூட, சூர்யன் விர்ச்சிகராசிக்குப் பிரவேசக்கு முன்பு ஷடி சிரார்த்த தர்ப்பணாதிகளை அவசியம் செய்துவிட வேணுமென்பது நமது பெரியோர்களின் கொள்கை.

விர்ச்சிகாதர்சனம் ப்ராப்ய
நிராசா: பிதுரோகதா:"

என்ற வசனப்படி ஒரு கிரஹஸ்தன் தான் செய்யவேண்டிய மஹாலய சிரார்த்தத்தர்ப்பணாதிகளை கார்த்திகை மாதம் முதல் தேதிக்குள் செய்யாவிடில் தாங்கள் எதிர்பார்த்தபடியுள்ள ஓர் ஆசையையிழந்த பிதுருக்கள் அப்படிப்பட்ட கிரஹஸ்தனுக்கு க்ஷேமக்குறைவும், வம்சக்ஷயமும் உண்டாகும் படி சபிப்பார்களென்றும் பெரியோர்களால் சொல்லப்படுகிறது.

ஒரு கிரஹஸ்தனின் சரீரமும் அவனடைந்துவாழும் சொத்துக்களும் பிதுரார்ஜிதமானபடியால் அவர்களின் சொத்தைக்கொண்டு பிதுர்க்களாகிய அவர்களுக்கு திருப்தி செய்துவைக்காமல் தன்னுடைய சரீரம் தன்னுடைய சொத்துக்கள் எனக் கொண்டாடும் ஓர் அஹம் மமதையை அவனடையவேகூடாது.

அஹம் மமதையை விட்டொழிப்பதுதான் ஒருவனுக்கு துக்கஹேதுவான ஜன்மம் ஒழியும்வழி. அவ்வித நன்மையை அடைய ஆஸ்திகர்கள் அனைவரும் இப்பக்ஷத்தை கொண்டாடுகிறார்கள்.

## காஞ்சீபுரம்.

### உதாஸீனமட குருபூஜையும் ஸனாதனதர்ம துவஜாரோஹணமும்.

இன்றுகாலை 7மணிக்கு இவ்வூர் உதாஸீன மடம் தோரணங்களுடனும் மிக சிங்காரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஹோமம், ஹவனம், சிகிபிஞ்சத்தோடும் பூமாலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஸூர்யத்வஜம் மங்களவாத்யங்களுடனும், மந்திரங்களுடனும் ஸனாதனகிஜே யென்னும் ஜெயகோஷத்துடனும் ஆரோஹணம் செய்யப்பட்டது, இவ்விழாவிற்கு பல கனவான்களும் வர்ணாச்ரமிகளும் வந்து குமிழ்ந்திருந்தனர்.

த்வஜாரோஹணம் ஆனதும்ஷடி மடம்மஹந்துஸ்ரீ நாகேந்திரதாஸ் ஜீயின் கோரிக்கைக்கு இணங்கி இவ்வூர் ஸனாதன தர்ம ஸேவா ஸங்க்ர்யதரிசி ஸ்ரீமான் எம். கே. ராமச்சந்திர சர்மா அவர்கள் உதாசீன் பரம்பரை பிரம்மாவின் மானஸீக புத்திரர்களாகிய ஸனக, ஸனந்தன, ஸ்னாதந, ஸனத்குமாரர்களுடைய ஸந்ததியென்று கூறப்படுவதாக அவர்கள் பரம்பரை க்ரந்தங்களில் கூறப்பட்டுள்ளதென்றும், ஸ்ரீமான்சந்துலால் காலத்தில் தான் தென் தேசத்திற்கு முக்யமாக இவ்வூரில் ஸ்தாபனம் பெற்றதென்றும் அவர்களுடைய கொள்கை முற்றும் ஸனாதன தாம்த்தையநுஸரித்ததென்றும் ஆஸ்திக ஹிந்துக்களெல்லாம் இம்மடத்துடன் ஒத்துழைக்க வேண்டியது வைதிக தர்மமென்றும் கூறிமுடித்தார். அங்கே வந்திருந்த திரளான ஜனங்கள் ஸனாதன தர்மகீஜே, மஹந்து நாகேந்திரதாஸ் கீஜேயென்று ஜெயகோஷம் செய்தனர். பிறகு விழாவிற்கு வந்திருந்த கனவான்களுக்கு சந்தன புஷ்ப தாம்பூலாதி உபசாரணைகளும், ஏழை ஜனங்களுக்கு ஸதாவர்த்தி தக்ஷிணைகளும், ஹல்வா, பூரி முதலிய பக்ஷியங்களும் வினியோகம் செய்யப்பட்டன.

முக்யமாக இந்த மஹந்துவினுடைய காலத்தில் மடம் பல வழிகளில் சீர்திருத்தப்பட்டு வருகிறது. ஸத்யவ்ரதன்.

## மேல்மங்கலம்.

### ஆஸ்திக மஹாஜன சபை.

ஆவணி௴ 32௳ வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு சபை அக்கிராசனர் பிரம்மஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யாவர்கள் தலைமையின்கீழ் சபை கூடிற்று. ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர்.

அக்கிராசனர் ஆலயப்ரவேச அநீதி என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் தற்காலம் சென்னை சட்டசபையில் கொண்டுவரப்பட்டுள்ள வட மலையாள ஆலயப்ரவேச மசோதாவானது சமூக ஒற்றுமையை பாதிக்கக்கூடியதென்னும் தர்மத்தை வேரறுக்கக்கூடியதென்றும், வரம்பிற்கு மீறின அநீதியென்னும் கண்டிக்கப்பட்டும்,இச்சட்டத்தை எவ்விதத்திலும் ரத்து செய்வதற்கு வேண்டிய பிரயத்தனம் எடுத்துக்கொண்டிருக்கும் கொல்லங்கோடு ராஜா அவர்களின் வீரத்தனத்தையும், தர்மப்பற்றுதலையும் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேறின. ஆலயப்ரவேச கண்டன மஹஜரில் உள்ளூர், பக்கத்தூர் ஜனங்களிடம் கை எழுத்து வாங்கி கனம் பிரதம மந்திரி அவர்களுக்கு ரிஜஸ்டர்செய்து அனுப்பப்பட்டது. சபைக் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு சபை மாலை 6-மணிக்கு நிறைவெய்தியது.

சிவராம கணபதி கனபாடிகள்,
காரியதரிசி ஆஸ்திக மஹாஜன சபை.

ஸ்ரீ லலிதாத்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.
கிடைக்குமிடம் :—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்

## கம்பர் திருமண் காப்பு

கல்வியிற் பெரியார் கம்பர். வடகலையிற் பணித்த இதிகாஸத்தைத் தென் கலையிற் கழற விரும்பியவால்மீகியேபின்னர்கம்பராய் வந்து தமிழ்க் கவிதை செய்தாரென்பது ஆன்ளேர் முடிபு. இவ்விராமயணங்கள் அநேக இடங்களில் வேறுபட்டிருக்கும். வான்மீகத்திலில்லாத சிலவற்றைக்கம்பர் கூறக் காண்கலாம்.

பால காண்டம் கடிமணப் படலத்தில் இராமபிரான் தீர்த்தங்களில் நீராடி திருமண் தரித்துக்குலதெய்வத்தை வணங்கியதாகக் கம்ப நாடுடைய வள்ளல் வருணிக்கிறார். இக் கட்டத்தில் நடுப்பாட்டு "என்று நான்முகன் முதல் யாரும் யாவையு நின்ற பேரருளினை நீணெறி, சென்று மீளாக்குறி சோச்சேர்த்திடு, தன்றிருநாமத்தைத் தானுஞ்சாத்தியே என்பது, இதன் பொருள்:— எப்பொழுதும் பிரம்மதேவன் முதலாக உள்ள உயர் திணையோரெல்லோரையும், மற்ற அஃறிணைப்பிராணிவருக்கமனைத்தையும், அவ்வுயிரை விடாது சூழ்ந்து நின்ற கருமமாகிய பெரிய இருளை ஒழித்து, நெடுந்தூரமாகிய வழியிலே போய் மீளாத உலகமாகிப் பரமபதநினிடத்தையடையும்படி அவ்வவ்வுயிர்களை அங்குச்சேர்க்கவல்ல தனக்குரிய திருமண் காப்புக்குறியை அப்போது இராமபிரான் தானுந்தரித்து நீணெறி என்பது அர்ச்சிராதிமார்க்கம், நின் பேரருள் என்பதை அழியாது நின்ற மூலப் பிரகிருதி என்றுங் கொள்ளலாம்.

மேல்நோக்கி உயர்ந்துசெல்லுந்தோற்றத்தையுடைய திருமண் காப்பு எல்லாப்பதவிகளினும் மேம்பட்டு உயர்ந்துள்ள முத்தியைத் தான் கொடுத்தற்கு அறிகுறி. தன் திருநாமம் என்பது எம்பெருமானது திருவடிவடிவமாக விஷ்ணு சமய சம்பந்தத்துக்கு அறிகுறியாக அணியப்படும் அழகியநாமம். துவாதச நாமத்தை ஜபித்துக்கொண்டே நெற்றி முதலிய இடங்களில் திருமண் காப்பு தரித்துக்கொள்ளும் முறையை அநுஸரித்து 'நாமத்தைச்சாத்தி' என்கிறார்.

இஃது வைஷ்ணவ பரிபாஷையிலுள்ளது கண்டு களிக்க. திருமால் தானே குருவும் சிஷ்யனுமாய் பதரிகாச்சிரமத்தில் நின்று குரு சிஷ்யக்கிரமத்தைத் தெரிவித்தான்; வாமனரூபியாய்ச் சித்தாச்சிரமத்தில் தவஞ்செய்யும் விதத்தை அறிவித்தான்; திருமண் காப்பு அணிந்து உய்யும்நெறியை உலகிற்குக் காட்ட இராமன் தன் திருநாமத்தைத் தானும் சாத்தினன் எனக்கொள்க.

அர்ச்சாதிகளிலுள்ள ஊர்த்வ புண்ட்ர விஷய சர்ச்சையில் அங்வயிக்கும் அறிஞர் இதனையும் கண்டு தெளியுமாறு அடியேன் விண்ணப்பத்துக்கொள்கிறேன். பூர்வர்கள் இது விஷயத்தை ஆராயாதுவிட்டது தவறு என்று நினைக்கும் உத்தமாதிகாரிகள் இதனினும் சீரிய விஷயங்களிற் கவனத்தைச் செலுத்தி உலகிற்கு நன்மைபுரிதல் நலம் என்று தோன்றுகின்றது. கல்விகரையில, கற்பவர் நாள் சில. நின்ற நாள் யார்க்கும் உணர்வரிது. பாகவதாபசாரத்தை நீக்கிக் கைங்கர்யம் புரிதல் அழகியது.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

## தொண்டர்களின் திண்டாட்டம்.

ஹிந்தி எதிர்ப்புக்காக சென்னைக்குச்சென்ற ஜாதாவில் சேர்ந்த சிலர் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாயும், தங்களுக்கு பேசியபடி பணம் கொடுக்காததையும், ராமசாமிப் பெரியார் தங்களைத் திட்டியதையும் விவரமாகப் பத்திரிகைகளில் வெளியிட்டு இந்த ஸத்யாக்ரஹத்தில் ஒருவரும் சேர வேண்டாமென்றும் எச்சரிக்கிறார்கள்.

## ஆலயப்ரவேச அரக்கன் அரபிக்கடலில் இறப்பன்!

'அச்சங் கொள்ளாதீர்! ஆஸ்திக்யத்தை கை விடாதீர்! இறுதிப்போரை எழவிடாதீர், ஈசன் உறுதி மொழியை மறந்திடாதீர்! உலகப்போக்கை தரும மார்க்கத்தில் சேர்ப்பீர்! ஊக்கமின்மையே உலகக் கேட்டுக்குக் காரணம்! எழுமின்! ஏக்கங்கொள்ளன்மின்! ஐயன் பாதத்தைத் தொழுமின்! ஒன்றுபடுத்தும் நீதியை உரைமின்! ஓயாமல் உண்மைதனை வாயாறச் சொல்மின்!

அதோ! மலையாளத்தில் மதப்போர் துவக்கப் போகிறார்களாம்! இதில் ராஜ்ய வாதிகள் கைகலக்கப்போகிறார்களாம்! மந்திரிகளும் தந்திரிகளும் சுற்றிச் சுற்றி வருவார்களாம்! ஊரூராய் ஒட்டெடுத்து கோவில்களை இவர்களே திறந்து விடுவார்களாம். திறந்து பிளந்துபோன ஆலயங்களிய் சகலரும் சேர்ந்து கைகோர்த்துக்கொள்ளும் திட்டம் ஹிமோத்கிரியிலிருந்தோ, சமுத்திரமத்தியிலிருந்தோ சிவகாம் சத்யாக்ரக ஆச்ரமத்திலிருந்தோ, பரதேச யாத்ரா பண்டித சமதர்ம நேருஜியால் ருஷியா தேசத்திலிருந்தோ பிறகு வருமாம்! இத்திட்டம் வாவிட்டால் என்ன பிரயோஜனம் என்று சில ஹரிஜனத் தலைவர் பயப்படுகிறார்களே! இவர்கள் சற்றுசொந்த மூளையை உபயோகித்து,பின்வருமாறு யோஜிக்கட்டும்- "நாம் ஏண்டா! பிறருக்குமட்டும் பாத்யமான ஆலய ஆஸ்திக சொத்தை அழித்து நமக்கும் பிரயோஜனமில்லாமல் ஆகம நம்பிக்கை உள்ளவர்களுக்டிம் பிரயோஜனமில்லாமல் செய்யும் வெறியகர்களுக்கு உடந்தையாய் பாப மூட்டை சம்பாதிக்கவேண்டும்? இதனால் பிறகு நேரிடும் மனஸ்தாபம் விரோதம் சங்கடங்களுக்கு நாமல்லவோ ஆளாகவேண்டும் சீர்திருத்த புரட்டர்களா ஆவார்கள்? போராடும் ஆஸ்திகப் பாமர ஆடுகளையல்லவோ அன்னிய மதப்புலிகளிடம் காட்டி விடுவார்கள்! ஆகையால் நாம் ஏன் நம்ம சொந்த சாமியை பலப்படுத்தி, சீர்படுத்தி, பெரியகோவில் கட்டிவைத்து, சர்க்கார் பணம் பிடுங்கி வைத்து சீர்திருத்த வெறியர்களை அந்தப் புனித ஆலயங்களில் துரத்தக் கூடாது?

ஐயோ இந்த சீர்கேடர் எங்கள் "வீரன் இருளன், காட்டேறி, கருப்பன், பெரியாண்டவன் முதலான குலதெய்வங்களை மதருஸ் சட்டசபையிலே நவம்பர் மாதத்திலே படுகொலை பண்ணுவார்களாமே! அப்போது மலையாளத்திலே அத் தெய்வங்கள் இறந்து போகுமே! பாப்பார தெய்வங்களும், தீண்டாத தெய்வங்களும், வேதாகம தெய்வங்களும் முதலில் மலையாளத்திலே கோவிலை விட்டுப் போனபிறகு பாழான கோவில் என்னும் ஸ்மசானத்தில் உயிரற்ற விக்ரஹங்களின் சரீரங்களை நாங்கள் தகனம் செய்ய வேண்டுமா? அதுதானு எங்கள் மத முன்னேற்றம்! நீங்கள் கூறும் நவீன மதத்தை எந்த வித்வத்சபையில் வெளியிட்டீர்! யாரை வென்றீர்! தங்களிடதுள்ள ஆலயவழிபாட்டு கிரந்தம் எது? அதை எந்த ரிஷி எழுதினார்? இவைகளைச் சொல்லாமலே பரதேசிகள்போல் ஊரூராய் 'ஒட்'டெடுக்கப் போகிறீரா! எங்களுக்கு இனி சட்டசபை பெற்றெடுக்கும் தெய்வங்கள் எவை! எங்கள் குலதெய்வங்களா! செத்த விக்ரகங்களா? எங்கள் மத கிரந்தங்கள் எந்த அரசியல் சபையில் அந்த ரங்கமாய் தயாராகிக்கொண்டு வருகிறது! அந்த மதத்திற்குப் பெயர் என்ன? ஓ! தெய்வமே! எங்களுக்கு திக்கு யார்! திசை யார்! சனாதனிகளை ஜெயித்தீர்களா?எந்த வித்வத் சபைகளில்? அவர்கள் உங்களுக்கு 'சவால்' (Challenge) கொடுத்தும் நீங்கள் நரிபோல் பதுங்கி இருந்து விட்டு இப்போது நிழல் போல் தலைதூக்கப் பார்க்கிறீர்களே! உங்களது ஆபத்து உங்களுக்கு தெரியவில்லையா? எங்கள் ஓட்டுக்கள் எந்த பக்கம் சாயுமோ என்று பயந்து எங்களை "ஹிந்துக்களின் மத வாக்காளர் கோஷ்டி"யிலிருந்து நீங்களே தள்ளிவிட்டீர்களே! பிரித்துவிட்டீர்களே! இதுவரை நாங்கள் "ஹிந்து மத தத்வ நம்பிக்கையாளர்" கோஷ்டியில் சேர்க்கப்பட்டு இகபர சுகங்களை அனுபவித்தல்லவோ வந்தோம்! நீங்கள் எங்களை விடுமின்! எங்களுக்கு மத அறிவு, சுய அறிவு, குல தெய்வம், ஜனவச்யம், தற்குறை உணர்வு முதலியன அளிக்க ஆஸ்திக கோஷ்டிகள் உளர்" என்று தீண்டாதஜாதியார் கூறுவார்களாக.

நேற்று வெட்டின கிணற்றில் முந்தாநாளே பூதம் புறப்பட்டதுபோல் மலையாள ஆலயப்ரவேச சிசு சென்னை ஹிந்து 'மதோத்தாரண' சட்டசபை என்னும் ஸ்திரீயின் கர்பத்தில் பிரவேசிப்பதற்குள் தகராறுகளும் குழப்பங்களும் நாஸ்திக கோஷ்டிகளுக்குள்ளேயே கிளம்ப, அதேசமயத்தில் ஆஸ்திக மலையாள வல்லரசுகள் தங்கள் சனாதனதர்ம தனுசுகளை நாணேற்றி 'டங்காரம்' செய்கிறார்களே! இதென்ன விபரீதமாகுமோ?

சீர்திருத்தக்காரர்களுக்கு 'தார்மிக' சக்கரவர்த்தியாகிய திருவாங்கூர் அரசருக்கு இன்னும் சிலை உருவம் செய்தாகவில்லை. அதற்குள் ஸ்ரீ அனந்தபத்மநாபர் சீறி எழுந்துவிட்டார்! குழப்பங்கள் உண்டாகிவிட்டன! சௌரிசாரா சம்பவம் வருமென்று கூறிய பிரும்மஸ்ரீ N. நடேசய்யரின் வேத வாக்கு பலித்துவிட்டது! தார்மிகர்பால் சார்ந்து தோளுக்குத்தோள் வேலைசெய்ய அதோ உண்மையான தார்மிக சக்ரவர்த்தி அரசியல் அமைதி ஏற்படுத்திய தர்மதீருமான கொச்சி அரசர், தர்மவீர கொல்லங்கோடு ராஜா, தர்மதீர, மகாவீர ஜாமரின் மன்னன் முதலான சிங்கங்கள் வெளிக்கிளம்பிவிட்டனர். குருவாயூர் கண்ணன் சக்ராயுதம் எடுத்துவிட்டார்.

மலையாள ஆலயப்ரவேசம் என்னும் அரக்கன் கொச்சியிலிருந்து வரும் தர்மதேவதையின் அஸ்திரத்திற்கும் திருவாங்கூர் சமஸ்தானத்து ராஜீய நெருக்கடி என்னும், அக்னி மலைக்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்டு நசுக்கப்பட்டு நாஸ்திக்ய ஓட்டுக்களால் பட்டினி கிடந்து ஆஸ்திகர்களது பிரசார பலத்தால் முட்டித்தள்ளப்பட்டு அரபிக்கடலில் இறந்து மூழ்கிவிடும்!

இது போழ்து திருவாங்கூரில் ஆஸ்திக்யம் ஆலயப்ரவேசம் பண்ணும்! இளவரசர் புது ப்ரகடனம் செய்வார்! கல் உருவத்தை அவர் கையால் உடைத்தெறிவர்! கொச்சி அரசரோடு கைகுலுக்குவர்! தென்னிந்தியாவில் ஏககாலத்தில் சப்திக்கும் பண்டித கோஷ்டியின் கோஷம் பாரததேசத்தை சீர்படுத்தும். உலகப் பெரும்போரை நிறுத்தும் ஆஸ்திக்ய மருந்தை அரசியல்காரர்கள் உட்கொண்டு அயல்தேசத்தார்க்கும் அனுப்புவார்கள்! அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்! முதலில் வீட்டுத் தகாறு தீரவேண்டுமே! ய்த அறிவு அனுபவித்துதானேவரும்! சிலர்களோடு போரிடுவதும் ஓர் வழிதான்போலும்? மதநாயகமுள்ள ஜனநாயகமே வருக! வேதநாயகமே! உனக்குநல்வரவாகுக

"தெய்வீகத் தொண்டன்"

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தந அச்சுக்கூடம், கும்பகோணம்.



## ஆலயபிரவேச எதிர்ப்பு.

### பிரதம மந்திரிக்கு மஹஜர்.

கனம் பிரதமமந்திரி அவர்களுக்கு மேல் மங்கலம், மற்றும் பக்கத்து ஊர் மஹாஜனங்களும் குடிகளும் கையெழுத்திட்டு கீழ்கண்ட மஹஜரை அனுப்பியுள்ளார்கள் என்பதை மேல்மங்கலம் ஆஸ்திக மஹாஜன சபைக் காரியதரிசி அறிவிக்கிறார்.

கனம் M. C. ராஜாவால் கொண்டுவரப்பட்ட சாஸ்திர விருத்தமான ஆலயப்ரவேச மசோதாவைச் சட்டமாக்காமல் செய்து நமது தர்மத்தைக் காப்பாற்றினதற்காக நாங்கள் தங்களுக்கு எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் தாங்கள் மலையாளம் ஜில்லா சம்பந்தமாக பிரசுரித்த ஆலயப்ரவேச அநுமதிச்சட்டத்தை வாசிக்கமனம் நொந்துகின்றது. பின்கண்ட காரணங்களால் அவ்விதமான சட்டம்கொண்டுவருவது நியாயமில்லை.

(1) கோவில்களை ஓட்டுகளின் மூலம் திறந்து விடுவது நியாயமல்ல. அப்படியேமெஜாரடி ஓட்டர்களால் கோவில்கள் கீழ்ஜாதியினருக்குத் திறந்துவிடும்படி ஏற்பட்டால் மைனாரடி ஜனங்களைக் காக்கவேண்டியது தங்களது கடமை அல்லவா; அவர்களுக்கு கோவில் தரிசனம் இல்லை என்று செய்வது நியாயமா

(2) ஸாதுவான சாதாரண ஜனங்களுக்கு முன்பின் ஆழ்ந்த யோஜனை இருக்காது என தங்களுக்குத் தெரிந்த விஷயமே. ஆதலால் உங்களைப் போலுள்ள ஒருவர் பிரசாரம் செய்யுமிடத்து அது சமயம் பின்வருவது தெரியாமல் கோவில்களைத் திறந்துவிடலாம் என்று மெஜாரிடியாகச் சொல்லிவிடலாம். கீழ்ஜாதியினர் நுழைந்தபின் (மேற்சொன்ன வர்ணாச்ரம மைனாரிடியார்) கோவில்களின் கதி என்னவாகும்.

(3) ஏற்கனவே அடிக்கடி சொன்ன பிரகாரம் ஆலயங்கள் ஆகம சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டதினால் அவைகளின் பிரகாரம் நடப்பதுதான் நியாயமென்று பொருப்புள்ள ஸ்தானத்திலிருக்கிற தாங்கள் சொல்ல வேண்டி இருக்க, ஓட்டுகள்மூலம் திறந்து விடாமென்று சொல்வது அநீதியிலும்அநீதி.

(4) மலையாளம் பிரதிநிதியாக அகில இந்திய சபையிலிருக்கும் நமது கொல்லங்கோடு ராஜா அவர்கள் இந்தச் சட்டத்திற்கு விரோதமாயிருப்பதால் அவருடைய பிரதிநிதித்வத்தைப் புறக்கணித்து, தாங்கள் சட்டம் செய்வது நியாயமாக மாட்டாது.

(5) மலையாளம் ஜில்லா போர்டில் தற்காலம் தலைவராயிருக்கும் கேளப்பன், ஏற்கனவே இதற்குமுன் கோவில்களைத் திறந்துவிடுவதற்காக வீண் ஸத்யாக்ரஹம் செய்து கடைசியில் தங்களைப்போலுள்ள பிரமுகர்கள் ஸத்யாக்ரஹத்தை நிறுத்தச் சொல்லவில்லையா! அவரைப்போல் ஒருவர் தற்பொழுது ஒருமுக்யஸ்தானத்திலிருந்துகொண்டு அதன் மூலம் பிரயத்தனம் செய்தால் பொது ஜனங்களுடைய உண்மையான அபிப்பிராயம் வெளிவராதல்லவா?

(6) ஷெ ஜில்லாவிலுள்ள கோவில்கள் அகில இந்தியர்களால் தரிசிக்கப்பட்டு வருவதால், ஒரு ஜில்லாவில் மட்டும் ஓட்டு எடுத்தால் அக்கோவில்களுக்கு தரிசனத்திற்கு வருகிற எல்லோருடைய ஓட்டுகளையும் கணக்கெடுத்ததாக எப்படிச் சொல்ல முடியும்!

(7) திருவாங்கூர் ராஜ்யத்தில் கோவில்களைத் திறந்துவிட்டபடியால் அதேபோல் பாஷை ஆசாரம், வழக்கம் எல்லாம் ஒன்றாயிருக்கிற பிரிடிஷ் மலையாளத்திலும் திறந்துவிடலாமென்று தாங்கள் இந்த பில்லில் கண்டிருக்கிறீர்கள். திருவாங்கூர் சம்பந்தமாக அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வாராஜ்ய ஸங்கத்தலைவர் பிரம்மஸ்ரீ ராவ்சாஹிப் N. நடேசய்யரவர்கள் தர்மராஜ்யா பத்திரிகையில் திருவாங்கூரில் கோவில்களை திறந்துவிட அரசருக்கு இஷ்டமில்லை என்றும் வேறு சில காரணங்களால் அரசர்வெகு வருத்தத்துடன் திறந்துவிட்டதாகவும் எழுதியுள்ளார். அதை நாளது தேதிவரை ஒருவரும் மறுத்தெழுதாததால் பிரம்மஸ்ரீ நடேசய்யரவர்கள் எழுதி இருந்தது உண்மை என்றே ஆகிறது. ஆகையால் திருவாங்கூரில் உண்மையாகத் திறந்துவிடப்பட்டதாக ஆகாது. அப்படியே திறந்துவிடப்பட்டாலும் அரசருடைய ஏதேச்சாதிகாரத்தின் மூலம் திறக்கப்பட்டதே ஒழிய பொதுஜன அபிப்பிராயமில்லை.

(8) M. C. ராஜா பில்லை தாங்கள் எதிர்க்கும் பொழுது கீழ் ஜாதியினரை பொருத்தமட்டில் கிராம ஜனங்களுடைய அபிப்ராயம் நேர் எதிரிடையாக இருக்கிறதென்று ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். மேற்கண்ட காரணத்தைக்கொண்டே ஷெ பில்லை தாங்கள் எதிர்த்ததுண்டு. அப்படிக்கிருக்க மலையாள கிராமவாசிகள் மட்டும் கோவில்களைத் திறந்துவிட இஷ்டப்பட்டார்களா.

(9) ஷெ ஆலயப்ரவேசத்தால் உள் நாட்டுக் கலஹங்கள் ஏற்பட்டு சமூஹ க்ஷேமத்திற்கு நாசம் ஏற்படுவது நிச்சயம். அக்கெடுதல்களை நிவர்த்திக்கவேண்டியது பிரதம மந்திரியாக இருக்கும் தங்கள் கடமையாதலால் பின்வரக்கூடிய கெடுதல்களை யோஜித்து தாங்கள் இந்தச் சட்டத்தை எவ்விதத்திலும் ரத்துசெய்யக் கடமைப்பட்டவர்கள் என்பதை வணக்கமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதர் ஜெயந்தி

### கொண்டாட பிரார்த்தனை.

'இப்பாரதப்புவியின்கண், அவதரித்த மஹான்கள் பலர் ஆயின் ஆஸ்திக உலகினரில் பெரியார்களின் மஹிமையை அரிந்து அவ்வழி நின்றவர் சிலரே என்பதை எடுத்துரைக்கவும் இரும்பூதியெய்ய ஐயமில்லை. ஆனாலும் அம்மஹான்கள் காட்டியுள்ள சித்தாந்தங்களும் கிரந்தங்களும் மறக்கமுடியாதென்பதும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிரகாசிக்கவிருப்பதினாலேயே அன்றும், இன்றும், என்றும் நம் மாத்ருபூமி பூகைலாசமாய் இருக்கக் காண்கிறோம்- கலி முற்றிவிட்டது என்று ஸ்வதர்மங்களை விட்டும் நம்மில் பலர் மஹான்களைப்பற்றியும் மறந்தவர்களாய் நாஸ்திகப் பேய்களுக்கு இடம் கொடுத்துவரும் கேட்டின் காரணம்தான் என்ன? இந்து சமூகத்தினர் தவிர்த்து ஏனைய மதத்தினர்கள் உண்மை, நம்பிக்கை, ஐக்யத்தில் தங்கள் குருமார்களின் ஜெயந்தியை விசேஷித்து கொண்டாடி வருகிறார்கள் என்பதை இந்து நேயர்கள் அறிவார்களா?

ஜகத்குரு உலக உத்தாரக அவதாரமூர்த்தியாய் (ஆதி) ஸ்ரீமத் சங்காசார்ய பெரியவாள் காலடியில் அவதரித்து, தெய்வீகத் தோன்றலாய் ஸ்ரீ சக்திபீடத்தில் அமர்ந்து சமூகம் நல்வழியில் உய்ய "அத்வைத" சித்தாந்தம் காட்டித்தந்த உத்தமரின் ஜெயந்தியை ஏகோபித்துக்கொண்டாட வழிகாட்டினார்கள் இல்லையென்பது வெள்ளிடைமலை. அத் தெய்வீகச்சக்தி ஜோதியோடு கலந்து கண்காணித்து வருகிறது என்பதும் ஆஸ்தீகர்களின் மெய்நம்பிக்கை. எனவே இனியேனும் ஸ்ரீ ஜகத்குரு மஹான்களின் ஜெயந்தியை ஏகோபித்தும் விசேஷித்தும் கொண்டாடவேண்டுபதே இச் சிறியேனின் பிரார்த்தனை.

எனவேஸ்ரீமத் சங்கார் காட்டுவித்த அத்வைதமத சித்தாந்தத்தை ஸமூகத்தவர் அனுஷ்டித்துவரும்படிக்கு நிலைபெறச் செய்விக்க வேண்டி மற்றுமோர் அவதாரமாய்ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதர் என்ற பெரியவாள் இத்திருவிரிஞ்சைப்பதியின் ஜனித்து ஸ்ரீமார்க்கபந்துவைதம் குல தெய்வ வழிப்பாட்டுடையாராய் பல்வேறு லீலைகள் கூட்டி ஸ்ரீகாசிமுதல் கன்னியாகுமரிவரையில் யாத்திரை முடித்து அத்வைத சித்தாந்தத்தின் மெய்மையை பாஷ்யங்கள் மூலம் விளக்கிவைத்துப்பின், தில்லை ஒளியில் கலந்துள்ள மஹானின் ஜெயந்தியைக் கொண்டாடுவோமாக! ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதர் விஜய கணிப்புப்படி, கலி 4654, (கி. பி. 1554) க்கு பிரமாதீசஸூ கன்யா (புரட்டாசி)மீ கிருஷ்ணபக்ஷம் பிரதமை திதி உத்திரப்ரோஷ்டபதா நக்ஷத்திரம் சோமவாரம் கூடிய சுப புண்ணிய நாளில் சாத்விக வேளையில் ஜனித்துள்ளதாக அறிகிறோம். எனவே, அம்மஹானின் ஜெயந்தியை ஒவ்வொரு ஆஸ்திக இந்து குடும்பங்களும் இனியேனும் ஆண்டுதோறும் கொண்டாடுவோமாக!

இன்றைக்கு சுமார் 384 ஆண்டுகளுக்கு முன் இம்மஹான் ஜனித்ததாகவும் அதுக்கு சாக்ஷியாய் இத்திருவிரிஞ்சைப்பதியின் கண் ஸ்ரீ தீக்ஷிதர் பிரதிஷ்டாஸ்தாபனமாய் மடாலயம் இருந்து வருகிறது.

நாளது வெகுதான்யஸூ கன்யாமீ 9உ (24—9—38) கிருஷ்ணபக்ஷம் பிரதமை உத்திர நக்ஷத்திரம் சனிவாரம் அன்று 'மஹான்கள் தெய்விக சக்தியில் கலந்தவர்கள்' என்பதை மெய்ப்பிப்பதாய் ஸ்ரீ அம்பாள் தசரா பண்டிகை நவாத்திரி ஆரம்பதின் விசேஷித்தநாளில் ஸ்ரீமதப்பய்ய தீக்ஷிதர் ஜெயந்தியையும் ஞாபகத்தில் கொண்டு கொண்டாடி காரண காமிக ஐஹிகாமுஷ்மிக) பலன்களை அடையவேண்டுமாய் ஷெ மடாலய ஊழியன் பிரார்த்தித்துக் கொள்ளுகின்றனம்.

V. M. முனிரத்தினய்யர்,
ஸ்ரீ மதப்பய்ய தீக்ஷிதர் மடாலயம்,
விரிஞ்சீபுரம்.

## கரூர்.

நாச்சியார் கோவில் லக்ஷ்மீ மந்திரம் ஸ்ரீ உபய வேதாந்தாசார்ய வித்வான் அபிநவ ஸரஸ்வதீ வாங்முக ரத்னகோச: வித்வத் சிரோமணி: பண்டிதராஜ: குருவர்ய: நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசார்யர் அவர்கள் கரூர் மேலப்பாளையம் மஹாஜனங்களின் கோரிக்கைப்படி அருமையான பகவத் பக்தி ஸாதன ஸத்தர்ம விஷயங்களைப்பற்றி உபந்யஸித்துப் போனந்தத்தை விளைவித்ததுடன் ஸ்ரீரங்கம் ஸ்ரீஅகோபிலமடம் ஸ்ரீஸ்வாமிகளும் உத்தா திவ்ய தேச ஸத்விஷயங்களை ஆனந்தமாகக் கேட்டு புகழ்ந்து உபசரித்தனர்.

ஒரு நிருபர்.

## ஈஞ்சல்.

"திருநாட்டியத்தான்குடி சமீபம் ஈஞ்சல் என்கிற ஸ்ரீ உமாமகேஸ்வரபுரம் கிராமத்தில் ஜகஜ்ஜோதியாய் விளங்கிவரும் ஸ்ரீ மங்களாம்பிகா சமேத ஸ்ரீபாதாளேஸ்வரஸ்வாமிக்கு மண்டலாபிஷேக பூர்த்தி 45-வது நாளிலும் அதாவது (18-9-38)லும் லக்ஷார்ச்சனை பூர்த்தியும் மகா பிரதோஷ புண்யகாலமும் நேர்ந்ததால் அன்று பிரதோஷகாலத்தில் மஹன்யாஸ ஜபத்துடன் திவ்யாபிஷேகமும் சகலருக்கும் லக்ஷார்ச்சனை நைவேத்தியங்களாகிய சகலவித பிரசாதங்களுடனும் சந்தன தாம்பூலமும் ஆலயத்தில் வழங்கப்பட்டன.

V. S. ராமச்சந்திர அய்யர்,
ஸ்ரீமடம் சிஷ்யன்.

215249




மார்சலியே

சுவாஸப்பைகளில் கபமாக மாறி Bronchitis என்ற வியாதியை உண்டுபண்ணுவது. அமிர்தாஞ்சனத்தை உபயோகித்து நிவர்த்திசெய்துகொள்ளுங்கள். எச் சமயத்திலும் வெகு துரிதமாக ஸ்வஸ்தப்படுத்துவது

அமிர்தாஞ்சனம்





# வெளியூர்ச் செய்திகள்.

## ஆத்தன்குடி.

ஸநாதன தர்ம மகாசபை விசேஷகூட்டம்:
ஸ்ரீமான் R.கிருஷ்ணஸ்வாமி அய்யர் விஜயம்.

வெகுதான்யஞு ஆவணிமீ 29வ (14-9-38) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மதுரை ஜில்லா வர்ணாசிரம சுயராஜ்ய சங்க மகாநாட்டு தலைவரும் திருநெல்வேலி பிரபல அட்வகேட்டுமான ப்ரும்மஸ்ரீ R. கிருஷ்ணசாமி அய்யாவர்கள் M A B L., தலைமையில் விசேஷப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. உபதலைவர். ஸ்ரீமான் சு. வீர. கதிரேசன் செட்டியாரவர்கள் வரவேற்புரை கூறிய பின் கோனு பட்டு போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் பொன்னுசாமி பிள்ளை அவர்கள் "ஸநாதனிகளின் கடமை" என்ற பொருள் பற்றி அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள்.

தலைவர்கள் ஸநாதன தர்ம தத்துவங்களை அரிய மேற்கோள்களுடன் எடுத்துக் கூறி, ராஜநீதி முறையையும் தர்ம மததத்வங்கள் மிக்க ஸூக்ஷ்மமானதால் கேவலம் யுக்தி புத்தியை மட்டிலும் ஆதாரமாகக்கொண்டும் மெஜாரிடி பலத்தைக்கொண்டும் சட்ட சபைகள் தர்ம விஷயங்களில் தலையிடுவது அனர்த்தமென்றும், அதிகாரபலத்தால் எதைச்செய்தாலும் அது நியாயமாகி விடாதென்றும் அதுபலாத்காரமேயன்றி வேறல்ல என்றும் அரசனுக்கு தர்மத்தை மாற்ற அதிகாரம் எந்த காலத்திலும் கிடையாதென்றும் தர்ம ரக்ஷணம் பண்ணுவதே அவனது கடமை யென்றும் விஸ்தாரமாகக் கூறி, காங்கிரஸ் காராச்சியில் நிறைவேறிய ஜீவாதார உரிமைகளுக்கு விரோதமாய் மத ஸமூக விஷயங்களில் தலையிட்டு வருவது கண்டிக்கத் தக்கதென்றும் ஸநாதனிகள் எதற்கும் அஞ்சாது இறைவனின் கட்டளையை நிறைவேற்ற தீவிரமாக பிரயத்தனம் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டதென்றும் உருக்கமாக கேட்போர் மனம் பரவசமடையும்படி சொற்பொழிவாற்றினார்கள். பிரசார காரியதரிசி ப்ரும்மஸ்ரீ ஜெகதீசய்யாவர்கள் வந்தனோபசாரம் கூற மாலை 6 மணிக்கு ஸபை கலைந்தது. தலைவர்கள் அன்றிரவு குன்னக்குடி முருகன் தரிசனம் கொண்டு 16 17 18வ யில் நடைபெற்ற நாகப்பட்டணம் ஹிந்து மதாபிமான சங்கத்தில் தலைமை தங்க 1. 30. மணிக்கு செட்டிநாடு ஸ்டேஷனில் ரயில் ஏறினார்கள்.

V, S. வெங்கிடருமய்யங்கார்.

## மதுரை.

### ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபை.

நாளது பகுதான்ய-ஞு புரட்டாசி-மீ 7வ (23—9—38) வெள்ளிக்கிழமை மாலை 3-மணிக்கு ஷை ஸபையின் வருஷோத்ஸவம் மதுரை மேலவெளிவீதி மார்வாடி தர்ம சாலாவில் நடைபெறும்.

அவ்வமயம் சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜ் ஸ்ரீ. உப. வே. கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் ஸ்வாமி அக்கிராசனம் வஹிக்க அன்புடன் அங்கீகரித்திருக்கிறார்கள்.

பகுதான்ய-ஞு புரட்டாசி-மீ 7வ (23-9-38) வெள்ளிக்கிழமை மாலை 3-மணி அக்கிராசனாதிபரை வரவேற்றல், பகவத் பிரார்த்தனை, ஸ்வாகத விக்ஞாபனம்' அக்கிராசனாதிபர் வரணம், ஏழாவது வருஷ சரி விக்ஞாபனம். வித்யார்த்திகளுக்கு பரிசளித்தல். அக்கிராசனர் முகவுரை.

"திருவாய்மொழியும் சாணக்கியும்" ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான் தில்லையம்பூர் முடும்பி ஸ்ரீ. உப. வே. சக்ரவர்த்தி வெங்கடாசாரியர் ஸ்வாமி.

24-9-38 சனிக்கிழமை காலை 7-30மணி 'கீதையும் ஆசாரியனும்'' ஸ்ரீ வில்லிபுத்தூர், வித்வான் ஸ்ரீ. உ-வே தேசிகாசார்யஸ்வாமி "பாதுகாபிரபாவம்" சென்னை அட்வகேட் வித்வான் ஸ்ரீ. உப. வே. ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி மாலை 3-30-மணி ஸ்ரீ தேசிகனும் ஆழ்வார்கள் திவ்ய ஸூக்திகளும் ஒப்பிலியப்பன் விசாரத சிரோமணி ஸ்ரீ. உப. வே. வ. ந. சடகோபாசாரியார் ஸ்வாமி. "கவிஸிம்மம் ஸ்ரீ தேசிகனும் மஹாகவி காளிதாஸனும்" திருச்சி அட்வோகேட் ஸ்ரீ. உப. வே. எ. வி. கோபாலாசாரியார் ஸ்வாமி.

25-9-38 ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணி "ஸ்ரீ பாதாழ்வானும் நம்மாழ்வாரும்" ஒப்பிலியப்பன் வித்வான் சிரோமணி ஸ்ரீ. உப. வே. வ. ந. ராமதேசிகாசாரியார் ஸ்வாமி. "ஸ்ரீ தேசிகன் வைபவம்" ஸபை வித்வான் நெரூர் ஸ்ரீ. உப. வே. நாராயணய்யங்கார் ஸ்வாமி. மாலை 3-மணி "ஸ்ரீ ப்ரஹ்லாதாழ்வானும் நம்மாழ்வாரும்" ஒப்பிலியப்பன் விசாரத சிரோமணி ஸ்ரீ. உப. வே. சடகோபாசாரியார் ஸ்வாமி. 4-30 அக்கிராஸனாதிபர் முடிவுரை. வந்தனோபசார மங்களம் என்று கார்யதர்சி அறிவிக்கிறார்.

## காயத்ரீஜப கால விசாரம்.

ஷை தலையங்கத்துடன் சென்ற ஆகஸ்ட் மீ 18வ ஆர்யதர்மத்தில் நான் வெளியிட்ட பிரசுரத்திற்கு நாளது மீ 15வ ஆர்யதர்மத்தில் "ஓர் பதில்" என்ற தலையங்கத்துடன் ஓர் வியாசம் வெளியிடப்பட்டிருக்கிறது. சாப்பிட்ட சாதத்திற்கு ஊறுகாய் தேடுவது அனாவசியமெனப்படுகிறது. மறுபடியும் சாப்பிடப்போகும் சாதத்திற்கு இப்பொழுதே கையில் தயாராக ஊறுகாய் வைத்துக்கொள்வது விவேகிகள் கார்யமே. இதில் குற்றமொன்றுமில்லை. காலமாதவீயாதி வசனங்களையும் இன்னும் பல பரிஷத் பிரவசனங்களையும்நன்கு தெரிந்துகொண்ட ஸ்ரீமான் சுந்தரமய்யர் அவர்கள் ஆர்யதர்மம் மூலமாகவே தன் அபிப்ராயத்தை தெளிவாக உபபாதனம் செய்யலாம். இவ்விதம் செய்யும் சாஸ்திர சர்சைகளுக்கு பத்திரிகைகளில் சுலபமாக இடம் கிடைக்குமென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. பிறருக்கு உபதேச செய்யுமிவர் ஸ்ரீரங்கம் பரிஷத்திற்கு விஜயம் செய்திருந்தாலும் அல்லது விஜயம் செய்தவர்களிடம் கேட்டிருந்தாலும் மிகவும் அழகாகவிருந்திருக்கும். உபயோகமற்ற இவ்வித வாதங்களைவிட்டு சாஸ்திர சர்சையில் இவர் இறங்குவாராக.

நாராயணய்யங்கார், மதுரை

[இவ்விஷயமான நிருபம் இனி பிரசுரிக்கப் படமாட்டாது.]


## Srimad Bhagavatham.

Condensed, translated into English, illurated by T. R Ganapathiramier, Advocate.
Glaze paper Bound Price Rs. 1—4—0
Ordinary and Bound PriceRs. 1—0—0

## ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராமய்யாவர்களால் தமிழில் மொழிபெயர்ப்பு.
கிளேஸில் பைண்டு செய்தது ரூ. 1—4—0
சாதாரண பேபர் ரூ. 1—0—0
7,8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது. விலை 8அணா

1. G. Subramaniam &Co.,
Sri Bhagavam Publishing House,
Tinnevelly Jn.

Arya Dharmam Office, Kumbakonam.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.

அச்யுதாசிரமம்
29-9-1938
4
23 28
215250

215250
30 SEP 1938
MADRAS

Registered No. M. 2913

# ஆர்யதர்மம்.

(வாரப்பத்திரிகை.)
குருவாரந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:
அக்னிஹோத்ரம்
கோபாலதேசிகாசாரியார்

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

பு 23 | கும்பகோணம் கலி5040 பகுதான்யஞு புரட்டாசிமீ 13உ 1938ஞு ஸெப்டம்பர்மீ 29உ | ஸ 38

## கும்பகோணம் அத்வைத ஸபை ஆதரவில் நடந்துவரும்.

பிரும்மஸ்ரீ, பழமார்நேரி ப. ஜே. அய்யுவய்யர் அவர்கள் தர்மங்கள் ஸம்பந்தமாய் 1—4—37 முதல் 31—3—38 முடிய உள்ள காலத்தின் வரவு சிலவு கோஷ்பாரா.

| வரவு | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 சென்ற வருஷ கோஷ் பாராபடி இருப்பு விபரம்: | | | | |
| மூலதன இருப்பு (3½% கெவர்மெண்டு ஸ்டாக்கு சர்டிபிகேட்படி) | 65,300 0 0 | | | |
| கும்பகோணம் பாங்கில் F. D. ல் இருப்பு | 1,000 0 0 | 67,309 | 14 | 0 |
| கும்கோணம் பாங்கு ஸேவிங்க்ஸ் பாங்கு கெ. 1050 கணக்கில் இருப்பு | 1,009 13 0 | | | |
| குமாஸ்தா வசகட்டு இருப்பு வரவு | 0 1 0 | | | |
| 2 கெவர்மெண்டு ஸ்டாக்குக்கு வட்டி வரவு இன்கம் டாக்ஸ் பிடித்தம் போக | | 1,950 | 8 | 0 |
| 3 இன்கம்டாக்ஸ் பிடித்தம் ரீபண்டு வரவு | | 335 | 0 | 0 |
| 4 கும்பகோணம் பாங்கு F. D. வட்டி வரவு | | 35 | 4 | 5 |
| 5 ஷை S. B. வட்டி வரவு | | 34 | 8 | 5 |
| | | 69,665 | 2 | 10 |

| சிலவு | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1 ஸ்ரீ காசிவிசுவனாதஸ்வாமி தினஸரி மஹா சிவராத்திரி பூஜை | | 120 | 0 | 0 |
| 2 ஸ்ரீ பழணியாண்டவர் ஜேஷ்டாபிஷேகம் | | 60 | 0 | 0 |
| 3 கும்பகோணம் அத்வைத ஸபைக்கு நன்கொடை | | 100 | 0 | 0 |
| 4 பிரும்மஸ்ரீ அய்யுவய்யர் அவர்களுக்கு டிரஸ்டு பத்திரப்படி | | 595 | 0 | 0 |
| 5 சிவகாமி அம்மாளுக்கு ஷை | | 357 | 0 | 0 |
| 6 பாடசாலை உபாத்யாயர் சம்பளம் | | 420 | 0 | 0 |
| 7 ஷை வித்யார்த்திகள் ஸ்டைபெண்டு | | 288 | 0 | 0 |
| 8 தண்ணீர் பந்தல் தர்மம் | | 101 | 4 | 1 |
| 9 அத்வைத ஸபை குமாஸ்தா சம்பள கணக்குக் கொடுத்தது | | 30 | 0 | 0 |
| 10 கோஷ்பாரா முதலியவை பேப்பரில் பிரசுரம் செய்ய | | 26 | 4 | 0 |
| 11 தபால் சிலவு & பாங்கு கமிஷன் | | 3 | 7 | 9 |
| 12 பழமார்நேரியிலுள்ள டிரஸ்டு வீடுரிபேர் | | 130 | 0 | 0 |
| 13 பாடசாலைக்கு புஸ்தகங்கள் வாங்கியது | | 49 | 14 | 0 |
| 14 பாடசாலை பூர்த்திபெற்ற வித்யார்த்திகளுக்கு அட்வான்ஸு தொகைகளை திருப்பிக்கொடுத்தது | | 21 | 0 | 0 |
| 15 பழமார்நேரி வீடு ரிபேர் செய்ததை பார்த்துவர சிலவு | | 3 | 4 | 3 |
| 16 பரீக்ஷைக்கு பேப்பர் வகயறு வாங்கியது | | 1 | 9 | 3 |
| 17 இருப்பு விபரம்: | | | | |
| குமாஸ்தா வசகட்டு இருப்பு | 69 3 9 | | | |
| கும்பகோணம் பாங்கு F. D. No. 3857-ல் | 1000 0 0 | | | |
| கும்பகோணம் பாங்கு S. B. 1050 கணக்கில் | 989 3 9 | | | |
| கெவர்மெண்டு 3½% ஸ்டாக்கு ஸர்டிபிகேட்டுபடி மூலதனம் இருப்பு | 65,300 0 0 | 67,358 | 7 | 6 |
| | | 69,665 | 2 | 10 |

K. S. Mahadeva Iyer, ஆடிட்டர், 17—7—38.

R. Swaminatha Ayyar, B.A. L.T.
G. V. Venkatarama Ayyar, B.A, B.L. } Managers.

M. K. Vaidyanatha Ayyar, B.A., B.L. Secretary.

பல் வியாதிகள் கவனிக்குமிடம்:—T.B. சீதாராம் டெண்டிஸ்ட், பெரியதெரு, கும்பகோணம்

# தேசிகன் தேன் மொழிகள்.

## விவாகச் சீர்திருத்தம்.

### 2. பால்யவிவாஹம்.

பிரபு: பால்ய விவாஹத்தைப்பற்றி பிரஸ்தாபிக்க ஏற்பட்டிருப்பதால், ஸமீபத்தில் அது விஷயமாய் ஏற்படுத்தியிருக்கும் சட்டத்தைப்பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

மஹாஸ்வாமிகள்: சாஸ்திரங்கள் இந்த விஷயம் இப்படித்தான் என்று தீர்மானித்துக் கொடுத்திருக்கிற ஸ்திதியில் நானு "அபிப்பிராயம்" சொல்வது? ஒருவனுடைய "அபிப்பிராயமும்" இவ்விஷயதில் கொஞ்சமேனும் தேவைப்படவில்லை. மதஸம்பந்தமாய் பிரமாணங்களாயிருக்கிற சுருதி ஸ்மிருதிகள் எல்லா லௌகிக ராஜ்ய நிர்வாஹத்திற்கும் வெளிப்பட்டவை. எந்தக் காரணத்தைக் கொண்டாவது அவ்விஷயங்களில் பிரவேசிக்க ஸர்க்காருக்கு அதிகாரமும் நியாயமும் கிடையாது. சிலர்களின் அபிப்பிராயங்களை எண்ணிப்பார்த்துக்கொண்டு இவ்விதச் சட்டத்தை ஏற்படுத்தியது தற்கால ஸர்க்கார் செய்திருக்கும் தவறுதல்களில் மிகவும் பெரிதான தவறுதல்.

பி: ஸர்க்கார் பிரவேசித்துவிட்டார்கள். சட்டமும் போட்டாய்விட்டது. ஜனங்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும்?

ம: அது ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே தீர்மானித்துக்கொள்ளவேண்டிய விஷயம். சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் தண்டனைக்கு உட்படவா? ஸர்க்கார் பயமுறுத்தும் தண்டனைக்கு உட்படவா?-என்று தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

பி: எப்படியும் கஷ்டம் உண்டு. ஸர்க்காரின் நிர்பந்தத்தினால் சாஸ்திரத்தை மீறும்படி ஏற்பட்டிருப்பதால், பகவான் மன்னிக்க மாட்டாரா?

ம: ஒருநாளும் மாட்டார். உங்கள் லௌகிக சட்டத்திலேயே இன்னொரு பலவானுடைய நிர்பந்தத்திற்காக ஒரு குற்றத்தைச் செய்யும்படி ஏற்பட்டது என்று சொன்னால், குற்றவாளியல்லவென்று விட்டு விடுவார்களா? பின்னால் ஜாஸ்தி அனர்த்தம் வந்தாலும், தத்காலத்திலுள்ள அனர்த்தத்திலிருந்து தப்பித்துக்கொள்வோமென்று நினைக்கிறீர்கள். இது நீங்களாக புத்தி பூர்வமாகவே செய்யும் கார்யமானதால் அதன் பலனை அனுபவித்தே தீரவேண்டும். மற்றவர்கள் பேரில் குற்றத்தைச் சாற்றுவதற்கு நியாயம் கிடையாது.

பி: இவ்விதச் சட்டத்திற்கு காரணபூதர்களாயிருந்தவர்கள் ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதியே இது மிக்க அவச்யமென்று மனப்பூர்வமாய் நம்புகிறார்கள்.

ம: இருக்கலாம். ஆனால் அதன் அர்த்தம் என்ன ஆகிறது! பால்யவிவாஹம் செய்ய வேண்டுமென்று சொல்கிற சாஸ்திரங்கள் ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதவில்லையென்றல்லவா?

பி: முன் காலங்களில் அவை பிரயோஜனமாயிருந்திருக்கலாம். இப்பொழுது அப்படியில்லாததினால் மாற்றவேண்டியதுதானே!

ம: நம் ரீதியாக சாஸனம் (கட்டளை) செய்கிற காரணத்தினால் சாஸ்திரங்களுக்கு சாஸ்திரங்கள் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அபிப்பிராயத்தில், இப்பொழுதுள்ள சட்டஸபையாரின் இஷ்டமோ மனப்போக்கோ அதையனுஸரித்து இவைகள் சாஸனம் செய்யப்பட தகுந்தவை, சாஸ்யங்கள், என்று ஆகவேண்டுமென்று தோன்றுகிறது. நம் தர்மம் ஸநாதனம், அதாவது நித்யம், மாறுபாடற்றது, என்று நம்புகிற நாம் இக் கொள்கையை எவ்விதத்திலும் அங்கீகரிக்க முடியாது. மேலும், ஸர்க்கார் எவ்வளவோ பலசாலியாகவே இருக்கட்டும், ஜனங்களைப்பார்த்து உங்கள் மதகோட்பாடுகளை மீறித்தான் நடக்கவேண்டும், இல்லையானால் தண்டிப்போம், என்று நிர்ப்பந்தம் செய்ய என்ன அதிகாரம்? இந்த சட்டம் ஏற்படும்வரை இவ்வளவுதூரம் ஒரு ஸர்க்காரும் நிர்ப்பந்தித்திருப்பது கிடையாது.

பி: இச்சட்டம் வேண்டுமென்று பிரயத்தினம் செய்தவர்களில் சிலர்களுக்கு சாஸ்திரத்தில் நம்பிக்கையே கிடையாது. அநேகர்களுக்கு சாஸ்திரம் மாற்றத்தகாதது என்பதில் நம்பிக்கை கிடையாது.

ம: அப்படியானால், தங்களை ஹிந்துக்களென்று சொல்லிக்கொள்ளவாவது ஹிந்துக்கள் ஸம்பந்தமாய் சட்டம் போடவாவது அவர்களுக்கு கொஞ்சமேனும் அதிகாரம் இல்லை.

பி: வயதானபிற்பாடு விவாஹம் செய்வதே சாஸ்திர சம்மதம் என்று கூட காட்டவும் கொஞ்சம் பிரயத்தினம் நடந்தது. ஆனால் அதை முக்கியமாய் வற்புறுத்தவில்லை. ஜனங்களின் ஐஹிக ஸௌகம்தான் தங்களுடைய முக்கிய உத்தேசமென்று வாதாடினார்கள்.

ம: இதனால் ஐஹிகம்தான் எப்படி ஏற்படக் கூடும் என்பதிலும் ஸந்தேஹமே. ஸௌகம் ஏற்படுகிறதென்றே வைத்துக்கொள்வோம். ஜன்மாந்திரத்திலாவது லோகாந்திரத்திலாவது ஏற்படகூடிய விசேஷ ஸௌகத்திற்கு நிச்சயமாய் பிரதிபந்தகமென்று தெரிகிற கார்யத்தைச் செய்தாவது இந்த ஐஹிக ஸௌகம் ஸம்பாதித்துக்கொள்ளவேண்டுமா?

பி: ஜன்மாந்தரம், லோகாந்தரம், இவைகளில் நம்பிக்கையில்லாததினால், இவ்விஷயத்தையே அவர்கள் பொருட்படுத்துகிறதில்லை. அநேகர்களில் ஸௌகம் துக்கம் இவைகளைக் கொடுக்கக்கூடிய கர்மாக்கள் இவையென்று சொல்கிற சாஸ்திரங்களிலும் அவர்களுக்கு நம்பிக்கையில்லை.

ம: இந்தக் காரணத்தினாலும் அவர்கள் தங்களை ஹிந்துக்களென்று சொல்லிக் கொள்ள நியாயமில்லை. அப்படியிருக்க, ஹிந்துக்களுக்காக சட்டம்போட எப்படி அதிகாரம் ஏற்படும்? இதிருக்கட்டும் இச்சட்டத்தினால் ஜனங்களுடைய ஐஹிக ஸௌகத்தை எப்படி ஸாதிக்கலாமென்று நினைக்கிறார்கள்?

பி: நம் தேசத்தில், முக்கியமாய் வங்காளத்தில், விவாஹம் என்பது என்னவென்று தெரிந்துகொள்வதற்கு முன்னமேயே பர்த்தாக்களை இழந்த பாலவிதவைகள் அநேகம் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை ஜாஸ்தியாகாமல் இச்சட்டம் தடுக்குமல்லவா?

ம: விவாஹம் என்றால் என்னவென்று தெரிந்தபிறகு விதவைகளாக ஏற்படுகிறவர்களிடம் இருக்கும் அனுதாபத்தைவிட, இப்பால விதவைகளிடம் சீர்திருத்தக்காரருக்கு ஜாஸ்தி அனுதாபமிருக்கிறதாகத் தெரிகிறது.

பி: ஆம்.

ம: ஒரு ஸௌகம் என்ன விதமாயிருக்குமென்று தெரியாமலே இருப்பது துக்கமா, தெரிந்து கொஞ்சம் அநுபவித்துவிட்டு இழப்பது துக்கமா?

பி: அனுபவித்து இழப்பதில் தான் ஜாஸ்தி துக்கமிருக்கும்.

ம: இந்த நியாயத்தை விதவைகள் விஷயத்தில் ஏன் கவனிக்கவில்லை? தாம்பத்ய ஸௌகமென்னவென்று தெரிந்து இழந்திருக்கும் விதவைகளே விசேஷமான அனுதாபத்திற்கு பாத்திரராவார்கள். மேலும், ஒருநாள் ஆண்டுவந்த பதார்த்தத்தை இழந்தால் ஜாஸ்தி துக்கமா, வருஷக்கணக்காக அபிமானித்து ஆண்டுவந்த பதார்த்தத்தை இழப்பது ஜாஸ்தி துக்கமா?

பி: ஜாஸ்தி ஆண்டுவந்ததை இழப்பதுதான்.

ம: இதே நியாயப்படி, பர்த்தாவின் பரிசயம் ஏற்பட்டு கொஞ்சகாலத்திற்குள் இழப்பவளை உத்தேசித்து, நல்ல வயது வந்த பிறகு பர்த்தாவை இழக்க ஏற்பட்டவளுக்கே ஜாஸ்தி துக்கமிருக்கும். ஆகையால், வயதான பிறகு விதவைகளாகிறவர்களே நம் அனுதாபத்திற்கு விசேஷ பாத்திரர்களென்று தோன்றுகிறது. அவர்களைப்பற்றி ஏன் சீர்திருத்தக்காரர் கவலைப்படுவதாகத் தெரியவில்லை?

பி: அனுதாபப்படாமல் என்ன? வயதானவர்களோ பாலிகைகளோ, எல்லா விதவைகளுமே புனர்விவாஹம் செய்துகொள்ளலாம் என்பதுதான் அவர்கள் கருத்து.

ம: "விதவை" என்ற சப்தமே அவர்கள் காதில் உறுத்துகிறதென்று தோன்றுகிறது. அதினால் தான் விதவைகளின் எண்ணிக்கையைக் குறைக்க உத்தேசிக்கிறார்கள்போலும்.

பி: வாஸ்தவம்.

ம: விதவைகளின் எண்ணிக்கையைக் குறைக்க இவ்வளவும் சிரமம் எதற்கு? இனி நம் தேசத்தில் விதவைகளே இருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் போட்டு விட்டால் போதுமே?

பி: அதெப்படி ஸாத்தியம்?

ம: ஏன் ஸாத்தியமாகாது?

பி: பர்த்தாக்களை சாகாமல் இருக்கும்படி எப்படி செய்யமுடியும்?

ம: அதிருக்கட்டும். பெண்கள் விதவைகளாகாமல் இருக்கச் செய்யமுடியாதா?

பி: அதெப்படி முடியும்?

ம: பார்யை தானே பர்த்திரு வியோகத்தினால் விதவையாகிறாள். எந்தப் பெண்ணும் பார்யையாகவே ஆகக்கூடாதென்று சொல்லி விவாஹத்தையே நிறுத்திவிட்டால், விதவையென்று ஏற்படவே வழியில்லாமல் போய்விடாதா?

பி: அது வாஸ்தவமே. மேல் தேசங்களில் முன்னேற்ற மடைந்ததாகச் சொல்லிக் கொள்ளும் சில நாடுகளில் அதுமாதிரியும் பிரயத்தினம் செய்துவருகிறார்கள். அந்நிலை நம் தேசத்தில் ஏற்படாமலிருக்கும்படி பகவான் அனுக்ரஹம் செய்வாராக.

ம: உங்கள் சீர்திருத்தக்காரர்களும் அந்நிலைக்குத்தானே கொண்டுபோகிறார்கள்!

---


தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
(மூன்றாம் பதிப்பு)

பிராம்மணர்களின் தர்மானுஷ்டானங்களை விவரிக்கும், "வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின், ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம்மண குடும்பங்களிலும்இருக்கவேண்டியதவசியம்.

விலை ரூ. 1—8—0 வி. பி. பிரத்யேகம்.

பப்ளிஷர்.
தர்ம சாஸ்திரச் சுருக்கம்.
கீழவிடையல், திருச்சிரை.

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பாகவதம் காலிகோபயிண்டு | 2 | 0 | 0 |
| ராப்பர் | 1 | 8 | 0 |
| " இங்கிலீஷ் | 2 | 0 | 0 |
| 7, 8, 9 ஸ்கந்தங்களில் தமிழில் | 0 | 8 | 0 |

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், டவுன் ஹைஸ்கூல்ரோடு, கும்பகோணம்.




# திருப்புகழும் பக்தி ரஸமும்.

(சென்ற வாரத்தொடர்ச்சி)

60 தோலோடு மூடிய கூரையை —சீரலைவாய்நகர் மேவிய கந்தப் பெருமானே. என்னும் பாடலில் 'யதீம் சுருணேத்யலகம் சுருணேதி நஹிப்ரவேத ஸௌகிரு தஸ்யபந்தாமிதி' என்ற ச்ருதியின் அர்த்தம் விளங்கா நிற்கும் அதாவது பிரும்ம மார்க்கத்தை அறியாமல் காவியம் அலங்காரம் முதலியவை கற்றும் பயனில்லையாமென்பதை 'துதொடு நான்மணிமாலை பிரபந்தக்கோவையுலாமடல் கூறிய முந்தி — அலமாரும்— வீணனை சோக மெலமற (तरतिशोकमात्मवित्) என்றபடி மெய்ஞானத்தவம் சற்றருளாதோ, என்றமை காண்க.

84 நிலையாப்பொருளையுடலாக்கருதி என்றபாட்டு, தேஹாத்மாபிமானமேயேபந்தத்திற்கு ஹேது எனக்கூறும்.

88 மனைகனகலமந்தர் என்னும் பாடல். மதையே அனர்த்த ஹேது என்றும் அதையொழித்து அருளவேண்டுமெனப்பிரார்த்தித்தல் பகரும் 'எனதென்று கருதி— கருவில் விழுகின்றதியல்பாமோ, என்பதாகக் கருவில் விழுவதற்கும் எனதென்று கருதலுக்கும் காரிய காரண பாவம் காட்டியது காணற்பாலது.

97 'மூலமந்திரமோத லிங்கில்லை ஈவதிங்கில்லை' நேயமிங்கில்லை' என்னும் பாவினால் வியதிரேகமுகத்தானே. 'தமேதம் வேதானுவசனேன பிரும்மணா விவிதிஷந்தியக்ஞேன தானேன தபஸாநாசகேன' என்ற சுருதியின் அர்த்தம் கூறுவதுடன் தத்துவஞானிகளான ஸாதுக்களின் சங்கத்தையும் பிரார்த்திக்கின்றது— மூல மந்திரம் பிரணவ ஜபம். 'தஸ்ய வாசக: பிரணவ:' தஜ்ஜபஸ்ததர்த்த பாவனம் என்று யோக ஸூத்திரம். ஈவது— தானம் நேயம் மைத்திரீ 'மைத்ரீகருணா, முதித உபேக்ஷா' என்ற நான்கிலும் மைத்ரீயே முக்கியமாகும். நான்கினுள் ஒன்றும் தன்னிடமில்லையென்றும், விபரீத குணங்கள் குடிகொண்டிருக்கின்றன வென்றும் 'அஞ்ஞான நெஞ்சினர் பாலிணங்கிடு கூர்மை தந்தினியாளவந் தருள்புரிவாயே'. என்று ஸத்ஸங்க புரஸ்ஸரமாகவே தத்துவஞானத்தை வேண்டுகிறார்.

128 'கருவினுருவாகிவந்து' என்றதினால் "கார்ப் பண்ணியதோஷோபஹ்தஸ் வபாவ:" என்பது போல் தனது கிருபணதையைத் தெரிவிக்கிறார். 'யோவா அவிதித்வா அஸ்மால்லோகாத்பிரைதி ஸகிருபண'. என்று பிருகதாரண்ணியம். ஆத்மஞானமின்றி இறந்தவனைக்கிருபணனெனக்கூறிற்று.

185 'இராவினிருள்போலும்—' என்ற பாவில் 'அருதி மொழி ஞானம், தருவாயே' என அருதியன. 'தத்துவமஸி' என்ற வாக்கியார்த்தபோதம் வேண்டுகிறார். அதற்கேற்ப சுவாமிமலையைச்சிறப்பிக்கப்புகுந்து 'தாராதுமிகுதீ முன் பிரர்தவகை பேரலும்' என 'தத்யதேவிகா தூலமக்நௌப்ரோதம்பிரதூயேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: பிரதூயந்தே' என்றவாறு ஆத்ம ஞானம் வாய்ந்த தபோதனர்கள் சூழப்பெற்ற சுவாமிமலையின் நாதனே என விளிக்கிறார்.

199 'நாவேறுபாமணத்த'—என்ற பாட்டில் 'நீவேறெனதிருக்க-நான்வேறெனதிருக்க—சொல் அருள்வாயே—என்றுகூறுவதினால்

'अथ योऽन्यां देवतामुपास्ते अन्योऽसावन्योऽहमस्मीति न स वेदयथा पशुरेवं स देवानां'

என்ற சுருதியின் பொருளை விளக்கியதுடன் காவேரியின் வடபால் புஷ்பிதமான சோலை நிறைந்த தபோ வனமாகும் சுவாமிமலை நாதா என்று விளித்தலினால் 'மனோனுகூலேந்து சக்ஷு பீடனெகுஹாநிவா தாசியணேஸ மாசரேத்' என்ற சுருதி ஸித்தமான ஏகாந்த வாஸமும் இயம்பியதாகும்.

218 'தேனுந்து முக்கனிகள்—' என்ற பாடலில் 'சீவன் சிவஸ்வரூபமெனத்தேறி- நானென்பதற்று' என்பதினால் அகங்காரமற்று நிகிலபந்தமும் நீங்கி நிஷ்பிரபஞ்ச பிரம்மாகாரமே முக்தியெனவதை அருள வேண்டுகிறார். ஸ்ரீ நீலகண்டன் மகனே என்றழைப்பதினால் சமுத்திரம் கடைந்து அமுதம் எடுக்கப்போகையில் லக்ஷ்மீ கௌஸ்துபம் வெள்ளானை, குதிரை, சிந்தாமணி அப்ஸரஸுக்கள் என ஒவ்வொன்றுகக்கிளம்ப ஒவ்வொரு தேவனும் எனக்கு உனக்கு எனச்சண்டையிட்டுக்கொண்டார்களே. கிளம்பியது ஹாலஹலம். ஓடினார்கள். யாவரும் நடுங்கினார்கள். ஜீவனத்துக்கோ சரணமடைந்தனர் சிவபிரானை. அவன் என்ன செய்தான். நாகைப்பழம் போலக்கையிலெடுத்தான். ஸித்தகுளிகையைப்போல நாக்கிலிட்டான். ரத்தினம் பதித்தாற்போல் கழுத்திலணிந்தான். அபயமளித்தான். அகில லோகத்திற்கும் அவரது புத்திரன்ன்றோ அபயப்பிரதானம் செய்ய வருவாயென்பது கருத்து.

270 'பகலிரவினும் கருவியாலனம்பருகி' எனுமிப்பாடல் 'நித்ரயாஹரியதேநக்தம் திவாசவியர்த்கர்மபி:' என்றபாகவதார்த்தம் பகருவதுடன், மாண்டுக்ய உபநிஷத்திலுரைத்தபடி பகலில் ஜாக்ருதாவஸ்தையில் பதினொரு இந்திரியங்களாலும் வைசுவாநரன் என்ற பேயருடன் ஸ்தூல விஷயங்களை யனுபவித்தும் இரவில் ஸ்வப்னத்தில் மனதினால் ஸூக்ஷம விஷயங்களை யனுபவித்தும் சுஷுப்தியில் பக்ஷிகள் கூட்டில் அடைவது போல காரணாத்மாவாய் பிராக்ஞருடன் ஐக்கியம் அடைகிறான் என்று அவஸ்தாத்ரயசோதநம் சொல்வதுடன் அஸ்தூலமனணு' என்று பிருகதாரண்ணியம் அக்ஷரப்பிரும்மணம் கூறினபடி 'அகல நீளமென்றளவு கூறரும்' என்று நிருபித்து அவ்விதமான ஸ்வரூப ஞானமுள்ள பெரியோர்களை ஏசிக்கொண்டழியல் தகுமோ என்றமையால் விதக்த சாகல்ய பிராம்மணத்தில் பொருளையும் விளக்கிற்று. 'நமஸ்காரேண முச்யேத்வம்' என்றுள் கார்க்கி | ஆத்மக்ஞமர்ச்சயேத்பூதிகாமந:' என்று முண்டக உபநிஷத்தும் முறையிடுகின்றதன்றோ.

313 'வாசித்துக்காணொணாதது—' என்னுமிப்பாட்டிலோ

'यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णमचक्षुः श्रोत्रं तदपाणि पादं'

இதில் 'நெஞ்சினோ மாசற்குத்தோணொதது' என்ற விசேஷணத்தால் திருச்யதேத்வக்ரியயாபுத்யா என்ற சுருதியின் பொருளான ஸம்ஸ்காரமுள்ள புத்திக்கு விஷயமென்பதையும் 'அப்பிராப்யமனஸாஸஹ' என்பது சமதமாதி ஸம்ஸ்காரமில்லாத மனோ விஷயமென்பதும் தெளிவு.

399 'ஆசைநாலு சதுரக்கமலம்—' இதில் நடமார்க்கமும் அஷ்டாங்கயோகமும் கூறியிருத்தல் ஸ்பஷ்டம்.

588 காவியுடுத்ததும் இது. 'நலிங்கம் மோக்ஷகாரணம் என்ற விஷயமறைகிறது.

732 மூலாதார மோடேற்றியங்கியை என்ற பாட்டில் தஹராபுண்டரீகத்தில் ஸ்ரீ உமாமகேசுவரனை உபாஸிப்பவனுக்கு உன்னத பதவியை உரைக்கிறது.

790 'அருகுறனி பனியனைய'— இதில் நீயுநானுமாய் ஏகபோகமாய் எனப் பிரார்த்தித்து துவம்வா அஹமஸ்மிபகவோதேவதே என்ற வியதிஹாரம் விளக்குகின்றது.

799 'கொண்டைநேரொத்தவழி'-என்னும் கும்பகோணத் திருப்புகழில் 'ஞானப் பொருளில் ஒன்று போதித்து' என 'ஓமித்யேகாக்ஷரம் பிரும்ம' என்ற பொருள் கூறும்.

872 'தீராப்பிணிதீர'—என்ற பாவில் பிரத்யக பின்ன பிரும்மஞானம் பயக்கும் 'தத்துவமஸி' வாக்கிய உபதேசமும் இதர சாதனத்தால் தீராத பவப்பிணியின் நிவிருத்தியும் நிரூபித்திருத்தல் காண்க.

916 'காணொணாதது—' கேனோபனிஷதார்த்தநிரூபணம். இதில் 'மாயனாயனறியா வகையாது' என்று பிரும்ம விஷ்ணுக்களாலும் துர்விக்ஞேயன் என்றதும் விசேஷம்.

1226 'பிறவியலையாற்றிற்புகுதாதே-குமரகுருகார்த்திகைப் பெருமானே' என்று பாடுவதினால் 'ஜாயஸ்வமிரியஸ்வ—' என நிரூபிக்கப்பட்ட ஸம்ஸார சமுத்திரத்தில் முழுகாமல் ஷண்மதங்களிலும் ஏகரூபமாய் விளங்கும் சைதன்னிப வடிவமான உன்னை சிரவணமனன தியானங்களினால் உறுதியாய் அறிய அருள்புரிவாய் இயல் இசை நாடகம் என முத்தமிழ்த் தெய்வமே அகத்திய முனிவரால் வழிபடப்பட்டவனே என்பதாக உபநிஷத்தின் முடிவில் கூறுவதுபோல குருபரம்பரையும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒவ்வொரு பாடல்களிலும் உயர்ந்த பக்தி ஞானம் வைராக்கியம் புரட்டுமித் திருப்புகழை எல்லோரும ஒவ்வொரு தினம் ஒரு பாடலாவது மனனம் செய்து வருமாறு வடிவேலனைப் பிரார்த்திக்கிறேன்.

आज्ञैः रङ्गनाथेन सुब्रह्मण्य प्रसादतः ।
'श्रीकीर्तिश्च रसो भक्तेः' इति गिरिश्चिन्निरूपितम् ॥
हंस क्षीर नयेनात्र गुणान् गृहान्तु साधवः ।
दोषांश्च दूरीकुर्वन्विति सम्प्रार्थये बुधान् ॥

சுபம்.

முற்றிற்று.

---


நவராத்திரியில்
ஸ்ரீ அம்பாள் அனுக்ரத்தைப்பெற
ஸ்ரீ லலிதா
ஸஹஸ்ரநாமத்தை
பாராயணம் செய்யுங்கள்.

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணா 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணா 0—4—0.
தபால்செலவு அணா 0—1—0

இந்த லலிதாஸஹஸ்ரநாம புஸ்தகம் ஸ்ரீமான் கணேசய்யரவர்களால் மொழி பெயர்த்து அச்சாகிவருகிறதும். ஏற்கனவே ஆர்யதர்மத்தில் பிரசுரமாகி வந்ததுமான ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம புஸ்தகத்தை அனுஸரித்து ப்ரிண்ட் செய்திருக்கிறது.

"ஆர்யா சதகம்"

Mr. G. V. கணேசய்யர், B.A., B.L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷ குறிப்புகளுடன் கூடியது.

100 பக்கங்களுக்குமேல் கொண்டது. தபால் செலவு வேறு] [விலை அணா 0—8—0 ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு விலை அணா 6.

Copies can be had of:—
The Sri Janardana Printing Works, Ltd.
Town High School Road, Kumbakonam



परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
र्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

# ஆர்யதர்மம்

பகுதான்ய-ஹூ புரட்டாசி-மீ 13உ

## யுத்த ஸன்னாஹம்!

ஐரோப்பாவில் ஏற்கனவே நடந்த மஹா யுத்தத்தின் தீமைகளை இன்னும் உலகம் ஸமாளிக்கமுடியாமல் தவிக்கிறது. இந்நிலைமையில் இப்போது மற்றொரு மஹா யுத்தம் ஏற்படுமானால் அதனால் உலகத்திற்கு ஏற்படக்கூடிய கோரமான ஆபத்துக்களை வர்ணிக்கவியலாது. ஜர்மனியில் ஹிட்லரின் ஆதிக்யம் ஏற்பட்ட நாள் முதற்கொண்டே மற்றொரு ஐரோப்பாவிய யுத்தம் ஏற்படுமென்ற அச்சம் இருந்து வருகிறது. இதற்கு ஏற்ற ஸூசனங்களும் அவ்வப்போது வெளிவந்துள்ளன.

சென்ற மஹா யுத்தத்தில் நேசதேச மென்றுசொல்லப்பட்டவைகள் ஒன்று சேர்ந்து ஜர்மனியைக்கஷ்டப்படுத்தியதுடன் அதற்கு அகௌரவமான பல நிபந்தனைகளையும் விதித்து, ஜர்மன் ஏகாதிபத்யத்தையே பல கூறுகளாகத்துண்டித்துப்பங்கு போட்டுக்கொண்டன.

இந்த அவமானத்தை நீக்கிக்கொள்ள ஜர்மன் ஜனங்கள் வெகு பலமான முஸ்தீப்களைச் செய்துவந்தனர். என்றும் காணப்படாத ஒற்றுமையுடன் ஹர் ஹிட்லரின் ஆதிக்யத்தின் கீழ் தங்கள் உரிமைகளையும், மதிப்பையும், நாகரிகத்தையும் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் மிகுந்த ஊக்கம் காட்டி வந்திருக்கிறார்கள். படை பலத்தையும், பணத்தென்பையும் வெகு அதிசயிக்கக்கூடிய வழியில் விருத்திசெய்து கொண்டனர். ஹிட்லர் வெகு தீரத்துடன் ஜர்மனியில் செய்ததும் செய்துவருவதுமான ராஜீய ஸமூஹ மாறுதல்களை உலகம் பார்த்துக்கொண்டு வருகிறது. ஆர்ய ஜாதியினரின் நாகரிகத்தையும், கலாஞானம், வீர்யம், தைர்யம் ஆகிய யாவற்றையும் பாதுகாத்து அவர்களை ஓர் சிறந்த முறையில் வாழச்செய்யவேண்டுவது ஹிட்லரின் பிடிவாதம். இதற்கு விரோதமான எந்த சக்தியையும் த்வம்ஸம் செய்துவிட அவர் கங்கணம் கட்டிக்கொண்டார்.

வர்ஸேல்ஸ் உடன்படிக்கை முதலிய பலவித நிர்பந்தங்கள் காரணமாக தமது நாடுகளை இழந்த ஜர்மனியானது மீண்டும் அவைகளைப் பெற்றுத் தீருவதென்ற உறுதியை முதலில் நிறைவேற்ற முற்பட்டது. அதன் பயனாக உடன்படிக்கையை மீறியும் தனது ராணுவ பலத்தைக்கொண்டு சில விடங்களை ஆக்ரமித்துக்கொண்டுவிட்டது. பிரிட்டன் பிரான்ஸு போன்றவைகள் இதற்கு எவ்வித பரிஹாரமும் செய்யச் சக்தியற்று, வர்ஸேல்ஸ் உடன்படிக்கை வெறும் குப்பைக் கூடைக் காகிதமாகிவிட்டதைப் பார்க்க நேரிட்டது. ஆனால் ஹிட்லர் இதோடு நிற்காமல் மற்றும் தமது காலனிகளை ஒவ்வொன்றாக வசப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டார். தங்களிடமிருந்து பலாத்காரமாக பிடுங்கப்பட்ட நாடுகளை மரியாதையுடன் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்றும் இல்லையேல் தாம் எந்த நடவடிக்கையிலும் இறங்கத் தயாராயிருப்பதாயும் ஹிட்லர் மற்ற ஏகாதிபத்தியத்திற்கும் அடிக்கடி எச்சரிக்கை செய்து வந்தார். இப்படிப் புகைந்து கொண்டிருந்த நெருப்பே இப்போது பற்றி எறிய ஆரம்பிக்கப்போகிறதோ என்று பயப்பட நேர்ந்திருக்கிறது. ஜர்மனி தனது ராணுவ சக்தியைக் காட்ட மற்றொரு ஸந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஒரு ஊசி முனை ரத்தமும் சிந்தாமல் ஓரே இரவில் பெரிய ஏகாதிபத்யமாக விளங்கி வந்த ஆஸ்திரியாவை ஹிட்லர்வசப்படுத்திக்கொண்டார். மற்ற பெரிய ஏகாதிபத்ய நாடுகள் இதை எதிர்க்க சக்தியற்று வேடிக்கை பார்த்துநின்றன. இதனால் தற்போது ஜர்மன் ஏகாதிபத்யத்தின் பொருளாதார ராணுவாதி சக்திகள் முன்னைவிட்டப்பதின்மடங்கு அதிகரித்துவிட்டன. இந்த நிலைமையில் ஜர்மனியானது, ஸெகஸ்லவேகியாவின் மீது கண் வைக்க ஆரம்பித்துவிட்டது அத்தேசத்தில் அனேக ஆயிரம் ஜர்மானியர்கள் வஸிக்கிறார்கள். அவர்களை ஸெக்ராஜாங்கத்தார் ஸரியாக நடத்தவில்லையென்றும், அந்த தேசத்தில் ஜர்மனியருக்கு ஸ்வய ஆட்சிகொடுக்க வேண்டுமென்றும் இல்லையேல் யுத்தம் செய்யப்போவதாயும் ஹிட்லர் எச்சரித்திருக்கிறார்.

பிரான்ஸுக்கும், ஜர்மனிக்கும் எப்போதும் விரோதம். பிரான்ஸை விழுங்கி விட ஜர்மனி விரும்புகிறது. த்வரவும் சென்ற மஹா யுத்த காலத்தில் பிரான்ஸ் செய்த அக்கிரமங்களுக்கு அதைப்பழி வாங்கவும் ஜர்மனி நினைத்து அதற்காக தருணம் பார்த்து வருகிறது. இப்போது ஸெகஸ்லவேகியாவின் மீது பாய்ந்திருப்பதற்கு இதுவும் ஓர் காரணம். அந்த தேசத்தைப் பிடித்துக்கொண்டால் பிறகு பிரான்ஸுமீது படையெடுப்பது ஜர்மனிக்கு வெகு ஸுலபம். ஆதலால் தான், பிரான்ஸும், பிரிட்டனும், ஸெகஸ்லவேகியாவை ஜர்மன் வசம் விடாமல் காப்பாற்றக் கவலைக்கொண்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் யுத்தமேற்படாமல் தடுத்து ஸமரஸமுண்டுபண்ண பிரிடிஷ் மந்திரி சேம்பர்லேன் செய்த முயற்சியும் பலிக்கவில்லை. கடைசியாக ஹிட்லர் தமது இறுதிக்கடிதத்தை ஸெக் ஸர்க்காருக்கும், மற்ற தேசங்களுக்கும் அனுப்பிவிட்டார். அதில் அவர் முக்யமான சில கோரிக்கைகளை வெளியிட்டிருக்கிறார். ஸெக்கில் ஜர்மானியர் வஸிக்குமிடங்களிலிருந்து அத்தேச ராணுவமும் போலீஸாரும் போய்விட வேண்டும். அந்த பிரதேசத்தை அக்டோபர் 1உ-க்குள் ஜர்மன் வசம் ஒப்பித்து விடவேண்டும். ஸெக் ஸர்க்காரில் ராணுவத்திலும் போலீஸிலும் உள்ள ஜர்மானியர்களை உடனே விடுவித்து தங்கள் ஊர் திரும்ப அநுமதிக்கவேண்டும். ஜர்மன் கைதிகள்யாவரையும்விடுவித்துவிடவேண்டும் இவ்வளவு நிபந்தனைகளையும் ஏற்று 1உ-க்குள் வகை செய்யாவிட்டால் படையெடுப்பு நிச்சயமென எச்சரிக்கப்பட்டிருக்கிறது. பிரிட்டன் பிரான்ஸு, ரஷ்யா முதலியவை ஸெக் கவர்ன்மெண்டைக்காக்க அத்துடன்சேர்ந்து ஜர்மனியை எதிர்க்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதாலியானது ஜர்மனிக்குப்பின் பலமாக நிற்குமாம். ஆகவே இருதரப்பிலும் பல தேசங்கள் சேர்ந்து மற்றொரு மஹாயுத்தம் நேருவதாயிருக்கிறது.

இச்சமயத்தில் ஐரோப்பிய ராஜ தந்திரிகளின் விவேகம் நிறைந்த கடமை தெளிவாக இருக்கிறது. கோரமான மனிதக் கொலைக்கு இவர்கள் இடம்கொடுக்கப்போகிறார்களா?

இந்த யுத்தத்தில் இந்தியா எப்படி பாதிக்கப்படுமென்பது சொல்லத் தேவையில்லை. ஸெக் தேசமானது பெரிய பொதுவுடமை தேசமாகையால் நமது தலைவர் நேருஜி அதன்மீது அபிமானம் காட்டி இந்தியர்கள் ஸெக் நாட்டையே ஆதரிக்குமெனச் சொல்லுகிறார். யுத்தம் ஏற்பட்டால் இந்தியாவை பிரிட்டன் எப்படி உபயோகிக்குமென்பது தெரியவில்லை. ஆனால் காங்கிரஸ் கார்யக் கமிட்டிக்கு இதில் ஸர்வாதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். அது என்ன ஆக்ஞையிடுமோ? எதாயிருந்தாலும் பிரிடிஷார் அதை லக்ஷ்யம் செய்வார்களாவென்பது தெரியவேணும்.

இச்சமயத்தில் பகவான்தான் ஐரோப்பிய ராஜ தந்திரிகளுக்கு நல்ல புத்தியளித்து உலகத்தைக் காப்பாற்றவேண்டும்.

## குறிப்புகள்.

### காங்கிரஸில் பலாத்காரம்.

டில்டியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஓர் முக்யமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

காங்கிரஸின் கொள்கையானது அஹிம்ஸையை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டு மென்று விதியும், காந்திஜியின் கட்டளையும் இருந்தபோதிலும் சிலகாலமாக அதில் விரும்பத்தகாத மனிதர்கள் காங்கிரஸ் வேஷம் போட்டுக்கொண்டு புகுந்து அந்த மஹாஸபையையே அசுத்தப்படுத்தி வருகிறார்கள். பலாத்காரமும், ஹிம்ஸையும், அஸத்யமும் காங்கிரஸ் ஸ்தாபனங்களில் வெகுவாக மலிந்து விட்டன. மேலும் சட்டஸபை முதலியவைகளில் ஸ்தானம் வகிக்க வேண்டி அநேக ஆஷாடபூதிகள் 4 அணா கொடுத்து விட்டு காந்தி சிஷ்யர்களாக ஆகிவிட்டதாகப் பாசாங்கு செய்து ஏமாற்றி வருகிறார்ள்.

ஆங்காங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகளும் இந்த ஆஸாமிகளைக் கூச்சமின்றி மெம்பாராகச் சேர்த்துக்கொண்டு விடுகிறார்கள். இதன் பலனாக கக்ஷிச்சண்டைகளும் வஞ்சனைகளும் அஸத்யமும் காங்கிரஸில் பரவி விட்டன. இது பஹிரங்கப்பட்டு விட்டதால் காந்திஜி இதில் மிகுந்த வருத்தமடைந்து காங்கிரஸைப் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று முனைந்திருக்கிறார்.

இவ்விஷயமாக காந்திஜி ஹரிஜனப் பத்திரிகையில், எழுதியிருப்பதையும் அகில இந்தியக் கமிட்டிக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் விவரித்திருப்பதையும் பார்த்தால், காங்கிரஸ் எதிரிகள் கூட இவ்வளவு கேவலமாகக் காங்கிரஸின் தத்கால நிலைமையை வர்ணித்திருக்க முடியாது. அவ்வளவு விரிவாக ஆபாஸ ஊழல்களை எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

மேலும், அபேதவாதிகள், கிருஷிகர்கள் என்ற பெயர் பூண்ட சிலர் காங்கிரஸுக்குள் நுழைந்து பொது ஜனங்களுக்குக் காங்கிரஸ் பெயரால் உபத்திரவம் விளைவித்து வருவதும் பிரஸித்தம். ஐக்ய மாகாணம் முதலிய விடங்கள் கிருஷிகர் இடக்கம் எவ்வளவு பலாத்காரத்தில் இறங்கியிருக்கிற தென்பது ப்ரத்யக்ஷம்.

இம்மாதிரி யெல்லாம பலாத்காரம் காங்கிரஸில் புகுந்து விட்டதைக்கண்டிக்கவும், காங்கிரஸ் கவர்ன்மெண்டுகளுக்கு உபத்ரவம் செய்து வரும் அபேதவாதிகளின் செய்கையை ஒடுக்கவும் ஓர் தீர்மானம் கமிட்டியில் நிறைவேறியிருக்கிறது. இது மிக்க ஆவச்யகமே.

ஆயினும் ஏட்டுச்சுரக்காய் கறிக்குப்பயன் படுமா? காகிதத்தில் இத்தீர்மானத்தைச் செய்துவிட்டால் போதுமா? காங்கிரஸில் மெம்பர்களாயும், நிர்வாஹிகளாயுமுள்ள அநேகர் பலாத்காரத்திலும் ஹிம்ஸையிலும் இறங்குவதை நாம் பார்த்து வருகிறோம். காந்திஜியின் பரம சிஷ்யர்களாக நடிப்பவர்களே பலாத்காரத்தில் உத்ஸாஹமுள்ளவர்களாயிருக்கிறார்களே! அவர்களை இத்தீர்மானம் எப்படிச்சீர்திருத்தும்.

மேலும் திருவாங்கூரில்நடக்கும் பலாத்காரங்களை காந்திஜீயே ஆதரிப்பதால், பலாத்காரம், ஹிம்ஸைபோன்ற பதங்களுக்கு ஸமயோசிதமாக காந்திஜி இஷ்டப்படி அர்த்தமுண்டென்றும் தெரிகிறது. ஸனாதனிகளின் கூட்டங்களைக் கலைத்துக் காங்கிரஸ்காரர் விஷமம் செய்தால் அது பலாத்காரமல்லவென்றும், பொதுஜன அபிப்பிராயமென்றும் வாதிப்பதைப் பார்க்கிறோம். ஆகையால் இத்தீர்மானம் கார்யத்தில் எப்படி நிறைவேறுமென்று பார்ப்போம். மலையாள ஆலயப்பிரவேச விஷயமாக ஓட் எடுக்கப்போகும் ஸமயத்தில் இதற்கு ஓர் சோதனை ஏற்படப் போகிறது.

### அபேதவாதிகளின் வெளியேற்றம்.

பலாத்காரத்தை கண்டிக்கக்கூடாதாம்.

டெல்லியில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்தில் பிரஜா உரிமை ஸம்பந்தமான தீர்மான மொன்றைப் பற்றி விவாதம் நடக்கையில் அபேதவாதிகளும், தீவ்ர வாதிகளும் அத்தீர்மானத்தை எதிர்த்துப்பேசியதுடன், ஆக்ஷேபத்திற்கு அறிகுறியாகக் கூட்டத்தை விட்டு வெளியேறிவிட்டனர். சுமார் 30 பேர்கள் இதில் கலந்து கொண்டனர். காங்கிரஸ்காரர்களே பலாத்கார வழிகளில் இறங்குவதை அந்தத் தீர்மானம் கண்டிக்கிறது.

### லீகுடன் ஸமரஸம் பேசுவதா?

அ. இ கா. கூட்டத்தில் தீர்மானம்.

காங்கிரஸ் ஸபையானது முஸ்லீம் லீகுடன் சில நாட்களாக ஸமரஸம் பேசுவதைக் கண்டித்து அகில இந்திய காங்கிரஸ கமிட்டி கூட்டத்தில் ஜனாப் மூன்ஷி ஆமத் என்ற மஹம்மதியர் ஒருவர் ஓர் தீர்மானத்தை பிரேரேபித்துப்பேசினார். இந்த ஸமரஸப் பேச்சால் காங்கிரஸின் கௌரவத்திற்கு பங்கம் வந்து விட்டதாக எடுத்துக்காட்டப்பட்டது. சுபாஷ் பாபு இதற்கு ஸமாதானம் கூறினார். தீர்மானம் நிறைவேறவில்லை.

### 30 பள்ளிக்கூடங்கள் எடுக்கப்படும்.

ஆசிரியர்களின் கதி.

மேலத்தஞ்சை ஜில்லா போர்டார் பண நெருக்கடி காரணமாக 30 ஆரம்பப்பள்ளிக் கூடங்களை எடுத்துவிட முடிவு செய்தார்கள். மேற்படி பள்ளிக்கூட ஆசிரியர்களின் கதியென்னவென்பது தெரியவில்லை.

### காரேமீது கண்டன தீர்மானம்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் மத்ய மாகாண மந்திரி ஸபை தகராறு விஷயம் பலமாக விவாதிக்கப்பட்டது. டாக்டர் காரேயின் செய்கையைக் கண்டித்து, கார்ய கமிட்டி செய்த தீர்மானம் உறுதி செய்யப்பட்டது. அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. சென்னை பிரதம மந்திரி இந்த தீர்மானத்தை ஆதரித்துப் பேசினார். ஸ்ரீமான் ஆனே காரேயின் கக்ஷியைத் தாங்கிப் பேசினார்.

### ஆஸ்பத்திரிக்கு 8 ஆயிரம்ரூ தர்மம்.

ஸர். சிவஸ்வாமி அய்யர் நன்கோடை.

திருக்காட்டுப்பள்ளியிலுள்ள ஆஸ்பத்திரியில் ஓர் புதிய வார்டு கட்டுவதற்காக ஸர். சிவஸ்வாமி அய்யர் 8 ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறாராம். இதை தஞ்சை ஜில்லா போர்டார் நன்றியுடன் ஏற்றுக்கொண்டதாம்.

### நாக்கை அறுத்து தேவதைக்கு பலி.

லக்ஷ்மணபுரியில் ஒருவர் தமது பிள்ளையின் க்ஷேமத்தைக்கருதி, தமது நாக்கை அறுத்து ஸ்ரீ சீதளாதேவியென்ற தேவதைக்கு அர்ப்பணம் செய்தாராம்.

### கும்பகோணம் அத்வைத ஸபை.

முக்ய தீர்மானம்.

இந்த வருஷம் நடைபெற்ற அத்வைத ஸபை வருஷாந்திர ஸதஸ்ஸில் வைதிக விருத்தியை ஸரிவர நடக்கும்படி எவ்வித ப்ரயத்னங்கள் செய்கிறதென்று விசாரம் செய்த காலத்தில் இனி அந்த விருத்திக்கு வருகிறவர்கள் எதோக்தமாக கிருஹஸ்தர்களுக்கு ஹவ்ய கவ்யங்கள் செய்து வைக்கக்கூடிய சக்தி அவர்களுக்கு பாடசாலையில் படிக்கும் பொழுதே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு அடியில்கண்ட தீர்மானத்தைச் செய்திருக்கிறார்கள்.

"வேதபாடசாலைகளில் வேதாத்யயனம் செய்யும் மாணவர்களுக்கு ஸ்மார்த்த கர்மாக்கள் செய்துவைக்கத் தகுந்த் யோக்யதை உண்டாக்கவேண்டி கிருஹ்ய ஸூத்ரங்களும் ப்ரயோகங்களும், வேதாத்யயனம் காவ்ய பாடம் இவைகளுடன் போதிக்கும்படி பாடசாலை டிரஸ்டிகளுக்கு தெரிவிக்கிறதென்று தீர்மானிக்கப்படுகிறது.

இந்த தீர்மானத்தை ஷை பாடசாலை டிரஸ்டிகள் ஆமோதித்து அதில்கண்டபடி பாடங்களை கற்பிக்க ஏற்பாடு செய்வதோடு இது விஷயமாக பாடசாலை டிரஸ்டிகள் அவர்களுடைய அபிப்பிராயங்களை அப்போதைக்கப்போது அத்வைத ஸபை செக்ரடிரி அவர்களுக்கு தெரிவிக்கும்படி ஷை ஸபை செக்ரடிரி அவர்கள் தெரிவிக்கிறார்.

கார்யதர்சி.

### கிருஷ்ணராயபுரம்.

பாதுகா பட்டாபிஷேகம்.

மேற்படி கிராமத்தில் பாஷ்ய பாவக்ஞ ஸ்மிருதி பூஷண வாகூர் பிரம்மஸ்ரீ வெங்கிட்டரும சாஸ்திரிகளவர்களால் பிரவசனம் செய்யப்பட்டு வரும் ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் பாதுகா பட்டாபிஷேகம், என்கிற, கட்டமானது சென்ற ஆவணி மீ 31 உ வெள்ளிக்கிழமை தினம் அதி விமரிசையாய் பிரவசனம் செய்யப்பட்டு பிறகு கிராமஜனங்களால் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்களுக்கு ஸம்பாவனை முதலியதுகள் செய்யப்பட்டு பிரசாத வினியோகத்துடன் இனிது முடிவடைந்தது.

சுபம்.

S. ராமசுந்திரேச சாஸ்திரிகள்.

### திருவாங்கூரில் பள்ளிக்கூட பஹிஷ்காரம்?

திருவாங்கூரில் நடக்கும் சட்ட மறுப்பு இயக்கத்தில் அனேக மாணவர்கள் சேர்ந்து பள்ளிக்கூடங்களை பஹிஷ்கரித்து வருவதாகத் தெரிகிறது. அநேக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டனர். ஸமுத்திரக் கரையில் ஒரு சிறுவனின் பிரேதம் காணப்பட்டதைக் குறித்து அதிக பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதாம். அரஸ்ட்டுகளும், துப்பாக்கி பிரயோகமும் எங்கும் அதிகரித்து வருகிறதாகத் தெரிகிறது.

### தஞ்சாவூர் ஜில்லா, நாகப்பட்டணம் தாலூகா நாகப்பட்டணம் டவுன் மார்க்கெட்டில் 18—4—38 திங்கட்கிழமை அமுலிலிருந்த சில மொத்த விலைகளுக்குஜாப்தா.

| | |
|---|---|
| முதலாந்தரம் வெள்ளை சிறுமணியன் அரிசி 190 பவுண்டு அல்லது 1 மூட்டை | 9—8—0 |
| இரண்டாந்தர கட்டைச்சம்பா ஷை | 8—0—0 |
| நெல் முதல்தரவெள்ளை சிறு மணியன் 64 பவுண்டு | 2—0—0 |
| இரண்டாந்தர கட்டைச்சம்பா ஷை ரூ | 1—8—0 |
| தேங்காய் எண்ணெய் 38 பவுண்டு | 4—4—0 |

☞ தாசில்தார்.

### 28-9-38-ஹூ திங்கட்கிழமை கும்பகோணத்தில் அமுலிலிருந்த மொத்தவிலையின் விபரம்.

| | |
|---|---|
| நெல்லு முதல்தரம் வெள்ளைசிறுமணி125 பவுண்டு உள்ள மூட்டை | 4—0—0 |
| ஷை இரண்டாந் தரம் நெல்லூர்சம்பா 125 பவுண்டு உள்ள மூட்டை | 3—2—0 |
| அரிசிமுதல்தரம் வெள்ளைசிறுமணி 190பவுண்டு உள்ள மூட்டை | 9—0—0 |
| ஷை இரண்டாம்தரம் நெல்லூர்சம்பா 190 பவுண்டு உள்ள மூட்டை | 7—8—0 |
| தேங்காய் எண்ணை 36பவுண்டு நிறை | 4—5—0 |

☞ தாசில்தார்.


ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன்
அருளிச்செய்த
'பதினொரு சில்லரை ரஹஸ்யங்கள்'
முதல்பாகம்
ஸாரஸாரம் முதலியன.
விலை ரூ. 1—8—0.
இரண்டாம் பாகம்
விரோதபரிஹாரம் முதலியனவும்
பரமபதஸோபாநமும்.
விலை ரூ. 1—4—0.
இரண்டும் சேர்த்து
ஆர்யதர்மம் சாந்தாதார்களுக்கு ரூ. 2-4-0


### ஸ்ரீ ஜகத்குரு விஜயயாத்திரை முகாம்.

மர்காபூர்.
Markapur Road Railway Station,
(Karnool Dt.)

# நாகபட்டிணம் ஹிந்து மதாபிமான ஸங்கம்.

## 48 வது வருஷ பூர்த்தி உத்ஸவம்.

(N. ஸாம்பசிவ அய்யர் B.A. B.L.)

நாகபட்டிணம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் 47 வது வருஷ பூர்த்தி உத்ஸவமானது திருநெல்வேலி வக்கீல் பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்களுடைய அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி கோவிலில் சென்ற 16-9-38 சுக்ரவாரம் மாலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு வெகு விமரிசையாக நடைபெற்றது. வெள்ளிக்கிழமை மாலை அக்ராஸனர் அவர்களை ஸங்கத்தின் கார்யதரிசியின் கிரஹத்திலிருந்து மேளவாத்யம், வேதபாராயணம், பூர்ண கும்பம் இவைகளுடன் ஊர்வலமாக அழைத்துப்போகப்பட்டது. அங்கு முதலில் ஸங்கத்தின் தலைவர் பிரம்மஸ்ரீ பி. எஸ். சிவறுமய்யர் அவர்களால் அக்ராஸனர் அவர்களுக்கு ஒரு உபசாரபத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களால் ஸங்கத்தில் பூர்ண அபிமானத்துடன் ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் மூலம் அனுக்ரஹ பூர்வமாக அனுப்பப்பட்ட குங்குமாக்ஷதா பிரசாதங்கள் ஆசீர்வாதத்துடன் கொடுக்கப்பட்டன.

பிறகு அக்ராசனாவர்கள் வெகு அழகான முன்னுரையில் ஸங்கத்தின் வருஷோத்ஸவத்திற்கு அக்ராஸனம் வகிப்பதாக தான் ஒப்புக்கொண்டதற்குள்ள காரணங்களையும் உத்சவம் நடைபெறவேண்டிய வழிகளையும் விஜயம் செய்திருக்கும் பண்டிதர்களால் மூன்று தினங்களுக்குள் நடைபெறக்கூடிய உபன்யாஸங்களுடைய விசேஷத்தையும் குறித்து பேசினர். வக்கீல் ஸ்ரீஉப. எஸ். நாராயணய்யங்கார் ஸ்வாமிகள் அவர்கள் ஈஸ்வர ஸ்வரூபம் என்ற விஷயத்தைப்பற்றிப் பேசியதில் மானிட ஜன்மத்தை எடுத்த ஒவ்வொருவரும் நான்கு புருஷார்த்தங்களில் கடைசியான மோக்ஷத்தையே லக்ஷ்யமாகக்கொள்ள வேண்டுமென்றும் மோக்ஷமென்பது ஸம்ஸாரமாகிற பந்தத்திலிருந்து விடுதலை அடைவதென்றும் அது ஈச்வர ஸ்வரூப ஞானத்தால் மாத்திரம் பிராப்தமாகக்கூடுமென்றும் சித்தாந்தங்கள் ரீதியாக அந்த ஸ்வரூபமானது பலவிதமாக வர்ணிக்கப்பட்டிருந்தபோதிலும் பிரணவ ஸ்வரூபமாகவும் அகண்ட ஜோதி ஸ்வரூபமாகவும் கொள்வதே மிகவும்பொருத்தமானதென்றும் சொல்லி அந்த ஸ்வரூப ஞானத்திற்கு சாதனமான கர்மாதி சோபானங்களை அழகாக நிரூபணம் செய்தார்கள்.

மறுநாள் காலையில போலகம் பிரம்ம ஸ்ரீ சுந்தரேச சாஸ்திரிகளவர்கள் கர்மபக்தி ஸாமரஸ்யம் என்ற விஷயத்தைப்பற்றி வெகு அருமையான உபன்யாஸம் செய்தார்கள் முதலில் கர்மா, பக்தி என்ற பதங்களால் குறிக்கப்படும் யோகங்களை நிரூபணம்செய்து அந்த இரண்டு யோகங்களும் பரஸ்பர விரோதமுள்ளதாக சிலர் அபிப்பிராயப்படுவது சரியல்லவென்றும் கர்மா செய்யுங் காலத்தில் அவைகளுக்கு பலதாதாவாக இருக்கும் ஈச்வரனுடைய தியானம் அவசியமென்றும் மனச்சுத்திக்கு முக்ய காரணமான கர்மாவை விட்டால் ஈச்வர தியான பூர்வமான பக்தியானது லபிக்காதென்றும் அந்தஇரண்டு யோகங்களும் ஸமரஸமாக அனுபவிக்கப்படவேண்டுமென்றும் அவ்விதம் ஏற்படும் பக்ஷத்தில ஞானம் தானே சித்திக்குமென்றும் சாஸ்திர ரீதியான வழியில் வெகு விசேஷமாக உபன்யஸித்தார்கள்.

பிறகு திப்பிராஜபுரம் பிரம்மஸ்ரீ நாராயணஸ்வாமி சிரௌதிகள் அவர்கள் 'ஸத்யே ஸர்வம் பிரதிஷ்டிதம்' என்ற விஷயத்தைப்பற்றி பேசியதில் ஸத்ய சப்தத்தால் உண்மையைப் பேசுதல் என்று ஏற்படுகிறதென்றும் உலகத்தில் ஒவ்வொருவரும் இந்த ஒரு விஷயத்தில் ஜாக்ரதையாக இருந்து நடக்கும் பக்ஷத்தில் அதிலிருந்து சதுர்வித புருஷார்த்தங்களும் சித்திக்குமென்றும் சொல்லி ஹரிச்சந்திரன் முதலியவர்களுடைய சரித்திரங்களை உதாஹரித்து உபன்யாஸம் செய்தார்கள். அக்ராசனர் அவர்கள் இதற்கு பின்னுரையாகப்பேசியதில் இதரதத்வங்கள் அடங்கி இருப்பதாகக்கொள்வதுடன் ஸத்ய வஸ்துவாகிய ஆத்ம ஸ்வரூபத்தில் சகல ஜகத்தும் பிரதிஷ்டானத்தை அடைந்திருப்பதாகவும் அறிய வேண்டுமென்று சொன்னார்கள்.

அன்று மாலையில், சபைக்கு விஜயம் செய்திருந்த கும்பகோணம் ஸ்ரீ உ. ப. வே. அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசார்ய ஸ்வாமிகள் அவர்கள் பல தேசங்களுடைய மத சித்தாந்தங்களை ஆராய்ச்சி செய்து மிகவும் பிரபலமாக ஞானத்தை சம்பாதித்துக்கொண்டவர்களாய் "ஹிந்து மதமும் நவீனலோகமும்" என்ற விஷயமாக ஓர் அரிய உபன்யாசம் செய்தார்கள். ஆர்யர்களுடைய மதம் தான் ஹிந்துமத மென்றும் ஸிந்து நதிக்கரையில் குடியேறியவர்கள் ஹிந்துக்களென்றும் அழைக்கப்படுகிறார்களென்றும் அவர்களுடைய மதமும் அதேகாரணத்தால் ஹிந்து மதமென்று அழைக்கப்படுகிறதென்றும் ஹிந்து மதத்தில் விளங்கும் முக்யமான ஸ்மிருதியான மனுஸ்மிருதியானது க்ரீஸ் முதலிய மேல் நாட்டு தேசங்களில் மிகவும் உயர்ந்ததாக ஒப்புக்கொள்ளப்படுகிறதென்றும் மேல் நாட்டு மதங்கள் சம்பந்தமான வார்த்தைகள் நம்முடைய மதத்தில் காணப்படும் வார்த்தைகளே மாறுபட்டிருப்பதாக கொள்ள வேண்டுமென்றும் சீர்குலைந்திருக்கும்படியான நம்முடைய மதத்தை உத்தாரணம் செய்ய முயற்சி செய்ய வேண்டியது நம்முடைய கடமையென்றும் வெகுகம்பீரமாகவும் தன்னுடைய ஆராய்ச்சியின் ஸித்தாந்தங்களை உதாஹரித்துப் பேசினார்கள்.

பிறகு காளியாகுடி ராமாயண வித்வான் பிரம்மஸ்ரீ நடேச சாஸ்திரிகள் விசேஷ சாஸ்த்திர ஞானத்துடனும் ஆராய்ச்சியின் மிகுதியுடனும் சங்கீதத்தின் சௌஷ்டவத்துடனும் விச்வாமித்ரகமனம் என்ற கட்டத்தை வெகு விமரிசையாக உபன்யசித்தார்கள்.

பிறகு ஸ்ரீ மடம் ஆஸ்தான வித்வான் பிரம்மஸ்ரீபஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள் அவதாரங்களின் தத்வம் என்ற விஷயமாகப் பேசியதில் ஸ்ரீமத் பகவத்கீதையில் எந்த காலத்தில் தர்மத்திற்கு கிலானியும் அதர்மத்திற்கு உயர்வும் ஏற்படும் பக்ஷத்தில் அந்த காலத்தில் தன்னையே தான் சிருஷ்டித்துக் கொள்வேன் என்று சொன்னபடி லோக க்ஷேமார்த்தம் அப்போதைக்கப்போது ஈஸ்வரன் தன்னுடைய சொந்தமான ஸ்தானத்திலிருந்து பூலோகத்திற்கு இறங்கி வருவதே அவதாரம் என்று சொல்லப்படுகிறதென்று சொல்லி ராம கிருஷ்ண ந்ருஸிம்மாத்யவதாரங்களையும் ஸ்ரீ சங்கர பகவத் பாதாளுடைய அவதாரத்தையும் உதாஹரித்துப் அழகாகப்பேசினார்கள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் அக்ராசனாவர்கள் ஸுகஸ்வரூபம் என்ற விஷயத்தைப்பற்றிப் பேசியதில் சகலமான ஜீவாராசிகளுக்கும் ஸுகத்திலேயே பரம தாத்பர்யமென்றும் அதனுடைய ஸ்வரூபத்தை சாஸ்திர ரீதியாக ஆராய்ச்சிசெய்து தெரிந்து கொள்ளாததே அதை அடையமுடியாமலிருப்பதற்கு முக்ய காரணமென்றும் ஒவ்வொருவருக்கும் ஸுகமே ஸ்வபாவமான ஸ்வரூபமென்றும் அதற்கு விரோதமாக ஏற்படும் துக்கத்தின் நிவிருத்தியில் மாத்திரம் முயற்சி ஏற்படவேண்டியதே தவிர ஸுகத்தை அடைவதென்று தனியாக இல்லையென்றும் தேகத்தில் வியாதி ஏற்பட்டால் அதை நிவிருத்தி செய்வதற்கு மாத்திரம் பிரயத்தனம் செய்யவேண்டுமே தவிர ஸ்வாஸ்த்யத்தை அடையவேண்டியதென்ற பிரயத்தனம் கிடையாதென்றும் ஸுகமென்பது மனதில் வேறு எவ்வித சலனமுமில்லாமல் பரமமான சுத்தியையடைந்து ஈச்வர ஸ்ரூபத்தில் லயிப்பது சாச்வதமானதுமான ஸுகமென்றும், ஸுகமென்று நினைக்கப்படும் இதர வஸ்துக்கள் பிரமத்தால் மாத்திரம் ஸுகமாகக் கொள்ளப்படுகிறதே தவிற அது அடையப்பட்டவுடன் அதுவே ஸுகத்தைத் தராததால் அது ஸுகசாதனமேதவிற ஸுகமல்லவென்று அறியப்படுகிறதென்றும் தனக்கு பணம் கிடைத்தால் ஸுகமென்று நினைத்த ஒருவன் அது கிடைத்தவுடன் அதைக்கொண்டு நிலம் வாங்கவேண்டுமென்ற எண்ணம் வந்தவுடன் பணத்தில் ஸுகபுத்தியானது மாறி விடுகிறதென்றும் இவ்விதமே பார்த்தால் கடைசியாக பசியின் நிவிருத்தி ஏற்பட்டு ஸ்வாஸ்த்யம் கிட்டினால் அதுவே ஸுகமாகப் பரிணாமத்தை அடைவதைத் தவிர மைத்தவைகள் அடையப்பட்டவுடன் ஸுகசாதனமேயொழிய ஸுகமேயல்லவென்று தெரிகிறதென்றும் அந்த ஸுகம் லப்யமாகவேண்டுமானால் கர்மா அவச்யமென்றும் மனது சுத்தமாக இருந்தால் போதும் பாஹ்யசுத்தி அவச்யமில்லையென்று சொல்லுவதெல்லாம் அறியாமையென்றும் தொழில் சம்பந்தமாகவோ வேறு இதர காரியங்கள் செய்யும் போதும் அதற்குத் தகுந்தபடி சட்டை தலைப்பாகை முதலிய வேஷங்கள் போட்டுக் கொள்வதுபோல் கர்மானுஷ்டானத்திற்கும் ஸ்நாநம், சௌசம், புண்ட்ரதாரணம் முதலிய பாஹ்யமான வேஷங்கள் அத்யாவச்யமென்றும் அவைகள் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி அனுஷ்டானம் செய்யப்படவேண்டுமென்றும் பின்னவஸ்துக்கள் பின்னமாக காணப்படும்வரையில் துக்கமாகவே பரிணமத்தை அடைகின்றனவென்றும் எவ்விதம் கையில் சாதமூட்டையானது இருக்கும் வரையில் அது சிரமத்தைக் கொடுக்கிறதோ அதை சாப்பிட்டபிறகு வயிற்றில் பின்னமாக இருக்கும்வரையிலும் சிரமத்தை உண்டுபண்ணுகிறதோபின் ஜீர்ணமாகி இரத்தத்துடன் கலந்து ஏகீபாவத்தை அடைந்தால் துக்கலேசமில்லாமல்ஸுகமாக விளங்குகிறதோ அவ்விதம் பரமாத்மாவின் அம்சமான ஜீவாத்மா பின்னமாகத்தோற்றும்வரையில் ஸுகஸ்வரூபமானது நிச்சலமாகவும் விளங்குகிறதில்லையென்றும் ஸம்ஸ்காரங்களினாலும் நிஷ்காம்யகர்மானுஷ்டானங்களினாலும் சித்தமானது சுத்தியையடைந்து நைர்மல்யம் ஏற்பட்டால் விஷய வாசனைகள் விலகி ஏகாக்ரம் ஏற்பட்டு பரமாத்மாவால் ஜீவாத்மா லயத்தையடையும்போது ஆனந்த ஸ்வரூபமானது தானே பிரகாசிக்குமென்றும் பின்னமாக இருக்கும் காலங்களில் அந்த ஸுகஸ்வரூபமானது ஒவ்வொரு கோசத்திலும் பிரதிபலிக்கும்போது ஒவ்வொரு நாமத்தை அடைகிறதென்றும்

(தொடர்ச்சி 7-பக்கம் பார்க்க.)



(6-ம் பக்கம் தொடர்ச்சி.)

அன்னமயகோசத்தில் ஆரோக்யமென்றும் பிராணமயகோசத்தில் பலமென்றும் மனோமயகோசத்தில் சாந்தியென்றும் விக்ஞானமய கோசத்தில் அறிவென்றும் ஆனந்தமய கோசத்தில் ஆனந்த மென்றும் சொல்லப்படுகிறதென்றும் சொல்லி, ஆகார நியமமும் அனுவச்யமான விஷயங்களில் செல்லாமல் மனதை அடக்கிவைத்துக் கொள்ளுதலும் அக்ஞான நிவிருத்திக்கு முக்யமான சாதனங்களென்றும் மனோசித்தி யில்லாதவரையில் எதையும் சாதிக்க முடியாதென்றும் அதற்கு முக்யமான சாதனமானது சாஸ்த்ரீயமான கர்மானுஷ்டனமாகையால் அதை எல்லோரும் கைப்பிடித்து பரமமான சிரேயஸ்ஸை அடைய வேண்டுமென்றும் சொல்லி முடித்தார்கள்.

பிறகு மாலையில் சிரோமணி திருவாதி காலேஜ் பண்டிதர் பிரம்மஸ்ரீ N. வைத்தினாத சாஸ்திரிகள் M. R. A. S. அவர்கள் "நமது நிலைமையும் நமது கடமையும்" என்பதைப் பற்றி அரியதோர் உபன்யாசம் செய்தார்கள். அவர்கள் ஒன்பது பாஷைகளில் தேர்ச்சியடைந்திருப்பதுடன் அநேக சித்தாந்தங்களை உழைத்து அறிந்து கொண்டிருப்பதால் நமது பிராசீனமான வழக்க பழக்கங்களையெல்லாம சிலாகித்தும் பால்யத்தில் விளையாட்டுகளாக குழந்தைகளால் கானம் செய்யப்பட்ட பாட்டுகள் முதல் எவ்வளவு பெரிய தத்வங்களை அடக்கி வைத்துக்கொள்ளப்பட்டவைகளாக விளங்கி வந்திருக்கிறதென்றும் இப்போது நவநாகரீகத்தில் அந்த பழக்கங்களெல்லாம் போய் பிறருடைய உபயோகமற்ற நாகரீகங்களில் ஈடுபட ஆரம்பித்துவிட்டோமென்றும் குழந்தைகள் விளையாடும் போது பாடும் கில்லாப்பிராண்டி பாட்டை உதாஹரணமாக எடுத்துக்கொண்டு அதிலுள்ள தத்வங்களை விளக்கி காட்டினார்கள்.

பிறகு சீர்காழி வக்கீல் ஸ்ரீ உப. வே. T. சுந்தராச்சார்ய ஸ்வாமிகள் அசௌகர்யத்தால் வர முடியாமல் போனபடியால் அவர்களுக்கென்று குறித்த ஸஹஸ்ரநாமம் என்ற விஷயத்தை அதிருஷ்டவசமாக சபைக்கு விஜயம் செய்திருந்த சேங்காலிபுரம் பிரஸங்க பானு வித்வத் பூஷணம் பிரம்மஸ்ரீ வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்கள் வெகு அழகாக உபன்யஸித்தார்கள். ஸகஸ்ரநாமம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தையும் அதில் அடங்கியிருக்கும் நாமாக்கள் எப்படி அபேதத்தையே குறிக்கின்றனவென்றும் அந்த ஸஹஸ்ரநாமத்தின் கௌரவமானது பகவத் பாதாளால் முதலில் பாஷ்யம் செய்யும்படியான பெருமையை யடைந்ததென்றும் ஸஹஸ்ரநாமத்திற்கு துல்யமான கௌரவத்தோடு கூடிய ராம நாம பஜனம் வெகு சிரேயஸ்கரமென்றும் அவர்களுடைய ஸ்வபாவமான வாக்விலாசத்துடன் சொன்னார்கள்.

பிறகு திருக்கருகாவூர் பிரம்மஸ்ரீ T. L. சுப்பய்யர் அவர்கள் வெகு உத்சாகத்துடனும், வெகுதாறுமாறாக சீர்குலைந்து கிடக்கும் நமது ஆசார அனுஷ்டானங்களைப்பற்றி பரிதபித்துப் பேசியவர்களாய் நமது ஆசார அனுஷ்டானங்கள் ஒவ்வொன்றிலும் பெரிய தத்வங்கள் அடங்கியிருக்கிறதென்றும் அவைகள் சரிவர அனுஷ்டிக்கப்படும் பக்ஷத்தில் பரம ஆரோக்யகரம் என்பதை அறியாமல் அவைகள் தியாகம் செய்யப்பட்டு வருவதாகவும் நவீன ஆராய்ச்சிகள் ஒவ்வொன்றாக அந்த தத்வங்களை விளக்கிக் காட்டுவதாயும் சொல்ல நமது மதத்திற்கு அடிப்படையாக விளங்கும் வர்ணாச்ரமதர்மங்களை தெரிந்து அனுஷ்டிக்கும்படி வற்புறுத்திப்பேசினார்கள்.

பிறகு போலகம் பிரம்மஸ்ரீ சுந்தரேசசாஸ்திரிகளவர்கள் ஆஹார நியமம் என்ற விஷயத்தைப்பற்றி பேசுவதில் அபக்ஷ்யமான ஆகாரங்களை சாப்பிடுவதால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களை எடுத்துக்காட்டி ஸத்வம் பூர்ணமாக அடைய வேண்டுமானால் ஆஹாரத்தில் நியமம் அவசியமென்றும் சொன்னார்கள்

நாகபட்டிணம் பிரம்மஸ்ரீ சேதுராம தீக்ஷிதாவர்கள் கர்ம யோகம் என்ற விஷயத்தை பற்றி அழகாக ஓர் உபன்யாஸம் செய்தார்கள். கர்மாவின் லக்ஷணங்களையும் நிஷ்காம்ய கர்மாவின் அவச்யத்தையும் சொல்லி ஸ்ரீராமச்சந்திரன் கர்மாவின் அவச்யத்தையும் தர்மத்தின் அநுஷ்டானத்தையும் பிரகாசப்படுத்தவே அவதரித்தாரென்று சொல்லி ஸ்ரீ மத் ராமாயணத்திலிருந்து பல வாக்யங்கள் மூலம் உதாஹரித்துக்காட்டினார்கள்.

ஒவ்வொரு உபன்யாஸத்திற்கும் பின்னுரையாக முக்யமான அம்சங்களை அழகிய உதாஹரணங்களால் நிரூபணம் செய்தும் சொல்லப்படாத அம்சங்களை பூர்த்தி செய்தும் அக்ராஸனாவர்கள் பேசியது எல்லோருக்கும் மிகுதியான வியப்பையும் சந்தோஷத்தையும் உண்டு பண்ணிற்று.

பிறகு ஸபையின் தலைவர் பிரம்மஸ்ரீ பி. வி. சிவராமய்யர் அவர்கள் அக்ராஸனர் அவர்களுக்கும் பண்டிதர்களுக்கும் வந்தனோபசாரங்கள் கூறினார்கள். அதன் பின்னர் சபையின் கார்யதரிசியால் ஸங்கத்தில் விசேஷ அநுக்ரஹத்தைக்காட்டி வரும் பீடாதிபதிகளுக்கு அசேஷ மகா ஜனங்களுடைய சாஷ்டாங்க நமஸ்காரம் சமர்பிக்கப்பட்டும் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டும் ஸபையானது இனிது முடிவடைந்தது.

தேக அசௌக்யத்தால் போலகம்பிரம்மஸ்ரீ ராம சாஸ்திரிகள் அவர்கள் எதிர்பார்த்த படி விஜயம் செய்ய முடியாமல் போனது எல்லோருக்கும் ஜாஸ்தியான மன வருத்தத்தை உண்டு பண்ணியது. அவர்களுக்காககுறிக்கப்பட்ட "தற்கால பரிஸ்திதியும் அதன் குணகுணங்களும்" என்ற விஷயத்தை கீழ்வளூர் பிரம்மஸ்ரீ வி. கே. வெங்கடராமய்யர் அவர் உபன்யசித்ததுடன் ஸபைபூர்த்தியானபிறகு மறுதினம் திங்கள் கிழமை யன்று வைராக்யம் என்ற விஷயத்தைப்பற்றி அரியதோர் உபன்யாஸம் செய்தார்கள். அவைகள் விவரம் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

சென்றவருஷத்தில் காலவியோகமான Professor சுந்தராமய்யர், மாங்குடி சிதம்பர பாகவதர், கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், என். ஸ்ரீநிவாஸாசார்யர் இவர்கள் ஸம்பந்தமாக அனுதாபத்தீர்மானங்கள் ஸபையின் இரண்டாவதுதினத்தில் நிறைவேற்றப்பட்டன.

மூகபஞ்சசதியின் இரண்டாம் பாகம்.
"கடாக்ஷ சதகம்"
Mr. G. V. கணேசய்யர், B. A., B. L., அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. மூலம் நாகரத்திலும், தமிழிலும், விசேஷக் குறிப்புகளுடன் கூடியது.
தபால் சிலவு வேறு] [விலை அணு 0—8—0

ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த
ஸ்ரீஸூக்தபாஷ்யம்.
ஸ்ரீலக்ஷ்மீஸஹஸ்ரநாமம், லக்ஷ்மீ அஷ்டோத்ரம், திருக்கோட்டியூர் ஸ்ரீ உ-வே ஸௌம்யநாராயணாசார்ய ஸ்வாமியின் முகவுரை, புதுக்கோட்டை A. ஸ்ரீநிவாஸராகவன் M. A. அவர்களின் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் கூடிய சதுச்லோகி, ஸ்ரீ குணரத்கோசம், ஸ்ரீஸ்துதி முதலியன அடங்கியது
விலை. ரூ. 1 8 0
மேற்கண்ட புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந அச்சுக்கூடம் லிமிடெட்,
டவுன்ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோ. சர்மா.

எல்லோருக்கும் அச்சமே! பாம்பைக் கண்டு மனிதர், மனிதரைக்கண்டு பாம்பு பயப்படுவதுபோல் ஹிட்லரைக்கண்டு உலகம், உலகைக்கண்டு ஹிட்லர் அஞ்சுவதாக தெரிகிறது. இன்னும் ஓர்வாரம் அவகாசம் கொடுத்தது யுத்தம் தயார்செய்யவா உண்மையாக ஸமாதாநத்திற்கா என்பது புரியவில்லை. உலக யுத்தம் ஏற்படின் விஷப்புகை பாம்பு பீரங்கி ஆகாசவிமாநம் முதலியவைகளால் குடிகள் மிக மிக கஷ்டப்படுவர்!

உண்மை உணராது வருந்துகிறார்! காந்திஜி காங்க்ரஸில் அஹிம்ஸை புகுத்தற்கு மிக மிக வருந்தி புதிய முறை ஒன்று ஆரம்பிக்கிறார். ஆரம்பத்தில் இவர் வாக்கு வேதவாக்காயிருந்தது! தர்மத்ரோஹத்தாலும் அஸ்திரபுத்தியாலும் இப்போது இவர் எதை ஆரம்பித்தாலும் முன்போல் நிர்விவாதமாய் ஸகல ஜனங்களும் ஒருமிக்க ஏற்கமாட்டார்கள். மத ஸமாதாந ஸபை துவக்கிறார் ஓங்கவில்லை! தன் தவறுதலை உணர்ந்து பரிஹாரம் தேடினால் கூட சில ஸமயந்தான் செல்வாக்குள்ள காலம் என அவர் அறிய வேண்டும்.

வேஷத்தோடுதான்! கதர் ஸ்வதேசி! பேச்சு! வேஷம்! அந்ய நாகரிகத்திற்கு முழு அடிமை! பாம்பே காங்க்ரஸ் ஸபை அஹிம்ஸை ஸத்யம் என்று எழுதிய பொத்தான்களைத் தயார் செய்கிறது! மேலே அணிந்தால் போதுமா? உள்ளே அது நுழைய வேண்டாமா?

உண்மை அறியாமல் பேசுகிறார்! டாக்டர் ராஜன் காஞ்சி ஸ்ரீரங்கம் போன்ற ஆலயங்களைப் பஞ்சமருக்கு விடுவது சுலபம், இருளன் காட்டேரி பிடாரி கோவில்களை விடுவது கஷ்டம் என்கிறார். ஆங்கிலம் பூரா தவரிடத்தில் மதப்பிடிவாதம் அதிகமென்பது உண்மை! ஆனால் இவ்வாலயங்களை எவரும் கவனிக்கமாட்டார் என்பது தவறு! பல அநர்த்தங்கள் தோன்றுமென உறுதியாகக் கூறுகிறோம்!

ஹாஸ்யத்தின் தீமை! கலியின் சிறப்பில் கேவல ஹாஸ்யத்திற்கோர் முக்ய ஸ்தாநம் கொடுப்பதொன்று! ஸத்விஷய ச்ரவணம் செய்ய சென்றால் அங்கு ஹாஸ்யம். பத்ரிகையை பிரித்தால் ஹாஸ்யம்! ஹாஸ்யத்திற்கென்றே பல பத்திரிகைகள். ஹாஸ்யமெழுதிய ஒரு ஆசிரியர் லாகூரில் நன்கு புடைக்கப்பட்டார். எதிலும் அதி கூடாது!

அதிக அநர்த்தமே! லண்டனிலிருந்து காராச்சிக்கே ஒரே நாளில் வர ஆகாய விமானம் தயாராகிறதாம்! மதம் செல்வம் நாகரிகம் நாடு முதலியவைகள் இதனால் பாதகமடையுமேதவிர ஸாதகமில்லை!

தெரிந்ததுதானே! மத்யமாகாண சட்ட ஸபை தீண்டாமை விலக்கு மசோதா கொண்டுவந்திருக்கிறது. ஆலயப்ரவேச மசோதாவையும் விரைவில் வரவேற்கிறோமென அரசாங்க சார்பில் கூறப்பட்டது! தேசீய ஸபையின் போக்கு தெரிந்தவர் ஆச்சரியப்படார்.

என்னசெய்யப் போகிறது! டில்ஹியில் அ. இ. கா. கமிட்டி நடக்கிறது. தலைவர் ஜுரத்தால் வரவில்லை! திருவாங்கூர் போன்ற இடத்தில் அநியாயமாக காங்க்ரஸ் பெயரால் நடக்கும் அநீதியை கண்டிக்குமா? ஆலய மசோதாவை நிறுத்துமா?

தேவீபாகவத நவாஹம்! கீழமாம்பலம் விநாயகர் மண்டபத்தில் ஸ்ரீ வத்ஸ வே. ஸோமதேவசர்மா அவர்களால் டி உபன்யாஸம் நடக்கிறது. பக்தர்கள் சிரத்தையுடன் ச்ரவணம் செய்கின்றனர்.

## Unshrinkable Duty, Not "Mistaken Advice"

[Contributed]

The "Madras Mail" publishes an editorial note entitled "Mistaken Advice," in its issue of the 17th instant. It refers to a message sent out to his disciples by H. H. Sri Sankaracharya Swami of the Kamakoti Peetam, pointing out the Shastric injunction that girls should be married before puberty. This is the least that he should have done, consistent with his position as the Head of a large religious organisation. And the Madras Mail refers to him as "the conservative head of a well important South Indian Mutt." But it does not recognise that if he had *not* been 'conservative,' that is, pledged to conserve the genius and tradition of his office, he would not deserve to occupy it. One might as well refer to a Viceroy as a loyal, non-seditionist Viceroy. Again, while admitting that Hindu religious leaders are the best authorities on the interpretation of Hinduism, the paper is pleased to say, that the message in question involves the defiance, open or secret, of the law with serious consequence to those concerned. Of course, it does involve breaking of the law as it now stands. But such a breaking of the law would not be a defiant act, at least not so defiant as the Government made itself guilty of, when it defied religion and enacted a law penalising those who wish to conform to it. "Would all this be thought of in respect of any religion other than Hinduism? "is the question that arise in one's mind. As for the consequences to those that are concerned, persons who believe in their religion would consider the punishment that defiance of religion would visit them with much greater than the breaking of a law made in defiance of it, and would not therefore, mind the latter.

In the headline for this message of Sri Sankaracharya, the "Madras Mail" has made use of the now common expression "child marriage." This expression, does not occur, in the body of the message. However, it is the applying of the term "child" to a girl even up to 14, that has given the appearance of righteousness to the new law and the reverse to the custom that that law has penalised. It naturaly looks horried to thing of a "child" being indissolubly married. In fact, if Hindu religious practices, such as the marriage sacrament, the temple institution, etc., had taken place in respect of any organised religion, like Christianity, or Islam, for instance, then religious heads would not be content with serding weak messages, like the one discussion, but would feel compelled to lead a regular campaign of indignant revolt and compel attention to their legitimate demands.

## குருவாயூரில் ஆரம்பம்!
## ஆலயப்பிரவேசக் கண்டனம்.

ஜாதி ஹிந்துக்கள் கூட்டம்.

சிலதினம்முன் குருவாயூரில் பிரபல ஜாதி ஹிந்துக்களின் ஆதரவில் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான் இளையராஜா தலைமை வகித்தார். மலையாள ஆலயப்பிரவேச மசோதாவைக் கண்டித்துப் பலர் உக்ரமாகப் பேசினர். கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பலத்த பிரசாரம் செய்ய பலபிரமுகர்களடங்கிய கமிட்டியொன்றும ஏற்படுத்தப்பட்டது.

## மாயவரம்.

ஸ்ரீமத் ராமாயண ஸீரியஸ்.

மாயவரம் மகாதானத்தெருவு அம்பாபாய் சத்திரத்தில் பிக்ஷாண்டார்கோவில் ஸ்ரீமத் ராமாயண கதாமிருத வருஷக பிரசங்க ரத்னம். வேதமூர்த்தி, பிரும்மஸ்ரீ, பாகவத கௌஸ்துபம் கோபாலபாகவதர் அவர்களால் (21-9-38) புதன்கிழமை இரவு 8-மணிக்கு ராமாயண ஸீரியஸ் கதை ஆரம்பம் செய்யப்பட்டது. நகரில் பலபாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

பிரும்மஸ்ரீ பாகவதர் அவர்களின் வித்வத் பிரபாவத்தையும் அழகிய பிரவசனத்தையும் ஷெடியாரின் குமாரர்கள் G. பாலசுப்பிரமண்யம் பிரதர்ஸ் அவர்களுடைய இனிமையான ஸங்கீத கானத்தையும் கேட்டு புகழாதவர்களில்லை. ஆரம்ப நாளிலேயே இவ்விதம் இருந்ததால் ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்யும் சௌகர்யத்தை முன்னிட்டே வாசலில் பெரிய கொட்டகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சகல ஜாதிமத ஆஸ்திக ஸ்திரீ புருஷர்கள் கணக்கில்லாமல் வருவதால் பிரும்மஸ்ரீ பாகவதரிடத்தில் பொதுஜனங்களுக்கு இருக்கும் மதிப்பையும் பிரீதியையும் இது அளவிடக்கூடியதாக இருக்கிறது. மேலும் இம்மாதிரி கதா பிரவசனமூலம் ஜனங்களின் ஆஸ்திகம் என்னும் குறையவில்லையென்பதும் நிதர்சனமாவதுடன் பொதுஜனங்களின் மதசிரத்தையை விருத்திசெய்யவும் சௌகர்யமிருக்கிறது. இந்த விஷயத்தில் பிரும்ம ஸ்ரீ பாகவதரிடம் ஆஸ்திகசமூகம் நன்றி காட்ட கடமை பட்டிருகிறது. இம்மாதிரி வேதாந்திய யனத்தோடும் ஸாத்விகமாகவும் கர்நாடக பந்தாவாகவும் கதை செய்வதை இதுவரை யாவரும் இம்மாதிரி கேட்டதில்லை என நகர் முழுவதும் இதே பேச்சாக இருக்கிறது.

இந்த கால க்ஷேப சம்மந்தமாக சிரத்தை எடுத்துக்கொண்டு ஆரம்பம் செய்திருக்கும் ஸ்ரீமான். நீலகண்ட அய்யர் அவர்களால் பொது ஜனங்களெல்லோரும் சிரவாணநந்த மடையும்படி செய்தது மெச்சத்தகுந்தது. என பலரும் அன்வரை புகழ்கிறார்கள். மாயவரம் மகா ஜனங்கள் மிகவும் நன்றாக ராமாயணத்தை நடத்திவைப்பார்கள் என்பதற்கு சந்தேகமே இல்லை.

ஸ்ரீமான் பாகவதர் அவர்கள் கடைத்தெருவு காசிவிஸ்வநாத ஸ்வாமிகோவில் சுபத்ரா கல்யாண காலக்ஷேபமும் வெள்ளலார் கோவில் தக்ஷிணாமூர்த்தி சன்னதியில் ராமதாஸ் சரித்திரமும் கதை செய்ததால் ஜனங்களுக்கு விசேஷ அபிமானத்திற்கு காரணமாக இருக்கிறது. இனி ஒருதினம் விட்டு மறுதினம் கதைகள் நடைபெறும்.

ஒரு நிருபர்.

## ஓர் வேண்டுகோள்.

நமது நகர் கும்பகோணம் வாணாதுறை சன்னதியிலிருக்கும் அஷ்டாதச க்ஷேத்திரங்களில் ஒன்றான "ஸ்ரீ பாண்புரீச்வரர் கோவில்" தினே தினே ஜீர்ணமாய் வருகிறது.

தென்புறம் மதில் சுவர் விழுந்துவிட்டது.

மேல்புறமும், வடபுறமும், மதில் சுவருக்கு அப்பாலுள்ள காம்பவுண்டு சுவர் இடிந்து, கீழே கிடக்கும் கல்லுகள் பற்பலரால் எடுத்துப் போகப்படுகின்றன.

விநாயகர், சுப்பிரமண்யர், வள்ளியம்மை, தெய்வானை, வாகனங்கள் வைத்திருக்கும் மஹாமண்டபம், எப்பொழுது விழுமென்று தெரியாத அபாய நிலைமையில் இருக்கிறது. தவறிப்போய் விழுந்து மூர்த்திகளுக்கு பின்னம் ஏற்பட்டால், ஊருக்குக் கெடுதல் ஏற்படும்.

மகாலிங்கம், அம்மன் இவர்கள் கோபுரத்தின்மேல் ஆலும் அரசும் வேரூன்றி வளர்ந்து, 2 தினங்கள் முன் கன்றுகள்மாத்திரம் வெட்டப்பட்டு இருக்கின்றன. வேரைத்தோண்டி எடுக்காவிட்டால், மறுபடியும் முளைத்து, மண்டபத்தையே இடித்துவிடும்.

மேற்படி கோவிலுக்கு, வலங்கிமானுக்குச் சமீபம் தொழூரிலும், கொட்டையூரிலும், கும்பகோணம் ரயிலடிக்குச் சமீபத்திலும், ப்ரதோஷ கட்டளைக்காக விடலூரிலும், சுமார் 300 கலம் வரக்கூடிய நஞ்சை நிலங்களும் பிரம்மவித்ய லாட்ஜ் பகுதி, சர்க்கார் மோகினி. வாணாதுறை பத்துகட்டுத் தெரு, கீழவீதி முதலிய இடங்களில் உள்ள வீட்டு வாடகை, பகுதி வகையறாக்கள் சுமார் வருஷம் 1-க்கு ரூ முன்னூறும், கடமுக மண்டகப்படிக்காக வருஷம் ரூ இருபத்தைந்தும் கும்பகோணம் சப்கோர்ட்டில் கோவில் பெயரால் சுமார் ரூ 3000 (மூவாயிரம்) இருப்பதாய் பிரஸ்தாபம், சென்னை எண்டோமெண்டு போர்டார், கும்பகோணம் சர்க்கிள் டெம்பிள் கமிட்டியார், நாட்டுக்கோட்டை நகரத்தார், கும்பகோணம் நகரவாசிகள், மேற்படி கோவில் டிரஸ்டிகள், எல்லோரும் உடனே கவனித்தல் நலம். புதிதாய் ஒரு கோவிலை கட்டுவது கஷ்டம். ஐவேஜியுள்ள புராதனமான கோவிலைக் காப்பாற்றுவது அவ்வளவு கஷ்டமல்ல.

பூஜை, நைவேத்யம் நான்கு காலமாவது நடக்கவேண்டும்.

நிவேதனம் கோவில் மடப்பளியில் செய்யவேண்டும். குருக்கள் வீட்டிலோ, மற்ற இடங்களிலோ செய்வது சரியல்ல.

C. S. தீக்ஷிதர்.

## திண்டுக்கல்லில்
## ஸ்ரீ ஹரிச்சந்திர பட்டாபிஷேகம்.

சென்ற 19 நாட்களாக இந்நகரில் ஸ்ரீ அபிராமியம்மன் கோவிலிலுள்ள கல்யாண மண்டபத்தில் காப்பணமங்கலம் ப்ரம்ஹஸ்ரீ சரவணபவ சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீ ஸ்காந்தமகாபுராணாந்தர்கதமான "ஸ்ரீஹரிச்சந்திரோபாக்யான"த்தை வெகு அழகாகவும் கான ரஸத்தோடும், தற்காலத்திய அதர்மபூயிஷ்டமான நாகரீகத்தைத்தாக்கியும், தர்மத்திலும்ஸத்யத்திலும் அபிருசியுண்டுபண்ணக்கூடியதாயும் உபன்யஸித்து வந்து, சென்ற (22-9-38) வியாழக்கிழமையன்று "ஸ்ரீ ஹரிச்சந்திர பட்டாபிஷேக மஹோத்ஸவம்" அதி விமர்சையாய் நிறைவேறியது. எல்லா வர்ணிகளும் ஸ்திரி புருஷர்கள் யாவரும் நூற்றுக்கணக்காய் விஜயம் செய்தது மிகவும் போற்றத்தக்கது. ப்ரம்ஹஸ்ரீ சாஸ்திரிகளவர்களுக்கு அன்றபதினம் ஸன்மானங்களும் செய்யப்பட்டன. மாஜி ஸம்ஸ்கிருத பண்டிதரான ப்ரம்மஸ்ரீ K. S. ஸுப்ரம்மண்ய சாஸ்திரிகளவர்களால் ச்லோக ரூபமானதோர் அனுமோதன பத்திரிகை வழங்கப்பட்டது. ப்ரம்ஹஸ்ரீ K. தியாகராஜ தீக்ஷிதரவர்சள், B A, L T, வந்தனோபசாரங்கள் கூறினார்கள். இவ்விதமாய் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் புராண ச்ரவண ரூபமான தர்மப்ரசாரங்களால் தான் ஜனங்களிடையே ஆஸ்திக்யத்தையும், ஈச்வர பக்தியையும், சாஸ்திரங்களில் நம்பிக்கையையும், தர்மத்தில் ருசியையும், அதர்மத்தில் பயத்தையும் அபிவிருத்தி செய்யககூடுமென்பதில் ஐயமில்லை. இந்நகர் வாஸிகளுக்கு மேன்மேலும் இன்னும் வேறுபுராண ச்ரவணங்கள் செய்ய வேண்டு மென்ற புத்தியும் அதிகமாய் ஏற்பட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கது.

ஆர். பாலசுப்ரமண்யன், கார்யதரிசி.



## ஹிந்துமதமும் காங்கிரஸும்.

(R. நடராஜன்.)

ராஜீயத்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஈடுபடவேண்டிய காங்கிரஸ் முதலான ராஜீய கக்ஷிகள் தனிப்பட்ட நபர்கள் அல்லது ஒரு மதத்தினரின் நம்பிக்கையை பொருத்த பாரமார்த்திக ஒழுக்கங்களில் தலையிடுவது தவறு. மத சுதந்திரம் காங்கிரஸ் விதிகளில் காணப்பட்டாலும் அனுபவத்தில் காங்கிரஸ் அங்கத்தினரல்லாதவர்களின் மதசுதந்திரமானது காங்கிரஸின் அதிகார யதேச்சாதிகாரத்தால் பறிக்கப்படுகிறது. மதசுதந்திரம் என்றால் மதநம்பிக்கையை பொறுத்த அனுஷ்டான ஆசாரங்களை செய்துவருவதில், மதகட்டளைகளில் நம்பிக்கையில்லாதவர்களின் ஆக்ரமிப்புக்கு இடம் கொடுக்காமல் பாதுகாப்பது என்று பொருள்கொள்ளப்படவேண்டுமேயல்லாது, மதகட்டளைகளில் நம்பிக்கையில்லாதவர்களின் மனோபாவங்களை அனுஸரித்து அவர்களது அபிப்ராயங்களையும் கொள்கைகளையும் மற்றவர்களின்பேரில் நிர்ப்பந்திக்க சுதந்திரம் அளித்தல் என்பது தவறான அஸ்திவாரத்தின்மேல் நிறுவப்பட்டதாகும்.

புத்தகயா மடம் நிர்வாக விஷயமாய் சில வருஷங்களுக்குமுன் இந்தியா சட்ட சபையில் விவாதம் ஏற்பட்டபொழுது, காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஹிந்துமத விரோதமாக, ஹிந்துக்களின் உரிமைகளுக்கு பாதகமாக பிரவிர்த்தத்தினர். சாரதாசட்டம் முதலான முற்றிலும் மதவிரோதமான சட்டங்களுக்கு காங்கிரஸ் சபை கட்டுப்பாடாக ஆதரவு அளித்துவந்திருக்கிறது. சாரதாசட்டம் முதலியன ஹிந்துமத விரோதமானவைகளென்று 1928-ல் காசியில் நடைபெற்ற மகாநாட்டிலேயே தெளிவாக எடுத்து காட்டப்பட்டிருக்கிறது.

வகுப்பு வாதத்தை கண்டிக்கும் காங்கிரஸ் சபை புனா ஒப்பந்தமாகிய வகுப்புவாத அநீதத்தை தாங்கி நின்றிருக்கிறது. இதை அக்காலத்திலேயே ஸ்ரீ ரவீந்தர நாத் டாகூரும், ஸ்ரீ மதன்மோகன் மாளவியாயும், மற்றும் பல தேசியகக்ஷி தலைவர்களும் கண்டித்திருக்கிறார்கள். தவிர முஸ்லீம் லீக்கின் வகுப்புவாதக்கோரிக்கைகளை பாராமர்சிக்க ஒப்புக்கொண்ட காங்கிரஸ் சபை, அதே சமயத்தில் ஹிந்துக்களுக்கு விரோதமாக காங்கிரஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டித்த ஹிந்து மகா சபையின் அபிப்ராயங்களை, ஹிந்துமகாசபைத் தலைவர்களுடன் சர்ச்சை செய்வதற்கு முன்வரவில்லை.

சில மதக் கல்வியற்றவர்களின் முயற்சியால் சென்னையில் 1937 டிஸம்பரில் கூட்டப்படுவதாக இருந்த ஹிந்துமத சீர்திருத்த பரிஷத் பிரசாரங்களை திரைமறைவில் காங்கிரஸ் தலைவர்கள் ஆதரித்து வந்திருக்கிறார்கள். ஆனால் கண்யமான அபிப்ராய பேதங்களை சுதந்தரமாக வெளியிடுவதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வரக்கூடிய பிரதிநிதிகளுக்கு அந்த பரிஷத்தில் தடையற்ற பிரவேசம் உண்டா என்று அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கதலைவர் வினவியதில் அத்தகைய சுயேச்சை இல்லையென்று ஏற்படவே, அதே சமயத்தில் வேறு பிரதிநிதித்வம் வாய்ந்த ஹிந்து மதபரிஷத் கூட்டப்பட்டு, முன்னவர்களின் சீர்திருத்த கூற்றுகள் ஹிந்து மதத்திற்கு முரண்பட்டவை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த பரிஷத் நடைபெறுவதை அறிந்தவுடனேயே காங்கிரஸ் நோக்கத்தை தழுவிய சீர்திருத்த பரிஷத் கைவிடப்பட்டுவிட்டது. இந்த நிலைமையில் ஹிந்து மகாஜனங்களின் போாதரவு இருப்பதாக எடுத்து காட்டப்பட்டு சென்னை சட்ட சபையில் கொண்டுவரப்படுகிற ஆலய பிரவேச சட்டங்கள் எவ்வளவு தூரம் பொதுஜன அ[illegible]யருககனறன என்பதை ஹிந்து மகா ஜனங்கள் ஆராயவேண்டும்.

மேலே கைவிடப்பட்ட சீர்திருத்த பரிஷத்தை கூட்டி அதன் தீர்மானங்களை காங்கிரஸின் கொள்கைக்கு ஆதாரவாக காட்ட விரும்பிய காங்கிரஸ் மந்திரி சபை, அந்த பரிஷத்தே நடைபெறாமல்போனதன் மூலம் தங்கள் கொள்கைக்கு ஏற்பட்ட பெரிய தோல்வியையும், ஹிந்துக்களின் எதிர்ப்பையும் ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தவிர 1937 டிஸம்பர் ஹிந்துமத பரிஷத்திற்கு பிற்பாடு எங்கெங்த ஊர்களிலிருந்தும் கிராமங்களிலிருந்தும் விவாக சட்டம் ஆலய பிரவேச சட்டம் இவைகளை ஆக்ஷேபித்த, இந்தியா சட்ட சபை தலைவர், காங்கிரஸ் தலைவர், மாகாண சட்ட சபைத்தலைவர், சென்னை பிரதம மந்திரி இவர்களுக்கு எவ்வளவு ஆக்ஷேபணைகள் கிடைத்திருக்கின்றன என்பதை காங்கிரஸ் தலைவராவது, சென்னை சட்ட ஸபையில் நடந்த ஆலயப்பிரவேச மசோதா விவாதத்தின்போது சென்னை பிரதம மந்திரியாவது பிரஸ்தாபிக்கவில்லை. இதன் மூலம் பொதுஜன அபிப்பிராயம் எவ்வளவு ஒடுக்கப்படுகிறது, பொதுஜன உணர்ச்சி மறைக்கப்படுகிறது என்பதை ஹிந்துமகா ஜனங்கள் ஆராயக்கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இதுமாத்திரமின்றி தினசரி பத்திரிகைகள் பல வழிகளிலும் தங்கள் கொள்கைக்கு மாறுபடும் செய்திகளை எவ்வளவு தூரம் தவறான தலைப்புகளுடனும், முழுவிவரங்களில்லாமலும் பாப்பிக்கின்றன. அல்லது செய்திகளையே பிரசுரிக்காமலிருக்கின்றன என்பதை நாம் வெகு உதாஹரணங்களுடன் நிரூபிக்கக் கூடும். இத்தகைய தினசரிப்பத்திரிகைகளின் உண்மையை மறைக்கும் பிரசாரங்களால் அறியப்படுகிற செய்திகள் எவ்வளவு தூரம் மத விஷயங்களில் ஹிந்துக்களின் யதார்த்த அபிப்ராயங்களை ப்ரதிபலிக்கின்றன என்பதையும் கவனிக்கவேண்டும்.

மத சுதந்திர வாதியைக்கொண்டிருக்கும் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அகில இந்தியக் கமிட்டி அல்லது மாகாண கமிட்டி, புனா மாருதி கோவில் சத்யாக்ரஹத்தில் ஹிந்துக்களின் உரிமைகளை பாதுகாக்க எந்த விதமான நடவடிக்கை எடுத்துக்கொண்டது? காங்கிரஸ் தலைவர்கள் ஹிந்துக்களின் சுதந்திரத்தை ரக்ஷிப்பதில் எந்த அறிக்கைகளை வெளியிட்டு ஹிந்துக்களின் பிரதிநிதிகளென்பதற்கு அத்தாக்ஷியாக நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

திருவாங்கூர் ராஜ்யத்தில் ஜவாப்தாரி ஆட்சிக்காக நடைபெறும் கிளர்ச்சிகளை சர்க்காரின் நடவடிக்கைகள் பாதித்து, காங்கிரஸ் திருஷ்டியில் அது யதேச்சாதிகாரமாயிருக்குமானால், அதே ரீதியில் ஹிந்து மதத்தில் நம்பிக்கையுள்ள ஹிந்து மகா ஜனங்களின் சம்மதம் பெறாமல் யதேச்சாதிகாரத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட திருவாங்கூர் ஆலயப்பிரவேச விளம்பரம் ஜனநாயக தத்வத்திற்கு முரண்பட்டதென்பதை காங்கிரஸ் தலைவர்கள் எடுத்துக்காட்ட வேண்டியது அவசியமாகும். காங்கிரஸ் திருஷ்டியிலோ அல்லது மன்னரின் திருஷ்டியிலோ விளம்பரம் நன்மையாக கருதப்பட்ட போதிலும், ஹிந்து மகா ஜனங்களின் திருஷ்டியில் அது எவ்விதம் கருதப்படுகிறது என்பதை அறிந்து ஜனசம்மதத்துடன் செய்யப்பட வேண்டுமென்ற கொள்கையை உத்தேசித்து, விளம்பரத்தை ரத்து செய்து, ஹிந்து ஜனங்களின் ஆலோசனைக்கு ஸமர்பித்து முடிவு செய்யுமாறும், இந்த ஜன நாயக தத்வத்[illegible] திருவாங்கூர் சர்க்கார் [illegible]ளுமாறும், காங்கிரஸ் தலைவர்கள் கிளர்ச்சி செய்ய [illegible] முன் வரவேண்டும்.

இதே ரீதியில், இப்போது இந்தியாவில் இருந்து வரும் சர்க்கார் கல்லூரிகளிலும், சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட கலாசாலைகளிலும், இருக்கும் ஹிந்து மதக்கல்வி புகட்டும் ஆசிரியர்களையும், சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட குறைந்த பக்ஷமான அல்லது உயர்ந்த பக்ஷமான அல்லது நடுத்தரமான நிர்தாரணம் செய்யப்பட்ட மத நூல்கள் சம்பந்தப்பட்ட கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களையும் மற்றும் மதக்கல்விக்காக சர்க்காரால் பகுமானிக்கப்பட்ட தனி நபர்களையும், இதே ரீதியில் சுதேச சமஸ்தான மன்னர்களால் மதப்பிரதிநிதியாக அனுப்பப் படுவோர்களையும், அத்துடன்சமஸ்தானங்களிலும் ப்ரிடிஷ் இந்தியாவிலும் ஹிந்து மகா ஜனங்களால் மதப்ரதிநிதிகளாக அனுப்பப்படுவோர்களையும் இப்போது இந்தியாவில் இருக்கும்சர்க்காரால் மத ஆசார்யர்களாக அங்கீகரிக்கப்பட்டவர்களையும் கொண்ட ஒரு ஹிந்து மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்து அதில் தீர்மானிக்கபடும் முறையில் மத சீர்திருத்தங்கள் செய்வது தான் எந்த சர்க்காருக்கும் அல்லது ஜனநாயகத் தத்வக் கொள்கைக்கும் பொருத்தமானதாகும்.

ஹிந்துமத பரிபாலனபோர்டு அதிகாரவர்க்கத்தினரால் செல்வ நிலை நிர்வாகத்திற்காக சட்டமூலமாக நிறுவப்பட்டிருந்த போதிலும், மத சம்பந்தமான காரியங்களில், அனுஷ்டானங்களில், எது மதக்கட்டளைகளுக்கு சம்மதமானது. எது முரண்பட்டது என்பதை நிர்த்தாரணம் செய்யக்கூடிய பிரதிநிதித்வபாத்யதை அந்த போர்டுக்கு இல்லாததால் ஆலய பிரவேசம் முதலான மதவிரோதமான அம்சங்களில் அந்த போர்டுகளுக்கு சர்க்காரால் கொடுக்கப்படும் அதிகாரம் ஹிந்து மத திருஷ்டியில் மத ஒழுக்கத்திற்கு விரோதமானது. இதை காங்கிரஸ் மந்திரிகளின் பார்வைக்கும் மகாஜனங்களின் ஆலோசனைக்கும் ஸமர்ப்பிக்கிறேன். ஹிந்துக்கள் ஹிந்து மத அனுஷ்டானங்களில் அதிகாரக் கக்ஷியினால் செய்யப்படும் ஆக்ரமிப்புகளையும் சுதந்திரப்பறிமுதலையும் கண்டித்து, தங்கள் ஓட்டுரிமையை காங்கிரஸல்லாதவர்களையும், மதசுதந்திரத்தைக் காப்பாற்றக் கூடியவர்களையும் உள்ள நபர்களுக்கு அளிப்பதுடன், பிறப்புரிமையாகிய மத சுயேச்சையை ஸ்தாபிப்பதற்காக, சட்ட சபைகளில் மதசம்பந்தமாக பிரதிநிதித்வம் அளிக்கப்படாதவர்களில் நிறைவேற்றப்படும் மத விரோதமான சட்டங்களை அலக்ஷ்யம் செய்து, ஸ்வதர்மத்தை மதக்கட்டளைகளின்படி அனுஷ்டிப்பதே சிறந்த கடமையாகும்.

ஸ்ரீ லலிதாத்ரிசதீ.
நாகரலிபியில் மூலமும்.
நாமாவளியும்
விலை 0—3—0
ஆர்யதர்மம் சந்தாதார்களுக்கு
விலை அணா 0—2—0.
கிடைக்குமிடம் :—
ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்
டவுன்ஹைஸ்கூல் ரோடு: கும்பகோணம்.

பிரும்மஸ்ரீ அருட்கவி சுப்ரமண்ய அய்யர், அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம். | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம். | 1 | 0 | 0 |

கிடைக்குமிடம்:— ஜனார்த்தன அச்சுக்கூடம், லிமிடெட், கும்பகோணம்.

215250

## வெளியூர் செய்திகள்.

மதுரை

### ராமேசவரம் தேவஸ்தானம் பாடசாலே.

நிகழும் பகுதான்ய-ஹு புரட்டாசி-மீ 7வ (23—9—38) இப் பாடசாலேயின் 23 வது வருஷாந்திரக் கொண்டாட்டமும், புது கட்டிடத் திறப்புவிழாவும் இதற்காக அமைக்கப்பட்ட அலங்காரப்பந்தலில் சென்னை ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் ப்ரம்மஸ்ரீ K. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைமையில் விமர்சையாய் நடந்தது. ஏராளமான பிரமுகர்களும் உத்யோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் மாணவர் ப்ரார்த்தனைக்குப் பின் பாடசாலே பிரின்ஸ்பால் பிரம்மஸ்ரீ V. சுப்ரமணிய அய்யர் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் தற்காலம் எங்கு பார்த்தாலும் கல்விச் சீர்திருத்தத்தை பற்றி விவாதித்து வருகிறார்களென்றும், ஆனால் எல்லாருடைய திட்டங்களும் வெளி உலகம், அதாவது ஐதீக போகங்களேயே முக்ய லக்ஷ்யமாய்க் கொண்டிருக்கிறதென்றும், நம் ப்ராசீன ரிஷிகளால் அமைக்கப்பட்டு சென்ற நூற்றாண்டு வரை அனுஷ்டிக்கப்பட்டு வந்துள்ள, ஆத்யாத்மிக சம்பந்தமுள்ளதும், பாரம்பரிகமானதுமான வித்யா முறைகளை எல்லோரும் மறந்து விட்டனரென்றும் இது தான் உயர்ந்த முறை என்றும் இதனால் தான் பாணினி, சாயணர் முதலிய மகான்கள் தோன்றினார்களென்றும், இப்பாடசாலே இத் துறையில் பாடுபட்டு வருகிறதென்றும் குறிப்பிட்டார்.

பிறகு கனம் கிருஷ்ணசாமி அய்யங்காரவர்கள் கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் இப்பாடசாலேக்கு தான் வந்தது பாக்யமென்றும் தற்காலம் இத்தகைய பாடசாலேகள் அலக்ஷ்யம் செய்யப்பட்டு வருகிறதென்றும் சாஸ்திரங்களில் கூறியிருக்கிறபடி தங்கள் தங்கள் கடமைகளை அனுஷ்டிப்பது தான் ச்ரேயஸ்கரமென்றும், அதற்கு ப்ராசீன கல்வி முறை தான் உயர்ந்த சாதனமென்றும், நம் சாஸ்திரங்களின் மஹிமை அபாரமானதென்றும், பாணினிவ்யாகரணத்தை விட ஆச்சரியமானது வேறொன்றில்லே என்றும் இவ்வித கலாசாலேகள் ஏராளமாய் ஏற்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பிறகு மதுரை அடிஷனல் சப் ஜட்ஜ் ப்ரம்மஸ்ரீ. P. M. சீனிவாச அய்யங்காரவர்கள் ஆர்யக்கல்வி என்னும் விஷயத்தைப்பற்றி கீதை முதலிய மேற்கோள்களுடன் தெளிவாய் உபந்யசித்தார்கள் பிறகு பிரின்ஸ்பால் அவர்களால் வருஷாந்திர ரிப்போர்ட்டு படிக்கப்பட்ட பிறகு, ராமநாதபுரம் சப் ஜட்ஜ் ஸ்ரீமான். P. குமாரசாமி பிள்ளே யினல் பரிசளிப்பு நடைபெற்றது. பிறகு இப்பாடசாலே மாணவர்களால் முத்ராராக்ஷஸம் என்னும் நாடகத்தின் ஐந்தாவது அங்கம் விமர்சையாக நடித்துக்காட்டப்பட்ட பின் ஸ்ரீமான் T C சீனிவாச அய்யங்காரவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு தாம்பூலம், பழம் முதலியவை வழங்கப்பட்டு கூட்டம் இனிதுகலேந்தது பிறகு ராத்திரி 9 மணிக்கு இப்பாடசாலே பழைய மாணவர் ஸ்ரீமான் T. A. வெங்கிட்டராமன் அவர்களால் ஓர் இனிய சங்கீதக் கச்சேரி நடத்தப்பட்டது.

N. ராமகிருஷ்ணன்

## தென்னிந்திய பூகம்ப அதிர்ச்சி.

### கோபரக்தின் மீதுள்ள குரங்குகள் ஓட்டம்.

சமீபத்தில் ஏற்பட்ட பூகம்ப அதிர்ச்சியில் திருநெல்வேலி மதுரை திருவாங்கூர் கொழும்பு முதலிய பலவிடங்களில் உள்ள எல்லா ஊர்களிலும் கட்டிடம் கதவுகள் சாமான்கள் யாவும் தட தடவென்று ஒரு நிமிஷம் ஆட்டம் கொடுத்து அசைய ஆரம்பித்துவிட்டன. பூமி அதிர்ச்சி இரவு 3. 50க்கே ஏற்பட்டதால் தூங்கியவர்கள் அலறி எழுந்துவிட்டார்களெனவும் சிலர் ஆட்டத்தில் மோதித்தள்ளப்பட்டார்களெனவும் சொல்லபடுகிறது. ஆழ்வார் திருநகரி ஊரெங்கும் பூமி அதிர்ச்சியிருந்ததுடன் தேவஸ்தான கோபுரத்தின் மீதுள்ள குரங்குகள் பூகம்ப அதிர்ச்சியால் கோபுரம் ஆடவே சப்தமிட்டு அலறிக்கொண்டு தாறுமாருய் ஓட்டம் பிடிக்க ஆரம்பித்து விட்டன. எங்குமே விசேஷ சேதங்களோ ஆபத்தோ நேரிடாதது குறிப்பிடத்தக்கதாம். இதே போன்று பூமி ஆட்டம் இதே நேரத்தில் இப்பங்களில் நாற்பது ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

## புத்தனேரியில் புரளிபண்ணிய மாது. சென்னையில் செய்த விசித்ர விநோதம்.

திருநெல்வேலி ஜில்லா புத்தனேரி கிராமத்திலுள்ள கிருஷ்ணம்மாள் என்ற மாது, சூதுவாதில்லாத பாமர ஜனங்களிடம், தன்னிருப்பிடத்திலிருந்தே பலவித பலகார பக்ஷணங்களும் வரவழைத்துத்தருவதாயும் திருப்பதிக்கோவில் பிரசாதங்களும் காலிரூமிலிருந்தே வரும்படி செய்வதாகவும் பலவித புரளிகளேப்பரவச் செய்து பாமர ஜனங்களை திரளாக கூடும்படி செய்தும் முடிவில் திருப்பதி ஸ்ரீ வெங்கடாசலபதியே புத்தனேரிக்கு விஜயமாகப்போவதாக பெரும் புரளியை உண்டுபண்ணி போலீஸாரும் ஜனங்களும் பெருமிதமாகக்கூடும்படி செய்துபிரமாதமாய் நடைபெற்ற விநோத சம்பவங்கள் பத்திரிகைகளில் தடபுடலாய் முன் வெளியாயிருக்கின்றன. அதன் மேல் இவ்வரிய சம்பவங்களுக்காரணபூதமான அப்பெண் ஊரில்காணப்படவில்லே யெனச் சொல்லப்பட்டது. தற்போது அம்மாது சென்னைமாநகரில் இருப்பதாயும் அவள் ஜாகையாயுள்ள வீட்டில் குடியிருக்கும் பத்மாவதி என்ற சிறிய பெண்பால் அணிந்துள்ள நகைகள் ஓர் நாளிரவில் காணப்படாமல் போய்விட்டதாயும் புத்தனேரி மாதே எடுத்திருப்பதாயறிந்து அதட்டி உருட்டியதன். மேல் பூஜைகள் செய்து காளிதேவி மூலம் காணுமல் போன நகைகளே கண்டுபிடித்துத் தருவதாக சொல்லி மற்றோர் தினம் இரவு காளி பூஜை செய்தாக காவிரூமல உட்கார்ந்து பூஜை பூஜைத்துக்கொண்டிருந்துவிட்டு களவு போனதில் ஓர் நகை மட்டும் காளி தந்ததாக கொடுத்ததாயும் போலீஸில் அறிவிப்பதாக ஏற்பாடானதன் மேல் அப்பெண்பாலின் புருஷனும் சகோதரனுமாகச்சேர்ந்து மற்ற சாமான்களின் கிரயமாக பணம் கொடுத்தும் மேல் கொண்டு புரோநோட் எழுதிக்கொடுத்தும் பறிகொடுத்தவர்களே சாந்தப்படுத்தியதாயும் சொல்லப்படுகிறது. களவு செய்த சாமானை பூஜை மூலம் வரவழைப்பதாய்ச்சொல்லிய விந்தையான விஷயம் பட்டணமெங்கும் பரவவே, காளி பூஜை நடந்த இரவு அவள் வாசமாயுள்ள வீடு முன் வைகுண்ட வாத்தியார் தெருவில் ஆயிரக்கணக்காய் ஜனங்கள் ஆச்சர்யத்துடன் கூடிவிட்டதாயும் இவ்விசித்திர சம்பவங்கள் நகரெங்கும் அதியற்புதமான நிலேயில் மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணிவிட்டதாயும் பெரும் பிரஸ்தாபமாயிருக்கிறது

யதார்த்தவாதி.

## ஸ்ரீ வானமாமலே.

### ஓர் கோண்டாட்டம்.

(நமது சொந்த நிருபர்.)

ஸ்ரீமத் வானமாமலே மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளான காலஞ்சென்ற (பரமபதமெய்திய) 25-வது பட்டம் சின்னக்கலியன் ஸ்ரீ ராமாநுஜீயர்ஸ்வாமிகளின் ஸ்ரீ வைகுண்டயாத்ரா வைபவோத்ஸவ சாற்றுமுறை (ஐந்தாவது) வருட தீர்த்ததினம் வானமாமலேயிலும் ஆழ்வார்திருநகரிலும் நாங்குனேரி மடத்தில் அதி விசேஷமாய் நடைபெற்றது. முதல்நாளிரவு வைபவமும் மறுநாள் ததீயாராதனம் முதலியன சிறப்பாக நடைபெற்றன. இந்தியாவெங்குமுள்ள ப்ரதான நகரங்கள் க்ஷேத்ரங்களிலுமுள்ள வானமாமலே மடததிலும் மற்றும் மடசிஷ்யர்களுள்ள எல்லா ஊர்களிலும் இவ்வைபவம் விமர்சையாய் நடைபெற்றுள்ளதாயும் தெரிகிறது. ஸ்ரீ வானமாமலே மடம் முதல் பட்டம் (ப்ரதமஜீயர்) ஸ்வாமி திருநக்ஷத்திரம் (கன்னிப் புனர்பூசம்) புரட்டாசி இறுதியில் வருவது மடத்து சிஷ்யர்களாலும் எங்குமுள்ள நாங்குனேரி மடங்களிலும் அதி முக்யமாயும் மிக முக்யமாயும் விசேஷமாயும் நடத்தப்பட்டு கொண்டாடப்படுமெனத் தெரிகிறது.


### அத்யாத்மயோகம் அல்லது ஆத்மப்ப்ரிற்சி.

குகதாஸ் இயற்றியது. திவான்பஹதூர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகளது முகவுரையுடன் கூடியது. எளிய தமிழ் நடையில் உள்ளது. முற்றிலும் அநுபவங்கள் நிறைந்தது. பற்பல ஆதாரங்களுடன் கூடியது. பகவத் விஷயத்தில் ஈடுபட்டுள்ள ஸகோதர-ஸகோதரிகளுக்கு அத்தியாவசியம் உள்ளது. எல்லா மதத்தினர்களுக்கும், கொள்கையினருக்கும் ஓர் துணையாயிருப்பது. காமகோடி ஸ்ரீ ஜகத்குரு, ஸ்ரீ ரமணரிஷி, ஸ்ரீ ராமாநந்த ஸரஸ்வதீ முதலிய மஹான்களது அனுக்கிரஹம் அடைந்தது. ஹிந்து, சுதேசமித்திரன், ராமகிருஷ்ண விஜயம், ஆர்யதர்மம், முதலிய பல பத்திரிகைகளாலும், ஸ்ரீமான் A. S. P. அய்யர் I. C. S. அட்வகேட் திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் முதலிய பல வித்தியா நிபுணர்களாலும் போற்றப்பட்டுள்ளது. 15 அத்தியாயங்கள் உள்ளது. 308 பக்கங்கள் கொண்டது. ஐந்து மகான்களினது படங்கள் ஆர்ட்டு பேபரில் உள்ளது.

விலே காலிகோ ரூ. 3—0—0 ராப்பர் ரூ. 2—8—0 தபால்சார்ஜ் தனி.

கிடைக்குமிடம்:— "ஆர்யதர்மம்" ஆபீஸ், கும்பகோணம்.


Printed by S. Kalyanasundaram, at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundaram.